ஸ்ரீராமஜெயம்.

ஜானகிபரிணயநாடகம்.

தமிழ்.

இஃது திருநெல்வேலிஜில்லா அம்பாசமுத்திரத்தாலூகா அரிகேச
நல்லூரிலிருக்கும் புனல்வேலி மக-ா-ா-ஸ்ரீ முத்துசுப்பபாரதியவர்களி
ன் பௌத்திரரும் மக-ா-ா-ஸ்ரீ வரதராஜய்யரவர்களின் [illegible]

பு. வ. முத்துசுப்பய்யரால்
இயற்றி,

புனல்வேலி மக-ா-ா-ஸ்ரீ இராமசுவாமிபாரதியவர்களாலும், அம்பாசமுத்திரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மக-ா-ா-ஸ்ரீ அரி. ரா. அரிகரபாரதியவர்களாலும், திருநெல்வேலி மகாவித்வான் மக-ா-ா-ஸ்ரீ கவிராஜநெல்லையப்பபிள்ளையவர்களாலும்பார்வையிடப்பட்டு, ஆசிரியர்களுடையவும், இந்நூலரங்கேற்றிய ஸாரஸ்வதிவிலாஸமஹாசபையின் காரியதரிசி மக-ா-ா-ஸ்ரீ எஸ். பால்வண்ணமுதலியாரவர்களுடையவும் மக-ா-ா-ஸ்ரீ ப. வி. திருமலையப்பபிள்ளையவர்களுடையவும், அரிகேசநல்லூர் மக-ா-ா-ஸ்ரீ எ. டி. சேதுராமலிங்கம்பிள்ளையவர்களுடையவும் வேண்டுகோளின்படி,

திருநெல்வேலி ரெயில்வேஸ்டேஷன் ஆரியப்பிரகாசினி
அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை கூ 2

1901



ஜானகி பரிணய நாடகம்.

முகவுரை.

இந்நூல், சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே, வடநூல் வல்ல வித்துவ சிரோரத்தின விப்பிரகுல சுப்பிரதீபராய, ஸ்ரீமத் இராமபத்திர தீக்ஷிதரவர்களால், வடமொழியிற்றமது, பேரறிவாராய்ச்சு விரசித்து, நவரசமுறு நாடகமாக நவின்றருளப் பெற்றலதிற் பயின்றிருக்கின்றது. அதன்பொருளைத் தமிழ்நாட்டார் யாவரும் எளிதிலுணர்ந் தானந்தத்தை அநுபவிக்க இடமில்லாததுபற்றி, கசடறக்கல்லாச்சிறியேனெனினும், யான், கருதரியசிற்சுகோதயக்கடலான இராமசரிதமென்பதிலுண்டாம் பேரவாவினை வுதலைக்கொண்டு, என்சிற்றறிவுக்கெட்டியபடி, செந்தமிழின்மொழிபெயர்த்தம்முறைவழாது, சந்தமுறுநாடகமாய்ப், பற்பல தினுசு தினுசான, செய்யுட்களும், கீர்த்தனை, தரு, பத-ஜாவளிகளும், கண்ணிகளும், கேட்போர், படிப்போர் மனத்தைக்கவரும்படியான, நன்னயஞ்சருஞ் சொன்னயப்பெறும் உசிதாலங்கார வசனசிங்காரங்களுமா யியற்றியிருக்கின்றேன். இதனை யாவரும் எளிதிலுணர்ந் தத்தியானந்தத்தை அநுபவிப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. மற்றப்பிரபந்தங்களிற் காண்டம், சர்க்கம், அத்தியாயமென வகுப்படுத்தியிருப்பதுபோ லிந்நூலும், வடசொல் ஆரியரா லேழங்கங்களா யமைக்கப்பெற்றபடியே, தமிழிலும், ஏழங்கங்களாய்ப் பொருந்தி யிருக்கின்றது. பொதுவாகவே, பரமயோகியருள்ளம், எந்தவஸ்துவினிடத்திற் பொருந்தியிருக்கின்றதோ அந்தவஸ்துவே, இராமனெனப் பொருள்படலாலும், இந்நாடகத்தினெவ்வொரு பாடல்களிலும், ஒவ்வொருவாக்கியங்களிலும், பதங்களோரும், யுக்தியும், ரசமும், பொருந்தியிருத்தலானும், இதைப்படிக்க வாரம்பிக்கும்போதே, படிப்போர், கேட்போர்களின், சித்தாலவாலத்திலுஞ்சாந்தவித்தங்குரித்து, மென்மேலும், சந்தோடமாரி பொழியப்பொழியச், சாகோபசாகையாய்த்தருவாய்வளர்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு, என்னும்பல

[illegible] ந்தைப் பயனுடைத்தென்பதும்
[illegible] மபிரானால், வனவாசிகளான. த
[illegible] ற்று, தங்கடங்கடவப்பெறுவர்
[illegible] மபிரானாற் சுக்கிரீவ விபீடணர்
[illegible] வரியங்களைப்பெற்றாரென்
[illegible] டைந்தனரென்பதும், அவ்விராம

பிரானைப் பரமென்று நம்பித்தொண்டுபுரிந்த, அனுமத்விபீஷணாதிகள், நித்தியானந்தச் சிரஞ்சீவி வாழ்வைப் பெற்றார்களென்றும், பிரத்தியக்ஷமாகவும், அப்பிரத்தியக்ஷமாகவும், இந்நாடகத்தில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதைக் காண்க. இன்னாமும், இந்நூலின் கதாநாயகனான இராமபிரான், விஷயிகள், பத்தர்கள், முமுக்ஷுக்கள், ஆகிய மூவகை அதிகாரிகளான, இவ்வுலகத்தவர்களின், அறிவிற்கெட்டியபடியுள்ள, தியானத்திற்கிசைய, சாதாரணமனிதனாகவும், உபாசனைக்குரிய ஈஸ்வரனாகவும், நிர்விகாரச்சச்சிதானந்த ஆத்மசொரூபியாகவும், விளங்குகின்றனனென்பதற்கறிகுறியாய், இந்நாடகத்தில், ஸர்வசம்பன்னனான சாதாரணமனிதனாகச்சனனமெடுத்து, வியாகாதிசங்களும் வனசஞ்சாராதிகஷ்டநஷ்ட சோகமோகாதிகளுமடைந்தும், சிவதனுர்ப்பங்கமென்ன, அகலிகை சாபவிமோசனமென்ன, சேதுபந்தனமென்ன, வனவாசர்களான தாபசர்களின் அபயப்பிரதான சம்ரக்ஷணைகளென்ன, கொடிய துன்மார்க்கர்களான தாடகை சுபாகு, கரன்மாரீசர், விராதகரதூடணாதியர், வாலி, இராவண கும்பகர்ணாதி துஷ்டர்களின், சங்காரமென்ன, ஆகிய அமானுடப்பிரவிர்த்தியான, அருந்தொழில்கண்டாத்தியும், நிர்விகார சச்சிதானந்தமாகிய ஆன்மாவே, மானுடப்படிவங்காட்டி, ஜீவபாவத்தைக்கண்டிக்கவேண்டி, காமக்குரோத அகங்காராதிகளால் வசீகரணமனத்தர்களான மூடர்கட்கெல்லாம், துக்கானுபவமே யெனவாங்காங்கே, சோகமோகாதிகளை நடிப்பித்து, ஆனந்துகமான இச்சீவத்துவத்தையொழித்தலே, சுகானுபவமென, அதற்குருதவிற் குருகுலவாஸ குருவுபதேசங்கண்முக்கியமென, வசிஷ்டவிசுவாமித்திரர்பாலடுத்து மந்திரோபதேச வரிசைகளடைந்து, ஈடிலா விவக்கல் ஈன்றென, இராச்சியாதி மகதைஸ்வரிய பரித்தியாகஞ்செய்து, வாதருட்சயர்பெறலவசிய மென, வனவாசஞ்செய்து, சாதனமன்றிச்சாதிப்பதரிதென, சுக்ரீவ சகயஞ்செய்து, பவக்கடல்கடக்க, நூல்வழிநடத்தலே, சரியெனச்சேதுபந்தனஞ்செய்து, காமக்குரோதாதி சத்துருக்களுடன் சகவாசஞ்செய்வதாயினும், காமக்குரோதாதிபதிஞானனுள், சித்தாபத்திகளைக்கைக்கொண்டு மற்றவைகளைக் கெடுத்தலுசிதமென, சத்துருவினுடன் பிறந்தவனாயினும் வீடணனைச்சேர்க்கொண்டு இராவணாதி இராக்கதர்களைமடித்து, நிஷ்க்காம தபஸால், அவித்தையால் மூடப்பெற்றவந்தக்காணத்தைச்சுத்திசெய்யவேண்டுமென, சிறையில்நின்றும், மாயாசொரூபிணியான சீதாபிராட்டியை, அக்கினிசுத்திசெய்து, தானேதானாய் நிர்விகார சச்சிதானந்த சொரூபியாய் அகண்டாதி பத்தியமுற்றிருந்தானென இராச்சியாபிடேகம்பெற்று சுசுகமுற்றிருந்தனன், என உருவகத்திற்கிசைய வையப்பெற்றிருக்கின்றது.

மேலும் அகிலாண்டகோடி பிரமாண்டநாயக சச்சிதானந்தமயமா ஆதிபரப்பிரம்ம சொரூபமே, துட்டநிக்ரகசிட்டபரிபாலனஞ்செய்து

தன்மத்தை நிலைநாட்டுவதற்காக, ஸ்ரீராமானுஜராயவதரித்து, பிரபஞ்சாவை யின் விநோதங்களை விளக்கி, தமது பிரபாவசக்தியைப் புலப்படுத்தி, சம்புடியா ர்களின் பக்குவாபக்குவங்கட்குத் தக்கபடி, இஷ்டகாமிய சித்திப்ரதாதா வாயிருந்து, பரிபாலித்ததாகவேதான், மாண்மியமுறுநல்ல இராமாயணங்களின் முக்கிய தாற்பரியமுமே. அங்ஙனமாயின், இதன்பெருமை, சகலகலைக்கியான வல்ல, இரண்டாயிரநாவுடைய ஆதிசேடனாலும், அளவையற்பாலதன்றன்றோ? அத்தகைய மகத்தான இவ்வற்புத திவ்விய சரித்திரத்தை, இவ்வற்பனேன் சொல்லப்புகுந்தது, தரையிலூருகின்றவோர் சிற்றெறும்பானது, விண்மதி யினமுதருந்த, இச்சித்தலொக்குமாயினும், அப்பிலிகையும், கொன்றை, தும்பை முதலிய புட்பஜாதிகளில், மதுவாசைகொண்டு பொருந்தியிருத்த லும், அப்புட்பங்கள், திருத்தொண்டர்களாற்கொய்து, சர்வேசுவரனுடைய சாக்ஷாத்பரமசிவனது, திருமுடியிற் சூடப்பெற்றகாரணத்தால், அவ்வெறும் பும், அழகிய திங்களின் திவ்வியாமுதருந்தப் பெற்றதென்னுங் கதைபோல், ஏதோ, எனது புண்ணியவிசேடத்தானும், கற்றறிந்த பெரியோர்களினனு க்கிரகத்தினாலும், அருமையான இந்நாடகம், என்றூற் பூர்த்திசெய்யப்பெற் றதென்றறிக. அவ்விராமபிரானது சரித்திர வர்ணனையினால், பூவுடன்சேர்ந் தபழுதும் மணமபெற்றதுபோல், புன்கவியாயினுமென்கவி நன்கமையப்பெ ற்றதாகவே பெரியோர்கள் அன்புவைத்து மானிக்கக் கேட்டுக்கொள்கின்ற னன்.

உ

ஜானகிபரிணய நாடகம்.

சாற்றுக்கவிகள்.

அப்பாசமுத்திரந்தாலூகா அரிகேசநல்லூரிலிருக்கும் மக-ள-ள-ஸ்ரீ மகா வித்வான் புனல்வேலி அ. இராமசுவாமி பாரதியவர்களியற்றியவைகள்.

சதுரகவிகுருங்கருமதியூகனயோகிதழைக்குமாச தி
ததுரகவிரதவிரவிதனைநேரும்பிரதாபசாலிகல் வி
முதுரகவிசேஷகலைஞானசேஷனுமகிழமொழியுந்திவ் ய
மதுரகவிவளமருவும்புனல்வேலிநகர்செய்தவத்திலவந்தோ ன்.

கூட்டமோதவர் புகழும்பிரமநிலை யறிஞானகுரு வேதாந் த
நாடகங்கீர்த்தனை செய்தமுத்துசுப்ப பாரதிபேர் நவிலும்போ ன்
மாடகயாழ் வல்லோர்களிசைபாடக் கேட்டமரர் மகிழவான்றோய்
ஆடகான்மாட மலிஅரிகேசநல்லூர் வாழணி நாவல்லோ ன்.

தருவரதராஜனெனு வேதியர்கள் குலதிலகன் றவத்தில்வந் த
உருவமதவேண் முத்துச்சுப்பவேள் தமிழ்க்கடலை யுண்டஞானப்
பருவமுகில் சானகிபரிணயமா மழைபொழிந்து பாவிற்றோர்க்கும்
திருவசன் மாமழைபாய்ப் பதமழைபாய்க் குளமழையாய்ச் செழிக்கத்தானே

மேலப்பாவூரிலிருக்கும் ஆரியத்தமிழ் மகாவித்வான் மக-ா-ா ஸ்ரீ புனல் வேலி வரதசாஸ்திரிகளியற்றிய சாற்றுக்கவிகள்.

சீதமணக்கும் பணிபுமணிபீசர் தொண்டரரித்திரளை வாக் கு
வாதமணக்கும்படி செய்முன்னூல் தேர்புனல்வேலி வாழுங்கல்வி
போதமணக்கும்ப முனிவேதாந்த நாடகஞ்செய் புனிதன்கோடி
காதமணக்கும்ப நுமதத்தாரணிபு முத்துசுப்பகவின் முன்னோனே.

அன்னவன்றன் பேரனரிகேசநகர் மும்மாடமதனில் வாழ்வோன்
சொன்னவனத்தென் வரதராஜனருள் முத்துசுப்பசுமுக னென்போன்
நன்னயரஸத்தொடு செய்ஜானகிபரிணயத்தை நன்றாய்க்கேட்டின்
இன்னமுதைப் பரமசிவஞானமெனவுலகி லியம்புவா ரே.

அரிகேசநல்லூரிலிருக்கும் மக-ா-ா-ஸ்ரீ புனல்வேலி அனந்தசுப்பையரவர்கள் இயற்றிய சாற்றுக்கவி,

---

பொன்வளரிகை நன்னகரதனிற் பொருந்திவாழ் பூசுரப்புனித ன்
சொன்மணிமாலை தொடுத்தருண் முத்துச்சுப்பநாவலவ னஞ்சுமுக ன்
தன்மகத்தவத்தின் பயனெலமுதவுஞ் ஜானகிபரிணயந் தமிழி ல்
நன்மைசேர்திவ்ய நாடகமாகவின்று நற்புகழைநாட்டின னே.

அரிகேசநல்லூரிலிருக்கும் ஸங்கீத வித்வ [illegible]ரோன்மணியான மக-ா-ா-ஸ்ரீ புனல்வேலி முத்தையபாகவதரவர்கள் [illegible]ற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சீர்பெருங்கல்விநிறை திகழ்புனல்வேலி வாழ்சிலன்வேதாந்த வமுதை த்
சிறந்தநாடகமென வறைந்துலகர்பவ ரோய்கடீர்க்கு நன்மருந்தாக்கிறே ன்
பாரிலுயரன்னதானத்தின் மிக்கோன்மிகப்பாக்கியவான் முத்துசப் ப
பாரதியருள் புதல்வன்வரதராஜன் றவப்பயனென வுதித்தபால ன்
காரனையலைகயன் வெகுசீருடையனரிகைவாழ் கவிமுத்துசப்ப வள்ள ல்
கண்டுமொழிசெண்டுமூலே ககனவிடைகடல் விழிக்க[illegible]பெரிணையம்
ஆரமுதமென்னவே செந்தமிழ்நன்னூடகமதா மியற்றினன் யா[illegible] ம்
ஆனந்தமதுவுண்ட வளியராய்க்களியரா யாச்சரியமாய்ப் புகழ வே.

திருநெல்வேலி மக-ா-ா-ஸ்ரீ மகாவித்வான் கவிராஜநெல்லையப்பபிள்ளை யவர்கள் இயற்றிய கவிகள்.

திருமகளும் வெண்கமலத் தொருமகளுமகலாத செல்வமென் று
மருவுபுனல் வேலிநகர்வந்த முத்துச்சுப்பயமால் வரத்துதித் த
வொருவரதராசனெனு முயர்நாமந் தரித்திடுநல்லு சிதனுமி வ்
விருவருக்கும் பேரன்மகனெனும் பெருமைபெற்று மகிழியல்பினனே.

வேறு

மதனனும்பெண்மைய வாவுறவனப்பன் வனசமாலிகை திகழ்மார்ப ன்
இதமுளவசனன் கருணைசால்விழியனிய லிசைநாடக மெனு மு
விதமுறுதமிழும் வழுவறவுணர்ந்த விவேகவான்விமலனைப் பணிய ற்
புதமிகுபக்தியுடைய நன்மனத்தன்பொறுமையிற் பூமகள் போல்வா ன்.

எல்விதுவிழியார் தோழமையாக விருவரைக்கொண்டதை யெய்ப்ப த்
செல்வமார் சேதுராமலிங்கேந்திர தீரனைச்செந்தமிழ் தேர்ந் த
வல்கவிலறிவனருந்தவர் திலகனரிகரப்பெயர் கொணம்மரசை த்
சொல்விருப்புடனிந் நாளிலன்பாகத் தோழமையெனக் கொளுந்தோன்றல்

தருமனையனையான் போகத்திலருளிற் சனகனைத்தவத்தினி னிகர்வா ன்
அருமறைபயிலும் நாவினனரிகை யம்பதிவாழ் தருமன்ன ல்
கருமுகில்வெஃகும் வண்மையும்பொய்மை கனவிலுஞ்சொற்றிடாக்கனமும்
மருவியநம்தம் நிதிமுத்துசுப்ப மகிபதிதமிழ்க்கருள் வள்ள ல்.

புனவர்த்தக்குலத்துற்ப வித்தவனிராம பத்திராதிசுதன் பண்பா ச்
சொனவடமொழிச் சானகிபரிணயத்தைச் சொற்சுவை பொருட்சுவைதோ
வனமருவிய செந்தமிழ்நாடகமா வகுத்தனன் சீர்த்தியும்மரபுங் [ன்ற
கனகவான்பொருப்புங் கயிலையும்போல நிலைக்கவெக்காலத்து மா தோ.

சேத்தூர்ஸமஸ்தானம் மகாவித்வான் முகவூர் மக-ா-ா-ஸ்ரீ இராமசாமிக்கவிராஜரவர்கள் இயற்றியகவிகள்.

பொன்சேரு கனகமலைப் பழனமெலாமுப்போகப் பொலிவைக்காட்டு ந்
தென்சேறைத் தலபுராணத்தை வடமொழியதனுற் றெளிவிற்செய் து
மின்சேருமத்தியர் பொன்னிலமெலா மிதலைமெனுார் வேதாந்தத்தை த்
தன்சேமநாடகங் கீர்த்தனைபதமென்றப் பெயராற்சாற்றும் வல்லோ ன்.

பொன்றுதநீதியையோர் கவிமாலையாத்திரட்டிப் புகன்றோன்வாய் மை
குன்றுதபுனல்வேலி முத்துசுப்பபாரதி யாங்கும்பன் றன்னை த்
தன்றுதைதன்றுதை யெனப்புகன்றன்றோன் பெயருந் தரித்தோனென் னி
மன்றுடியருள்பெருகும் வரதராஜயர் நவத்தால்வரு குமார ன்

இங்காளிலரிகேச நல்லூரிலுவந்து வசித்திருப்போன் மேலோ ர்
அங்காளில் வடமொழியிலுறை ஜானகிபரிணயநாடகத்தை வாய்மை ச்
சொன்னுமுகில் ராமசுவாமிபாரதி யெனச்சொல் சுமுகன்றன்னை த்
தன்னவனுடன்ஞாதிசோதரனென்றுரைக்கும் நன்மைதனைப்பெற்றுள்ளான்.

அக்கரையாய்க்கற்றோர்க்குங் கல்லார்க்கும்பொருள்விளங்கவன்புட்கொண்டே
தக்கசத்தசுரநயஞ் சொன்னயப்பொருந்த நாடகமாத்தன் முன்னோர்போ ல்
மிக்கபுகழ்பெற்ற முத்துசுப்பயபாரதி வாக்கால் விளம்பினனு ல்
எக்கலையுங்கற்ற நாவலருமா நாவலவனெனச் சொல்வா ரே.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனவித்வான் சேற்றூர் மக-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியக்கவிராயரவர்கள் இயற்றியகவி.

அருந்தவர்மெச் சரிகேசனூர்வாழ முத்துச்சுப்பய்யன் செவ் வி
திருந்துஜானகிபரிணயந் தமிழ்நாடகமாகச் செய்தான் விண்ணோ ர்
மருந்தினும்கற் றமிழாகுமிதுவே நாடகமெனத்தமனுடக்குக் கற்றோ ர்
பொருந்தவுரைத்துவப் பவொளிவிதன் பெருமையாமென்னே புகலுமா றே,

திருநெல்வேலி, இந்நூலரங்கேற்றிய ஸரஸ்வதிவிலாச மகாசபையின் காரியதரிசியாயும் ஆரியப்பிரகாசினி அச்சியந்திரசாலையின் செக்ரட்டேரியாயுமிருக்கிற மகாவித்வான் மக-௱-௱-ஸ்ரீ எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள் இயற்றிய கவி.

மானிநோக்கியர் தங்களுக்கெல்லாம் வாழ்வொழிதிருவினை வயக்குந்தன்மையான், ஜானகிபரிணயந்தராதலம் புகழத்தமிழிலோர் நாடகமாகச்சாற்றினான், பானலக்கவியோ டொழுக்கமதாய்ப் பண்புநலன் செழும்பாவுசீர்த்தியான், ஈனிலம்புகழுந் திருமறைதவாயன் ஈவில்முத்துசுப்பையனெனும்பேர் நாவலோனே.

ஸ்ரீவில்லிபுத்தூர் மகாவித்வான் மக-௱-௱-ஸ்ரீ பொன்னுப்பெருமாள்செட்டியாரவர்கள் இயற்றியகவி.

சங்கநிறைதவழ் பழனப்புனல்வேலிப் பதிவரத ராசவேத ப்
புங்கவன்செய் புண்ணியத்தாற் புத்திரனாவுதித்து மிகுபோதமேவு ஞ்
பங்கமில்சீர் முத்துச்சுப்பபாரதிகள் செயுஞ்சீதாபரிணயத்தை த்
துங்கவுலகப் புலவருஞ்செவி வாய்க்கொண்டமிழ்தாய்த் துதிக்கின்றாரே,

---

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு பிளீடர் மக-௱-௱-ஸ்ரீ எஸ். எம். தையல்பாகம்பிள்ளையவர்கள் இயற்றிய கவிகள்.

பொன்மருவுமணி மாடகூடமேவு புனல்வேலிசெய்தவப் பொலிவினாலே, மின்மருவுசடைக்கடவுள் பாதம்போற்றும் விப்பிரவெஞ்ஞான்று மேன்மையான, சொன்மருவுங்குணசீலன் வரதராஜத்துங்கன் வழித்தோன்றலெனுஞ் சுமுகனான, மன்மருவுமரிவைவளர் முத்துச்சுப்ப வள்ளறமிழ்ப் பயிருலகில் வளரவென்றே.

வேறு.

செய்தனனிசைத்தமிழ் தெளிந்துதேன்ம ழை
பெய்தனவெனப்புகழ் பேர்பெற்றோங்க வே
மைதமிழ்ச்சானகி பரிணயப்பெ ய
ரொய்தியநாடக மென்னுநூலை யே.

வேறு.

இப்புவனக்கடலமுதம் புலவோர்களுவினுக்கே இனிக்குமென்றும்,
அப்புவனப்புவனத் தெழில்வளஞ் சோரிகைமுத்துச் சுப்பமுலருமையாகச்
செப்புவனசதமிழ்ப்புதிய நாடகத்தின் றெள்ளமுதந் தெவிட்டாதென்று ம்
முப்புவனப்புலவோர்கண் மனஞ்செவி நாவினிக்குமிது முகமனன் றே.

ஸ்ரீவைகுண்டம் மக-ள-ள-ஸ்ரீ தாசில்தாரவர்கள் வித்வசிரோன்மணி
வெங்கடசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய கவிகள்.

சீர்பெருமுத்தமிழ்ப் பொலிவுந்திருவளரு மெஞ்ஞானத் திகழ்வும்வாய்ந் தே
ஏர்பெருமோரின்ப நூலிவ்வுலகில்யான் காணவேர்க்குமோ வெ ன்
னூர்பெரியநாதன் மனத்துற்றிட்ட இஃதினைமெய் யுணர்வாலோர்ந்தா ன்
ஊர்பெரியஅரிகேச வுயர்கல்லூர் மறைபவனு முரவோன்றனே. *

நான்மறையாறங்கமுத னவிலும்பல் கலையனைத்தும் நன்குயோர்ந் து
வேன்மறவாப்புனல்வேலி வரதராஜப் புனிதன் மிகுதவத்தி ன்
கான்முளையாங்கார ணத்தால்முத்துச் சுப்பய்யனெனக் கவின்பேர்வாய்க் [தோன்
மேன்மையுறுதவசிலன் மிகுங்கருணைக் கடலெனவே விளங்குமேலோன்.

சுருதரியஜானகிப ரிணயகன் னாடகத்தைக் கவிஞர்போற்ற ப்
பொருவிலா வடமொழியா விராமபத்திரப்புனிதன் புனைந்தான்முன்னூன்
திரிதலிலாததினும் பல்லுயிர்களுங் கேட்டுவந்துகொடும் பவனோய்தீர த்
தருத்தகைய நாடகத்தைச் சாற்றினனெப்புவியுந் தழைக்கமாதோ. *

இயலிசைநன்னாடக மென்றியப்புதிரி புடையதனி னிறநியாவு ங்
செயலுடையதாதலினற் றென்மொழியிற் றென்மொழிசேர்த் திசைத்தான் [நங்கள்
மயலொழியமார்க்க மினியாங்கொல்லோ வள்ளுவனார் வகுத்தசொல்லு க்
கயலாமோவின் புறநூலகென்றால் காமுறுவர் கவிவேறுண்டோ. *

செந்தமிழ்நற்கவிக்கு மலரவனெவ் வானெனுமுனையைச் செவ்விதா க
இந்தனன்முகன் கண்டேனெவ்வாரோவென்றிடிலெம் மிறைவன்முன்னூன்
பந்தமறுபிரணவத்தின் பொருள்கேட்பப் பதுமன்மிகத் திகைத்தவாற்று ல்
விந்தையதாய்த் தனையிட்ட வேலவன்பேரிக்கவிக்கு விதித்தவாறே. *

சாற்றுக்கவிகள் முற்றிற்று.



ஞானபரிமைபநாடகம்

சிறப்புப்பாயிரம்.



அப்பாசமுத்திரம் ஹைஸ்கூல் தமிழ்... சிரியர்... ஸ்ரீ ரா. அரிகரபாரதியவர்கள் இயற்றியகவிகள்.



மன்றிநடம்புரிந்தருளும் வரதனென்றுமொரு வணிகன்வகசைப் பொலி ஞா
அன்றுநிறுத்திடக் கலையமுணர்வனென்று மொருபடியை அருளத்தாங் ன
வன்றிறல்கூர் அத்துலையின்வலத் தட்டினிலையமுறு மலையப்பொங்க ற்
தென்றிபொதுதமிழ் மணக்குந்தென்றெட்டு யடங்கைநகரம் நிலதம்போன்று .

மின்முத்தத்தொளிர் நகைமீனவனளித்த வுலகமெல்லாம் விரும்பிகாப் ப
பொன்முத்த முடிதரித்தகடவுளுறை தடமதுரைப்புரிக்கும் வேர ல
நன்முத்தர்வதிந்தருளும் நெல்லையெனுந் தொனனகர்க்கும் நவேறோங்கு ம்
தென்முத்தப்பழனமலி புனல்வேலி மாணகரில் நீவாழ்வோ ன்.

ஒருபிறப்பனுமிடினு மிருபிறப்பன் முப்பொழுது முணர்வோனுன்கா ய்
பெருமறைகண் முழுதறியுமஞ்சு முகனுறுதொழிற புனிதனேழா ம
மருவுதரைபுகழ வட்டாவதானஞ்செய புலவர்கவமணி சம்பத்தி ல
கருதியகுபேரனுயர் கற்பகத்தின் வள்ளண்மை கதித்தகையா ன

நாதாந்தங்கடந்த பரப்பிரமநிலை தனைநயந்தோன் ஞானமுய்வ ன்
நாதாந்தவெனை நடிக்கும்வேதாந்த நாடகமுந்தயவாய்ப் பின்ன ர்
வேதாந்தக்கீர்த்தனையும கலிமாலைமுதற் பலவும்விரும்பிச் சொற்று ஞ்
பூதார்த்தத்துயர்புருக முத்தமிழான வாசமு மொழிய ம்.

வடமொழியாங்கடல் கடந்தவனுமையிறு மொருமூவர்...
திடமுடையராமகதைப் பாநிறட்டுப் புலவனிவ...
அடைவுறுச... மாமாயுணமென் நி...
நடைப்புயத்து முததகப்பதானக்கேன் யே...

செய்மணக்கும்பூங் கரும்பின்றீன்பாலு முக்கனியுந் தேனும்பாலு ம்
நெய்மணக்குமாறு சுவைப்போனகமும் யாசகர்க்கு நிதமும்நல்கி க்
கைமணக்கும்பெருவறமே திருவரதராசனுக்குக் கவின்கொண் டோங ஓ
மெய்மணக்கவந்தருள் சற்புத்ரசிகாமணி யென்னவிளம்பு வோனு ம

அங்கமிருமூன்றுமறை நான்கறிந்தோனு பனிடதமாறும் நாலு ம
சங்கரபாடியத்தினுங்கோர் சாயையென வடமொழியிற் றகைவதாக ப
பங்கமுறு திவ்வுலகோர் பவப்பிணிக்கு மருந்தெனவே பரிந்துசொற ா
பொங்குபுகழிலக்கு மணசால் திரிகடைமையன் வரபுதா னென்று ம

தாண்டருந்தென்வடமொழிகள் கற்றருள் ஸ்ரீசப்பய்யர் தமக்கும்நான்கா ,
யீண்டமுதக்கவிபொ[illegible]ம் அரிகரபாரதியெனச் சொல்லெனக்குங் கறோ ா
வேண்டுவனவியந்தருளும் வேளாளர்வங்கிஷமாம் விரிகடற்கோ ா
காண்டகையசந்திரனுங் கல்விடைச சுப்பிரமணிய கனவானுககு ம

வேயகமாயுதித்தருளி வடிவன்னை இடமன்னி விளங்கக்கொண் ட
தாயகராம் நெல்லைநக ரனவரததானரிரு தாண்மலர்க ளே
தூயகமாப் பாட்டிசைக்கும் வேளாளர்மாலைநடு துலங்கித்தோன்ற ம
நாயகமாமணி யெனச்சொல் கவிராஜநெல்லையப்ப நாவலோர்க்கு ம

சீர்விளங்குந்தென்னாட்டுச் சிவாலயங்கண் மென்மேலுஞ் சிறப்புறவோங்கி
வர்விளங்கப்புரிசபைக்கண் நேர்விளங்கவீற்றருளு மிராஜசிங்க ங
கார்விளங்குமகராணிச் சுப்பிலிஹுாலினி தமைத்தோன் கங்கைவம்ச ப்
பேர்விளங்கப் பார்விளங்கும் பெருபுகழ்சேர் திருமலையப்பேந்த்ரனுக்கு ர்.

தாபதர்கூர ரிகைதிருப்புடைமருது ராலையங்கடமைப்பச் செயவோ ன்
தோமைதருகீரை நகர்ச்சேர்மென்கற்ற கவிக்கிரிதிசொரியுஞ் சோ லை
கோபமிலிகார்காத்த மரபெனச்சொல் மாமேருக்கோட்டில் வைத் த
தீபமெனத்திகழ் சேதுராமலிங்க வள்ளலுக்குஞ் சினேகனென்று ம்.

சங்காவிலருந்தமிழை வடமொழியினுடன் பயின்ற தன்மையாலு ம
அங்கசவேள்வனப்பாலுங் கவிப்புலவருவப்ப வருள்வண்மை யாலு ம
பங்கமிலாக்குலம் வாய்மைக்குணத்தாலும் நிகரற்றுயான்மையா லே
பொங்குகடலுலகமெலாஞ் சீர்த்தியெனும் வெண்மலரைப் போர்த்தானெ ன்று

[illegible] புகழோடே[illegible] மணிமாடத் தொடர்புறுசெ ,
[illegible]ர் பூஞ்சாலிதேன் சோலைசூழ்க ஆ
[illegible] தாயகமாய் நாயகமாய் வாழ்வோனெ ன்று ம
[illegible] சுத்தசப்பபாரதியாய்ப் பயில்வானன்றே ஸ

குறையாருஞ் சிலைமதனர் மலைவிபுதர்கடையுமதுர் [illegible]
றையாரும்படைமொழியில் ராமைநற்றிக்கநறும் [illegible] ழ
சறையாரும்ஞானமிய [illegible] நாடகத்தைச் [illegible] ர்
நிறையாரும்படித்துயச் செந்தமிழ்[illegible] [illegible]

தேன்பாலிலான் பாலைக்கலந்ததெனப் பரிபாகச்செஞ்சொல் யாத்தா ம
கூன்பாவிலுயிருக்கு மின்னிசைச்சாவளிப் புதங்கவோ வியங்க ஞ்
கான்பாவிற்கற்சிலை கடலைதுளக்கும் பலதனுக்கள் கனிகன்பூமே சி
வான்பாலினின்ற பொருளவசமுறும் பலசந்தமளிக்க பாக்க ன்

மங்காதங்குறவேடம் பொருத்தமுறத் தரித்தவர்[illegible] முன்நிலா டி
அங்காருமகிழ்ந்திடச் சமயத்தினுக் கங்கியைந்தபடி யமையச்சொல்வா ன்
சிங்காரவாசக மிந்துஸ்தானிக் கீர்த்தனைக டெளிந்துபாரி ற்.
புங்கானுபுங்கமதாய் நாடகமாய் நவரஸமும் பொழியச்செய் தே

சாத்திரத்திற் சிறந்தநெல்லைச் சரஸ்வதிவிலாச மகாசபையின்மேவு ம்
பாத்திரத்திற்சிறந்த பலபுலவர்தலை துளக்கினர் சபாசென்றேத் த
கோத்திரத்திற்சிறந்திடு மாயிரத்தெழுபத்தொரு நான்காங் கொல்லத்திங்கள்
சேத்திரத்திற்சிறந்த சிங்கம்சித்திரைநாள் அரங்கேற்றல் செய்தான்மன்னே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.



உ

ஜானகிபரிணய நாடகம்.

கதாசாரசங்கிரகம்.

(முதலாவதங்கம்).

நாந்தியந்தே (சூத்திரதாரன் அரங்கத்திற்றோன்றி, தான், நாடகம் நடத்துவதான, பிரவிர்த்தியைச்சொல்லிக்கொண்டு, நடிப்பெண்வரவை [illegible]ர்பார்த்தலும், அந்நடிப்பெண்ணும், தோன்றினள், [illegible], நாட கமுறையே, ரூப, நடன, நாட்டிய, ஸங்கீத, [illegible]

நவரசங்களும் நன்குவிளங்கும்படி, நாடகம் நடத்துவதாய் நவின்றுகொ
ண்டு, சங்கீத நடன நாட்டியவிசேஷங்களாற், சபையைச்சந்தோஷிக்கச்
செய்துகொண்டு, அந்தப்பாத்திரப்பிரவேசங்களை, (அதாவது) அந்தந்த ரூப
மான வேடதாரிகளைச் சந்தர்ப்பங்களுக்குத்தக்கபடி சபையிற்செலுத்தலா
யினர், எங்ஙனமெனின், முதன்முதலில், இலங்காபுரியை ஆளுகின்ற இ
ராக்கதகுலச்சக்ரவர்த்தியாகிய, இராவணேச்சுவரனுக்கு, மிதிலாபுரியையா
ளுகின்ற, ஜனகராஜனது தவப்புத்திரியாகிய ஜானகியென்னுங் கன்னியா
ரத்தினத்தை மணம்பொருத்தவேண்டி, அவனது ஏவுதலைக்கொண்டு, அம்
மிதிலேசனிடம் யாசனைசெய்யப்போகின்ற விதமாய், அவனது சாரனான
சாரணனென்னுமிராக்கதன், பிரவேசிக்கின்றனன், மேற்கண்ட காரியா
ர்த்தமாய் முன்னமே, மிதிலாபுரிக்குச்சென்று, அங்குள்ள வர்த்தமானங்களை
க்கூடமாய்த் தெரிந்துகொண்டு, திரும்பவருகின்ற விதமாய் (சுகன்) என்
னுமிராக்கதன், பிரவேசிக்கின்றனன், அவ்விருவரும் சந்தித்துக்கொண்டு,
சுரமடந்தையர்களையும், சங்கையற்ற நிராக்ஷேபனையாய்க் கவர்ந்துகொண்டு
வந்து, சுரேசன்முதல் யாவரையுஞ்சிறையிட்டுத் தானே இன்பசுகமனுபவி
க்கின்ற அவ்விராவணேச்சுரனுக்கிந்தப்புவிமடந்தையைப் பலவந்தத்திற்கவர்
ந்துவந்து, சுகமனுபவிக்கக்கருதாது, ஜனகராஜனிடம் யாசனை செய்யும்படி
கருத்துவந்ததெல்லாம், அவனுக்குந்தனக்குமுள்ள சைவநேயத்தாலென்றறி
ந்துகொண்டவர்களாய் மிதிலாபுரியில், முப்புவனத்திலும், ஒப்பற்ற வனப்
பினளாகிய ஜானகியென்னுந் தைலர்க்கரசி, தனதுசொற்பனத்தில் மன்மத
னாற்காண்பிக்கப்பெற்ற, அயோத்தியாபுரியையாளுகின்ற, தயரதசக்ரவர்த்
தியின்றவப்புத்திரர்களில், முன்னவனான இராமனது திவ்வியசுந்தரதிரு
மேனியைக்கண்ணுற்று, அவன்மீதடங்காக்காதல்கொண்டு, அவனையேமண
ம்புரியக்கருதினவளாய், விரகதாபத்தால் வருந்துகின்றனளென்றும், தனது
சைவநேயனாகிய இராவணேசுவரன், அவள்மீததிகக் காதல்கொண்டு,
மணம்புரியக்கருதி தன்னிடம்யாசனைசெய்ய எத்தனித்துக்கொண்டிருக்கி
ற சங்கதியைக் கர்ணா கன்னிகையாய்த்தெரிந்துகொண்ட ஜனகராஜன், க
ன்னிகாமணியின் காமாவஸ்த்தையைக்கண்ணுற்ற, அவளது மனோபீஷ்
டம்போல், இராமனுக்குக்கலியாணஞ்செய்து கொடுக்கக்கருதினானாயினு
ம், அதுவிஷயமாய், இராவணேச்சுவரனதுபகை, தன்னைச்சாராதிருக்கும்படி
க்கும், அம்மணத்திலவனால் விகாதம் வாராதிருக்கும்படிக்கும், நிர்விக்கின
மாய் ஜானகிக்கும் இராமனுக்கும், மன்றல்நடத்திவைக்கும் விஷயமாய், சுவ
ர்க்கப்பிரதிசுவர்க்கஞ்செய்த, மகா தபோ நிஷ்டரான, விசுவாமித்திரமுனி
வரை, மத்தியஸ்த்தராயிருந்து நடத்திவைக்கும்படி, வேண்டிக்கொண்டா
னென்றும், அம்முனிச் சிரேஷ்டனும், அங்ஙனமேசம்மதித் தயோத்தி
யாபுரிக்குச்சென்று, இராமனை தயரதன் முதலானவர்களுடனழைத்துவ

ந்து, தந்திரமாய்க்கல்யாணஞ்செய்து வைக்கக்கருத்துட்கொண்டு, நாளைக்கு வேள்விசெய்யப்போகின்றதாயும், அதற்காக, தனதிஷ்டரான, தயரதன்முதலானவர்களை, அழைத்துவரச்செல்வதாயும், கபடமாய்ச் சொல்லிக்கொண்டயோத்தியாபுரிக்குச்சென்றிருக்கின்றனனென்றும், அதற்கிணங்கிய, அச்சனகராசனும், தன் அரசைத்தம்பியாகிய குசத்துவஜனிடம், ஒப்புவித்துவிட்டுக் கௌசிகர்செய்யப்போகின்ற யாகத்தைக்கண்ணுற்றுவர, ஆவல்கொண்டவன்போற்கபடமாய்ச் சொல்லிக்கொண்டு, கன்னிகாமணியுடன் கௌசிகரது ஆச்சிரமத்தில், முன்னரேவந்திருக்கின்றனனென்றும், அறிந்துவந்துரைத்த சுகனுடன், சாரணன், ஆலோசனைபுரிந்ததாவது, இராவணனுக் கப்பெண் மணியின் மணத்தைப்பொருத்தி வைப்பதற்கு, சனகராஜனிடமினியாசனை செய்வதிற்பயனன்றென்றும், இராவணனுக்குச் சனகன்மீதுள்ள ஸம்சயத்தாலும், மனமில்லாப் பெண்டிரைப்பலவந்தத்தின், மருவிடக்கருதினால், மண்டை வெடிக்குமென்னும், வன்சாபமொன்றிருத்தலாலும், வன்மையிற் கவர்தலொண்ணாதென்றும், ஆகையால், அவ்விராவணேச்சுரனே, அம்மாதரசியின் மனதிற்கிசைந்த, அவ்விராமனது வடிவத்தை, மாயையாற்புனைந்து கொண்டு, அச்சனகன்பாற்சென்று, அவளைப்பரிணயஞ்செய்து கொண்டு வரவேண்டும், அங்ஙனமாயின், மணத்தின் பின்னர், இராவணனென்றறிந்துகொண்டாலும் பாதகமில்லையென்றும், வித்திச்சிருவனென்றமந்திரியை விசுவாமித்திர வடிவந்தரிக்கச்செய்து, இராவணன் இராமவேடந்தரித்துக் கொண்டு, விசுவாமித்திரன் இராமனையழைத்து வரும்பான்மைபோல், ஜனகராஜன்பாற்செல்லவேண்டுமென்றும், ஆனால், அதற்கிடையில், அயோத்திக்குச்சென்ற விசுவாமித்திரர் இராமாதிகளையழைத்துக்கொண்டு, இடையூறாக வந்துவிடாமல், கொடியதாடகாதியரைக்கொண்டு, இராமாதிகளை மார்க்கமத்தியிற்றடுத்து மாயையாற் கொல்லுவிக்கவேண்டுமென்றுந் தீர்மானித்துக் கொண்டவர்களாய், இராவணேசுரனுக்கறிவிப்பதற்குச்சுகனை அனுப்பினன். அப்பால் அங்ஙனம், தாடகையென்னுங்கொடியஇராக்ஷஸி, பிரவேசித்தனள், சாரணன், அவளது வரலாற்றைத் தெரிந்துகொண்டு விசுவாமித்திர முனிவரின் தந்திரோபாயத்தைவிளக்கித்தானும் சுகனுமாலோசித்தபடி இராமாதிகளை இடைவழிக் கட்டிமாய்த்து விடும்படி மாரீசன் சுபாகு கரன் இவர்களுடன் தாடகையை அனுப்பிவிட்டுச் சென்றனன். அப்பால், இலங்காபுரியில், வித்திச்சிருவ சாரணருடன் இராவணேசுரன் பிரவேசித்தாலோசனைபுரிந்து ஜானகியென்னுந் தையலாள்மீது க்ஷணம் பொறுக் காதல்கொண்டு தவிக்கின்றவனும் பின்னையினும், இராமனென்னுமரசனது வடிவத்தைத்தரிப்பதில் இலச்சையடைந்து காதல்ஒருபக்கம், இலச்சை ஒருபக்கம், வருத்த வருத்தமுற்றவனுப் கடையில்வெட்கத்தைத்துறந்து வேடத்தரிப்பதற்கிசைந்து அவ்விருவருடன் புஷ்பகவிமானத்திலேறிக்கொண்டு [illegible]

ரின் ஆச்சிரமவனத்தை அடைந்தகோர்பாங் விமானத்தை மறைத்து வைத்துவிட்டு, திஸ்கரணி, யென்னும் மந்திரமகத்துவத்தால் மற்றவர்க ட்புலன்கட்கறியப் படாதவர்களாய் தங்களைமறைத்துக்கொண்டு அங்கு ள்ளவர்த்தமான வரத்திகளைத் தெரிந்துகொள்ளும் நிமித்தமாய் சஞ்சரிந்தன ர். அங்ஙனம், விசுவாமித்திரருடையவும். சதானந்தருடையவும் சீடர்களா ன சத்தியவிரதன், தேவவிரதன், என்ற இரண்டு வன்னியர் பிரவேசித்து, ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக்கொண்டு அவரவர்கள் தர்ப்பைமுதலியன வாய்ந்துகொண்டாச்சிரமத்திற் சென்றனர். அவர்களால் வர்த்தமானங்களை இரகசியத்திற் றெரிந்துகொண்டஇராவணேச்சுவரன் மற்றிருவருடன் சஞ் சரிக்கின்றனன்.

முதலாவதங்கம் முற்றிற்று.

இதில் 1-வது இலங்கையினின்று மிதிலாபுரிக்குச் செல்லுகின்ற விர மாய் சாரணன் பிரவேசம்.

2-வது மிதிலாபுரியின்றும் வருகின்றநிமித்தமாய் சுகன் பிரவேசம்.

3-வது தாடகையின் பிரவேசம்,

4-வது வித்திசிருவனுடன் சாரணனுடன் இராவணேசுவரன்பிரவேசம்

5-வது புட்பகவிமானத்துடன் சாரணன் பிரவேசம்.

6-வது சத்தியவிரதன் தேவவிரதன் இவ்விருவரின் பிரவேசம்.

ஆக பாத்திரப்பிரவேசம் 9.

உ-வது அங்கம்.

விசுவாமித்திரமுனிவரின் ஆச்சிரமப்பிரதேசத்தில், அத்திரிமுனிவ ரும் அவரதுபத்தினியாகிய அநசூயாதேவியும் பிரவேசித்து, அவர்கள் கௌ சிகர் ஆரம்பிவிக்கப்போகின்ற யாகதரிசனநிமித்தம் வந்தவர்களாய்ஸம்பாஷி த்துக்கொண்டு, அவ்வாச்சிரமத்தில் வந்திருக்கின்ற ஜனகராஜனிடஞ்செல்வ தாய்ச்சென்றனர், அப்பால், அங்ஙனம், திரஸ்கரணீ மந்திரமகுத்துவத்தால் பிறர்கட் புலன்கட்கறியப்படாதவர்களாய்த் தங்களை மறைத்துக்கொண்டு சஞ்சரிக்கின்ற இராவணவித்திச்சிருவ சாரணர்கள் பிரவேசிக்கின்றனர், அவ்விருவருடன் இராவணேச்சுரன் அவ்வனத்தில் வந்திருக்கின்ற ஜான கியின் பேரழகைப்பார்க்க ஆவல்கொண்டு, சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் அங்ஙனம் [illegible] நிகிலமங்கள சந்தானகியான ஜானகியென்னுந்தை [illegible]. காமாவஸ்தையைக்காற்றாதவளாய்ப் பற்பலவிதமாய்ப் புலம்புகின்ற [illegible], தனிச்சயனைத்[illegible]கொண்டிருப்பவளாய், ஒருவராலுந்த [illegible] அறியப்படாதவளாய், தன்னைத்தனியேபிரவேசித்த

னன். இராவணன், மற்றிருவருடன், அவளது புலப்பத்தைச் செவியார்ந்திற
க்கமுற்று, அவளது இன்பமான சப்தத்தினால் அவள் திரிலோகசுந்தரியா
யிருத்தல் வேண்டுமென நிதானித்துக்கொண்டவனாய், ஆதரத்துடன் அவ
ளெழிலுருவத்தைக் காணக்கருதி எவ்வளவெவ்வளவோ பிரயத்தனப்ப
[illegible] காணப்பெறாதவனாய், இவளின்னாளென்றே அறிய மார்க்கமற்றுப்
[illegible]தவித்துக்கொண்டிருந்தனன், அங்ஙனமிருக்க, சுசரிதை, என்னுந்தோழி
[illegible], தாமரைத்தண்டு முதலிய சைத்தியோபசாரசாமான்கள் சகிதம்பிர
[illegible], ஜானகிக்குப்பற்பலவிதமாய்ச் சைத்தியோபசாரஞ்செய்தனள், சிலவ
[illegible] சித்திரப்பலகை முதலியசாமான்கள் சகிதம்பிரவேசித்தனள்.
[illegible] தோழிப்பெண்களும் ஜானகிக்குப் பற்பலவிதங்கள [illegible] க்கினி
[illegible] கொண்டிருக்கிற [illegible], [illegible]யும், அ
[illegible] அதற்சானகியால் [illegible] பாத்திரத்திற் கண்ட
[illegible], [illegible] பார்க்கி
[illegible] இராமருடைய [illegible], அதனை [illegible] மட்டிப்பார்
[illegible] கொண்டிருக்குங்கால், அம்மா அரக்கர் கட்புலன்க
[illegible]றியப்படாமல் மறைத்துக்கொண்டிருப்பது, விசுவாமித்திர முனிவரின்
[illegible] வாய்
[illegible] மணிமயமான [illegible] கொண்டிருக்கும
[illegible], [illegible] பெண்களினா வா
[illegible] இராவணன், மாயையால்,
[illegible] போல் வடிவங
[illegible] அரக்கர் கட்புலனடைக்கு
[illegible] செய்தாய். அவளது திவ்விய சுந்த
[illegible] இடமில்லாமல், அத்திரிமுனி
[illegible], [illegible] பாதவந்தனத்திற்காக அழைக்கப்பெற்றவ
[illegible] தோழிப்பெண்களுடன் ஜானகி, ஜனகராஜன்பாற் சென்றனள், அவ
[illegible] பெற்ற இராவணன், அவளெழுதிய இராமரூப சித்திரப்
[illegible] கவர்ந்துகொண்டு இராவணனிடம் பிரவேசித்தனன். இராவ
[illegible] செய்தும் அவயவங்களைத் திருப்தியாய்ப் பார்க்கப்பெறாதது
[illegible] வருத்தமுற்றவனாய், மாயையால் இராமவேடத்தைத்தான் புனைந்து
[illegible], வித்யுச்சிகுவனை விசுவாமித்திரவேடமும், சாரணனை இலக்குவ
[illegible] வடிவமும், தரிக்கச்செய்து, அவ்விருவருடன் வஞ்சனையாய் ஜானகியை
[illegible] செய்யும் நிமித்தமாய், ஜனகராஜன்பாற் செல்வதாய்ச்சென்றனன்.

இரண்டாவதங்கம் முற்றிற்று.

1\. அத்திரி, அநசூயை இவ்விருவரின் பிரவேசம்.

2. இராவணன், வித்திச்சிகுவன், சாரணன், இம்மூவரின் பிரவேசம்.
3. காமஅவஸ்தைக்காற்றாதுதளிர்ச்சயனமுற்றஜானகியின்பிரவேசம்
4. தாமரைத்தண்டு மலர், இலை, இதுகள் சகிதம் சுசரிதையென்ற சகியின் பிரவேசம்.
5. சித்திர சாமான்கள் சகிதம் சிலவதியென்ற சகியின் பிரவேசம்.
6. ஸாரணப்பிராமணன் பிரவேசம்.
7. கங்கண சித்திரபடசகிதம் ஸாரணன்பிரவேசம்.

ஆகப்பாத்திரப்பிரவேசங்கள் 10.

௩-வது அங்கம்.

கடலில் விழுந்தெழுந்த விதமாய், மாரீசன் பிரவேசித்து, இராமாதியரை இடைவழிக்கட்டி மறிக்கப்போனதில், இராமபாணத்தால், தன்தாய் தாடகையென்ன, தன்தம்பி சுபாகுவென்ன, இவர்களிறந்தே போனார்களென்றும், தான் இராமபாணத்தாற் சாகரத்தில் வீழ்சதப்பட்டு, விதிபலத்தாற்றப்பிப் பிழைத்ததாயும், தன் மற்றொருதம்பி காராளனென்பவனுடைய ஸ்திதி இன்னவிதமென்றறியவில்லையென்றும் சொல்லிக் கலங்குறவேளையில், காராளனென்னுமரக்கன், இராமபாணத்திற்குத தப்பிப் பிழைசது மாரீசனைத் தேடிக்கொண்டு வருகின்றவிதமாய் பிரவேசித்தனன, அப்பால் கடலோரம் மகேந்திரகிரியின் குழ்வுகமறயில் மாரீசனை எாதடைந்தனன். அவ்விருவரும் இராமனை மாயையால் வெல்ல நினைத்து இராமாதியர் தங்கியிருக்கின்ற ஒருசோலையின்பாற் செனறு, இராமன், தனனந்தனியே, வனத்தில் வேட்டைக்குச் சென்றிருக்கின்ற விதந் தெரிந்துகொண்டு இராமனுக்குயிர்ச்சகனான பிங்களனது வடிவத்துடன் வஞ்சகோபாயததா லிராமனை வனத்திற்குக் கூட்டிவரும்படி காராளனையனுப்பிவிட்டு, தான் காசிபனது வடிவத்துடன் மாயாசிதையைச் சிருஷ்டித்து அவள் இராமனிமித்தமான காமநோய் கறுக்கக்கனவருததமுற றவளாயக்கடைசியில் விதனமொழிக்காற்றாது தக்கினிப்பிரவேசஞ்செய்வதுபோலும், மாயையாலிராமனுக்குக் காண்பித்து, அவன்மீதுள்ள மயக்கத்தினால் இராமன், தானாகவே அனலில்மூழ்கி ஆவிஇறக்கும்படிசெய்கின்றேனென்று சொல்லிககொண்டு சென்றனன்.

அப்பால் வனத்தில் வேட்டை...டுகின்ற விதமாய் தனியாய் இராமன் பிரவேசித்தனன். சமீபதூரத்திற பிங்களனுருப்புனைந்த காராளன், மாயையாற் காட்டானை, தன்னை துழுத்துக்கொண்டு போவதுபோலும, இராமனுக்

குத் தோற்றும்படி பிரவேசித்துப் பிரலாபித்தனன். அதனை நிஷ்கபட இராமன் மெய்யென நினைத்துத் தன்னுயிர்ச்சக பிங்களனை வனத்தரக்கி பிடித்தீர்த்துக்கொண்டு போகின்ற கஷ்டஞ் சகிக்கமாட்டாதவனாய் அவனை விடுவிக்கும்பொருட்டாய் வெகுதூரம் பின்றொடர்ந்து போயினபோது, அங்கொரு சோலையிற் காட்டானையால் விடுபட்டுக் களைப்புற்றவன்போலும், பிங்களரூபனான காராளன் பிரவேசித்தனன். இராமன் அவனைப் பிங்களனென்ற பரமார்த்தபுத்தியுடன், அவனைக் களைப்புமாற்றி அவனுடன் முன்போல ஸரஸமாகப் பேசிக்கொண்டிருந்தனன். அவனும், இராமனுக்குத் தன்னிடத்திற் களங்கந்தோன்றா வண்ணம் சம்பிரதாயமாய் ஜானகி விஷயமான பிரியஸமாசாரங்களாலே இராமனுக் கதி மோகத்தையுண்டு பண்ணிக்கொண்டு மாரீசன் வரவை மனத்திலெதிர்பார்த் திருந்தனன். அங்ஙனம் ஓர்பால், மாயையின் திறத்தால், வாஸ்தவ சீதையைப்போலும், அவளது சகிகளைப்போலும் சிருஷ்டித்துப் பற்பல விநோதங்களுடன் வாஸ்தவ அக்கினியும், சிருஷ்டித்துக்கொண்டு மாரீசன் பிரவேசித்தனன். இராமனும் பிங்களனுருப்புனைந்த காராளனும் ஓர்பாலிருக்கக்கண்டு, தானுங் காசிப ரூபத்துடனிராமனிடம் வர எத்தனித்தபோது, அவ்விருவருஞ் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் வார்த்தைகளின் ஸாரங்களால், பிங்களனுருப்புனைந் திருக்கின்ற காராளனை, எதார்த்த காசிபனென்று ஸந்தேகங்கொண்டவனாய் மேலும் மாயையாற் பற்பல விநோதங்களைத் தோற்றுவைத்துக்கொண் டொதுங்கியிருக்கவும், அவனது மாயாவிநோதத்தாற் றோன்றுகின்ற மாயாசீதையும், சகிகளும், இவர்களது ரூபவசனப்பிரலாபங்களும், ஆகியஇவைகள் மெய்போற்றோற்றிக்கொண் டிருக்கவும், இவர்கள், ஜனகராஜன் றவபுத்திரியாகிய ஜானகியும், அவளது தோழிப்பெண்களுமேயாம், என்றிராமனுக்குப் போதித்து விரகத்தை விர்த்திசெய்துகொண் டருகில் பிங்களனுருப்புனைந்த காராளன் நிற்கவும், அதனை வாஸ்தவ புத்தியுடன் பார்த்துப்பார்த்து மோகப்ரவசனா யிராமன் நிற்கவும். ஆகிய இத்தருணத்தில், அங்ஙனம் மற்றோர்பால், எதார்த்த காசிபர், தர்ச்செயலாய், இராமனைத் தேடிக்கொண்டு வருகின்றவிதமாய் பிரவேசித்தனர். அவரை இராமன்பால் நின்றுகொண்டிருக்கிற பிங்களனுருப்புனைந்த காராளன், சற்று தூரத்திற்பார்த்து, காசிபனுருப்புனைந்து வருவதாய்ச் சொல்லிய மாரீசன்றானெனக் கருத்துட்கொண்டு, இராமனுக்குக் காசிபனை அழைத்துவருவதாய்ச் சொல்லிவிட்டுப்பிரிந்து காசிபனைத் தொடர்ந்துசென்றனன். அத்தருணத்தில், மாரீசன் மாயையால் காசிபனது வடிவம் புனைந்துகொண்டு, இராமன்பாற் பிரவேசித்தனன்.

இராமனவனைக் காசிபனென்ற பரமார்த்த புத்தியுடன், அம்மாரீசனுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்க, இராமனைத்தேடிக்கொண்டு வருகின்றவிதமாய், எதார்த்த பிங்களன் பிரவேசித்தனன்.

அவனிராமனிடம் வந்துசேரவும், அவனை எதார்த்த பிங்களனெனத் தெரிந்துகொண்ட மாரீசனால், இவனிராக்கதனென இராமனுக்குப் போதிக்கப்பட்டு, அதனால் இராமனிடம் தன் சொல்லொன்று மேறாமல், எதார்த்தபிங்களன் ஒதுங்கித் தலைகவிழ்ந்திருந்தனன். இங்ஙனமிருக்க, இராமனைத்தேடிக்கொண்டு மற்றொருபால் வந்த எதார்த்தகாசிபர், அங்கொருபால் நின்ற அம்மாயாசீதையைக்கண்டு திகைத்துக்கொண்டிருக்குங்கால், தன்னைத்தொடர்ந்துவந்த பிங்களனுருப்புனைந்த காளனைச்சந்திக்கவும், இவர் அவனை எதார்த்த பிங்களனெனவும் அவன் இவரை மாரீசனெனவுமாக, ஒருவர்க்கொருவர் பரமார்த்தபுத்தியுடன் சம்பாஷித்துக்கொண்டபோது, பிங்களனுருப்புனைந்திருக்கின்ற காளனை இராக்கதனெனத்தெரிந்துகொண்ட எதார்த்தகாசிபர், இராமனிருக்குந்திசைநோக்கி ஓடத்தொடுத்தனர். அச்சமயம் காசிபரை மாரீசனென்றறிந்துகொண்ட காளன், மாரீசனென்னும் இராக்கதன் காசிபருபமாய், என்னைக்கொல்ல வருகின்றானென்றலறிக்கொண்டு, [illegible] ஓட்டத்து [illegible] வந்திருக்கத்தழுவிக்கொண்டனன். ஆகவே அம்மாயாகாசிபருபிய மாரீசனும், அம்மாயாபிங்களனாகிய காளனும், ஒருவருக்கொருவர் தெரிந்துகொண்டு, எதார்த்தமானவிருவரையும், இராக்கதர்களென இராமனுக்குப் போதிக்கவும், அவ்வண்ணம் இராமனுக்கப்படவும், எதார்த்தகாசிபபிங்களர், இருவரும், இராமனிடந்தங்கள் சொல்லொன்று மேறாமல் தயிக்கவுமாயின. அங்ஙனம், பின்னும் மாரீசனது மாயையால், ஜனகராஜனை இராவணன் கொலைசெய்துவிட்டுச் சீதையை அபகரிக்கவருகின்றானென்று சொல்லிக்கொண்டு, சோக ஆவசரத்துடன், ஒருமாயாசகி, பிரவேசித்தனள். அவ்விதமா வார்த்தையைக்கேட்டு மாயாசீதை, அவ்வி[illegible], இப்படியா விஷயமான விசனாக்கினிக்கு மாறாதவளாய், அக்கினிப்பிரவேசமானதைக் கண்டு, இராமன் அவண்மீதுள்ள மோகத்தினாற்றானும் அவ்வக்கினிக்கிடங்கிலேயே வீழ்ந்திறப்பதாய்ச்செல்லிக்கொண்டு, சோகபரவசத்துடன் அவ்வக்கினிக்கிடங்குக்கருகிலுள்ள ஒருகுகைப்பறையிற் காலைவைக்கவே, அப்பாறையிலொரு திவியமங்கள சொரூபமான பெண்ணுருவாய்ப் பிரவேசித்தனன். அவளை அகலிகையென்றறிந்துகொண்ட இராமன், அவளால் எதார்த்த பிங்களகாசிபர்களையும், மாரீசகாளர்களையும், இன்னாரின்னாரென்றறிந்துகொண்டதுமன்றி, அவ்வரக்கரின் மாயாவிலாசத்தையும் நன்கறிந்தனர், உடனே அவ்வரக்கரிருவரும், தக்கணம் மாறுருப்புனைந்தோடத் துணிந்தனர். இராமபாணத்தாற் காளனிறந்தானாயினும், மாரீசனோ தப்பி மாயமாய்விட்டான். அப்பால் இராமர் எதார்த்த காசிபபிங்களருடனும் அகலிகையுடனும் [illegible]ட்டுத்தயாரர் கௌசிகர் முதலியோர் தங்கியிருக்கின்ற [illegible] அடைந்தனர்.

8-வது அத்தியாய முற்றிற்று.

1. கடலில் வீழ்ந்தெழுந்தவிதமாய் மாரீசன் பிரவேசம்.
2. இராமபாணத்திற்குத் தப்பிப்பிழைத்த கரானன் பிரவேசம்.
3. வேட்டையாடுகின்றவிதமாய் இராமன் பிரவேசம்.
4. காட்டானையால் விடுபட்டு களைப்புற்றுக் கிடக்கின்ற விதமாய் பிங்களனுருப்புனைந்த கரானன் பிரவேசம்.
5. மாயையால் மறைந்துகொண்டு மாரீசன் பிரவேசம்.
6. தனிச் சயனமுற்றிருக்கின்ற மாயாசீதையும், சகிகளும் பிரவேசம்.
7. எதார்த்த காசியர், பிரவேசம்
8. காசியபவேடத்துடன் மாரீசன் பிரவேசம்.
9. எதார்த்த பிங்களன் பிரவேசம்.
10. சோக அவஸரத்துடன் மாயாசகி பிரவேசம்.
11. முனிபத்தினி பிரவேசம்.
12. கோதண்டத்தினின்றும் பாணத்தை இறக்கிக்கொண்டு இராமன் பிரவேசம்.

ஆக பாத்திரப் பிரவேசங்கள் 14.

௪-வது அங்கம்.

முதலில் சித்திராங்கதனென்கிற கந்தருவன் பிரவேசித்தனன், அவன் [illegible] கோதியர் மஹ[illegible]பிறகு, சுவஜனவதத்தைச் சகியாதவனான இராவணன், திருப்பியாகமுயர்ச்சை செய்கின்றானென்பதை அறிந்து வரும்படி, தேவராஜனு லனுப்பப்பட்டபடி, இலங்கைக்குச்செல்வதாய் மாயையால் ஒரு இராக்கதவடிவொடு செல்லுகையில், ஒட்டகமுகியென்ற ஓர் கோரஅரக்கி, எதிரேபிரவேசித்தனள். அவளால் இராவணனது இரகசியப்பிரவிர்த்தியைத் தெரிந்துகொண்ட கந்தருவன், தான்தெரிந்துகொண்ட இராவணனுடைய ரகசிய வஞ்சனைப்பிரவிர்த்திகளை, முன்னர் மிதிலேசனுக்கறிவித்துவிட்டுப் பின்னர் தேவராஜனுக்கறிவிப்பதாய்ச்சொல்லிக்கொண்டு சென்றனன். அப்பால் ஜனகராஜனும் சதாநந்தரும் பிரவேசிக்கின்றனர். அவ்விருவரும் அயோத்திக்குச் சென்றிருக்கின்ற விசுவாமித்திரர், இராமாதிகளை அழைத்து வருகின்ற வரவையெதிர்பார்த்திருக்கின்றனர். அப்போது வான்தவ விஸ்வாமித்திர இராமலெட்சுமணர்கள் போல் மாயையால் வடிவந்தரித்து விருஜிச்சிருவ இராவணஸாரணர் பிரவேசித்தனர். ஜனகராஜன் அவர்களை வாஸ்தவவிசுவாமித்திர ராமலெட்சுமணர்களென்றபரமாநந்தமூர்த்தியுடன், அவர்களுக்குப்பரிந்துருக கல்யாணஸமாசாரமசொல்லிக்கல்யாணம் ஆரம்பிக்கும்போது, சுக்ரீவன், விந்திசசிருவ [illegible] இராக்கதர்கள்,

விஸ்வாமித்திர ராமலெட்சுமணர்களாக, மாயையால் வேடந்தரித்து வஞ்சனையாய் ஜானகியைமணஞ்செய்யவந்தனரென்றந்தரத்தினின்றைந்துவிட்டுச்சென்றனன். அதைப்பற்றி ஜனகரும் மற்றவருந் திகை[illegible]கொண்டிருக்கும்போது, வாஸ்தவராமலெட்சுமணருடன் வாஸ்தவவிசுவாமித்திரர் பக்கத்தில் வருகின்ற விதந்தெரிந்து, இராவணாதியர், திரஸ்கரிணியால், மறைந்துகொள்ள வாஸ்தவ இராமலெட்சுமணருடன் விசுவாமித்திரர், பிரவேசித்தனர். விசுவாமித்திராதிகளும் ஜனகராஜனும் ஸம்பாஷித்துக்கொண்டதில் இராமனால், தாடகாதியா இறந்துபோன விபரங்களை, இராவணாதியர் தெரிந்துகொண்டு கவலைபடைந்தனர். ஜனகராஜன் வாஸ்தவ இராமலெட்சுமணவிசுவாமித்திரர்களிடம இராக்ஷஸ சங்கைகொண்டவனாய் அரன்றனுவை[illegible]பவனுக்கக்கன்னியை மணஞ்செய்கிவேனென்றறைந்தனன். அங்ஙனமே அவ்வில்லைகொண்டு வரச்செய்து அதை யாரோ மணஞ்செய்யும்படி விசுவாமித்திரர் இராமனையேவவே, இராமன் அவ்வில்லின் பாற்சென்றனன். இராவணாதியர் திகைத்துக்கொண்டிருக்கின்றனர். அக்தருணம், மாண்டவி, ஊர்மிளை, சுருதிகீர்த்தி, யென்ற கன்னியருடன், சீதை, பிரவேசித்தனள். அவர்கள் விசுவாமித்திர பாதவந்தனத்திற்காக வருகின்றதில், ஒருவருக்கொருவர் பரிகாசஞ்செய்துகொண்டு களிப்போடுவந்து, ஒருபாலொதுங்கியிருந்தனர். இராமர் அவ்வில்லைக் கையிலெடுத்ததும், நிறுத்தியதும், வளைத்ததும், ஒடித்தெரிந்ததும் எல்லாரும்பார்த்து சந்தோஷித்தனர். இராவணாதியர் இனி இங்கிருப்பதிற் பயனில்லை, இலங்கையிற்சென்று மந்திரிகளிடம் ஆலோசித்து, தந்திரமாய்ஜானகியை அபகரிப்போமென்று சொல்லிக்கொண்டு சென்றனர். ஜனகராஜன் அகமகிழ்ந் திராமனுக்கு ஜானகியையும், இலக்குவனுக்கூர் மிளையையும், பரதனுக்கு மாண்டவியையும், சத்துருக்கனுக்கு சுருதிகீர்த்தியையும், விவாகஞ்செய்து கொடுத்தனர்.

4-வது அங்கம் முற்றிற்று.

1. கந்தருவன் பிரவேசம்.
2. ஒட்டகமுகியென்ற இராக்ஷஸி பிரவேசம்.
3. ஜனகராஜனும் சதானந்தரும் பிரவேசம்.
4. விசுவாமித்திர வடிவமாய் வித்திச்சிருவனும்,
   இராமவடிவமாய் இராவணனும்.
   இலக்குவன்வடிவமாய் சாரணனும் இவர்கள் பிரவேசம்.
5. கந்தருவன் பிரவேசம்.
6. விசுவாமித்திரர், இராமர் இலக்குவன் இவர்கள்பிரவேசம்.
7. வில்லுடன் சதானந்தர் பிரவேசம்.
8. சீதை, மாண்டவி, சுருதி கீர்த்தி ஊர்மிளை, இவர்கள் பிரவேசம்.
9. தேவவிரதன் பிரவேசம்.

ஆகப்பாத்திரப்பிரவேசங்கள் 17.

ரு-வது அங்கம்.

முதலில் விராதன் பிரவேசிக்கின்றனன், பஞ்சவடிவனத்திற் ப
ன்னசாலையிற்றம்பியுடன், தாரத்துடன் வசிக்கின்ற இராமனை, வதைசெய்
து வரும்படி, ஜனஸ்தானத்தினின்றும், தனதுசினேகிதனை,காலனுப்பப்
பட்டவனாய்ச்சொல்லிக்கொண்டு, அவ்விதம்பிரவேசித்து, கோகிலவடிவனாய்
ஓர் மரத்திலேறி, பன்னகுடிவாயிலில், இலக்குவன் ஆயுதபாணியாய்நிற்பதை
க்கண்ணுற்று, அவனைக்கொல்லத் தன்னாலாகாதகாரியமென்று சிந்தித்து,
ஜானகியின்பேரில் மையல்கொண்டு, சமையம்பார்த்து, ஜானகிதனிப்பட்ட
போது இராமரூபத்துடனவளை அபகரித்துச்சென்றவளுடன் சுகிக்கவே
ண்டுமெனச்சமையம்பார்த்துக் கொண்டிருந்தனன், அப்பால் சூர்ப்பனகை,
பிரவேசித்து, ஜானகியை அபகரித்து வரும்படி இராவணனாலனுப்பப்பட்ட
வளாய்ச்சொல்லிக்கொண்டு, கரிக்குருவி வடிவம புனைந்து, பன்னகுடியில்
இராமனும், சீதையும், இருப்பதைக்கண்ணுற்று, இராமன்மேலதிமோகங்கொ
ண்டு, சமயம்பார்த்து, இராமன்றனிப்பட்டபோது தான் ஜானகிவடிவத்து
டன், அவனுக்கு மோகத்தையுண்டுபண்ணி; தந்திரமாயவனை, அபகரித்துச்
சென்றிஷ்டப்படி சுகிப்பேனென்று சொல்லிக்கொண்டுலாற்றுகின்றபோ
து, அங்கொருபால் விராதனும், சூர்ப்பனகையும் சந்தித்தொருவர்க்கொரு
வர், அந்தரங்கத்தை வெளியிடாமலே, இராவணேசுவரன், மந்திரோபா
யததாலே வியமந்தனைப்பிசாசத்தால், அயோத்தியாபுரியினின்றும் இராமனை
வனத்திற்கு மூட்டைக்கப்பட்டுப்பஞ்சவடியிற் பன்னசாலையில் வசிக்கின்றவனை
யுள்ளமற்ற வார்த்தைகளைப் பேசிக்கொண்டு, அவரவர் தததமிடஞ்செல்வதா
ய்க், கபடமாய்ச்சொல்லிக்கொண்டு தனித்தனியேசென்றனர். அப்பால் பர்
ணகுடியின்பக்கத்திலங்கொரு, பருப்பதத்தினின்று வனவேடிக்கை பார்க்கி
ன்ற விதமாய், இராமர், சீதையுடன்பிரவேசிக்கின்றனர். அவ்விருவரும் ஒரு
வருக்கொருவர் பரிகாஸங்களொடு, வனத்தின் வளப்பங்களைப்பார்த்து ஸந்
தோஷித்துக்கொண்டிருந்தபோது, அவ்வனத்தில் ஓர்பால் விராதனாகிய அ
ரக்கனும் சூர்ப்பனகியாகிய அரக்கியும் ஒருவர்க்கொருவர் தாக்கலன்னியிற்
றனித்தனியே பிரவேசித்தனர். அவர்களைப்பார்து சங்கித்துக்கொண்டிருக்க
வும் அத்தருணத்திலேயே, அவ்வரக்கனே இராமனாகவும், அவ்வரக்கியே, சீ
தையாகவும், தனித்தனியேபிரவேசித்தனர். அவன் அரக்கனெனத்தெரிந்த இ
லக்குவன், ஆயுதபாணியனாய்ப்புலனறியவேண்டி மறைந்துபார்த்துக்கொ
ண்டிருந்தனன், இராமனும், சீதையும் மலைமேல்நின்று பார்த்துக்கொண்டிரு
ந்தார்கள். சீதாரூப சூர்ப்பனகி இராமரூப விராதனைக்கண்ணுற்று, வாஸ்

த்தவ இராமனென்று நினைத்து, மோகங்கொண்டு அவனை மயக்குமாறு சண்பகாடவிக்குட் போதுகொய்யும்ஜாடையாய்ப்போய்ப் புகுந்தனள். அவனைச் சீதையென்ற பாமார்த்தபுத்தியுடன், அவன்மீது மோகங்கொண்டவனாய் வனமே போய்ப்புகுந்தனன். இலக்குவன் அவ்வேடிக்கையைக்காண்பவனாகி மறைந்து மறைந்து பின் சென்றனன். அவ்வரக்கனும், அவ்வரக்கியும், ஒருவர்க்கொருவர் பாமார்த்த புத்தியுடன், ஒருவர்க்கொருவர், அபகரித்து வஞ்சிக்கப்பட்டவர்களாய், அந்தரத்திற், கிளப்பிச்செல்லுகையில் ஜடாயுவால் தடுக்கப்பட்டவர்களாய் ஒருவர்க்கொருவர், இனந்தெரிந்துகொண்டு, கீழிறங்கவே, இலக்குமணனால் அவ்விராதனென்னும் அரக்கன் ஸம்ஹரிக்கப்பட்டான். அந்தச்சூர்ப்பனகையும் மூக்கு, முலை அறுப்புண்டு சென்றனள். பின்னர், ஜடாயுவுடனிலக்குவன், பன்னசாலை வந்துசேர்ந்தனன், இதனையும்பார்த்துக்கொண்டிருந்த இராமனும், சீதையுடன் கிரியினின்றுங் கீழிறங்கிப்பன்னசாலைவந்துசேர்ந்தனர், அவ்வரக்கனும் அரக்கியும், விராதனும் சூர்ப்பனகியுமெனத் தெரிந்துகொண்ட இராமன், ஜடாயுவையுபசரித்தனுப்பிவிட்டு தம்பியொடு களித்திருந்தனர், அங்ஙனமிருக்க, ஜனஸ்தானத்திற் கரனென்னுங் கொடிய இராக்கதன்றன் தங்கையாகிய சூர்ப்பனகியின் மூக்கு முலையரிபட்ட விபரத்தினைக்கேட்டவுடனே, கோபாவேசத்துடன், தனதுசேனைகளோடு இராமனோடு யுத்தஞ்செய்யவந்து வந்துவளைந்துகொண்டனன் இராமனுடனே சீதையை இலக்குவனைப்பாலொப்புவித்துவிட்டு, அரக்கரை அழிவுசெய்வதாய்க் கோதண்டபாணியாய் ஓடிச்சென்றனன்.

ஐந்தாவதங்கம் முற்றிற்று

1. விராதன் பிரவேசம்.
2. சூர்ப்பனகையின் பிரவேசம்.
3. இராமனும் சீதையும் பிரவேசம்.
4. இலக்குவன் பிரவேசம்.
5. விராதன் சூர்ப்பனகையின் பிரவேசம்.
6. இராமரூப விராதன் சீதாரூப சூர்ப்பனகி பிரவேசம்.
7. விராதன், சூர்ப்பனகி, சொந்தரூபத்துடன் பிரவேசம்.
8. ஜடாயு பிரவேசம்.

ஆகப்பாத்திரப்பிரவேசம் [illegible].

௭-வது அங்கம்.

முதலில், அனலையென்னும் வீடணராஜகுமாரி பிரவேசிக்கின்றனள். அப்பால் ஸம்பாதியென்னும், வீடணராஜமந்திரி, பிரவேசிக்கின்றனன். அவ்வனலை, இராவணனால் சீதையைக்கவர்ந்து வந்து அவளை அசோகவனச்சிறையில் வைத்திருக்கின்ற காலமுதல், எழுமாதகாலமாயவளுக்குத் துணையாயிருந்துகொண்டு, அவளது துக்கத்தை மாற்றித்தேறுதல் செய்துகொண்டிருந்த சங்கதியைப்பற்றியும், சம்பாதி சீதைபிரிந்ததற்பின், இராமலக்ஷ்மணர் வனத்திற்றேடித்திரிந்து, சடாயுகடன்முடித்து, சுக்ரீவஸக்யமடைந்து வீரவாலியை வதைத்து அவ்விராச்சியத்தை நம்பிய சுக்ரீவனுக்களித்தனர் என்ற, விருத்தாந்தங்களையும், இராவணனைச்செயித்த அவ்வீரவாலியையும், இராமன் கொன்றானென்றவிபரம், இராவணனுக்கறிவிக்கும்பொருட்டு வீடணாதியரால் ஆலோசனை செய்து இராமன் சீதையைத்தேடவாரம்பித்தது முதல் வாலி வதைபரியந்தம் உள்ள ஸகல விருத்தாந்தங்களையும் சுகவிராசாரியரைக்கொண்டு நாடகமாயமைக்கச்செய்து கந்தர்வப்பெண்களால் அந்நாடகத்தை இராவணசதசில் பாத்திரரூப நடையுடை பாவனைகளுடனே பிரத்தியக்ஷம்போல் முறையே நடத்தும்படி யேற்பாடுசெய்திருக்கின்ற சங்கதிகளையும், ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அந்நாடகக்காரர்களை அழைத்துவருவதாய் சம்பாதி சென்றனன். அவ்வனலையும் பிரத்தியக்ஷத்தில் அந்நாடகத்தில் இராமரூபத்தைக்காட்டி சீதையை சந்தோஷிக்கச்செய்வதாய் சொல்லிக்கொண்டு சென்றனள். அப்பால் மகாபார்சனென்ற விகாத மந்திரியுடன் இராவணன் பிரவேசிக்கின்றனன். அப்பால், அந்த நாடகத்தை ஆரம்பஞ்செய்கின்றனர். அந்நாடகக்காரரில் ஒருவன் பிரவேசிக்கின்றான்.

சூத்திரதாரன் பிரவேசிக்கின்றனன். நடி கானஞ்செய்கின்றனள். சூத்திரதாரன் அந்நாடக சூசகம் சொல்லுகின்றபோதே இராவணனுக்கு பிகக்குதூகலம் பிறந்தது. அந்நாடக அரங்கத்தில் இராக்கதாந்தக் காரணக்கங்கணம் நூருலைகக்கணிந்த சீதையும் அப்படியே அனலையும்பிரவேசித்தனர். சீதை அவ்வனலையால் தேறுதல்செய்யப்பட்டுக்கொண்டு இராக்கதர்கட்புலன் கட்சுகறியப்படாதவளாய் ஓர் பாலிருந்து நாடகம் பார்க்கின்றனள். அங்ஙனமிருக்க அந்நாடகத்திலேற்பட்ட வேஷ இராமலட்சுமணர்கள் பிரவேசிக்கின்றனர். அவர்கள் சீதையைக்காணமல் பர்ணகுடில் சூனியமாயிருப்பதைப்பார்த்து அதிகமான சோகஸந்தாபத்துடன் வனமெங்குந்தேடித்தவித்து மதிமோகித்து காட்டிலுள்ள மரமுதலிய அசேதனங்களிடத்தும் அவளை

...றிப் புலம்பிக்கொண்டு தென்றிசையை நாடிச்செல்லலாயினர். அது கண்டு இராவணன் சந்தோஷமடைகின்றனன். சீதை துக்கிக்கின்றனள். ஆனாலவளது துக்கம் மாற்றுகின்றனள். ஆகவே தென்றிசை குறித்துத் தேடிச்செல்கின்ற இராமலெட்சுமணர் இரதமுதலியன முறிந்து கிடக்கின்ற சிற்சில அடையாளங்களைக்கண்ணுற்று அவ்வழிக்கொண்டே அவ்வனம் [illegible] இரத்தம் பெருகின்ற மலைபோன்ற காத்திரத்தோடு களைப்புற்றுக் கிடக்கின்ற விதமாய் ஜடாயுபிரவேசிக்கின்றனர். அவரைச்சடாயுவென றறிந்துகொண்டு அவரிடம் வினவ. ஜடாயு இராவணனென்ற இராக்கதனால் ஜானகி அபகரிக்கப்பட்டனளென்றுரைத்துவிட் டாவிதுறந்தனர். அப்பால் [illegible] முடித்துவருமிலக்குவனால் கைதுணிந்து சாபமொழிந்து திவ்ய தேகம்பெற்ற கபந்தன் சுக்கிரீவனைச் சேரும்படி இராமனுக்குரைத்துவிட்டுச் சென்றனன். அதுகண்டு இராவணன் மனவருத்தமுற்றனன். சீதை களிப்புற்றனள். இராமலெட்சுமணர் பம்பா நதிக்கரைவழியாய் ரிசியமூக கிரியைநாடிவருகையில் பிரமசாரியுருவான அனுமான் பிரவேசிக்கின்றனன். அவன் அனுமானெனத்தெரிந்துகொண்டு அவனுடன் ரிசியமூககிரியின்பாற் செல்லுகையில் பிக்ஷுரூபத்துடனே இருக்கின்றவனை வாலியென்று நினைத்துக்கொண்டிருந்த இராவணன் இவனை அனுமானெனத்தெரிந்தவுடனே கோபத்துடன், அவனைக் கொலைசெய்வதாய் [illegible] இருந்தனன். [illegible] யிருப்பான் [illegible], துந்துபியின் [illegible] தியில் விழும்படி செய்துவிட்ட குரூரமன் மராமரங்களை ஏழுமெய்தனன். அதுகண்டு அனுமான் சந்தோஷித்து அந்தத்துட்டனாவியைப் பிடித்துச் சுக்கிரீவனைக் காக்கின்ற தெய்வம் இவனேயென மதித்தனன், ரிசியமூககிரியைவிட்டு சுக்கிரீவனும் இதுவெல்லாங்கண்டு மெய்யாருங் குலதெய்வமிவனேயென மகிழ்ந்து மந்திரிகளுடன் இராமனை வந்து வணங்கி நின்றனன். இராமன், சுக்கிரீவனுக்கபயங்கொடுத்து சீதையின் [illegible] அவனாற் காண்பிக்கப்பெற்ற பின்னர் வாநர [illegible] இராமன்மீது, யுத்தஞ்செய்யக்கருதி அட்டகாசஞ்செய்து வருகின்ற வீரவாலியின்; சத்தங்கேட்டு [illegible] வாலியுடன் யுத்தஞ்செய்யச் சென்றனன். அச்சமயமே இராமனைச்சரண் [illegible] அவனது பத்தினி தாரையின் முறைக்குறுக்கேட்டு, [illegible] என்னுஞ் சந்தோஷத்துடன் இராமபாதங்களைத்தரிசிக்கத் தனது பரிஜனங்களுடன் சுக்கிரீவன் சென்றனன். இதுவெல்லாம் பார்த்திருந்த இராவணன், இராமனும் வாலியிறந்தானென்பதைச் சற்றும் நம்பாதவனும் கந்தர்வப்பெண்கள், பெண்டுகளுஞ் சாமரமென்றெண்ணிக்கொண்டு, கந்தர்வப்பெண்களைக் கொலைசெய்ய யத்தனித்தனன். அதைத்தடுத்த, [illegible] சக்கிரவர்த்தியாலனைக்கப்

பெற்ற, இன்றுட்கம் பொய்பன்று, இராமனால் வாலி இறந்தது வாஸ்தவமே, அதனைத் தங்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டே இவர்களாலேக்கனுப்படத்தலாயிற்று என்னவே, இராவணனை அந்நகப்பிசாயனும், வாலி யிறந்ததுபற்றி விசனத்தை அடைந்தனன்.

வாலி ஜெயம்பெற்ற இராமன் பிரவேசிக்கின்றனன். வாலிமகனாகிய அங்கதனும் இளவரசுப் பட்டங்கட்டித் தம்பியால் கம்பிய சுக்கிரீவனுக்குக், கிஷ்கிந்தா ராஜ்யத்தை முடிசூட்டி வைத்தனன். பின்னர் சுக்கிரீவனுலனுப்பப்பட்ட வானரப்படைகள் சீதையைத் தேடச் சென்றனவொங்கதைக் கேட்டு இராமலக்ஷ்மணர் களிப்புடன் பதிற்றெரிபடமிட்டும் பிரசிரவணகிரியில் வசிக்கப் போயினர். சம்பாதியென்னுங் கழுகரசனால் சீதையிருப்பு தெரிந்துகொண்ட அனுமார் இலங்காபுரிக்குவரக் கடல்கடக்கின்றபொழுது சங்கிரியை, சுரசை முதலானவர்களாற் றெரிந்துகொண்ட இராவணன், வானரம் வந்திலங்கையில் நுழையாமலிருப்பதற்குண்டான பந்தோபஸ்து ஏற்பாடு செய்து கவலைகொண்டு மந்திரிகளிடம் ஆலோசிக்கச் சென்றனன். வைதேகி, அனலையும் அக்களிப்புடன் அசோகவனத்தை அடைந்தனர்.

ஆறாவதங்கம் முற்றிற்று.

1. அனலை, வைபாதி, இலங்கினி பிரவேசம்.
2. மகோதரனுடன் இராவணாசுரன் பிரவேசம்.
3. சூத்திரதாரன், விதூஷகன் கூட பிரவேசம்.
4. ஒருகைக் கங்கணமணிந்த சீதையும், அனலையும் பிரவேசம்.
5. இராமலக்ஷ்மண வேடந்தரித்த நர்த்தகப் பெண்கள் பிரவேசம்.
6. சிறைகளற்று இரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு கண்டகதப் பிராணனாய்க் கிடக்கின்ற ஜடாயுவின் பிரவேசம்.
7. ஜயபெற்ற இலக்குமன் பிரவேசம்.
8. பிக்ஷு பிரவேசம்.
9. அனுசாருடன் சுக்கிரீவன் பிரவேசம்.
10. வாலிவிஜய இராமன் பிரவேசம்.

ஆக பாத்திரப் பிரவேசங்கள் 13.

எ-வது அங்கம்.

முதலில் சோகாவேசத்துடன் சூர்ப்பணகி பிரவேசிக்கின்றனள், இராமனாற் சங்கடத்திற்குட்பட்டு ... இராவணனை ...

தி ராக்கதர்களின் மரணசோகத்திற் காற்றா தவளாய்விசனத்தை அடைந்து கொண்டிருந்தனள் அங்ஙனம் வீடணராஜனது மந்திரி ஸம்பாதியென்பவர் பிரவேசிக்கின்றனர், இராவண கும்பகர்ணாதி கொடிய இராக்கதர்களைச்சங் கரித்ததிலும் தன இராஜனை வீடணர்க்கிலங்காராஜியமளித்ததிலும் அத்தி யானந்தப்பட்டுத் இராமனைப்புகழ்ந்துகொண்டும், சூர்ப்பனகையைச்சிந்தித்து அவள் விசனஸ்வபத்தையும் அவள் து[illegible]னப்பையும் தெரிந்துகொண்டும், சற்று ஸம்பாஷித்துவிட்டுச்சென்றனன, இரகுநந்தனனை, இரகுராமன் பட்சங்கமென அக்கினியிற் குதித்தெழுந்த கற்பலங்காரியான ஜானகி யுடனும் இலக்குவனுடன், மற்றப்பரிவாரங்களுடன் திருப்ப அயோத்திக்குப் [illegible] பரதனுக்குத் தன் வரவை முன்னதாகவே சென்றறி விக்கும்படி அநுமானை யேவிக்கொண்டிருக்கின்றனென்று, தெரிந்துகொ ண்ட [illegible] இராமன்மீதழுக்காறுகொண்டு, தன் இரண்டு சகோதரர்க ளான [illegible] கும்பகர்ணர்களின் வதத்திற்கு பதிலாய் இப்போது சகோ தரர்களான அப்பரத சத்துருக்கனரை இவ்வநுமான் இராமன்வரவைத்தெரி விப்பதற்குச்செல்லுமுன்னமே யான் மாயையால் ஒரு தவ மடந்[illegible] போல் வேடங்கொண்டு, விரைவிற்சென்று, உசிதமான விதமா[illegible] ளைச்செய்து அக்கினியில்விழுந்தாவியிறக்கும்படி செய்கின்[illegible] ணறனள், அப்பால், பரதசத்துருக்கனர் பிரவேசிக்கின்றனர் [illegible] [illegible] இராமனது மனைவி ஜானகிப்பிராட்டி அரக்க[illegible] ரிக்கப்பட்[illegible] கேள்வியால் அந்தத்திருட்டரக்கனை [illegible] பொருட்டு [illegible] னுக்குச் சகாயமாக அவரவர் தம்படை[illegible] [illegible] ண்டு, இரதகஜதுரகபதாதி சேனைகளுடன் [illegible] [illegible] இராமனை நினைத்து நினைத்து அவனதுபிரிவாற்றாமையி னால் துக்கத்தை அடைந்துகொண்டிருக்கின்றனர். அங்ஙனமிருக்க இரா னுக்கு [illegible] சுக்ரீவசகாயங் கிடைத்ததென்றும் ஆகையாலொரு வருக்கு [illegible] தேவையில்லையென்றும் சுக்ரீவ சஹாயத்தால் [illegible] ருப்பு [illegible] கொண்டு, கடலிற் சேதுபந்தனஞ்செய்து அதன்வழியாய் கவிப்படையோடும் சத்துருவின் நிவாஸநகரடைந்தனனென்று, [illegible] ராஜனை [illegible] அனுப்பப்பெற்ற நிருபத்தைப்பார்வையிட்டு [illegible] கொண்டு, இலங்கைத்தீவில் இருதிறத்தவர்க்கும் கலகமூண்டிருக்கும் [illegible] நிதானித்துக்கொண்டவர்களாய் ஒருவர்க்கொருவர் கவலைகொண்டிருக்கி ன்றனர், அத்தருணத்தில் தாபசிவேடங்கொண்ட சூர்ப்பனகி பிரவேசிக் கின்றனள். அவள் இலங்கைத்தீவில் தனக்கு ஆப்தசிநேகிதர்களான [illegible] வாதிகள் அரக்கர் செருவிலழிந்துபோனார்களென்றும், இராமனுமிலக்குவ னும், வல்லரக்கர் வஞ்சனையில் மாய்ந்தார்களெனறும், சீதாப்பிராட்டியா[illegible], நான்றுகொண்டாருயிர்நசித்தாளென்றும், உண்மைபோல் வஞ்சனைய[illegible], வழுத்திய பொய்மொழியை மெய்மொழியெனக்கொண்டு, அந்தச்சோ[illegible]

ரத்திற் காற்றுதவர்களாய் அந்தப்பரத சத்துருக்கனர், அக்கினியில் மூழ்க வெத்தனித்தபோது தன் றவப்புதல்வி ஜானகியை இராவணனபகரித்தனனென்று கேள்விப்பட்ட ஜனகராசன் பிரவேசித்தனர், பரதசத்துருக்கனரால், இராம லக்ஷமணர்களுடையவும் ஜானகியினுடையவும் துர்தெசைகளைக்கேள்விப்பட்ட ஜனகர் சோகத்திக்காற்றாது தானும் பரதசத்துருக்கனருடன் அக்கினிக்கிடங்கில் மூழ்குவதாய்ச்சொல்லிக்கொண்டு, அம்மூவரும், தீவலஞ்சுற்றுகின்றார்கள். அத்தருணத்தில் வன்னிவடிவனுன அனுமார் பிரவேசிக்கின்றனர், சத்துருசங்காரஞ்செய்து சீதாலக்ஷமணசமேதராய் இராமனிதோ வந்தனன், பரதா நீயில்மூழ்காதே மூழ்காதேயெனச் சொல்லிக்கொண்டு, அவசரத்தில்வந்து பரதனைத்தடுத்து நிறுத்திக்கொண்டு, அவனுக்கு நம்பிக்கை வரும்படி, நடந்த நடைபிடிக்கைகளைச் சுருக்கமாய் நவிலும்போதே தென்றிசையினின்றும் ஆகாயமார்க்கமாய் கவிப்படைசூழ புட்பகவிமானத்தில் சீதாலக்ஷமண சமேதராய் இரகுகுல ராமச்சந்திரன் வருகின்ற திருக்காக்ஷியைக்கண்ணுற்று, பரதர், சத்துருக்கனர், ஜனகர்முதலிய யாவரும் அத்தியானந்தபரிதர்களாய், எதிர்கொண்டுசென்றனர், சீதாலக்ஷமண சகிதராய், ஸ்ரீராமசந்திரர் புட்பக விமானத்தினின்றும், நந்திக்கிராமத்திலிறங்கினார், பரதசத்துருக்கனரை வந்துபணிந்தனர், மற்றவர்களும்முறையே யதோசிதவந்தனோபசார குசலப்பிரஸ்னங்களோடு பரதராஜனுடையகோரிக்கைப்படி இராமபட்டாபிஷேக மஹோற்சவம் நடத்தினார்கள், வாத்தியங்கள்கோஷித்ததுகள், பிராமணர்களுக்கநேக [illegible] கொடுத்தனர்கள் தேவதுந்துபிதொனி முழங்கிற்று மேக[illegible] பொழிந்தார்கள்.

ஐந்து அங்கம் முற்றிற்று.

1. சோகஅவசரத்துடன் [illegible] பிரவேசம்.
2, [illegible] பிரவேசம்.
3. பரதசத்துருக்கனர் பிரவேசம்.
4. தாபஸி பிரவேசம்.
5. ஜனகராஜன் பிரவேசம்.
6. வன்னி[illegible] பிரவேசம்.
7 புட்பகவிமானத்தில் சீதாலக்ஷமணசமேதரான இராமர் பிரவேசம்.
8 [illegible]
9 [illegible]

[illegible] பிரவேசங்கள் 12.

[illegible]நாடகம் முற்றிற்று.

குறிப்பு.

இந்நாடகத்தைப் படிக்கின்றவர்கள், இதிற் கவனிக்கவேண்டும் விஷயங்களாவன:—

௧ இதில் (——) திரை. என்று குறித்திருக்கிற அடையாளங்கள், நாடக அரங்கத்திலுள்ள, திரைச்சீலைகள் என்றும், இ[illegible]ன் பிரவேசிக்கின்றனை, என்ற இடங்களிலெல்லாம் அந்தந்த ரூபமான வேஷக்காரர்களின் வரவுகள் என்றும். (தன்னுள்) என்று குறித்திருக்கிற அடையாளங்கள், அந்தந்த வேஷக்காரர்கள் மனதில் நினைத்துக்கொள்கிற விஷயங்களென்றும். (வெளிப்படை) என்று குறித்திருக்கிற அடையாளங்கள், அவரவர் திறந்து பேசிக்கொள்கிற விஷயங்களென்றும், அர்த்தங்களாம். அன்றியும், பற்பல இடங்களில் ஆனந்தம், ஆச்சரியம், சோகம், தீனம், கோபம், ஆசை, சினேகம், அனுராகம், பயம், இதுமுதலான ரசங்கள் வருகிற இடங்களெல்லாம், அந்தந்த ரூபமான பாவனைகளைக் குறித்துக்கொள்ளவேண்டும். இன்னும் சில செய்யுட் பாடல்களில், [illegible] இப்படி அடையாளமிட்டிருக்கிற இடங்களைக் கவனிக்கவேண்டும். அந்தச்செய்யுள்களில், ஒரே ஸந்தர்ப்பத்தில பலபேர் பலவிதங்களாய்ப் பேசிக்கொள்ளுதலும், ஒரே ஸந்தர்ப்பத்தில் ஒருவன்றனே ஸமயோசிதம்போல் பலவிதங்களாய் ஸம்பாஷித்தலும், ஏற்படுகிறதினால் அந்தந்தச் செய்யுள்கள் அந்தந்த இடத்தில் முடிவு பெறாமல் பல இடங்களாய் முடிவுசெய்யப் பெற்றிருக்கின்றனவென்றறிந்துகொள்க.

பிழை திருத்தம்.

அங்கம்.	பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்.
1	12	6	ன்	ன
	17	28	வு	மு
	17	22	ன்	ள.
	22	2		ட
	22	28	ன	ன்
	23	12	ஷி	ணி
	23	25	தவ	வத
	24	33	தி	த
	33	6		பு
	37	13	ன்	ர்
	37	20	ரி	றி
	47	7	ன்	ன
2	65	14	ழு	ஷி
	65	8	ற்	ர்
	[illegible]	27	ஷி	
	71	3	டி	மூ
	74	22	ளா	ரு
	74	25	ரே	ரே
	74	33	்	க்
	75	32	ட	ட்
	76	10	ஞெ	சொ
	78	12	ஞெ	சொ
	81	11	பார்	பலர்
3	86	2	றி	ரி
	89	29	றி	ரி
	92	13	ர	ற
	93	25		க்க
	93	32	ஜ	
	96	6	றி	ரி
	96	6	று	ரர
	96	16		ம்

	99	25	[illegible]	[illegible]
	102	15	[illegible]	[illegible]
	102	17	[illegible]	[illegible]
	105	3	[illegible]	[illegible]
	109	31	[illegible]	[illegible]
	111	6	[illegible]	[illegible]
	111	12	[illegible]	[illegible]
	12[illegible]	31	[illegible]	[illegible]
	129	15		[illegible]
4	150	12	[illegible]	[illegible]
5	202	[illegible]	[illegible]	[illegible]

உ

ஸ்ரீராமஜெயம்.

ஜானகிபரிணய நாடகம்.

பாயிரம்.

விநாயகர்துதி.

வெண்பா.

திருமணஞ்சேர் தாமரையாள் சீர்ஜா னகியாள்
பரிணயத்தை நாடகமாய்ப் பாரி—னுரைதருவாம்
முத்திவச மாகமுனைப்பிறைக் கோட்டும் பரனைப்
பத்திவச மாகப் பணிந்து.

செந்தமிழாற் சானகியின் சீரார் பரிணயத்தைச்
சந்தமுறு நாடகமாய்ச் சாற்றவே—தந்தி
முகவனையிற் பாதத்தை முன்னாள் வணங்தோய்
சகலவர முந்தாநீ தா.

௫. இராகம் நாட்டை. சாப்பு தாளம்.

பல்லவி.

கணநாயகா காத்தருள்வாய் (கணநாயகா)

அனுபல்லவி.

குணபூஷணனே குஞ்சரவதனே
துணைவந்தருள் சுகானந்தஸதனே. (கண)

சரணங்கள்.

ஏகதந்தனே ஈசர்மைந்த னே
ஆகுவாகனே அன்பர்க்குகந்தோ னே
வாகுமயிலேறும் வள்ளல்முன்வந்தோ னே. (கண)

அஸ்த்தமோதகா அருடாய கா
பக்தபாலகா பவமோச கா
சுத்தனே அநகா சுப்[illegible]விநாய கா. (கண)

ஞானகிபரிணையந் தமிழினன்னய ம்
ஆனநாடக மாகவுரைசெய் ய
வானோர்பெருமானே வந்தருள்வாயை ய. (கண)

சரசுவதி வணக்கம்.

விருத்தம்.

அலைகடலுலகின் மிக்க வரியசெந்தமிழால் யாரும்
நலமுறு ஜனகிமன்ற னுடகந்தனை யியம்ப
மலரய னுவிற்றோன்றி மைந்தனென் னிதயப்பூவி
லுலவுபொற் கொடியேவாணி யண்பதம் பணிகின்றேனே.

தரு. இராகம் சாணடா. சாப்ப தாளம்.

பல்லவி.

பதுமாலயே பாவமோசனி
பரமார்த்தசொரூ பப்ரகாசனி

அனுபல்லவி.

மதுரம்பொழியும் வாக்விலாசினி
மந்தகாசினி பங்கயலோசனி (பது

சரணங்கள்.

சந்ததம்பணிவேன் சாரதாகல்யா ணி
தமியேன்பாவில் தழைத்தருளவா ணி
சுந்தரிசர சோதிப்ரகாசி ணி
தொங்கெழில்வேணி சுமுகிவீணாபா ணி (பது

மதிதவளகாத்ரீ வளர்கலைநற்க்ஷேத் ரீ
வாக்கில்வந்தருள் மங்களகாத் ரீ
துதிபெருங்குலத்ரீ சுரமுனிகணஸ்தோத் ரீ
துங்ககாயத்ரீ பவித்ரீசாவித் ரீ (பது

ஞானநன்னிலையே நம்பினேன்கலை யே
நாவில்வந்தருள் நானுன்மதலை யே
தேனேர்குதலையே தீர்ப்பாயென்கவலை யே
தேவிவிமலையே மலைநேர்முலை யே. (பது

ஜானகிபரிணய நாடகம்.

விஷ்ணு துதி.

சந்தவிருத்தம்.

நாதமலி முரளியிசை காதுகொடு பசுவினின
நாடியொரு கணமதனி னனி யோடி
ஞாலமிசை மடிநிறைகொள் பால்சொரிய விளைவணுகி
நாளுமிடை யறவளரும் நல மான
வேதஉப நிடதவிவ காரஸமிகும துவை
வேகமுட னுணவெனவும் விழை வோடு
மீறுகல வியினிலிடை மாதர்தன மலிகலவை
வீழ்பொடிகள் சிகுவைகொடு மெது வாக
ஆதரவொ டவைவிலக வேபுரித லெனவுமிக
வாவலொடு பருகிமகிழ் வது வான
ஆதிநடு முடிவினொடு மாலனக பாவடிவ
மானவொரு பொருளகில மது வாண
சோதிசக தலமதில்வி னோதமய வனுர்தமுறு
சூழிடையர் மரபில்வரு சுகு மாரன்
தோமருவு கொடியபவ னோயகல வருளினிய
தூயவிரு பதமலர்க டுணை யாமே.

உமையவள் துதி.

சந்தவிருத்தம்.

இதழிமக ரந்தநிறை கமழ்விமொளிர் பஞ்சதனை
இருசரணி லங்க நனை யேர்
கதுவுமிரு கொங்கைபடர் பொடிகமழ்வி ளிந்தைவரி
கவிஞுறயு கந்த ருளி னேன்
கதிதருகுன ன்பருடனி னிதலர்கொண் மஞ்சமிசை
கலவிபுரி யென்ற சகி னோர்
மதிமுகமி லங்குசிலை நுதல்விழிமு னிந்தமலை
மகளிருப தங்க டுணை யே.

பாயிரம்.

குருவணக்கம்.

விருத்தம்.

சகத்துள கவலைநீக்கி சந்தத மறிவைத்தேக்கி
அகத்துள விருளைப்போக்கி யன்புடன் றன்போலாக்கி
மிகுத்த சந்தேகந்தீர்த்து வேதமெய்ப் பொருள்விளக்கும்
மகத்துவ குருவின்றிவ்விய மலரடி சென்னிசேர்ப்பாம்.

பெரியோர்வணக்கம்.

விருத்தம்.

சதிர்பெருஞானசன் மநமொனையுதித்த ஜானகிபரிணயந் தமிழின்
மதியிலிவகுத்தன் மரியிலே மதலைவவ்விட மணமலர்க்கரத்தால்
எதிர்படவிருத்த லெனத்தரும் புலவிரொன்னே ரியம்பினையென்னி
கதிதருராம பந்திம முளதாற் கழறினேன் பிழைபலகருதேன். (ம்)

ராகம் பந்துவராளி. ஆதி தாளம்.

பல்லவி.

இந்தப்பாசத்தில் இப்பிதம்விளைந் திட்டாலும்பொறுத்தருள்வீரா.

அநுபல்லவி.

வந்தருள்செய்வேனிதன் பிழைதீர்த்துப்பொருள்வையா
முந்தவிதமுனையென் றெனக்குமதிசொல்வீரா. (இந்)

சரணங்கள்.

இலக்கணத்தினிலேயோர் ... ... அக்கரமாயினும்
இவ்விதமென்றறி ... ... வேறு
கலக்கமில்லாமலே ... ... இலக்கியத்தினிலேயான்
கடுகளவாயினுந் தெரி ... ... வேனே
பலதத்துகிரணகதி ரோனுக்கெதி ... ... ராகப்
பார்க்கிற்சிறுமின்மினி யாமோவதுபோ ... லாக
நலக்கமாகக்கற்ற புலவீருங்கண்முன் ... ... பாகச்
சொல்வேன்மதலைச்சொற் கேட்குந்தாய்போலன் பாக. (இந்)

அந்தணவறன் ராம ... ... பத்ரகவீந்த்ரன்
அருளியவடமொழி ... ... யாய்ந்து

செந்தமிழார்சானகி ... ... பரிணயநாடகஞ்
செப்புகின்றேனெழில் ... ... வாய்ந்து
சந்ததமாசையால் கோகிலந் ... ... தித்திக்கத்
தானேகூவிடவெதிர் தவளையுஞ் ... ... சத்திக்க
சிந்தைகொண்டதுபோலாம் ஆயினும்பா ... ... வித்திக்க
தெளிவுற்றிசைந்தேனும தருட்கொண்டு... ... வர்த்திக்க. (இ)

ஒருமதக்களிற்றினை களினத்தந்துவிற்கட்ட
உள்ளந்துணிந்தாற்போல் ... ... நானே
அரியதானவிச்சரிதத்தை ... ... நாடக
மாகச்சொலத் துணிந் ... ... தேனே
கரியகாகமுஞ்சொன்னக் கிரியையடைந்த ... தாலே
கனகநிறமாமென்று கழறுவரது... ... ... போலே
திருவாஞ்சனகிமன்றற் பரிசுரைப்பத ... ... ஞலே
சிறியன்புன்சொல்லும்நன்ருய்ச் சிறந்தசொல்லாமென் மேலே. (இ)

கதாஸங்கிரகம் விருத்தம்.

சீர்படைத்த ஜனகிமணஞ் செய்துராமன் தென்னிலங்கை வேந்துசெய்மந் திரத்திஞலே, கூர்படைத்த முட்கணிறை கானமெய்த குமரிதனை யரக்கர்கோன் மாயஞ்செய்து, பேர்படைத்த ரகுவீரன் ஜயப்ரதாபம் பின்ஞெருவந்தராகாடி கையினுற்கண்டு, தார்படைத்த விலங்கேசன் றவிக்காரமன் சத்துருவைத் தகர்த்ததிவிய சரிதந்தானே.

தோடயம் விருத்தம்.

சுரர்பதி முதலாயாருஞ் சூதாதியரு நல்ல
சசிஜவயனும் போற்றுஞ் சானகி பரிணயத்தை
விருதினை பணிகொழிக்கும் வாரிதி சூழுமிந்தத்
தாணியி ஞடகத்து தயஞ்சொல் தோடயஞ்சொல்வேனே.

இராகம் நாட்டை. ஜம்பை தாளம்.

சீரார்தமிழாற்றிங்கண்முகி திவ்வியமங்களவடிவழகி
பாரார் திருவெனுமாஜனகி பரிணயநாடகம்பாட ஆ ஆ
காரார்மழைமதக்கரிராசக் கவின்முகன்பாசகராங்குசன்
ஏராரொருகோட்டுடையீசன் எழிற்கணேசன்றுணையே.

பாயிரம்.

அந்தணராமபத்திரர்நயமே அருளினர்வடசொலாற்குவலயமேல்
சந்ததஞ்சானகிபரிணயமே தமிழ்நாடகமாய்ச்சாற்றிடவே ஆ ஆ
செந்திருவுமவள்சேர்மாலும் சிவனுமுமையுங்குகன்சீர்வேலும்
பைந்தொடிவாணியுமெக்காலும் பாலித்தருள்வதுகடனே.

சிந்திதபோகமெலாமுதவும் திவ்வியசரித்திரமானதுவும்
சந்தமுறுஜனகிமணமிதுவுஞ் தமிழ்நாடகமாய்ச்சாற்றிடவே ஆ ஆ
பந்தவினைத்தொடர்துயர்நீக்கும் பண்பொடுபணிபவர்தமைக்காக்கும்
சுந்தரமாங்கஞ்சத்தெழிலேர்க்கும் தூயசற்குருவின்றுணையே.

பாயிரம் முற்றிற்று.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஜானகிபரிணயநாடகம்.

க—வது அங்கம்.

நூல்.

விநாயகர்பிரவேசம்.

விருத்தம்.

பத்தியாய்த் தொழுவோர்க்கன்பன் பாரதந்தனை முன்சொன்ன
வத்திரி தன்னிற்றீட்டு மழகியகோட்டுப் பெம்மான்
சித்தமின் னாடகத்தை நிரந்தரங் காக்கவேண்டி
கர்த்தனோங் கரணாமூலக் கணபதி தோன்றினாரோ.

தரு. இராகம் சுருட்டி. ஆதி தாளம்.

பல்லவி.

விநாயகர்வந்தார் ஜய ஜய விநாயகர்வந்தார்.

அநுபல்லவி.

அநாதரக்ஷகர் அம்புயநேத்திர ர்
ஜனார்த்தனன்மருக சிங்காரகாத்திரர். (விநா)

சரணங்கள்.

மகரக்குழைகள்காதிலிலங்க தட மார்பினிற்பூணூற்றுலங்க
செங்கையிற்கந்தமலர்கள்சூட்டி சீர்பாசாங்குசங்கையிற்காட்டி
குகசோதரன் மிகவேமன மகிழ்வாய்கல முறுவிக்கின. (விநா)

பத்தர்களநுகுற்றஞ்சகித்து அவர்கணல்ல பதத்தைச்சாரவே அனுக்ரகித்து
ஒற்றைக்கொம்புளபனெனகன்னம் ஒடுமதஜலத்தால்தளதளென
பொத்தயகிழ் வற்றாகுயா னத்தேறிநடத்துஞ்சித்தி. (விநா)

அப்பம் எள்ளுருண்டையுமவியும் பொரிவகையும் அவலுமோதகமுமிட்டலி
நற்பலாவின்சுளையும்பரிந்து நன்றாயருந்தித்தொந்திசரிந்து [யும்
பற்பலவி தப்பிறப்பு மூப்பாதெனைத் தப்பவிக்கும். (விநா)

சூத்திரதாரன் பிரவேசம்.

விருத்தம்.

சீர்த்தியாம் பரதநூலின் சித்தாந்தங் களிலும்வேத
சாத்திரங்களிலுந் தேர்ந்த சாதுர்யவான் களாநற்
கீர்த்திபூடணர் நிறைந்து கெடிபெரும் மேலாம்ரங்கிற்
சூத்திரதார னென்போன் துரிதமாய்த் தோன்றினேன்.

இதுவுமது.

புகழ்பெரு சகலவித்வ பூடணர் நிறையரங்கிற்
றிகழ்மணி யாழிபூண்டு செவிகளிற் கடுக்கனிட்டு
சிகைதனி லுருமாற்சேர்த்து செவ்வையா மூப்புமாட்டி
சொருசுட னனிநடந்து சூத்திரதாரன் வந்தான்.

சூத்திரதாரன் சொல் விருத்தம்.

தரங்கவா விலையராவிற் சாய்ந்துகண் டுயில்வோய்போற்றி
சரங்கடா வரங்களெங்குந் தனிநின்ற முதலேபோற்றி
கரங்குவித்திடு வோருள்ளக் கருத்தறிந்தவர்கள் வேண்டும்
வரங்கடந்திடு வேயசெங்கண் மாலேநின் மலர்த்தாள்போற்றி.

சூத்திரதாரன் சபையை எதிர்நோக்கி சொல்.

ஆசிரியவிருத்தம்.

கல்விக்களஞ்சியங் கசடறக்கலைகளைக் கற்பவர்களுக் குணர்த்துங்
கனவின்ப சரசமாங்கவிதை யங்கையர்கட்கு கந்தசுகமருவையப்
பல்வர்த்தனைச் சொற்சமத்கார விவகாரபரமார்த்த ஞானதீபம்
பரமான நவரசப்பிரதான பரதமதபாரதுற் பாரங்கத
கல்வித்துவச் சிகாமணிகணிறை பொக்கிஷநற்புகழ்ப் பெரும்பாற்கடல்
நடுநிலையுரைத்திடுஞ் ஞாயத்தலம்பொழியு கனிபூற் றருட்பிரவாகந்
தொல்புண்ணியத்தி னொலிவிதிற் பெரும்பதந் தொழுவதற்கருகமாக
சமுகமுளசபையிதே தேவசபைமாசபை தூயபெரியோர்கள் சபையே.

(வசனம்) ஆகையாலிச் சபையோர்கட்கு வந்தனஞ் செய்கின்றேன். எனது குலாசாரமாயிருக்கிற அபிநயவித்தையை பரதாசாரிய மதானுஸாரத்துடன் பிரகாசஞ்செயவித் திப்போத.. மாவை நிருதார்த்தஞ் செய்யப்போகின்றேன். எங்ஙனமெனின்,

ஆசிரியவிருத்தம்.

விரிமானிலத்தி லெப்பிறவியுநிலையன்று மிகவிழிவு யுண்டுக்கமே
வினவியோர்ந்திடில் மாறிமாறிவருஜனனம் விடுவித்திலே யேன்மையெனவும்

[illegible]

[illegible]
சாற்[illegible]
ஒருமாமன[illegible]
உற்றகுலபாண்டித்ய [illegible]
திருமால்பத[illegible]
திவ்யபுண்ணிய சரிதைரூபமாய் [illegible]

(வசனம்.) ஆகாயத்திற் செவி கொடுத்துக்கொண்டே [illegible] களே என்னென்ன கட்டளையிடுகிறீர்கள்.

விருத்தம்.

பதங்கணன் முத்தாமென்னப் பகர்ந்திட வெள்ளையையும்
அதிரதம் பெருகாநின்ற அர்த்தபந் தங்களாயும்
புதியகற் பிதமதாய்நற் புண்ணிய முளதாயிந்த
விதமொரு நாடகத்தை விளம்பிட வேண்டுமென்றே.

(வசனம்) ஆச்சரியம் ஆச்சரியம் என் மனதிற்கொண்ட [illegible] தோ அஃதே இச்சபையோர்களி ஞக்ஞாபனமாக இருக்கின்றது. [illegible] ய இது வோர்நன்னிமித்தமாக தெய்வமிசைத்தது நன்று நன்று ([illegible] கிநோக்கி ஓஓ! நாடகாலங்காரியான நடிப்பெண்ணை எதிர்பார்க்கின்றேன்.

பொது விருத்தம்.

விண்டலம் பரந்துலாவு மேகத்துனின மாங்கூந்தன்
மண்டல மதியாம்வட்ட வதனமந்தர மாங்கொங்கை
தொண்டலமா மரம்பைத் துடையெனு கடனப்பாவை
உண்டலங் கிருதாளாயு லாற்றினள் தோற்றினளே.

தரு. இராகம் தேசிகதோடி. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தனள் நடி மாதரங்கினில்

அநுபல்லவி.

சந்தமின்னற் [illegible]

[illegible]

[illegible]
[illegible]

க-வது அங்கம்.

கருவிழியின்மை திட்டிநயங்காட் டி
கானநடனம் கரைகண்டமோட் டி. (வந்தனள்)

தேககாந்தியும் திலதகாந்தியு ம்
சிற்றிடைஅரை ஞாளின்காந்தியு ம்
வாகாய்நாநாவன்ன மாகஒளிமின் ன
வஞ்சிநூபுரம் கலீர்கலீரென் ன. (வந்தனள்)

சூத்திரதாரன் அடுக்குமொழி.

பாடகக்காலனப் பேடெனச்சார்ந்திடும்
நாடகப்பாவைநீ நாடுமென்பக்கல்வா,

(நடி.) அப்படியே இதோவந்து விட்டேன்.

(சூத்திரதாரன் வசனம்.) இவ்வவையோர்களின் ஆக்ஞாபனம கேட்கப்பட்டனவோ.

(நடி.) (ஓர் பெருமூச்சுடன்) ஆம் ஆம்.

சூத்திரதாரன் அடுக்குமொழி.

சச்சமென்முலையனை சக்கமாசஞ்செபாகாய
கர்ச்சிதரிலாதகேன் மெச்சிடவிரித்திடாய்.

நடி. விருத்தம்.

சூத்திரதா ராவுனது தய்யைமகன் கலகம்சன் றேனின் மா
சாத்திமண முடிப்பதினை, யெனதுமகள் கமலினியைச் சாற்றற கொண்டைத
தீத்திரங்கொண் மாமாயன் கலகம்ச னுருவெடுத்துத் திருடதற் கே
ஆத்திரங்கொண் டானெனவே கேள்வியுற்றேன் மனநிலையு மலைவுற்றேனே.

(வசனம்.) ஆகையால் கமலினி கலகம்சர்களுடைய விவாகமானது எவ்விதம் நிர்விக்கினமாகநடக்கப்போகின்றதென்று கவலையடைகின்றேன்.

(சூத்திரதாரன் வசனம்) ஓ நடனசிங்காரி இவ்விதமான கவலையை இன்றே ஒழிக்கக்கடவை. எனெனில்,

விருத்தம்.

இனியுனக்கேன் விசாரம் எழிற்பிரகற் பலன்யென்
றனைவரு மழைக்கப்பெற்ற அரியவை லூஷனேன்
கனிமொழி கமலினீயாள் கலகம் சனிவர்கள்சேர்க்கை
கனிமணம் பொருத்தவென்னால் நடுவனு யமைக்கப்பெற்றான்.

ஞானசௌந்தரியநாடகம்.

சரணங்கள்.

அண்டமெல்லாம்நீண்டாய் ஆரமாய்ப்பொன்கொண்டாய்
துண்டரீகமாயென் றளவமாலைபூண்டாய். (ஆதி)

ஆயஉயிர்க்கெல்லாந் தாயேஉற்றதந்தாய்
நீயும்ஒருவர்க்கேன் சேயெனவும்வந்தாய். (ஆதி)

உலகெலாமுதவும் உந்திக்கமலத்தாய்
பலிமூன்றாகநீயேன் படிதனையாசித்தாய். (ஆதி)

நீயேஅகிலேசன் நினக்கும்நயமாம்
பாயலுமிலையோ படுக்கவும்பயமா. (ஆதி)

பத்தன்முத்துசுப்பன் நித்தந்தொழுமெந்தாய்
சத்துச்சித்தானந்தத் தற்பராமுகுந்தா. (ஆதி)

சூத்திரதாரன் நடிக்குச்சொல்.

கலிவெண்பா.

வண்டார்குழல் மடவாய் வாரிருக்கு மென்முலையாய்க்
கண்டார் மனங்கவருங் கண்ணாளே அண்டரினம்
வானமுத மாமெனவே வாரியுண்போ மென்றுவருங்
கானரஸங் காட்டுங் கனிமொழியே மானே
மயிலே மரகதமே மாணிக்கமே மாங்
குயிலே அனமேமென் கொம்பே நயமான
தம்பூர்ச் சுதிகூட்டித் தாள ஞானத்துடனே
யொம்பாய்ச் சிலராகஞ் சொன்னதிலே அம்புவியிற்
கேட்டுச் சபையிற் கிளாரம்பை மாரெல்லாம்
காட்டரம்பை யாய்த்தாணில் நாடிடவே பாட்டிரசம்
தெள்ளமுத மாந்தியுற்றோர் சித்திரமொப் பாவரென்றால்
உள்ளபடி சொல்லுனக்கா ரொப்பாவார் வள்ளமுலைப்
பச்சைப் பசுங்கிளியே பாவைநல்லா யுன்பாடன்
மெச்சினேன் மெச்சினேன் மேல்.

அடுக்குமொழி.

பசுங்கிள்ளையேநடியே திசையெங்கும்புகழவையில்
வசந்தத்திறுமொழி ரசங்கத்தைச்செய்வாயே.

இப்படியென்றால்,

சீதாமணாளா

சிற்றிடைமொய்க்குழல் மத்தகனத்தின — ள்
வெற்றியயிற்கணை யொத்தவிழிச்சி — ய
ளெற்றுதிரைக்கடல் முத்தினகைப்பி — ன
ளூற்றதடித்துரு வத்தின்ள் முக்கி — ய

சீலவுத்தமகுண வதிநலமிகு
ஞாலமெச்சிய அரசியல்மைதில
னுலியற்றிடு தவமதில்மகளென
சாலிநற்றலமதில் வருதிருவெனும்

சீதாமணாளா தீனதயா — ளா
நீதாஞ்சிலையைப் பெண்ணாய்ச்செய்மலர்த்தா — ளா
மாதாபிதாவும்நீயே மனதுவைத்தெனையாளா — ய். (அரி)

அகிலப்ரகாசா

அலைகடலொப்பென வுரைமதெவிர்க — ரி
அலர்கொளவுற்றிடு பொருதுபிடித்தி — டு
மலமுத லைத்தலை துணிபடவிட்டி — டு
வலமுறுசக்கர மணிதருவித்த — க

ஆனதுர்ச்சனா வலிமதமழியவும்
மானவுத்தமர் பயமறவளரவும்
மாநிலத்தினில் வடிவொடுஜனனமாய்
தீனரக்ஷணை புரிபவவருளினுல்

அகிலப்ரகாசா அருள் ஸ்ரீநிவா — ஸா
புகழ்முத்துசுப்பன் றமிழ் பொருந்திடும்நே — சா
சகலவுயிர்கட்கு மாதாரகுணவிலா — சா. (அரி

நிந்தாஸ்துதி.

இராகம் காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிதேவனே யீதேதென் றுரைசெயவேன்.

அனுபல்லவி.

மாதவர்பணியும் வேதநாயகா ஸ்ரீ (ஆ

ஞானசௌந்தரியநாடகம்.

சரணங்கள்.

அண்டமெல்லாம்நீண்டாய் ஆரமாய்ப்பொன்கொண்டாய்
துண்டரீகமாயென் றனவமாலைபூண்டாய். (ஆதி)

ஆயஉயிர்க்கெல்லாந் தாயேஉற்றதந்தாய்
நீயும்ஒருவர்க்கேன் சேயெனவும்வந்தாய். (ஆதி)

உலகெலாமுதவும் உந்திக்கமலத்தாய்
பலிமுன்றாகநீயேன் படிதனையாசித்தாய். (ஆதி)

நீயேஅகிலேசன் நினக்கும்நயமாம்
பாயலுமில்லையோ படுக்கவும்பயமா. (ஆதி)

பத்தன்முத்துசுப்பன் நித்தந்தொழுமெந்தாய்
சத்துச்சித்தானந்தத் தற்பராமுகுந்தா. (ஆதி)

சூத்திரதாரன் நடிக்குச்சொல்.

கலிவெண்பா.

வண்டார்குழல் மடவாய் வாரிருக்கு மென்முலையாய்க்
கண்டார் மனங்கவருங் கண்ணாளே அண்டரினம்
வானமுத மாமெனவே வாரியுண்போ மென்றுவருங்
கானரஸங் காட்டுங் கனிமொழியே மானே
மயிலே மரகதமே மாணிக்கமே மாங்
குயிலே அனமேமென் கொம்பே நயமான
தம்பூர்ச் சுதிகூட்டித் தாள ஞானத்துடனே
ஒலாம்பாய்ச் சிலராகஞ் சொன்னதிலே அம்புவியிற்
கேட்டுச் சபையிற் கிளாரம்பை மாரெல்லாம்
காட்டரம்பை யாய்த்தூணில் நாடிடவே பாட்டிரசம்
தெள்ளமுத மாந்தியுற்றோர் சித்திரமாப் பாவரென்றால்
உள்ளபடி சொல்லுனக்கா ரொப்பாவார் வள்ளமுலைப்
பச்சைப் பசுங்கிளியே பாவைநல்லா யுன்பாடன்
மெச்சினேன் மெச்சினேன் மேல்.

அடுக்குமொழி.

பசுங்கிள்ளையேநடியே திசையெங்கும்புகழவையில்
வசந்தத்திருமொழி ரசங்கத்தைச்செய்வாயே.

இப்படியென்றால்,

க-வது அங்கம்.

கலி விருத்தம்.

பிகங்க ளன்புள பேடுகடன் னுடன்
உகந்து சிறைக்கால் வண்டினம் ஓட்டியே
மகிழ்ந்து மூக்கினுல் மாந்தளிர் கொத்தியே
மிகுந்த லீலை செய்வேளை வசந்தமே.

(வசனம்.) ஆகையால் இப்பேர்ப்பட்ட வசந்தகாலத்தை ஆரம்பமாகக் காணுஞ்செய்துகொண்டு ஓர் அற்புதமான நாடகத்தை ஆரம்பஞ்செய்யவேண்டும் காலதாமதஞ்செய்யாதே நடீமாதே. (நடி) நல்லதப்படி செய்கின்றேன். (கணப்பொழுதாலோசித்து)

சிங்காரக்கவி.

மதியுளசூத்ரதாரா சதிர்பெறுசபைகளிக்கும்
விதமொருநாடகந்தான் இதுவெனவறிகிலேனே.

வசனம். எவ்விதமான நாடகத்தை நடத்தும்படி இச்சபையோர்கள் நமக்குத்திரவுசெய்திருக்கின்றார்களோ அவ்விதமான நாடகம் யாதெனச்சிந்திக்கின்றேன்.

(சூத்திரதாரன்) சிரித்துக்கொண்டு (வசனம்.) அடி மதிசாலினி இப்பொழுது சமீபகாலத்தில் இயற்றி ஒன்றைக் கற்றுணர்ந்தகாதை.

விருத்தம்.

சரளமாம் பதங்கள்வாய்ப்பு சந்தர்ப்பங்களுக் கேற்பாக
சரஸமாம் பொருளின்வாய்ப்பும் தாளராகத்தின் வாய்ப்பும்
பரதசாஸ்திர வல்லோர்நற் பாவலர்கான வல்லோர்
சரிசபா செனப்புகழுஞ் சானகி பரிணயந்தான்.

(வசனம்.) ஈதென்ன மறந்துவிட்டனையா.

(நடி) மனக்களிப்புடன் (வசனம்.) நன்று நன்று நன்குணர்த்தினீர்

விருத்தம்.

நல்லதுசின்னூற் றாண்டின்முன்னர் பலகலைகளெலாம் நயந்துதேர்ந்த
வல்லவராம் ராமபத்ரதீக்கதரால் வடமொழியில் வளமேலோங்கச்
சொல்லியதைச் செந்தமிழான் முத்துசுப்பபாரதிக டொகுத்துச்சொற்ற
மல்லிசைச்சானகி தேவிபரிணய நாடகந்தானே வாய்ப்பதாமே.

எங்ஙனமெனில்,

விருத்தம்.

இங்குவாய்ப்பதனை யியம்புவன்கேண்மோ இலக்கணக்கவிப் பொருட்டெறிவும், இங்கிதமொழியுந் தேசிகமெட்டில் இசைதருபதங்கள் ஜாவளியும், தங்கியவேட தாரிகளுலவத் தக்கவரின் ஜோடனையழகும், பொங்கு சங்கீத நாட்டியச்சிறப்பும் புகழ்நவரஸ மிகப்பொழியும்.

(சூத்திரதாரன்.) அதுதான் அதுதான் அப்பேர்க்கொத்த அற்புதமான ஜானகிபரிணயநாடகந் தமிழினிற்றேறெனை உரைத்தோன் சிறப்பினைக்கேண்மோ.

ஆசிரியவிருத்தம்.

செந்தமிழ் நல்வடமொழிகள் என்றகடல் பருகியித்
தேசத்தவர்க் குதவியாய்ச்
சீர்கொண்ட வேதாந்த நாடகமுதற் பனூற்
றேன்மாரி பொழியுமேகம்
வந்தவர்க் கனமுதல் வேண்டிற் றளித்திடும்
வான்சுரபி தனகுபேரன்
மறையவர் குலோத்துங்கன் மாக்ஷீமைப் புனல்வேலி
மால்முத்து சுப்பவள்ளல்
சொந்தமகன் மைந்தனென்றும் புகழ்பரம் பும்வித்
துவசிகாமணி ரத்தினம்
தாய்லக்குமண சாஸ்திரிகட்கு முன்றோன் றிட்ட
தோன்றலெழில் வரதராஜ
அந்தண வரன்சுதன் என்றும்நனி புகழ்கின்ற
அரிகேசநகரில் வாழும்
அமுதரஸ பரிபூர்ன்ன உசிதபரி பாககவி
அணிமுத்து சுப்பவேளே.

விருத்தம்.

இயற்றிடு கவிப்ரபந்தம் இராகவன் சரிதந்தன்னை
நயமுடன் வழுத்தலாலே ஞானமும் புகழுநல்குந்
துயரினை யொழிக்குமின்பச் சுகமெலாந் தந்துமேலாம்
உயர்பதமளிக்கும் வேண்டிற் றுதவிடுஞ் சரதந்தானே.

(வசனம்.) ஆகையால் அத்யந்தம் ஆனந்தகரமான ஜானகிபரிணயமென்னுடகத்தை இச்சபையோர் களிக்கத்தக்கதாக வசந்தகாலப்புகழ்ச்சி ஆரம்பமாக வைத்துக்கொண்டு கானஞ்செய்வாய் சங்கீதநடன சிங்கார பாரியே.

(நடி) (வசனம்.) அப்படியே செய்கின்றேன் சகல சாஸ்திர நிபுண சூத்ரதாரனே.

நடி வசந்தகாலத்தைப் புகழ்தல்.

சந்தவிருத்தம்.

மருவாரமைத்தமுலை நெருடாவணைத்தன்முதல் மதனானடத்து மணவோர்
மருளார்வருத்தமணை மடவார்முடித்தமகிழ் மணமேயகற்றி விடுமால்
(இன்னமும்)
வரைமேலெடுத்ததன மணவாளர்மெச்சுபுய மபலாவணைத்த மடவார்
வரையாவருத்தமதை மலயாசலத்துவரு வளியேயகற்றி விடுமால்.

தரு. இராகம் வசந்தம். ஆதிதாளம்.

பல்லவி.

சந்தமாம் வசந்தமிதுவே சந்ததமும்பசந்தாம் (சந்)

அநுபல்லவி.

கொந்துமாமலர்ச்சோலைநின்றெழிற் கோகிலங்களாலாபிக்கின்றதே. (சந்)

சரணங்கள்.

விரககாயகிபுருடனைக் கண்டாலெனச்சோலை
மின்னொளிலைகண்மேனி மினுக்கித்தளிர்த்தகாலை
மருவும்வசந்தநாதன் நகக்குறிப்புண்கள்போலே
மாமுருக்கம்பலாச மலர்கள்சோபிப்பதாலே. (சந்)

தையல்குழல்வகுளத் தார்கந்தம்வீசவாங்கு
தன்கணவன்கலவிச் சடைவுகளெல்லாம்நீங்கு
சையையிற்சன்னற்றென்றல் தலைவிக்குமிகப்பாங்கு
தம்பதிகளுக்கதி ரமணீயமாயோங்கும். (சந்)

நடி நடனஞ்செய்தல்.

ஸாமீகிஸாரீயேவாரீ யென்ற வர்னமெட்டு.

இராகம் தண்டகம். ஆதிதாளம்.

பல்லவி.

சாமியைக்கூட்டிவாபோடி சகி

அநுபல்லவி.

பூமிபுகழுநற்புண்ய கோபாலனை (சாமியை)

சரணங்கள்.

சூத்திரதாரன் (பார்த்து) ஆ ஆ! சங்கீதநடன சிங்கார ஒய்யாரியே மகான்களான இச்சபையோர் உனது அற்புத கான நடனங்களைக்கண்ணுற்று சித்திரத்துக்கொப்பானவர்களாயிருக்கின்றனர். அவ்விதமிருக்க அந்நடன சங்கிதங்களைவிட்டு குழல்சோரத் துகில்சோர ஆபரணங்கள்சோர மெய்யெல்லாம் வியர்க்க இப்படி நடுங்குதற்குக் காரணம் யாது யானறியச்சொல்வாய்பெண்ணே.

(நடி.) ஆ! இன்னும் நீர் பார்க்கவில்லையா; ஆ! என்னென்று சொல்வேன் இதுவென்ன பருவதமா.

சிங்காரக்கவி.

வாக்குநன்னயனே பேறகினிநோக்குதி
தாக்குவெம்புலியென ராக்கதன்வருகிறான்.

ஆகையாற்றான் நடுங்குகின்றேனென்று வேறுபக்கந்திரும்புகின்றனள்.
சூத்திரதாரன் (பார்த்து) ஆச்சரியம் ஆச்சரியம்.

(வசனம்.) ஆ! நங்கையர்க்கரசி அஞ்சேலஞ்சேல் இதுவென்கொல் இப்படி நடுங்குகின்றாய். ஆனால் பெண்களுக்கபலையெனப் பெயர் உண்டென்பதும் சரியே, ஆ! இப்படித் திடச்சித்தமில்லாதவர்களுமுண்டோ, அதோ வருகின்றதானொன்று நினைத்தாய், தசமுகன்றன் அநுசரனாகிய சாரணன்றன் உருவத்தை வகித்துக்கொண்டு யெனது மைத்துனனன்றோ வருகின்றான் ஏது நாம் நாடகம் நடத்துகின்றோமென்பதை மறந்துவிட்டனையோ நன்று நன்று அவன் இந்நாடகச்சாலைக்கு வருகின்றவன் நாமும் இனிமேலுன் வேஷகிருத்தியத்தின்பொருட்டு தயாராகவேண்டும். ஆகையால் போகலாம் வா (நடி) யென்று சென்றனர்.

அப்பால் சாரணப்பிரவேசம்.

பொது கலிவிருத்தம்.

வாரணிகொங்கையு மாவலசூத்திர தாரனுமப்புறஞ் சார்ந்தபினங்கனஞ்
சாரணகாதகன்சபையிலேமிகத்தோரணகதியாய்ச்சொகுசாய்த்தோன்றினன்.

தரு. இராகம் தனாசு. ஏகதாளம்.

பல்லவி.

சாரணன்வந்தானே சபைதனில், (சாரணன்)

அநுபல்லவி.

சாரணன்வந்தான்பொன் னாரமார்பிலணிந்து
வாரணம்போல்நடந்து படர்ந்து. (சாரணன்)

சரணங்கள்.

நிர்மலநிலவிலாக் கங்குலெனுங்காயன்
நிறைந்தநுண்மதியன் துர்க்குணநேயன்
செம்மறிஅசத்தின் கொம்பெனமுறுக்கி
செம்பட்டைமீசைதிருக்கிச் சபைநெருக்கி. (சாரணன்)

வித்தாரநெற்றியிற் சந்தனப்பெட்டு
விளங்கவேவட்டச் சுளகளவிட்டு
அத்தங்களால விழுதெனத்தொங்க
அஞ்சனமலைவருவ தெனவிளங்க. (சாரணன்)

சாரணன் (எதிர்நோக்கி) களிப்புடன்.

விருத்தம்.

உம்பர்க டொழும்பதத்த னுலகொரு மூன்றுமோச்சித்
தம்புய வலிசெலுத்துந் தசகண்ட னாணைகொண்டு
தும்பி பூம்பொழிலார் மஞ்சுத்தொன்னகர் மிதிலைபுக்கு
வம்பறு செய்திகண்டு சுகனிதோ வருகின்றானால்.

சுகன் பிரவேசித்து ஆ! வாரும் வாரும் சாரணரே.

(சாரணன்) ஆம் ஆம்.

அடுக்குமொழி.

இன்றெதிர்கண்டனன் நின்றிடுசுகனே நீ
சென்றிடுகாரியம் நன்றுசொல்லவில்லையே.

(சுகன் வசனம்.) யானிதை நிரூபம்புகின்றேன்.

விருத்தம்.

தங்குதார் வேந்தன்றாத சாரண திவாகள்வாரிச்
சங்கினம் மணிகொழிக்குஞ் சமுத்திரஞ் சூழ்ந்தபூமி
எங்கணும் புகழுமந்த மிலங்கைமா நகரைத்தாண்டி
இங்கனே வந்ததிப்போ தின்னதென் றியம்புவீரே.

க-வது அங்கம்.

சாரணன் அடுக்குமொழி.

இராசராசனுமிலங் கேசனேவலாலேயுல்
லாசமாகவேபிர வேசித்தோமீதறிவையே.

(சுகன்.) அஃதெப்படி.

சாரணன் விருத்தம்.

வனப்பினிற் றிரிபுவனத்தினுஞ் சிறந்தாள்வளர்த்திடு மகத்தினில்வந்தாள
அனுப்பெடை சனகன்றவச்சுதை சீதையென்றகிலமு மறைகின்றதன்றோ
இனிப்புறும் அவளைமணஞ்செய வெமக்குசனகனை யெம்பொருட்டிணசக்
கனிப்பெரு மகிழ்ச்சிதருகுவை நீயெனநாயகன் விடுத்திடவந்தேன்.

(சுகன் அகோவசோ வசனம்.) அகிலசுரா சுரவாநந்த சரவணாரவிந்த பிர
தாப இலங்கேசுவரனுக்கும் கேவலம் ஓர் மானிடனிடம் ஏய் வனவு வணக்
கம்வந்த தற்புதமாயும் அபூர்வமாயமிருக்கின்றது. அடடா.

எங்ஙனமெனின்.

விருத்தம்.

கற்பகநாட்டமரர் வயனைச் கைச்கொண்டு சங்கிலிவந்த காவலனைக்குற
கொற்றம்பெருங்காரியங் கூடப்பின்னேக மன்னிலோ பட்ட ஏது கலமாது
விற்பனனை வில்லங்கச்சனன் சீதையை வல்லிடிசன்ட்டு யெனாலதன்மே
நற்சழச்சனகனிடம் மைவாய் கெட்டத் தாக்கணியம் நாட்டினுனெல்.

(சாரணன்.) ஆம் ஆம்.

(சுகன்.) கேட்கச்சட ய இப்படியுற்றங்குள சங்கதியமையும்.

(சாரணன்.) நல்லதுன்வரவைச சொல்லக்கடவாய.

சுகன் விருத்தம்.

வட்டநெடுங்கடல் சூழியவுலகில்விந்தை வசனமொன்று வண்ணனவ
ண்ணத்திலேயே, இட்டம்வைத்தான் வண்ணத்திகார்த்தபத்தி விட்டமை.
த்தாளென சொல்வாருவேயொப்பாய், அட்டதிசை பும் பரவுபுகழான் மங்
கைக்கதிபனினைப்பும் மிதிலைக்கவனுற்சென்று, யட்டடங்காப் புதுமைக
ளுநங் கண்டுவந்தவளப்பமெல்லாங் கேளாயென்வரிசைமாலே.

நொண்டிச்சிந்து.

மிதிலாபுரிதனிலே நடந்த விந்தையைக் கண்டுவந்தேனையா
அதையோ இடல்வியப்பே ஆயினும் ஆதரத்துடன்கேள் நானுரைப்பேன்

அதிலாவண்யமுள்ளாள் நம்மள் அதிபனுசைகொண்ட மாசனகி
மதிவாண்முகத்தழகி ஜனகன் மாதவத்தினில்வரு சீதையென்பாள்
வளர்கின்றாள் மயில்போல் நல்லெவ் வன்னப்பருவம்வந்து துன்னிடவே
ஒளிர்கன்னிமாடத்திலே ஒருநாள் ஒப்பிலாமயின்றனள் சொப்பனத்தில்
கடிமானகாயோத்தி ஆள்கின்ற கதிர்குலதசரத சக்ரவர்த்தி
படியிற்செய்மாதவத்தில் வந்த பாலகர்நால்வராம் பாக்கியத்தில்
ஓங்குமவரில்மூத்த புதல்வன் ஒப்புவமையிலாவ னப்பினனும்
தாங்குமவன்றன்பேரோ ராமச் சந்திரனும்புய மந்தரனும்
மங்களகுணதீபனும் அந்த மானுபாவனைத் தானேகண்டு
நங்கைகண்விழித்துடனே அவனை நாடிமையல்கொண்டு வாடுவதை
நானுரைத்திடல்வசமோ அந்த நாண்முதல்விரகத்தால் மேன்மெலிந்தாள்
பானந்தவிர்த்தனளால் தேனும் பாலுங்கசக்குதென் றேங்கறிப்பாள்
சகிமாருபசரிப்பார் அவளைத் தழுவியணைத்திடுவ ளவர்சிரிப்பார்
துகிலொடுகைவளையும் நெகிழ்ந்தாள் தூக்கமென்பதொழித்தா ளேக்கியெல்
உருவெளிகளைக்கனவில் கண்ட உத்தமனென்று கைப்பற்றிடுவாள் [லா
கருகிறேனென்கணவா வந்து காத்திடுவாயெனத் தோத்திரிப்பாள்
காமன்வருத்துகின்றன் தென்றற் காற்றேநீகொடுங் கூற்றேதான்
ஸ்ரீராமன்கொடுமையெல்லாம் ரவிகுல ராமன்வந்தாலுடன் நான்சொலுவேன்.
ராமா ரகுராமா.

விருத்தம்.

மடல்வரைந்து ரகுகுமரன் வடிவங்கண்டு மயல்பெருகி மயங்குகின்ற மகளைநோக்கி, கடமுலையாள் பரிந்துயரங் கணக்குண்டோகாண் கதிர்குல ராமனையடையக் கருத்துட்கொண்டாள், தடம்புய மைநாங்குடையான் பகையுண்டாகும் தனயை மனப்படிசெய்தாற் சகியேனிந்த, இடைசிறியாள் மனப்படி செய்யாமற்போனு லிவள்சகியாள் ஜனகனிதற் கென்செய்வேனே.

(வசனம்.) எனப்பரிதபித்துத் திகைத்தனன். அச்சனகராஜன்

விருத்தம்.

திகைத்தான்பத் தெட்டிலையோ ரருமைப்பெண்ணும் சீதைமனப்படி செய்வோமெனவே தேர்ந்தான், முகம்பத்துளான் பகைபொலாதென் றஞ்சி முன்சுவர்க்கம் பதிலமைத்த முனிவன்றன்னை, மிகப்பலவா னெனக்கருதிச் சீதைமன்றல் விகாதமின்றி இசைத்திடவே வேண்டிக்கொண்டான், சகப்புரட்டன் குசிகன்மகன் நல்லதென்று தலைகுலுக்கிப் பதித்தான் சம்மதித்தான்மாதோ.

(சாரணன்.) பொருமைச்சிரிப்புடன்) அகோவகோ காலவிபரீதம் பென்னென்று கழறுவேன் என்னெனில் நம் மஹாராஜலங்கேசுவரனுடைய நேசக்கருத்தென்ன, அவ்விதேகாதிபனுடைய மோசக்கருத்தென்ன அடடா. அப்பால் மேலுளது விளம்பக்கடவாய்.

சுகன் விருத்தம்.

மகமெனக் கபடங்கொண்டு மாமுனி விசுவாமித்திரன்
அகமகிழ்வுட னதற்காய் அழைத்திடப் போலயோத்தி
நகரினிற் றயரதேந்த்ரன் மூதல்வனை நனிநயந்து
சகசமாய் மணச்சடங்கு தனக்கழைத்திடச் சென்றனன்.

(சாரணன்.) நல்லது நல்லது மேற்சொல்வாய்.

சுகன் விருத்தம்.

கன்னியச் சனகியோடு காவலன் ஜனகராஜன்
மன்னுமக் கபடமான மகந்தனைக் காண்பான்போல
நன்னய வரசைமுற்றும் நம்பியாங் குசத்துவசன்பால்
முன்னதா யொப்புவித்து முறைமண நிமித்தஞ்சென்றான்.

(சாரணன்.) ஆ ஆ! கவனிக்குங்கால் விசுவாமித்திரனது கபடம் யாவராலுங் கடக்கமுடியாததாயிருக்கின்றது. ஆகவே இவனது தந்திரோபாயமுயற்சியினால் சீதைக்கும் இராமனுக்கும் பாணிக்கிரகணோற்சவமும் நடத்தித்தீர்ப்பனென்றே நினைக்கின்றேன். ஈதிங்ஙனம் யெப்படியேனிருக்கட்டும்

இராகம் நாதநாமகிரியை. ஜம்பதாளம்.

கண்ணிகள்.

ஆனாலுமதிபாவியானனிலங்கேசனையா இதுபொய்யா
அணியாயமிதைமனதினில்நினைத்திடவெனக்காங்காரமாகுது மெய்யா
தனைவணங்குவோனிடம்சைவவிஷ்டம்பாராட்டலாமோ அவன்றன்றள்ளப் போமோ
ஜனகநம்அதிபனுக்கல்லால்மனிதனுக்குத்தான்கொடுத்திட விடுவோமோ
கெடிஇராவணனுறுபெருமைதெரியாதோஞாலம் யீதென்னகோலம்
கொடியிடையாளிவனைவிட்டுமனிதனைமேலேகொண்டதென்ன இஷ்டஜாலம்
ஒருமகசங்கோசிகன்சனகனுக்கப்பிணையேற்றான் ஒருவற்றான்
கிரியையெடுத்தெறிந்தஇருபதுகரனிதுகேட்டால்மிகவும் மனமாற்றான்

நெருக்கட்டுஞ்சிதைமணமுறுக்கட்டும்காமொருகைபார்ப்போம் வந்ததெல்லாமேற்போம்
நருக்காய்நானுமிதிலைத்துறைக்கருகிற்போயுள்ளதோவறிந்ததின் பின்னுரப்போம்.

(சுகன்.) அங்ஙனம் செல்வதிற் பயனென்கொல்.

(சாரணன்.) ஆ! அங்ஙனஞ்செப்பலாகுமா.

விருத்தம்.

நிலத்தினிற்பிரம குலத்தினிலுதித்தான் நிகரிலாத் தனத்திரள்படைத்தான்
தலைக்கணியாக வலாரியுஞ்சுமக்குஞ் சாசனனவ் விலங்கேசன்
சலத்தனை இதிலோர் கனிதனைக்கேட்டால் யார்க்குத்தான் சம்மதியாகா

(சுகன்.) அவ்விதமாயினும் ஜனகராஜன் இங்ஙனம் இணங்கிச் சற்றுஞ்சம்மதியானென்பது திண்ணமேயாம். ஏனெனில் மேற்படி விருத்தக் கடையடி.
மூலைத்தடங்கிரியாள் தன்மகனினைப்பை முடித்திட் முயல்கின்முன் முற்றும்

(சாரணன்.) சற்றுலோசித்து.

விருத்தம்.

பேர்பெற்ற குலச்சிறப்பும் பவிஷுங்காணுப் பெற்றியின னென்னினுமப் பெண்ணினல்லாள், சீர்பெற்ற உலகனைத்துஞ் செயித்தவீர சிங்கனிராவணன் பெருமைச் செய்தியெல்லாம், ஏர்பெற்ற செவிகளினுங் கேட்டிலாள்கொல் இணையற்ற இவ்வரசை விட்டுவிட்டுப், பாருற்ற சிறுமனிதன் றன்மேலாசை பதித்திட்ட தென்கொலிது பாவம்பாவம்.

பெருமூச்செறிந்து

விருத்தம்.

சந்ததம் ராமன்மேற்கொள் ஜானகி காதறன்னைத்
தந்திரமாக முன்னந் தவிர்த்திட வேண்டும்பின்னர்
மந்தர புயனிலங்கை மன்னன்மேல் காட்டல்வேண்டும்
எந்த உபாயஞ்செய்வோம் இங்ஙன மாதவர்க்கே.

(சுகன்.) ஏதேது இது நடக்கத்தக்கதன்று.

(சாரணன்.) அதற்கியாதுபாயமெனச் சிந்திக்கின்றனன்.

(சாரணன்.) சந்தோஷத்துடன்.

விருத்தம்.

அரக்கர் வஞ்சனையினாலோ அல்லது வன்மையாலோ
வரப்பின்றி கன்னிமாரை வவ்வுதல் வழக்கமன்றோ
வரைப்புய னிலங்கேசன்றன் மாயையா லந்தராம
நரப்படி வம்புனைந்து நங்கையைக் கவறல்வேண்டும்.

தரு. இராகம் காம்போதி. தாளம் ரூபகம்.

பல்லவி.

அளப்பிதுபோல்க் கிட்டாதே.

அனுபல்லவி.

வளப்பமறிந்தசே வகனேயென்சுகனே. [அளப்]

சரணங்கள்.

நங்கைஜனகிமேலே நம்மதிபன் மோகம்
நாட்டினனவட்குராம நரன்மேலதி தாகம்
சங்கடஞ்செய்வோமெனில் சனகன்பால்வை [illegible]னகம்
தகுதியல்லஆதலால் இதுவேநல்ல [illegible]. [அளப்]

கள்ளக்கோசிகனாக வித்திச்சிறுவ னின்று
கனத்தராவணன்ராமன் சனியுருவாய் நன்று
வில்லாஜனகனண்டை மெய்யானவர்போற் சென்று
மெல்லியலைமணந்திட வேண்டும்விறைவா யன்று. [அளப்]

மின்னொளிதனைக்கண்டு வியனங்கொள்வானோ பினோர்
வேந்தன்பவிசுகண்டுமகிழ்வாள் வித்தக மன்னன்
கன்னிமணாளன்மிகக் களித்தவான்வாய்த்தா னென்ன
கருத்தடங்காமகிழ்ச்சிகொண்டு புகழ்வான் துன்ன. [அளப்]

(வசனம்.) ஆகையால் விசுவாமித்திரனது வேடம்பூண்ட வித்திச்சிறுவனுடன் இராமவேடம்பூண்டிலங்கேசன் ஜனகன்சமீபம் பிரவேசிக்கவேண்டியது.

(சுகன்.) களிப்புடன்.

விருத்தம்.

நன்றுநன்று காணும்நீர் நவின்றிடுஞ் சொற்பாலினிற்
கின்றுகண்டு சீனிபோலி யம்புவே னயோத்தியிற்
சென்றகாதி மைந்த னச்சிறுவரோடு வருகையில்
குன்றெனத் தடுத்திடுவோனைக் கொன்றிடவும் வேண்டியோல்.

(சாரணன்.) ஸபாஸ் ஸபாஸ் நன்கு புகன்றனை. அதற்கு நமது தாடகையைத் தவிர மற்றவர்கள் சக்தியுள்ளவர்கள் அல்லர். எங்ஙனமெனில்,

விருத்தம்.

ஆயிரமெண்ணமான யானையின் பலத்தைக் கொண்டு
மாயமாயவர்முன் சென்று வதைப்படப் பிடிநேர்நின்று
வாயிற்பல்லாற் சுவைப்பள் வலுத்திடில் நரனொன்செய்வார்
நேயமா யபலையென்றே நீக்குவா ரிவளைக்கொல்லார்.

(சுகன்.) ஸபாஸ் மெத்தசந்தோஷம் அங்ஙனமெனில் அத்தகைய தாடகையை அதிசீக்கிரம் நீவிர் அனுப்பவேண்டும். யானோ இந்த ஸமாசாரங்களை நமதரசனிடம் அறிவிக்கப்போகின்றேன். (என்று சென்றனன்.)

(சாரணன்.) எதிர்நோக்கி வியப்புடன் ஆ ஆ! நினைத்தவளவில் அதோ அத்தாடகையே வந்துவிட்டாள், ஆச்சரியம் ஆச்சரியம்.

எங்ஙனமெனின், இவளோ

விருத்தம்.

ஆட்டமதில் மூகிற்குலத்தையகற்றுவிக்குங் குயத்தினரம் பார்த்தான்றங்கு
மோட்டமதிற் பருந்துகண்மொய்த் திறகடிக்கும்பெருங்காற்றி லுயர்கிளம்பி
காட்டுகின்ற குழற்செறிவொடா வெனவாய் [illegible] யட்டகாசந்தோடும்[க்
தாட்டிகமாய்ச் சுராநடுங்கத் தாராபதத்தினின் றுஞ் சா[illegible]கின்றாளே.

பொது தரு. இராகம் மூகாரி. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாளே தாடகைப்பாவி சபைதனிலே. (வந்தாளே)

அநுபல்லவி.

வந்தனள் மதவாரணங்களுநடுங்க மகமேருமுதலானகிரிகள் கிடுகிடுங்க
அந்தகாருமீதையமிலையென ஆருஞ்சொலும்படிசரீரவனப்புடன். (வந்)

சரணங்கள்.

செக்கச்சிவந்தஇருவிழியும்	கோடைகாலத்திற்
சீறுமிடியைநிகர்மொழியும்	யார்சொல்வாரப்பா
மிக்கவாய்நீரெங்கெங்கும்பொழியும்	புன்புலால்கள்
விந்தைக்கடையுதட்டில்வழியும்	இன்னமும்எட்டுத்

திக்குகிரியிலொன்றெனச்சொலுமூக்கும்சேடனெடும்படமெனத்தகுநாக்கும்
பக்களிப்பாயவளிருகையைநீட்டி இருநூறுயோசனைதூரமட்டுங்காட்டி, (வந்

கச்சைக்காயெனவொருமுலையும் கருமலைபோல்
காத்ரங்கொண்டமற்றொருமுலையும் உடைமரம்போல்
கொச்சைச்சடைச்செம்பட்டைத்தலையும் அரைதனிலே
கொண்டகருமையார்துகிலையும் என்னென்றுசொல்ல [ரிய]
குச்சிபோலொருகாலுமற்றொன்றுபெரிய கொடிமரம்போலவும்யாருக்குந்தெ
அச்சமிலாமனடக்கையிற் பின்னலாகியபற்பலகரம்பசுநின்ன. (வந்)

அட்டகஜத்தைக்கூடவாட்டி [illegible]த்திரட்டி
அடிப்பல்லிடுக்கில்லைப்பொள்கூட்டி [illegible]க்கதிபறையஞ்
சுட்டெடுத்துத்தின்னும்வெள்ளாட்டி [illegible]கன்செய்பழி
சொல்லக்கூடுமோ தொலைசகூட்டி [illegible]யாஇவள் [ட்டு
கொட்டைப்பாக்குகளெனக்கைகளிலெட்டுக் [illegible]யெடுத்தாடுவெடோ
அட்டகாசத்துடன்பற்கடிக்கடித்து அண்டர்கங்கையாட இடியகள்படித்து
(வந்தாளே)

அப்பால், [illegible] தாடகை [illegible]கின்றாள்.

(சாரணன்.) [illegible] செய்கின்றேன்.

(தாடகை.) ஆ சாரணனே [illegible].

(சாரணன்.) ஆ தாடகாய் [illegible].

(தாடகை.) சாரணா கேட்கக்கடவாய்.

விருத்தம்.

தவமுனிகாதி தனைபார்க்கன்புற்ற [illegible]
சிவபணிமறவாப் பார்க்க [illegible] முகமன்
நவநவமாக நவின்றுவேண்டி [illegible]
செவையுறு மனத்திராவ [illegible] வாறுரைசெய்தான்
[எவ்வாறெனில்]

விருத்தம்.

கோசிகன் மகத்தில்கய்யாற் கொஞ்சமுங் கெடுதல்வேண்டாம்
பூசல்மாரீசனுதி பொல்லாத வருகவிப்போ[illegible]
நீசென்று நிகழ்த்துவா யென்றெனை நிருபனுமனுப்ப
வேசடுதியினில் வந்தேன் சாரணா விளம்பினேனே.

(சாரணன்.) (நகையுடன்) நமது வீரசூரப்பிரதாப லங்கேச்சுவரனைக் கோசிகன் யானையைக் கொப்பத்தில் விழுத்தட்டுவதுபோல, தன் அகாதகபடத்தில் வீழ்த்திவிட்டான்.

(நல்லதிருக்கட்டும் தாடகாய்.) அந்தக்ஷத்திரியகுலகாதி தனையன்றன் மந்திரமென்றறியக்கடவாய் யாகமென்ற கபடத்தைச் சொல்லிக்கொண்டு சீதைக்குமிராமனுக்குந் திருமணமுடித்துவைப்பதற்கான ஜனககௌசிகர்களின் எத்தனமிதுவாம்.

(தாடகை.) இதற்கிந்தக்கபடமென்னே (சாரணன்,) நமதிலங்கேசன் அவளை விரும்புகின்றானென்றே இத்தனையேற்பாடு செய்திருக்கிறான்.

சாரணன் விருத்தம்.

முதிர்மாயையிதுதானெனப்படியிலேயெதிர்முளைத்ததாடகைப்பெண்ணேகேள்
அதிரூபவதிசீதையவள் மேற்றசானனனடங்காமையற்கொள்ளவும்
மிதிலேசன்மகளெண்ணாமேயென்றறிந்தந்தவிதமணஞ்செய்யவேதான்
சதிர்கோசிகனைவேண்ட அவன்நம்மைமகமெனச்சாற்றியேமாற்றினனே.

மேற்படி கொச்சகம்.

சுந்தரியாஞ் சானகியைத் தூயவபி ராமனுக்கு
கந்துமணஞ் செய்யக் கருதினதுதான் றெரிந்தால்
வந்துகெடுத்திடுவான் மன்னனிலங்கேச் சுவரனென்
றிந்தவிதங் கோசிகனும் யாகமென்றான் தாடகையே.

தாடகை. ஆ! ஆ!

கொச்சகம்.

இந்தவிதப் பெண்ணைநான் கொல்வாரு மற்கோசிகனும்
எந்தமன்னனானைசொன்னாலெந்திழையாள் ஜானகியை
எந்தவிதமும் பாலெடுத்து வருவேன் காண்
சந்ததமிலங்கேசன் றன்மனங் களித்திடவே.

(சாரணன்) ஆ. அது தகுதியன்று எனெனில்.

விருத்தம்.

வன்மையிற் கவர்ந்தாலந்தமாதுநம் வள்ளறன்பால்
தன்மன மிருத்திடாளால் தவிரவுஞ்சைவ இஃடம்
பொன்மலி மிதிலேசன்பாற் பொருந்தின ஞதலாலே
உன்மனத் துதித்தசெய்கை ஒப்பிடான் வேந்தர்வேந்தே.

(அன்றியும்.)

க-வது அங்கம்.

விருத்தம்.

மலையிமவான்றன் பக்கல்மன்னன் முன்னரம்பை மாதைப்
பலபந்தஞ் செய்ததாலே பாவையர் மனமில்லாரேல்
குலவிடவவரைத் தொட்டால் குளிர்மணி மகுடந்தாங்கும்
தலைவெடித்திடக் கடவாயென வவள்சபித் திட்டாளால்.

ஆகையால், தாடகாய், நீ நினைத்தவாறு முயலுதல் தகுதியன்று, ஆனால் மேல்ச்செய்யவேண்டுவது யாதெனில்.

இன்னின்னபடி யெனக்கன்னத் தியம்பினான்.

(தாடகை.) மஹோற்சாகத்துடன் சாரணா, நின், தந்திராலோசனை, வெகு நிபுணமாயிருக்கின்றது. ஸபாஸ் மெத்தசந்தோஷம்.

விருத்தம்.

வஞ்சகஞ் செய்வோர்தம்மை வஞ்சகத்தாலே வெல்ல
நெஞ்சினிற் கொண்டாய்நன்றே நிகழ்த்திய வண்ணமன்றேல்
இஞ்சிசூ ழிலங்கைவேந்தன் எழிற்கரத்தினிலே அந்த
வஞ்சியு முற்றாளென்றே வழுத்திட வையமுண்டோ.

நன்று நன்று. யானே, நீ நிகழ்த்தியவண்ணம் செல்கின்றேன்.

விருத்தம்.

திடம்பெரு மாயைவல்ல தீயமாரீசனோடும்
நடுவழி தன்னில்நானும் நள்ளிருட் டுயிலாநின்ற
கொடியகோசிகனைக் கொல்வேன் கொற்றவர்தமையுங் கொல்வேன்
கடியிலங் கேசன்றன்னைக் கணத்தினிற் பயணஞ்செய்வாய்.

என்று சென்றனள்.

(சாரணன்) வெண்பா.

தாடகைக்கி மக்கடமைத் துணையா யேவிடுவேஞ்
சாடியெதிர்த்த வரைத் தாம்வதைப்ப—நாடிதனில்
வெஞ்சமரின் மூண்டவர்கள் வெல்வதுவுந் தோற்பதுவு
நஞ்செய லொன்றில்லை யதனால்.

ஆகையால் மாரீசன்முதலான பேர்களைத் தாடகைக்கிச் சகாயமாக அனுப்பிவிட்டு, இலங்கையிற்சென்று மகாராசனைப்பிரயாணஞ் செய்விக்கச்செல்கின்றனன் (என்று சென்றனன்.)

அப்பால், வித்திச்சிருவசாரணருடன் இராவணன் பிரவேசிக்கின்றான்.

(இராவணன்) மிதிலாபுரியிலுள்ள சகலவிர்த்தாந்தங்களும் நமதுசுகசாரணர்களின் முகாவழியாய் ஸாங்கோபாங்கமாய் தெரிந்துகொண்டேன். ஹா, ஹா, கஷ்டம், கஷ்டம்.

இராகம் உசேனி, சாப்பு தாளம்.

பல்லவி.

எந்தன்பெருமையெல்லாம் இந்தச்சனகியாலே
யின்றேயொழித்தேனடா (அடசாரணா) (எந்தன்)

அநுபல்லவி.

அந்தமும்மூர்த்தியுஞ் சிந்தைகலங்கத்தானே
ஆணை செலுத்து மிராவணேசுரனெனும் நானே (எந்தன்)

சரணங்கள்.

வாசவனும் நமதுவன் சிறைக்குடிம்பியாய் வாழ்கின்றான் சாசுவதமாக
பீசனுடைய கயிலாசந்தனை வேரோடெடுத்தெறிந்தேனுயர்மா கம்
பேசரிய பிரதாபலங் கேசனெனப் பேர் வாங்கினேனதிமோ கப்
பாசவலையுட்சிக்கி மோசம்போனேன் விதே கப்
பார்த்திபனது சம்மனகம் பழுதாச்சுதென்ன சோ கம். (எந்தன்)

நீலிபங்கண்ணுள் சீதாதேவிமேல்மையற்கொண்டுகெரு கிறேன்காமவனல்வீச
பாவிடவளை யெண்ணுதுமனிதன்றனைப் பரமவரனு யெண்ணிப்பே ச
பூவிலவளினெண்ணம்போலே மணம்பொருத்தப் போக்கிலிமுனிசெல்லவே
மேவியன்னரனுய் நான்கொள்ளவோ மிதிலேசன் (சம்
மேல்வைத்த சைவநேசம் வினையாச்சுதல்லோமோச ம். (எந்தன்)

கண்கனுலைந்து மவளைக்காணத்துடிக்குதென் கைகள்தழுவவென்கா தே
தண்கொள் அவளின்மொழிகேட்க விதழ்கனிய தாஞ்சுவைக்கத் தாள்களிப்
புண்கொண்டாலும் அவன்பாற் போகாதிரே னெனப்புலம்பல் போ(போதே
பெண்கள் சிகாமணிக்குப்பிரியங்கிடைக்காதே (ற்றுடிக்கிதிப்போதே
பிரேதமான வென்தேகம் பிரயோஜனமென்றிதே. (எந்தன்)

வசனம். ஹா ஹா கஷ்டங்கஷ்டம், கேவலம் புன்மையான ஒருமானிடனது வடிவத்தைப் புனையும்படி நேரிட்ட இதற்கென்செய்குவாம்.

கொச்சகம்.

திகழ்சைவநட்பிதனைத் தேற்றுகின்ற தன்மையினா ற்
சகசமாங்கோபமதைச் சனகன்பாற் செய்யாம ற்
சகமதிலோர் பெண்ணிமித்தந் தரிக்கின்றபுன்வேட ம்
புகழெனது மானமதைப்போக்கின்ற தென்புகல்வே ன்

சாரணன். ஓ. மன்னர் மன்னவனே மானபங்கமென வழுத்துதல் வேண்டா, வெனனில்.

விருத்தம்.

தங்கமாமாலை நேர்தோளாய் தமயந்தி சுயம்வரத்தி ல்
நங்கைமேற்காதல்கொண்டு நாலிருதிசைமாமன்ன ர்
மங்கள நளராஜன்றன் வடிவத்தைப்புனைந்துசென்றா ர்
இங்ஙனம் அபூர்வமோகாண்ய ாவரும் நடந்தபா தை

(அடுக்குமொழி.)

(ஆகையாற்றான்)

ஜானகியென்னுந்தையல்நிமித்தம், மானிடவடிவம்வகித்து நடந்தால்,
மானஹானியெங்ஙனம்வந்திடும், ஏனுளத்தினிலித்தனைசஞ்சலம்.

(வித்திச்சிருவன்.) தன்றுள் (புளகச்செறுக்குடன்) (வசனம்) திக்கதி பர்மிக்க மிக்க முயர்ச்சித்தும் தமயந்தியைக் கிட்டாதவா ர்னா. அத்தன் மையென, நமதரசனும் ஜானகிவிஷயத்தில் இலவுகாத்த கிளியென ஆகுவனா கொல். (வெளிப்படை.)

விருத்தம்.

மண்ணில்ராகவன் மேல்வைத்த ஜானகிதன் வாஞ்சையைத்தடிந்திவனும் பே
நண்ணவைத்திடலரி தரிதாகுமா னட்பினாற் சனகனேவுந்தங் கல்
கண்ணையொத்தவனுகையால் வன்மையிற்கவர்தலு முதவாவே
றெண்ண மென்னையப் பெண்டனை யடைகுவானிவன் மொழிவழியாமால்.

அடுக்குமொழி.

(இராவணன்.) (நல்லதிருக்கட்டும்) எமதுளக்கவலை எண்ணிப்பறிக்கும், உமதுரை மறுப்பதுசிதமன்றே.

ஆகையால், சாரணா, நமது புட்பகவிமானத்தை அதிவிரைவில் ஆஜர் செய்வாயாக.

[சாரணன்.] அங்ஙனஞ்செய்கின்றேன், எனவிரைந்துசென்று, புஷ்ப கவிமானத்துடன் போந்துவந்து,

அரசருக்கரசே, தமது ஆக்ஞாபனப்பிரகாரம்.

சிங்காரக்கவி.

கல்லெனத்திரண்டதோளாய், நல்லதோர்புட்பகத்தைச்,
சொல்வழிப்படிக்குத்தானே, ஒல்லையிற் கொணர்ந்தேன் சுவாமி.

வித்திச்சிகுவன் சந்தவிருத்தம்.

திசைவிஜய மேயதற்கோர் கரியெனநிலாவுமிக்கார்
திரிபுவனமேவ நற்கோற்செலுத்தி யாரை.
நசைகவறுவேலேயுட்கா அவசெறிகொளாவிபட்டே
நனிசரியதாயமுத்தாற் புனைமாலை,
அசைவறுவிமானநற்பூ விறையொடு பராவலெற்ருய்
அமைதருமெனு நடிக்கா ற்றுயர்வாதம்,
இசைதலறமாயைஅற்கா ரிடைமறைவினுடிவிட்பா
லிமைநொடியின் மேயதைப்பார்த்திடுவாயே.

(இராவணன்.) நோக்கி, குடிலநகைப்புடன் அடடா, வித்திச்சிகுவா, அவ்விதமன்று, யான் நினைக்கின்றேன், இவ்விலங்கேச்சுவரனும், சற்றும்பலமற்றவனாயிருப்பதால், என்னாலான கள்ளவிர்த்திகளைச் செய்யத்துணிந்தனனென்றெண்ணியதுள்ள கட்டிளுல் இப்புட்பகமும் இதுகாறுமில்லாத தன்மையைக் கடைப்பிடித்ததென்றே நினைக்கின்றேன். எங்ஙனமெனின்.

விருத்தம்.

வழிசிறந்து சென்றனுப்புஞ் சிறுவிமான வரிசையிலே சித்தவித்யாதரர் கைகூப்பி, மொழிதருந்தோத்திரபடனங்காணே மையன்மோகனஞ் சேரம் பையபணைடிப்பக்காணம். தழுவுமிவை போலுளநற்சிறப்பையெல்லாந் தான்றழுவாதி வணங்கத்தன்மைகண்டால், வழுமருவுமெனறனுக்கோர் புதுமையாக வயங்குதடாமந்திரஞ் சேர்வித்திச்சிகுவா.

இராகம் பியாகு. ஆதி தாளம்.

பல்லவி.

பின்னமாய்க்காணுதே என்விமானம் நீ பிதற்றுகின்ருய்
வீண்பெருமையெல்லாம்.

அனுபல்லவி.

என்னசெய்வேனடா எதுசெய்வேனடா யெங்கணுமிதுவசையாகுமே
அன்னியாயமீதாருடன்சொல்லுவேனையையோபாவமிதுதெய்வமே. (பி)

சரணங்கள்.

மகிமைமறந்துதன்வடிவுந்துறந்து மனிதனுமாகிக் கனிவுடன்போகி
தகையிலாத்தொழில் செய்யத் தாவினனிவன் முகந்தன்னில் விழிக்க
லாகாதென்னவே. [மி]

கானமுழக்கங் களானநடனங்கள் காண்கிலனீ தென்னகாரணமோ [வே
மானமிலாவரசன் வரிசைக்கிவ்வரிசையேவாய்ப்பெனவந்தருங்காப்பன [மி

(வித்திச்சிருவன்) வசனம். மகாராஜனே, அங்ஙனமன்று, காரியசாதக த்தின் பின்களிப்படைய வேண்டுமென்றபடி காண்கின்றது, அதாவது, ம னத்தினிற்குகந்த வடிவத்தினால் விகாரணஞ்செய்யப்பெற்ற அம்மங்கையர் சிகாமணியின் மாமணத்தை முடிவுசெய்து, அகிலநாயகனான அரக்கர்பிரான் மருகனென வந்தமையைப்பெற்றேனென, அத்தியானந்த பர்தனுகிய அவ்வி தேகாதிபனால் ஆவலோடு அளிக்கப்பட்ட ஆடையாபரணாதி சகலபாக்கியத் தோடும் அம்மணமடந்தையொடும் மஹாராஜன் போந்திடுங்கால், அதற்கேய வரிசை அடையவேண்டுமென்று வந்திருக்கின்ற இப்புட்பகவிமானத்தில், பற்பலசங்கைவகிக்காது தயைசெய்து பிரயாணஞ்செய்யவேண்டுமென்றேன், சற்றுந் தாமதிக்கலாகாது.

பொது.

[இராவணன்.] வித்திச்சிருவனுடன் விமானத்திலேறுகின்றான்.

[சாரணன்.] ஓ மன்னர் நாயகமே இங்ஙனம் நோக்குக, நோக்குக.

சந்தவிருத்தம.

வானவர் கூர்பிரதாபமிகுந்தவ வீரவிளைதவி சேடிதவிங்ஙைய மானவ் மானம தானதிலங்கையி னெழுவாரி, ஆனவனுமை கருவருபருங்கிலே யாவ மூளே புகவேமிகவஞ்சின ஞானிலாவலேயாவுமிழந்தன னதுதானே, பாழு தனுதொளியே மிகவுஞ்சிறிதாகின னுகியொர் சேடொளி தங்கிய பாழ்கோ ளாடி யினுடியிலங்கின னரிதானே, ஊனமில்வாயுப டீரகெடுங்கொடிமிமைசை கானமர் மாமுறியொன்றுவ ஓர்வலிமேயின னுயினனிங்கிவை யுணர்வாயே

வித்திச்சிருவன். ஆ ஆ இதுவுமோர் ஆச்சரியமா.

விருத்தம்.

கிலிகொண்டுசிவனைத்தேவி கெட்டியாய்த்தழுவுமாறு
பலமதாங்கயிலேதன்னைப் பந்துபோலெடுத்தெறிந்தான்
குலிசனைச்செயிற்கூடத்திற்குடும்பியாய்ச் செய்தான்மாயா
வலவனவ்விலங்கை வேந்துக்கிதுவோதான் மாவியப்பே.

இராவணன். சற்று நிதானித்து,

விருத்தம்.

எம்புயங்களின்பல மவ்வீசர்வாழுமெழிற் கைலைக்குன்றத்தினை மெண்டிசைவீரர்க்கெச், தெம்புபெருவில்வித்தைத் திறத்தைமுன்னாந் தெரிவித்தே மவர்நாளுஞ் செப்புவாரால், வம்பெறுமாமாய வேடசாலமருவு மெம்வல்லமையை வரிசையாக, அம்பவியிற்சனகனிடம் புதிதாயிப்போ தறிவிக்கமுயல்கின்றேம் அறிவாயப்பா.

ஆகையால் சாரதி விரைசாக நடத்தடா.

(சாரதன்.) வேந்தருக்கரசே, இவ்விமானங்கிளம்பிய வேகத்தைநோக்கவில்லையோ, சற்றேநோக்கும். எங்ஙனமெனின்,

விருத்தம்.

சாற்றுமிவ்விமான மதிவேகத்தாற் செல்கின்ற தன்மையாலே
ஏற்றுகிரிசிகரமெயின் மண்டலவான்கீழ்நோக்கி யிறங்கலேபோல்
காற்றிசையின் மேகைகள்போற் காண்கடலும் பூதலமு [illegible] போன்
மேற்றிசைகீழ்த்திசைமலைகள் சமரேகை யற்றனபோல் விளங்கலாமே.

(விசுத்திச்சித்துவன்) வசனம். அடடா [illegible] கிரிமிக்கிளம் பிய வேகவிமானமானது சியக்கக்கணிந்த [illegible] முடியாது கனத்துவளைவுற்றிலங்கும [illegible] பலதருக்களினெருக்கமும, அதிசாந்தசமை [illegible] ன்ற திருக்களின நெருக்கமும பசுங்கனை [illegible] ங்குகின்ற கௌசிகமுனிவின ஆவ்வாச்சிரமத் தலத்திறங்குகி [illegible] இவ்வாச்சிரமமோ அடடா.

விருத்தம்.

கடகமெனக் கருஞ்சிலைபிற் கடிந்து [illegible] கனைத்துச்செல்லும், கடகரிகள் கவா [illegible] யாகுதி யிவணிற்காண்பதாலே, கடலெல [illegible] கருதரிய மீகுத்துவஞ்சேரிவிடம் [illegible] சாதலன் வாழாச்சிரயமேயாகுமன்றோ.

இராவணன். சாரணனைக்குறித்து (உற்சாகத்துடன்).

விருத்தம்.

கண்டமட்டுஞ்சலத்தினின்று முனிவரெல்லாங் கதிர்ப்பிறைநீர்குடையக்கனத்துநின்று, மண்டிவளர் சடையினைக்கண்டஞ்சிச் சக்ரவாகங்கள்

துணையொடுமேற் சுழன்றுபாய்ந்து, தொண்டைகிழிந்திடும்படி சத்திக்கும
ந்தத்தொல்வனத்திற் சானகிதன் சுவாசத்தென்றல், அண்டிவருவழியிலிருந்து
சார்பின்வெள்ள அரியவிமானமதிறங்கவேண்டுமாலோ.

(சாரணன்.) வசனம். எஜமானவர்களின் இஷ்டம்போல் இவ்விமான
மிறங்கிற்று. ஆகையாலிதுநின்றும் இந்தரமணீயமான வௌசிகீதீரத்திலிற
ங்குவோம். எல்லவரும் இறங்கினார்கள்.

(இராவணன்.) வசனம். யாம் திரும்பவந்து சேருமட்டும் இவ்விமான
மிங்குதானே மறைவாயிருக்கக்கடவது.

(சாரணன்.) வசனம். இனிமேல், இவ்வனப்பிரதேசங்களில் திரஸ்க
ணீமருத்துவத்தினால் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதவர்களாய் சஞ்சரிக்க
வேண்டுவது. எதனாலெனில்,

விருத்தம்.

பாதவங்களி னடிகளிற் புலித்தோல்பகர் தருப்பாதனம்பரப்பி
சீதளந்நிகழ் நறுக்களின் சினைபற்சிறைகண் டிருக்குமினங்கண்
மீதுறச்சேர்த்து விளங்கிநிஞ்சிறப்பும் வேதபாடங்களைக் கிளிகள்
ஓதிநிஞ்சிறப்பு மிவ்வனமம்முனிக் குறையிடமெனபன போலாம்.

(இ[illegible]) வசனம். சாரணன் சொல்வது சரிதான். இங்கு
முள்ள [illegible] சஞ்சாரங்களை [illegible] ரகசியமாய் தெரிந்துகொள்ளவேண்
டுவது அவசியமாகையால் ஒருவர் கட்புலன்க்கட்கும் புலப்படாமலே சஞ்சரிக்கவே
ண்டும்.

(விசித்திரக்குமாரன்.) கண்களைமூடிக்கொண்டு திரஸ்கரிணீ மந்திரத்
தியானஞ்செய்கின்றனன்.

(இராவணன்) பக்கங்களில் நோக்கி (வசனம்.) [illegible]வர்கள் யார், ஸ
த்குசயாஸரிப ய் பிரமசாரியவிரதத்தினராய் இருவர் இங்கனம் நோக்கி வரு
கின்றனரேயலும்.

(சாரணன்.) ஓ இவர்கள் விசுவாமித்திரன்றன் சிஷ்டர்களாக இருக்க
வேண்டும்.

அப்பால் இரண்டு பிரமசாரிகள் பிரவேசிக்கிறார்கள்.

(ஒருவன்) யாரோ.

விருத்தம்.

[illegible] நங் கடிநகர்க்சனுகித் திரும்பியிங்கெய்து மவ்வளவும்
பரிவொடிவனனி பழுதுறாதவனைப் பாதுகாத்திடுதி யெனவெறந்தன்

குருவரர்காதி புதல்வர்தமாலை தொண்டிடப்பெற் றனனைந்தோற்
றெரிதருசமித்துத் தேடியோர்கணத்திற் றீதனைவள -திடச் செல்வேன்.

என்று நடக்கின்றான்.

(மற்றொருவன் பாடுவது).

விருத்தம்.

சனகநந்தன ... முனிவர் ... சதானந்தர்
அனகாவாருட் ... முதல ... கொண்டு
புனிதர் ... முனிவர் ... கந்தான
கனிமகிழ்வா ... வைணுகிபடைகுவரு ஞடியாங்கே.

என நடக்கின்றான்.

(அடுக்குவசனம்) ஓ! மித்திரகிரோ ... சத்தியவிரதனே; வெற்றி ... குத்திடும், உ... எத்தனை நாட்களா, சத்திய விசுவா, மித்திரர் ஆச்சி ரமத்திலிருப்பார், சித்த முவகதில் ... வருதலை ... ய்.

(முன்னவன் அடுக்குவசனம்). எங்கள்குலகுரு, நங்ககோசிகர், இங் கனியற்று, மங்கள வெள்வி, ... முடியாய் அந்தணாளரே.

(இராவணன் வசனம்.) சாரணா, இங்கு ... வருகின்ற இச்சி றுவர் யாரென நினைக்கின்றாய், இவர்கள் விசுவாமித்திரருடையவும் சதாந ந்தனுடையவும் சீடர்களாயாம். ஆகையால் இவர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கி அதிக நேசவிசுவாசத்துடன் பேசிச்செல்கிற வர்த்தமானங்களை யாம் கட்புலன்கட்குப் புலப்படாமலே நின்று கேட்கவேண்டும்.

(சாரணன்) வசனம் மகாராஜனே ... விசுவாமித்திருவென்றன் திரஸ் கரிணீவித்தையின் மகத்துவம் சற்றுங்கண்டிலர் போலும்.

(இராவணன்) களிப்புடன். அடடா, அந்த திரஸ்கரிணீவித்தை யின் மகத்துவமே, ஒருவராலுங்காணவொண்ணாது வசனங்களைக் கேட்கவு மொண்ணுவே, ஸபாஸ் மெத்த சந்தோஷம்.

(வித்திச்சிருவன்) வசனம். இராஜாதிராஜனே வெகு விசுவாசத்து டன் சஞ்சரிப்போம்.

(பின்னவன்) சத்தியவிரதா (அடுக்குவசனம்.) செருக்கினில் மகத்தை, தினமுமழிக்கும், அரக்கர்சஞ்சரிக்கும, அடவியிலிங்ஙன, உரதசொடுகௌசி கர், ஒருமகஞ்செய்யக் கருத்துட்கொண்ட, காரியமென்னே.

(சத்தியவிரதன்) ஓ ஓ எனதாவல், நண்பனே, தேவவிரதனே கேட்கக் கடவாய்.

க-வது அங்கம்.

விருத்தம்.

சினத்தொடுமுன் பதிற்சுவர்க்க மமைப்பனென நினைத்தளவிற்றேவ ரெல்லாம், அனர்த்தமது பலித்ததென்று முறைப்படமத் தொனிசாதிவிடார்ந்துமுட்ட, கனத்தவயனுளக்கலை வகித்தனைத்த் தனித்தவந்து வைப்பிடித்தும், இனித்தபுகழ் படித்ததனுக்கெவருளியற்றார் முனிவர்பல மறைவர் யாரே.

(வசனம்.) அத்தகைய மஹா தபோநிஷ்டரான அந்த விசுவாமித்திரருக்கு இவ்விராக்ஷதநீசர்கள் எம்மாத்திரம். இவர்களால் என்செயக்கூடும்.

(வித்திச்சிருவன்) சாது,

(அடுக்குமொழி.) இவ்விப்பிரவசேக்கள், செப்பிடமொழிகள், தப்பிடாதுன்செவிக், குட்புகுந்தனவா.

(சாரணன்.) அதனாலன்றோ, இக்கௌசிகனுக்கெதிரியாக விவிதமாயாவிசாரதுரந்தர மாரீசனை மஹாராஜனால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

(வித்திச்சிருவன்.) நன்று, நன்று, அவ்வேற்பாடு சாலவும் நன்று நன்று.

எங்ஙனமெனில்,

விருத்தம்.

கும்மெனப்பாட ரல்லினதிதனைக் குமுறிடுங்கொண்ட லின்குலத்தை
செம்மியபுகையின் திரகுதியைமிசவு தெள்ளியபூதி மாமலரூயை
விம்முவெம்போரி லொவ்வொருசமயம் விதம்விதமிக மிகவிளைத்து
கம்மலைறத்தமரர் நடுங்கிடச்செய்தான் கனதமாயாவி மாரீசன்.

(இராவணன்.) (மிகுந்த வெகுமானத்துடன்) வித்துச்சிருவா.

வெண்பா.

மாயாவி யேயலவோ மாரீசன் றன்பெருமை
நீயே யறிவாயின் னிலத்தில்—வாயார்
விடமதனைச் சிந்துகின்ற வெவ்வரவின் காலப்
படவரவே கண்டிடு மென் பார்.

(தேவவிரதன்.) ஓ சத்தியவிரதா, (அடுக்குவசனம்). துதிபெறு, அதிதவ, நிதியென, ஓங்கிய, உனதுரை, பாங்கேயாம்.

(எங்ஙனமெனில்) வசனம். இந்த முனியினுச்சிரமஸ்தானங்களில், சிங்கன் கொட்டாவியிடுகையில் இசற்றுப்பற்களைத் தாமஸாத்தண்டனைச் சள

பங்கள் துதிக்கரத்தாற் பிடித்திழுப்பதும், மான்குட்டிகள் பிடிகளின் மடிக்க ளிற் பாலுண்பதும், இப்படியே. அவிரோதமான வினியாஸங்களினோடு விளங்காநின்ற இவ்வனத்தைப் பார்த்தாலே துலங்கும்.

இன்னமும்

விருத்தம்.

பசுவினைப்போற் பெற்றோரால்விற்கப்பட்டுப் பாரிடத்துக்காப்பாளர் யாருமின்றி, கனிந்தமனை நெகிழ்ந்துருகிக் கரைந்துவாடிக் கடுகளவுந்தன்பல முமில்லாதாகி, நிசம்பாவுமகத்து நட்டயூபந்தன்னி னெடுங்கயிற்றாற் பிணிப் புண்டுசோவானின்ற, வசமருவுசுனச் சேபனுய்யச்செய்த மாதவத்தார்மகிமை யெவர்வழுத்துவாரே.

(விசித்திசித்திரவன்.) வசனம். இப்பிரமணச்சிறுவர் நமது மாரீசனுடை ய மாயாபலத்தை அறியமாட்டார்கள், ஆசையால்இப்படி உளறுகிறான்.

(சாரணன்.) வசனம். அதனாலென்ன பாதகம், யாவருந் தங்க டங்கள் ஜனங்களைப் புகழ்ச்சிசெய்வது வழக்கந்தானே.

(விசித்திசித்திரவன்.) நமது ஏகாமாயா துரந்தர மாரீசனது பிரதாபமே பிரதாபம். எங்ஙனமெனில்.

சந்தவிருத்தம்.

திசழுமிட்டி குயின்றிசோலையி லெளிதிறைற்றவர் கண்டறியாமலொர்
திரிவிதக் கனலுங் கெடுமொரிடர் புரிவானு ல்
மகிழிருத்து வெறும்பலர்கூவிட அறைவனப்புறம் நின்றபலானி றை
வகைபடுத்து வனங்கவி வாயிடை சொரிவானு ல்
மிகமொழிச்சிறு மங்கையர்மாதவர் சதிகளொக்க நடுங்கிடவேபு ரு
வமதுமிக்க நெரிந்திட வேபயில் மாரீச ன்
நிகழ்சுருக்கு வெனும்பெயர்கூர் கலனவைநொறுக்குவன் வஞ்சகனேயி
னெறிகளற்றவ னென்றெவர் தானிவ னறியா ரோ.

(சத்தியவிரதன்.) வசனம். ஆசையினாலேதான் எனது குலகுரு விசு வாமித்திரர் சங்கையற்று யாகஞ்செய்யக்கருதினவராய் தனது ஆப்தசிநேகி தரான இட்சுவாகுகுலத் தயரதசக்கரவர்த்தியை அழைத்துவருவதற்காக அயோத்தியாபுரிக்குச் சென்றிருக்கின்றனர்.

(சாரணன்) குடிலநகையுடன்.

விருத்தம்.

சண்டனுமிலங்கேசன்பாற் சமதக்னி வந்துபோற் றி
பண்டயகேயங்காட்டிப் படித்துக்கொண் டதனற்பீ தி

கொண்டிடா மற்றுணிந்தான் கோசிகன்மகத்திற்கென்று
விண்டிடுமெதைமறந்து விளம்பிய பெருமைகேளாய்.

[வித்திச்சிருவன்) வசனம். இந்தச் சிறு முட்டாள்ப்பயல்களின் வார்த்தையிலுலென்ன இருக்கின்றது, அக்கோசிகன் அகாத இருதயனன்றோ.

(சாரணன்) இதை இப்படிமறைத்துக்கொள்வதிற் பயனென்னே. அடடா.

வெண்பா.

கோசிகனப்பார்க்கவனைக் கொற்றவன்பாற் றூதனுப்பி
யாசனைகள் செய்துகொண்ட விச்செய்தி—காசினியி
றன்னுடையசிடர்களுந் தாமுணரா மன்மறைத்த
தென்னவித மென்பே னெடுத்து.

(வித்திச்சிருவன்.)

வெண்பா.

எல்லா நடத்தையைப்போ னென்றெவர்க்குந் தன்னிடத்தில்
வல்லானெனும் நினைப்பு வந்தெய்த—சொல்லாரும்
சின்னத்தனமறைத்து சீர்பெருமை செப்புவரா
லன்னமுனி அப்படியேயாம்.

(வசனம்) அச்சனகராஜனும் தன்மகளின் கலியாணக்காரியத்தை முடித்துவைக்க வேண்டுமென்றம்முனிவனையே பிரார்த்திதிருக்கின்றானென்று நின்றால் நிகழ்த்தப்பட்டதன்றோ, அதற்குக்காரணம் அதுவேதான்.

(சாரணன்.) நகைப்புடன் (வசனம்) அம்மூடஜனகனால் அம்முனிவனை அதிகப்பலவானெனக்கருதி அவ்விதயேற்பாடு செய்யலாயிற்று.

அகோ அகோ! அம்முனிவனது வீண் விக்கிரமப்பிரதாபங்களை சற்று விளக்குவாம். கேட்கக்கடவீர்.

தரு. இராகம். எதுகுலகாம்போதி. தாளம் ஆதி.

பல்லவி.

விந்தையிதுவேசொல்லக்கேளாய்————அடா
வித்திச்சிருவா இவனோர் ஆளா.

அனுபல்லவி.

அந்தவிசுவாமித்திரன், அதிகருவத்தால்னல்ல,
மதிகெட்டதென்னசொல்ல (விந்தை)

சரணங்கள்.

காசினியில் முனமிராஜனுயிருக்கின்றகா லே தனது
கனத்ததளந்துடன் வனத்தினில்வர ஒருக்கா லே
நேசத்துடன் வசிட்டன் காமதேனுமகிமையா லே இவனுக்கு
நிசரில்விருந்துசெய்தான் அதுவருந்தியுடன்கைமே லே பாவி
கோசிகனிவன் மனப்புற கடத்தா லே
கொஞ்சமதியுள்ளவனுகையினு லே
பாசங்கொண்டிழுத்திடப் பசு அவன்மே லே
பாய்ந்து கொம்பினுற்குத்த ஓய்ந்துகைகா லே
பதறிநடுநடுங்க கலங்கிப்
பயந்துடலுமொடுங்க தன்
பவியெல்லாம் பூனைவாயெலிபோலே
பரிகொடுத்தானய்யா கருவத்தினு லே [வி[

விடிந்துமிஞ்சின இருட்டெனப்பின்படைகள் விளைத்தாரே (ஆவை)
விரும்பியே வசஞ்செயமுடியாமற் சமர்விளைத்தாரே (ஆவின்)
கடிந்தபெருமூச்சினில் மிலேச்சர்களாய் முளைத்தாரே (அவர்கள்)
கடுகளவு முடலில்விட மறமிகத்துளைத்தா ரே (அதனுற்)
படிநிரத்தநதிகள் கடலில்முட்டவும் பொல்லா ப்
பாவியிவன்றவிர மற்றப்படைகளெல்லா ம்
மடிந்திடக்கண்டதானும் மறுபடியுஞ்சொல் ல
மலைந்துகொஞ்சச் சிவனுப்வந்தென்னசொல் ல
மனதிடிந்தச்சதடோடு ஆனுலுமிது.
மிகவுமேலச்சைக்கேடு (எனநினைத்து]
வாடிபிராமணத்துவம் நாடித்தவஞ்செயவே
ஓடிவனத்திற்றுக்கம் பாடிச்சென்றனய்யா (வி)

கலிவிருத்தம்.

மன்னுவாய்மையும் மானமும்விட்டதோர்
சின்னக்கோசிகன் றன்னையோர்தீரனென்
றுன்னியோதினன் உற்றறியாப்பயல்
துன்னுமற்புதமற் புதஞ்சொல்லவே.

(தேவவிரதன்) ஓ அருமை நண்பே (அடுக்குமொழி.) புரவலனத்தயா தர்க்கு, ஒருகலைசிருங்கமுனி, பெருமையொடியற்றுவித்த, வரமகமகத்தில் வந்த, சருவினதுபங்கினராய், வருபுதல்வர்நால்வர்மிக்க, விரிவுளநன்னூல்

கள்கற்று, பிரமசரியாச்சிரமத்திற், றெரிதாவிளங்குகின்ற, உமாயிருகை யையொப்ப, பரிவொடுகுளிரவார்ந்து, இருசெவிநிறம்பிற்றன்றோ.

(சத்தியவிரதன்.) ஆம், ஆம்.

விருத்தம்.

ஒளிகொளுல் வரிலுத்தமக்களுஞ்செயம் ராமன்
களிகொடாதைக்குசந்த சற்காதலனென்றும்
அளிகொணற்குண சீலனுமற்புதனென்றும்
தெளிகொள்பூதச் சுயமபுபோற்றெரிகின்றதன்றோ.

(இராவணன்) வசனம். (அழுககாறுகொண்டு) இப்பிராமணப்பயல் யென்னையிதற்றுகின்றான்.

(வித்திச்சிகுவன்) உலகவசனமப்படியிருக்கின்றது.

(சாரணன்) [வசனம்] அதனுற்றான் அச்சானகியுமிவன்பேரிலாசை கொண்டவளாக ஆயினள், ஆகையாற்றான் ஜானகியின் கல்யாணத்தின் பொருட்டு மஹாராஜனுமேலையும் அவனது ரூபத்தைத்தரிசிக்கும்படி நேர்ட்டிருக்கிறது.

(தேவவிரதன்) வசனம். [இரக்கம்பத்துடன்] ஆம் ஆம் அறிவேனறிவேன் ஜனகமகாராஜஸன்னதியில் எங்கள் குருநாதரான சதானந்த முனிவரால் அடிக்கடி இராமனைப்பற்றி பேசை அனுசரித்தகுணமும் குணத்தை அனுசரித்தபேரும் உடையவனென்று புகழக்கேட்டிருக்கின்றேன். எங்கனமெனின்.

விருத்தம்.

நிலமேவியுரைவார்க ணசைகூறுமதிவீரன் மனுநீதிநெறிநின்றுளன்
விலைமேவுமலைநாலு மறையாதிஅறனீடு முறையாவும் விதமெண்டான்
நலமேவுமதியாள னனிநின்னளியாள னயவாய்மை நவில்கின்றான்
ஒலிமேவுமலையாழி மகிமீதுபதியாகி ரகுராமனெனிர்கின்றான்.

இராகம் கமாஸ். ஜம்பைதாளம்.

பல்லவி.

ஸ்ரீராமன்மகிமையைச்சேடர்களொருகோடி
சேர்ந்தாலுஞ்சொலப்போமோ.

அனுபல்லவி.

மாராபிராமன் புகழ்வாமன்பலவீமன்
மங்களாகரபூமன் துங்கபானுகுலசோமன் (ஸ்ரீராமன்)

சரணங்கள்.

கோலமுடியழகும் குணபருவத்தழ கும்
சமுதலழகும் சந்தபந்தியழ கும்
தயவுமொழியமலா
நயனங்களும்விமலை
காதலிந்தும்நேர்புன்னகையும் உயர்ந்ததோ ளும்
தார்புனைமார்பின் விஸ்தாரமுமிருதா ளும்
கரியின் துதிக்கை நிகர்துடைகளும் கண்டால்வேளும்
சலித்து வெட்கிக்குறுகிக் குனிந்துபோகாரோ ளும். (ஸ்ரீ)

தீரன் பயவீரன் சிங்காரதையபார ன்
சூரன் விகடதாரன் தூயமதிவிஸ்தார ன்
துர்ச்சன நாசன
சர்ச்சனநேசன்
துங்ககுலையன்மங்களகாய ன்
சுமுகனிங்கிதவாக்சதுரனுபாய ன்
தவகுசத்தியதனன்றன்மத்திநேய ன்
சகலகலாநிபுணன்றவர்க்குசகா ய ன். (ஸ்ரீ)

பார்த்தாலும்பசிபோமே, பாவங்கள் நீக்கிடு மே
சேர்த்தியாய் நினைத்தாலும், நித்யத்வம்பெறலா மே
நிர்மலன்கண்ணன்
அம்புகில்வண்ணன்
சித்தவானென்றுசதானந்தரும்விவே க
நிருபனிடத்திற்சொல்லிடக்கூவர்பலவா க
ஆதிமூர்த்திதானே அவதரித்தாற்போலா க
அய்யன்விளங்குகின்றானதிபரமா க. (ஸ்ரீ)

(இராவணன்) புளகத்துடன் (தன்னுள்) இதுவென்சொல், நானவ னேனையிது எதார்த்தமாகுமா.

[வெளிப்படை] அட்ட அச்சனகசன்னிதியில் உடன்ஸ்ரீ ராஜ் செய்து கொண்டிருக்கின்றர.

விருத்தம்.

அகலிகைமகளுந்தந்தை அறியச்சதானந்தன்றான்
மிகமிகராமன்கீர்த்தி சனகன்பால்விரித்திட்டானும்

மகிழ்வுடனதனைக்கேட்டு மதிகெட்டுப்புலம்புகின்றான்
புகல்கெட்டசிறுவன்கேளாய் புத்திமான்வித்திச்சிருவா.
(வித்திச்சிருவன்.) (பரபரப்புடன்) சாறணுபார்க்கக்கடவாய்.

விருத்தம்.

தொடர்ந்துதன் னனையைவிரகினிற் புணர்ந்த தட்ட வலாரியைச்சிறைக்கே
குடும்பியாய்ப் பணித்தானவ்வுபகாரக் குணக்குன்று மிராவணேச்சுரனை
மடந்திகழ் அவ்வகலிகையின் மகன்முன்வாழ்த்திடல் வேண்டுவதிருக்க
இடம்பெறு ஜனகனவைதனில் ராமன்சிறப்பினை எவ்விதமுரைத்தான்.

(சத்திப்பிரதன்) (வசனம்). ஆசையினுற்றான் குணநிதியான இராமனிடத்திற்றுனகவே ஆசைகொண்ட ஜானகியை இராமனுக்குமணஞ்செய்து கொடுப்பதாய் ஜனகராஜனால் தீர்மானஞ்செய்யலாயிற் றென்றெண்ணுகின்றேன்.

(சாரணன்) (வசனம்) கஷ்டம். கஷ்டம். அந்த நன்றிகெட்டபயல் அடிக்கடி இராமனைப்புகழ்ந்து புகழ்ந்து அவனது ஆசையை சீதைக்கு உச்சிககேறும்படி செய்துவிட்டான்.

(இராவணன்) ஹா ஹா கஷ்டங் கஷ்டம். அந்தச்சானகியின் கதையைக்கேட்கின்ற எனக்கு.

வெண்பா.

ஆசைகொண்டாள் ராமன்மீதம் மடந்தைச்சீதையென்று
பேசுமுறை யோர்பாற் பிளந்திடவும்—வீசுமனற்
காச்சிடுநாராசமென்னக் காமன்கொடுஞ் சரங்கள்
பாய்ச்சலிற் பாய்கின்ற தோர் பால்.

(வித்திச்சிருவன்) (கோபமேட்டுயிர்ப்புடன்,) அவ்வகலிகை மகன்றான் மாரீசனால் முதன்முதலிற் கொல்லப்படவேண்டியவன் (மற்றவர்பின்னால்.
இல்லாமற்போனால்)

வெண்பா.

கண்டமட்டுந் தோத்திரித்துக் காலங்கழிக்குமுனி
விண்டிட்டபோதிலு நம்வேந்தனுக்குப்—பண்டுதொட்டு
ஒப்பிலுயிர்ச் சகனென்றோது ஜனகன்பயம ற்
றெப்படிக் கேட்பா னிதனை யே.

(தேவவிரதன்) (வசனம்.) மீதிவ்விதந்தான், ஆயினும் அவ்விராமனைப் பற்றிய புகழ்ச்சியிற் குதூஹலரான எனது குருவினிடத்தில், அச்சனகர் இவ்விதம் பதிலுரைத்தனர்.

(சத்தியவிரதன்) எவ்விதம்.

(மற்றவர்களும் ஆதரத்துடன் செவிகொடுக்கின்றனர்.)

வெண்பா.

கன்னிகையுங் காமுற்றாள் காகுத்தன் மேற்புகழை
என்னெதிரினீரு ரியம்புகின்றீர்—நன்னயமாம்
பாநுமதிக்குலசம் பந்தங்கள் பாங்குற்ற
தேனும்பொருத்தலா தே.

(என்றே)

(வித்திச்சிருவன்.) நன்று நன்று, ஜனகா, நன்று நன்று, நின்னால் காரியா காரியங்கள் நன்றாய்ச் சிந்திக்கலாயிற்று.

(இராவணன்.) அடடா. இவன் யாவுமறிந்த மஹாஞானவானன்றோ.

(சாரணன்.) ஆனால் கன்னிகையைக் காதல்கொண்டிருக்கின்ற நமது மகாராஜனுக்கு கொடுக்கப்போகின்றான் கொல்.

(சத்தியவிரதன்.) அதேது.

(தேவவிரதன்.) எனது குரு சதானந்தரிடத்தில் அச்சனகர்சொல்லிய சமாசாரங்கள் முற்றுங் கேட்கவேண்டும்.

(எவ்வனமெனில்.)

ஆசிரியவிருத்தம்.

என்னிரு கண்மணியனைய பெண்மணியை ராவண ன்
யாசிக்க நேயத்தினா ல்
இனிதுநகை கொண்டனெனனக்கன பரம்பரை யி
லிங்ஙனங் கேட்கின்றதா ல்
அன்னபடி மூவுலகு மெச்சச் சிறந்த தோ
ளாண்மைபெறு வலியுமில ம்
ஆக்கும் விதிக்கு முப்போனுஞ் சிவபூ சை
யாற்றுந் துரந்தரனுமெ ன்
றன்னிகரி லண்பனும் ஆகுந்த சானன ன்
சார்ந்திங் கிராகவன்மே ற்
றுவமன யானமகள் சீதையைத் தரவெனி ற்
சாற்றுவது மென்னையவனு க்

இன்னவளை யெங்ஙனம் யீருவே னல்லதி லை
யென்றெப்படிப் புகலுவே ன்
எனது மனமொரு புடையினிலையாது சஞ்சல க்
கிடைகொண்டு மலைகின்ற தே.

(எனவ்ற)

(விசுவாமித்திரன்.) அந்தச் சனகராஜனால் சதானந்தனிடம் உசிதமாய வைக்கப்பட்டிருக்கின்றது.

(இராவணன்.) (சோகநீரால் தொண்டை தத்தலிட்டுக்கொண்டு) ஹா ஜனக, வீரத்துவச, எனதாருயிர்ச்சகனே, இவ்வித இலேசத்தை, விட்டுவாயாக, என்னிமித்தம், உனக்குச் சோகமினிவேண்டா, யான் நினது பிராணகண்டித சோகாஸ்பதனும் பவிப்பேனு, ஹா, ஹா, கஷ்டங், கஷ்டம்.

சாரணன் அறிக்குமொழி.

மன்னவர்மன்னவா தன்னுருவத்தொடு
கன்னியையவ்விட உன்னுகின்றீர்கொலோ.

அங்ஙனமன்றே) பின்னை, அன்னவளாசைகொண்ட, பன்னிரேகுமாரன், தன்னுருவப்புனைந்தே, மின்னவடன்னைக்கொள்வீர். (...திலென்னபரிதாபம்.

(சத்தியவிரதன்.) (சிரித்துக்கொண்டு) இத்தகைய இராவணனைப்பற்றியோ, இவ்விதம் ஜனகராஜன் உரைத்தனர் ஸஹபாஸ் நரம்ப வந்தேசவும்.

(தேவவிரதா.) கேட்கக்கடவாய்.

ஆசிரியவிருத்தம்.

கவிநாயகன்கக்கமதிலேபின்னிப்புண்டுகதறினன்றசகந்தர ன்
கால்கைகளுநதறினன்பதறினன்மிகமிகக்கண்களோனின்னு ம்
புவிமீதுநீராய்ப்பெருக்கினன்பற்பலபுலம்பிவாயாற்கக்கின ன்
புரிந்துமிப்படியுடலைவிடுவிக்கமுடியாதுபுலிவாய்ப்பசுப்போல வே
சவமானவிதமொக்குமிருபதுபுயங்களுந்தலைபத்துமுற்புறத்தா ய்
சரணங்களுன்குமேபிற்புறத்தாய்நொந்துசாற்றிமிடுக்கெலியனு ன்
அவமானமெய்தினனடடாவகோவகோ அசைக்கத்திருப்பமுடி யா
அவ்வரக்கனைமூன்றுபுவனஜயவீரனென்றறைவதெவ்விதமைய னே.

(இராவணன்.) (கோபாக்கிரகத்துடன்) கெட்டபயலான இப்பிராமணச்சிறுவன்றன் கண்டத்தை இப்பொழுதே வெட்டியெறிகின்றேன் என்று குபீரென்றெழுந்து மற்றிருவராற்றகையப்பெற்றவனாய்த் திரும்ப உட்கார்ந்தனன்.

(விசுவாமித்திரன்.) அடடா நீர்மூடா நின்றலறியவசபா.

இராகம் பியாகு. ஏகதாளம்.

பல்லவி.

முட்டாள்நீயறிவாயோ இவன்பெருமை. (முட்டாள்)

அநுபல்லவி.

எட்டானைக்கொம்புமுரித்திட்ட இலங்கேசன்றன்
அட்டாளதேசம்புகழ் கட்டானபெருமையை. (முட்டாள்)

சரணங்கள்.

வளிவந்துவாயிற்பெருக்க தினந்தினமும்
வாசல்வருணன்றெளிக்க கைகட்டிநின்று
நளினாதனன்முதலோர் எளியார்போலேவல்கேட்க
ளியார்புவனங்காக்கும் வளல்ராவணனைக்கினை. (முட்டாள்)

மேனாட்கைலையைவிரற்கள் யீரைம்பதாலும்
வேரோடசைத்தெடுக்க திகில்கொண்டுமை
தானேய்ப்புல்லிடவண் டானகளிப்பாலரன்
நானுவித்தங்கொண்டமற்று னைவ்விலங்கேசனை. (முட்டாள்)

(ராவணன்.) (வினயத்துடன்) இதுமட்டிலுமன்று, வித்திச்சிருவா,
ஸாக்ஷாத் அநந்தப்பரமசிவத்தினால் புகழ்ப்பெற்றிருக்கின்ற யீதெவ்வளவு.
கேட்கக்கடவாய். பூர்வத்தில் ஒருக்கால், ஹேமாசலக்ஷேத்திரத்தில், யான் மகத்
தான தவம்புரிந்துகொண்டிருக்குங்காலத்தில்.

விருத்தம்.

மலைமகள் குசபத்தனங்களின் குங்குமத்தினிற்றோய்ந்த செங்கரக
மலதலத்தா லென்னங்கத்தை வருடிமகேச்சுர னம்மதிருடி
மலைநிகர் புயத்திராவணா நீயுமாதவத்தா லிளைத்தனையேன்
மலயில் நின்மனத்தினினைத்ததுபெறுவையெனவரம்நல்கினர்மதித்தே.

(தேவவிரதன்.) ஓ எனதாவலுக்குறிய நாவலநண்பனே.
சத்தியவிரதா மேவி நீயுரைத்த, விதம் மிகவிந்தையே.
என்சொல்கின்றாய்.

கலிவிருத்தம்.

கதிரவன்றிசைமாறிடக்கடிந்த
முதன்மைவீரனுமுப்புவனத்திலும்

அதிபனுக்கிதுவுங்குறைவாகுமோ
மதவத்திக்குமடிவழுக்காததோ.

(வசனம்) மாகாவீரரில் யார்க்காகிலும், பிரதாபத்திற்சற்று நழுவுத லேற்பட்டால் அதனுலென்னகுற்ற மேற்படும்

(இராவணன்.) (சின நகைப்புடன்) அதுவென்சொல், பிரதாபத்தில் நழுவுதலென்று செப்புதல் என்சொல்.

விருத்தம்.

எந்தனுடைப்பலமறியா வாலிவீரனெனைப் பிடித்துக்கக்கமதிற் கொண் டான்மெய்யே, உந்தியொருமுஷ்டியினு லவனைத்தள்ளி யுதறிவிட்டெடதிர்த்திட வென்சரண்பணிந்து, சந்ததமுமெனைக்காப்பா யெனவேவாலிசக்ய மதைக்கொண்டதனுற் பிழைத்தான்கண்டாய், இந்தவிதம்நடந்ததிலோபுக ழ்ச்சிக்கீனம் யெனையெடுத்தவிதஞ்சொலிப் பல்லிளிப்பதென்னே.

(சாரணன்.) மூடஜனங்கள் மஹாராஜாதிராஜனுகிய இலங்கேச்சுவரனுடைய பிரதாபத்தைக் கிஞ்சித்தாகிலுமறிகின்றதில்லை.

தரு. இராகம் பியாகடை. ரூபதாளம்.

பல்லவி.

வாலியென்றகுரங்காலேபொருத முன்னாலேவந்துநிற்கவாகுமோ.

அனுபல்லவி.

தடலமேலுலகுமப்பாலும் புகழ்வீரனை
காலகாலனும்ப்ரதாப சாலிராவணேச்சுரனை. (வாலி)

சரணங்கள்.

பத்துக்கரத்தாற்பருத்தகைலைப் பருப்பதத்தையெடுத் தோங்கி வானிற்
பந்துவிளையாட்டெனவெறிந்தே மற்றப்பத்துக்கரங்களிற்றாங்கி கீழே
வைத்துத்துடையிற் புயத்தில்மப்புத் தட்டி.
வந்தயிந்தமன்னர்மன்னவன்றன் முன்னஞ்சாதுகிட்டி (வாலி)
(நானும்)

எட்டுத்திக்குஞ்ஜயித்தெட்டானைக் கொம்புமிலங்கிடமார்பினில் ஒடித்தான்
இந்திரதேவன்முதலானயாவரும் யேவல்புரிந்திடஅடித்தான் இது
மட்டிலுமோபடைத்திட்டான் பலவான
வஞ்சமிஞ்சிடுந்தசான னன்சமரினிற்பஞ்ச லான. (வாலி)

(சத்தியவிரதன்.) தேவவிரதா, போதும், போதும், அவ்விலங்கேசனு

டைய அவமானங்களை ஒளித்துவைத்துப் பேசவேண்டாம். அது மறைத்தாலும் மறைபடுமோ, அடட கேட்கக்கடவாய்.

ஆசிரியவிருத்தம்.

அலையாரமெறிகின்றபோவாகதித்துறையிலைந்நூறுகைகளாலே
அணையாய்த்தடுத்துமற்றைறன்னூறுகைகளாலரிவையர்குழாங்களோடு
சலமேவிறைப்பதுமென்றுகின்னோந்திடச்சர்வாங்கமுந்துலங்கத்
தலைகுனிந்தவர்நிற்குஞ்சாடையிற்பின்னலைத்தான்றொட்டிழுத்திடுவதும்
மூலையின்மேற்றுகிலவிழ்ந்திடுமொறிழுப்பதும்முத்தெனநகைத்தார்கடம்
முதுகிலேத்தட்டுவதுமிப்படிப்பலவிதம்முன்னாளிலர்ச்சுனன்றான்
நலமாகவிளையாடிமகிழ்கின்றவேளையில்காட்டமர்மதத்திறேடு
நாடியவிராவணன்காவலுட்பட்டவிதுநாடெங்குமங்கறியுமால்.

(இராவணன்) வசனம். அந்தோ அந்தோ அந்தநீசத்திரிசங்குவின்யாசனைக்குகந்த சீர்கெட்ட முனியின் சீடனாகிய இந்தச் சின்னப்பயல் அம்மூடனைப்போலவே புலம்புகின்றனன். ஆதலின் இவன் இராக்கதராற் சங்காரிக்கப்படவேண்டியவன்.

(தேவவிரதன்) வசனம். ஓ ஓ உத்தமச்சக, சத்தியவிரதனே, அஃது நிற்க, நிற்க, இங்ஙனம் என்னுரை கேட்கக்கடவாய்.

தரு. இராகம் கேதாரகௌளம். ரூபதாளம்.

பல்லவி.

இலங்காதிபனுக்கோ இழிவெடுத்துரைக்கின்றாய் யேற்குமோடாபோடா.

அனுபல்லவி.

கலங்காமனத்தோன் கைலைதன்னை கல்ல
பலங்கொள்கைகளாற்றூக்கிப் பந்தாடின வல்ல. (இலங்)

சரணங்கள்.

எங்கும்விஜயஞ்செய்து எமபுரிக்கிலங்கேசன்
எய்தினதொருக்காலன்றே
அங்கங்குள்ளதேவர் அசுரர்கள்யாவரும்
அதிவியப்புடனெதிர்சென்றே
எங்கள்பெருந்தவமின்றேபலித்ததென்
றியம்பியிதுவிதுவென்றே
தங்குநற்காட்சிகளெல்லாங்காண்பிக்கச்
சரிசரியெனக்கண்டுநின்றே

பங்காரகதண்டனை கொண்டானை விடுவிக்க
பாதம்பணிந்தவர்கள் பரிவுடனே துதிக்க
பொங்குங்களிப்பாலவன் சிங்கம்போற் கர்ச்சிக்க
பொல்லாயெமன்கீழ்வீழ்ந்தானெல்லாருமே நகைக்க. (இலங்)

அனுதினமுஞ்சுர கணம்மிக வாடி
அரக்கர்பதியின் றயை நாடி
இனமாய்ப்பூங்காவனநீர் இறைப்புழுத ளாய
ஏவற்செய்து கைகால்புண் ணாடி
தனதாம்பதிசெல்வரின்னமுஞ்சூரி யன்
றன்பயந்தே யொளித் தோடி
மனதேங்கிடத்திசை மாறிச்செல்கின்ற னன்
வரமும்உரமும் பெற்றான் கோடி
தனதன்பாற்புட்பகத்தை தானப கரித்தான்
தடமார்பினில்வெற்றி மாலையைத் தரித்தான்
முனிவுடனகிலமும் நடுங்கவார்ப் பரித்தான்
மூன்றுலோகமும் ஓராங் காணியாய்ப் பார்த்தான். (இலங)

(வசனம்.) அகோவகோ! யாவராலும் வழுத்தற்கொண்ணா அளவிறந்த வரிசையையுடைய அவ்விராவணேச்சுவரன் புகழ்ச்சிசெய்தற்கருகனன்றோ, ஆகையால் இகழத்தக்கவனன்று.

(வித்திச்சிருவன்) வசனம்.) நன்று, நன்று, சதவிரதா, நன்று, நன்று, இனிமையான நின்வார்த்தையினால், ஆனந்திக்க யோக்கியனாக ஆகின்றாய்.

(சாரணன்.) இவன்மட்டுமன்று) பின்னையோவெனில்; இவன் யாவனுடைய சீடனோ அவனுமேயாம்.

(இராவணன்) யாவனொருவன் அச்சனகராஜன்றன் சேர்க்கையை அடைகின்றானோ, அவனும் யெனக்கெவ்விதத்திலும் இஷ்டன்றான். என் செண்பகமலர்களின் சேர்க்கையால் அசுகுடலையும் வாசனைபொருந்தும் அத்தன்மையேயாம்.

(சத்தியவிரதன்.) அடடா, என் வீண்வாக்கடிகம் இதிலென்பயன், வீண் காலதாமதந்தானாகின்றது. யாம் குருகுலத்தையடைவோம்.

(என இருவரும் சென்றனர்.)

(இராவணன்.) யாமும், இக்கௌசிகீ தீரத்திற் கலங்காரமாய்விளங்காநின்ற இப்புக்கவனங்களின் மார்க்கத்தோடேசென்று ஆங்காங்கே தென்ப

நடக்கின்ற பற்பல அற்புதக்காக்ஷிகளையும் அதிரகசிய ஸமாசாரங்களையும் நன்கறிந்துகொண்டிட, அம்மங்கையர்க்கரசி ஜானகியைப்பெற்ற வள்ளல் ஜனகன்பாற்செல்வோம்.

மற்றிருவர். மஹாராஜன், சித்தமெப்படியோ அப்படியே.

என எல்லாரும் சென்றனர்.

முதலாவதங்கமுற்றிற்று.

இரண்டாவதங்கம்.

ஆரம்பம்.

அப்பால் அத்திரிமாமுனிவரும் அவரது பத்தினியாகிய அநசூயாதேவியுடன் இருக்கின்றனர்.

அத்திரி சொல்,

ஞானவிளக்கம்.

பிரம்மமென்பது சத்தியமங்கோவிந்தா, பின்னுள்ளதெல்லாமனித்தியங்கோவிந்தா, சற்குருபாதத்தைச் சாரடாகோவிந்தா, சாத்திரத்தைத் தூரத்தள்ளடாகோவிந்தா, போதனைகளைச் சார்டாகோவிந்தா, சார்ந்தால்மெய்ஞ்ஞானந் துறக்குமேகோவிந்தா, இந்தமெஞ்ஞானம் வந்தெய்திற்கோவிந்தா, யேக ஐக்கியபாவனையெய்துங்கோவிந்தா, அந்தச்சோதிதனை யடைந்தாற்கோவிந்தா, அல்லற்பிறவி யகற்றுமேகோவிந்தா, அதீதயாமதனிற்கோவிந்தா, சொல்லமுடியாச் சுகங்காண்கோவிந்தா.

(அத்திரி.) என் காதலுக்குரிய மாதநசூயையே.

(வசனம்.) வேள்விசெய்யப்போகின்ற விசுவாமித்திரமுனிவராலழைக்கப்பெற்றபடி அவரது ஆச்சிரமஸ்தானமாகிய இவ்வனத்திலுன்னுடன் வந்துசேர்ந்தேன், சரியே, ஜனகமஹாராஜனுடனிங்கு வந்திருக்கின்ற ஜானகிக்கு ஏதேனும் அபூர்வமான வஸ்துக்கள் யென்னயிருக்கின்றது.

(அநசூயை.) சரணஞ் சரணம் முனிநாதரே என்பாலிருக்கின்றதன்றோ.

விருத்தம்.

எக்கராக்கதராற் பீதியயற்றப் பட்டாலு பாறை   ர்
தக்கதங்கற் பினின்றுஞ் சலித்திடார் தரித்துக்கொண்டால்
முக்கியபலனு மென்ன மொழிந்தென்பாற் றேவயர்   த
சுக்கிலநிறத் தின்பட்டுந் தூயங்கராக முந்தா   ன்.

(அத்திரி) வசனம். நன்று, நன்று, ஸபாஸ், என், கேள்விப்படுகின்றோமன்றோ, இராவணனென்ற இராக்கதன்வந்து ஜானகியை யாசிக்கிறதற் கெத்தனப்படுகின்றானென்றோ, ஆசையாலிவை அவட்கவசியந்தான் நன்று, நன்று மெத்தஸந்தோஷம்.

(எதிர்நோக்கி.) ஒ! இவளார், கரங்களில் தாமரையிலைகள், தாமரைத் தண்டுகள், தாமரைமலர்களிவைகளைக் கொய்துகொண்டொருத்தி வருகின்றனள்,

(அநசூயை.) பார்த்து.

விருத்தம்.

துய்யநாளமு மிலைகளுங்கொணர்ந்திடுகின்ற ஜனகியின்றே   மு
தைய்யலாளிவள் சுசரிதையெனும் பேர்தனையழைத்தவ ளாகுமாலதனுற்
செய்யஜானகி மதனச்சுரத்திலோ செழுகநுளநடுப் பகர்சிறந்   த
வெய்யிலுற்றிடு விதத்திலோங்கினைக் கிறேன்வேதைகொண் டுழல்கிறாளன்றே.

(அத்திரி.) ஞாபகம் தேர்ந்துகொண்டு) ஆ, ஸகி, ஆம் ஆம். மதனச்சுரத்தினாற்றான், சமாதியிலிருந்த பென்னால் முன்னமே நன்கறியலாயிற்றன்றோ. எங்ஙனமெனில்,

விருத்தம்.

சனகசுதையொருசமயந்துயில்கின்றதருணமாரன்றன்னைப்போ   ல
கனவிலதிசுந்தரமாங்கார்த்திரளாங்காத்திரராமனைக்கண்கண்   டு
மனதவன்பாற்சென்றிடவுஞ்சகலகன்மங்களிலுயகிட்சியின்   றி
பனிநறும்பூப்பாயலுற்றாள்பாங்கியர்காப்பாற்றிடவும்பாவைநல்லாள்.

(நல்லதிருக்கட்டும்) யாம் ஜனகராஜனது பக்கல்சார்வோம். என்று சென்றனர்.

(அதன்மேல்.) வித்திச்சிருவ சாரணருடன், இராவணன், பிரவேசிக்கின்றனன்.

(இராவணன்.)

விருத்தம்.

எவனுடை வெயிலைக்கண் டுற்றிரதியும் வெட்கின்றுளோ
தவனை நோக்கான் வெவ்வலி தனினின்று மெவள் வந்தாளோ
அவட்டனைக் காண்பேனிப்போ தெனமெரு நவில்லோவாணத்தக்
குவியலம்பு செங்கணைகள் குறித்தெழுகின்றதுள் ளோ.

(வசனம்.) அங்கனமால் அரசகுமாரத்தியை இப்பொழுதே பார்க்கவே ணடிப்படுவதிடம் அப்பா, அக்கௌசிகாச்சிரமத்திற்கெவ்வழி செல்லலாகும்.

(சாரணன்.) மகாராஜனே, இதோ இந்த விகங்கதாடவிக்குத்தென்புறம், அந்தக்கிம சாரணணியத்திற்கு வடபுறமாம்.

விருத்தம்.

குரவகங் கரக்குப்பாங்கு கோங்குர சாலதா ல
தருவினங்களுக்கு காப்பட்சார் மணற்பாதை சென்று ல்
விரவெ னைத்தகொங்கைக் கிரவாணி தனைக்கா ண
வொருவெகா ப்பொழுது போக்க வயர்ந்ததாம் வேந்தர்வேந் தே.

(வித்திச்சிகுவன், மகாராஜாதிராஜனே, அங்ஙனம், இங்ஙனம்.
மூவரும் நடக்கின்றனர்.

(இராவணன். வசனம். சாரணா, இக்கௌசிகாச்சிரமத்திலும், கந்தனவன நக்கின்றதோ

(சாரணன். அன்று அன்று.

விருத்தம்.

கலகலெனப்பிகங்களைவளர்ந்தோங்குந்தன்மாக்காவுகளும்வகுளமலர்க்க ந்தம்வீசும், உலவுவரிலனுா துதலும்கரீங்காரத்துயர்பிரசத்தொனியுசீருற்றும ங்கும், குலவக முகாதிகளும்வாழைத்தோப்புங்குளுகுளெனுங்குளிர்நிழலு மக்கக்கொண்டாட்டம், நலமுறுமவ்விருடியின்சீருடசத்தானம்நன்றுநன்று னந்தம்விளைத்திடுமெய்க்கானம்.

(வித்திச்சிகுவன்) வசனம். அகோவகோ! இம்முனியாச்சிரமஸ்தானங்கள், யென்ன, யென்ன அழகாயிருக்கின்றன.

இங்ஙனம்,

விருத்தம்.

உயர்கமுகங்களினுறுபழக்குலைகளுதிர்வனக்கதலிகளொழுங்கா ய்
சுயபழக்குலையின்கனம்பொறுக்காது துவண்டனவந்துவந்துல வ

நயமுறுந்தேமாங்கனிகணிறைந்தனநன்மரத்தடியிற்குமரிய
குயசெயம்பெறுசெவ்விளநீர்கள்குலுங்கத்தெங்கிளைங்க ளோங்கினவே.

(——) (திரை) கொச்சகம்.

சீலவதி யென்றேழி சித்திரம் பொருத்திட
கோலமய சாமான்கள் கொண்டுவரப் போயினளா
மேலுமென் வெப்பாற்றுதற்கு வெண்ணை[illegible]
சேலெனுங் கட்சுசரிதைச் சேடியளுஞ் சென்றனளா
(அவர்கள், என்னைவிட்டுப், பிரிந்ததுமுதலாய்)

கலிவிருத்தம்.

[illegible]
மாகாம் [illegible] மன்மதன் [illegible]
[illegible] பின்மொழிப் பாங்கியர் [illegible]
ஞாகா வினியென் செய்குவ[illegible]
(இராவணன்) கேட்டு.

விருத்தம்.

காமவேட்ச் சாஸபோகக் கலவியின் [illegible]
கோமள அவ்வியக்த குமிர்மதுரசப் பெருக்க[illegible]
தோமறும் உட்கொண்மாகந் தத்தளிர்க் கவ[illegible]
மாமரக் குயிற்பேடின்றன் வார்த்தையு[illegible] தாருங்கோல்லோ.

(சாரணன்.) வசனம். மகராஜ, அக்கரங்களடங்கியும், அர்த்தமொதெளி வில்லாமலும், ரமணீயமாயமிருப்பது, பிகசப்தமன்று, [illegible] நினைக்கின்றேன், அழகிய சாரிகைகளின் சப்தமென்றே

(——) அடுத்ததிரை.

விருத்தம்.

கன்னற்சிலைவேட் காமவிபோ கருதிப்பணிவன் காலிணையே
இன்னற்புரியே யொருதினமு மெழில்சேர்விகித படத்தினிலென்
மன்னற்பெருமான் றனைக்கண்டு வந்துன்யொருட்டென் வல்லுயிரை
முன்னர்ப்படைப் பேனுனதிறல் முனியேல்முனியே யொருகணமே.

கொச்சகம்.

நாயகனில்லாவேளை நாடியெனைப் புண்படுத்த[illegible]ல்
ஞாயமுண்டோடாபாவி நானிலத்திற் பெண்ணென்று[illegible]ற்

பேயாரிரங்காதோ வென்பிராணேசன் வந்ததற்பி ன்
சாயாலிலாதின்சமர்த்தைக் காட்டுவை நீயேயனங் கா
(இராவணன்.) கேட்டு, ஹா. ஹா.

விருத்தம்.

கல்லவனிக்கசந்து சகிக்கவொண்ணாது மாவிரசப்பாவசமாய் ச்
சொல்லினிற் கொம்பிப்புலம்புகின்றனொரு சுந்தரிஇவளையாரென் றே
நல்லைவிற்சாலால் வெண்மொல் மொழியாலொப்பிலம் பூவையைக்குயிலை
வெல்லலாற்றிசி வனத்தினிலுமெழின் மிக்கவளாகுவளிவ ளே.

(வசனம்.) ஆகையால் அந்தச்சுந்தரி, இன்றைக்கொன்று தூலக்கமாய்க் காணவேண்டும்.

(சாரணன்.) மஹாராஜன் கட்டளைப்படியே (என்று போய்ச்சுற்றிப்பார்த்து, திரும்பவந்து, அதிவியப்புடன்) மஹாராஜா, ஒன்றும் புலப்படவில்லை, யாதொரு ரமணீயசப்தத்தின் வழியாய்ச்சென்று சுற்றிச்சுற்றிப்பார்த்தும், அங்கொரு வருக்கும் தென்படவில்லையே.

(இராவணன், ஆச்சரியத்துடன்) தானே எழுந்து சுற்றிசுற்றிப்பார்த்து, அடடா. (வசனம்.)
அந்தோ, அந்தோ, எவ்விடத்திலும் ஒன்றும்புலன்படவில்லையே, இதென்னவற்புதமோ, இப்பெண்ணும் வாயதிறந்துரைக்குங்கொல்! ஒன்றுந்தென்படவில்லையே, ஆச்சரியமாச்சரியம்.

தரு. இராகம் தருபார். ஆதிதாளம்.

பல்லவி.

காதுவழி இன்பநாதம் புகுந்தென்னைக்காமன் கணைக்கிலக்காக்குதே.

அநுபல்லவி.

மேதினிமயமாயோர் மாதரசி யிருந் து
விரகமாயுருகின்ற உரைகள்யென்றனைந் து. (காது)

சரணங்கள்.

ஒருத்திமற்றொருவனை நினைத்துக்கொண்டிருக்கவு ம்
ஒண்டொடியவளை நானுள்ளத்திலிருக்கவு ம்
காத்திலம்பெடுத்தெனைக் காமனுங்கருக்கவு ம்
காணப்படாவடிவினளிவளுருக்கவு ம். (காது)

புதுமையிதெங்குங்காணே னிதுவரையிலு மோ
பூமிசடமாச்சுதுதே பொருந்தப்புகலு மோ

கதையோகனவோவிழி கண்ணைப்பகலு மோ
கருத்துமயக்கும் அல்ல காமன்விற்கொலு மோ. (காது)
பிரியாதுநாம்கொண்ட கொள்கைபோ ல
பெண்ணொருத்தியுங்கொண்டனளோ ஒருஜால ம்
விரகங்கொண்டுருகின்ற மென்குரலினற்சா ல
விழிகளைக்கிடத்துடிக்கின்றதி தென்னகோல ம். (காது)

(——) அடுத்ததிரை.

தரு. இராகம் கமாஸ். சாப்புதாளம்.

பல்லவி.

மன்மதாயேன் வன்மம் சும்மா
வாதுசெய்வதுத, காதுகாண், மயங்கிறேனடா.

(மன்)

அநுபல்லவி.

தன்மமா யென்கன்மமா ரீ
தஞ்சம டா
கெஞ்சுமென்மே ல்
வஞ்சமி லை
என்செய்குவே ன். (மன்)

சரணங்கள்.

சொல்லச்சொல்ல வில்லைவளைத் து
துடுக்காய்க்கூர் சரங்கள்தொடுக்கிறாய டா
வல்லவர்தாம் இல்லாவே ளா
வந்துமிக த்
தொந்தரித்தா ல்
உன்றன்புக ழ்
சிந்தும டா. (மன்)

சின்னஞ்சிறு கன்னிநானெ ன்
செய்வதின்னற் செய்யாதேடா செய்திடி லோ
அன்னபாவம் உன்னைவிடு மோ
அருநரக த்
தருந்திடுவா ய்

சரியல வே
பொறு பொறு நீ (மன்)

கொச்சகம்.

சஞ்சமெனயான்சொலியுஞ் சற்றுந்தயையில்லாம ல்
வெஞ்சரங்ளேவுகின்றான் மேனியெல்லாம்நோகுதந் தோ
பஞ்சசரனெஞ்சமென்ன பாறுங்கல்லோ இரும் போ
கொஞ்சமிரங்காததென்ன கூறுவேனோ விதி யே

மேற்படி கொச்சகம்.

பாவிமதனேவேவிப் பங்கப்படுத்துகின்று ன்
கூவிக்கூவிக்கதறிக்கூவியும் நீ யிப்பொழு தே
தாவிவிரகுவாராமற் றுமதித்திருப்பதென் னே
மேவியென்வலவா விறைந்தெழுந்துவாரா யோ.

(வசனம்) ஆ. பரமதயாளுவே. ஆ. அனங்கவாதை சகிக்கவசமா, ஆ. யென்னுவிறுறக்கின்றேன், மகத்துரோகி யென்னைக்கொல்கின்றான் ஆ. பிராணேசா, சடிதியில்வந்து, மதனவாதை விலக்கினலாகாதா, வா, வா வென்றலரியும் வன்னெஞ்சு படைத்திருக்கின்ற பாதகா, வாராததேன்.

தரு. இராகம் உசேனி. ரூபதாளம்.

பல்லவி.

வருவாயோ வரமாட்டாயோசாமி நீ. (வரு)

அநுபல்லவி.

கருணைப்பெருங்கடல் கண்ணாளனே அடா
சரணம்நீயல்லால் விடந்தானுகுங்கலந்திட. (வரு)

சரணங்கள்.

தப்பிவிமதப்பயல் வைப்புவரம்பிலாம ல்
தயைதாக்ஷிணியமென்ற யிடத்திலும்நில்லாம ல்
செப்புமென்மொழி செவிக்கொப்பாதகலாம ல்
சிறியம்பிறைக்கிறான் மீறியட்டிசொலாம ல். (வரு)

பாலனமும்பிசைந்தே சோலைக்கனிரசந்தே ன்
படைத்துணென்றாலுமோங்கரித்து மிகக்கசந்தே ன்
காலுங்கையுமசந்தேன் மேலும்பச்சப்பசந்தே ன்
கனதனங்களுசந்தேன் கலந்தணையவிசைந் தே. (வரு)

(ஆ) பாவி, வதைக்கின்றனே.

கலிவிருத்தம்.

☞ சரணமென்றினிதாய்ப் புகழ்சாற்றியும்
கருணையற்றவன் காமன்வருத்துறன்.

(சாரணன்) வசனம். அகோ வகோ! திரும்பத்திரும்ப, யாதொருபிடி மானமில்லாமல் இன்சொற்களெங்கிருந்தோ கிளம்புகின்றனவே, இதுவென்ன விந்தை.

(இராவணன்) அந்தோ வந்தோ அசேக்குவசனம்.) மாகமதிற்சிறு, பேகமுமின்றிவை, போகமழையமு, தாசப்பொழியதே.

தரு. இராகம் ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னமாயமடா ஓகோகோ இனிநான் எப்படிச்சகிப்பேனடா. (என்)

அனுபல்லவி.

அன்னியாயமோ, இன்னிநாதமென்
ஆவிதுடிக்க விப்பூவில்வெடிக்குதடா. (என்ன)

சரணங்கள்.

ஊருமில்லைப்பேருமில்லை உருவமுமில்லை பே
ஒருவனக்குயில்வெட்கி யோடவுங்கல்லை பே
நீராயுருக்கிடவுஞ் சொல்கின்றசொல்லை பே
நிகரற்றபெண்மணியர்ய் நினைக்கின்றேன்தொல்லை பேட. (என்ன)

ஆனாலும்பெரும்பாவி யானேனேநா னே
அடவியிற்றேன்மாறி பொழிந்ததெனத்தா னே
தினவின்மொழிதனைச் செவிகளிற்கேட்டே னே
திவியமடமயிலைக் கண்களிற்காணே னே. (என்ன)

இவள்சொல்லம்புகளென் செவிகளிற்பாயவு ம்
எழில்மன்மதன்கைகள் பூங்கணை யெய்தோயவு ம்
திவலைசுகமின்றினன் யெண்ணியெண்ணித்தேயவு ம்
தெய்வமிசைத்ததடா அய்யோநான்மாயவு ம். (என்ன)

(வித்திச்சிகுவன்) வசனம். அடடா, அருந்தவர்களிஞச்சிரமத்தானங்கள் அடங்காமருத்துவமுள்ளவையன்றோ.

(———) (அடுத்ததிரை) ௸ கலிவிருத்தத்தொடர்ச்சி.

☞ தருணமீதாலந்தான் கதியாங்கொலோ

(எல்லவருங்கேட்டு) வசனம். ஆ, ஆ நிச்சியமாய் நமதக்கங்களுக்கசோசனையுராய், எவ்விதமாயுஞ்செய்துகொண்டோ, ஒருத்தி விரகதாபத்திற்காற்றாது புலம்புகின்றனளென்பதிற்சந்தேகமில்லை, ஹற, ஹற கஷ்டங் கஷ்டம்.

(திரைச்சீலையைத்தள்ளிக்கொண்டு.) தாமரையிலை, தாமரைத்தண்டு, தாமரைமலர், இவைகளைதாங்கிய கரத்தினளாய், சுசரிதையென்ற சகி, பிரவேசித்து,

என்றுநயிச்சகி, வேண்டாம், வேண்டாம் அமங்களவாச்சியம், மங்களவாச்சியம் புகலுதி.

(அப்பால்.) தவிரிச்சயனமுற்ற ஜானகி பிரவேசிக்கின்றனள்.

(சீதை.) ௸ கலிவிருத்தத்தின் கடையடி.

☞ சரசநாதன்றனைக்காண் சுகங்கொலோ,

எனக்களைப்புற்றனள்.

(சுசரிதை.) ஆ, ஸகி, ஆச்சுவாஸங்கொள்வாயாக, ஆச்சுவாஸங்கொள்வாயாக.

(என.) தாமரையிலையால் விசறுகின்றனள்.

(இராவணன்.) ஹற, ஹற, ஹற.

விருத்தம்.

வளிநகந்துலவச் சேடியன்னவளை மாட்டினின்றிலை கொடுவிசிறித்
தெளிவுறச்செயு முயற்சியால்நாதனைச் சிந்திததான் சோர்ந்தனடிண்ணம்
அளியின்றொழுடை யனங்கவாதை கொளவடனைக் கண்டிடவெனக்கே
விளைநற்புண்ணிய மிலைவிதனையேன் வெடிக்குங்கல்லும் நோக்கிடவே.

(சாரணன்) வசனம். அவளோ, கட்புலன்கட்குச் சற்றுந்தென்படவில்லை.

அவளது சகியோ, நன்றாய்க்காணப்படுகின்றனள், ஆச்சரியமாச்சரியம்.

(வித்திரசிகுவன்.) அதும் அடைவே, அறியலாகும்.

(சுசரிதை) வசனம். ஆ, ஆ, கெட்டதுகாரியம், இவளுக்குத்தாபம் மேன்மேலுமதிகறித்துவிட்டது.

ஆகையாலிப்பொழுது சந்தனத்தளிர்களின் ரஸங்களினால் இவளுடம்பை நனைக்கின்றேன், (என்று கரங்களினால் சந்தனத்தளிர்களைக் கசக்குகின்றனள்.

உ-வது அங்கம்.

(இராவணன்) விருத்தம்.

வன்னமாரேக்கி தேகமார்த் தவங்கவர்ந்த தென் று
தன்னியல் மருவிடாத சந்தனத்தளிர் கடம் மை
கன்னலிற் கனிந்தநின்சொற் கவர்சரு சேடிமா து
துன்னுகை யேந்திரத்தாற் றன்பஞ்செய்கின்ற டிண்ணம்.

(சுசரிதை) கசக்கிப்பிழிந்து) வசனம். அடி சகி, இந்தச் சந்தனரஸத்தால் நனைத்ததில், ஏதேனும் சுகம்பிறந்ததோ, சற்றேனுந் தெளிவுக்கிடமுண்டோ, தையலர்க்கரசியே.

(சீதை.) சற்று தெளிந்தவளாய்

சிங்காரக்கவி.

உற்றவென்றோழியர்ச், செத்தனைபோ னுதான்
மெத்தமெத்தச்சிர, மத்தைவிளைப்பிறே.

(சுசரிதை) சிங்காரக்கவி.

தாளத்தனத்தினய், நாளைத்தினத்துன்ட
னளன்றனைக்காண, வேளைவந்திட்டதே.

(அப்படியாய்க் கேட்கப்படுகின்றதன்றே.

(சாரணன்.) இவளுக்கு வல்லபன் யாவன்.

(இராவணன்.) புண்ணியஞ்செய்தவன் யாவனே, அவனே யாம்.

(சீதை) சிங்காரக்கவி.

இன்றுயிர்தங்கிட லன்றோஅடுத்தநாள்
நின்றென்கணளநா தன்றனைக்காண்கலாம்.

(இராவணன்) விருத்தம்.

எவனைநினைத்துமதனவாதைஇன்னவளெய்துகின்றளோ
அவன்மிகப்பெருந்தன்னிய னெனவரைவோமானலு ம்.
குவளைக்கண்ணிஇவளைமருவிக்கூடாததனு லே
சவலமில்லைத்தவமிலனவன்றனேயென்சொல்வே னே.

(சுசரிதை) வசனம். அடி யென்றோழியரசே, அங்ஙனஞ் செப்புதலைடைவன்று, சித்திரத்திலங்கும, நின்வல்லபனைப்பார்த்துக கொண்டின்றொருதினமுங் கழிப்பாயாக.

அப்பால். சித்திரசாமான்கள்கொண்ட, செங்கரத்துச்சிலவதி, பிரவேசிக்கின்றனள்,

(சீலவதி) விருத்தம்.

செய்வியர்த்திடவும் பெண்ணாசைவிரகநோய்கொண்டுகோ ம
னெய்கணை சகியே என்ன இறைச்சலிட்டழுவர்கொல் லோ
மெய்கணவாவாவென்று வெளிவிட்டுவிளம்புவார்கொ ல்
கையிலைமறைவுகளோர் காய்மறைவுகள்வேண்டா வோ.

(வசனம்.) நல்லாய நங்கைக்கரசே, ஈது சித்திரப்பலகை, இவை சித்திரசாமான்கள், என்று கொடுத்தனள்.

(சுசரிதை) வசனம் என்னாருயிர்த்தோழி நல்லாய், எப்படியாவது, சற்று சௌரியத்தை வகித்துக்கொண்டு, சித்திரமெழுதுவாயத்திரவிழியினாய்.

(சீதை.) ஆவலொடு, சித்திரப்பலகைமுதலிய சாமான்களை வாங்கிக் கொண்டு, சித்திரமெழுத ஆரம்பவித்தனள்.

சுசரிதை. சகி.

அடுக்குமொழி.

சித்திரப்பத்திரிக்க யித்தனை திகைப்பதேன்
வித்தாரமானகைச்ச மர்த்தெங்கேபோச்சுதடி.

(சீலவதி.) சகி. சுசரிதாய்.

அடுக்குமொழி.

அப்படியல்லவடி, முப்புவனத்திபனைச்
சொப்பனமொத்தலவோ, ஒப்பமாய்ப்பத்திரிப்பாள்.

(வசனம்.) மற்றொரு மகானுபாவன், இவளுக்குப் பிரத்தியக்ஷத்திற் காணப்படவில்லையன்றே, யாதொருமன்மதனால், சொற்பனத்திற்றானே காண்பிக்கப்பெற்றிருக்கின்றனள்.

(சாரணன்) மகராஜ், வசனம். மகாபாக்கியசாலியாக வர்த்திக்கின்றீர். அன்றியேல், திரிலோகாதிபனாய் மகானுபாவனாயிருக்கின்ற, ஒருவன், தாங்களன்றி திரிபுவனங்களிலும் மற்று யாவனிருக்கின்றான்.

(இராவணன்.) ஆம், ஆம், எனக்குங்குதூகலந்தான், மேற்கண்டறிவோம்.

(சீதை) வசனம். ஆ! மதனவாதை சகிக்கவசமா, அந்தோ, அந்தோ, பாவி வருத்துகின்றான், ஆ! அனங்கதேவா, அபலையாகிய, என்னிடத்தும், அடஞ்செலுத்தலாகுமா, யான் இம்மடலெழுதுமட்டும், வருத்தாதே, வருத்தாதே, மன்மதா,

ஜாவளி. தரு. பருல்னமாட்ட, சம ஒத்து, என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தானி காபி. ரூபதாளம்.

பல்லவி.

இதுவோஉன்னீதி என்மேற்சினமேனோமன்மதா. (இதுவோ)

அனுபல்லவி.

அதிபாவமுன்னைவந்து அடையலாகு மே
பதியில்லாததியிலென்மேற் பாணம்விடுத்தாயேனுமே. (இது)

சரணங்கள்.

கெஞ்சிக்கெஞ்சிநானயர்ந்துங் கிருபையில்லையே சமா
வஞ்சிநானென்செய்வேனோ வாதுசெய்தாற்றொல்லையே. (இதுவோ)

கொன்றிடவே, நீதுணிந்தாய், கொஞ்சங்கேளடா, பாவி
நன்றன்றுபெண், பழிபொல்லாது, நானேஉனக்காளடா. (இதுவோ)

சரிபலங்கொண்டாரிடத்திற், சார்வதேவீரம் துய்யா
திரமையில்லா, ஸ்திரீயென்மீது, தீங்கிழைத்தாலென்சாரம். (இதுவோ)

கொச்சகம்.

ஒகோ வம்மம்ம ஒருவாறென் சோபமெல்லாம்
போகாது போச்சுதந்தோ போனதுகாண் லச்சையுமே
காகா மத்சுரமே கணப்பொழுது வாட்டாதே
வாகா யென்றுதன் மடலெழுது வேளைமட்டே.

வெண்பா.

பெரிதாமெனது வெட்கப் பீடொழித்து விட்டேன்
அரிதாயுரத்தை அடைந்தேன்—சுரமே
விரும்பிக் கணமளித்த மேற்புண் ணியத்தை
நிரம்பெய்திடப் பெருவாய் நீ.

எனக்கொஞ்சம், வணங்கின்றனள்.

(இராவணன்) விருத்தம்.

ஓவியப்பலகை யுற்றிடுவரைக வொளிர்பெரு மிடந்தொறுமொழுங்காய்
மேவினவெனது விழிகளுக்கிலக்காய் விளங்குகின்றன அந்தவிதம்போல்

ஆவலுற்றிடுமென் செவிகளுக்கமுதா யன்பனை வரைகின்ற வெழிற்சே ர்
பாவைநல்லாளைக் கங்கணவரவம் பகர்ந்திடக்கேட்டனன் பரிந் தே.

(சீதை) வசனம். சகி, சுசரிதாய், கைவருந்தப் பிரயாசைப்பட்டும் இச்சித்திரத்தலைவனுலென்ன பிரயோஜனமென்றிலச்சிக்கின்றதென்மனம். என்று கண்ணீருகுத்தனள்.

(இராவணன்.) ஆ, ஆ, இவள் ரோதனஞ்செய்கின்றாளென்பது, இன்னம்

எங்ஙனமெனில்,

விருத்தம்.

கண்ணினிற் புலன்படாத காரிகை கண்மைசேர்ந் து
வண்ணங்க போலக் குங்குமத்தினிற் புரண்டுகெஞ்ச த்
துண்ணனிலைத் துழல்வண்டென்னத் துளிகள் சொட்டிடுதலாலே
திண்ணமாய் ரோதனந்தான் செய்கின்றாளிதென்னகா க்ஷி

(சுசரிதை.) சகி, சும்மாவிதனிக்கவேண்டுவதில்லை, நாயகனை வெகு சுலபமாய் அடையலாகும்.

(சீதை) தொடர்மொழி. கடுந்துயர்விடுத்துக், கண்களைத் துடைத்து, மனவினைகளைந்துக், கணவனைத்தொகுத்துக்கனிவுடன் திரும்ப, வரையலாயினாள்.

(சீதை) [illegible], வசனம். சுசரிதாய், நம துயிர்த்தலைவிக்கு, இப்படி நடைவிடத்தக்கண்டாய ஆசைகள் அளவில்லாமல் வளர்கின்றன.

எங்ஙனமெனில்,

கலிவிருத்தம்.

ஒளிர்க போலங்கள் புளக முற்றிட
உளமதின் மிக வுன்னி உன்னியே
தளிர்க்கர விரற் சஞ்ச லித்திட
களிகொண் டெழுதிக் கண்களி லொத்துறாள்.

(சுசரிதை) வசனம். எப்படி, சொற்பனத்திற்கண்டனளோ, அப்படியே, எழுதவேண்டுமென்றிவட்கபிப்பிராயம்.

(இராவணன்) வசனம். ஆ, என் மனமே, எனதற்குள் சஞ்சலத்தை அடைகின்றாய், மென்மேலுங்கண்டறிவோம், சற்று சலியாதிருப்பாயாக.

(சீதை.) எழுதியமட்டிற் சித்திரத்தைப்பார்த்து.

(தன்னுள்) வசனம்.

குவலயப்போன்ற நீலாங்கசமும், காதுவரை நீண்டகண்களும், கடைக்

கண்சிவப்புகளும், தீர்க்கப்புயங்களும், அடடா, அவனே இவனென்றுசொல்லும்படியாயெழுதப்பட்டிருக்கின்றது.

(அளவற்ற களிப்புடன்.) இங்கிப்பொழுது

சந்தவிருத்தம்.

மாணமார்கரத்திலொருகார்முகம்வளைக்கிநிசர்வாகிருபயத்திலணிசே ர்
தூணிகள்பொடித்திலதமார்பிலுமணைக்கினியசோதிகொடருப்பையபதஞற்
பேணணியெழிற்பெருமவுஞ்சியுமமைப்பன்முகபீடிபதுமத்துளளியோ ர்
சேணியில்முளைத்துமுளையாசதுமெனக்கவினவிசைகடிருத்திடுவஞெ ல்.

(என்று) திரும்பவும் எழுதுகின்றனள்.

(இராவணன்.) சித்திரத்தை, நோக்கி, பெருஞ்சுவாசத்துடன்.

(தன்னுள்) வசனம்.

ஆ! இது வேறாய்க்காண்கின்றதே, என்பாழ்த்தமனமே, நின்னதுகோறிக்கை வீணாய்முடிந்ததே.

அடடா,

விருத்தம்.

ஐந்துநாற் கரங்களில் வனனமொரு பத்தில்லை ய
சிந்துரக் கொம்பினங் கடிகமொரு மார்பனில்லை ன்
கொந்திள மெய்யன்பால குமரனிரண்டு மாய ன்
சுந்தரனிவனோ வேந்தாய்த் துலங்குகின்ற னென்சொல்வேன்.

(சீதை.) நன்குவரைந்து, சித்திரத்திலங்குகின்ற, நாயகனைக்குறித்து. அஞ்சலிசெய்துகொண்டு.

கட்டளைக்கலிப்பா.

நீல வண்ணனே வந்தனம் வந்தன ம்
நிர்மல முகச் சக்த்ரனே வந்தன ம்
சீலனே ஜக வீரனே வந்தன ம்
சித்திரக் கணவா கழல் வந்தன ம்.

இன்னமும், மதிமயங்கி, ஓ! பிராணகாந்தா, இப்போது.

கலிவிருத்தம்.

தென்றலாவிதுசிறரவாம தி
யன்றுகாண்செந்தணற்கணமாகும் வே

ளின்றுகொல்லுறானென்னிதையேச்சுவரா
பொன்றிடாதுசுகத்திற்பொருத்துவாய்.

சிங்காரப்பத்தியம்.

சாமளவண்ணனே, தாமரைக்கண்ணனே
சைலபுயதிண்ணனே, தயாளமன்னா
கோமளவுல்லாசனே குருமந்தகாசனே
கோதண்டப்ரகாசனே குணக்கடலே
தேமற்கொங்கைசாலவே திரண்டுகடம்போலவே
தினவுதின்பதாலே வேள்செய்தனாயம்
மெனாளார்க்கதி எந்தனுக்குவிண்மதி
யென்னசணலாவதின் இருமாப்பென்ன.

சாமிதயவுசெய்வாயெனைத்தழுவயிதுவே
சமயமிதுதவறினாற்சகியேன்கண்டாய்
நீமனத்தன்மதன்செய்கைதெரிவாய்
சித்திரக்கணவனேசேரவாராய்.

இன்னமும்,

தரு. இராகம் சாவேரி. ஆதிதாளம்.

பல்லவி.

தருணமப்போதெனைத் தழுவாவிடிலுயிர்தரியாதடா சாமி

அநுபல்லவி.

கருணாகராவெழிற் சரணாரவிந்தனே
அருணதராவெனக் கருணையகாவந்தனம். (தருணம்)

சரணங்கள்.

பங்கஜநயனமுந் துங்ககோதண்ட
பாணியுமம்பறாத் தூணியுமூதண்ட
மெங்கும்புகழப்பலந் தங்குபுயமுங்கண்ட
என்மனமுருகுதே தன்மமிலையோத்தண்ட. (தருணம்)

சித்தசன்கரும்பைவளைத்துக் கணைபூட்டுறான்
சீறிச்சினந்துமிக மீறியெனைவாட்டுறான்
நித்தியமென்சொப்பனத்திலுனைக்காட்டுறான்
நீயும்பராமுகமாயெனை யோட்டுறாய். (தருணம்)

அன்றிற்கூவவும்வீசு தென்றல்கொடியபோல் லா
அரவமாய்ச்சீறவும் அருகாலோலமுங்கெல் ல
பொன்ருக்கடலொலியும் கொன்றிடாமற்கொல் ல
புண்யனேதவிக்கிறேன் கண்யனேமிகால் ல. தருணம்

(வசனம்.) ஆ, பிராணேசா, இன்னம் மனமிரங்கவில்லையா, யானென் செய்வேன்.

இப்போது,

விருத்தம்.

மலையமாருதனுமனற்பொறித்திரளைவாரியேவருடித்தாற்போலு ம்
நலமுறுந்தவளப்பனிக்கதிர்கனலானனிமென்மேனனைச்சிக் ற்போலு ம்
பலமதாந்துயரைத்தருகின்றார்மதனப்பாவியின்கொடுமையென்பகர்வே ன்
வலவனீயாதலாலெனையிப்போமருவியாடள்ளிடல்வம் பே

(இன்னமும்,) மானதா, யென்று அரைவார்த்தையில்

(தன்னுள்) வசனம்.

ஆ, மதிமோசம்போயினேன், சித்திரத்திலிலங்குகின்ற நாயகனை வாஸ்தவநாயகனென நினைத்துக்கொண்டு, மோகங்கொண்ட என்றால் மதிகெட்டு வாய்விட்டுப் புலம்பலாயிற்று.

[என்று வெட்கித்திருந்தனள்.]

(சீலவதி.) (சிரித்துக்கொண்டு,) அடி சகி, நின்வார்த்தை, தறைபற்றதுபோலும்,

(சீதை.) இலச்சையுடன்,) சகி, ஒரு குறையுமில்லை. எனது நாயகனை சித்திரத்திற் பூர்ன்னமாய் யெழுதியாய்விட்டது.

(சகிகள்.) (சித்திரத்தைப்பார்த்து,) ஒருவருக்கொருவர், சகி, நமதுயிர்த்தலைவிக்கவ்வளவாசைவந்ததுசிதந்தான், ஏன், இந்தச்சித்திரத்திலங்குகிறது, இந்தச்சுந்தரசொரூபத்தினிடமாய், எவ்வளவெவ்வளவோ, ஆசையுண்டாவதற்காக்ஷேபணை யென்னயிருக்கின்றது.

(சாரணன்.) பார்த்து, அதிவியப்புடன்,

கட்டளைக்கலித்துறை.

செந்தாமரை விழியானனம் நீண்டதிருக் கரமு ம்
சந்தார் குவலயதோள்களும் ஆர்ந்ததனி யுரமு ம்
கந்தாது மேவியசாம்ப் ராச்சியக்குறி காடமி ரு
பைந்தாரணி பதன்யாரிவன் போலெங்கும்பார்த்திலனே.

(இராவணன்.) தன்னுள்,

விருத்தம்.

இவனுடையங்கம் நீலவெழிற் குவலயமே யொக்கு ம்
இவன்கருதலர் கண்கட்கு மேற்றவா னந்தனுக்கு ம்
இவன்சுபாவமு முதாரம் யாவர்க்கும் புகழ்சிலாக்கியு ன்
இவன்மகானெனச் சொல்கின்ற இவனுடைக் கீர்த்தியந்த ரே.

தரு. இராகம் தனுசு. ஆதிதாளம்.

பல்லவி.

இந்தசுந்தரத்தைப்போலெங்குங் காணேனே. (இந்த)

அநுபல்லவி.

எந்தவுலகிலு மிசைந்தெழிற்றாங்கும்
சந்ததமுமுகந்த மடலிலோங்கும். (இந்த)

சரணங்கள்.

ஏற்குமதிமுகமும் வேஷாக்குறைபூதிப்பெட்டிமூக்கு ம் நுதலும்வாயும்
கேட்குமிருகாதும் பார்க்குங்கணகளினருணேக்கு ம் திரள்புயமும்
தீர்க்கபாகுகளும் தாக்குகார்முகமுமார்க்கு ம் தழுவவின்பஞ்
சேர்க்குமணிமார்பும் பூக்குமுந்திப்பதமும்பார்க்கு ள் மதனரூபம்
வாய்க்குமானிடவடிவாய்க் குணபூடணமாய்
பார்க்கப்பார்க்கப் பிரியமாக்குமுகிலவணமாம். (இந்த)

எட்டுத்திசைக்கப்பாலு மெட்டிடுமிவன்கோதண்ட ம் வளைக்குமுன்னம்
தட்டிநெறுறக்கியன்னிக் கொட்டுபொடியாமுதண்ட ம் அஞ்சலெனவே
இஷ்டமாய்நம்புவர் கஷ்டங்களைசண்டப்ரசண்டம் செய்தான்வான்போலும்
திட்டமாய்க்காண்கின்றான் துட்டமதமாதங்கச்சுண்டம் எனுந்துடையான்
வெட்டவாருலகிற் கட்டழகியரெல்லாம்
கிட்டிவந்து முத்தமிட்டிடத்துணிவர்கல்ல. (இந்த)

வையகந்தனிலிப்பையன் வாழ்வதெந்தஊ ரோ எந்தநாடோ
தெய்யவாயன்காயாம்பு மெய்யனிவனுக்கென்னபே ரோ இவனன்னையும்
அய்யனுமென்னதவஞ் செய்திவனைப்பெற்றா ரோ அவர்தான்யாரோ
துய்யனிவனைக்கண்டாற் றெய்வமெனத்தொழுவர்பாரோர் அதிற்கொஞ்
ஐயமில்லையெதிர் வெய்திவெய்தியொரு [சமும்
செய்திபையவறை செய்யுமாதுபெரு.

௨-வது அங்கம்.

(வெளிப்படை.) அடா வித்திச்சிகுவா, இந்தச்சித்திரத்தில் இலங்குகின்றவனைப்பார்த்தனையா.

(வித்திச்சிகுவன்.) ஆம், ஆம், நன்றாய்ப்பார்த்தனன். எப்படியென்றால்,

சந்தவிருத்தம்.

காமருவிழிக்கடையுலாவரிகண்மெச்சியமகானெனவுரைத்ததுகளா ல்
தாமநிரைபொற்புரவிபூதியுமெழிற்பிரமசாரியைநிசழ்த்தினதுவா ல்
வாமமுளையுற்றுவருவீசைநிலையற்புசவுவாவெனவுபூத்தியதுவா ல்
பூமலரையொத்தகரமேவிவளைவுற்றசிலைபூவலனெனப்புகலுமா ல்.

(சீதை.) சகிகாள், இதைப் பாருங்கள் என, சித்திரத்தைக்காண்பித்தனள்.

(பொது) விருத்தம்.

வாங்கினார் மடலைத்தங்கண் மலர்க்கண்ணி லொத்திப்போற் றி
தாங்கினார் மனைடங்காச் சந்தோடக்கடலி லாழ்ந்தா ர்
வீங்கினா ருடலஞ்சற்றே வெட்கினா ருளமருண் டா ர்
பாங்கிய ரிவண்முன்செய்த பாக்யமே பாக்யமென்றா ர்.

(சுச்ரிதை.) சிரித்துக்கொண்டு, அடி தோழியரசே.

விருத்தம்.

தடித்தினை நிகர்த்தமேனி தங்கத்தை யுருக்கிவார்த் த
குடத்தினை நிகர்த்தகொங்கைக் கோவைவாய் மானேயிந்த ப்
படத்தினை யான்பார்த்தெல்லை பரிந்துன்னையகன் பார்த்திட்டா ல்
இடத்தகும் நின்கரத்தி லிரத்தினக் கடகந்தா னே.

(இராவணன்.) ஸபாஸ், உள்ள துரைத்தனள் சுசரிதை.
(ஏனெனில்,)

விருத்தம்.

வன்னங்கள் மாறிடாமல் வரைபொன்றோ டொன்றுறும ல்
மன்னிய அவையவங்கண் மனக்குறி வெளியிற்றோன் ற
துன்னு சொரூபம்வாய்ந்து சைதன்யஞ் சொலிக்குவண்ண ம்
நன்னய மடல்வரைந்த நங்கையைப் புகழும்நா டே.

(சீலவதி) விருத்தம்.

சைத்திரங் கண்டோனே கன்னி சுசரிதாயிந் த
சத்திர விழியினாட்கு இரக்ஷையாய மலர்கா த

புத்திரர் கொடுத்துப்போன பொற்கடகங் கடம் ...மை
உத்தமி மணிக்கரங்கட் குகந்துநீ முதலிலிட்டா ...ய்.

(வசனம்.) இராக்கதாந்தங்கரணம், அதாவது அரக்கர்தம் கட்புலனை டைத்தல், என்ற மகத்துவமுள்ள இரத்தினமமைந்த, கடகங்களை, ஜானகியின்ரக்ஷணையின்பொருட்டு, கரங்களில்ப்பூட்டும்படி, விசுவாமித்திரமகா முனிவரால், நின்னையிற்கொடுத்ததான, கடகங்களை, முதல் முதலில், இவன்கைகட்குப்பூட்டினதெல்லாம், இவளது, கரகௌசலத்தைக்கருதித்தானே.

(இராவண சாரணர்.) ஒருவருக்கொருவர் ஏற இறங்கவிழித்தனர்.

(வித்திச்சிருவன்) கேட்கவேண்டுவன கேட்டாய்விட்டது, அறியவேண்டுவன அறிந்தாய்விட்டது.

கலிவிருத்தம்.

கண்ணிற் புலன்படாக் கன்னிவை தேகிதா ...ன்
வண்ண விம்மடல் வாழ்வது விராமன்ரு ...ன்
நுண்ணிடை யிருவர் கணுவல் சகிகடா ...ன்
அண்ணல் யாம் நன்கறிந்தன மல்ல ...வா.

(இராவணன்) வசனம். ஆ, ஆ, இவன்றனே, வைதேகிக்கி யென்மீதாசை வராமல் அவளது ஆசையை அடியோடே அபகரித்துக்கொண்ட இராமனென்ற கெட்டபயலிவன்றனே.

(கோபத்துடன்) சித்திரத்தைப் பார்த்துக்கொண்டு) அடா பாவி.

விருத்தம்.

அடடாரகுகுலப்பதடியானேய்சிதையாசைகொளயோக்கியமாந்தேகந்தன்னை உடையவனுனே மெனக்கொள்கருவந்தன்னையொழித்திடு நீ யொழித்திடு நீ உன்னைமாய்கைத், திடமுடையமாரீசன் றன்னுற்கொன்றுதின்றுவிடயே விலிட்டேனவனே தீய்ப்பான், கொடியனவன்கொன்றிடத்தக்கவனேவென்னகெனுசமுஞ்சந்தேகமனங்கொள்ளவேண்டாம்.

(சாரணன்) வசனம். மகராஜ அந்தவிசுவாமித்திரனது, வினயகபடம், என்னென்றுசொல்ல, இவளுடைய இரக்ஷணையின்பொருட்டு, அரக்கர்கட்புலனடைத்தலென்ற, இரத்தினமழித்தியதான, கங்கணங்களைப்பூட்டினதால் இவளைக்காண்கின்ற மாத்திரத்தில், தாங்கள் அபகரித்துக்கொள்வீர்களென்றவனால், தீர்மானயோசனை செய்யப்பட்டிருக்கின்றதன்றே.

(வித்திச்சிருவன்.) ஆம், ஆம், மகாகபடியன்றே, அந்த க்ஷத்திரியப்பாப்பான்.

(இராவணன்.) (ஆகாயத்தில் லக்ஷியத்தை வைத்துக்கொண்டு) கோபச் சிரிப்புடன்) வசனம். அடே, அடே, குசிககுலப்பதிதப்பயலே, யான் நினைக்கின்றேன். நீ என்னிடம் இவ்வித வஞ்சகம்புரிந்து வருவதால், நினக்கு முடிவுகாலம் நெருங்கிற்றென்றே பயலே, விசுவாமித்திரா.

விருத்தம்.

குதிரையின்வால்தன்குண்டியளவலாதுகுவலயமெலாம்வீசக்கூடுமோகாண் பதிற்சுவர்க்கமமைப்பாய்மாரீசனைப்போற்பரிபவஞ்செய்தற்கு சமத்துன்பாலுண்டோ, மதிமுகத்தரம்பைதனைமயக்கவல்லோய்வன்சமரிற்றாடகையைவதைக்கவுண்டோ, கதியிற்றிரிசங்குவைக்காப்பாய்நான்மாய்க்கக்கருதியராமனைக்காக்கத்திரமுமுண்டோ.

ஆகையால் அடே, அடே, விசுவாமித்திரா, நீ மாளுவதற்காக, அடிக்கடி என்னிடம் சேஷ்டிக்கின்றாய்.

(சாரணன்) வசனம். ஆ, ஆ, மகராஜ் எதிப்படிக்குத்திரவாகின்றது மாளும்பொருட்டு வந்து சேஷ்டிக்கின்றானென்று, வழுத்தல் வேண்டாம் அவன் மாண்டவன்றானே.

(இராவணன்.) உற்சாகத்துடன்) அதுநிற்க, ஜானகியென்னுந்தையலர்க்கரசைப் பார்ப்பதற்கு, தந்திரம் யாதெனச் சிந்திக்கல்வேண்டும்.

(சாரணன்.) அதற்கோருபாயம் ஆலோசித்திருக்கின்றனன்.

(இராவணன்.) உற்சாகத்துடன்) அஃதெப்படி.

(சாரணன்.) இன்னின்னபடியெனக், கன்னத்தியம்பினன்.

(இராவணன்.) சிரித்துக்கொண்டு) சாரணா, நின்னால் நன்களப்பிடலாயிற்று.

விருத்தம்.

காசினிபுகழுயோத்திக்கடிநகர்வளர்வோனா   ன
பூசுரமுனிபோற்போகிபொற்கடகங்கடம்   மை
யாசினிப்பேனிவன்பாலென்றாயிதுசரிநீயுட்கொண்   ட
யோசனைப்படியேசெய்வாய்சாரணாவுகந்திப்போ   தே.

(சாரணன்) நல்லதப்படியே செய்கின்றேன்)
என்று முனிவேடத்தோடு நடக்கின்றனன்.

(முனி) விருத்தம்.

உய்யுமன் விழலிராதோ வைதனிலனு மிரா   தோ
வையிரு கால்களேனுக் கண்களு மிருண்டதிப்   போ

வெய்யிலும் வாட்டுதர்தோ விப்பிர விருத்தன்னா னே
அய்யோகோ அதிதூரந் தயோத்தியி லிருந்துவந்தே ன்.

(வசனம்) ஆ ஆ இங்ஙனம் யாவரிருக்கின்றூர்களோ, யாளூ, அயோத்தியிலிருந்து வந்த அகதிப்பிராமணன், வழிச்சிரமத்தினுல் மிகவும் ஆயாசப்படுகின்றேன். இங்குள்ளயாவரேனும், ஓர் குடையினீழலும், ஓர் விசிறியின் காற்றும் எனக்குகந்தளித்து என் சிரமத்தை யுபசாந்திசெய்வாருயின் யானுச் சீவிப்பேன்.

என மூர்ச்சைகெட்டவிதமாய் நடிப்பிக்கின்றனன்.

(வித்திச்சிருவன்) மகராஜ் நமது சாரணனுடைய கவுசலத்தைக்காண ல்வேண்டும்.

விருத்தம்.

விரிசடைக் கட்டும்மிக்க வேர்வையா னுதல்விபூதி த்
திரிபுண்டர நனைந்து திகழ்வது மான்றேலும்வே ய்
ஒருதண்டங் கரங்கொண்டேன்றி ஒருதுயர் ஆகுலஞ்சே ர்
இருடிபோல் விளங்குகின்றன் இறைவநம் சாரன்று னே.

(சீதை.) பரபரப்புடன்.

விருத்தம்.

ஏதடிசகி யேயிங்கே எழிலயோத் தியிலிருந் து
வேதிய ரொருவர்வந்த விதமென்னே யென்பிரா ண
நாதனி ராமன்க்ஷேம நற்சொல்லு மற்றுமுள் ள
சேதியும றிவோம்நீபோய்ச் சீக்கிர மழைத்துவாரா ய்

(அடி சகி அயோத்தி நகர்யென்று சொல்வதால் சீக்கிரம்போயுபசரிப்பாயாக)

(சுசரிதை.) நல்லதென்று கிட்டிநடந்து) ஓ, வேதவேதியரே ஆயாசந் தணிவீராக,

என்று தாமரையிலையால் விசிருகின்றனன்.

(முனி.) கண்களை விழிக்கமாட்டாது விழித்து

காரணமில்லாத வாச்சலியவதியானதின்ஞல் யான்களைப்புத்தீர்ந்து கபி கத்தனை ஜீவன்பிடித்தனன்.

(சுசரிதை.) தன்னுள்.

சிங்காரக்கவி.

மைய்யவனத்திலென், செய்வதுயர்த்திடில்,
தெய்வபலத்தினுல், அய்யமிலைத்தனக்,

வெளிப்படை.

சிங்காரக்கவி.

விப்பிரவரனே, இப்பொழுதுமது,

கட்புளவரவைச், செப்பிடுவீரே.

(வசனம்.) நீவிர் யாரையா, எங்கணமிருந்து வருகின்றீர்.

(முனி.) ஓ, பெண்ணரசே, அயோத்தியாபுரியில் தசரதசக்கிரவர்த்தியின், முதற்புதல்வர் கேள்வியுண்டோ.

(சீதை) பரபரப்புடன் ஆம், அவருக்கென்ன,ஏதேனுமாபத்துண்டோ.

(இராவணன்.) அருவையுடன்.

விருத்தம்.

என்னடிபரபரப்போ டேங்குறாய் அப்பன்காணி ப்
பொன்னெலாம் புதைத்துவைத்த பொருளெலா மிழந்தாயோ டி
துன்னுமா ரீசனாலே துட்ட தாடகையினா லே
சின்னமானிடன்செத்தான் விசேடம் வேறில்லைமா தோ.

(சுசரிதை.) சேதியைச்சொல்வீர் வேதவேதியரே.

(முனி) அடுக்குமொழி.

பாவையர்க்கரசியென், னவநள்கின்றதே,

சாவனோவென்செய்வேன், தாவமுண்டாகுதே,

(இராவணன்) சிரித்துக்கொண்டு,

அடுக்குமொழி.

படிக்குமோம்மரிதனே, எடுத்துரைக்கின்றனே

வெடித்திடக்காணனுன் துடித்திடுங்கொடியாா,

(சீதை) வேகத்துடன்.

சிங்காரக்கவி.

விவரிதஞ்சொல்விடக், கவலைகொண்டவரென,

இவர்முகஞ்சொல்லுதிவ் வவதிக்கென்செய்குவேன்.

(என்று விதனத்தையடைகின்றனள்.

என்னமாயினிச்சகிப்பேன் என்றவர்ணமெட்டு.

இராகம் காம்போதி. தாளம் ரூபகம்.

பல்லவி.

எப்படிச்சகிப்பேனடி நானினிமேல் (எப்படிச்சகிப்)

நானினிமேல்,ரகுராமனைக், காண்பேனோ (எப்படிச்சகிப்)

அனுபல்லவி.

சொற்பனத்தினிற்கண்ட சுமுகனிருந்தாலல்லோ
எப்போதுங்காண்பேனடி, என்னமாயமோ
என்னென்ன, மாயமோ, பாவையே, நான். (எப்படிச்சகிப்)

சரணங்கள்.

வந்தமறைக்கிழவர் தந்தஒர்மொழிக்குமேல்
அந்தமட்டிற்கண்சுழன்றார், மெத்தஉழன்றார்
உழன்றார், விழுந்தார், தளர்ந்தார். (எப்படிச்சகிப்)

ஆசைநாயகர்க்கென்ன மோசமோதெரிகிலேன்
பேசுமிதிற்சந்தேகமே, அய்யய்யோபாவமே பேசுமிதிற்
அய்யய்யோ, பாவமே, நானென்ன, செய்குவேன். (எப்படிச்சகிப்)

(சிலவதி) சகி சுசரிதாய்,

அடுக்குமொழி.

உதகங்கொணர்ந்திவர்க், கிதமாய்கொடுத்தருள்
அதன்மேலுண்டானசங், கதியாவுமறியகிலாம்.

(சுசரிதை பொது) தாமரைத்தொன்னையிற் சலிலமேந்தி யம்மாமறையவர்க்கு வரிசையாயீந்தனள்.

(முனி) ஆ. மடவார்கொடுத்தாலருந்தேனடி.

(சீதை) (கண்ணீரப்பெருக்கோடு) வசனம். ஹ, கெட்டுதடி காரியம். இந்தவேதியர், ஜலபானத்தில் விமுகராய் மிகவியாகுலசிலராய் அதிசோபத்தை, அடைவதால், எனதுவல்லபனுக்கு ஜீவனிருப்பது துர்லபமென்றே நிச்சியமாய் நினைக்கின்றேன், ஹ, ஹ, கஷ்டம், கஷ்டம்.

இராகம் நாதநாமக்கிரியை. திரிபுடைதாளம்.

பல்லவி.

என்னவிபரீதமோ வதோவறிகிலேனே.

அனுபல்லவி.

என்னதிர்ஷ்டமோ ஒராறென்னப்பெருகின்றதே. (என்)

சரணங்கள்.

அந்தத்தசரதற்கு மைந்தனென்றதன்மே லே
அந்தணர்சொல்லாமலே சிந்தைவருந்தலா லே. (என்ன)

சலமுமருந்தேனென்றார் தன்னுவநண்டதென்று ர்
தலமிதிலேவிழுந்தார் தயங்கிமிகத்தளர்ந்தா ர். (என்ன)

வினைப்போகமெப்படியோஸாமி, மேவவருவா ரோ
வினைப்பரதேசியாய் யேங்கவேவிடுவா ரோ. (என்ன)

(முனி) தன்னுன்) வசனம். அது அவர்மட்டிலுமன்று, அந்தக்கோசிகனுக்கும் அவன் அபிமானிக்கிற சர்வஜனங்களுக்குமே ஜீவனிருக்கிறவிஷயம் சந்தேகந்தான்.

(வெளிப்படை.)

அடுக்குமொழி.

விரதமுண்டம்மணி, பரதவித்திடுவேதேன்
திரியர்களனிக்கும்நீர் சரதமிதருந்திடேன்.

(சுசரிதை) அடுக்குமொழி.

ஈதென்னவையரோ சாதனைகள்செய்கிறீர்
போதுமிதுபோதுமேல் ஓதுமிப்போதினில்.

(சிதை.) அடி சகி, இப்பொழுது,

கலிவிருத்தம்.

இந்தனக் குழிச்செந் தழலெய் து மோ
சந்தனக் குளிரச் சலிலத் தாழு மோ
அந்தரத்தில் நிற்கின்ற தென்னுர் மன ம்
அந்தணர் மொழி தந்நிடன் னேர யே.

(அடி சுசரிதாய்.) என்செய்வேனடி.

இராகம் ஆனந்தபைரவி.

மாதே சந்திரமதியே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

என்னசொல்வாரோ அறியேன், சகியேயிவர்
எதுசொல்வாரோ அறியேன்.

அநுபல்லவி.

கன்னற்சிலையார்செய் யின்னற்றவிர்த்துசுகந்
துன்னக்கலந்தணைய மன்னனெப்போதுவரு

வாரோ, இவர்தானறிவாரோ, அறிந்தாலுஞ்சொல்வாரோ, சொல்லுமவிருப்பாரோ, மயன்குருரோ. 1 (என்ன)

சரணங்கள்.

வந்தமறைக்கிழவ ஞர் தயாரதின்
மைந்தனென்றமட்டும்விளம்பிஞா ர்
அந்தமொழிக்குமேலு கந்தபடிசொல்லா த
இந்தவிதத்தாற்பெருஞ் சந்தேகம்ராமர்க்கென் ன
தத்தோ, மூடிவானவிபத்தோ ...இவர் சொல்லெத்தோ, வத்தில் மெ
ய்யிளேத்தோ, பசப்புறார்மேல். (என்ன)

நற்சொலமுதம்வார்ப்பரோ, என்னிதயத்தி ல்
துற்சொல்விடத்தைச் சேர்ப்ப ரோ
எச்செய்கையோயிவர் வாய்ச்சொல்லிலிருக்கு து
நிச்சியம்வராமற் றவிச்சுக்கொண்டிருக்கிறே ன்
மீதே, தெய்வசோதனேமீதே, கர்மவினைதப்பாதே, விப்பிரரிப், போதே ராக
வன்செய்தி. (என்ன)

முனி கலிவிருத்தம்.

என்னகஷ்டமிப்போதெனைப்பார்த்திடி ல்
அன்னை தந்தையரானபுதல்வரு ம்
முன்விழுந்துமுயன்றுகீழ்முட்டி யே
துன்னிங்கொடுந்துக்கத்துழல்வரா ல்.

(வித்திச்சிருவன்.) பரிஹாஸத்துடன்,
ஆ, அவர்கள்மட்டு மன்று, பினேயோவெனில்,

கலிவிருத்தம்.

விருத்தமானவிவ்வேடமெடுத்தலா ல்
பருத்ததிண்புயபாரகெம்பீரரா ம்
கருத்தமெய்யினர்இராக்கதர்யாவர்க்கு ம்
வருத்துமிக்கப்பெருந்துயர்வன்மை யே.

(சீதை.) ஆ, கஷ்டங் கஷ்டம் அடி சுசரிதாய்.

கலிவிருத்தம்.

எந்தனுயகன்செய்தியியம்பி டா
இந்தவாசகமேனுரைத்தார டி
மைந்துகொாந்துவருந்திகேண்டு ஞ்
சிந்தையேற்றிதுசெப்பிடியென்பய ன்.

(சிலவதி.) சகி, சுசரிதாய்,

கலிவிருத்தம்.

சொன்னவார்த்தைகுறையுஞ்சொலாதிவர்
மின்னிணைச்சகிவேதைபொருந்திடத்
துன்னலாலிவர்துட்டநிசாசரன்
என்னவேநினைக்கின்றதென்சிந்தையே.

(முனி.) பயத்துடன்) தன்னுள்,
ஓ, இவளென்னைத்தெரிந்துகொள்வாளோ.
(சற்று நிதானித்து.) ஏதேது இது ஒருக்காலும் நடக்கத்தக்கதில்லை.

(வெளிப்படை.)

கலிவிருத்தம்.

கந்தரக் குழற் கன்னி நல்லார்களோ
இந்த நானவ்வி ராஜ குமாரனும்
சுந்த ராங்க உத்துங்க விராகவர்க்
கந்தரங்கசினேகிதனுமால்.

(இராவணன்) கலீரெனநகைத்து) அதிற்சந்தேகமா.
மூதன் முதலில் அவனைக்கொல்லும்படி பிரவிர்த்திக்கின்றவன். இஷ்டனென்பதற்காக்ஷேபனையென்ன.
(சீதை.) அய்யோ! எனக்கிதெல்லாம் ஆசுவாஸஞ்செய்யுமா.
சுசரிதை,

சிங்காரக்கவி.

தொந்திரவாகுது, சுந்தரிநோகுறாள்.
அந்தணவரரே, வந்ததுபுகல்வீர்.

(முனி) வசனம். எல்லாம் உரைக்கின்றேன், நீவிர், தசகந்தரன் றன் பக்கத்தைச்சார்ந்தவர்களல்லறேல், யாவும்மூத்தலாகும்.
(சீதை) தன்னுள்) இவரிப்படியுரைத்தலால்,

(அடுக்குவசனம்).

மாயமெண்ணுவ தபாயமிவரெனது
நாயகன்றன்னருமை நேயரென்பதுநிசமே.

(சிலவதி) சுசரிதாய்,

அடுக்குமொழி.

அகமதிலேயமாய், மிகவைய்யர்நம்மிடம்,
புகல்தசக்ரீவனார், சகியதைச்சாற்றுவாய்.

(இராவணன்) கோபத்துடன்,

கலிவிருத்தம்.

துட்டமுண்டைசுடுசுடுசீச்சி நீ
மட்டிலாதபுயபலவன்மையா ல்
அட்டதிக்கும்புவனங்களுஞ்சயி த்
திட்டவீரன்றனைத்தெரியாய்கொ லோ.

(முனி) விருத்தம்.

திசமுமரன்கிரியைமெடுத்தெரிந்தானெட்டுத்திசையும்விசயஞ்செய்தான் சீர்பெற்றோங்கும், புகழுமரிஅயன்முதல்வராலென்றுளும்பொருந்திவந் திறைஞ்சிமிகப்போற்றப்பெற்றான், மிகவரியின்றிகிரிபட்டபுண்டமும் பாய்விளங்குகின்றசக்தரமூலத்தான்நான்கு, முகவனுக்குமுப்பேரன்சகப்ர சித்தன்மொய்குழலிதசக்ரீவன்கேட்டிலீரோ.

(சீதை.) கோபத்துடன்.

கலிவிருத்தம்.

குலைசெய் கூற்றினுக் கொத்த கொடிய னை
உலகெலாந் துணுக்குறத் திராக்கத னை
நிலைகலங்கு தன்னிசி சரன் கீர்த்திக ள்
பலவுறைப் பதிற்பய னென்றுங் கொ லோ.

(இராவணன்.) முகபங்கத்துடன்.
வித்திச்சிருவா, கேட்கவேண்டுவது கேட்டோம்.

(வித்திச்சிருவன்) விருத்தம்.

அஞ்சுவா ளரக்க னென்ன ஆசையாற் றுனேயி த
வஞ்சியை வசஞ்செய்தற்கு மற்றுயோசனை வாயாம ல்
மஞ்சுநேர் வண்ணராமன் வடிவமே கொள்ளவேண்டு ம்
மிஞ்சுநல் லளப்பிதென்ன விளம்பலாச்சுது கோவேந் தே.

(இராவணன்.) வித்திச்சிருவா, இது இவ்விராவணனுக்கு, யோக்கிய மில்லை.

சற்று கவனி.

விருத்தம்.

முதன்முதலிற்கவனியிஃதொழுங்கோவென்னமுறைமைகோவோவனு ராகமில்லாடன்னை, வதுவைசெயல்வசங்கொளற்குமணிரூபம்வகிப்பதி லென்மகிமைசிறுவயதுதோன்றி, யிதுவரையும்டப்பமைத்தஜனகிளைக்கு

தியற்றிவஞ்சித்திடுவதுவுமேற்குமோகாண், சதிர்பெருமென்மானபுகழ் விடுத்துக்காமந்தனையடைதல்தகுதிகொலோசாற்றலென்னே.

(விசுவாமித்திரன்.) ஆ, இராஜாதி ராஜனே இதுவென்கொல், அகாரணமாய்க் கோழைத்தனம் வகிக்கலாகுமோ.

விருத்தம்.

வஞ்சகஞ் சூதுசெய்தல் மாயாஜாலங்கள் செய்தல்
கஞ்செனவமர்விளைத்தல் நங்குலவழக்கந்தானே
வஞ்சியை நினைத்தபாங்காய் வசஞ்செய்வோமிதற்காய்சுமா
துஞ்சுவதென்னை சாமிதுயரொழிதுரைச்சிங்கேறே.

(சுசரிதை.) ஆ, சகி சீலவதி.

விருத்தம்.

தனதந்தரங்க நண்பன் றசக்ரீவன் மிசச்சிலாக்யன்
கனவரிசைகளடைந்தோன் யென்னாகுஞ் சனகராஜன்
அனுதினம் புகல்வதன்றோ அறியாய்கொல் அறிவின்மிக்க
வனிதையென்சகியே சீலவதி யென்னமறந்திட்டாயா.

(இராவணன்.) ஆகையாற்றானே, சினேகத்தினால், என்னுலிதுவரையும் ஜானகி வஞ்சிக்கப்படாமலிருக்கின்றாள்.

(சீலவதி.) சரி, சரி.

விருத்தம்.

காசினிதனி லோர்பத்துக் கண்டனைக் கேள்வியண்டு
பூசுரவதிங்கேன் வீணாய்ப் புகல்வது நாங்களனி
சாசரவர்க்க மன்று ஜானகி யிவளிவட்குப்
பேசுநற்சகி கணங்கள் மனத்தய்யம் பிரித்திடவோ.

(முனி) (தன்னுள்) ஆச்சரியம், ஆச்சரியம், விசுவாமித்திரமுனியின் பிரதாபமே பிரதாபம்.

அடுக்குமொழி.

என்னவாச்சரியமிக் கன்னிஜானகியென
முன்னின்றிவள்பூமி தன்னைக்குறிக்கிறாள்.

(சுசரிதை.) சிக்தைதேற மொழிந்திடுமெய்யரோ.

(சீலவதி) விருத்தம்.

அய்யரோ ராமன்கெய்தி அரைச்சொல்லில் நிறுத்திவிட்டீர்
மெய்யதா யவன்றன் க்ஷேமம் விளம்புவீராகிலித்

வையகம் புகழ்வைதேகி மணிக்கடகங் களிவா ன்
கையினிற் பெறுவீரஸேதே கனகசம்மான மா யே.

(முனி) தன்னுள். எதற்குத்தான் இங்ஙனம் அதற்குத்தான் வந்தனம்.
(வெளிப்படை) வேறு, என்னதான் வின்னுவேன், கன்னிகாணிக்கனம்.

(சீதை) வேகத்துடன், ஆனல் இந்த நபேப்புவனுலங்காரரான என் வல்லவர் இந்தலோகத்தைக் கடந்தனர்கொல்.

ஹ ஹ கஷ்டங்கஷ்டம் இனியென்செய்வேன் தெய்வமே ஹ ஹ.

இராகம் பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

ஐயய்யோ தெய்வமே அனியாயத்தெய்வமே,

அனுபல்லவி.

வையகவலங்காரன், மடிந்தானே இன்னேரம்
உய்வேனே, நைய்வேனே, என், ஊழ்வினையை வைவேனே (ஐயய்)

சரணங்கள்.

கனவில்வந்துநின்றானைக், காண்போமென்றிருந்தேனே
நினைவெல்லாங், கனவல்லல், நிஜமோ, யென்னென்றுசொல்ல (ஐயய்)

இராமனென்றிவருருகி, யேங்குமப்போதேபகீர்
என்றதே, இதுஎறதே, எதிரில, தீங்காய்நின்றதே (ஐயய்)

பாவியென்பேர்சொலினல், பலிக்குங்கேடாதலினல்
சாவாது, பூமிது, தரிப்பேனே, கணப்போது (ஐயய்)

என்று அலறினளாய் மூர்ச்சைகெட்டுவிழுந்தனள்.

(சகிகள்) ஒருவரோடொருவர்) ஆ ஆ! இதென்னடி மாயம், என்று பரபரப்புடன்—

விருத்தம்.

இப்புவனலங்கார வெழில்விளக்கொளியேதே வி
கைப்பிடித்திதுகார்மட்டுங் கண்ணெனவிருந்தவெம்மை த்
துப்புறத்தள்ளிவிட்டுக் கொஞ்சநாட்கனவிற்றோன்றி த்
செப்பியபழக்கம்வைத்துச் சென்றாய்கொல் கொழுந்தன்பின்னே.

எனச்சோகமுற்றனர்.

(முனி) இதுவென்சொல், அகாரணமாக ஆதங்கத்தை அடைகின்றீர்கள். நன்றாய் எனது வார்த்தை முற்றிலுங்கேளுங்கள்.

(சகிகள்) வசனம். ஹா, எம், தோழியரசே, பிராமணவாக்கில் நல்வாக்குப்பிறக்கின்றது, சற்று களைப்புவிடுத்து, கண்விழித்து, இளைப்பாறி, காது கொடுத்துக்கேட்போம், கண்ணுட்டி, சற்றுதெளிவாயாக.

(சீதை) களைப்புத்தீர்ந்து—முனியைப்பார்க்கின்றனள்.

(முனி) கட்டளைக்கலித்துறை.

நின்றவமேயுருவாகிய கோசிகநின் மலனு ல்
இன்றதிசுந்தர மன்மதராம னெழுந்துனை யே
மன்றநடாத்தி மகிழ்ந்திடவே வருவானிதனி ற்
பொன்றுவதென்னை துயருழிமெல்லியற் பூங்கொடி யே.

(இராவணன்.) சிரித்துக்கொண்டு.

கலிவிருத்தம்.

சாரணமுனி வேடந்தரித்துமி ன்
னேரம்பொய்யுரை நிகழ்த்தனீதி யோ
சாரமாய்வித்திச்சிகுவன் றன்னை டு
வீரன்ராவணன் என்றிடல்வேண்டுமோ ல்.

(சகிகள்) அம்மம்ம, தெய்வாதீனந்தான், தெய்வாதீனந்தான்.

(சீதை) அத்தியானந்தபரிதையாய் பரபரப்புடனெழுந்து.

(பொது) கட்டளைக்கலித்துறை.

மின்னார்சிரோன்மணி மெல்லியற்சானகி வேகமதா ய்
தன்னாயகன்வரு நன்மொழிகேட்ட சந்தோஷத்தினா ல்
பொன்னார்மணிக் கடகங்கள்சம்மானமப் பொய்முனிவ ன்
இன்னுயிரைத்திடு சாரணன்கைகளி லீந்தன ளே

(இராவணன்) ஆச்சரியத்துடன்) அகோ, வகோ, ஈதென்ன அற்புதம்.

கட்டளைக்கலித்துறை.

இனமான மேகசம்பந்த மிலாதெழிலாய் நிலத்து க்
கனமான குங்குமக்காந்திக ளேந்துங்கதிர் மின்ன லோ
(காசிபர்.) எதிர்ப்பில் கொஞ்சதூரம் எட்டிநோக்கி ஓ, ஓ,

விருத்தம்.

அல்லெனுங்குழலினாள் வில்லெனும்நுதலினா ளல்லியைப்பழித்தசெவ் வாயாள், கல்லெனுந்தனத்தினாள் வல்லிமென்மருங்கினாள் காவலன்ஜனக ன்றன்பாவை, பல் பயக்கபாரத்திற் பாங்கியர்சூழ்ந்திடப் படுத்துழன்றெ ழுந்து மூட்டமாத்தும், பல்லமன்யதன் சொல்வாதையை வகித்துவாட்ட மாய் வருந்துகின்றனளோ.

(வசனம்.) அகோ, வகோ, இதுவென்கொல், அவளோ இதற்கனை யோஜனைதூரத்தில் மௌனிசிகாச்ரமத்தில் வசிக்கின்றனள், இவளோ அவ ட்கு ஸமானவதியான மற்றொருத்தியாக இருக்கல்வேண்டும். அடுத்தபக் கத்தில் நோக்கி,

(வசனம்.) பயத்துடன் அடட, அதோ அந்த பெரியவட்டப்பாறை யடியில் மறைவாய் காய்ந்த இந்தனங்களிற்பற்றிய அக்கினிசொலிக்கின்றது ஆகையால் நினைக்கின்றேன், விரகச்சுரத்திற்காற்றுதிக் குமரி வீழ்ந்திறப்பத ற்கு வளர்த்திருக்கின்ற விதம்போல் விளங்குகின்றதென்றே.

(அடட) இதெல்லாம் வாஸ்தவம்போலவே விளங்குகின்றதே.

இராகம் காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதமெல்லாம் மிகச்சந்தேகமே இதிலுண்மை
என்னளவுங்கொள்ளவில்லை யந்தராத்மா.

அனுபல்லவி.

கந்தரக்குழற்சன கன்றவத்தெழுந்தமாது
இந்துமுகச்சுந்தரியாம் பைந்தொடிசீதையிங்கேது. (இந்த)

சரணங்கள்.

அந்தகோசிகனுர்தம்வ னந்தனிலல்லவோயெழி ற்
பந்துமூலச்சானகியும் சகிமார்களு ம்
வந்திருக்கின்றார்களன்றி யிந்தவனத்தினிலே து
சந்ததமுமவளைப்போல் சுந்தரிவேறொருத்தி யோ. (இந்த)

காமவிகாரத்தினுலே ராமாராமாவென்றிவளு ம்
பூமகள்சானகியைப்போற் புலம்புகின்றா ள்
சோமனையுந்தென்றலையும் மாமயலாலேசிச்சும் மா
தேமல்மூலைதனிற்கண்ணீர் மாமழைபோலப்பொழிகின்றா ள். (இந்த)

காயந்தனையேகாம நோயிதற்குச்சகியாம ல்
தீயின்முகம்விழவென்றோ தீவளர்த் து
சேயமாய்ச்சொலிக்கின்றது பாயமாய்ராக்ஷதய க
மாயமோயிதென்னமோ அபாயமாயிருக்கின்ற தே. (இந்த)

(நல்லதிருக்கட்டும் வசனம்.) பிங்களனையாவது இராமனையாவது யான் காணுமட்டிலும் இங்ஙனம் இந்தக்கொம்புகளின் மறைவுகளிலிருந்துகொண்டு இதனைப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

(என)ப்பார்த்துக்கொண்டிருக்கின்றனன்.

(அப்பால்) பிங்களன் பிரவேசிக்கின்றனன்.

(பிங்களன்.) வேட்டையை நாடிச்சென்ற எனதிஷ்டன் இராமச்சந்திரனை இன்னமும் எங்கென்று தான்தேடுவேன்.

(என்று) நாலுபுறத்திலுஞ் சுற்றிச் சுற்றிநோக்கி.

(களியுடன்)விருத்தம்.

அடவியிற்சல்லியகரடிகள்புலிகள்அரிகள்வராகங்கண்முதலா ய்
திடவிலங்கினத்தினுடல்கள்வெஞ்சரத்தில்ச்சிதைபட்டிரத்தங்கள்சிறக்கு ம்
தடமதுபிடித்துவனந்தொருநடந்துசார்ந்திடத்தெய்வவசத்தா ல்
இடைதெரிகின்றான்காசிபனதனுல்இராமனிங்கிருப்பதுமியல் பே.

(என்) அங்ஙனமன்றோ!

விருத்தம்.

சொல்லினிற்பொருடென்சோலைத்துணரலர்வாசமாகம்
புல்லியவுயிர்வசந்தம்பொருமந்தமாருதங்கன்
எல்லைவிட்டகலாதேபோல்காசிபன்றனைவிட்டேகான்
வல்லவராமனிங்கேவளரிடம்நோக்குவேனல்.

அகோ அந்தக்காசிபனது பக்கத்தில் இலங்குகின்றனன்.
(எங்ஙனமெனில்,)

வெண்பா.

தோள்கொண்டதூணியொடுதுய்யமலர்க்கையிடத்தில்
வாளியொடும்வில்லினொடும்மாமணிபோல்—கேளறுகு
வண்ணதிருமேனிமால்ராமச்சந்திரனைக்
கண்ணுற்றேன்றேன்மாவின்கண்.

(என) பக்கத்திற்சென்றனன்.

(மாரீசன் பார்த்து தன்னுள்.) பிங்களவேடங்கொண்ட நம் கராளனிதோ வந்துவிட்டான்.

(வெளிப்படை.) ஓ, ஜயஞபிராம, ரகுராமா, இதோ, இதோ, பிங்களன்ருனிங்கெய்தினன்.

(இராமா நோக்கி ஸந்தோஷபரிதனுகி வசனம்.) என்னுயிர்ச்சக பிங்களா நின்சொல் எதார்த்தமாகப்பலித்தது, நீ என்பாற்புகன்றது மித்தையன்று, உண்மைச்சொல்லினுன்னை உறுதியாய்க்கொண்டனன்.

(பிங்களன் தன்னுள்) இதுவென்கொல், அகாரணமாயென்னை இவனிங்ஙனஞ்செப்புகின்றனன்.

இராகம் நாதநாமக்கிரியை. சாப்புத்தாளம்.

பல்லவி.

உன்சொல் நிஜமென்றுரைப்பானேன் நானிவன்.

அநுபல்லவி.

முன்சொன்னதென்ன கொஞ்சமுமறியேனே. (உன்)

சரணங்கள்.

காடெலாந்திரிந் துடல்வேர்த்து இவனைக்
கண்டிடவந்தொன்றும் விண்டிலேனைப்பார்த்து (உன்)
காரணமொன்றுமிலாதே இராமனிப்படிக்
கழறுவதென்னவோ காண்போமிப்போதே. (உன்)

(வெளிப்படை) அடுக்குமொழி.

விர்த்திசெய்வாக்ச்ச, மர்த்தவென்னுயிர்க்,
கர்த்தனேநின்சொல், அர்த்தமறிகிலேன்.

மாரீசன். பிங்களனைத் தழுவிக்கொண்டு இரகசியமாய்.

விருத்தம்.

பிங்களனென வேவந்தோன் பேயன்காசிபன்றா னென்று ம்
அங்குநீ யிளையோனம்பா லாவிமாய்ந்திட்டா யென்று ம்
சங்கையுற் றிதுகார்மட்டுந் தளம்பினே னென்கரா ளா
இங்குயிரு ளுய்க்கண்டே னீசுரா தீனமப் பா.

பிங்களன சிரித்துக்கொண்டு தனக்குள்

அடுக்குமொழி.

மாசகனொளித்த, காசிபமுனியும்,
வாசகப்புலம்பல், பேசுவதென்னே.

(வெளிப்படையாய்) அடுக்குமொழி.

என்னொருரகசியத், தென்னபுகன்றீர்;
இன்னமோர்தரம், பன்னிடுவீரே.

(மாரீசன்) பயத்துடன் பரக்கப்பரக்க விழித்துக்கொண்டிருக்கின்றனன்
(இராமர்.) பிங்களா, என்ன திகைக்கின்றனை.

'அடுக்குமொழி.

கவலைப்படுகிறாய், குவளைக்கண்ணனிறாள், இவளைப்பற்றியோ விசாரிக்கின்றனம், (என) ப்புருவம் நெரித்துக்காட்டிக

(பிங்களன் தன்றுள்) கட்டளைக்கலித்துறை.

கோங்கிளமாமுலைக்கோதைவிதேகன்குமாரிகொ லோ
பாங்கியர்சூழ்ந்து பணிசெயப் பூஞ்சினைப் பாங்கதி லே
யீங்கெழிற் பல்லவப் பாயலினிற் சாய்ந்திருக்கின்றன ள்
ஓங்கிவடன்றசை முன்சொலெனக்கிங் குணர்த்தின . னே.

(சற்று நிதானித்து) அகோவகோ, யீதென்னபுதுமை, அவளோ, ஈரை யோஜனை தூரத்தில் கௌசிகாச்சிரமத்தில், வசிக்கின்றனள்

(என) வியப்புடன், பார்த்துக்கொண்டிருக்கின்றனன்.

(மாரீசன் தன்னுள்.) இவன் நம்கராளனன்று பின்னையோ எதார்த்த பிங்களனென்றான், அந்தோ, அந்தோ.

கலிவிருத்தம்.

எங்கராளனைபொன்னிலெப்பாவ மோ
சங்கைகளைகொண்டென்னையமர்ப்புகுந்த தே
(அல்லால்,) பிங்கள னுருப்பிடைன்கொண்டவ ன்
எங்கிருவதெரளி நதிலைவான்கொ லோ.

(இருக்கட்டும்.)

கலிவிருத்தம்.

பிதனமெயதிடவேலாயிராங்கொ லோ
சதிவன்மாய்கைச்சதுரசக்திபா ல்
நதிர்குலத்தருகனாயிரகவ ன்
மதைப்புஷத்திடக்குடவெண்டுமோ ல்.

(வெளிப்படையாய்.) அநிருத்தர, புயமந்தர, ரகுநந்தன, இராமச்சந்திர. (சிங்காரக்கலி இவ் வாம் சொன்றா, பங்கபந்திய, சந்தமாதிவள், சிந்தைநைந்து, வருந்துகின்றனன்.

(இராமர்.) பார்த்துக்கொண்டு தானிருக்கின்றேன்.
எங்ஙனமெனில்,

கட்டளைக்கலித்துறை.

கண்ணம்புயங்களின்வீழ்மகரந்தக்கணங்களென ப்
பெண்ணம்முகச்சந்திராமுதத்திர்த்தத்துப்பிந்துவென க்
கிண்ணம்நிகாத்ததனத்தாவிவளுதிர்க்கின்றகண்ணீ ர்
எண்ணங்குலைத்தென்மனத்திணையேஉறுக்கின்றதுவே

(மாரீசன்.) தியானம் செய்கின்றனன்.

[ஒருத்தி] இராகம் கேதாரம்.

கண்ணிகள்.

(ஒருத்தி) எதடியினிப்பொருக்காதிவள்தேகம் என்றெனக்குச்சரம்விளம்புதே பனினீர், சீதச்சந்தக்குழம்பைமாதங்கத்திற் றடவித்திரும்புமுன்பொறுக்காய் கிளம்புதே

இராஜன்வரநீல்சரோசமலர்கள் மலர்ந்திலகிங்சளித்திருந்தா னே
(அதுபோல்) இராஜன்வந்தால்முகம்ப்ரகாசித்திடுவெள் சுகமெய்துவளிந்தமட மாலோ
இராமனைக்கண்டவுடன்மாமலர்க்குவளைகள்யெழில்பெறவிளங்கிடுமெல்லவோ
(அதுபோல்) இராமனைக்கண்டாலுடன்காமநோய்தீர்ந்துசுகம் எய்துவளதைச் சொல்லவோ.

இராமர் (ஜாவளி)

இராகம் சரசரப்பிரயை. சாப்புத்தாளம்.
எந்தகிநின்னுநெவடுதுரு யென்றமெட்டு.

பல்லவி.

இந்தசகியர்மொழி யென்சொல்வேன் அய்யோ.

அனுபல்லவி.

பைங்தொடிசிதையின் பக்கலிலிருக்கின்ற (இந்தசகி)

சரணங்கள்.

சுந்தரியவளுக்கு கந்தசுகமரு ள
எந்தன்பேரெடுத்தியம்பினளே அய்யோ
இந்தவசனத்தாலே சிந்தைகுளிர்ந்தத டோ (இந்தசகி)

மங்குலின்மழைகடம் பங்களைமுகுளித் தி
லங்கச்செய்கின்றவிதமென்னவே என்றன்
அங்கமெல்லாம்புள கங்கணிறம்பச்செய் த (இந்தசகி)

(பிங்களன் சற்றுலோசித்து தன்னுள்.) இவன் காசிபன்ற, ஆகை யால், யானிவ்விதம் ஆலோசிக்கின்றேன்.

என்னெனில்,

விருத்தம்.

வல்லமாயாவி யின்னோன் வஞ்சனோ ரரக்கனுரு ம்
சல்லியுள் எழுக்காருகித் தாடகா வதத்துனு லே
மெல்லியற் ஜனகியைப்போல் விந்தைமாயங்கள் காட் டி
வெல்லவோ அல்லல்மிக்க விளைவிக்கவந்தான் கொல் லோ.

(என்றே) அதிற்சற்றும் ஐயமில்லை, அதனுல்தான், இவனென்பால் வந்த ஸம்பாவிதமாயுளதினுன், அஃதென்னென்று சாவ, பதிலொன்றுஞ்

சொல்லாமல் திகைத்தான், பின்னும் பயந்துசஞ்சலித்துப் பரக்கப்பரக்கவிழி த்தான், இருக்கட்டும்.

(யானிங்ஙனஞ்செப்புகின்றனன்.) வெளிப்படை.

(ஓ, ஓ, மித்திர சிரோரத்தின ராமபத்திரா.

விருத்தம்.

பூங்குழற் சனகமாது புங்கவயிவ ளோவன் று
பாங்கியரிவ ரோவன்று பரிவுடனவர் வயிக்கு ம்
ஓங்கிட மிக்கானங்கொல் லொருக்காலு மில்லைரா மா
ஈங்கிவை யெல்லாம்மாய மென்னவே விளங்குதந் தோ.

(இராமர் தன்னுள்.) இதுவென்கொல், பூர்வாபரவிருத்தமாயிருக்கின் றதிவன்வசனம்.

விருத்தம்.

சானகியிவ ளென்றான் சங்கநிதன்குணர்ந்தோ ன்
ஆனகாசிப னையிங்கே யழைக்கின்றே னெனவிறைந் து
போனவன் வந்தான் யெல்லாம்பொருந்து மாயங்களென்று ன்
ஏனிவை யெல்லாமாயை யெனநினைப்பது தகா தே.

(வெளிப்படை.) காசிபனுல், பிங்களவசனம் கேட்கப்பட்டதோ.

(மாரீசன்.) இராமனிடத்தில் இரகசியததில்.

விருத்தம்.

நினைக்கின்றேன் மாய்கைவல்ல நிசிசரனொருவன் வஞ் ச
மனக்கபடத்தினோடு பிங்கள வடிவந்தாங் கி
சனக்கெடு தலையெய்த தாடகை தனைக்கடிந் த
நினைக்கொலை புரியவெண்ணி நேர்ந்தனனிவ னிங்கென் றே.

(இராமர்.) ஸரி, ஸரி, நன்குறைந்தனை, நீ சொல்வது யுக்தமேயாம் பிங்களனிங்ஙன்ம் போந்திடுங்காலியன் பாதகதியடைவனே.

(மாரீசன்.) தாடகை சுபாகு இவர்கள் யாதுகதியை யடைந்தனரோ. அதுவேயாம்.

(இராமர்.) இஃதிப்படித்தான்,

பிங்களன் (தன்னுள்) அடுக்குவசனம் ஓ, ஓ, மோசம்விளைந்ததே, அன் பிற்சிறந்த, நண்பனிராகவன் நிசிசாசர, மோசமிதென்று, நினைக்காமல், இ வனை நேசகாசிபனென, நினைத்து இவன் பேசுமொழியாவையும் ஆசை யொடு கேட்கலாயினன்.

௩-வது அங்கம்.

(வெளிப்படையாய்.) இஷ்டசிகாமணி இரகுகுலமாமணி.

அடுக்குமொழி.

என்னையலாதிவன், சொன்னதைக்கேட்கிறாய்,
நன்னயமாமோகாலோ, இன்னலென்றறிவையே.

(இராமர்.) புருவபங்கத்துடன், இதுவென்சொல், மொழிச்சிடையே,
இவ்விராக்கதனும்வந்து தடங்கல்செய்கின்றனன்.

(பிங்களன் தன்னுள்.) பயமும் துக்கமுங்கொண்டு.

இராகம் பியாகு. சாப்புதாளம்.

பல்லவி.

இனியென்செய்வேன் எப்படியுய்வேன்.
அதென்னமாயம யிதென்னவனியாயம்.

அநுபல்லவி.

கனிஇராமனுயிர்க்குயிராய் நானிருந்தேனே அவன்
எனையிப்போது விமுகங்கொண்டு எதிர்த்துநின்றானே
எவனோ பயலென்ற னே. (இனியென்)

சரணங்கள்.

அன்னியனென்னுமட்டுந்தானோ அரக்கனென்றானே அவன்
பின்னுமென்மேற் கோபஞ்செய்கின்றான் பிங்களனெனவே
பேச்சென்னபுகல்வே னே. (இனியென்)

காதகனிவன் காசிபரூபன் கள்ளராக்கதனே சூதா ய்
காதிற்கோள்கள்தூதி ராமனைப்பேதித்திட்டா னே
இனிப்பிழைக்க ஒட்டா னே. (இனியென்)

விட்டுப்பிரியா னிப்போதென்னை விரட்டுகின்றானே இராமன்
துஷ்டஅரக்கன்சொற் கேழ்க்கின்றான் சுமுகமாய்த்தானே
துஷ்க்காலமோ அறியே னே. (இனியென்)

(வெளிப்படை) அடுக்குமொழி.

புவனமுதல்வீரனே பீவரித்துரைப்பதேன்
இவனைமிகவுமதிற் கவனிக்கவேண்டுமோல்.

(என) முகம்வணங்கியிருந்தனன்.

(மாரீசன்.) தியானஞ்செய்கின்றனன்.

(மாயாசீதை.) ஹா. சகிகாள்.

கலிவிருத்தம்.

குறைத்தவம்புரிந்தேற்குக்கோதிலா
நிறைத்தபாக்கியம் எங்ஙனம்நேர்ந்திடும்
உறைத்தவண்ணமவ் வுத்தமராமனென்
னிறைத்தனிச்சுகமெந்தனுக்கெய்துமோ.

(இராமர்.) ஹா. அடி. என்காதற்குறிய மாதுசிரோன்மணியே.

இராகம் நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

அடிஅன்னமே அடிசொன்னமே என் ஆவி யே
இன்சுகவாவியே தேவி யே (அடி)
கொடிஇடைமென்கொம்பே குடிகொளுமென்அன்பே
கடமூலைபொற்செம்பே வடிவுளகண்ணம் பே. (அடி)

வுமயிலே, வகுயிலே, உனக் கென்சுகமெய்துதலோ, அறிதென்றனை

கட்டளைக்கலித்துறை.

மானேநினக்கென் சுகமெய்தலோ மிகவன்மையென்று ய்
தேனேயதென்னடி செப்புதிமாரன் செறுசகுணை ந் து
நானேமெலிந்து வருந்துகின்றேனென்கணுண் மலர்க்க ண்
டானேகொடுக்கிலெளிதேபெறுவை யென்றன்சுக மே.

ஷை கட்டளைக்கலித்துறை.

கட்டழகிசனகன்மகளே கனகாரவிந் த
மொட்டெழுற்கொங்கையின் மொய்குழலே உனை முத்தமிட்டுக்
கட்டியணைக்கக் குவளையங்கண்கள் கடாக்ஷிப்பையே ல்
துட்டமதன் பகைவிட்டுய்குவேனடி சுந்தரி யே.

[மாரீசன் தன்னுள்.] ஓ நிரம்பஸந்தோஷம், இவனுக்கிவளிடத்திலா
சையை சலியாவண்ணம் ஸ்திரஞ்செய்துவிட்டேன், ஆனதால் யானினைத்த
தெளிதில்முடிப்பேன்.

[வெளிப்படையாய்.] ஓ கோமளகாத்திரா, ஸ்ரீராமபத்திரா,

அடுக்குமொழி.

மாமயல்மிஞ்சமிப், பூமகள்ஜானகி, காமமுற்றுப்பெற, நீமனம்வைப்பையே.

(இராமர்) அடுக்குமொழி.

ஓ நோக்கந்தெறிந்த, வாக்குநன்னய,
சிலாக்கியகாசிபா கேட்கக்கடவாய்,

விருத்தம்.

கானகத்தில்யானெவளைக்கண்ணுற்றேன்கொல் [ஆச்சரியத்துடன்]
காதலியென்னுயிர்ச் சனகியவளாய்க்கண்டேன்.
ஏனகமெய்யிளைத்தனளென்றாயுங்கால் [களிப்பனுராகத்துடன்]
என்னிமித்தமதச்சுரத்தாலெனவறிந்தேன்.
பானகவின்மொழியாள் சந்தாபந்தீர்க்கப் [புளகங்கொண்டு]
படுவதென்னுலிங்கனமாம் பகரக்கேட்டேன்
யானகமகிழ்ச்சியொடு தழுவற்பாங்கே
என்றாலும்வதுவை இலாததஞ்சுறேனே.
[மாரீசன்.] தியானம்செய்கின்றனன்.
[மற்றொருசகி.] எனதாருயிர்க்கண்ணாட்டி.

கொச்சகக்கலிப்பா.

கட்டிக்கரும்பே கனதனமே கண்மணியே
வட்டிக்குந்தேனே மகராசி யுன்றனுக்கென்
கிட்டார்க்கறிதுன் கேழ்வனையே கோசிகனார்
இட்டுக்கொண்டுன்பாலிங் கெய்துவர்கா ணேந்திழையே.

[இராமர்.] ஆ, ஸரி, ஸரி, இம்மொழி பிங்களனுரைக்கக்கேட்டிருக்கின்றதுவே.

[பிங்களன்.] அகோவகோ எதார்த்தவர்த்தமானத்தையனுசரித்து சம்பாவதிக்கின்ற இம்மாயாவிலாஸம் ஆச்சரியமாச்சரியம்.

(மாரீசன்) ஓ புவனநாயகனே, இவனுரைநின்றன் செவிப்புக்கிற்றோ.

(இராமர்) அடுக்குமொழி.

நீசனிவன், பேசுமொழி, காசிபனுக், கேசரியாம்
காசிபன்றான் கேட்கவேண்டும்,

(காசிபர்) வாஸ்தவமாய் ஜானகிபரிஜனந்தானு, ஒன்றுக்கொன்று புலம்புகின்றது.

(பிங்களன்) என்மனது, கொஞ்சங்கூட விசுவாசிக்கிறதில்லை.
(மரீசன்) தியானஞ் செய்கின்றனன்.
(ஒரு சகி) அடிசகி இது நிற்க.

கலிவிருத்தம்.

கனத்தமென் மூலைக்கன்னி நல்லாளிவ
டனைத்த சகண்டன்றான் விரும்புறான்
எனத் தளம்பியனங் கொதிக்கின்றனள்
அனர்த்தமா மலைதல்லால் மற்றில்லையே.

(காசிபர்) ஓ ஓ யீதொன்று பொய்யான சமாசாரம், ஜனகராஜன்பால், இதுமட்டிலும் தசக்கிரீவன் யாசனை செய்யாமலிருக்க, யீதேதுஸமாசாரம்.

(இராமர்) அடுக்குமொழி.

ஓ ஓ இதுவென்சொல்,

ஐந்திருகந்தரனும் வந்துபிரார்த்திப்பதாய்
தந்தஇவ்வாசகம் விந்தைசந்தேகமாம்.

(பிங்களன்) ஒருக்காலும் இல்லவே இல்லை,

கலிவிருத்தம்.

அன்னியாய மிதார்பொருப்பார் கொலோ
மன்னன் பாலிவையான் வசனித்திடல்
பின்னமாம் தக்கதன்று வீண்பேச்சதாம்
என்னையோ வல்லரக்க னென்றிட்டலால்.

(வெளிப்படையாய்) அவனிக்கரசே, இவனைப்பற்றிக் கவனிக்கவேண்டும்.

(இராமர்) செவிகளை வேறுசாய்த்து) ஐந்திருகந்தரனும் வந்து பிரார்த்திப்பதாய்த் தந்த இவ்வாசகம் விந்தை சந்தேகமாம். (என) திரும்பப்புகன்றனன்.

(மாரீசன்) அதிலென்ன பாதகம் ஸ்வதந்திர மிருந்தாலும், சிற்சிலவிடத்து பரதந்திரமுஞ் வேண்டியிருக்குமல்லவோ.

(மாயாசீதை) கண்ணீர்ப்பெருக்குடன்) ஓ ஓ யெனைத் தசகந்தரனும் விரும்புகின்றான் கொல், ஹ ஹ.

இராகம் முகாரி ஆதிதாளம்.

பல்லவி

இந்தவினைக்கென்னசெய்வேன் அந்தோ அந்தோ.

அநுபல்லவி.

அந்ததசகந்தரனும் எந்தனையா சிக்கின்றானே. (இந்த)

சரணங்கள்.

பத்துத்தலையுமிருபதுகையும் பிசாசுபோல்
சத்துருவந்தெனைவேட்கக் எத்தனிக்கின்றானே. (இந்த)
அந்தரனிராகவன் வந்துமணஞ் செய்துசுகம்
தந்திடப்பெருமுன்னாகத் தொந்தரைவிளைந்து தானால் (இந்த)
அன்னவன்வந்துயாசிக்க என்னையென் றந்தைஜனக
மன்னவனீய்ந்திடுவானோ கன்னிகாளிதென்னமாயம் (இந்த)

அடியே அடியே அவ்விதம் நடக்குமாயின் உடனே யென்சரீரத்தை மாய்த்து விடுவேன்.

இராகம் புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி,

ஈதுசரதந்தானே ராமனுக்கல்லா லெவர்க்குஞ்சம்மதியேனே.

அநுபல்லவி

மேதினியில் வரலாகாது பெண்ஜன்மந்து
பாதகனுக்காளாவதேது மாதேயிப்போது [ஈது]

சரணங்கள்.

சர்க்குணரகுபதியே எனக்குகந்த
சாமியென்னதிபதியே அவனேசு
கிக்கப்பொருந்துமல்லா லெவர்க்குமென்றேகம்
அக்ரமமரய்த்தொடப் பொருக்காதிதுசுபாகம். [ஈது]
எந்தையவனுக்கெனையே பரிணயஞ்செய்
திந்தாலுங்கர்மவினையே இதுதானென்றே
செந்தழற்குழியினி லந்தக்கணமேபாய்வேன்
கொந்துவிடத்தினை யருந்தியாவதுமாய்வேன். [ஈது]

[இராமர்] ஆனந்தபரிதனுகி,

கட்டளைக்கலித்துறை

மாணிக்கவல்லி மரகதவல்லி மதனவல்லி
எணிக்கண்மாதிவள் எண்ணமெல்லா யென்னிடத்தில்லலா

காணிக்கணைக்களவும்மற்றிடத்திலைக்காமத்திற ல்
வாணிக்குயிலினையென்மனத்தைவிலைவாங்கின ளே.

[என] ப்பார்த்துக்கொண்டிருந்தனன்.

[காசிபர்.] கராளனைநோக்கி, (களிப்புடன்) இதோ பிங்களன் என்னை வந்தடைந்தனன், நிரம்ப சந்தோஷம்.

அடடா, இக்காட்டினிடமாய் வேட்டையை நாடிவந்த இராகவனைக் கண்ணுற்றனை கொல்.

[கராளன்.] அவனைக்கண்ணுற்றது மட்டுமன்று, நின்சொல் வழிப்படிப்ப என்றால் அவனை வனாந்தரவனத்திற்கு, எத்துக்கடையாய் ஏமாற்றி யழைத்துவரலாயிற்று.

விருத்தம்.

கண்டகன்றியுன் கட்டளையின் வழிகருதியிக் கானவந்தத்தி ல்
கண்டியபாய்வர விடுத்தனன்கணத்தே உன்னையென் கண்ணிற்காணுதா ல்
வண்டன்கோரிக னைவகொடி லக்குவன்காமதற் கிலக்கா கி
விண்டலைவல்லாய் தென்றெருசங்கை மேவியென்மனங் கலங்கினதா ல்.

[காசிபர்.] சற்றுலோசித்து [தன்னுள்,]

விருத்தம்.

அப்பிங்களன் வடிவாகினனோ கொபிவனோ கொ ல்
செப்புமிளை யான்பக்கலிற் சேர்ந்தோங்கிடுமென் னை
ஒப்புந்தவ னுறவாய் நினைக்கின்ற னென்னுருவ ம்
இப்புவனிற் புனைந்திட்ட வன்யார்கொல் யார்கொல் லோ.

இருக்கட்டும், எல்லாம் அடைவே அறிகின்றேன்.
(வெளிப்படையாய்.) இராமனிப்பொழுதிலெவணிருக்கின்றனன்.
(கராளன்.) தன்னுள்.

விருத்தம்.

சிந்தை இராகவன்பாற் சென்றதா லெனைத்தேற்றா து
வந்திது புகன்றனீ தில் மற்றிலைத் திண்ணனந்தா னே
(வெளிப்படையாய்)
பைந்தொடி ஜனகிதன்னைப் பரிந்தெதிர் பார்த்துக்கொண் டே
இந்தமாகந் தத்தோரம் இருக்கின்றான் ரகுவீரன்றா ன்.

(காசிபர்.) இவள் சீதைதானெனத் தெரிந்தனைகொல்.
(கராளன்.) நகைப்புடன்.

அடுக்குமொழி.

அப்படிப்புகலினும் இப்பெரும்படியினில்
செப்பிடுன்மாயையென் றெப்பமாயறிவனுல்.

விருத்தம்.

சதிமயன் வித்திச்சிக் வஞ்சம் பரனிந்திரா ரி
முதிர்வஞ்ச மாய்கைவல்லோர் இவரினும் மூதன்மையாக த்
துதிபெருந் தாடகேயா சொல்லவுந் தரமோநின்ற ன்
விதவிதமாய ஜாலவிளை வினைத்தெரி வேன்மா தோ.

(காசிபர்.) உத்வேகத்துடன் (தன்னுள்) இவனோ, மாரீசானுசரன், இவனொரு அரக்கனாயிருத்தல்வேண்டும். இதனுல் அம்மாரீசனென்பவனும் மாயையாலென துருவத்தை யெடுத்துக்கொண்டு சற்றுமறைந்திருந்துகொண் டோயாப்பிரயோகஞ் செய்கின்றானென நன்கறியலாயிற்று.

விருத்தம்.

இனியென்னை யடைப்பவரோ யாரேகா என்னதான்செய்வேனந்தோ
தனிமையா யொருவனைப்போல் வாக்கார்த்தாலக் கரத்திற்சிக்கி
நனியுயிருய்ய தெங்ஙனம் அரக்கன்பால் நா னே
வனமதிலகப் பட்டிட்டேன் வாழ்வது குதிரைக்கொம் பே.

என மனதினால் நொந்துநொந்து, மூர்ச்சைகெட்டு விழுந்தனர்.
(கரளன்.) ஹு, ஹு, களைப்புவிடுத்துக் கண்விழிப்பீராக.

கலிவிருத்தம்.

எண்ணி யெண்ணிச் சுரக்தின் றெடுத்தட னை
எண்ணி யெண்ணி யவளிறந்த கேட்டி னை
எண்ணி யெண்ணி ரகுவீரன் பலத்தி னை
எண்ணி யெண்ணி மனவேக்கமி தாங்கொலோ.

எனத்தேற்றினன்.

[காசிபர்.] சற்று களைப்புத்தீர்ந்து எழுந்திருந்து கைகால் நடுங்கக்கரை ந்து கரைந்து கண்ணீர்வடியக் கைகூப்பி அஞ்சலி செய்துகொண்டு.

இராகம் பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

வல்லநிசாசரவந்தனம் வந்தனம்
மனதுவைத்தாண்டருள் ஆண்டருளே.

அநுபல்லவி.

தொல்லைசெய்மாரீச னல்லனாளெளியேன்
துன்பஞ்செய்திடில் வந்துசூழ்ந்திடும்பழியே
நல்லவார்த்தைசொல்லி நாடியைத்தாங்குறேன்
நம்பினேனென்னானுனைக் கும்பிடுறேன்   (வல்)

சரணம்.

[illegible] ணையபுத்[illegible] சாகுவதமா [illegible] யே
[illegible] பன்னைறுயந்யே
[illegible] முடனை [illegible] ழாய் வாழ்வாயே
நாயகராக்ஷத குலபதி [illegible] யே.   (வல்)

(காளான்.) [illegible]

அடிக்குமொழி.

அண்ணை [illegible] மாரீசனை எண்ணிடும்பாவமே
திண்ண [illegible] தெவ் வண்ணம்யானுய்குவேன்.

[illegible]

இவன் [illegible] மூடனாகிய நான் இவனை மாரீச
னென [illegible] உளறிவிட்டேன்.

[illegible] யாதுபந்தா எனப் புலம்பத்
தொடங்க [illegible] புலப்பத்தாலென்பயன்
[illegible] போபந்தேட்ன்) அடடாக்ஷத்திரியச் சி
[illegible] வெளிவந்த துஷ்டப்பயலே.

(என) [illegible] ஹ, ஹ, இவன் விஷயமாய் அள
வுக்கு [illegible] பட பட்டப்பு.

விருத்தம்.

படுபயவிராமனைப்போலிலக்குமன்றான் பலம்படைத்தோனவனை எட்டிப்பார்ப்பதற்கும், திடமுடையனல்லேன்யான் வீரம்பேசிச்செய்வதென்னையானை வெள்ளாடென்செய்யும், அடல்மதமாரீசவதம் சகியேனந்தோ அனியாயமதற்குப்பதிலமைப்பதிந்தத், தடிமறையோன் றனைவதைத்தல்தகுதியாகும் தகுந்தகுமப்படித்தானே சரிசெய்வேனே.

(என) குபீரென்றெழுந்து காசிபனுடைய கண்டத்தை துண்டுசெய்ய ஆரம்பித்தனன்.

(காசிபர்.) தந்திரமாய் விடுவித்துக்கொண்டு இராமனிருக்கிற தேவ மாமரத்தை இலக்குவைத்து ஓடுகின்றனர்.

(கராளன்.) பின்றொடர்ந்தோடுகின்றனன்.

(காசிபர்) இராகம் பியாகு. ஆதிதாளம்.

தேவாதிதேவனே என்றவர்ணமெட்டு.

புயபலவீமா ஜயஜயராமா ஒரு
பொல்லா அரக்கன்றான், எனைக்கொல்லவருகின்றான் ராக்
பூபா, பிரதாபா, இந்த ஆபத், திற்காப்பாய்சா மி [புய
மோசநிசாசரன், மாரீசனுக்கனுசரன் இவன்
முதிர்வஞ்சமாயாவி, அய்யோ சதிசெய்திடும்பாவி இந்த
மூர்க்கன், வந்து, தாக்காமல்நீ, காக்க வேணும் மைரி, [புய
ராமாசரணம், ஜயபூமாசரணம், ரகு
நாதனேசரணம், மனு, நீதனேசரணம், உனை
நாடி, வந்தேன், தேடி, நொந்தேன், ஓடி, என்முன் வா. [புய

(இராமர்.) ஆ, ஆ, காசிபனுடைய சப்தம்போல் கேட்கப்படுகின்றது அன்பிற் சிறந்த, நண்பர் நாயகமே, அஞ்சேலஞ்சேல்.

என விரைந்தெழுந்து நடக்கின்றான்.

(மாரீசன்.) இதுவென் சொல்.

விருத்தம்.

சொலித்திடு மணிமார்பா வென்சுந்தர வரனேபா ஞ.
குலக்குண நிதியேராமா குறித்துன்பா லிடைவிடா து
துலக்கமா யிருக்கின்றேன் யான்காசிபன் றோன்றல்காண் டி
அலக்கண்சேர் இந்தச்சத்தம் யாரதென் றெண்ணுகின்று ய்.

(கராளன்.) ஒருகுதியிற் காசிபனைத் தாவிக்கொண்டு, இராமனைக்கு த்து புலம்பிக்கொண்டு ஓடுகின்றனன்.

இராகம் பைரவி. ரூபகதாளம்.

பல்லவி,

பரிபாலனஞ் செய்வாய் பரந்தாமனே ஸ்ரீராமனே

அநுபல்லவி

கிருபாகர, இரவிகுல, நிருபாவெனக், கருள்வாயே (பரி

சரணங்கள்.

பொல்லாவொருவன் புலிமான்றோ லை
போர்த்திவந்தாற்போல் காசிபன்போ லே
வல்லாக்கறாருக் கொண்டென்பின்றே லே
வந்திட்டானிதற் கென்செய்வோமே லே (பரி)

ருதுவாசற்ற வேதியன்நா னே
தாய்காசிபனென் றெண்ணினே னே
வேறாகவிளைந்த தென்செய்வே னே
விபத்துக்கவிர்த்தாள் கதிதா னே (பரி)

(என்றப்படிக்குக்கொண்டிராமனை வந்திருகத்தழுவிக்கொண்டனன்.

(ஸ்ரீராமர்.) மாரீசனிடம் ஓ என தாசைநேச காசிபனே, உயிர்ச்சகபிங் களன் முடி நீதானவந்தனன்.

(மாரீசன்.) களிப்புடன் (தன்னுள்) நமது காராளனிவனேயாம், காசிபன்றானிவனைத் தொடர்ந்துவருகின்றான்.

(வெளிப்படையாய்) அடுக்குமொழி.

பூசல்மாரீசனென் வேசம்புனைந்திதோ
மோசமங்குற்றனன் நேசர்காணுந்தி

(காசிபர்) அடுக்குமொழி.

ஜயஜயபூமா, நயகுணசோமா
புயபலவீமா, இயல்புகேள்ராமா.

விருத்தம்.

என்னுடைப் படிவங்கொண் டிராக்கத மாரீசன்று ன்
நின்னுடைப் பக்கல்வந்து நிற்கின்றான் சீதையென் று
தன்னுடை மாயஜாலந் தனையெதிர் காட்டியுன் னை
துன்னுமோ காழிவீழ்த்தத் துடிக்கின்றா னிவனிரா மா.

(காராளன்.) களிப்புடன் (தன்னுள்) ஓ சரி சரி இங்ஙனம் உயிருடன் காசிபவேஷமாரீசனைக் கண்டதும் ஈசன் செயலேயாம்.

வெளிப்படை.

(வசனம்.) இன்னவன் யார்கொல், என்னுருவத்தைப்புனைந்துகொண்டு முகத்தைத் தூங்கவைத்துக்கொண்டிருக்கின்றவன் யார்கொலோ.

(மாரீசன்) கலிவிருத்தம்.

இன்ன வன்றனை யரக்க னென்ன வே
தன்னிக ரில்லாச் சதுர நாயக ன்
புன்னுனிக் கூர்மைப் பத்தியி ராகவ ன்
முன்னம் யோசனை முடித்திட்டான ரோ.

(பிங்களன்.) காசிபர் பாலணுகி,

விருத்தம்.

தூயகாசிப னென்சொல்வேன் தூங்கனின் றுருவங்கொண்டான்
நேயமாய் கராள னென்றென் னேர்கீழ்த் தினதாலின்றே ன்
பேயன் கராளன்றானென் பிங்கடப் படிவங்கொண்டா ன்
மாயமாரீசனன்றோன் வஞ்சனை விளைந்தகந் தோ.

(இராமர் வசனம்.) அசோவசோ, இவனே, பிரத்தியக்ஷ காசிபனை, மாரீசனெனவும் பிங்களனைக் கராளனெனவும் பரிவாரத்துடன் இச்சீதையை, மாயையென்றும் பேசுகின்றான்.

ஈதெங்ஙனம் இயம்புவது,

விருத்தம்.

காசிபனைமாரீசனெனவு மிப்பிங்களன்றனைக் கராளவல்லரக்கனென்று ம்
வாசமலர்க்குழலிபரிவாரத்தோடு வளர்சீதைமின்னரசை மாயையென்று ம்
பேசுகின்றானிவன்விந்தை இவ்விருவர்பிங்களராங் காசிபரிவ்விரண்டுபேரோ
நேசரினாலவரிவிருவர் நீச்சியந்தான்கிசரர்மற்றிருவர் மிகநேத்திரநேத்தி.

(கராளமாரீசர், பிங்களகாசிபரைக்குறித்து இராமனிடம்.)

விருத்தம்.

பருத்ததிண்டோளாய் மிக்கபலம்படைத் திடுவெங்காளா ய்
உரத்தராகவனே கேளாயூருமுன் றடைக்கல்வேண்டு ம்
தரித்திலகிடும் வேடங்கடமைக் கண்டுசலித்திடா தே
திரத்தஇவ்வரக்கர் தம்மைச்சிதைத்துமாய்த் திடுதிலை யா.

இராமர் கோபத்துடன் (பொதுவசனம்.) மூதண்டத்தையும் பிளக்கும் கோதண்டத்தில் காணியிறக்கி பாணத்தையேற்றுகின்றனர்.

[காசிபர்] ஓ ஓ ஆபத்பாந்தவ அனாதரக்ஷக அன்பர்க்குசுந்தவ அபிராமராமனே, ஆதரித்தருளல்வேண்டும்.

விருத்தம்.

காட்டுவாய் மறைப்பாயன்பர் கருத்துளவிருளையெல்லாம்
ஓட்டுவாய் ராமச்சந்திரா நீயறியாதொன்றுண்டோ
தாட்டிக மாரீசன்றன் ஜாலமாயங்களிலே
நீட்டுராய் தனுவைவேண்டா நிலைத்துளம்யோசியையா.

(இராமர்.) தன்னுள், இதுவென்கொல்.

விருத்தம்.

எவரையென் னன்பராமென் றிசைந்திருக்கின் றேன்கொல்லோ
அவரிடமென் மனந்தா னவளவுபொருந்தவில்லை
எவரைவல்லரக்கராமென்றெண்ணியே வெடுக்கின்றேன் கொல்
அவரிடமென் ளேக்கத் திற்கானந்த மாகுதந்தோ.

(என) நினைத்துக்கொண்டிருக்கின்றனர்.

(மாரீசன் வசனம்) ஓ ஓ, இவரிடங்களில் பாணத்தை விடுகைக்கு இவன் சந்தேகப்படுகின்றனன். நன்று நன்று இதுநிற்க.

[என] த்தியானஞ் செய்கின்றனன்.

(ஒருத்தி) திரையைக் கையால்த்தள்ளிக்கொண்டு, பரபரப்புடன் (பிரவேசித்து) வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு) ஹ ஹ அந்தோ! அந்தோ! அடியே அடியேயம்மா அடியோடே, ஹதமாய்ப்போயினோமடி, அடியே போயினோமடி.

(மற்றெல்லவரும்) அதிபரபரப்புக் கொண்டவர்களாய், ஹா சகி அது என்கொல், என்கொல், சொல்லுதி சொல்லுதி நமக்கு, யாதுசங்கடம் நேரிட்டது, அதைச்சொல்லக்கடவாய் (எனமன்றாடினர்.)

(மாயாசீதை.) உத்வேகத்துடன், பஞ்சணையினின்றும் கொஞ்சமெழுந்துகொண்டு, அடி சகி அதனை இன்னதென்று சொல்லக்கடவாய், என்மனதை வேருடன் வெல்லுவதுபோல் என்னவோ செய்கின்றது, அதனை இன்னதென்று சீக்கிரம் சொல்லடி,

(பிரவேசித்தவள்) அந்தோ வந்தோ அடியோடேபோயினோமடி
அவ்வமங்களத்தை எங்ஙனம் புகல்வேனடி.

(மற்றவர்கள்) அஃதென்ன அமங்களமடி அதைச்சொல்லு சொல்லு,
அதற்குமேற்செய்யவேண்டியதாவதுயோசிப்போமடி,
அதைச்சொல்லு, சொல்லு.

இராகம் பியாகு ஆதிதாளம்.

பல்லவி.

என்னடிமாயம் யென்னடிஅனியாயம்
இன்னமுமியம்பிடாதேதடி யேசகி (என்)

அநுபல்லவி.

சின்னபின்னமாய்மனந் தன்னை இவ்விசனம்
சிதறச்செய்கின்றதங்கம் பதறச்செய்கின்றதடி (என்)

சரணங்கள்.

பட்டணம்பரிபோச்சோ நஷ்டங்கள் வரலாச்சோ
இஷ்டபந்துக்களுக் கேதேனுமுண்டாச்சோசகி (என்)

படபடெனநீவந்த உடனேயெங்கட்கென்னவோ
அடிவயிற்றைப்பிசைந்து குடலைப்பிடுங்குதடி (என்)

இன்னதென்றியம்பதற் கென்னமாவதளப்பு
முன்னமேதோதறிந்து முயன்றுகொள்வோமடி. (என்)

(என) பிரலாபித்தனர்.

(பிரவேசித்தவள்) யான் வேறென் சொல்லப்போகின்றேன்.

(என) கண்ணீரைப்பெருக்கினள்.

விருத்தம்.

கண்டம்பத் துள்ளான் வந்து கனபிரார்த்தனை கள்செய்து ம்
தொண்டுசெய் ஜனகனுமேல சோதிமின் றேகையா ன
ஒண்டொடி தன்னைப் பெறற் குதவிடப்பெற்றே னல்லே ன்
தெண்டனைசெய் வேனென்னச் சிறியமொழிந் திட்டானு ல்.

(மற்றவர்.) உத்வேகத்துடன் ஹா, ஸகி, அந்தப்பாவி தசகண்டனால் தாதை ஜனகராஜனிடம் ஏதேனும் தீங்குகள் புரியப்பட்டதுவோ.

(பிரவேசித்தவள்) விருத்தம்.

என்னென்று சொல்வேனந்தோ என்னுயிர்ச் சகிகாள்நம்ம ம்
மன்னவன் ஜனகராஜன் தலைதனைவா ளால்வெட் டி
பின்னுமம் மடநல்லாளைப் பிடித்துக்கொண் டெய்தவிங்கு ம்
துன்னுமைமலை போலன்னோன் துரிதமாய் வருகின்றா ல்.

(மாயாசீதை.) ஹா, அந்தோவந்தோ என்செய்வே னென்செய்வேன்

இராகம் நீலாம்புரி சகானு. சாப்புதாளம்.

கண்ணிகள்.

அய்யய்யோதெய்வமே, அனியாயத்தெய்வமே, அவத்திற்சோதித்தா யே
தெய்வமே
எய்யாக்கவலைக்கடல், மைய்யத்திலாழ்ந்தேனே, இனியென்செய்வேன ய்
யோதெய்வமே
அருமைத்தம்பியாகிய சீர்பெருமையாயெனைப்பெற் றனுபவித்ததிதுவோ விதி
யோ
[illegible] கருமமோவிளைந்ததே சண்டாள அரக்கன்செய்சதி
யோ
[illegible] யாளையழைப்பேனோ, அஞ்சேலென்பதும் யெனக்
காரோ
[illegible] அம்மாவென்றழைத்தெனை உச்சிமுகந்திடுவாரா ரோ
[illegible] கல்யாணஞ்செய்து காட்சிகண்டிருந்தாலாகாதா
[illegible] பாக்கியஞ்செய்திலேனோ பழிகாரியானேனே தா தா
பாவியா[illegible]ன் தீவினைபுரிந்திங்கு படபடெனவருவதா லே
[illegible] ஆவிபொருந்தலாமோ பூவையரேயினிமே லே.

(என்றலறிகொண்டே எழுந்தோடுகின்றனள்.)

(சவரர்.) ஹா, இவ்வனியாயத்திற்கென்செய்வோம் எனப், பின்றொடர்ந்தோடுகின்றனர்.

(இராமர்.) பரபரப்புடன், கிட்டவணுகி.

விருத்தம்.

அஞ்சேலஞ்சேல் கண்மணாட்டி ஆருயிர்ச் சனகமா தே
வஞ்சராலுபகாரம் வருமென்று நினைக்கவேண் டா
மிஞ்சுமிவ் வரக்கர்தம்மை வதைத்திடவேண்டி யென்றோ ல்
வெஞ்சரங் கோர்த்திலங்கு வென்றியிற் சனத்தந்தா னே.

(இராவணன்.) பயத்துடன், மாரீசனிடம், இரகசியத்தில், ஹா, மாரீசா, என்ன இவ்வாறு மொழிகின்றனன். இப்பொழுதிதற்கென்செய்வோம்.

[மாரீசன்.] இரகசியத்தில்.

விருத்தம்.

கருத்துடன் பூசினிக்காய் களவுசெய்திட் டோன்றோளை த்
திருத்தமாய் வருடலென்னச் சிறுபிள்ளைத் தனமாய்ச்சொன்னாய்

உரத்தராகவனோ நம்மை உற்றவனென வுட்கொண்டா ன்
அரற்றிடா திருப்பாயிச்சொல் லவர்களைக் குறிப்பதா மே.

ஷ (இராமர்) விருத்தம்.

திங்கினைச் சனகன்பாற் செய்தசக்ரீவன் றன்னைச்சி றி
யீங்குயிர் பறிப்பனிப்போ திருந்தவெம் பகழியா லே

(காசிபர் வசனம்.) அவ்விதேகன்பால் திங்குபுரியயாதுகாரணம் ஏதே து நம்புதற்கிடமில்லை, எனெனில்.

ஷ ஷெ விருத்தம்.

ஓங்குபெண் கேட்பதற்கும் உளமிலன் ஜனகன்பா லே
தாங்குநட் பதனலந்தத் தசக்ரீவன் சதிசெய்வா னே.

[கராளன்.] மாரீசனிடம், இரகசியத்தில், எல்லாவற்றிலும் விருத்த மேசெய்து வருகின்ற இப்பிராமணப்பயலை அதஞ்செய்யவேண்டும்.

[மாரீசன்.] இது நிற்க.

விருத்தம்.

வச்சிரக்கடினக்கைக் கொடுபுடைக்க வணங்கியமுகத்தைராவதத் தை
புச்சத்தைப்பருகியோட வொட்டாமற் புரிந்தும்பர் புகழினைத்துலைத்த
மெச்சிலங்கேசன்றனை வதைத்திடுதல் மிகவெளிதாய் நினைக்கின்றான்
இச்சிறுமனிதன் ராமனைச்சயிப்பர் யாரேயதுகாண நாமெலாமிறந்தோம்

[பிங்களன்.] அதிற் சந்தேகமா.

[கராளமாரீசன்.] ஒருவருக்கொருவர் பயத்துடன், பிங்கள காசிபர்க ளின் வார்த்தையினால் ஒருவர்க்கொருவர் வர இறங்க விழித்தவர்களாய் இரா மனிடம்.

[வெளிப்படையாய்] மாரீசன்.

இராகம் அடாணா. ரூபகதாளம்.

பல்லவி.

சாமி யீதென்னயோசனை இவனைக்கொல்ல
தானோ மஹாராஜ னே.

அநுபல்லவி.

பூமிபுகழ் வீரர்க்குள் தலைமையா மாண்பிள்ளை
நேமமாய் ராமனென்று நீயிருந்தென்ன கொள்ளை. [சாமி]

சரணங்கள்.

ஏதுகாண் கொட்டிஞற்றேன் கொட்டாட்டிற் பிள்ளைப்பூச் சி
என்பார்க ளறியாயோ யிதெல்லாமிச் வேச்சு
பாதக அரக்கர்சொல் நீதியாய்க் கேட்கலா சு
பழமையா மெங்கள்சொற் பாலுங் கசப்பாச் சு. [சாமி]

வஞ்சகமாய் வந்தவர் நேரேபோவாரோ சாது
மயிலே ஓரிறகு தாவென்றா லதுதாறு து
மிஞ்சுமிவர்மே லென்ன தாக்ஷிணியமதை யோ து
விளையாட்டல்ல வியவரைக் கொல்லவேணு மிப்போ து. [சாமி]

கனைகடற் பொங்கினுற் கரைகொள்ளுமோ அனேக ங்
கடைக்கண் சிவந்தாலுனக் கெதிர்நிற்குமோ லோக ம்
மனமடமை யாலிவர் அறியாதுனது சினேக ம்
மனதிற் பாராட்டிவந்தார் அதிலுமுண்டோ சந்தேக ம். [சாமி]

[என] இராமனைத் துறைசெய்துகொண்டு (தியானஞ்செய்கின்றனன்.
[காசிபர்.] திக்கிடென, உடல்கடுங்கிக்கொண்டு.

விருத்தம்.

வையகம் புகழயோத்தி மன்னவ ராமச்சந்த் ரா
வெய்ய மாரீசமாயம் யிதனைப் பொறுக்கல் வேண்டு ம்
தெய்வமே கண்கெட்டதோ திக்குவேறுண்டோ உண் மை
பொய்யதாய்ப் பொய்கள்மெய்யாய்ப் போனதென் கலியின்கோ ளோ.

(மாயாசீதை) விருத்தம்.

தலமிதி நெருக்கமான தருக்களினூடு தோன்று ம்
பலமதாய்ச் சொலிக்கா னின்றபாவகந் தன்னிலிந்த ச்
சிலையேற்றிப் பாய்ந்துதீர்ப்பேன் சீர்தந்தை யிழந்தசோக ம்
நலமகா புருடனுலே நான்கொள்வேள்ச் சுறழுந்தா னே.

கலிவிருத்தம்.

ராம ராம நயனுபி ராம னே
எ மனுளா ரவிகுல சோம னே
வேம னற்குழி வீழ்ந்துன் னிமித்தமாம்
காம வேட்பகை கணத்திற் றீர்ப்பனுல்.

என்று சென்றனள்.

[பிங்களகாசிபர்.] தன்னுள், ஹு, ஹு, மாரீச மாயாப்பிரயோகத்தால் நடக்கிற சங்கதிகள் அடடா, என்னென்ன ஆபத்தோ, அதிசயமாயிருக்கின்றது.

(வெளிப்படையாய்) விருத்தம்.

ஏதய்யா ராமச்சந்த்ரா யித்தனைமோக மெல்லா ம்
சூதய்யா அரக்கர்செய்கை துங்கரியறியா துண் டோ
ஓதய்யா அரக்கராமென் றெங்களையுளத்திற் கொண்டா ய்
நீதய்யா யிதெல்லாம் நன்றாச்சிந்திக்க வேண்டும்சா மி

[இராமர்.] நல்லசிந்தனை, இதிற்சிந்தித்து யோசிக்கவேண்டியதாயிருக்கின்றதோ.

விருத்தம்.

தேகத்தைத் தீயில்வீழ்த்துஞ் செய்கையில் முயன்றுகொண் டே
ஆகத்தி லெனைநினைத்தென் மேலுள்ள ஆசையா லே
பாகொத்த மொழியாள்சீதை படித்திடுவார்த்தை யென்றா ற்
சாகத்தைக் கெடுத்தென்மர்மம் தனையறுக்கின்ற தந் தோ.

காரளன் சிங்காரக்கவி.

அடிக்கடிமாயையென்று, படிக்குமிவ்வரக்கர்தம்மை,
நொடிக்குளுந்துங்கராமா, மடித்திடவேண்டுங்கண்டாய்.

[சகியர்.] பரபரப்பொடு.

விருத்தம்.

மாதரசேநமதையாவின்மரணவார்த்தையினில்வருசோகநமக்கெல்லோர்க்கும், பேதமிலாததுகாலேநீமுன்னாலேபிரயாணஞ்செய்திடுநேலன்பெண்பாவாய், வேதனைகொண்டுன்பின்றொடரொம்மையாளவேண்டியதுன்கடமையன்றோவிதேகநங்கா, யேதடியுன்பிரிவும்வந்தெய்துமாகிலெம்மையுநம்பிடவேண்டாமிறப்பமந்தோ.

ஹா ஹா, சுடு சுடு, குடிகெட்டது குடிகெட்டது, அக்கினிச்சுவாலையிற் சானகி பாய்ந்துவிட்டனளோ.

இராகம் காப்பி.

கண்ணிகள்.

சானகியேமைதிலியே சஜ்ஜனவாச்சலி யே
மானவிதேகன்குல மூவிளக்கேபோனாயோ டி

வச்சிரமேமாணிக்கமே வாடாமருக்கொழுந் தே
உச்சிதமானரத்தினமே ஓமணியேபோனாயோ டி.

[வசனம்.] ஹா, ஹா, அழுதென்ன கதை, இதில் நஞ்சோகமாறுமா, நம்மாருயிர்ச்சகி, எவ்வழிசென்று, எவ்விடத்தில், எப்படிப்பிராணனை, இழந்தனளோ, நாமுமவ்வழியேசென்று, அவ்வக்கினிக்குண்டத்திலேயே ஆவியிறப்போம்.

[எனக்] சென்றனர்.

[இராமர்.] வில்லைக் கீழெயெறிந்தனராய் வயிற்றிலும் வாயிலுமடித்துக்கொண்டு.

இராகம் காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

என்றுயிர்க்குயிரான கண்ணாட்டியே அடி.
எழிற்சீதையே நீயுமிறந்தா யோ.

அநுபல்லவி.

அன்னியபாயமிது சொன்னாலெவர்க்குமேச் சே
முன்னாட்செய்சற்பனையோ, புண்ணியமெல்லாம்போச் சே. [என்]

சரணங்கள்.

வடிவழகியேயுனை மனதிற்கொண்டேனே மே
மன்மதவிகாரத்தால் வாடியிறந்தேனே மே
பிடிஇடைச்சனகியே உன்றன்கனத்தை மே
பிடித்துமருவுமுன்னே மடிந்ததென்னதனை மே. [என்]

எண்ணிக்கோசிகர்பின்னை யேற்றுக்கொண்டதும்போச் சே
இதுமட்டிலுமழைத்து வந்ததும்வீணாச் சே
வெண்ணை திரண்டுவரத் தாழியுடைந்தயேச் சே
வீணமனப்பால்குடித்தது வெனஇதுமாச் சே. [என்]

மயிலேயுனையரக்கன் வந்துதொடுவா னோ
வஞ்சகஅரக்கனை வைத்துப்பார்த்திடுவே னோ
அயில்விழியேயவனைக் கொல்லாமல்விடுவே னோ
அனியாயமாயிறந்தா யதுசகித்திடுவே னோ. [என்]

ஹா, ஹா, இனியென்னகதி கஷ்டங்கஷ்டம்.

விருத்தம்.

என்மனோரதத்தருவேர் பரிந்தழிந்ததே யிப்புவிக்கெழிற் பெருஞ்சேமை
தின்மையேயாயின தயன்புகழ்குறைந்தது தீர்ந்தது திருச்சுருணாந்த   ம
வன்மைசேர்மாரன் மண்டலஞ்செயிக்கும் மதமெல்லாமிறந்த தம்மங்   கை
தன்மனங்கொதித்து தந்தையின்மரணத் தாலழற்பாய்ந்த தகூண   மே.

[மாரீசன்.] தன்னுள், இவனுக்கு சோகாக்கினியை விருத்திசெய்கின்றேன்.

[வெளிப்படை.] ஆ, ஆ, நீயிவிவள் மூழ்கினளா.
ஹா, ஹா, அந்தோ வந்தோ ஹா, ஜானகி.

விருத்தம்.

உயர்மகமதனி லுற்பவித்தவளே உத்தமவிதேக நற்குலத்து   ச்
சுயம்பிரகாசத் தொளிர்மணிவிளக்கே சொற்றிரிபுவன சுந்தரி யே
நயகுணராம மயமதாஞ்சிவ நங்கையேநீயுஞ் செந்தணற்பாய்   ந்
துயிரிறந்தனை கொலுனக்கு மிவ்விதியோவூர் தெய்வவிவரிதம்லோகோ.

[எனப்] புலம்பி மூர்ச்சைகெட்டுக் கீழே விழுந்தனன்.

[கராளன்.] மாரீசனைக்குறித்து, ஹா, காசிபா ஆசுவாஸம்பெறுவாயாக, ஆசுவாஸம்பெருவாயாக, எனத்தேற்றினன்.

[இராமர்.] ஹா, காசிபன்றன் நமக்கு முன்றியே மோகத்தையடைந்தனன்.

[இராமர்.] சோகவேகத்துடன்.

☞ விருத்தம்.

மலையின் மீதேறிக்கீழே மடமடென்றுருள் வேன்கொல்   லோ
அலைகடலாழ் வேன்கொல்லோ அலமுண்டிடு வேன்கொல் லோ
குலைசெய்து கொள்வேன்கொல்லோ

[கராளன்.] தன்னுள், அடடா, க்ஷத்திரியப்பயலே, தாடகை சுபாகு இவர்களைப்போய்க் கேட்கக்கடவாய்.

[வெளிப்படை.] மாரீசனைக்குறித்து, ஓ, ஓ, காசிபா இங்ஙனம் மயங்கினுல் நமக்கு கதியாது கொல்.

[மாரீசன்.] சற்று மயக்கந்தெளிந்து, நம் உயிர்ச்சகனுக்கு யாதுகதியோ அதுவேயாம்.

☞ (இராமர்) ஷை விருத்தம்.

குறித்தனல் தனில்வைதேகி
நிலமை யெய்துவன்கொல்

[மாரீசன்.] தன்னுள், இதுவேசரி, எங்களுடைய கோரிக்கையெல்லாம் இதுவன்றி மற்றியாதுகொல்.

(வெளிப்படை.) ஓ, நண்பர் நாயகா அவளுன்மேல் நாட்டிய அடங்காத ஆசைவிசுவாச நேசத்திற்கிதெவ்வளவு.

☞ (இராமர்) ஷை விருத்தம்.

வேறுநிவிர்த்தியென் மனநோய்க்குண்டோ.

(பிங்களகாசிபர்.) இரகசியத்தில், அந்தோ வந்தோ இன்னிசிசரர்களின் மாயாவிநோதங்கள் அதிசயிக்க யோக்கியமாயிருக்கின்றன. எதார்த்தமான நாமே, நமதிஷ்டனுக்கு கொஞ்சமேனும் நம்புதலுக்கிடமில்லாதவர்களாக ஆய்விட்டோமல்லவோ எனக், கிலேசத்தை அடைந்தனர்.

(இராமர்.) சோக ஆச்சரியத்துடன்.

விருத்தம்.

செந்தளிர்ச்சயனத் திருந்துசேடிய ராற்சேவித்துப் பணிசெயப்பெற்று
சந்திரகலைபோற் றனுவிளைத்தொளிக டாங்கிக்கருணந்தவடிவாய்ச்
சுந்தரமிலங்கயிருந் துவன்னங்கை தொல்லையிக்கதிகொண்டாளென்றால்
இந்தவன்றுயரம் சகித்திடவசமோ யென்னதானினிச் செய்குவேனே.

(நல்லதிருக்கட்டும்) யானே, இதோ இருக்கிற பெரியகரும்பாறையிலேறி அப்பாற் சொலிக்கின்ற அக்கினிக்குழியில் யென்மனோரதத்தைச்செய்கின்றேன்.

(என) பாறையின்மேல் பாதத்தை நாட்டுகின்றனர்.

(பிங்களகாசிபர்.) தங்களுக்குள், அந்தோ வந்தோ.

விருத்தம்.

அந்தோகோ இனியென்செய்வோ மரக்கரா லாவிபோக்க
வந்தோமிப் பயல்களாலே வஞ்சிக்கப் பட்டோமிக்க
நொந்தோமென் றுறைப்பாரகொல் நொடியினிற் பதிலமைத்துச்
சந்தோடம் நமக்குண்டாக்குந் தந்தைகோசிகர் பாற்றுனே.

(எனப், புலம்பினராய் பார்த்துக்கொண்டிருந்தனர்.

(மாரீசன்.) தன்னுள், என்கோறிக்கை பலிதந்தான்.

என, ஆனந்தபரவசத்தை அடையலாகின்றன்.

(வெளிப்படை) விருத்தம்.

அனுசகராளா நம்மளன்னை தாடகையைக் கொன்ற
மனிதனிப் பாவிராமன் மாயைமைதிலி மூழ்ந்திட்ட

கனலினில் வீழ்கவென்றே கல்லின்மேற் காலைவைத்தா ன்
இனியென்ன பயங்காண்டம்பி ஐயஞ்செய மிதனைப்பாரா ய்.

(சாளன்.) புருவங்களை நெறித்துங் காரத்துடன், இப்பொழுதொன்றுஞ் செப்பிடவேண்டியதில்லையென்பதாக முகத்தை அலைத்துச் சாடைசெய்தனன்.

(பிங்களன்.) காசிபனுடைய கையைதட்டி, நகைத்தனன்.

(காசிபர்.) ஓ, ஓ, வரசக, ரகுநாயகா, நுன்றன் உண்மைச்சிந்தைக்குகந்த, இந்த விசுவாசநேச காசிபன் பேசிய வாசகம் நுன்செவிக்கேறிற்றா.

(இராமர்.) ஆ சங்கையுடன், இதுவென்சொல், இவனிடம் [illegible] பியது [என முகத்தைத் திருப்பினர்.

(மாரீசன்.) கராளனைக்குறித்து, இரகசியத்தில், தம்பி [illegible] சந்தோஷபரவசத்தினால் அறிவிழந்தவனாகி ஆலோசியாதிங்ஙனம் [illegible] டேன், இனியென் செய்குவாம்.

(கராளன்.) மற்றியாதிருக்கின்றது.

விருத்தம்.

விரும்பி ஆக்கிடப்பொருத்து வெந்தறாமிடப் பொருக் கா
தருந்திநாப் பொத்தபின்னர் ஆஆவென் றலறுமாப்போ ல்
தரும்பிற யாசமெல்லாம் சதுரமாய்ப் புரிந்தந்தத்தி ல்
திரும்பி மூடத்தனத்திற் றியங்கினாற் செய்வதென் னே.

[இனி மான்வேடமெடுத்தோடவேண்டியதுதான்.]

(——) திரை.

இராகம் தனுசு. ஆதிதாளம்.

பல்லவி.

ராமா ரகுராமா ஜயஜய
ராமா ரகுராமா

அநுபல்லவி.

ஸ்ரீமான் தசரத சோமானருள்தவ
பூமா பலவீமா ஜயஜய (ராமா)

சரணங்கள்.

கோசலைபாலா குணநய சீலா
நேசருக்கனுகூலா ஜயஜய. (ராமா)
குவிபுயமந்தரா கோமளசுந்த ரா
ரவிகுலராமச்சந்த்ரா ஜயஜய (ராமா)

எல்லாரும் வியப்புடன் நோக்குகின்றனர்.

(சுரானமாரீசர்.) இரகசியத்தில், இதுவென்கொல்.

விருத்தம்.

சிகாறுகமானஞ் செய்திடவெண் ணிராகவன்சிலையி லோரடிவைக்கவு ம்
நிகர்த்திடந்த வப்பாறையே யோர்பெணாய்த் திவ்யமங்களரூபமா ய்
பொகாம்ற் கண்முகிற்குழல்கனதனங்களாய்ப்புகழ்சீறையுடையங்கமாய்
சுத்மொருத்தி முனிநாரியாய்க்காண்கிரு ரினியென்னசெய்வமந் தோ.

(இதுவென்கொல்) எனச் சிந்திக்கின்றனர்.

• (இராமர்.) இவர் ஆரோ, தாயார் கௌசலையைப்போலழைக்கின்றனர்

(அப்பால், முனிபத்தினி பிரவேசிக்கின்றனள்.

(முனிபத்தினி) விருத்தம்.

அருந்தவக் கொழுநாட்ட சாபத்தாற் கருங்கலா கி
வருந்தி னேன் வெகுநாளாக மனுகுல மணியிரா ம
பரிந்துன பொற்பதத்தூளாலே பரிசுத்த மானேன்கண்டா ய்
தெரிந்திடா யென்னைக்குழந்தாய் தேவியகலிகை யென் றே.

(இராமர்.) நன்றுள், இவ்வம்மணியை, கௌசிக முனிவரால், அடிக்கடி செய்லவைக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

(வெளிப்படை.) ஓ ஜனனீ, ஓ பகவதி, தாசரதியாகிய இந்தராமன் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கின்றனன்.

(முனிபத்தினி) சிங்காரக் கவி.

நேசமடியனைது, மாசெலாந்தீர்த்த
கோசலகுலப்பிர, காசனேவாழி.

(பிங்கள காசிபர்.) கிட்டவருமுனி, ஓ அம்மணி, பகவதி, சதானந்தஜனனி, அனந்தவந்தனம், அன்புடன்றந்தனம் [எனப்பணிந்தனர்.

(அகலிகை.) குழந்தைகாள், சிந்தித்தகாரிய முந்திக் கைகூடுமோல்.

(இராமர்.) அன்னாய், இன்னவர் யார்கொல்.

(அகலிகை.) குழந்தாய், கோசலை தனயா.

விருத்தம்.

இவன்றாய முனிவர்சீடன் எழிற்பெரு காசிபன்று ன்
இவனுன்ற னுயிற்குயிரா யிருக்கின்ற பிங்களன்று ன்
இவனே மாரீசப்பாவி யிவனே சுராளத்துரோ கி
இவையெலா முனைமோகிக்க வியற்றிடு மாயையை யா.

(என) கைநீட்டிக் காண்பிக்கின்றனன்.

(கராளமாரீசர்.) பயத்துடன், மான்வேடங்கொண்டு ஓட்டமெடுத்,
னர்.

(அகலிகை.) குழந்தாய், ராமபத்திரா.

விருத்தம்.

பாவிவல் லரக்கரந்தோ பரிந்துமா னுருவங்கொண் டு
தாவியே யோடுகின்றூர் சதிசெய்யிப் பயல்கடம் மை
ஏவெடுத் தென்முன்பாக யெமபுரிக் கேவிவிட் டு
வாவிரைந் தொருநொடிக்குள் மனுகுல மணிவிளக் கே.

(இராமர்.) கோபமூர்த் தன்னியத்துடன், அடடா, குடிகேடர்கா
பதிதராக்ஷஸ நீசர்கான், எங்ஙனம் ஓடுகின்றீர்கள், எனப்பின்றொடர்ந்நு
ன்றனர்.

(பிங்கள காசிபர்) ஆசிரியவிருத்தம்.

பஞ்சசதகோடிப் பிரபஞ்சச்சொரூபச் சுபாவதத்துவங்களெல்லா
பரிவோடும்அகளங்க வறிவினலறிகின்ற பகவதி பராத்பரத்தி
னெஞ்சார்ந்தகம்நீங்கி நிஷ்டைபரிபூர்ணராய் நித்யராய்த் தானதா
நிமலரா யாதிகுருவான கௌதமபத்தினி யுனதுசாபம்நீங்
கஞ்சானனீ னின்சொரூபம் அடைந்ததுங் கருதியுன் சொலினலிவ
கள்ளராக்கதரைக் கடிந்திடச்சென்றதுங் காட்டிலுயிர் போய்த்திரும்
அஞ்சாதுயாங்களு மூவருதிருக்கின்றது மாதிதெய் வாதின
அகிலபுவனங்கட்கு மனுகுலம் தெய்வமல்லாது வேறேதன்னை

(அகலிகை.) பாலர்கான், நன்று நன்று யுக்தமாகச் சொல்லினீர்கள்
பாலர்கான், கொஞ்சம் எட்டிநடந்து இங்ஙனம் நோக்குக நோக்குக.

விருத்தம்.

சக்கரம்போற்றனுவளைத்துநாணிபூட்டி சாமிரகுராமன்விடுசரத்துனலே
வக்கிரதந்தக்கராளன்றன்கண்டமறுபட்டுப்புனைதருமார்புவடிவம்நீங்கி
உக்கிரமாந்தன்னுருவோடிறந்துவீழ்ந்தானுயாந்தோங்கிவளர்ந்து சொலி
தெழும்புபவெங்காட்டுக்கினியாலெறிபட்டுவிழுந்தாளம்போலதிசயம்
ரீரமரர்ஆர்க்கின்றூரால்.

[வசனம்] ஓ, ஓ, இன்னமும் மாரீசனே, மாயையால் நயனமார்க்க
திற்குப் புலப்படாமலே மாயமாய்விட்டான்.

ஆகவே, அம்மாரீசனைமட்டும் வதைசெய்யாமல் விட்டுவிட்டு சராரோ
னு வுடைக்கையனுய் குழந்தை இரகுவீரன் திரும்பிவருகின்றனன்.

(அப்பால்) சராரோபதனுவுடைக்கை ராமன் பிரவேசிக்கின்றனன்.

(இராமர் வசனம்.) அம்மணி, தெய்வத்தன்மைபொருந்திய மஹா பரிசுத்தமுள்ள பகவதிதெய்வாதீனமாய் யாம் நின்னாலனுக்கிரிக்கப்பெற்றனம்.

(அலிகை.) குழந்தாய் கௌசல் யானந்தவர்த்தனா,

இராகம் பூபாளம் ஆதிதாளம்.

அப்யாரகுராமா, ஆதித்தியகுலராமா, ஆனந்தராமா, அபிரா மா
வையகம்புகழ்ந்திடும்செய்யசெங்குமுதவாயனேமங்களகுணராமா
சிந்தையிற்சினத்தாலே எந்தன்கணவர்கருஞ்சிலையாய்ச் சபித்தாரெனையசெய்ய
உன்றன்பதாம்புயத்திற்சிந்தும்பராகத்தாலே ஹுடையவங்கொண் டே
னய்யா
பத்தியாயுன்பதபதுமம்பணிவோர்க்கெந்தப்பதங்கிடைக்குமோஅறியே னே
குற்றந்தீர்ந்தேனருள்கொண்டேனுன்மகிமைகூறயாராலுண்டுபெறியோனே
கணவர்க்குப்பணிவிடைகருதிமுன்போற்செய்யக்காதல்மிகுந்தேன்விடைதா
குணபூடணரகுகுலநாயகவருள்கூராய்விடைதாராய். [ராய்

(இராமர்.) அம்மணி, இவ்வளவு செப்பல்வேண்டுமோ, நல்லதப்படியே ஆகட்டும் நமஸ்கரிக்கின்றனன்.

(அகலிகை) விருத்தம்.

பங்கயப் பதிக்குலத் துற்பன்னனே ஜனகிதன் னை
மங்கள மணம்புரிந்து வல்லரக்கரை மடித் து
தங்குமுப் புவனங்கட்குந் தானதிபதியா யார்க்கு ந்
துங்கநாயகனாய் நாளும் சுகமொடு வாழிவா ழி.

என, ஆசீர்வதித்துச் சென்றனள்.

(இராமர் ஆதரத்துடன்) பிங்களகாசிபர்களைக்குறித்து, [வசனம்] உயிரிற்சிறந்து, ஒளிபெற்றிலங்கும், உத்தமாகண்பர்காள், உமதுமுகாரவிந்தங்களில் எதிட்டுநோக்குவதற்குக்கூட என்மனதிலச்சையை அடைகின்றது.

இராகம் எதுகுலகாம்போதி. சாப்புத்தாளம்.

பல்லவி.

வஞ்சகஅரக்கன்செய் மாயத்திற்குள்ளாகி
மயங்கிமிகவருந்தினேனே.

அநுபல்லவி.

அஞ்சலென்றுங் களையாளாமல் நான்
கொஞ்சமுமுங்கள் சொற்கேளாமல். [வஞ்சக]

சரணங்கள்.

எதிரிலுங்களைப்போல் மாயையாலுருக்கொண் டு
இராக்கதரொன்றா னென்முனுங்களைக்கண் டு
மதிமோசத்தால்நானும் மெய்யென்றெண்ணிக்கொண் டு
மயங்கிக்கிடந்தேனே யென்னைப்போலெங்குண் டு. [வஞ்சக

உளத்திற்கபடங்கொண்டு ஜனகியைப்போ லே
ஒருத்தியைக்காட்டினான் மாயையினா லே
வெளுத்ததெல்லாம்பாலென் றெண்ணினேனீயின்மேலே
வீழ்ந்தவளுடனானும் விழமுயன்றேன்மென்மே லே. [வஞ்சக

உள்ளத்திலரக்கனை மெய்யென்றெண்ணினே னே
உங்களையரக்கரென்றெண்ணிக் கொண்டிருந்தே னே
கள்ளனைப்பிள்ளையென்று பிள்ளையைமறந்தே னே
காக்காச்சிப்பியைவைத்து வெள்ளியைத்துறந்தே னே. [வஞ்சக

(பிங்கள காசிபர்.) ரகுதிலகா, இதில் வருத்தப்படுவதேன். மாரீச
மாயையன்றோ இவ்வளவு விரோதஞ்செய்தது.

(இராமர்.) வாஸ்தவமே, ஆயினும்.

விருத்தம்.

அன்னைதாடகை யைக்கொன்ற அடத்தினாற் சிதையென் று
மன்னுமரக்கத ரென்பாற்செய் மாயையில் மயங்கிட்டாலு ம்
இன்னவர் நண்பரென்ன யினந்தெரியாத தல்லா ல்
பன்னுமப் பேர்களான பதங்களில் மயக்கமுண் டோ.
(ஆகையால், எனதாசை நேசர்காள்.)

அடுக்குமொழி.

இங்ஙனம்நடந்த, சங்கதியாவும்,
நுங்கண்மனம்விட், டெங்கும்விடாதீர்.

(காசிபர்.) வசனம். அங்ஙனம் சரியே, இஃது இளையவள்ளலிலக்குவனிட
தும், பகவான் கௌசிகரிடத்தும் தெரிவிக்கவேண்டுவதுதான், எனெனி
இம்மாயாப்பிரயோகங்களுக்குப் பதில் விளைவிக்கக்கூடியவராகையால்த்தா

(இராமர்.) ஆனால் சரியே.

(——) திரை.

ஓ, ஓ, சேனாதிபர்காள்.

விருத்தம்.

வேட்டம்நாடிய ராமன்செல்வழி யிதுவிலங்கினப் பிணங்களாலறிவீர்
ஓட்டமாய் வருகண்டீரவுங் கண்டீரோரடியா லிதைமாய்ப்பீ ர்

கோட்டுவெங் கரிகளோடசற்பிடி பின்கொண்டலிற் குமரிகொக்தே க
ஆட்டங்கொ ணயனமானினமினை விட்டகன்றிடுங் கூச்சலிடாதீ ர்.

(இராமர்) ஓ என்னைத் தேடிக்கொண்டு வருகின்ற நமது பரிஜனங்க
ளின் ஆரவாரம்போலும் கேட்கப்படுகின்றது.

(பிங்களன்) ஆம் ஆம் வாஸ்தவமே,

எங்ஙனமெனில்.

விருத்தம்.

படைபுரியும்போரொலியிற்சிங்கங்கர்ச்சனைசெய்யும்பதறியேங்கு ம்
நடைமலைகள்பல்லுகங்களோடிமிகத்தத்தளிக்கும்நயனங்கோட் டி
கடைமுதற்பற்காட்டிவலிக்கும்கவிகள்மரத்திலங்குங்கனருந்தத்தா ல்
அடிபொருபுல்வாயிழந்தகுட்டிதனைமான்முகக்குமணியார்கான ம்.

(காசிபர்) ஆம் ஆம் இதுவாஸ்தவமேயாம்.

(பிங்களன்) இஷ்டன், இரவிகுலசிங்கன், வேட்டைக்கு வந்து வெ
குநேரமாயிற்று.

(இராமர்) சுற்றி நாற்புறமும் நோக்கி, ஓ ஓ நமெத்தியானகாலம், அதி
கடோரமாய் விளைந்திட்டது போலும்.

விருத்தம்.

சஞ்சரிப்போர்தஞ்சரண் கடஞ்சமென்னச்சாயைகள் யாசிப்பதெனத்தா
ளிற்சார, வஞ்சகத்துமண்டலங் சண்டிடப்போற்பானு உச்சியின்மாகத்தே
றப்பிகங்கடாகம், மிஞ்சிடத்தங்கொழுனர் தருதளிர்களுண்ணுவேலைதகொ
ளவளியினங்கடம்பெண்டிற்குத், தஞ்சிறைதகள்விரித்துநிழற்றந்து வீசித்
தாபமதை நீக்குபகற்றருணந்தானே.

ஆகையினாலே இனித்தாமதிப்பது தகாது, அதிசீக்கிரம் நமது ஜாகையி
ல் ஸகந்தவார்த்தைச் சேருவோம்.

(என) எல்லவரும் சென்றனர்.

மூன்றாவதங்கம் முற்றிற்று.



நாலாவது அங்கம்

ஆரம்பம்.

(அப்பால்) கந்தருவன் பிரவேசிக்கின்றனன்.

(கந்தருவன்) இப்பொழுது,

விருத்தம்.

குமர்தளத்தொடு தாடகைப்பெணைக் கொல்கராள சுபாகு ஹை
சமரினிற்குலே செய்தனுப்பினன் சாமிராமனென் ஞட்டிற்கென்
றெமனனுப்பிடு வாசகந்தனை இந்திரன் கேட்டெண்ணுரு ன்
அமரரக்கரை வதைசெய்நாடகமதில் முன்வேடம தென்ன வே.

ஆகையினுற்ருன்,

விருத்தம்.

அகிலசுரவந்தித பதராவிந்தன் அமராவதிக்கரசனுகண்டல ன்
மகிழ்வுடனெனைச்சித்திராங்கதா நீவதைபடைக்கதை கேட்டிலங்கைதன்னில்
முகமிரண்டைந்துளா னின்னம்வேறுமுயல்கின் றகுதறிந்தொருகொடிக்குள்
மிகவிரைவில்வந்தெனக்கறிவித்திடவேண்டுமென்றேவினன்மேவிவந்தேன்.

சற்றுநிதானித்து,

விருத்தம்.

சதமகபதிதனக்குச் சதிர்குணராமன்மீ தி
லதிகமாய்ப்பொருந்துவாஞ்சை அதனினுங்கடி யிலங்கைப்
பதிதசக்ரீவன்மீது பத்துப்பங் கதிகமா ' (க
முதுபகைத்துவேஷந்தானே மூண்டிருக்கின்ற தந் தோ.

(இருக்கட்டும்) யானே மாயையாற்றரிக்கப்பட்டிருக்கின்ற இவ்விராக்கதவேஷத்தொடு. அதிகக்கட்டுக்காவலோடிருக்கினும், அன்னிசாசராராஜதானியில் சர்வ சாதாரணமாய்ப் பிரவேசிக்கத்தகும், ஆகையாலங்ஙனஞ்செய்கின்றனன்.

(எதிர்நோக்கி) ஓ, ஓ, இவளார் ஓரக்கி என்னையே, நோக்கித்திரும்புகின்றனள். ஆ! இவளோ என்னரூபம், என்ன அலங்காரம் அடடா.

இராகம் காம்போதி சாப்புதாளம்.

பல்லவி.

அதிரூபவதியிந்தமாதே அடட ஆனாலும் பேரழகி
அதுசொல்லொண்ணாதே (அதி)

அனுபல்லவி.

சதிர்பெருகு நீளமோ ரொட்டைச்
சாணளவு அதிலுஞ் சுருட்டை சுருட்டை
குதிரைரோமம்போற் செம்பட்டை உள்ள
குழலாடுகின்ற தலங்கோலஞ் சப்பட்டை (அதி)

சரணங்கள்.

ஒட்டகமுகம்போல் வதனமும் இவட்
கொருசிறுகிளாக்காயள வாயோர்தனமும்
வட்டமாமலைபோலோர் தனமும் துந்துபி
வாத்தியம்போலேவயிறும் வண்டிபோற்சகனமும் (அதி)

வாருகள்மலம் பாம்புபோலும் மத்த
மதகரியின்கால்கள்போலே இரண்டுகாலும்
தேகமிசைதொங்குகின்ற தோலும் எந்தச்
சீமையிலுங்கண்டதில்லை இப்படியானாலும். (அதி)

(இன்னமும்) விருத்தம்.

உருவமிப்படித் திகழ்கின்றதிலு முதட்டிற் குண்டலந்தூங் க
இருசெவிகளி னத்துப்புல்லக்குக ளிலங்கச்சுட்டி மூக்கிசை ய
கரமிரண்டிலும் பதசரங்களுங் கண்டத்திற் பாடகங்கலிக் க
வருமரக்கியின்பணியலங்காரவைபவ மென்னென்றுரைறவேன்.

(அப்பால், இராக்ஷஸி பிரவேசிக்கின்றனள்.)

(அரக்கி.) நீ, யாவனடா, கராளனு, அல்லதன்னியன்சொல்.

(கந்தருவன்.) தன்னுள், இவளுடன் ஸம்பாஷிப்பதற்கு இவன்தானே வழிகாட்டுகின்றனள்.

(வெளிப்படை.) ஆம், கராளனேதான்.

(அரக்கி.) வியப்புடன், ஆ, இங்ஙனங் கல்லுப்போல் விளங்குகின்றனையே.

விருத்தம்.

கனக்குறல்வா யரக்கியர்கள் கட்டியழவவர்கணவிற் கணவாஉன்னை ச்
சினக்கொடிய ராமசரம்செற்றது கொலங்தோவென் செய்வதென்னை த்

தனிக்கவிட்டுச் சென்றனையென் சாமிநுயர்சகியனெனத் தானாக்கண்ணுள் உனக்குரியாள் கழுகுமுகியாரி லடித்தழுவதின்ன யொழிந்தாளல்லள்.

(கந்தருவன்.) தன்னுள், ஆ, கராளனென்பவனுடைய கனவியோ அக்கழுகுமுகியென்பவள், ஸரி, ஸரி மிகவுமழகாயிருக்கின்றது, ஆனலும் வெகு பொருத்தந்தான்.

(வெளிப்படை.) அன்னவட்கிங்ஙனம் இயம்பியதார் சொல்.

(அரக்கி) விருத்தம்.

தாடகைசுபாகுவுங் கராளனுந்தான் சாமிராகுராமனெனுந் தனியனாலே கேடடைந்தார் நமனுலகுசார்ந்தாரென்னக் கீழ்மூச்சுமேல்மூச்சோடலறியா வென், ரேடிவந்திலங்கேசன் றனைக்காணுமலுற்றபிரகஸ்தன்முதலோர் பாலோதி, நாடினன்கோகர்ன்ன மிசைத்தவஞ்செய்தற்கு நவில்சோகமா மனமாரீசனய்யா.

(ஆகையாலிந்த ஸமாசாரம் இங்குள்ளயாவருமறிவார்கள்.)

(கந்தருவன்.) ஓ, ஆனல் இலங்காபுரியில் இலங்கேசனில்லையோ.

[இராக்ஷஸி.] அன்றன்று, அதனால்த்தான்.

அகவல்.

என்றன்கணுளனை இன்புளமருளனை
மந்திரிவித்திச் சிக்குவன்மனையில்
எங்குற்றனனெறன் றெதார்த்தமறிந்து
இங்கெனக்குவந் தியம்புவையென்றே
அந்தமந்தோதரி அனுப்பினளென்னையே
வந்தனனன்னவன் மனையிற்காண்கிலன்
அன்னவன்மனைமா யாவதியென்பவள்
யென்னிடம்சில தெடுத்தியம்பிட்டனன்
போந்திவணுற்றேன் புதுமையறிந்துநான்
சேர்ந்தநின்காக்ஷியை நினைத்தெதிர்நிற்கிறேன்.

[கந்தருவன்.] மாயாவதி, வழுத்தியதென்சொல்.

[அரக்கி வசனம்.] அது மிகரகசியம், அதை யெப்படிச்செப்பலாகும், ஆயினும் இங்ஙனம் ஜனகராஜன் பக்கத்தைச் சார்ந்தவரொருவருமிலரே, அவர்கள் தீபாந்தரத்திலன்றோ, இருக்கின்றனர், ஆகையாற் சொல்லக்கூடும், கேட்கக்கடவாய்.

விருத்தம்.

மனிதனிராமன்மீதி லடங்காக்காதல் வகித்திட்டஜானகியை மணஞ்செய்தற்கு, சனகனிடம் தசக்ரீவன்ராமவேடஞ் சாரணனிலக்குமண வடி

வங்காதி, முனிமகன்றனுரு வித்திச்சிருவன்பூண்டு மூதிர்மாயையாலவனை மோசஞ்செய்ய, கனிவுடன்சென்றனனென்ன வறைந்தாளென்பாற் காரிகை மாயாவதியாள்காண்கராளா.

[கந்தருவன் வசனம்.] நன்று, நன்று, வெகு இணக்கமாயிருக்கிறது. அந்த ஜானகியினுசை இராமனிடமென்பது உலகம் யாவும் பரம்பிய சமாசாரமன்றோ.

[அரக்கி களிப்புடன்.]

விருத்தம்.

வல்லரக்கர் கோனுனதில் மயங்குறின் மனைவிபக்கல்
நல்லையிரு மடந்தையுற்ற கோர்க்ஷேமந் தன்னைச்
சொல்லியபங் கவடான்கொண்ட துயரொலா மாற்றிப்பின்னர்
நல்லபற்பல சம்மானம் நயம்பெறப் பெறுவன்மாதோ.

[கந்தருவன் வசனம்.] என், துக்கப்படவேண்டிய இடத்தில், சந்தோஷிக்கின்றாய், யாரோ, கராளனன்று, அன்னியன்றான்.

[அரக்கி.] திடுக்கிட்டு நடுங்கிக்கொண்டு, ஆனால் கராளன்கதி அவ்விதமே முடிந்ததாமோ.

(கந்தருவன்.) அதிலுஞ் சந்தேகமா.

(அரக்கி.) அந்தோவந்தோ, என் மனோரதம் வீணாய்முடிந்தது, நீ அன்னியனானால் யாவன்.

(கந்தருவன்.) யான் விபீஷணனுக்கனுசரன்.

(அரக்கி வசனம்.) நல்லதிருக்கட்டும், யானோ மஹாராஜாத்தியாகிய மந்தோதரியின்பால் [illegible] கேட்கச் செல்கின்றேன்.

[எனச்] சென்றனள்.

(கந்தருவன்.) யானோ.

விருத்தம்.

தசமுகன் கபடமெல்லாஞ் சனகன்பால் முன்புணர்த்தி
விசையுடன் விண்ணுறெய்தி விளங்கிடு குலிசக்கையான்
சசிமணவாளர்க்குப் பின்சாற்றுவேன் ஜானகிப்பெண்
நசைமணம் விரோதமின்றி நலம்பெற விசைப்பேன்நானே.

(எனச்சென்றனன்.)

(அப்பால், ஜனகராஜனும், சதானந்தரும் பிரவேசிக்கின்றனர்.

(ஜனகர்) விருத்தம்.

நிசிசரர்பதி வந்தென்பார் கேட்குமுன் னிருபனே
தசரதன் புதல்வனுக்குச் சனகியை மணஞ்செய்தி ய
நிசமென தாசையீதை நிறைவேற்றி வைப்பார்சொல் லோ
குசிக நந்தனராலுந் தான்கூடாத கொள்கைதா னோ.

இராகம் ஆரபி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னவாகுமோ அறியேன் சதானந்தரே.

அநுபல்லவி.

தன்னமையாம் சதானந்தமுனியே இங்கு
கன்னிமாமணந்தினிற் றெய்வம்நமதுபங்கி ல். [என்]

சரணங்கள்.

அந்தஅரக்கனென்ன செய்வானோவுபாய ம்
அவன்வந்துகேட்கி லதையிடவுண்டோ அபாயம்
இந்தஜனகிதன்னை அரசர்க்குமுன்னேயே ம்
இராமன்றனக்குமணஞ் செய்யவென்னபிப்பிராய ம். [என்]
எனதபிப்பிராயம்போற் பிணைகொண்டுமாமு னி
எந்தைகோசிகர் இராமனையழைத்துந னி
இனிதாய்வருவேனென்று சென்றார்காண்கிலன் ற னி
இராக்கதமோசமின்றிச் செய்வாரோயேதோவி னி. [என்]
கன்னியெழிற்ஜனகி தானொருகவன்மே லே
காதல்மிகமிகக்கொண் டிருக்கையிலே லே
நன்னயமாமணமென் னவிலாக்கண்மு லே
நான்காணக்கிடைக்குமோ யாதோயிவ்வே லே. [என்]

(சதானந்தர் வசனம்.) ஓ, மஹாராஜனே இதுவென்கொல், விசாரப்படவேண்டுவதில்லை, குசிகுலபயோநிதி பாரிஜாதராயிருக்கின்ற அந்த விசுவாமித்திர மஹாமுனிவரின் மகிமையென்ன, தெரியாததா, ஹ, ஹ, வீண் கவலை வேண்டுவதில்லை.

இராகம் கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தைக்கவலைவிடுவீர் மனச்சந்தேகங்கள்போக்கிடுவீர்

அனுபல்லவி.

விந்தைநரிக்கரிபயந்தே விலகிப்போமோ
அந்தராவணனிங்கு வந்தாலதனாலாமோ. [சிந்]

சரணங்கள்.

வாகாயுமதுகன்னி யோகமென்சொலவோவ　　ன்
பாகக்கோசிகர்பிணை யாகயேற்றுக்கொண்டதா　　ல்
மோகமையலொழித் தேகத்தைப்பணிசெய்　　ய
னேகயோகிமகிழ்வி தேகமன்றனவும　　து. [சிந்]

சொற்சந்செய்யவுஞ் சுரர்வர்க்கம்வர்க்கமாய்வந்　　தெ
திர்க்கமுடியாமலே வெட்கமுற்றும்உடல்　　ன
டுக்கமுற்றுந்துதித்து நிற்கவருள்செய்தவ　　ர்
மிக்கவன்பாய்ப்பிணை யிருக்கையிலேஉமக்கே　　ன். [சிந்]

வண்டேயெனுங்குழற் பூச்செண்டேயெனுந்தனங்க　　ற்
கண்டேயெனுஞ்சொல்சீதை பண்டேசெய்தற்றவந்　　தி
ரண்டேயிங்ஙனேவருக் கொண்டேவந்தெனப்பி　　ர
சண்டவிஜயகோ தண்டராமன்வருவா　　ன். [சிந்]

விருத்தம்.

சித்தமே காக்ரமாகச் செய்யவேக் கனியிற்று　　னே
க்ஷத்திரிய த்வமென்னுஞ் சயகநற் கட்டிதன்　　னை
வைத் துருக்கிப் பிரமயனைத்துயவ அவனியதா　　க்
நித்தியந் திகழுமனின்ற நிர்மல விசுவாமித்திர　　ர்.

(வசனம்.) ஆகையால கவலையடையவேண்டுவதில்லை, ஜானகிக்கும் இராமனுக்கும் கரக்கிரஹண மங்களம் நிறைவேறிடினும் திரிபுவன ஜயவீரனை, இராவணன் வந்தென்செய்வானே என்ற கவலையும்வேண்டுவதில்லை.

(எனெனில்.)

விருத்தம்.

இயல்பினிற்சிரம் பகமுதலத்திர சத்திரவேற்ற மந்திரங்க　　ள்
உயர்முனிகௌசிகர் கற்பிக்கக் கற்றுணர்ந்தோங்கு முதாரகம்பீரச்
சுயபலத்தினும் பதின்மடங்காகித் துலங்கிடு ராமனைக்கொண்　　டு
புயமலையரக்கர்பதியினைச்செயிக்கப் பொருந்திடுமையமேனையா.

(அப்பால், கௌசிகவேஷங்கொண்ட வித்திச்சிகுவனேடும், இலக்கும

ணவடிவங்கொண்ட் சாரணனேடும், இராமவேடங்கொண்ட இராவணன் பிரவேசிக்கின்றனன்.)

(இராவணன்) விருத்தம்.

வன்சுபாகுவினெடு வலியமாரீசனே மாயைசேர் தாடகையிவை
என்சொலிவிடுத்தனம் அன்னவரதனையியற்றுவனென்றிருந்தாலு ம்
இன்சொலச்சனகியின்கரம்பிடித்திடவேயியல்நரவடிவத்தைப்புனைந்து ம்
என்செய்வேம்மனதுதான்கொஞ்சமுஞ்சலியாதிருத்தலேவகிததிலவென்னே

(வித்திச்சிகுவன் வசனம்) ஓ, ராஜாதிராஜா மஹாராஜா இதுவென் சொல், நிர்னிமித்தமாய் இவ்வளவு கோழைத்தனம் வகிக்கலாகுமா.

விருத்தம்.

நலந்திகழ்நளினச்சோபைகொண்ணயனநாட்டமும்நாணிவிற்றங்கொள்
பலங்கொளுங்கரமும்நிலவம்புதம்போற்படிவமுந்திகழுமனப்பார்த்து க்
கலந்தொளிர்கருடமணிமுத்தாரம்போற்கதிர்பசும்புல்லருகலைந் த
மலர்ந்திடுமிலுப்பைமாலேசூட்டிடுவள்மங்கைராகவனெனமயங் கே.

(இராவணன்.) அதிற்கூட அவ்வளவாதிரமில்லை.
(பின்னையோவெனில்,)

விருத்தம்.

முன்னர்பொற் குறியிட்டநற் காங்களும் முகில்போன்
பின்னிவிட்ட தோர்பின்னலுங் கண்டனன் பேரா சை
துன்னுகின்றது மென்னெனி லங்கவள் சுபமேவு ம்
நன்னயந் திகழவயவ முழுவதும் நாடுற வே.

(சாரணன்.) இராஜாதிராஜா, மஹாராஜா ஒரே ஒரு விண்ணப்பம்.

விருத்தம்.

இரதியைப் பழிக்குமந்த யெழிலுடை நங்கைநின்பா ல்
வரித்துநன் மாலேசூட்ட வந்தபோ திருகண்ணு லே
சிரமுத லங்கமெல்லாந் தெரிசித்து மணந்துபின்ன ர்
இருபது கண்களாலு மிலங்கைபோய்க் காண்டல்வேண்டு ம்.

(இராவணன்.) முகத்தைச்சுளுக்கி, மிதிலேசனதிருப்பிடத்தையடுத்தனம்.

(இராவணன்) விருத்தம்.

சங்கரர் சடையிலங்குஞ் சந்திர ரேகைபோ ல
தங்கசற் கேதகைப் பூந்தனிமிறங் தழைக்குமே னி

மங்கைதேன் மொழியாளந்த வனமூலைச் சனகன்பா வை
எங்ஙனங் காண்கின்றாள் சொலங்ஙன மெய்திட்டோமா ல்.

(வாசற்காப்போன்.) பிரவேசித்து, ஜயஜய மஹாராஜா, விஜயீபவ,
(ஜனகர் வசனம்.) ரே, ரே, உஜார ஸேவகா, தெரிவிக்கவேண்டிய
தைத் தெரிவித்துக்கொள்வாயாக.

(வாசற்காப்போன்) விருத்தம்.

மகிபனே போற்றிபோற்றி வள்ளல்விதேகா போற் றி
பகலவன் குலத்தில்வந்த பாலக ரிருவரோடு ம்
இகபா முணர்ந்து மாயையென்பதைத் துலைத்தமுத்த ர்
மகமுனி விசுவாமித்திரர் வாயில்வந் தணுகினரா ல்.

(ஜனகர், அத்தியானந்தபரிதனாகி வசனம்.) பகவன், சதானந்தரே
திரிசங்குச்சுவர்க்க சிருஷ்டிகர்த்தரான நூதன பரமேஷ்டியாகிய விசுவாமித்
திரமுனிவர் இரகுபாலர்களோடு விஜயமாவதால் தாமே அதிசீக்கிரத்திலெ
ழுந்தருளிபாகி அர்க்கமுதலிய உபசாரங்கள்செய்து அழைத்துவரவேண்டும்
சதானந்தரே.

(சதானந்தர்.) நல்லதப்படியே செய்கின்றேன்.
(எனச்சென்றனர்.)
(சனகர்.) இதுவென்சொல்.

வெண்பா.

இல்லிடத் திராகவரோ டெய்தியுமிக் கோசிகனு ர்
சல்லிய வென்சிந்தை சவிக்கின்ற—தெல்லையற் று
மீதுசு பரங்களெனும் மீன்பற்றவே நளின ப்
போதாடு கின்றவிதம் போ ல்.

இதற்கென்செய்வாம்.

[அப்பால்] சதானந்தமுனிவரும், இராம லக்ஷ்மண கௌசிக வேட
தாரிகளான இராவணன் முதலானபேர்களும், பிரவேசிக்கின்றனர்.

[சதானந்தர்.] ஜனகரிடத்திலே, விசுவாமித்திராதியரொன்று, வித்திச்
சிகுவாதியரைக் காண்பித்தனர்.

[ஜனகர்.] ஆஸனத்தினின்றெழுந்துகொண்டு.

விருத்தம்.

அத்து விதத்தையன்றி யனித்தியமான வெல்லா ம்
மித்தை யென் றுணர்ந்து நான்குவேதத்தின் முடிவைச்சார்ந் த

தத்துவா தீதாபோற்றி சந்ததமகிமை தங்கும்
முத்தனே போற்றி விசுவாமித்திர முனியேபோற்றி.
[வீரத்துவஜனுகிய, விதேகன் நமஸ்கரிக்கின்றனன்.]

[வித்திச்சிருவன்.] அனககுல, ஜனகராஜா, நினக்கனேகமங்களமுண்டாருக.

[சாரணன்.] இரகசியத்தில், இராவணனைப்பார்த்து.

விருத்தம்.

புவனங்களெல்லாமிக்கப் புகழ்மக ராஜன்நீயே
தவமக டனைமணந்து ஜனகன்றன் மருசனுல்
அவன்மிகத் தன்யனன்றே அனேக மங்களமுண்டாமே
இவனது வாழ்த்தலாலோ எய்துவ திலங்கைவேந்தே.

(இராவணன்) களிப்புடன் ஆம், ஆம்.

(வித்திசிருவன்) புருவத்தைநெரித்து, நயனபாஷையில், இராவணனை ஜனகராஜனுக்கு வந்தனஞ்செய்யும்படி யேவுகின்றன்.

(இராவணன்) சாரணனிடம் இரகசியத்தில்.

விருத்தம்.

எண்டிசைக்கதிபர் தாமுமென்பதம் பணியவேண்டி
கண்டுகொர்த்திருப்பர் நாளுங்காதல் மந்தோதரிப்பேர்
பெண்டிஞேடேல்வந்தாற் பேச்சினிற்கழிப்ப தல்லால்
தெண்டனிட்டறியேனின்ன மிவனுக்கோ சென்னிதாழ்ப்பேன்.

என்மனம் இலச்சைஷ்ய அடைகின்றது, என்செய்குவேன்.

(சாரணன் தன்னுள்.) துர்அகங்காரத் துர்ப்புத்தி குடிகொண்ட இவனுக்கு, ஞானகிலாபமுஞ் சந்தேகந்தான்.

(இரகசியத்தில்) வெளிப்படை [வசனம்.] இராஜாதி ராஜமஹாராஜனே, எதிப்படி உத்திரவாகின்றது, காலத்திற்குத்தக்கபடி கோலமென்றுதையிலுங் கேட்டிருப்பதில்லையோ (எடுத்தவேடத்திற்குத்தக்கபடி நடக்கவேண்டும் மஹாராஜனே.)

☞ (இராவணன்) விருத்தம்.

தசரதர்புதல்வனுனே தாள்பணிகின்றேனையா.

☞ (சாரணன்) விருத்தம்.

தசரதர்புதல்வனுனே தாள்பணிகின்றேனையா.

☞ (ஜனகர்) ஷை விருத்தம்.

குசலமுற்றிருப்பீரின்பங் கொண்டுகெற்கீர்த்தி கொள்வீர்
திசையெலாங் கட்டியாள்வீர் செல்வர்காள் வாழிவாழி.

[சதானந்தர்] பகவன் காதிமைந்தரே.

விருத்தம்.

ஈடிலாரெழிலின்மிக்கா ரிங்கிதப்பார்வையுஞ் சொற்
சாடைநன்னடை வளர்த்திச்சதைப்பற்றுஞ் சமமதாகச்
சோடியாயிருத்தலாலே சொல்லிலக் குவரைர்கொல்லோ
நாடெலாம் புகழ்பெற்றேருங்கும் ராமநாமன்றுனர்கொல்.

[விசுவாமித்திரர் தன்னுள்,] இங்கொருவருமில்லை.

இராகம் கரகரப்பிரியை, ஆதிதாளம்.

பல்லவி.

இவனே இராமன், ரவிகுலசோமன்.
என்சதானந்தரே எழிற்காமன் [இவனே]

அநுபல்லவி.

அவனிபுகழ் நவமேகசாமளன்
ஆருயிரனுஜன்மீ தனுக்ரகமுள்ளான் [இவனே]

சரணம்.

உருக்கியதங்கம் ஒத்ததோர்தேக
ஒளியோடண்ணன்பணி யொழியாஉளத்தஞக
இருக்கின்றானே இவனேஇலக்ஷ்மணன்
எற்றகுணவிசேடம் வாய்த்தவிலக்ஷணன். [இவனே]

[இராவணன்] சாரணனுக்கு தனித்துச்சொல்.

இராகம் இந்துஸ்தான் தண்டகம் ஜாவளி
ஸாமிக்கு ஸாரியேவாரி என்றமெட்டு.

பல்லவி.

இன்னஞ்சானகி வரக்காணேனே

அநுபல்லவி.

அன்னவடனேக்காண ஆத்திரமாகுதே [இன்னம்]

சரணங்கள்.

சகசண்டித்தனமெல்லாஞ் சாற்றுகின்றான்ஜனக ன்
மகளையழைப்பியா வகையே தோ [இன்னம்]

எப்போதுகாண்பே னென்றென்மனந்துடிக்கி தே
மைப்படுவிழியினாள் வாரா ளோ. [இன்னம்]

[சாரணன் தன்னுள்] அகோவகோ இம்மூடசிகாமணிக்கென்ன அவஸரம், அடட இப்போதுதானே ஜனகதரிசனமே.

இராகம் காம்போதி. ஸாலம்யாலரான என்றமெட்டு

பல்லவி

இத்தனை ஆத்திரம் சுத்தமோசமாமே.

அநுபல்லவி

அத்தையலிவனுக்கமை வதைய்யமாமே [இத்தனை]

சரணங்கள்.

க்ஷேமங்கேட்குமுன்னஞ் சேதிசொல்லுமுன்னம்
பூமிவந்திங்குநாம் பொருந்தமிதிக்குமுன்னம் [இத்தனை]

கருதிச்சனகனைக் கண்டதற்குள்ளாகப்
பரபரப்பேனந்தோ பாவமென்னமோகம் [இத்தனை]

மூர்க்கநாயகனிம் மூட.சிகாமணிக்
கேற்குமோயேதேது யேந்திழையம்மணி. [இத்தனை]

(வெளிப்படை) இரகசியத்தில்.

அடுக்குமொழி.

வெற்றிலங்கேசா, கொற்றவமணியே
உற்றதுபொருந்தும், சற்றுபொருத்தருள்!

[சதானந்தர்] பகவன் கௌசிகரே.
[இராவணன்] சாரணனிடம் இரகசியத்தில்.

(கோபத்துடன்) விருத்தம்.

அம்முனிமாமாரீசனை விறந்தொழிந்த பின்னு ம்
இம்முனியியம்பாநின்ற இந்தக்கௌசிக சப்தத்தா ல்

நம்மவ னவனுப்நாளும் நவின்றிடப் பெறுவனென் றே
எம்மனத் தெண்ணுகின்றே னினிஇதற்கென் செய்வோ மே.

[சாரணன் இரகசியத்தில்] மகராஜ் அது இந்தச்சானகியின் பாணிக் கிரகணோற்சவ பரியந்தந்தானே.

[சதானந்தர்]

விருத்தம்.

தாணிதனில் வயதறுபதாயிரங்கடாவிகடந்தன பிள்ளைத்தவஞ்செய்தந்த நிருபதசரதன் வருந்திப்பின்புதூய வேயவிபண்டகசுதரால் நியமித்திட்ட ஒருமகத்தில்விந்துணையாலுலகமென்று மொளிர்கின்ற குணத்தினராயொப் பில்லாராய், அருமையதாயிரண்டு புதல்வர்கள்வந்தவதரித்தவிதமெனக்கா னந்தமையயா.

[விதநிச்சிகுவன் தன்னுள்] வசனம். ஓ, இவன் அகலிகை மகனன்றோ, ஆனந்தாம்புதியில் ஆழ்கின்றனன்.

அடட, அதிககளிப்பு, விதனக்குறிப்பு யென்னும் பழமொழியறியான் போலும்.

வெண்பா.

எவ்வளவிற் சந்தோட மெய்தினன்கொல் ஜன்மத்தில்
அவ்வளவில் மாசுணு விறந்தான்—வெவ்வழிமே ற்
றாவிகருமாய மெனச் சாற்றுமுறை கேட்குமு ன
மேவிநவ வெவ்வி தன மே.

[வெளிப்படை.] ஆனந்தம் உமக்குமட்டுமென்று, சதானந்தரோ அகில உலகத்திற்குமே ஆனந்தந்தான்.

[இராவணன்.] இரகசியத்தில், சாரணா.

விருத்தம்.

சனகிபரிணய மெனுஞ்சொல் வானமுதர்தை யென்செவியூற்றுற ய்
அனுசரர்களுடன் முனிவன்கௌசிகன் அங்ஙனம் போந்திடுகின் ற
இனியவரவினைத் தவித்தல்தாடகைக் கெளியதாகுங் கொவில்லைகொ ல்
எனவென்றன் மனங்கவலைகொண் டிறுகின்றதென் செய்வன்சாரணா.

(சற்றுலோசித்து.)

ஆசிரியவிருத்தம்.

உயர்மாமரத்தளிர் நுனியினீர்த்திவலைபோ ல்
ஒருகணமும் உறுதியற் ற
உயிர்வாழ்வு கொண்டன ருனதுணை விணுக்கா ன
உபகரண மொக்கின்றவ ர்

துயர்மாந்தர் தம்மோடு பொரவெண்ணு லுசித — மோ
தோள்வலியு யுத்தமதரு — ஞ்
சொல்லுனக் குளதாயினீடித்த வாயுட் — ச்
சொலிக்கின்ற சுரர்களோ — டு
பயமானசமர் விளைப்பாயென்று சுரமு — னி
பரிந்துரைத்தாலு முன்ன — ம்
பாரிலத்தயரதனேவதை செய்திருப்பனே — ல்
படுபய விராமனிவ — னோ
நயமாயுதித்திடுவ தெங்ஙனஞ் சனகியா — ய
நங்கைதன் மனத்தாசையு — ம
நாடிடுவ தெங்ஙனங் காரியாம்சங்கரி — ல
நான்மூடனுன் மூட — னே.

(சாரணன் இரகசியத்தில்) வசனம். மகாராஜ் நாரதவாக்கிருள், இராக தப்பிரபுவாகிய தம்மால் எதிர்த்து உயிர்தாஞ்செய்யததகாத மனிதனென்று அத்தயரதன் விடுபட்டானென்பது சரியே,

(கேட்கக்கடவீர்.)

விருத்தம்.

துதிதவத்ரா லீசனருளால் ... ச்சைத் துணையுமுள்ளா — ன்
அதிபலபராக்கிரமன் ... குழந்தையிலே கொண்டோ — ன்
முதிர்பகையால் ... பூண்டுவந்தோ — ன்
சதிபரசுராமனை ... கொல்லாமற் றவிர்த்திட்டானே.

(சாரணன் இரகசியத்தில்) ஆ... ராச்சாகத்துடன்.

கலிவிருத்தம்.

நன்றுணர்த்தினை ... சார — மு
தன்குமாரரோடச் சுதன்ற — னை
என்கருத்திற் கிசைந்த சினேகித — ன்
வன்கொடாறிக்கை ராமனுல் மாய்ப்ப — னே.

(சாரணன் இரகசியத்தில்) மகராஜ் நமது தாடகா மாரீசருக்குத் தப்பி ஞலன்றோ, இந்தயோஜனை யோசிக்கல்வேண்டும்.

(ஜனகர்.) பகவன் கௌசிகரே.

விருத்தம்.

தசரதனுர் தனயருதித்திட்ட தன்மைதனைக்கேட்டுச் செவிக்கமுதந்தனை த்துகின்றேன், குசிகமுனிந்தனருங்கருணை யாலேகுறித்தவனாக்கண்டுகன்

ணைந்தங்கொண்டேம், பசியசைவலமுடியாள் சனகிதன்னைப்பரிணயமு மவணிணைப்பின்படிசெய்வித்தால், நிசமெமக்குமட்டுமென்று நித்தியானந்தம் நிமிகுலமெல்லாம்விளங்கும் நிமலமூர்த்தி.

(ஆகையால்) வசனம். விசுவாமித்திரரே இப்பொழுதே அதிசீக்கிற த்தில் யாகதீக்ஷையில் பிரவேசியுங்கள். நாங்களும் கன்னியின் கல்யாணக்கா ரியத்தில் எத்தனஞ்செய்கின்றனம்.

(சாரணன் வசனம்.) இரகசியத்தில், மகராஜ், திரிலோகாதிபதியான இவ்விலங்கேசுவரன் வந்து பரிணயஞ்செய்வதில் அதனினும் நித்தியோற்ச வமாகாதா.

(இராவணன்.) அதிலென்ன சந்தேகம், நித்தியோற்சவமென்பதற் கையமா.

(வித்திச்சிகுவன் தன்னுள்.) இதுவென்சொல், வீண்சங்கடம். நல்லதிருக்கட்டும், அதிலென்னபாதகம்.

கலிவிருத்தம்.

கோசிக னரசரைற் [illegible] லைப்பட்டா னெனி ற்
மோச [illegible] ம்
நாச [illegible] னே
மொச [illegible] வெண்டுமா ல்.

(இராவணன் [illegible]) அ[illegible] எனமிருண்ணமும்.
(சதானந்தர்.) ஜன[illegible]

விருத்தம்.

[illegible] னி
[illegible] ய்
[illegible] குப்
பாந்தமாய்க் [illegible] வேண்டும [illegible] நன்றாமா ல்.

(வித்திச்சிகுவன்.) இரகசியத்தில், அட சாரனே.

விருத்தம்.

அடடா சாரணநாம் நம்மனதிபனுக் குதவியாக த்
திடமுடன் வந்தோம் அஃதிற்சீர்த்தியுன் வரவுநன் றே
இடைவழி தனிற்புதைய லெதிரினிற் கிடைத்தல்போ ல
மடமயி லனையாணிற்கு வலுவிலே வாய்த்ததப் பா.

(ஆனல், என்வரவுதான் பிரயோஜனமில்லாமற் போச்சுது.
(சாரணன்.) இரகசியத்தில், ஆ, அங்ஙனயன்று.

(வசனம்.) எதுகாண், வித்திச்சிருவ, உமது வரவுதான் முதன்முதலிற் கைகண்டபலன், என்னெனில், நீர்இப்பொழுது யாகசிகைக்ஷ செய்வதில் அந்தக் கோசிகனுடைய மக்கள், சீடர்கள், பசுக்கள் முதலியான சகிதமாய், அனைது பாரியே உமக்குப்பாரியாகவிருந்து புற்பிடிக்கப்போகின்றனள் அல்லவோ, ஆகையாற்றான் உம்முடைய வரவே முதன்முதலில் நல்வரவென்றுரைக்கல்வேண்டும்.

(வித்திச்சிருவன்.) இரகசியத்தில், சாரணு.

விருத்தம்.

ஆமடா மெய்தானப்பா ஆகிலுமெனக்கு வாய்த்த
மாமுனி நாரிமிக்க வன்கிழ டவடனங்கன்
கூமடி புறனும்மைபோற் கூனலுங் கொண்டாளப்பா
நாமினிச் சொல்வதென்னை சாரணு நகைக்கின்றாயோ.

(ஜனகர்.) வசனம். பகவன், சதானந்தரோ அதுமட்டுமன்று. பின்னையோவெனில், ஜனகனுஜன், குசத்துவஜன் மிதிலையினின்றும் தன்னுடைய கன்னிகைகள் மாண்டவி சுருதி கீர்த்திகளை பரத சத்துருக்னர்களுக்கும் கல்யாணஞ்செய்து கொடுக்கவேண்டியதென்று பெண்களை அனுப்பியிருக்கிறான்.

(இராவணன்.) சாரணனிடம், இரகசியத்தில்.

விருத்தம்.

என்மூடத் தனத்தினாலே யின்னமு மிருவர்தம்மைத்
தன்மாயஞ் சூட்டியந்தப் பரத சத்துருக்னராகப்
பின்கூட்டிவந்தேனல்லேன் பிழைசெய்தேனினியென் செய்வேன்
துன்மார்க்கமுனிவனின்றேன் சொல்லெல்லாந்தொல்லைதானே.

(சாரணன் இரகசியத்தில்,) வசனம். வித்திச்சிருவன் விசுவாமித்திர வேடத்தோடு வந்தும் காரியத்தைக் கெடுத்துவிட்டனன், என்னசொல்லப் போகின்றேன்.

(சதானந்தர்.) பகவன், கௌசிகரோ, என்ன தசரதர் பரத சத்துருக்னர் இவர்களை அழைத்துவரவில்லையோ.

(சாரணன்.) இராவணனிடம், இரகசியத்தில்.

விருத்தம்.

பெண்டுபிள்ளைக ளோடுற்ற தயரதன்றனைப் பின்கூட்டிக்
கொண்டுமோ முனியிங்கெய்தக் குறித்துச்சென்றானென்றேநான்
கண்டுவந் துரைத்தேன் முன்னங்கௌசிக னுருவந்தானே
அண்டுமோ வித்திச்சிருவ னறிவிலனதை விட்டானே.

(இராவணன் இரகசியத்தில்,) வசனம். இருக்கட்டும் இப்பொழுது ஜானகியைக்கொண்டுவ விஷயத்தைப்பற்றி யோசிக்கல்வேண்டியது.

(வித்திச்சிருவன்.) பரிவார ஸகிதரான தசரதர் மார்க்கத்திலுண்டாய சிரமத்தினால், இடைவழியிற்றுமதிக்கின்றனர்.

(ஜனகர்) விருத்தம்.

ஆடா சேர்வைக்காரா,

[வாயிற்காப்போன்] வசனம்.

மகராஜ், ஆக்ஞாபனம் உத்திரவாகட்டும்.

(ஜனகர்) ஷை விருத்தம்.

அதிவிரை வாகச்சென்று

சீர்பெறு கன்னிமாரைச் சீக்கிரமழைத்து வாரா ய்

கூர்தவத்தினி லுயர்ந்த கோசிக முனிவர்தம்இ ப்

பார்புகழ் நளினமொத்த பாதவந்தனத்திற் றின் றே.

(வாயிற்காப்போன்) அப்படியே ஆகட்டுமென்று சென்றனன்.

(இராவணன்.) சாரணனிடம் இரகசியத்தில், அடா சாரணா, என்விஷயத்தில் செய்வானுகூலமுமிருக்கின்றது.

விருத்தம்.

பூமகளிப்போது வந்தாற் புயல்வண்ண ராமனுட ல்

ஆமெனு மென்னெங்கள் கண்டாவ லலங்கரிக்கு ம்

நாயகமை நற்பூவழகைத் தான்கவர்ந் திலங்குமி ரு

காயசிநேக ரஸங்காட்டுங் கடைக் கண்ணு லே.

(——) திரை.

விருத்தம்.

சதிர்ஜனகஉனதுமகடனைவிவாகந்தான்புரியமாயையினாலரக்கர்வேந்தன், துதிஇரகுராமனுருப்புனைந்துகாதிசுதனுருவோடிலங்குவித்திச்சிருவனோடும், மதமிகுத்தசாரணிலக்குவன்றன்வேடம்வகித்திடவன்னவனோடும் வந்திட்டானென்ன், நிதுவிபரஞ்சடுதியினில்வாயிற்காப்போர்யாரேனுமினைவன்பாலியம்பல்வேண்டும்.

எல்லவரும் கேட்கின்றனர்.

(இராவணன்.) வித்திச்சிருவனிடம்) இரகசியத்தில், உத்வேகத்துடன்

விருத்தம்.

பேசுநாமின்றி இத்தைப் பிறருணர் வகையுமில் லை

வேசமும் கூடத்தன்னை வெளியிட்டதார் தொலந் தோ

(வித்திச்சிருவன்.) இராஜியத்தில், பயநடுக்கத்துடன், மகராஜ். என்னென்றுசொல்வேன் ஆச்சிரியமாச்சிரியம்.

☞ ஷை விருத்தம்.

ஆசைப் பெண்டாட்டி மாயாவதியன்றி யறியார்மற்றோர்

(சாரணன்.) தன்னுள், ஓ, ஓ, நம்பிரவிர்த்திகளோ

☞ ஷை விருத்தம்.

மோசஞ்செய் திட்டானெந்த மூண்டையின் மகனேமுற்றும்.

(வெளிப்படை.) பகவன், சதானந்தரோ இவ்விதஞ் சப்தங்கொடுத்தது யாரென விசாரிக்கல்வேண்டும்.

(சதானந்தர்.) தன்னுள், ஓ, இவர்களோ, இராம லக்ஷமண கௌசிக வேடதாரிகளாய்வந்த இராவண சாரண வித்திச்சிருவர்களோ.

(வெளிப்படை.) இலக்ஷ்மணா, அஃதென்னென்று விசாரிப்போம்.

(ஜனகர் கவலையுடன் தன்னுள்.) அடடா, இதுவென்கொல் விபரீதமாயிருக்கின்றது.

கலிவிருத்தம்.

எம்மனோரதம் யாவு மிசைத்திட
இம்மை தீர்முனி யெய்தின னென்றே
செம்மை யாய்மனந் தேர்ந்து களித்துடல்
விம்ம லுற்றனன் வேறாய் முடிந்ததே.

(வெளிப்படை.) அடா, அங்ஙனம் ஆரடா.

(வாயிற்காப்போன் ஓடிவந்து,)

அடுக்குமொழி.

ஒன்னார்பணிலம், பன்னாவிளையும்,
பொன்னாய்மிதிலை, மன்னாபோற்றி.

ஆக்ஞாபனம், உத்திரவாகட்டும்.

(ஜனகர்.) அடா, சேவகா அங்ஙனமறைந்ததாரென விசாரித்தல்வேண்டும்.

(வாயிற்காப்போன்.) மகராஜ், அதிலென்ன விசாரணையிருக்கின்றது

விருத்தம்.

அண்ணலே திவ்யமேனி ஆனஓர் புருடன்வந்திவ்
வண்ணம் இங்கறைந்துவிட்டு வான்றனிற் கிளம்பிச்சென்றான்
மண்ணில் வேறிராமலக்கு மணர்களா மிருவரோடும்
கண்ணிய முடனேமற்றோர் கௌசிகர் வருகின்றாரோ.

[ஜனகர்.] ஓ, இதுவென்கொல், சதானந்தரே, இதுவென்னபுதுமை
(சதானந்தர். ஜனகரிடம் இரகசியத்தில், இங்ஙனஞ்செப்பிய நிந்திர
தூதனுயிருத்தல்வேண்டும்.

விருத்தம்.

எய்தினர் தாங்கொலோ இங்கினிவரு கின்றூர்தா னே
பொய்திக ழரக்கரொன்னப் பொருத்தமா யறியல்வேண்டு ம்
(வெளிப்படை.) வித்திச்சிகுவனிடம்.

ஷெ விருத்தம்.

மெய்திகழ் தவம்நிறைந்த விசுவாமித்திரரோ இந்த ச்
செய்திகள் புதுமைததாகும் யாதிவை யென்செய்வோ மே.
(வித்திச்சிருவன்.) தன்னுள்.

விருத்தம்.

காசினிதனிற் போலீசுக்காரன் சோரரைப் போலந்த க்
கோசிகனெமைத் தடுத்துக் கொண்டன னினியென்செய்வே ம்

[வெளிப்படை.]

ஷெ விருத்தம்.

வேசமெம்மைப் போற்கொண்டு மேவுராக்கதர் வரட்டு ம்
மாசதானந்த நாங்கள் மற்றோர்பாற் செல்கின்றோமா ல்.

(இராவணன்.) சாரணனிடம், இரகசியத்தில்.
சாரணு, ஆனல் இந்த க்ஷத்திரியப்பயலால் நாடகாதியர் இறந்தேபோயி
ருப்பார்களோ.
(சாரணன்.) இராவணனிடம், இரகசியத்தில்,
அதேது, ஈதொருக்காலும் நடக்குமா.

விருத்தம்.

அலங்கனன் மார்பாவெங்க ளாண்டவ அதிபரே ரே
கலங்கிடா வல்லதாட காதியர்தமையுங் கொல்ல ப்
பலங்கொண்டா னெனிலோ அந்தப்பாலகன் றன்னால்நம் ம
ளிலங்கைமே வரக்கரெல்லா மிறந்தன ரெனக்கொள்வா யே.

(இராவணன்.) வித்திச்சிருவனிடம், இரகசியத்தில் (இனிநாம்செய்வ
தென்னே?
[வித்திச்சிகுவன்] இராவணனுக்கு, இரகசியத்தில் (வசனம்.) மகராஜ்,
திரஸ்க்கரிணீ மகிமையால் நம்மை நாம் மறைத்துக்கொண்டு இங்கிருந்தே

நடக்கின்ற நடபிடிக்கைகளைக் கண்டறிந்து, உசிதம்போல் நடக்கவேண்டியது.

[இராவணன் வசனம்] ஸரி, ஸரி, உரைத்தது வெகு பொருத்தமாயிருக்கின்றது, அப்படிச்செய்கின்றது.

[ஜனகர்] சதானந்தரிடம், இரகசியத்தில், (வசனம்.) சதானந்தரே இவர்கள் நெருங்கி, நெருங்கி இரகசியம் பேசிக்கொள்கின்றார்கள். அதனால், நினைக்கின்றேன், இவர்களே இராக்கதர்கள், இவ்வித வேடத்துடன் வந்திருக்கின்றனரென்றே.

[சதானந்தர். அவ்வண்ணம் யானும் நினைக்கின்றேன், ஆகிலுங்கண்டறிவோம்.

[வித்திச்சிருவன்.] மகாராஜ ஜனகா.

விருத்தம்.

பார்த்திவ விசாரமென்கொல் பகர்தசக் ரீவன்றன்னைச்
சீர்த்தியா யுசிதம்போலச் செய்யுபசாரஞ் செய்து
கோர்த்தியா யனுப்புவாயுன் னேரிழை யிவதாக
வார்த்தை யொன்றுரையேல் நாங்கள்மற்றோர்பாற் செல்கின்றோமால்

[ஜனகர்.] நல்லதென்றெழுந்திருந்து அஞ்சலிசெய்துகொண்டு (மார்க்கங் காட்டுகின்றனர்.)

இராவணன் முதலானவர்எழுந்திருந்து அடுத்தபக்கத்திற்சென்றனராகி திரஸ்கிரிணியால் மறைந்துகொண்டு ஸமீபத்தில் வந்திருந்துகொண்டார்கள்.

(சதானந்தர்) வசனம். மகராஜ ஜனகா, வருகின்ற கௌசிகர் முதலானவர்களை அர்க்யமுதலிய உபசாரங்கள்செய்து அழைத்துவருகின்றேன், (எனச்சென்றனர்.

அப்பால், இராம லெக்ஷுமண ஸஹிதராய், கௌசிகர் பிரவேசிக்கின்றனர்.

(கௌசிகர் தன்னுள்.)

விருத்தம்.

கனவினிலிந்த ராமனைக்கண்டு காமமுற்றி குளையர்பேண
இனமுறுதளிரின மளியினிருந்தாங் கிரவொடு பகலையுங்கழிக்கும்
வனமுறுஜனகி மீதினில்ராமன் மாறிடாமயல் கொளவகுத்தேம்
கனிவுள ரொருவர்க்கொருவ ரெவ்வனத்தர் காதல்கூர்சேர்க்கைதான்நன்றே.

இன்னமும் ஆசிரியவிருத்தம்.

உத்தமகுணத்தின ரிராமலக்குமணர்கள் ஓங்குபுய வீரரெனினும்
ஒளிர்சிரம்பகமா திமந்திரப்படைகள் யாமுதவிடப்பெற்றனரதால்

மெத்தவனுகூலமேஎன்னெனிலிராவணன்மேவுதன்னவனையமரில்
வெவ்வுயிர்பறித்தவிஷயத்திலுங்காதல்சேர்மெல்லியற்சனகமாதை
நத்தியேநன்மணமியற்றுவிஷயத்திலும்நனிமனத்தடங்காச்சினம்
நவில்ராமன்மீதுகொண்டடல்மூளுவானெனில்நலியாது முப்புவனமு
இத்தரையில்வென்றவனெனினும்ராவணனையேஎமபுரிக்கேற்றுவிப்ப [ம்
வெவ்வளவுபலம்வேண்டுமெவ்வளவுமிராமனுக்கெய்தியதுநன்றுநன்றே.

(அன்றியும்) விருத்தம்.

மாயையிலிராக்கமனர்வல்லவொன்றே மாறாபிராமலக்குமணர்களோடும்,
சேயமொடுகுமரியின்விவாகந்தன்னைநிர் விக்னமாகநிறைவேற்றவெண்ணி,
காய்கரியும்பாய்பரியுங்கனகத்தேருங்காலாளும்மேலாளுங்கணக்கில்லா து
மேயவனுந்தயாதனைப்பிரிந்துமுன்பே விரைவிலெமதரணியத்தில்மேவிவந்
தேன்.

(வெளிப்படை.) பாலர்காள்.

இராகம் பியாகு ரூபகதாளம்.
பொன்னார்மேனியனே யென்ற வர்ணமெட்டு.

பூவலங்காரர்களே புகழ் புண்யகுமாரர்க ளே
மேவெழிற்சூரர்களே வினய மேவிடுவீரர்க ளே
உத்தமநற்குணர்காள் எங்கும் ஒப்பில்லாநிபுணர்கா ள்
வெற்றிநற்பூடணர்காள் விளங்கு மெய்ராமலக்ஷ்மணர்கா ள்
வாசகமீதென்று மற்ற மகிபர்கள்போலன் று
பூசிதமாய்நின்று ஒழுக்கம் பூணுவீர்மிகநன் று
தவ்முனியாக்ஞவல்க்கர் தம்மாற்றவிர்ந்துளம்ஸ்ராதுக்க ம்
உபநிடம்யாவுமொக்க உணர்ந் தோங்குமகிமைமிக்கா ன்
ஜனகமகராஜன் சோடசகலைநிறைராஜ ன்
முனிவர்க்கெலாம்ராஜன் தீர்ந்தமுத்தன்ஞானராஜ ன்
ஆனபடியாலே நீவிர் அச்சனகன்பா லே
போனவுடன்மென்மேலே வணக்கம்பொருந்துவீரொருக்கா லே.

(இராமலக்ஷ்மணர்.) நல்லதப்படியே செய்கின்றோம்.

(இலக்ஷ்மணர் வசனம்.) பகவன் முனிநாதரே, இவ்வரசனுடைய யாகபூமியில் உழுகின்ற கலப்பையினுனியினின்றும் சீதையென்றொரு கன்னிகாமணி உண்டாயிருக்கின்றாளென்றோர் ஆச்சரியசமாசாரங்கேட்கப்படுகின்றதன்றோ.

(கௌசிகர்.) ஆம், ஆம்.

(இராமர் தன்னுள்.) அனுஸ்மரணத்துடன்.

ஆசிரியவிருத்தம்.

மாதனற்குழியில்வீழ்விழவப்படிச்செய்தமாயையென்றேதிண்ணமாய்
வரிசையாயோர்ந்தனனெனினுமாதங்கமும்வளர்கோபமும்எனித
மீதுபொழுதும்விட்டகன்றிலவிதேகனேஇன்னல்வதைசெய்ததா
வெய்திடுசமாசாரமெய்யன்றனிசமாயியற்றிடுஞ்சாலமென் றே
பேதமையிலாதுதெளிவாயுணர்ந்தேனெனினும்பிசகிடாதோர்நொடிக்குட்
பேயன்நிசாசரன்கொடியமாபாதகன் நீடுபௌலஸ்தியன்றன்
ஓதிடுசிரங்களீரைந்தினையும் எவினைலோர்பனங்காய்கள்போல
உருளும்படிக்கறுத்தெறிவதில்மிசவாசையுண்டாகுமுண்டாகுதே.

(இன்னமும்) விருத்தம்.

. தவதனகௌசிகர்மகமாமெனும்வியாஜஞ்சாற்றியெனைச்சகலபெருக்களோடும், அவனிகுமாரியின்மன்றல்முடிப்பவேண்டி அழைத்துவருகின்றனனொன்றெனதுசொந்த, நவின்மனமெய்வணம்வைத்திருக்கிறதென்றக்கால்கன்குநினைக்கின்றதாச்சுவாஸம்நல்கும், குவிதயைகொள்கின்றதப்படித்தான்மிக்கக்குளிரானந்தமடைந்துகுலவுகின்றே.

(வெளிப்படை) விருத்தம்.

புதுமையேதொன்றுகேள்வி என்னெனிற் புராரியாலே
இதம்பெற வளித்ததென்றும் சுராசுரர் யாவராலும்
அதுவளைக் கொணாததென்றும் அவ்விதே காதிபன்றன்
நிதமர்ச்சித் திடுவதென்றும் வில்லொன்றும் நிசந்தானெல்லோ.

(கௌசிகர்.) புன்னகையுடன், ஆம், ஆம், இதுவும்முசகின்றது, என எல்லவரும் நடக்கின்றார்கள்.

(சதானந்தர்.) பிரவேசித்து, மகாராஜ ஜனக.

இவரோ, பகவான், குசிகநந்தனர் இவர்களே, தசரதகுமாரர்கள்.

(ஜனகர்.) தன்னுள்) எமது சதானந்தகுரு, இவர்களது வேடத்திற்கனுகுணமாய் ஸம்பாஷிக்கின்றனர்.

[வெளிப்படை.] நிரம்ப ஸந்தோஷம்.

(என, உசிதம்போலுபசரித்தெல்லவரையும் உசிதாதனங்களில் வீற்றிருக்கச்செய்தனர்.)

(சதானந்தர்.) தன்னுள்) இவர்களோ இராமலக்ஷ்மணர்கள், இருக்கட்டும். ஆயினும் யான் இவ்விதம் புகல்கின்றேன்.

(வெளிப்படை.) இராமலக்ஷ்மணர்களோடும் கௌசிகபகவான் இங்ஙனம் வந்தருளியது தெய்வாதீனமேயாம்,

[ஜனகர்.] தன்னுள்) யானும் சதானந்தகுருவின் வார்த்தையைஅனு ஸரித்தே பேசுகின்றேன்.

(வெளிப்படை) விருத்தம்.

விதிவசத்தால் சிசுபசித்தங்கள் தயரதர் வீட்டில்வந்தா ர்
விதிவசத்தால் அவரால்றன் வேள்வியை முடிக்கப்பெற்றா ர்
விதிவசத்தால் புகல்வர்நால்வர் விளக்கென வவதரித்தா ர்
விதிவசத்தால் தம்மெலன்பால் மேவினரிருவர்தா மே.

(இராவணன்.) விக்கிச்சிகுவனைக்குறித்து,

இதுமெய்யல்லவா, அடா, விக்கிச்சிகுவா, இச்சனகன் பரமார்த்த புத்தியுடன் பகர்கின்றான் சொல்.

(விக்கிச்சிகுவன்.) அதேது, மகாராஜ நம்மிடங்களிலன்றோ இவனுக்கு வான்தவபுத்தி.

(கௌசிகர்.) ஆம், ஆம், வர்த்தமானத்தைக் கேளுங்கள், குமாரசதானந்தராலும், இஷ்டமான ஜனகராஜனாலும் ஸாவதானமாகவிருந்து கேட்கக்கடவது.

[இருவரும்] நல்லதென்று, செவிகொடுக்கின்றனர்.

(இராவணன்) அடுக்குமொழி.

காடியிக்கௌசிக, மூடன்றாராத்துமா,
கடைகெட்டபசுன்றிடப், பீடிகைகள்போடுறான்.

விக்கிச்சிகுவன், அடா, இது தென்ன அறியாததா, அடைவே, யாகமத்தியில் வந்து தடுத்துக்கொண்ட நமது பரிஜனங்களை வஞ்சித்துக் கடந்துவந்தோமென்றே புகல்வான்.

(சாரணன்.) அங்ஙனமவர்களை வஞ்சித்திடாமற்போனால் இவர்களிங் கெப்படி வரக்கூடும்.

☞ கௌசிகர் விருத்தம்.

மகமெனத்தாரங்களொடு மக்களோடு மகிபதயரதனைவர வழைத்துக்கொண்டு, மிகவிரைவில்வருகையில் மண்மாரிபெய்து மேவிதாடகையினாற் றடுக்கப்பெற்றேம்,

(இராவணன்.) களிப்பதிகரித்தவனாய்,

பல், தாடகாய், நல்ல நல்ல சம்பிரதாயமா யுன்னால்வந்து மறிக்கப்பட்டது.

(விக்கிச்சிகுவன்.) அவர்களெவ்வாறு அவளை வஞ்சித்து கடந்துவந்தார்களென்பதைக் கேட்கவேண்டுவது.

(இராவணன்.) விலக்ஷணக்குறிப்புடன்.

வெண்பா.

இந்தச்சிறுவ ரொருமுனிம்முனி யிங்கெய்திய தோர்
விந்தைக்குறி யிதனைமெய் மறந்தேன்—சந்தோடத்
தான்மதுபான த்தில்வருதன் மையைப்போற் சாலவுமே
யான் வசமற்றிட்ட படியால்.

(கௌசிகர்) முன்விருத்தத்தொடர்ச்சி.

ரகுபுதல்வன் திரிஇவனென்றிருந்திட்டாலுமே வொன்றுகார்முகத்திலெழு
ம்பிற்றையா,

(இராவணன்.) இந்த க்ஷத்திரியப்பாலனிடத்துப் பெருமையை ஆரோ
பணஞ்செய்தற்குச்சீர்கெட்ட இம்முனி எத்தனை எத்தினஞ்செய்கின்றனன்.

(சாரணன்.) ஆ, சங்கையுடன்) மேல் என்னநடபடிக்கை நடந்திருக்கி
ன்றதென்பதைக் கேட்டறிதல்வேண்டும்.

(கௌசிகர்) முன்விருத்தத்தொடர்ச்சி.

புகுந்தவள் மார்பிலிரண்டாய்வகிர்ந்துபூமியில்வீழ்த்தியதாலி பொன்றிட்டா
ளே.

(ஜனகர்.) சதானந்தரைக்குறித்து, இரகசியத்தில்.

விருத்தம்.

பரித்திடுமோயை வல்லபாவி வல்லரக்க னின்றோ ன்
தரித்திடு வேடந்தன்னைத் தளர்ச்சியுறாது நன்றாய் த்
திறப்படுத்திடவே திண்ணம் செப்பிடு கதையிதா மே

(சதானந்தர்.)

உரைப்பதென் முழுதுங்கேட்டா லுற்றதுபொருந்து மன் றோ.

(ஜனகர்) வெளிப்படை வெண்பா.

இந்தச்சிறு பைய்ய னெவ்வளவு கன்னமதச்
சிந்துரத்தோராயிரங்கள்சேர்பலத்தான்—அந்தத்
தொனியசனித்தீக்குறல்வாய்ச்சொற்றாடகைப்போர்
சினவரக்கி யெவ்வளவு சீ.

(இராவணன்.) ஸரி ஸரி, ஜனகனால் நன்றாய் ஆக்ஷேபணை செய்யப்
பட்டது.

(சதானந்தர்) அடுக்குமொழி.

மதிகுலமகாராஜா, அதிபதிமிதிலேசா,
விதிபலமுளதாகில், எதுவுமுடிந்திடுமால்.

(வித்திச்சிருவன்.) அதனைச் சம்மானித்துப்பேசுகின்றான் சதானந்தத்திமனத்தன்.

(சாரணன் வசனம்.) ஹா, தாடகாய் ஸ்திரீ என்றறியப்பட்டும் இம்மூடனால் விடுபடாமற்போயினையா.

(இராவணன்.) ஆ, சங்கையுடன்,

அவளது அனுசரர்கள் எவ்வகைபுரிந்தார்களோ அதுவறிந்திலம்.

(ஜனகர்.) மேல் மேல்.

(கௌசிகர் வசனம்.) அப்பால், கூற்றுநிகர்த்த சுபாகுமுதலிய கொடியராக்கதர்கள் சூழ்ந்தை இராகவனை வந்து வளைந்துகொண்டார்கள்.

(இராவணன்.) ஆம், தாடகாவதத்தை எப்படிச்சகிப்பார்கள்.

(சாரணன் வசனம்.) ஓ, ஓ, தானே வீரனென்று மானித்துக்கொண்டிருக்கிற இந்த ராமனால் அவர்களிடத்தும் என்ன என்ன அக்கிரமம் செய்யப்பட்டதோ.

(கௌசிகர்.) மற்றென்ன கேட்கக்கடவீர்.

கட்டளைக்கலித்துறை.

குலையுண்டிடும் கபந்தங்களோ டேன்வாய்குடித் தெப்ப டி
நிலைகொண் டிடாதுகழுகின மாடினநீள் களத் தே
வலிகொண்ட நீசச்சுபாகுவைச் சேனையை மாய்த்துநெடுஞ்
சிலைகொண்ட ராமசரம் லீலையப்படிச் செய்தது வே.

(சதானந்தர்.) ஜனகனைக்குறித்து, இரகசியத்தில்) இவ்விதமிருக்க இவர்களிடம் என்னென்று நினைக்கின்றீர்.

(ஜனகர்.) சதானந்தனைக்குறித்து இரகசியத்தில்,

நமது கன்னி ஜானகி பல பரீக்ஷையின்பேரில் கொடுக்கவேண்டியவளென்று பிரதிக்கினை செய்யவேண்டியது.

(சதானந்தர்.) இரகசியத்தில், அஃதெப்படிக்கொத்தது.

(ஜனகர்.) இரகசியத்தில், சிவதனுவை நாணியேற்றிவதே தான்.

(சதானந்தர்.) இரகசியத்தில், ஒவ்வாதினைப்பொடு நகைத்து.

விருத்தம்.

அமரகுலமடங்கலும் வந்திறைஞ்சிநிற்ப அசைந்திடுமாமேருவென வங்கம்கொண்டு, குமரிடுவொப்பூசகணம் நெருக்கமாகக் குலவிடவுயிலங்கிடு வச்சைவலதன்னை, நமதுசகரவிரானுனியாற் செல்லிவானிற் சதிர்பெறப்பக் தாடு தசக்ரீவனுக்கே, உமையிடப்பாகன் றனுகாணேற்ற வென்னவோர் பெரிதா பணயமீதுதவாதன்றே.

(ஜனகர்.) இரகசியத்தில், பகவன் சதானந்தரோ அதிலிருக்கின்ற கடோர்த்தத்தைச் சொல்லுகின்றேன்.

விருத்தம்.

சித்தகந் தருவராலுந் தேவதான வர்களாலும்
வித்தியா தரர்களாலும் மேவுவல் லரக்கராலும்
இத்தனுவளைக் கொணுதென்றியம்பி யீய்ந்திட்டார் முன்னம்
உருத்திர பகவானென தாலிரு துசிதந்தானே.

(சதானந்தர்.) இரகசியத்தில், அங்ஙனமாயின் இந்தப் பந்தயம் மிகநன்று.

(விச்சிச்சிதவன்.) எல்லவரையும் வதைசெய்ததாயத் தான் ... கின்றனே இக்கௌசிகன்,

(சாரணன்.) இம்மூ வாஸ்தவமே, இல்லாமற்போனு ... தடுக்கப்படாத மஹா மாயாதுரந்தர மாரீசன் முதலானவரைக் கடந்தெங்ஙனம் வரக்கூடும்.

இலக்ஷ்மணன். விருத்தம்.

முதல்வரின் பகழிபாய்ந்து முனிந்துமாரீசன் றன்னைக்
கதியுடன் றுறத்திற்றெங்கோ காண்கிலனின் னமுந்தான்
அதமதாய் மடிந்திட்டான்கொல் அல்லதுதப் பிட்டான்கொல்
விதமின்ன தெனவுணர்ந்திலம் யெங்கள் வெற்றிவேந்தே.

(இராவணன்.) கோபத்தோடு பெருமூச்செறிந்துகொண்டு,

(இராவணன்) ஆசிரியவிருத்தம்.

நஞ்சனமெனிற் கிட்டவந்துலவ வஞ்சிடும்
ஞாயிறுதன்னொளி யுள்வாங்கும்
நற்றீச்சுடா மனப்பீதியா லகிலமும்
நடுநடுங்கிட வானையே

நிஞ்சிமிமிவ் விலங்கேச்சுர னின்னமு ம்
வியனுலகு காக்கின் றன ன்
மேவுநம்மேவற் ரொழிற்றொடகைப் பெணொ டு
வீரபற்படை கடமையு ம்
வஞ்சமிதுமாயைச் சுபாகுவையும் வதைசெய் து
வரிசையா யிவ்விராம ன்
வல்லுயிர்படைத் தினமும்வாழ்ந்திடவு மெண்ண மோ
மாறுமவிவனையந்த ப்
பஞ்சைமுனி கோசிகனபயமது தந்துகா ப்
பாற்றிடவு மெண்ணமோதா ன்
பற்கள்குடை கின்றதப்பா கடித்துமிழ்வதி ற்
பழுதென்கொல் பழுதென்கொ லோ.

(என்று பற்களைக்கடித்து கண்கள்சிவந்து ஆக்கிரமித்தாரவாரித்து எழுந்திடவாரம்பித்தனன்.

(வித்திச்சிருவன்.) தடுத்துக்கொண்டு, இராஜாதிராஜ மஹாராஜனே சற்றுப்பொருத்தருளல்வேண்டும், மேலும் பார்த்துக்கொள்வோம்.

(ஜனகர்.) தன்னுள்) என்னிதயம் தெளிவெய்துகின்றதுபோலும்.

(வெளிப்படை) ஆனால் மாரீசன் இந்த ரகுகுமாரனால் முடிக்கப்பட்டான் கொல்.

(கௌசிகர்.) ஆம், ஆம்.

(சாரணன்.) தன்னுள்) அந்தோவந்தோ.

விருத்தம்.

இத்தனைகால மிவன்புயபலங்களினைசந்தனைத் தனிநிறைவா கி
வெற்றியையடைந்து மேவினஞர்கால் விளம்பிடுதவறு தலா லே
மத்தியிலிவனுற்பின்னமதடைந்துவரிசையிற்குன்றினவிதனா ல்
எத்தன்மையெனில்ராகுவாற்கதிரோனெய்திடுதெசையெனவின்றே.

(இராவணன்.) பற்களோடு பற்களை நெறுநெறுக்கக்கடித்து ஹா, ஹா, இந்த க்ஷத்திரியப்பயலை இனியெளிதில் விடப்போகிறதில்லை.

விருத்தம்.

உருத்திரன்கிரியை யெடுத்தவெள்கைகளோ ரிருபதுமினமுள வே
பருத்ததிண்டோடிசை மன்னரைத்துளைத்தபகழிசேர் தூணிபத்துள வே
கருத்தமெய்யம்மயன் கொடுத்ததாங்கூற்றினுங்கடியதோர் சக்தியுமுள வே
உரைத்திடலென்பயந்தரிப்பதேனுயித்தத்திலோங்குவரெவரெங்ஙனுள ரே.

(வித்திச்சிருவன்) விருத்தம்.

அங்குலித் தட்டினாலே அச்சிறு மனிதன்றானே
இங்குயிர்தரிக்குமோகாண் எலிவேட்டைக்கேன் டம்மானம்
தங்கனக் கற்கடள்ளச் சதிர்கடப் பாறையேனோ
எங்கணும் புகழ்லங்கேச இத்தனைகோபம் வேண்டாம்.

(சதானந்தர்.) ஜகத்தினில் ராமன், மருத்துவமுடையான்.

(இலக்குமன்.) அரனாற்றான்.

விருத்தம்.

துங்கமா முனிவராமித் தூயகௌசிகராலென்றோ
டெங்கணுயக னிராம னேற்றமர் திரங்களெல்லாம்
பொங்கமா யருளப்பெற்றார் பொருந்துமத் திரங்கடாமும்
தங்கையில் வாங்கப்பெற்றார் தைரியம் பெற்றானன்றே.

(வித்திச்சிருவன்.) மகராஜ் இலக்குமன்சொல் செவிக்கிலக்காயிற்றே.

(இராவணன்.) அடட, இந்தக் கொட்டுக்கெல்லா மிந்தப்பேயாமோ, இதற்கெல்லாம் பயப்படுவதும் நாமோ.

(சாரணன்.) ஆரம்பமுதலே அக்கௌசிகனே நமக்குக் கெடுதல்வினை விளைத்துக்கொண்டு வருகின்றான்.

[கௌசிகர்.] தன்னுள்) வசனம் [illegible] னும, சதானந்தரும் என்னையுமிப்பாலர்களையும் வேறாய்நினை [illegible] கௌனைத்தோற்றுகின்றது

அதனால் இவர்கள் முன்னதாகவே [illegible] ளாயிருக்கின்ற அரக்கரா ஏதேனும் வஞ்சிக்கப்பட்டார்கள்போலு.

[நல்லதிருக்கட்டும்] வெளிப்படை.

வசனம் ஓ, ஓ, அனகருல ஜனகராஜனே, ஓ, ஓ, சதானந்தராய்விளங்காநின், சதானந்தரோ என்பாலேதோ அன்பாற்சொல்ல இச்சிக்கின்றீர்கள்போலும்.

அதை எடுத்துரைப்பதில் தடையென்சொல், அதையபவிளம்பச் செய்வீர்.

[ஜனகர்.] சதானந்தரை நயனபாஷையால் ஸம்ஞைசெய்தனர்.

(சதானந்தர்) விருத்தம்.

திரிபுவனத் திலுந்தான் திகழ்மன்னர் புதல்வருக்குள்
ஒருவன் யாரொனினு மீசனுயர் தனுவளைப்பனாகில்
அருமைகற் குணத்தொப்பில்லா எற்புதக் கன்னிசீதை
வரசௌந்தரியை அன்னோன் மணந்திடப் பெறுவன்மாதோ.

[இவ்விதம் ஜனகராஜனுடைய கோறிக்கை.]

[கௌசிகர் வசனம்.] கலீரென நகைத்துக்கொண்டு, அகோவகோ, எம்மிடத்தும் உங்கட்கவநம்பிக்கை பெய்தியதென்கொலோ.

ஆம், இக்காலமற்போனால் யாவராலுந்தடுக்கப்படாதவர்களாயும் கொடிய மாயையின்றிறத்தால் எளிதிற்பெறும் நானாவிதவடிவினர்களாயும் இருக்கின்ற மோசநிசாசரர்களின் நெருக்கத்தில், யார்க்குத்தான் யாரிடத்தில் நம்புதலுண்டாகும்.

ஆகையால் எங்கே அந்தத் திரிபுராந்தகனுடைய சராஸனத்தை வரவழையுங்கள், ஆ[illegible] திணிமித்தம் அதிசீக்கிரம்வரும்படி செய்யுங்கள்.

(ஜனகராஜன்) [illegible] சகாணந்தரோ [illegible]சென்று சம்புவின்ற [illegible] சராஸனத்தை [illegible]ச்செய்வீர்.

[illegible] தங்கள் [illegible] செய்கின்றேன்.

[illegible]

(இராவணன்) விருத்தம்.

[illegible] ஐ
[illegible] தே
[illegible] ப்
[illegible] முறுண் டோ.

(விசுவாமித்திரன்) [illegible].

விருத்தம்.

[illegible] ன்
பூதலம் பாதலம் [illegible] ன்
[illegible] டோ
[illegible] மே.

[இராவணன்.] [illegible] காட்டிக்கொண்டு [illegible], அடடா, என்சொல்வேன் [illegible].

இராகம் காபி.

பல்லவி.

மோசம்விளைந்ததடி முற்றும்விளையாச்சதே.

அநுபல்லவி.

எசனகின்னதிஷ்டம் எல்லாம்வெளியாச்சுதேடி.

சரணங்கள்.

ஏனெனிலென்னிஷ்டன் பெண்ணு ம்
இவளையபகரிக் கொண் ணு
தென்றனை யெடுக்கவெண் ணு
திருந்தேனடி, என்கண்ணு ய். [மோசம்]

ஒருவன்மேலாசை கொண்டா ய்
உனைக்கேட்கில் இண்டுமிண்டா ம்
ஒவ்வாதென்றோர்ந்தேன் கண்டா ய்
ஓகோபாவம் உரைகண்டா ய். [மோசம்]

பின்னும் உன்னுவலா லே
பேய்கொண்டான் செய்கைபோ லே
பேசன்னரன் வடிவா லே
பீடிழந்து வந்தும்மே லே. [மோசம்]

வேடம்பூண்டு வந்துநின்ற ய்
வினைவிளைந்தாற்போல ஒன்று
வில்வளைப்புச் சபதமென் று
விபரீதமாக யின் று. [மோசம்]

தனுவளைப்பாம் விகார ம்
சாற்றலாமோ அதிபார ம்
தந்தைசெய்த நிஷ்டூர ம்
தகாதடி யின்னேர ம். [மோசம்]

என்னாலாகாத வில் லை
யார்வளைப்பார் எவருமில் லை
ஏற்றமனு வெங்குமில் லை
என்னசொல்வேன் மிகத்தொல் லை. [மோசம்]

மணமில்லா வகையா லே
மகிமையி லெவ்வனத்தா லே
வசைசொல்வார் புவிமே லே
மாதேசிதே, ஆதலா லே. [மோசம்]

விருத்தம்.

மந்தா கிரியாஞலு வளைக்கலா மதைவளைக் க
எந்தஞ லாகாதென்றால் யாவரா லாகுமந் தோ
இந்தவிற் சபதம் வைத்ததென்ன விச்சனகன்செய் த
விந்தையென் சொலுவேன் சீதைமணமென்ன விதமாயா மோ.

(சாரணன்.) மஹாராஜ் அவளிடத்து அவ்வளவெண்ணமிருக்குமாயி ன் அவளை எவ்விதமும் அபகரித்துக்கொண்டு போகவேண்டியதுதான்.

[சதானந்தர் பிரவேசித்து]

விருத்தம்.

பூபதி ஜனகமன்ற புகழ்மதிக் குலமாணிக் க
தீபனே செல்வி மாற னிமித்தம்பந்தய மாய்ச்சொற் ற
மாபெருங்கிரி துர்த்த மஹேசுரச் சாருள்மகாப் ர
தாபவிச் சாபந்தன்னை சாற்றியபடி கொணர்ந்தே ன்.

[கௌசிகர்.] அடா குழந்தாய் இராமபத்திரா இதனைப்பாராய்.

(இராமர்.) குரு வாக்கியப்படியே, எனக்குமீரனவெழுந்து சராசனத் தினருகிற் செல்கின்றனர்.

☞ (இராவணன்) விருத்தம்.

திசைக்கிடாதிவன விளாதிரைச் சிறம படைக் கின்றான்கொ ல்

☞ (விதூஷகன்)

வெடுக்கெனக் கரத்திற்றூக்கி வில்லினைவளைப்பான் கொல் லோ

☞ (சாரணன்)

குடக்கரச் சனகியாம் நற்கோகில வாணியர் த
டடகக்கொடி ஜானகிதன்னை மணமுஞ்செய்திடுவான் கொல் லோ.

(அப்பால், அழைத்தசேவகன் முன்னுல் கொஞ்சத்தூரத்தில் நடக்க சிவ ந்த பட்டாடைகட்டி பவிஷாய்நடக்கின்ற சீதை முதலிய கன்னியர் பிரவே சிக்கின்றனர்.)

(சீதை.) தங்கைகாள், மஹாநுபாவரான கௌசிகமாமுனிவர் வந்தி ருக்கிறதினால் நாம் வந்தனஞ்செய்யவேண்டியது.

(இராமர்.) இதுவென்கொல், தன்ஞன்,

விருத்தம்.

ஓங்கமுத விதங்கா தூற்றுமொரு சாரிகையி ன்
யீங்கினிய வாலாபம் இதுமுன் னனுபவித் த

[illegible] மாயமயமாம் ஜானகிதன் வாய்மொழியைப்
[illegible] ளினைப்பிக்கின்ற பாண்மையிது வென்பகர்வேன்.

[illegible]) நங்கைகளே, அக்கா ஜானகியின் கானம்கேட்டீர்களா.

(இராமர்.) பார்த்து (தன்னுள்) ஓ இவள் [illegible] ஜானகியோ.

விருத்தம்.

[illegible] திங்களிற்றிரு [illegible]
[illegible] ன்
[illegible] ன்
என்றனும் [illegible] கண்டனனே.

(அடடா, இவளை [illegible] ஆலிங்கனஞ் செய்ய வேண்டும்.)

[illegible]

விருத்தம்.

[illegible] ரோ
[illegible] ட்
[illegible] ப்
[illegible] னே

(என [illegible] வில்லை [illegible]கின்றனர்.)

[illegible]

பல்லவி.

[illegible]

அநுபல்லவி.

[illegible] (ஈதொன்று)

சரணம்.

கோசிகருடன்வந்த இராஜமைந்தரிருவர்
கோடிமன்மதனினை யாவாரோம். (ஈதொன்று)

(சீதை) ஆம், ஆம்.

(மாண்டவி) ௨-ஆ சரணம்.

அவரிலொருவனொரு அரிவைதன்மனந்தனை
அபகரித்திட்டவனோம். (ஈதொன்று)

(சீதை.) அழுக்காறுடன், ஆ மாண்டவி என்னடிபுலப்பம் சும்மா வாயடக்கிக்கொண்டுவா.

(என்று கையிலிருந்த லீலாநளினத்தாலடித்தனள்.

(ஊர்மிளை.) சிரித்துக்கொண்டு.

விருத்தம்.

மாண்டவி வசனத்தாலே மனஞ்சகியாத தென் னே
ஏண்டியுன்றனைச் சொன்னேன்சோலைக்கிளமுலையினா ளே
வேண்டியபடி தனக்கு மேற்போட்டுத் தாங்கிக்கொண் டு
தாண்டிவந்த தட்டுகின்றாய் ஜானகியுனக்கேன் கோப ம்.

(சீதை) விருத்தம்.

விசித்திடவேண்டாங் கண்டாய் விந்தாக்காரிநீ யே
தரித்தபேர் ஊர்மிளைதான் சமத்கார சரிதான்போ போ
அரற்றிடேலுன் மதத்திற்காளல்ல வெதிருன் பா
லுரைத்திடல் தகுதியன்றே தூரத்தி லோடிடா யே.

(சுருதகீர்த்தி.) ஹா, ஸகி, ஜானகி ஏதடி இத்தனைகோபம்.

இராகம் நாதநாமக்கிரியை. ஏகதாளம்.

பல்லவி

சுந்தராங்கியே கோபமேதம்மா.

அநுபல்லவி

மந்தரக்கனதனமைதிலியே யடி (சுந்த)

சரணங்கள்.

கந்தர்ப்பனைநேர் ராஜமைந்தனொருவனைத்த ன்
கனவினிற்கண்டு மிகமயற்கொண் டு
வந்தகோடைகாலத்து சந்ததம்நதிநீர்போ ல்
வற்றிமெலிந்ததேகமுற்றதாரோ அடி. (சுந்த)

க்ஷீராபிஷேக தாரைகொண்டிலகி டு
செய்யதனித்தங்கப் பதுமையைப்போ ல்
கோரவிரகவாதை மீறிடமெய்வெளுத் து
குளித்தவன்போற் கண்ணீர்வடித்தவளார டி. (சுந்த)

காமவேட்கடுங்கோவி மாமலர்க்கணையே வி
சுருதியென்னங்கத் துளைத்தான்பா வி

சோமனுந்தென்காலும் வேமனலாச்சுதென் று
சொன்னவனாரிந்தக் கன்னியர்க்குள் அடி. (சுந்த)

விஸ்தாரரமணீய உத்தியானவனத்தி ல்
விளங்கிமோதுள நெருக்கத்தி லே
சுற்றிநாளிகேரஞ்சேர் மத்திமாதவீமண் ட
பத்திற்றளிர்ச்சயனத் திருந்ததார டி. (சுந்த)

செந்தளிர்ச்சயனத்திருந்த பூங்கொடியின்மே ல்
சந்தணக்குழம்பிட்டு சகியரா லே
தந்தானன்றோ ஆம் மென்றனங்களினேரா ம்
சாற்றிவைத்திடப் பெற்றதையலாரோ அடி. (சுந்த)

சீதநிழலுமந்த வாதமுமாயுகந் த
சிறந்தயிடத்திற் சகியர்சேவையுட ன்
ஏதடிநாதன்வா ரா திருப்பதென்னெ ன்
றிப்படியோநாட் கழித்ததாரோ அடி. (சுந்த)

(தவிரவும், உதயகாலத்தில் காமவிலச்சையுடன் ஒருவரும் இல்லாதயே காந்தஸ்தலத்தில் சகியினிடத்தில் இவ்விதம் இரகசியமாயுரைத்தவளாரோ.

(மாண்டவி.) அடி, அடி சுருதகீர்த்தி அதெப்படி சொல்லு சொல்லு.

(சீதை.) சுருதகீர்த்தி இப்படிச்செப்புவள்.

(சுருதகீர்த்தி) ஆசிரியவிருத்தம்.

அரிதரிதுகண் சற்றுறங்கிவெ தொருவே ளை
அவசமாயிமை சாற்றிடி ல்
அப்போதுதிகழுமென் சொற்பனத்தினில் மிக் க
அபிராமவர சுந்தர ன்
இரவிகுலமதில்வந்த ஸரஸகுணசீலனு ம்
இரகுராமனெனு மெவ்வன ன்
எதிர்வந்திலங்கு மன்னவன் மெள்ளமெள்ள வே
என்பக்கல் வந்தெய்துமா ல்
தெரிவையர்க்கரசி நானுன்னடிமை யென்றிடு ஞ்
செப்புமூலை மேன்முந்தியா ஞ்
சேலையைக் கூசாதிழுத்திடும் புருவங்க ள்
சிறிச்களிப்பதி லவ ன்

காமெடுத்தஞ்சலிகள் செய்யும் யேமாற்றினி ற்
கனிபோற் சுவைத்துமுத்தி க்
கனியொடு புறம்பினினைப்பன் றிடுக்கென க்
கண்விழித்திடிற் காண னே.

(என்றே)

(ஊர்மிளையும் மாண்டவியும்.) சீதையின் முகத்தை நோக்குகின்றனர்

(சீதை.) தன்னுள், இலச்சையுடன் ஓ, ஓ, இவர்களால் நமது விருத்தாந்தம் யாவும் அறிந்துகொள்ளப்பட்டது. இனியென்செய்வது கதியென்கொல்.

(வெளிப்படை.) தங்கைகாள் நீவிர் அறியீர். இதுவெல்லாம் பரிகாஸவதியான வென்சகி சீலவதியின் கேலிக்கட்டுமானம். எங்ஙனமெனில்,

கொச்சகம்.

பாலருக்குமூத்தோர் பகர்கட்டுக் காதைகள்போ ல்
சீலவதி கன்னியென்றே சீதைமெய் வெளுத்திளைத்தா ள்
மாலடைந்தா ளிப்படியப்படி யானுளென்று வந் து
கேலிசொல்லிக் கிண்டிவிட்டான் கருதிகீர்த்திக்கே வனிச ம்.

(மாண்டவி.) எதிரோநோக்கி.

ஆசிரியவிருத்தம்.

இதுவென்கொல் பாதலம்புகுகின்ற குகையெ ன
இலங்கயப்பெட்டி தன் னி
லேயிருப்பதில் நிதம்பூசைசெய் சுகந்தங் க
ளேற்றயிச்சிவச ரபமெ வ்
விதமிங்குவந்ததோ அதன்பா லகோவ கோ
வினயமதிகுண சீலனு ய்
மிக்ககம்பீரனுய் குமரனுய்ச் சகலக லை
விக்ஞானனு யெவர்க்கு ம்
அதிபெற்றிலங்கு சிறுபதிபோற் கணைக் த
சொருபனுய் முகில்வண்ணனு ய்
தோற்றமிவ்வுடசு பூமிக்கலங் காரனு ய்
சுந்தர விலாஸனு கு
அதிவிசாலப்பெற்ற காணுந்த மேவிடு ம்
அம்புயக்கண் கடைகளி ல்
அருணனுய் கரிகரபுயத்தனுய் நிற்கிரு ன்
ஆர்கொலிவனுர் சொலம் மா.

(சீதை.) நிதானித்து தன்னுள் (வசனம்.)

ஓ, இந்த சுந்தராகிருதியானது என்சொற்பனத்திற் காணப்பட்ட மனோரதவல்லவனிவன்றானென்று வழுத்தல்போலும், ஆகையால் இனியென்மனோரதம் பலிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இராகம் தனாசு. ரூபகதாளம்.

பல்லவி.

கண்ணாளனைக் கண்டேன்

அநுபல்லவி.

விண்ணாட்டரசனுங் கண்ணாயிரவனுங்
வேதனும்புகழாதித்தியகுல நாதனாம்ப்ரக்யாதனை.

சரணங்கள்.

அங்கஜன்றன்பாணங்களென்ற ன்
அங்கமெல்லாந்துளைக்கவும் தென்றல்
அடிக்கவும், யான்றுடிக்கவும் இந்த
திங்கட்சுடவும் யானேவதைக்கண் டு
தெய்வந்தான் தந்ததுவோ இவனையெ ன் (கண்

இந்தமன்னனை இந்தவேளை ய
ணைந்துமயலைதீர்க்கவோ யான்
என்செய்வேன், மதன்மிஞ்சுறான், என்
சிந்தையினினைவேமுடிந்த து
எந்தன்பூசைய மிவ்வுருவாய்வந்த து. (கண்

பந்தநிகரெழி லென்றனங்க ரூ
வந்துதினவுகள் தின்பதும் மதப்
பயல்செய்வீம் பதையுமே நான்
எந்தவிதத்திலு மொருசைபார்க்கிறே ன்
இனியென்ன மனக்கவலை தீர்க்கிறேன். (கண்)

(ஹா, ஹா, என்செய்யப்போகின்றேன் மதனவாதை சகிக்கவசமா இது தான் சமயமென்றே மன்மதன் என்னைக்கொல்கின்றனன்.

இராகம் காபி. ஆதிசாய்ப்புத்தாளம்.

பல்லவி.

இவனையணைந்துசுகம் பெறுவேன் இவனையணைந்துசுகம்

அனுபல்லவி.

[illegible] காரனை பசுமரகுவீரனை
[illegible] வினிற் பொருந்து[illegible]
[illegible] யென்மனைசேரானை (இவனை)

சரணங்கள்.

கரும்புவில் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
வரு[illegible] (இவனை)

[illegible]
[illegible]லை.

[illegible]
[illegible]
[illegible] (இவனை)

[illegible] பொருந்த[illegible]லை [illegible]
[illegible]லை.

[illegible] ழி
[illegible] பழி [illegible] ழி
[illegible] (இவனை)

(எனை) பொதுவிருத்தம்.

உள்ள விராமன் றன்னை வகைவகை [illegible]க்காய ந்
துள்ளவும்பரவசமுறி தோகைஞானகி யாழ்ந்தென்ற ன்
உள்ள புண்ணியங்களெல்லா முருக்கொண்டு வந்த[illegible] ன்
றுள்ளத்திற் புகன்றுகொண்டாளோ வியப்பொன்று ளோ.

(மற்றக்கன்னியரும் பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்.)

(சதானந்தர்.) இனகரகுல ரகுகுமாரனை பாருங்கள் பாருங்கள்.)

(ஜனகர்) விருத்தம்.

சகடமோரெட்டில் பஞ்சசதவல்லவீரரா லே
மிகமிகவருத்தத்தோடு மேவியேயீர்த்துவந் த
மகசராசனத்தை லேசாய்மதித்து மிப்பாலன்கொஞ்ச ம்
அகமதிற்புயமில்லாம லதனையேநோக்கின்றனே ல்.

(கௌசிகர்) விருத்தம்.

அனைவரும்பாரீர் ராமனவ்வில்லை விளையாட்டா க
தனதுசெங்கரத்திற் றாக்கித்தரையினி னிருத்துகின்ற ன்

(இலக்குமணன்.)

தனுவிதைகொடிவளைத்துச் சாற்றிநாணேற்றுகின்றார்.

(ஜனகர்) சந்தோஷவியப்புடன்.

எனதுளக்கவலையோடும் வளைத்திட்டான்.

(சதானந்தர்.)

இறுத்திட்டானால்.

(சனகர்.) ஆச்சரியத்துடன்.

விருத்தம்.

ஊழிகாலத்துறுமு முகிற்குலத்தோசை யாமெனவொப்பி லன்ராகவன்
பாழிசேர்பனை வில்லிறுத்திட்டவோர் பாரசத்தத்திலான பயத்தினால்
ஆழிசூழ்புவனங்கள் திகிலடைந் தந்தந்தப்படியே களைப்பெய்தி ன
கீழ்விழுந்து தெளிந்துபினுந் திடுக்கிட்டெழுந்தி தென்னென்றுவியந்தன

(அகோ அகோ, சதானந்தர் இரகசியத்தில், ஓ மஹாராஜ ஜனகா, உறு சங்கதி முற்றுமறிந்தனம்.

விருத்தம்.

மாமுனி விசுவாமித்ர யாதவரிவ ரயோத்தி க்
கோமகனிளையா னின்னோன் கோதண்டராம னின்னோ ன்
காமமூற் றுருவமாரிக் கபடமாய் முன்னர்வந்தோ ர்.
தீமைசேர் அரக்கரென்றே தெளிந்திட வெளியாச்சன் றோ.

(ஜனகர்.) இரகசியத்தில், ஆம், ஆம், நன்கறியலாயிற்று.

(சதானந்தர்.) இரகசியத்தில், நம் கவலைக்கடல் கடந்தவாறு கபடக் டலினின்றுங் கறையேறியது தெய்வச்செயலேயாம்.

(கௌசிகர்.) ஓ, மதிகுலஜனக மகாராஜனே, கேட்கக்கடவீர்.

இராகம் காபி. ஆதிதாளம்.

பல்லவி.

வில்லொடிந்த வேடிக்கைபாரீர்.

அனுபல்லவி.

தொல்லைவினைகடேர்த்து ஆதியாம்யேக ச்
சோதியையனுதினந் தொழுமன்பா க

தொல்லுலகெலாம் புகழும்விதே க
சூரியகுலோத்துங்கனல் நமக்குநேரா க. (வில்)

சரணங்கள்.

திரிபுவனத்திலுள வீரர்தன்னு லே
சித்தப்ரமணங்கொண்டு நிற்கும்படிமென்மே லே
பிரளயகாலத் திடியைப்போ லே
பெரியவோசைகொண்டே புவிமே லே. (வில்)

அயன்வாய்மூடினுன் அரனிடப்பாகத் தை
அணைத்தான்வலக்கையா லரப்பதைக்கத் தை
வியன்மார்பணிந்து மறைந்தான்மால்கத் தை
மென்குழற்பெண்களை ரக்ஷிக்கயிவ்விதத் தை. (வில்)

(ஜனகர்.) ஆம் ஆம், இது வாஸ்தவமே.

(வித்திச்சிகுவன்) ஒ, இந்த க்ஷத்திரியப்பயல் மகாபராக்கிரமசாலிதான் என் அங்கனமகமேரு.

விருத்தம்.

இந்தமகராஜன் எமனூரில்முன்னமியற்றிடு வெஞ்சமரினிற்ற வீரைர்தான, கந்தரமுங்கணகணெனக் கண்களிற்றீக்கண மெழும்பக்கனவிடிபோற் கர்ச்சித்தானல், சிந்துரங்கள் செவிபடத்திசையோ ரெட்டுந்திகிலடையச் செய்தனவச்சத்தமொப்பாம், விந்தையரன் வில்லொடிந்த ஓசையோரில் மிகப்பலவானிரவிகுலச் சிறுவனுமே.

(சாரணன்.) என்ன என்ன, வித்திச்சிகுவனல் மிக மிக வர்ணிக்கப்படுகின்றாற்போலுமிருக்கின்றது. யாதொரு ஈசுரதனுர்ப்பங்கமானது நம் மகராஜனுடைய மனோரதத்தை வேர்களைந்ததாயிருக்கின்றதோ, அப்போக்கொத்த விஷயத்தில் மிக மிகப்புகழ்ச்சி விஸ்தரிக்கின்றவிதமென்னை.

(இராவணன்.) வித்திச்சிகுவனைக்குறித்து, கோபநகை செய்துகொண்டு.

விருத்தம்.

இந்துதரன் றனுவொடித்திப்பயல்வைதேகியினை மணஞ்செய்கின் றவனிச்சனகன்றானும், மந்திரங்கள்புகன்றீகின் றவனிதெல்லாம்மாமுனியிக்கோசிகன்சீர்நடப்பிக்கின்றேன், நிந்தைதாயப்பானுருவந்தரித்துவந்தும்நிர்ப்பலனுய்ச்சும்மாவிவ்விலங்கைவேந்தன், வந்தவழிபோந்துவருகின்றதென்றால்மகிமையென்சொல்நீநினைக்கும்வகையென்சொல்லோ.

(விசித்திரகுலன் சன்னுவன்.) ஓ, இவ்வரசனே [illegible] [illegible]கின்றான். ஹா ஹா. நன்று நன்று, ஆசையாலிவனை அனுசரித்தே பேசுகின்றான்.

(வெளிப்படை.) யாதொருகாரியம் இக்காலோசிதமோ அதை இங்கி[illegible]தெரிந்த [illegible] யாவெனடுத்துரைப்பதென்னே.

(இராவணன்.) அங்ஙனமாயின், இதனைக் கேட்கக்கடவ[illegible].

விருத்தம்.

நத்து[illegible] [illegible]க்கொன்ற நானைமுன் கொல்[illegible] [illegible]ம்
[illegible] [illegible] விதேகனை வெட்ட[illegible] [illegible]
[illegible] [illegible] சிறைதனைச் செவொட் [illegible]டா
[illegible] [illegible] விசத்திரை, [illegible]ல.

(சாரணன்.) [illegible]

கட்டளைக்கலித்துறை.

[illegible] குட்டி[illegible]
கொக்[illegible] [illegible] [illegible]
அக்கண[illegible] [illegible] வாட்கொடறுத் [illegible]
[illegible] குழப்பன் விடைதால் வேண்[illegible] [illegible].

(விசித்திரகுலன்) சன்னுவன்;

விருத்தம்.

இ[illegible] [illegible]வை [illegible] [illegible]சை வதென்னை, [illegible] [illegible]விடத்தச மேதஞ்செய்[illegible], [illegible] மந்திரங்கள் மூரியருளப்[illegible] விளங்குரகு வீரன்முன் [illegible], குதிகொளமர்செய்[illegible] [illegible] கொல் லோகூத்தா[illegible] [illegible]பகை கொன்றிடாதே.

(வெளிப்படை.) அடடா, மூர்க்கா என்ன உளறுகின்றாய்.

ஓ, இராஜாதிராஜ மஹாராஜனே, சற்று தயைசெய்து கொஞ்சம் செவி கொடுக்கவேண்டுகின்றேன்.

(இராவணன்.) ஸரி ஸரி, இதத்தைச்சொல்கின்ற மந்திரிகளின் வார்த்தைகளை கேட்கவேண்டுவதுதானே கடமை (எனத்திரும்பினன்.

(விசித்திரகுலன்.) ஆலோசிக்காத காரியம் அத்தனையுமபத்தமென்றபடி யோசியாததிலும் பிரவேசிக்கலாகாது. அத்தனை யோஜியாது அவசரத்தில் பிரவேசித்த ஒருகாரியம் முடிவுபெறாமல் மத்தியில் கெடுதலை அடை

ரமாயின் அக்காரியத்தையே திரும்பவும் மந்திரிகளுடன் நன்காலோசனை புரிந்து முடிவுக்கு கொண்டுவரவுங்கூடுமாகையால்.

விருத்தம்.

தலங்களெலாம்பரவுகின்ற புகழ்ப்ரதாப தசக்ரீவசாரணன் சொல்மிகவுந் தப்பாம், பலங்களெலாந் தெரிந்ததுதான் விறுதாப்பீத்தல் படபடப்பாயுளறுகின்றன்கேட்கொணாதே, இலங்கையிற்போ யமைச்சர்களாற்றெளிந்து நாமேஇன்னவனை இணக்கவழி இசைப்போம்சாமி, கலங்கவிடாதும்மனதைத்திருத்திக்கொள்வீர்கடுகெனச்செல்வோமிதுவென்கருத்தய்யாவே.

(இராவணன்.) ஸரி ஸரி, வித்திச்சிருவன் விளம்புவது ஸரியே, நன்று நன்று. அந்தச் சீதாதரிசன குதூகலத்தினாலென்னை திரும்ப விமானமேறி இலங்கைபோய்ச்சேருவோம், யாதொருத்தி பலாத்காரமாய் அபகரிக்கப்படவேண்டியவளோ அது விஷயமாய் யோசிக்கவேண்டும்.

என இராக்கதர்களெல்லவருஞ்சென்றனர்.

(ஜனகர்.) அத்யானந்த பரிசுறைய்,

இராகம் பியாகு. ரூபகதாளம்.

லோக நருவே சங்கரநாமதருவே என்றமெட்டு.

பல்லவி.

மாதவரோ. மாமுனியே வந்தனமய்யா.

அனுபல்லவி.

காதிவம்சோத்தமதிலக அருள்க்
கௌசிகரோ கருணாநிதியே ஞானப்
பதியே நீரோ கதியே. [மாதவ]

சரணங்கள்.

கவலைக்காட்டமெழுந்த கனலே அரக்கர்
கவடக்கனலவித்த புனலே தவச்
செனலே கிருபைத் துனலே. [மாதவ]

சிந்தித்ததுதவிடுந் தேனுவே மனச்
சந்தேகவிருணீக்கும் பானுவே தவப்ர
தானுவே காதி சூனுவே. [மாதவ]

மனவிசாரந்துலைத்தாய் வந்தனம் மகன்
நினைவின்படி முடித்தாய் வந்தனம் அனேக
வந்தனம் அன்பரய்த் தந்தனம். [மாதவ]

(சதானந்தர்.) பகவன், கௌசிகரே.

விருத்தம்.

வெற்றிவேல் விழியாள் சீதைவீர னிராமனுக்கும்
பெற்ற வூர்மிளைப்பெண்ணணைப் பின்வரும் வள்ளலுக்கும்
மற்றநற் கனிஷ்டருக்கு மாண்டவி சுருதிகீர்த்தி
உற்றவிம் மணப்பொருத்தம் உமக்குஞ் சம்மதமதாமே.

(கௌசிகர்.) நன்று நன்று, அவ்விதமேயாகட்டும்.

(சீதை தன்னுள் தொடர்மொழி.) முக்கணன்றன் உக்கிரகோதண்டத்தை வெடுக்கென முறித்தெறிந்திட்ட மனோஹரவல்லவன்றன் மிக்கமதவேதண்டசுண்டம்போல்நீண்ட வாகுபலத்தால் ஒருமன்மதன்றன் இக்ஷுவில்லுமுறிக்கத்தக்கதுவே.

அடுக்குமொழி.

கன்னமதச் சிறவேழங், கன்னலைப்போல்
மன்னனிந்த வல்லவனால், துன்னுமரன் வில்லுமிகச், சின்னபின்னமானதுவே. ஆச்சரியமாச்சரியம்.

அடி ஊர்மிளாய், இதென்னடி.

(ஊர்மிளை வசனம்.) அக்தோவக்தோ, இந்த ரகுகுமாரன் மஹேச்சுவரன்றன் சராசனமிறுத்த பிளையகால முடிகொத்த பயங்கரமான பெருஞ்சப்தத்தால் கிடுகிடென நடுங்கினவர்களாய் ஒருவருக்கொருவர் கையொடுகைபற்றி காலொடுகால்பின்னி முகுளிதநில்லாற்பலல்லாசனை களாயிருக்கின்ற நமக்கு திக்ப்பிரமைகொண்டு மூன்றுந் தோன்றாதிருக்கின்றதடி.

(மாண்டவி.) ஆகையால், நாம் கௌசிகர்தம் பாதவந்தனத்தைச் செய்துவிட்டு அந்தப்புரஞ்செல்வோமடி.

(சுருதிகீர்த்தி.) நன்று நன்று, அவ்விதமே செய்வோமடி.

(ஜனகர்.) ஆனந்தஸ்நேக வெகுமானத்துடன், வத்ஸ ராம, ராமமங்களராமா, மனோக்ஞியராமா வாராய் என்னருகில் வாராய்.

இராகம் கமாஸ். ஆதிதாளம்.

பல்லவி.

வா வா வா கண்மணியே
ரவிகுல மாமணியே. (வா)

அநுபல்லவி

மூவுலகிலும்நிகரில்லாத ரூபா
மூவருந்தேவரும் புகழும்ப்ரதாபா. (வா)

சரணங்கள்.

கோசலதேசத்திராஜன் செய்தவமீடேற　　　　சேயாய்க்
குவலயத்தில்வந்தவதரித்த　　　ஐயவீர
மோசநிசாசரியை நாசஞ்செய்தாயிஷ்ட
முனிபத்தினிக்கருள்செய்தவனே ஸ்ரீமானேஇட்ட.　　　(வா)

ஐம்பதுபத்துக்கிங்கரர் கொணர்ந்திடுவில்லைச்சால　　　லேசாய்
அரைக்கணத்தில்ரெண்டா யொடித்தெரிந்தசிறு　　　பாலா
நம்புமுங்களைப் பொய்யென்றிருந்தேனே　　பாவி
ராக்ஷதரைமெய்யென்றிருந்தேனே　　　மேவி.　　　(வா)

பூவைஜானகிசெய் புண்ணியமென்னசொல்வே　　　னே　　　அவட்குப்
பொருந்துங்கணவனாக நீவரத்தவமென் செய்தே　　　னே
ஆவலாயுந்தனைத் தழுவவேணும்　　　ராமா
ஆகையாலென்னருகில் வாநயனுயிரா　　　மா.　　　(வா)

(ஸ்ரீராமர்.) முகம் வணங்கினவராய் கௌசிகர் பக்கத்திலிருந்தனர்.

(வாயிற்காப்போன்.) கன்னியர்கள் வந்துவிட்டார்கள்.

(சீதை நோக்கி தன்னுள்.) அந்த அரன் வில்லொடித்த அதிவீரசிங்கம் அதோ இருக்கின்றது, என் கை கால்கள் பயத்தினால் விரைவாக நடைகொள்ளவில்லை.

(என மாண்டவியின் பார்சுவத்தில் மறைந்து நடக்கின்றனள்.

(ஊர்மிளை) தன்னுள் கட்டளைக்கலித்துறை.

பின்னனையா டனைக்காண மெனமேலும் விருப்பமுள்　　　ள
என்னிருகண் கதிதன்னைத் தீடிக்கின்ற தேற்றகு　　　ரு
சன்னதி யென்பதிலுண்டாம் வினயஞ் சரணியி　　　ன்
கன்னயநாதச் சிரவணத்தால் கனிநான் றன்ய　　　னே.

(ஊர்மிளை) தன்னுள் விருத்தம்.

அரன்றனுவொடித்தஇவனுடைப்பக்கலாடகப்பேரொளியழக　　　ன்
வரைநிகர்புயத்தன்மன்னவனிலக்குமணனிவனிருக்கின்றான்மகிழ்ந்தி　　　த்
திருவுருவத்தைத்தெரிசித்தஎன்றன்சிந்தையைச்சித்தஜன்லீ　　　லா
மிருகமதாகவகித்தனனென்னைமிகமயக்கின்றதென்விந்　　　தை.

(என ஜனகராஜன் பக்கத்தைச்சார்கின்றனள்.)

(இலக்குவன் தன்னுள்.) ஓ ஓ யென்ன சௌந்தரியம்.

இராகம் பியாகு. ரூபகதாளம்.

பல்லவி

இவள்கடைக்கண் சயிற்றாலிழுத்திட்ட வென்
இதயந்திரும்பிவர வில்லேயே.

அநுபல்லவி.

நவநீலமுகிற்குழலால்மறைத்தா ளோ
நங்கைநெற்றிற்றிலதமாய்வகித்தா ளோ
கவலையுண்டாக்குதே காதல்மயக்கு தே
காமன்கணை க்கு லக்காக்கு தே. (இவள்)

சரணங்கள்.

கச்சுமென்றனத்திலோ கனசகனத்தி லோ
கனிவாயிதளமுதங் கமழுமெய்வனத்தி லோ
இச்சையுடன்பொருந்தி யிணைமறந்திட்ட தே
இன்புறவே மயங்கிட்ட தே. (இவள்)

மாரன்கொலுமண்டப வாசலில்நாட்டி ய
வாழையாந்துடைகளிலோ வளைபூட்டி ய
ஆரமணையகையொய் யாரத்திலோமூங் கி
அயிக்கியமாயினவே மயங் கி. (இவள்)

கட்டுடையிலோதந்திடை யுந்திப்புடையி லோ
காரிகைஅஞ்சமென நடக்கின்றநடையி லோ
எட்டுணை யுமிவளை விட்டகலா து
இருந்துரமிக்கின்றதே இதுபொல்லா து. (இவள்)

(எனப் பராமுகமாயிருந்தனர்.)

(ஜனகர்.) குழந்தைகாள் இந்த பகவான் கௌசிகரை வந்தனஞ்செய்யுங்கள்.

(கன்னியர்கள்) விருத்தம்.

ஐயனேபோற்றி யெங்களாரிய போற்றி ஞான த
துய்யனேபோற்றி கன்மத்துக ளறுத்திட்டோய் போற் றி
மெய்யனேபோற்றி விசுவாமித்திர முனியே போற் றி
நைய்யிடைக் கன்னிமார்க ளுங்களேபோற்றி போற் றி.

([illegible]) கன்னியர்காள், உங்கள் உங்கள் [illegible] நிறைவேறுக [illegible].

([illegible].) கொஞ்சம் [illegible] ஸ்தலத்திலுட் [illegible].

[illegible] யாரோ, [illegible] நம்சப [illegible]

[illegible] காள்! அனைக்கி [illegible] செய்யீர்.

[illegible]

[illegible] வந்திட் [illegible]

[illegible] ஆ [illegible] சிறப்புச் [illegible].

[illegible] படியே,

[illegible]

[illegible]

கண்ணிகள்.

[illegible] ம

[illegible] ரே

[illegible] ள்

[illegible] ள்

[illegible] து

[illegible] து

[illegible] ற்கி

[illegible] க்கி

[illegible] ப்

[illegible] செய்மின்தேந் தி

கலைதப்படியே செய்கின்றோம்.

(எனச் சென்றனர்.

(———) திரை.

மதிலைமாணகரா ளெங்கள் வெண்மதிக் குலத்தோய்நாளு ம்

துதிபெறு பொன்னுடாளுங் குலிசனைத் துயர்தீர்த்தாண் ட

பதியெனுந் தயரதேந்த்ரன் பாலரும் மனைவிமாரும்
கதியுள படையுஞ்சூழக் களிப்பொடு வந்திட்டாரால்.

(ஜனகர்.) பகவன் கௌசிகரே இது தேவவிரத சமசாரம் ஆகையால் எமது ஆசாரியசதானந்தர் இராம லெக்ஷ்மணர் கன்னிமார்கள் இவர்களுடன் நாம் எதிர்சென்றுபசரித்து அழைத்துவரவேண்டும்.

(கௌசிகர்.) ஆம் ஆம், அப்படியே.

(ஜனகர்.) அடா தேவவிரதா வருகின்ற கோசலேசுவரன்றன் அந்தப்புரஸ்திரீகளை உபசரிப்பதற்காக எமது அந்தப்புரஸ்திரீகளை அழைத்துவருவாயாக.

(என எல்லவர்களுஞ்சென்றனர்.)

விருத்தம்.

திருவெனும் சீதாதேவி சிந்தைக் கிசைந்தராமன்
திருமணக் கோலங்கொண்டான் சிந்தையுங்கோலங் கொண்டான்
திருமண மண்டபத்திற் சிறப்புறசுவாமி வந்தார்
திருமண முறையைச்செய்தார் சேகுதசீத ராமசந்தரா

நான்காவதங்கம் முற்றும்.

* * *

ஐந்தாவதங்கம்.

ஆரம்பம்.

(அப்பால் விராதன் பிரவேசிக்கின்றனன்.

விராதன் விருத்தம்.

அடவியிற்சன்னியாசிகளுக்கபயமீந்த அரக்கர்குலமறுப்பனெனச் சபதம்பூண்டு, மடமயிலாஞ்சனகியொடு மனுசரிருவரும் வயிக்கின்றனராமெனக்கேள்வியாகி, சந்தியிலவனவனை வதைத்திடுவாயென்றெனன் சகனுரைக்கான் விடுக்கத்தாவிவந்தேன், திடமுடையயவரிருவரை மிதித்திட்டபோதுஞ் சிறுமனிதனினியேது திண்ணனந்தனுமனே.

(கர்வபுன்னகையுடன்.)

விருத்தம்.

பலசாலிஇலங்கைவேந்தன் அவனிறுங்கரன்பலிஷ்டன்
தலைமையன்னவரிலும்மூச் சதிலவன்சாற்றலாகும்

[illegible] மேலாம் [illegible] பலவான்னா னே
[illegible] முன்குறித்துநிற்பா ர்

[illegible] மையான பலவானுகிய இ
[illegible] சகசியின சுதனென்று
[illegible] ஆச்சரியமாச்சரியம்.

விருத்தம்.

[illegible] திடச்சபதம்பூண் டே
[illegible] பமேபோலா ம்
[illegible] வனறனைவதைத்த ற்
[illegible] மே.

விருத்தம்

[illegible] லகாட்டு ம்
[illegible] வனையினறடமதி லே
[illegible] ப்
[illegible] பொருந்தக்கண்டன. னே.

விருத்தம்.

[illegible] பக்கலவனதிக ச
[illegible] ம்
[illegible] வாடமையுற வி
[illegible] பணிடலமதி லே.

(அ [illegible] ருமும பராக்கிரமமும் என்னென்று செ
[illegible]

[illegible])

ராகம் காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

இவனைச்செயிப்பார் திரிபுவனங்களிலு மில்லை
எனலாகுமோ ஆகாதே,

அநுபல்லவி

கவனமில்லாமலந்த காரனுப்பிடவந்தேன்
கண்டேன்மிகவும் [illegible] குண்டேன்மனம்நொந்தேன் (இவ)

சரணங்கள்.

அரிவையகரியு[illegible] கரியைவெள்ளாடு[illegible]
லாவைத்[illegible]ன் றிட்டா[illegible]ம் [illegible]மரு
கிரியைசி[illegible] [illegible]னைவெல்ல[illegible]என்[illegible]
கிட்டவாகி[illegible]ாக எட்டுமோசொருக்[illegible] ([illegible])

[illegible] [illegible]
சிவ[illegible] [illegible]
[illegible]திரு[illegible] இவளை[illegible]
சொல்[illegible] கொல்லவநான்றே[illegible]ன் ([illegible])

இவ[illegible] இவனினு[illegible]பெரிய[illegible]
இராம[illegible] கிட[illegible]
அவ[illegible] [illegible]
[illegible] அவ[illegible]சொல்வா[illegible] ([illegible])

விருத்தம்.

[illegible] வலுத்தவரிவர்பாற்செல்லே ன்
[illegible] இவனுயிர்தகுவேலியா [illegible]
[illegible] வனப்பினி[illegible] [illegible]
அ[illegible] அ[illegible]ந்திடதூயல்கொண் [illegible] ன்.

[illegible]விருத்தம்.

[illegible]பாவையினெழிற்றுரு[illegible] [illegible]
[illegible] திருக்கின்[illegible]னென்று [illegible]
[illegible] [illegible]த்தினிற்றுலங்காம[illegible] [illegible]
[illegible]யெவ்விதயா[illegible] ன்.

இராகம், பியாகு. ரூபகதாளம்.

பல்லவி.

[illegible] நெஞ்சிரங்கியே கொஞ்சவாராளோ
[illegible] தீராளோ (வஞ்)

அநுபல்லவி.

[illegible]ன்றன் வெஞ்சரங்களும் பாயுதென்மேலே
[illegible]ற்பாராளோஎன்றன் காதல்தீராளோ
கட்டிமுத்தந்தாராளோ. (வஞ்)

சரணங்கள்.

மங்கைஇவடன்செங்கமலம்போர் வதனமுந்தனமும்
எங்கணும்புகழுங்கஜன் ரதசக்ரஜகனமும்
கண்டிழுக்குதென் மனமும். (வஞ்)

பாக்கியமென்செய்தேனே இந்தப்பாவையைக்காண
பார்க்குள்யார்க்கும்கிலாக்யவதியாய் பார்க்கையிற்றோண
பகருதே இவள் நாணம். (வஞ்)

மன்மதன்பாணம்பாயப்பாய வாடிநொந்தேனே
கன்முலைஇவளோரிட்டுப்பார்க்கக் கண்ணிற்காணேனே
கலந்தணைந்திட தானே. (வஞ்)

விருத்தம்.

வனசமலர்மாலையொன்று கோவிலங்கின் வன்கரத்தில்விளங்க சிறுமானைதன்மேல், அனவரதமோசைகொண்டா லாவதென்னை அவ்வாறுமென்னி [illegible] மானவனைவிட்டு, வனிதையிவடனித்திருக்கும்வேளை நாடிமனிதனன் [illegible]றுருவுதனை வகித்துககொண்டு, மனமுவந்தஇடத்திலவடனைச் சேர்ந்தி [illegible]ட்டம் வந்தபடிமருவிக்ந்து சுகிப்பேன்மன்னே.

௸ விருத்தம்.

தவளையங்கண்ணனி இக்கோதையைக் கொள்வனே ல்
[illegible] ராமனிருப்பனு ல்
துவலியோ யானு மன்னெடியிற் பொன்றுவ ன்
கவலைகொள்காணுனைகாரிய மாகுமா ல்.

(வசனம்.) ஆகையால் ஜானகிதனித்து அவனைவிட்டு வெளியே வருகின்ற வரவை சமையம்பார்த்துக்கொண்டிதோ சமீபத்திற்றென்படுகின்ற கோவிதாரவனத்திற்றங்கியிருக்கின்றேன்.

நன்று நன்று இவ்விடத்தில் சடாயுவைக் காணப்படவில்லை, என் ஸரி ஸரி, நிச்சயமாய், தன் றமையன் ஸம்பாதியை வந்தனஞ்செய்துவரப் போயிருத்தல்வேண்டும்.

(எதிர்நோக்கி) ஓ ஓ இலங்கைத்தீவில் நின்றும் சூர்ப்பனகை வருகின்றனன்கொல்.

[எனநடக்கின்றனன்.]

[அப்பால்] சூர்ப்பனகி பிரவேசிக்கின்றனள்.

[சூர்ப்பணகி] வசனம். யானோ பஞ்சவடியில் வந்திருக்கின்ற இராமன் மனையை என்னிமித்தம் கவர்ந்து வருவாயென்று மஹாராஜலங்கேசுவரனாலனுப்பப்பட்டு பஞ்சவடிதீரம் வந்துசேர்ந்தேன்.

கலிவிருத்தம்.

வந்துவஞ்சகன் வடிவம் புனைந்த
எந்தன் கண்ணினைக் கிலக்கதாயினன்
அந்தமானிட னண்டையிலேயதே
சுந்தராங்கி துலங்கிரு ணோர்த்தியாய்.

வசனம். நன்று நன்று, இவளை எவ்வாறபகரிப்பதென ஆலோசிக்கின்றேன் [இது நிற்க] கந்தர்ப்பசுந்தரனாய் நீலோற்பலம்போல் சியாமளகாத்திரனாய் விளங்காநின்ற இவ்விராமன்பால் எனது நயனங்கள் செல்லவே காமனுமென்னிதயங்கவர்ந்து கொள்ளலாயிற்று.

கலிவிருத்தம்.

மதனையொத்தவம் மன்னவராமனென்
னெதிரிற்றென்பட வெனமனக்கந்துகம்
அதனிமேலரி யென்னுசைகொடிக்குனோ
சதிருடனவன் றன்னிடஞ்சார்ந்ததே.

[ஆகையால்]

விருத்தம்.

ஒண்டியாயவனு லாற்றுமொரு சமையத்தில்நானே
வண்டமர்க்குழலி யாமம்மைதிலி வடிவங்காட்டி
அண்டியேயேமகூட மதிலன்னோனுடனேசென்று
சண்டப்ரசண்டலீலை தான்புரிந்தினிது சேர்வேன்.

[என] நடக்கின்றனள்.

[விராதன்] அடி சூர்ப்பனகாய் வா வா நல்வரவா.

[சூர்ப்பணகி] ஆ, விராதனா நன்றாயிருக்கின்றனையோ.

[விராதன்] அடி சூர்ப்பனகாய், இராஜாதிராஜ மஹாராஜலங்கேசுவரன் குசலன்கொல்.

[சூர்ப்பணகி]

கலிவிருத்தம்.

குவிபுயா சலக்கூற்ற விராதனே
கவலையற்றுக் களித்திடு காலமும்

அவனைவந்து பொருந்திடு மாகில்நற்
சுவமங்கெய்தும் விதிதுணை வேண்டுமோல்.

[விராதன்] [தன்னுள்] இவனுக்கப்படிக்கு விசாரமென்கொலோ.

[வெளிப்படை]

கலிவிருத்தம்.

அந்தராம னரக்கர் குலத்தினைச்
சிந்தமாய்ப்பதாய்ச் செப்புசபதமாம்
இந்தச்சங்கதி யேற்றலங்கேசர்தம்
ஐந்துநாலு செவியடைந்திட்ட தோ.

[சூர்ப்பனகி வசனம்] மஹாராஜன் கேள்வியுற்றதுந்தவிர மேனடக்கவேண்டியதைப்பற்றியும் அமைச்சர்களோடு ஆலோசனைசெய்து சாரனுகிய அகம்பனுல் பிறர் யாருமறியப்படாத யேதோ ஒருசமாசாரத்தை அக்கரனுக்கறிவித்துவிட்டு வேறுவிதங்களு முயர்ச்சித்துக்கொண்டிருக்கின்றனன்.

(விராதன்) [தன்னுள்] ஸரி ஸரி அதனுற்ருன் அந்தக்கரனுல் வெகு ஆத்தரத்துடனுபசரித்தழைத்திங்கனுப்பிடப்பெற்றேன்.

[வெளிப்படை] அங்ஙனமாயின், அரக்கர்களின் வதத்தின் பொருட்டாகத்தானிந்த ஜனஸ்தானத்தில் இவ்வரசிளைஞர் எய்தினர்போலும்.

[சூர்ப்பனகி] ஓ ஓ விராதனே, கேட்கக்கடவாய், நமது மஹாராஜனிலங்கைச் சக்ரவர்த்தி மேதடிகொண்ட சுயங்கிரதானர்த்தத்தைக் கேட்கக்கடவாய்.

[விராதன்] ஆதரத்துடன்] அஃதென்கொல், நன்ருய்க் கேட்கின்றேன் சொல்லக்கடவாய்.

[சூர்ப்பனகி]

இராகம் நாதநாமக்கிரியை, இந்துஸ்த்தான் ஜோட்டு.

பல்லவி

ஜனகரென்னும் இராஜரிஷி தானருக்கிருர்.

அநுபல்லவி.

அனகமதிக்குலத்திலவ தரித்திருக்கிருர் (ஜன)

(விராதன்) ஆம் ஆம் தெரிவேன் தெரிவேன்,

அடுக்குமொழி.

ஈசபூசைவிலாசமிக்கவன்
ராஜனுக்கவன் நேசனல்லவா.

(தெரிவேன் தெரிவேன்.)
[சூர்ப்பனகி] ஆம் ஆம் அவர்தான்.

விருத்தம்.

அன்னவன் றவகுமாரி ஆயிழையழகின் மிக்கா ள்
கன்னிகைசிதாதேவி கருத்தெல்லாம் ராமன்மீ தி
லென்னவேதெரிந்துகொண் டிராமன் றனுருவம்பூண் டு
மன்னவனவளை நன்குமன் றலே புரியச்சென்ற ன்.

[விராதன்] தன்னுள், அடடா என்னைப்போலவனும் இவளிடத்திலா சையை நாட்டியிருக்கின்றனன்.

விருத்தம்

யானேஇப்போதவண்மேல் மையல்கொண்டேனிலட்சேகசனதர்க்கு மு னமென்பெ ற்சொக்கி, பானேர்நன்மொழியாடன் கருத்துக்கேர்க்கப் பறனு ருவந் தரித்தொவ்வொருபாயமாக, நாநாவிதங்களைவா மூயர்ச்சைசெய்து நாடிநனியிருக்கின்றான் நன்று நன்றே, ஆனாலும்பெண்மயக்குப்பொல்லாதந் தோ ஆர்மயங்கார்முனிவர்களு மயங்கிடாரோ.

[வெளிப்படை] நன்று நன்று அப்பால் மேற்சொல்லடி.

சூர்ப்பனகி விருத்தம்.

அதன்பிறகவ்விதேக னருமைப்பெண் கல்யாணத்தி ல்
இதுவொருசபதமென்று னென்னெனிற்றுதி கைலா லை
பதிசராசனத்தினோ பணம்நனி முடித்தபேர்க் கு
வதுவைநடாத்தலாகு மெனவுரை வழுத்திட்டாறு ல்.

(விராதன்) ஓ ஓ அது இராக்கதத்துவத்தினல் நமது மஹாராஜராவ ணேசுவரனல் முடிக்கப்படாத காரியமல்லவோ.

[சூர்ப்பனகி] ஆகையினாலேதான் அந்த இராமனென்பவனல் அந்தச் சானகி மணந்திடப்பெற்றான்.

[விராதன்] அப்பால் மேனடபடிக்கை என்ன அதை விளம்படி சூர் ப்பனகாய்.

சூர்ப்பனகி விருத்தம்.

மனிதன்ஜனகியை மணந்துகொண்டானென்றே மனதிடிந்து தீராப் பொறாமைரோசம், அனுராகமிலச்சையுடனிலங்கை மீண்டுமெதிகபரவசனுகி. அமைச்சரான, இனமானமாலியவான் முதல்வரோடு மேகாந்தத்தாலோசித் தெனது முன்னோன், கனிவுபெறப்பின்வருமாறுள்ளங்கொண்டான் கர்ச்சி தமாய்ச் சில துதிச்சியித்தானன்றோ.

[விராதன்] எப்பா மேல்ச்சொல்.

சூர்ப்பனகி விருத்தம்.

சிவசராசனமிறுத்த செய்கைசையை யெடுத்துரைத்து க்
குவிபுபாகலனுமைக்கண் டாரிராமன்றன் னை
தவவிலங்கேசன் மிக்க பணைவெழக் கோபமூட் ட
அவனியில்ரகுவல்லோனை அதஞ்செய்யவனுப்பினனு ல்.

[விராதன்] ஆ அவன்றோ ஸமஸ்த்தமான க்ஷத்திரிய குலவதஞ் செய்தவென்ற பதப்பெருங்கடலிற் கரைகண்டவன்.

நன்று நன்று மேற்சொல்லடி சூர்ப்பனகாய்.

சூர்ப்பனகி விருத்தம்.

பலமிகு தசரதராமன் மல்வில்லோடு பார்க்கவன்றன்மகன் பரசுராமன் றன்னை, மலையைரத்து மதசக்திபெல்லாம் கவர்ந்துகொண்டு கடந்துமிக கருதியன்றோன், கலப்பொருள்செய்திடு நீத்பறுபதாதி நற்கன்மபலனை த்த பரசித்தமக்கச், சுலபமதாய்க்கொடிய வமமானஞ்செய்துந் துறந்திறு ன் வந்தவழி விரட்டிறைனல்.

[விராதன்.] நடுக்க வியப்புடன்.

விருத்தம்.

புலத்தியன்குலத்திற்றோன்றி புகழ்பெறமிலங்கைசன்ற ன்
பலத்தினையபகரித்த கார்த்தவீரியன்ப்ரதாப ந்
தலைத்தவப்ப்ரசுராமன் றயருடன்றேல்வியெய் தி
மலைத்திட அடித்தானென்றால் ராமனைவெல்வாருண் டோ.

(நன்று, நன்று, மேல் மேல்,)

சூர்ப்பனகி விருத்தம்.

வினயவரசனனுமதியால் வித்திச்சிகுவன்முதலேரர்க ளி
னிமந்திரஞ்செய்தேவல்செய நவிலுராமமந்தையா ம்

மனதின்குடிலங்காட்டுமுடல் மாபிசாசங்கேகயன்ற ன்
றனையயாங்கைகேசியையுந் தயரதனையும்வளைந்தது வே.

(விராதன்.) எப்படி, மேல் மேல்,

(கர்ப்பனஜி) யாதொரு மந்தரைப்பிசாசு, அயோத்தியாபுரியில் முதலில், கைகேசியென்ற பட்டமகிஷியினுடலிற் புகுந்து வியாபித்தது.

விருத்தம்.

கேகயராஜன்றனயாய் தசரதேந்த்ரன் இளத்துணின்சக்களத்தியின்சொற் கேள்வியாலே, மோகமதாயவன்மக னிராமனுக்கு முடிசூட்டமுயன்றதுன் பால் ரோசங்கண்டாய், ஆகையிருற்பரதனுக்கம் முடியைவைப்பாய் ஆரணி யவாசம்ராம னடையச்செய்வாய், வாகுபெறுமுன் வரங்களிரண்டேம்நல்ல வாய்ப்படியோயகராசிரேவிதாமே.

வசனம். (கைகேசிண்டி மனம்பேதிக்கும்படி எடுத்துரைத்தமந்தரை யின் தந்திரத்தை யுட்கொண்டு அதற்கிசைந்தவளாய் அங்ஙனமே புரிகின் றனென, கோபாகாரத்தைச் சார்ந்த அக்கைகேயியின் பக்கல் தயரதன் வந்து, பூமா தேவி, மின்னே, மீதேது புதுமை, என்னகஷ்டம் நேர்ந்தது னை, சொன்னாய், சொல்லாய், என்று தன்னிருகரங்களாற்றூக்கி ஆசுவாச ஞ்செய்ய அப்பால் சொல்வான்,

விருத்தம்.

மன்னவனேபெருந்தேசமாய் முறைபொன்றில்லை மானம்வைத்துவசைய டைான் றிப்போ, தென்னவென்றுகேட்கவந்தீர் போய்போமென்னை இரு ந்தசயாமறானென் மனைவசலைகி, சில்லாய்சயென்னகுறை விதனப்வேண்டா ம் வேண்டிவசெலாம் பேறுவைவியமபாயென்ன, முன்னமருள் வராந் னிரெண்டுகொடுப்பீரெனைறான் முனிவுதனேத்திடுதி தந்தேன் முற்றுமென்றார்.

ரீவ்வுரைகேட்டெழுந்து கைகேசி.

விருத்தம்.

முன்னிரெருவொப்பாதன் முடிபெற வேண்டுமைய யா
பின்னிரெருகுவாமிராமன் பெருஞ்சடை முடிதரித் து
நன்னயக்கானகத்தில் நாடியே வாசஞ்செய் ய
மன்னவா அருள்வீரெண்டு வரங்களுமிதுவே என்று ன்.

(வசனம்.) இவ்விதம் மந்தரைப்பிசாசின், மயக்கத்தைக்கொண்ட கைகேசியார், கடினவார்த்தையைக்கேட்டதயரதன், அதிகசோபதாபங்களைடைந் தவனாய் கீழேவருமாறு புலம்பத்தொடுத்தான்.

(விராதன்.) எப்படி,

(சூர்ப்பனகி) ஆசிரியவிருத்தம்.

படியினில் நிகப் புதுமைகடினகற் குண்டாய்ப்படிப்ப தென்னிருகைமா னே
பசாதுநா விசைந்தநுவோ நின்மகனிறும் பக[illegible]ராமன்புதா ன்
சூழகொண்டாமனைத்தலைவிலுா் பெருமையவாய்க்கொண்ட னைமுடிதாங்கநற்
கோலமானவனை நன்னுல்வசில் முதல்வனைக் குளி[illegible]
தடிதுடிப்புடனுனையிகழ்ந்திடப்பழித்தடி[illegible] [illegible] தோர்
சுகிசானிலேகவருமொன்றனைபெருவி[illegible] [illegible] ருவேன்
அடிபாவ வருவமே சுடிகைப்பாவார்க்[illegible] [illegible] தோ
ஆண் பில்லாளல்ல கருணை[illegible] அரக்க[illegible] னே.

(இதுவுமது) விருத்தம்.

மானதனமேகயனை[illegible] தன்மனையாய்வா
ய்த்து, [illegible] ருனிருந்து
செவியி[illegible] மை, [illegible] கண்டாரியெழிற்ப
ததனிதுகேட்கிலிசைவான்கொல்லோ, [illegible] த்திட்
டாய் அனியாயமனியாயமாகாதா.

(இதுவுமது) விருத்தம்.

தபனுபிராமனை இராமனைவிடேன்மற்றநாடிடிலெதுவுமிலே ன்
அயனுக்கா யரியானை பொன்மொழிமறுட்பைமேயலாருயிரிழப்பனதனு ல்
பயனென்தென்கொல்மாயா[illegible] ததிபாழ்நரகில்வீழ்வையந் தோ
தயனுவெகேத்தினியுளைத்திடேல்சுமுகமாய்க்[illegible] ண்கையகமகராசி யே.

(வசனம்.) இவ்விதமாய் சகிக்கொணுத சோகாக்கினியால் தகதகவெ
ன வெறறிகின்ற இதையத்தொடு தயரதேந்திரன் தகித்துளைத்திடவே, செந்த
ணற்பொரி கண்களிலெழச்சினங்கொண்டம் மந்தரைப்பிசாசம், அன்னவன்
றனுடலினும்புக்கி, யன்னேன் சிந்தை குழம்பும்படி கலக்கிடவும், அப்போது
கேகேசியென்றுங் கனிமொழியாள் அம்மன்னனுக்கு சுறுக்கென்றிட சரமு
ருவவிட்டதுபோலும் சிற்சில ஞாயத்தோடு கடினச்சொற்களால் அடியில்
வருமாறு உத்தரித்தனள்.

(எங்ஙனமெனில்,)

இராகம் எதுகுலகாம்போதி. ஆதிதாளம்.

பல்லவி

மன்னவரோநீரும் அன்னியாயஞ்செய்தீரோ மக்களிற்பக்கபாதமாமோ.

அநுபல்லவி.

என்னயோஜனைசெய்தீர் தசரதராஜ னே
இளைமையல்லவேநீரும் மெய்த்தன்பிரா ணேசனே. [மன்ன]

சரணங்கள்.

நேயமவளிடத்தில் நிஷ்டூரமென்னிடத்தி ல
ஞாயமோஉமக்கிது ஞாலமென்னென்றேரு .
நாயகநயத்தில், நீவிர்முனுரைத்
வாய்மைமையைவிடுத்தீர், தீவினை
வண்ணமணிமகுடம் ராகவன்பூணு
டகன்பரதனவர்க் கடிமையாய்நாளு
ஏண்ணமிதுவோநல்ல திருக்கட்டுக
எல்லாமறிவேனெனக் கிசைந்திடவே ட . [மன்ன]

அதுசெய்யநினைத்தீர் தோதகிசக்களத் தீ
போதனையாபூமி பொருக்குமோ யென் ம
கோதில்நற்குலத்தி, லேதறியெடுத்தீ ர்
சாதனைவிடுத்தென், மீதருள்பொருத் தம்
சந்ததமும்பரதன் முடிதாங் க
சதிர்வனத்தில் ராமன்வசித்தேநாள் க
இந்தவரங்களளிப்பீர் மெய்யிீட க
யென்மனங்களிக்கு ம்துநல்லபாங்கா ய். [மன்ன]

(என்றே,)

(விராதன்.) ஸரி, ஸரி சூர்ப்பனகாய் மேலுளசங்கதி நன்சறிடலாயி
ற்று.

விருத்தம்

இனிச்சொல்வதென்னையெல்லாமெடுத்துரைத்ததுபோற்று மேன
தனிச்சரைசூழ்விருத்தன்தயரதனெனினுங்கைகை க்
கனிச்சுவை வாயாள்சொல்லக் காமுகனென தா லே
வனத்தினில் ராமன்றன்னை வரிசையா யனுப்பிவைத்தா ன்.

(சூர்ப்பனகி.) ஆம், ஆம், அவ்விதம் இராமன் வனத்திற்செல்லவே.

விருத்தம்.

இலக்குமன் யெழில்வைதேகி யிவர்களும் ராமன்பின் னே
விலக்கொணு நிழல்போற்சார்ந்தார் வெவ்விராக்கதப் பேய்நீங் க
துலக்கமாய் மகன்பிரிந்த சொல்லதை யறிந்தமன்ன ன்
சலக்கமாயுயிரிறந்து காலனூர் சென்முன் மா தோ.

(விராதன்.) ஹா, ஹா, ஓ நம் அரக்கர்வேந்தனால் தயரதன் ஆவிபொன்றினன்கொல், நன்று நன்று, மேல் மேல்.

(சூர்ப்பணகை) வசனம். அப்பால், இதை தெரிந்த பரதன் மிகவும்வருத்தமடைந்து சத்ருக்கனுடன்முதலாக வனத்தி[illegible]யடைந்து துக்காக்லாந்தனாய் அடியில்வருமாறு புலம்பிப் பிரா[illegible]றான்.

(அப்படியெனில்,)

இராகம் கௌளிபந்து. ஜம்பைதாளம்.

பல்லவி.

இதற்கோ உடம்பெடுத்தேன், யென்பாவமேதோ ஸாமி
இப்பழிக்காளானேன், என்னமாய்வாழ்வே னே
இராகவா, இராகவா, இராகவா, ராகவா. [இதற்]

அநுபல்லவி.

கதைகளிலாவதுண்டோ, கனிஷ்டாதிகார ம்
காணவேனோ யித்தூரம், கானில்வந்ததின்னேர ம்
கஷ்டமே, கஷ்டமே, கஷ்டமே, கஷ்ட மே. [இதற்]

சரணங்கள்.

துரையணைக்காட்டிலோட்டி, தம்பியச்சொத்தைக்கட் டி
ச[illegible]னென்றேசுட்டி, சாற்றிடுமெனையத்திட் டி
தர்மமோ, தர்மமோ, தர்மமோ, தர்மமோ. [இதற்]

செஞ்சம்படைக்குதையோ, பரதேசிபோ லே
நிற்கின்றயென்முன்றேலே, நினைக்கிடமாய்மே லே
நீதமோ, நீதமோ, நீதமோ, நீதமோ. [இதற்]

சொர்ணமணிமகுடம், தூக்கசக்தனோசொல்லா ய்
துரையேநீயேயல்லாய், சூட்டியாள்ஜகமெல்லா ம்
சொல்லினேன், சொல்லினேன், சொல்லினேன், சொல்லினேன். [இதற்]

(என்றே கொய்யோ முறையோவென்றழுது கறைய,

ஷெவிருத்தம்.

இப்படியே ண்டிநின்ற யெழிற்பரதனுக் கிராம ன்
பற்பல புகன்றுதேற்றி பாதுகை தம்மையீந் தே
அப்புனல் வாவிசூழும் அயோத்திக்கே யனுப்பிவிட் டு
வெப்புறுங் கானகத்தில் மேவியுலாவு கின்றா ன்.

(விராதன் வசனம்.) சரி, சரி, சூர்ப்பனகாய் சங்கதிகளெல்லாம்நன்கறிந்து கொள்ளலாயிற்று. ஆனால் இவ்வளவு விருத்தாந்தத்திலும் மஹாராஜனுக்க னர்த்த சம்பாதனம் ஒன்றுங்காணவில்லையே, முதன்முதலில் இராமனை வனத்திற்குவரும்படிசெய்து அவனது பிரபு சக்தியைக்கெடுத்துவிட்டான். அதனால் மந்திரசக்தி உற்சாகசக்திகளும் தானேகெடுதலடைந்தது, ஆகவே அவன்செய்திருக்கிற மந்திராலோசனையும் நமது மஹாராஜனுடைய நடபடிக்கைகள் அதி நிபுணமாயிருக்கின்றது.

நன்று, நன்று சூர்ப்பனகாய் நிரம்பசந்தோஷம் நீ இங்குவந்த வரலாற்றை யெடுத்துரைப்பாயாக.

(சூர்ப்பனகி தன்னுள்) அடுக்குமொழி

வந்தனன்ராமனை, யெந்தவிதத்திலும்,
சிந்தைமகிழ்ந்துபு, ணர்ந்திடவேண்டியே.

(சூர்ப்பனகி.) விராதனிடம் வெளிப்படை.

விருத்தம்.

என்வரலாற்றைக்கேளாய் இராவணச்சூரனுக்க க
கன்முலேச்சனகியெனுங் கன்னிகையைக்காணின்றும்
என்பெருமானையய லெ யெடுத்துக்கொண்டேகவந்தே ன்
தன்மையாய்பாவனென்பாற் சாற்றியேயிருந்தான்கண்டாய்.

(விராதன் தன்னுள், அடைவிலவிராதனே லடகாக்கப்பட்டபோனன் றனனே.

வெளிப்படை.

உனக்கிதுசத்தியமாகும்.

(சூர்ப்பனகி தன்னுள்) விருத்தம்.

என்னுடை விவசாயங்க ளிராமனை யுபாயமா க
மின்னவள் சனகமாதின் வேடத்தை வகித்துக்கொண் டு
தன்னமை யுடன்போய்க் கிட்டித்தழுவிட வாதலா லே
இன்னவன் றனக்கினுங்க யிப்படிப்புகல்வேன் மா தோ.

(வெளிப்படை.) அதனாற்றான் இலங்காபுரிக்குத் திரும்பச்செல்கின்றேன்.

(விராதன்.) தன்னுள், சந்தோடத்துடன் என் உத்தேசகாரியத்தில் நேரிட்டிருந்த பெரிதான விகாதமானது விலகிற்று, நன்று நன்று நிரம்ப சந்தோஷம்.

(வெளிப்படை.) ஆ . ஆர், அவ்விதமேசெய்கிறது சூர்ப்பனகாய்.

(சூர்ப்பனகை.) [illegible] ராமாச்சிரமத்திற்கு வந்துசே[illegible].

(விராதன்.) யாதோ,

அடிக்குமொழி.

[illegible]

[illegible]

[illegible]

(சூ[illegible])

[illegible]

[illegible]

[illegible]

[illegible] மண்ணிற் றின்றே.

ஒரு கொச்சகக்கலிப்பா.

வல்லவனைக் கொல்லுகைக்கோ வந்தாய் மகபாவி
புல்லவெண்ணு மென்மனத்திற் பொன்னூசி யூடுவிட்டாய்
நல்லமனப்பால் குடித்தாய் நன்றுநன் றிருந்திருந்தே
தொல்லைசெய் துட்டப்பயலே தூரத்திற் செல்லாயோ.

(வெளிப்படை.)

ஹா, விராதா, உன்னாலுமீதாகாத காரியந்தான்.

(விராதன்.) தன்னுள் இதனாலென்ன.

கொச்சகம்.

பைங்கிளி யைத்தங்கப் பதுமைத னைமாஜான கி
மங்கையைக் கவர்ந்தவனை மருவி விளையாடி
பொங்குசுக மெய்திடவிப் போதிச்சை யானதினால்
இங்கிவட் கிணங்கவுனைத் திவலையனுப்பிடுவேன்;

ஆகையாற்றான் சூர்ப்பனகாய் யென்னலாகாதென்பதைத் தெரிவிப்ப தற்கு கரனிடமிதோ போகப்போகின்றேன்.

(சூர்ப்பனகி.) தன்றுள், யானினைத்தகாரியத்தில் தெய்வாதினமாய் துரிதநிவாரணமாச்சுது.

வெளிப்படை.

ஆனலப்படியே செல்கிறது.

(என யிருவருஞ்சென்றனர்.)

[அப்பால், பஞ்சவடியில் பன்னகுடியில் வாசஞ்செய்கின்றவிதமாய் இராமனும் சீதையும் பிரவேசிக்கின்றார்கள்.

(இராமர்.) அடி, பிராணநாயகி, ஜானகி, என்னருகில்வா, பங்கஜலோசனி.

விருத்தம்.

சசிதரன்றன்சரா சனமென்ன அற்பமோசை லமொப்பாமலோதாக்கி
விசையுடனெனையு மினல்செயுந்துவச மீனவன்வில்லென்ன [illegible]மா
இசைகொளும்பரசுராமன்றன் வீரமென்னசற்றெளியதோ வெல்லாம்
விசயஞ்செய்துனை நான்மேவிடப்பெற்றாய் மிகவெளிதாகவே [illegible]

(சீதை) புன்னகைகொண்ட வதனத்தினளாயிருந்தனள்

(இராமர்) சிங்காரப்பத்தியம்.

சொன்னவான்மின்னலே சுகபோகச்செல்வ [illegible]
தோகைஜானகி தளிர்ச்சுந்தராங் [illegible]
அன்னநன்னடையாளே அழகுள்ளநடையா[illegible]
ஆருயிர்க்கண்மாட்டி அருகில்வாரா [illegible]
[illegible]ன்னுங்குயிற்பேடின் றொளியென்மே[illegible]
[illegible]ருற்றசவைகள் சுகிப்பதற் [illegible]
[illegible]ன்னொய்வனத்தாளே மதுரவசனத்தா [illegible]
வாய்துறந்தொரு வார்த்தைவழுத்துவா [illegible]
பொன்னனினச்சோபை வகித்திரு[illegible]
பூவைநின்முகமளித் தொனிசெய்கி[illegible]
நன்னளினச்சிறப்படைதல் நன்றே[illegible]
நங்கையேதங்கைமலைக் கொங்கையா ளே.

இராகம் நவரோஸ். ரூபகதாளம்.

கண்ணிகள்.

வாய்திறந்தோர் வார்த்தைசொல்ல மனமும்வல்லை யோ
வஞ்சியென்றன் பாலுன்கிருபை வரவுமில்லை யோ

நேயமுடன் நானயந்து நிகழ்த்துறேனை டி
நீயதையென் னுந்துசும்மா யிருக்கின்றாய டி
யேகாந்த வேளையிலும் யென்னமௌன மோ
என்னுடன்பே சாமலுனக் கெங்கேகவன மோ
தோகையுன் இன்சொற்கேட்கத் துடிக்குதென்கா து
சொல்வதற்குப் பிரியமானால் சுருக்கில்நீயோ து.
(சீதை.) சினேகத்துடன்.

இராகம் [illegible]. திரிபுடைதாளம்.

பல்லவி.

ஸாமி பொருத்தருள் சரணஞ்சரணம் டென்

அநுபல்லவி.

ஸ்ரீ மானுமநுபுகழ் சிந்தித்திருந்திட்டேன்.
சிறிதும்விகற்பமில்லை சீதைநான்கும்பிட்டேன். (ஸாமி)

சரணங்கள்.

[illegible]வில்லொடித்ததும் பரிந்தென்கைபிடித்தது ம்
[illegible]னந்தக் கொள்கைநினைவிற்கொண் டு
[illegible]நாதைத் திருந்தேன் குற்றமிதனைக்கண் டு. (ஸாமி)

[illegible]கண்ணபார்க்கவன மருங்கொண்டிருக்கவு ம்
[illegible]யாவும் வி[illegible]தொடவுங்நான்கண்டே ன்
[illegible]பலமுன்னி நான்றிகைப்புக்கொண்டே ன். (ஸாமி)

ஆகையால் அடியாள்மீது சற்றுப்பொருத்து தயைசெய்தருளல்வேண்டும்.

(இராமர்.) ஓ, பிராணகாந்தே இதுவென்சொல், தயைசெய்தருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றாய், ஒரு விதத்திலும் நீ குற்றஞ்செய்ததாய்க்காணப்படவுமில்லையே, எனக்கு கோபகாரணம் யாதொருவிதத்திலும் தோன்றவில்லை.

பின்னை, காந்தே கேட்கக்கடவாய்.

விருத்தம்.

கையினிற்கிடைத்தஇராச்சியம் விடுத்துக்கருதியெங் குருமொழியாலே, வெய்யகானகத்திலெய்தியவென்னை விரும்பியேசிந்தைநோய்கொண்டேன், அய்யர்விண்புகவும் அரக்கர்சஞ்சார அதிபயங்கரவனமிதிலே, தையலெந்துயர்கடவிர்ப்பதுன்சகசஞ்சரிப்பன்றோசந்திரமுகியே.

சீதை விருத்தம்.

மானத வென்மனுள மகராஜ ராமரா   மா
தீனதயாளோ நின்றன் றிருச்சன்னிதானத்தா   லே
நானிலம்புகழ் யோத்தி நன்னகர் தனிலுமிந்த   க்
கானகந்தனிலே பெற்றுக் களிப்பதிகரிக்குதைய   யா.

(இராமர்.) ஆம், ஆம், நீ சொல்லுவது சரி, இதோ இங்கே பார்க்கக் கடவாய்.

விருத்தம்.

எவ்வளவற்புதச் சிறுமியர் கானமிக்கவொலி இசைத்திடுமிசைச் சேக
இவ்வனக்கரியின்கன்னைவாத்தியத்திற்கெதிரிலேப்பேரிகைமுழக்கம்
செவ்வையம்பலவச்சயனர்க்கிருக்கத்தேடுமோ தூவியினம   ளி
இவ்வியமதூரக்கனியுணவிமயோத்தியைமறந்திடச்செய்யு   ம்.

(சீதை.) (வசனம்) மகராஜா இச்சித்திரவிசித்திரமாய் மிருககணங்களென்ன பட்சிகணங்களென்ன இவைகளின் விளையாட்டென்ன விசித்திரமாய் இவ்வரணியப் பிரதேசமென்மனதிற்கு மிகவும் திருப்திகரமாயிருக்கின்றது.

(இராமர். ஹா, பிரியநாயகி நன்று புகழ்கின்றாய்.)

விருத்தம்.

நீர்க்கடம்பதனிற்றோகைமயிலினிதிருந்து நின்னியலினை நாடி   ய்
தீர்க்கமார்நயனமானினந் தழைமேய்த்திங்குலவுமென்றுலவிடும் நய
னர்க்குமத்தகத்தாலுயர் நெடுஞ்சினையை இடத்திடன்மண்டியிட்டடியாகு   ம்
பார்க்குமிவ்வனம் யார்க்குநற்களிப்பாம் பங்கயமங்கையாம் நங்கா   ய்.

[இன்னமும், அடி யென்னுயிர்த்தலைவி.]

(வசனம்) இதோ, இதோ மாமரக்கிளையில் மாங்கனிர் அருந்தி அழகிய குயில்கள் இனிமையாய் சப்திக்கின்ற கோலாகலத்தைப்பார்.

இக்கொடிகள் படர்ந்திருக்கும் விந்தையைப்பார்.
களிப்போடுமையாடுகின்ற கிளிப்பேடிகளைப்பார்.
நடையிலழகிய பிடியினைப்பார். அடி காதல் கண்ணாட்டி.

இராகம் கானடா. ஏகதாளம்.

பல்லவி.

அடிகாதலி இந்தக்கானமே அதிசோபையாலுனக்குச் சமானமே. (அடி)

அநுபல்லவி.

வடிவிற்சிறந்த மதிவாண்முகி
மங்கைஜானகி
சுமுகி
நாயகி. (அடி)

சரணங்கள்.

என்றனிதோரசி கின்னாகபார த்
செயில்வகித்தே இலங்குதேமயூர ம்
பொன்மானினநோக்கம் புகழுன்கண்ணின்சீராய்ப்
பொருந்துதே நேராய்
பூவையே போராய். (அடி)

இபமஸ்த்தகம் இணைமுலைபோலு ம்
இளந்தளிருன்கைக் கிணையாகலாலு ம்
சுபநற்குணசுந்தரி எக்காலு ம்
சோலைமென்மேலும்
துலங்குவதினாலும். (அடி)

குறும்பாகுயில் கூவிக்காட்டு தே
கொடியின்னிடைபோல் பாராட்டு தே
கிறைந்தலையுன் பேச்சைநாட்டு தே
பெடையஞ்சுகம்
பிடிநடைகூட்டுதே. (அடி)

(சீதை.) ஆசையுடன், தன்னுள். (வசனம்)

எனது மாமனார் மகன் என்னை வர்ணிக்கத்தொடங்குகின்றனர். ஆகையால் இவர் மனதை வேறுபக்கந்திருப்புகின்றேன்.

(வெளிப்படை.) மகராஜ் இங்கே இப்படித்திரும்பல்வேண்டும்.

இராகம் பந்துவராளி. ஏகதாளம்.

கண்ணிகள்.

வெண்டாமரைத்தண்டென்ன நிர்மலகோமளமா ய்
விளங்குமிகத்துப்பற்கள் மின்ன னே இவை
கண்டால்யார்க்கும்பீதி கரமாய்விஸ்தீர்ண்ணமாய் க்
காணுமுகங்களுடன் துன்ன னே

விளைநன்னிலமெனவே சரீரங்களுட ன்
  விளையாடுகின்றதிதோ மன் ஞ
வளலேயென்பிராணநாதா வென்னமிருகங்களி வை
  வழுங்கும்பெயர்தா னிவைச்சென் ன
அதிரஸாகரத்தில்வெண்டிங்க ளெழுவெண்டி ரை
  சேரவருநுரை போ லே
நேர்வெருவெண்மையாய் அழகாய்விளங்குத ன்
  நீண்டவால்வீசிக் கொண்டிப்பா லே
வேலவிழிகளுடன்நிற்கும் இவைகளை வை
  லோகநாதனை சொல்லுவீ ரோ.

(இராமர்.) அடி, ஜனகநந்தனீ, எனதாருயிர்க்கண்ணாட்டி.

இராகம் பூரிகல்யாணி.

கண்ணிகள்.

சாலம்புகழுமடி சோலமணிவிளக் கே
  ஜானகியே இதைச்சொல்லே னே
பாலசிங்கங்களவை பார்த்துச்சவரிமான்க ள்
  பதுங்கிநிற்கின்ற திவைதா னே
காதலியே அரிகள் விளையாடவெருங்கண் டு
  கவரிமான்கள் பயந்தொளிப்பது ம்
மீதுநின்றுர்பாய்ந்து கடுவாய்க்கிடாக்க ளை
  விரட்டிக்கடித்துத்தின்று களிப்பது ம
காட்டுப்பன்றிகளிதோ மேட்டுத்தலத்தைமூக்கா ல்
  கடுந்தாவாய்ச்செய்வதுங் காண்டியா ல்
சேட்டையாய்க்கவிகள் தேன்கூட்டையிழுக்கவீக்க ள்
  சீறிக்கடிப்பதும் நீகாண்டியா ல்.

(சீதை.) (வசனம்) நோக்கி, வரஸ்தவந்தான் இதோ திமிசவிருக்ஷத்தின் கிளைகளிற்றூங்குகின்ற தேன்கூட்டுகளில் ஒவ்வொன்றில் பதக்கு முக்குறுணி தேன் இருக்கலாம். அதில்வடிகிற தேன்களை வானரங்கள் குடிக்கமுயல, அக்கடர்ந்தைகள் முகத்திற்கொட்டிவிட கிச்சுப்பீச்சென்று கத்திக்கொண்டு சிதறியதேனைக்குடித்து திரிகின்றன.

(இராமர்.) ஆம்.

(சீதை.) இதுவெல்லாம் அர்த்தபரன்களுடைய பிரகாரமாயிருக்கின்றது. எப்படியெனில், ஒருவன் சேர்த்துவைப்பதை மற்றொருவன் அனுபவிக்கின்றானன்றோ.

சேவீக்களால் தேடிவைத்தமதுவை பலவானாகிய மனிதன் பறித்தனுபவிக்கிறானல்லவா.

(இராமர்.) தன்னுள், இவர் அர்த்தபாகை இல்லையென்றென்னிடத்திலிவ்வழக்கெண்ணை.

(வெளிப்படை.) ஒருவன் சேர்த்துவைப்பதும், அதை மற்றொருவன் அனுபவிப்பதும் பாக்கியவசத்தினாலாகும்.

(இதோபார்.)

விருத்தம்.

பச்சமுகனையதேனே பூவையே மாரன்றே டி
வைத்தனன் தின்றுதட்டில் மாதவஞ்செய்தகா லே
சுகந்தமுவந்து பானஞ் செய்கின்ற இந்தகா ணே
இதைதலைபெருக்கின்றேனே இந்தவா றெக்குமா தோ.

(சீதை.) தன்னுள், வல்லவர்செய்யும் பரிகாஸம் வர வர மிஞ்சுகின்றது என்றிலச்சையுடன் தலை கவிழ்ந்திருந்தனள்.

(இராமர்.) தன்னுள், இப்பொழுது இந்த என்னுடைய வார்த்தையினால் இவளடைகிற இலச்சை அதுவும் ஓரழகாய் ரமணீயமாயிருக்கின்றது.

(எங்ஙனமெனில்,)

வெண்பா.

புளகக்க போலத்தின் பொற்பி னெடுங்காதி
னுளாகட் புரைவிழிக ளோடும்—வளமிக்கும்
தன்முகத்தை மட்டுமன்றிச் சற்றுந் தளருமென்
நன்மனத்தையும் வணக்கினாள்.

நன்று, நன்று, ஆகையால் வேறு காண்பிக்கின்றேன்.

அடுக்குமொழி.

(வெளிப்படை.) காயியங்கனி, ஆவியானவென், தேவிஜானகி, மேவிநோக்குதி.

விருத்தம்.

துப்புதல்கின்றுமிழ்நீரினனைவின்றித்தானப்பூச்சொரியாநிற்கு ம்
ஒப்பில்வனப்பேந்திழைநீபுனைதற்காய்க்கேசரிசுகந்தமோங்கு ம்
அப்பரிசாலாங்கங்கேயிருந்துவந்தஅளிகணமொய்த்தழகாய்நிற்கு ம்
செப்பரியநிறையொழுங்குன்வேணிதனக்கிணையாகுஞ்சிறப்பைக்காண்பாய்.

(சீதை.) தன்னுள்,

விருத்தம்.

என்கணுக்களிற் சங்கர்ப்பசெசையில் யெதிரிலிராகு வல்லோனிருந்து
புன்சிறிப்புட னின்பவின்பங்களாய்ப் புகல்வசனுந்தியாங்கொழிற்கள்
நன்கியற்றிடுமுறைநகளெவ்விதங்கொல்கனவிலுமென்முனமகன்றாய்
வன்புயத்தினரவ்விதஞ்செய்யவும் மகிழ்வுற்றேன்விந்தைசமாவிந்தை.

அடுக்குமொழி.

(வெளிப்படை.) மாமனுர்க்கு மனமகிழ்மைந்தரே, மாமனுனமீர வரி
சைநோக்குவீரே.

விருத்தம்.

புகழ்மழைக்காலம் பொருந்திடுநாளம் புயலெனச்சாமளவ ணமாய்
மிகரமணீய கோமளமாகி மேப்படுசிதல குணமா ய்
திகழலர்ப் பூங்கொத்தினங்களோ டழகாய்ச்சிர்வனத்திவ் விடஞ்சிறக்க
பகரதசியாங் தருவிதுநேராய்ப் பரிந்துவாழ்கின்றது பாசிர்.

(இராமர்.) தன்னுள், பலே பலே, இவள் என்வார்த்தைக்கு பதிற்சொ
ல்லுகிறமுறையாய், நம்மை மிகச்சாதுரியமாய்க் கேலிபண்ணுகின்றுள் நன்
று நன்று.

(வெளிப்படை.) அடிவனதரிசன குதூகலினி, ஸர்வாபரண பூஷிதா
லங்காரீ, அடி ஜானகி.

இராமர் விருத்தம்.

பஞ்சவர்ன்னமாந்தாதுக்கள்பக்கல்ப்படர்ந்தொளிபரவிடப்பாய்ந்து
மிஞ்சுவேகத்திலுடல்வெடவெடர்த்துமேவிடுகிரிநதிபரா ய்
கஞ்சப்போதினிலஞ்சங்களுடற்கலகத்தாலிரைச்சலிட்டெழும்பும்
அஞ்சத்தங்களோசினவதியுன்றனைமணிச்சத்தம்போலா மே.

(சிதை.) விலக்ஷணபாவத்துடன் தன்னுள், (வசனம்) நன்று நன்று, அ
ண்ணல் மாமனுர்க்கருமை மைந்தனுர் முன்னம் வனப்பிரயாணகாலத்தில் எ
ன்றுல் மிக மிகப்பிரார்த்திக்கப்பட்டிருந்தும் என் அனுகமனத்தைத் தடுத்துவி
ட்டாரென்று கோபங்கொண்டவளாய் புருவங்களைநெரித்து முகத்தைமாற
வைத்துக்கொண்டு அதிவிரைவாய் நானந்தப்புரஞ்சென்ற எனது கமனத்தை
யும் அப்போது சப்தித்த யெனது மணிமேகலையின் சப்தத்தையும் நினைத்து
க்கொண்டெனக்கு ஞாபகப்படுத்துகின்றனர், நல்லதிருக்கட்டும் யானிவ்வ
ண்ணம் புகல்கின்றேன்.

(வெளிப்படை) விருத்தம்.

அரக்கர்களுஞ் சரிக்குமிந்த அடவியில் முனிவர்தங்கட்
குரக்கினு லபய மீந்த உமைப்படுத் திட்டவெற்று
திரதசெய் மயமாகச் சீர்வளத்தினி லென்னென்ன
கருத்துக் குகந்தவைக ளவையெலாங் காண்கலாமே.

[இராமர்.] கேட்டுக்கொண்டே, சற்றுத்தூரத்தில் களிகளோலோசனங்களை காட்டினர்.

விருத்தம்.

மேலான தலைமுடி கோணையானொரு வீரகுலமொடு மாவினம்
சாலமாறுபெரு நீவியாக்கிரக சருமமான உடைதானுமாய்
கோணையானவிழி ஆலமானவுடலானுமாகிவெகு கோரமாய்
கோலிசாரவனை ஏறுமெ வியரு கோலயாக்க ணிவனோர்கொலோ.

[இராமர்.] இலக்குவன் அறிகின்றானில்லை.

[அப்பால்.] இலக்குவன் பிரவேசிக்கின்றனன்.

[இலக்குவன்.] ஆ, ஆ, இவன் யாவனோ ஒரிராக்கதன் கோவிதாரவனத்திற் பிரவேசிக்கின்றனன், இவன் யார்கொலோ.

நல்லதிருக்கட்டும், இவனை இப்பொழுதே எமபுரிக்கேவிவிடுகின்றேன்.

[என்று] ஆடம்பக்கிரசனைசெய்கைச் செய்கின்றனன்.

[சீதை.] மறைந்திருக்கும்வாயிற்பெருநோக்கி, ஓ மாமனோள என்மாமனோர் மைந்தரே.

விருத்தம்.

மலையினுப்பைத்தோப்பிதன்றுகன்னிகாரவனமாமிதோவருவ தரக்கனன்று, பலவிகற்றப்பற்களோடார்க்குபிக்கப்பயங்கரமாயிலங்குகின்றமுகத்தினோடும், அலையுஞ்சுனைக்காய்களொனமூலைகளோடும்அதனினுமுன்னதங் காட்டுமுதரத்தோடும், நிலையிலுந்திக்கிடங்கொடும்விரூபமானசீலகிறக்கொடியநிசாசரியாமன்னே.

[இராமர்.] எங்கேபார்க்கின்றனை, யானிங்ஙனமன்றோ வடுத்துரைக்கின்றனன்.

(சீதை.) நோக்கி, அங்ஙனந்தோன்றுவதரக்கனன்றே, அண்ணல் செங்கமலக்கண்ணனேயான அழகுளவீர்தானன்றோ.

[இராமர்.] தன்னுள், ஓ இவனென்னை இராக்ஷசனாகவுங் காணிக்கக் கொண்டு பரிஹஸிக்கின்றான் கொல்.

திரும்பவும் செங்கண்பரப்பி,

[வெளிப்படை.] ஆச்சரியமாச்சரியம் ஓ, ஓ, திரும்பப்பார்க்கையில் இராக்கதனென்னுருபத்தைத்தரித்துக்கொண்டவனைப்காணப்படுகின்றனன்.

(சீதை.) முன்னோக்கிய திசையினிற் கண்மலர்பரப்பி, வியப்புடன் ஓ, ஓ, இதோ கன்னிகாரசதோப்பிற் பிரவேசிக்கின்ற இவ்வாரகியும், என்னது ருபத்தைத் தரித்துக்கொண்டிருக்கின்றனள்.

வாய்த்தமணாள மாமனார் கண்மணியிய நோக்குக நோக்குக.

[இராமர்.] பார்த்து, ஆச்சரியத்துடன் அடட, இவர்களுக்கிவ் வருவத்தால் யாது பயன் கொல்.

(சீதை) இந்தக் கிரிசிகரத்தினின்றங்கீழிறங்கி இவ்வேடிக்கையைக் காண்போம்.

[இராமர்.] அங்ஙனமன்று இங்கிருந்தே பார்க்கின்ற நமக்கு சுற்றி ஒருயோஜனை தூரமட்டுமுள்ள யாவையும் நன்கறியலாகும்.

[இலக்குமன்.] திரும்ப நோக்கி வியப்புடன் அந்தோகஷ்டா.

வோச்சகம்.

கொல்லவென்றே ஆயுதங்கள் கொண்டுவரு முன்ன ம்
வல்லரக்கனெங்கோ மறைந்திட்டான் யாயறிதா ய்
சொல்லுபிரதிக்கினையால் துட்டனைவதைத்திட வே
வில்வினோடிராகவனே மேயினன்கொல் மெய்யது வே

[அங்ஙனமன்றே.]

விருத்தம்.

தனுவிடக்கையிற் றங்கிடக்கூர்மைத் தங்கப்பட்டங்கொடெழிலாய்
கனகநன்னிறமாய் கங்கபத்திரமார் சரம்வலகையினிற் கலிக் க
நனிகடக்கின்றான் நாயகராமன் மயிலரக்கன் மறைந்திட் ட
தனியிடம் நாடலெனவங்குமிங்கும் தாமரைக்கண்ணொளிதரைக்கு ம்.

(சற்று நிதானித்து, அங்ஙனமாயின் ஜானகிப்பிராட்டி யெங்ஙனம்.

ஸீதாப்பிராட்டியும் ஸ்ரீ ராமச்சந்திரரும் இந்தப்பருப்பதச் சிகரத்திலன்றோ யேறினார்கள்.

எந்தாய் சீதாப்பிராட்டியைதனியாய்விட்டுவிட்டு ஆர்யஸ்ரீராகவர்தான் மாத்திரமாய் கீழிறங்கிவிட்டார்கொலோ.

என்று கிரிசிகரத்தை உயரநோக்கி ஆச்சரியத்துடன்.

இராகம் பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணனிதோ மாயலையில் வீற்றிருக்கிறான்.

அநுபல்லவி.

வண்ணமணி ஜானகியாம் மாதுடனன்பாகவே
கண்ணனுந் தன்னனுங் கார்நிறத்தவண்ணனும். (அண்)

சரணங்கள்.

சங்கபத்திரம்புனை சரமுங்கார்முகமு ம்
மையபு தும்மலர்ந்த அரவிந்தமுகமு ம்
சந்தமெய்ப் பீமொளிர் மணிமார்பு பொன்செ ல
மாபாம், பூமகள் ஜானகிமணாளனு ம் (அண்)

வந்த அரக்கன் அவனே ராமவேடம்பூண்டன ன்
வஞ்சகமாய்வருகின்றானென் றறிந்துகொண்டன ன்
பைந்தொடிஜானகியுடன் பரமலைமேறி பே
பங்கயக்கண்களால் யெங்கெங்கும்பார்த்துக்கொ ண் (டன்)

(வசனம்) நல்லதிருக்கட்டும், இதோ இந்த செடிகள் கொடிகள் படர்ந்தடர்ச்சியாய் நெறுங்கியிருக்கானின்ற வனமார்க்கத்தோடே மறைந்து மறைந்து பின் சென்றே இவ்விந்தையைப்பார்க்கின்றேன்.

என, மறைந்து மறைந்து நடக்கின்றான்.

(அப்பால்) இராமவேடம்பூண்ட விராதன் பிரவேசிக்கின்றான்.

(விராதன் எதிர்நோக்கி) ஓ, நன்று நன்று, அதோ கன்னிகாரவனத்தினின்றும் அந்த ஜானகி அடுத்த செண்பகாடவிக்குள் வருகின்றாள்கொல்.

நன்று நன்று, கொஞ்சம் கிட்டி நடந்துபார்க்கின்றேன்.

(அப்பால்) சீதாரூபதாரியான சூர்ப்பனகி பிரவேசிக்கின்றனள்.

(சூர்ப்பனகை.) யானிப்போது இந்தச் செண்பகாரண்யத்திற்றானே செண்பகமலர்களைக்கொய்கின்றேன், இரகுநந்தனனும் இங்கேயேவந்துசேர்வான்.

(என,ப்போது கொய்தலைப்புரிகின்றனள்.)

(விராதன்.) நோக்கி தன்னுள், ஹ ஹ, இந்த ஜானகி நிகரற்ற ரூபலாவண்ணியசாலினீ, அகோவகோ இந்தப் பிரமசிருஷ்டி அபூர்வமாயிருக்கின்றது.

விருத்தம்.

சனகிஇவடன்னழகைப்பார்க்கக்கண்கள்சதகோடிசங்கைவரம் பெற்றே னல்லேன், இனமுகில்மண்டலமேற்கிழிந்துமிப்பமிலங்கின்றதெழிற்சுனை விண்இதற்குமேலே, கனகமயமாமலைகள்மணர்க்குன்றின்கீழ்ந்தலிமாமிர ண்டுதலைகிழாய்க்காணும், மனமகிழிச்சிருஷ்டியகோபுதுமைத்தாகும்மன்ம தன்செய்திட்டதென்றேமனத்தோர்கின்றேன்.

(ஆகையாலிவளை எவ்விதத்திலும் அபகரித்துக்கொண்டுபோய் ஸௌக்க ந்தமாய் விளையாடப்போகின்றேன், இராமலக்ஷ்மணர் வருவதற்குள் அபகா த்துச்செல்கின்றேன்.

(சூர்ப்பணகை.) பார்த்து.

இராகம் எதுகுலகாம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

இங்கேதான் நோக்குகின்றான் எந்தனிதயசோரன். .

அநுபல்லவி.

துங்கபாத குலத்தில்வந்த தோன்றல்ரகுவீரன் (இங்கே)

சரணங்கள்.

எனதெண்ணத்தின்படியே எங்கோசிதையைப்பிரிந்து
ஜனகிவடிவந்தரித்தவென்னைத் தானவளென்றறிந்து (இங்கே)

அதிருபமன்மதனுக்கும் ஆசையைத்தருங்காமன்
சதிராய்நான் றழுவநினைத்த ஸாமிஸரஸராமன் (இங்கே)

சாமளவண்ணனிற்குஞ் சாடையில்மையற்பெருக
தேமற்படர்முலைகள் விம்மிச் சேரவென்மனமுருக (இங்கே)

ஓ நன்று நன்று இதோ என்னிதயசோரன் இங்கெனக்கெதிர்ப்பிற் றனே வருகின்றாற்போற்றெரிகின்றது இவரோ.

விருத்தம்.

உத்தமவெழிற்றருணசீலர்பலவாயிரமுண்டாக்கினான்முகன்றன் கைத்திரம்வெளிப்படுத்திட்டதெனசிருஷ்டித்தகட்டழகனிவனுங்கொ லோ நத்திமகிழ்சகலபுவனத்திரயனங்கள்செய்நற்புண்யராகியே யென் சித்தமுருகிடவிந்தவடிவஞ்சமைந்ததோதெரிகிலேன்தெரிகிலேனே,

ஆகையால் இவனைத் தந்திரமாயபகரித்துக்கொண்டு போகப்போகின்றேன், என, பார்த்துக்கொண்டே போதுகொய்தலைப் புரிகின்றனள்.

பொது. இராகம் காம்போதி. சாப்புதாளம்.

பல்லவி.

சூர்ப்பனகை பூப்பறிக்கத்துணிந்தாள்.

அநுபல்லவி

வாய்ப்புடன்சீதாதேவி வடிவோடுவந்த (சூர்ப்ப)

சரணங்கள்.

ரகுகுமாரனிங்கென்னை கா டி இதோ
எதிர்வருகின்றானவனைக்கூடி விளையா டி
சுகம்பெறுவனென்று மனங்கூ டி எழிற்
சுகநாசிநேர்நகத்தாற் கொய்துமலர்சூ டி. (சூர்ப்ப)

தேட்டமுடன் செண்பகப்பூந்தோட்ட ம் தன்னிற்
சென்றிராமனென்று விராதன்மேற்கண்ணோட்டம்
போட்டுமிகமகிழ்வொடு கொண்டாட்ட ம் உடன்
பொல்லாதமையலைப் பூட்டிவுயிர்வாட் ட. (சூர்ப்ப)

(விராதன்.) கிட்டவணுகி, அடி ஜனகநந்தனி, ஆருயிர்ச்சானகி.

இராகம் நவரோசு ரூபகதாளம்.

கண்ணிகள்.

கண்ணமுதே பெண்ணரசே காதல்நாய கீ
காவலன்வி தேகன்மக ளானஜான கீ
வண்ணமணி கிண்ணமுலை மானேயென்றே னே
மாவனத்தில் நீபிரிந்த வகையென்சொல்வே னே
அங்கபங்கந் தங்கமன்றோ அந்தோமோகு மே
ஆவியேநீ அலைந்தாலா யாஸமாகு மே
பைங்கிளியே இங்கேயென்ன பார்க்கின்றாய டி
பரிந்தென்பா லறைந்திடாதேன் வேர்க்கின்றாய டி
செண்பகப்பூ வேண்டுமென்றால் சாடையாயென்பா ல்
சற்றேசொன்னால் நான்பறித்துத் தாரேனென்பா ல்
தண்பெருலீ லாவிஷய தாசனிருக்கிறே ன்
ஜனகியுனக் கேன்சிரமம் நானேபறிக்கிறே ன்.

(சூர்ப்பனகை.) களிப்புடன் தன்னுள், இன்னவன் என்னைக் கன்னி ஜனகியென்றே கருத்துட்கொண்டான் அந்தோ அந்தோ.

விருத்தம்.

பதுமாசன் ஞானத்தின்று பகரஞ்ச நாதமொப்பா ம்
கதிர்குல பதியாமின்னோன் கண்டத்துத் தொனியுதார ம்
சதிர்பெறுமிக மனோக்கியம் சாருஞ்சாதுரிய மாந் தை
சுதைவருடங் களாயென் றனைச்செவி பெருக்கிற்றம் மா.

நல்லதிருக்கட்டும், இவனை சங்கையன்னியில் கவர்ந்துகொண்டு போக வேண்டிய விஷயமாய் இவ்விதம் பகல்கின்றேன்.

வெளிப்படை (வசனம்) ஓ ஆநயிற்றலை, ஆரியபுத்திரரே இவ்விடத்தைக்காட்டிலும் கொஞ்சதூரத்திலத்தா அவ்விடத்தில் மன்மதன் பிரதாபத்தை விஸ்தரிப்பனபோல் விகசித்து விளங்காநின்ற செண்பககுசுமங்கள் மிக ரமணீயமாயிலங்குகின்றன, ஆகையால் அங்ஙனஞ்சென்று புட்பங்கள் பறிப்போம், என நடக்கின்றனள்.

(விராகன் தன்னுள்.)

விருத்தம்.

தன்மனமொளனவென்றன்னைத் தானினைத்திவள் நட்ப்போமி ம்
இன்மொழிநாதாவென்றே இயம்பிடக் கேட்டவிப் போ
தென்மனமடமான்குட்டி யொழியன்மாத கிராதகன்ற ன்
சொன்மலர்க்கணை வலைச்குட் டிண்ணென விழுந்ததந் தோ.

(நல்லதிருக்கட்டும்) இவள் தூரத்தில் நகண்டிபோகிற மட்டிலும் நூவளபகரிக்கப்படுவதற்கிசைவுதான்.

(வெளிப்படை) (காமரூபமோகன கல்யாணிபின் கருத்திற்குகந்தபடியாகட்டும், எனப்பின் நடக்கின்றனன்.)

(இலக்குமன் வசனம்.) அதோ செண்பகவனமத்தியில் நம்ஜானகிப்பிராட்டியின் சப்தம்போலுங்கேட்கின்ற தென்னை ஃதென்னென்று பார்க்கின்றேன் (என) நாலைந்தடி நடந்து இருவென்சொல்.

விருத்தம்.

மாமருத்தலைக்காநின்ற வல்திரத்தலைப்பிரினோ டு
பூமகள்சீதாப்பிராட்டி புன்னகையொடுமகிழ்ந் து
வாமபாகத்தத்தத்திற் முமரைத்தொன்னைவைத் து
க்ஷேமநற்செண்பகப்பூக் கொய்திடச்செல்கின்றளா ல்.

ஆசையாலிவனும் நூராக்கியாய்த் தானிருத்தல்வேண்டும் (என) நோக்கிக்கொண்டிருக்கின்றனர்.

[சீதை.] எனதாசைநேசப்பிராணேசா, இங்ஙனம் நோக்குக நோக்குக.

விருத்தம்.

இளையவென்கொழுந்தன்நீவிரொன்றிராக்கதனையெண்ணி
பளபளவெனத்துலங்குபகர்பட்டாக்கத்தியோடும்
வளைவில்லிநெடுந்தோடேணிதன்னையும்வகித்துக்கொண்டு
இளைமிருங்காவிற்பின்னூற்கிட்டியேநடக்கின்றானே.

(இராமர்) அடுக்குமொழி.

அடி, காமனாரஸவிலாஸமனோஞ்மணி
க்ஷேமவிலக்கணப்பூமகள்ஜானகி.

இங்ஙனம், நன்குநோக்குவை, எனதிளையான் மரங்களில் ஒளித்தொளித்துச் செல்கின்றான் பார் ஆகையால் இவன் அவனை இராக்கதனெனத் தெரிந்துகொண்டு தான் சொல்கின்றானென்றறிந்துகொள்.

[விராதன்.] தன்னுள் அடடா, என் எதிர்ப்பில்நடக்கின்ற இந்தஜானகியினபேரழகை யென்னென்றுசொல்ல.

கொச்சகம்.

கமலவெழிலோவியமாங்கல்யாணியின்சகனத்
தமர்மணிநன்மேகலையிளாவங்கடாளணியின்
ரமணியசத்தங்கண்மனத்தென்னவோசெய்கின்றதே
திமிகயனத்தாளிடத்திற்சிந்தையொப்பித்திட்டேனால்

[வெளிப்படை.] அடி, கந்தரக்குழல் மந்தரத்தன சுந்தரீ வனாந்தரத்திலெவ்வளவுதூரம் செல்கின்றாய்.

(சூர்ப்பனகை.) தன்னுள், எவ்விடம் விஜனமாய் என்னுலுன்னையபகரிக்க ஏற்ற இடமோ அதுவரைசெல்கின்றேன்.

[சூர்ப்பனகை.] வெளிப்படை, ஓ, என் வாழ்வளித்திடுமொமணவாளரோ, இதோ எதிரிற்காண்கின்றதே அவ்விடந்தான் சற்றுப்பொருத்தருளல் வேண்டும்.

(இராமர்.) ஓ, ஓ, அவ்வரக்கி அவ்விராக்கதனை தூரத்திலிழுத்தலைக்கின்றவிதமாய்க் காணப்படுகின்றது.

[சீதை.] என்கொழுந்தனிலக்குவனும் ஆங்காங்கேசெல்கின்றான்.

[விராதன்.] தன்னுள், அடடா, என்னென்றுசொல்லஇந்தப்பேரழகை

வெண்பா.

அல்லோ அறலோ அலர்க்கூந்த லண்டுதுணை
வல்லோ வரையோ வளர்தனங்கள்—மல்லுலவு
பூங்கமுகோ பூணத்தோ பொன்மிடற்றிப் பூவையர்க்கு
மாங்கனியோ வானமுதோ வாக்கு.

விருத்தம்.

இன்னவடன்னைப்போல்நானெங்குமேகண்டதில்லை
அன்னம்போனடக்கின்றாளாலாபிக்கின்றாள்பிகம்போல்
வன்னமான்போனோக்கின்றாள்வான்மின்போற்சோபிக்கின்றாள்
சின்னவான்றிங்கட்போாகற்றிருக்காணந்தஞ்செய்கின்றாள்.

விருத்தம்.

இவள்குழலிருட்குலந்தானெழின்முகமதிபிம்பந்தான்
பவழந்தானதரமீன்தான்பதுமவஞ்சனக்கண்கொங்கை
கவமதாய்ச்செய்நற்றங்கனிக்குடந்தானிங்கேதான்
கவர்ந்திடக்கருதுகின்றேன்கண்ணுட்டிதனையிப்போதே.

நன்று, நன்று இவளை எவ்வாறு அபகரிக்கப்போகின்றேன். இராமனிருக்கின்ற இடத்திலிருந்து வெகுதூரம் வந்தாய்விட்டது.

வெளிப்படை.

இராகம் கமாஸ். தாளம் ரூபகம்.

எந்துகுவாடலகிநாடோ என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பைங்கிளியே இங்கேவாராய் பாவையேநேராய்.

அநுபல்லவி.

மங்கையே யென்மைதிலியே மயிலேகுயிலே. [பைங்]

சரணங்கள்.

எட்டிஎட்டிமுன்னடந்து எகின்றாய்மானே என்
கட்டழகிஇவ்விடம்நல்ல கனிவுள்ளயிடந்தானே. [பைங்]

செண்பகப்பூவாடைகொண்டு தென்றல்நம்மையே இங்கு
புண்பொடிருக்கப்பகருமாறு பரவுதுண்மையே, [பைங்]

விருத்தம்.

மெல்லியலிவணில்வாசமேவியசெண்பகத்தி ல்
அல்லியம்போதமோகமாகையால்நீயும்நானு ம்
சொல்லியபூக்கொய்வோம்வாருதுசேரரக்கர்மென்மேல் ச்
சல்லியமிருத்தகானிற்றையலெத்தூரம்வந்தா ய்.

[இலக்குவன்.] அடே, அடே இந்த நிசாசரனிவளை சீதையென்று நினைத்துக்கொண்டு இராமவேடத்துடன் அபகரிக்க நினைக்கின்றான் கொல் நன்று நன்று.

[சூர்ப்பநகை.] தன்னுள், நானே நிசாசரிதானே, அன்னியில் வேறு்.

[வெளிப்படை] வசனம். ஓ, வீராதி வீர ஆரியபுத்திரா, யானெவ்வளவாதுாரஞ்சென்றாலுமென்னை நிசாசரகுலவதப்பிரதிக்ஞை செய்திருக்கின்ற தேவரீர் சந்நிதானத்தில் யெனக்கென்னபீதி.

[இலக்குமன்] தன்னுள், வசனம். இவ்வரக்கி இவனை இராமனென் றெண்ணிக்கொண்டு ஜானகி பிராட்டி, இராமனைப்போல், அனுசரித்துவெகு பொருத்தமாய்ப் பேசுகின்றனள்.

இவளுக்கிவ்வுருவத்தாற் பிரயோஜனம் யாதோ, ஆனல், சுந்தரராமனை ஆசைகொண்டு வஞ்சிக்க நினைத்து விளையாடுகின்றனள் கொல்.

[விராதன்] தன்னுள், அங்ஙனமன்றே என் சபதம் அடிபேதே.

வெண்பா.

என்சபதமீதன்றே இராக்கதனைவேரறுப்பா ன்
முன்சபதஞ்செய்ராமன்முற்றுயிர்போல்—உன்றனையே
வவ்விக்கொடுபோகவல்லவோமாமதிபோ ற்
செவ்வித்திருமுகப்பேதே.

வெளிப்படை.

விருத்தம்.

வழுத்ததிலென்னவூனம்வசுதையின்மகளேஞான ம்
பழுத்தமெய்த்தவத்தோர்க்கெல்லாம்பயம்பெறவிஞ்சைசெய்யு ம்
செழித்தசாகரம்போற்சூழ்ந்திரப்படைச்சேனையோடு ம்
கொழுத்தவக்கரனைநானேகொல்லாமல்விடுவதுண் டோ,

(இலக்குவன்.) புன்னகையுடன், அடடா, இவ்விராக்கதன் எனதாரியனைப்போற் பேசுகின்றான்கொல்.

(சூர்ப்பனகை.) தன்னுள், மனநடுக்கத்துடன், இவன் என்றமையனை அவ்விதம் தீங்குசெய்யப்போகின்றானென்றெண் மனந்தவிக்கின்றது.

(வெளிப்படை.) நாதா, இராவணனைக்காட்டிலும் அதிகப்பலவானன்றோ அக்கரன், அங்ஙனமிருக்க அத்தகைய கரனைக்கொல்ல சுலபமாய்ச் சபதஞ்செய்ததென்னையோ.

[இலக்குவன்.] அந்தோ அந்தோ, இவள் இவனை ஆரியனென்ற பரமார்த்தபுத்தியுடன் இவன் மனதைச்சோதிக்க இப்படிப் பேசுகின்றாள், இவளரக்கிதான், அதற்கையமில்லை.

[சீதை.] மகராஜ் இவர்களொன்றுக்கொன்று என்னென்னவோ ஸம்பாஷித்துக்கொள்கின்றனர்போலும் காணப்படுகின்றனர்.

[இராமர்.] ஆம், ஆம்.

[விராதன்.] தன்னுள்.

கலிவிருத்தம்.

என்னகேள்வி இராமனைக்கேட்பதேறு
அன்னகேள்வி அவளெனைக்கேட்கிறாள்
வின்னியாஸமிருக்கட்டுமேவினான்
முன்னவாறுரை இயம்புவேனன்றோ.

[வெளிப்படை.] அடி பேதாய் அறியாய்கொல் பரசுராமனைச்செயித்தவன் பராக்கிரமம் அறியாய்கொல்.

[இலக்குவன்.] ரொப்ப ஸரி, இவனுத்தரம் உசிதமாயிருக்கின்றது.

[சூர்ப்பனகை தன்னுள்]

ஆகையால்த்தான் நின்னுடன் சஞ்சரிக்கின்ற என்னை என்சுய ஜனங்களாலுங்கூட பாதிக்கமுடியாதென்று நினைக்கின்றேன்.

[வெளிப்படை] நன்று நன்று. எனப்போது கொய்தலைப்புரிகின்றனள்.

[விராதன்] தன்னுள், அட இவள்.

விருத்தம்.

அண்ணார்ந்தமுகமலரும் உயர்த்துமிருகசமும் நிமிர்ந்தசையாநிற்கும்
கண்ணார்ந்தகுசதுணையும் வளைவிலாக்கொடி மருங்குங் கலைந்துகாணும்
உண்ணோர்ந்தவெக்குண் முடிப்பூன்று கீழ்க்காணுனிகளுடன் பூக்கொய்யும்
தண்ணார்ந்தகுவளைவிழி இவளிருப்பென் மனம்பதித்த தன்மையாமே,

இராகம். பியாகு கோட்டு ஆதி தாளம்.

பல்லவி.

காதலி இந்தமாதுசெண்பகப்போது கொய்கின்றாள் சாதுரியமாய்.

அநுபல்லவி

பாதாங்குளிகளிம் மேதினிதொட்டுப்
[illegible] வதனமுத்தா! ந்தமுடனே! இதமுடனே (காதலி)

சரணங்கள்.

செங்கமலக்கைககரையநீட் டி
சிறுகுடமுலைகணிமிர்த்திக்காட் டி
சங்கிலிபோல் மயிரொழுங்குகாட் டி
சந்திரவடிவிமிர்ந்தெக்குள்! மென்றுகில! விழ்ந்திடவே. (காதலி)

கத்தைக்குழல்களவிழ்ந்துசரி ய
கருதியணிந்த மலர்கள்சொரி ய
நெற்றித்திலதம் நனைந்துசரி ய
[illegible]வே! சிர்முகத்தில்! வேர்வையெனும்! நீர்திரள (காதலி)

வளர்மரமிதில் மலர்கள்கொய் ய
மணிக்கைநீட்டிடுகு லெட்டுமோ ஐயோ
குளமொழியிவள் மேனிதொய் ய
[illegible]கைகள்த! லுங்கருதித்! திங்கெழிலாள்! பொங்குமுடன். (காதலி)

(வெளிப்படை.) (வசனம்) அடி, என் ஆவலுக்குரிய நாயகி, மலர்கொய்த லென்னும் ஸாகஸத்தில் நின்றும் நீங்குவாய், நீங்குவாய் போதுகொய்தது போதும் போதும், ஏனெனில் இதனால் மிகவும் இளைப்படைகின்றனை.

(ஆசையுடன்) (வசனம்) இல்லாமற்போனால் அடி மட நல்லாய் உன் புட்ப ம்பரிக்கின்ற வினியரஸத்தை திரும்ப தூர்தரங் காண்பிப்பாய்.

ஏனெனில், உன் முகேந்துவானது ஒருவித சோபையை அடைகின்ற தன்றே.

விருத்தம்.

இங்கிதக்குண வொய்யாரி யெழிலுன்மு கேந்துதன்னி ல்
குங்குமக்கபோ லவன்னக் குழிகளிற்கொ ஞ்சங்கொஞ்ச ம்

மங்கிடவேர் வைசிந்தும் அதுவுமோர் வனப்பதா க
மங்களச்சோ பைசெய்யும் மலர்கொய்யும் வினியாளந்தா ன்.

(சூர்ப்பனகை.) இலச்சையுடன் குருநகைகொண்டு, (தன்னுள்) என்ம ேனாகர வல்லவ ரகுநந்தனனுடைய இந்த வசனமானது கிரிடைசெய்யும்படி யென்னை ஏவுகின்றது, ஹ ஹ.

(வெளிப்படை.) பிராணேசா இந்தச் செண்பக புட்பங்களிடத்து எனக்கிருக்கும் ஆசைக்களவில்லை, பின்னை சிரமத்தினாலன்றி மற்றெவ்விதத் திற் கைக்கூடும்.

இலச்சுமன் விருத்தம்.

இவ்வரக்கியை அரக்கனெழிற் பெறசீதை யென்று ம்
இவ்வரக்கனை அரக்கி ரவிகுலராமனென்று ம்
ஒவ்வொரு வருமனத்தி லுண்மையாய் நினைத்துக்கொண் டே
ஒவ்வொருவரும் பேசிக்கொண் டாசையா லுலவுகின்று ர்.

(விராதன்.) அங்ஙனமாயின் என்றாலேயே புட்பங்கள் பரித்துத்தரப் பெறுவாயாக.

என்று மலர்கள் கொய்கின்றனன்.

அடி, என்னாசைக்குகந்த மைதிலி.

விருத்தம்.

கொம்பினைவளை த்துக்கொண்டு குயின்மொழி நானேகொய் த
சம்பகமலர்க டம்மைச் சடையினிற் றரித்துக்கொள்வா ய்
கும்பல்சேர் குழல்முடிப்பை யுலையேற் சகோரக்கண் ணி
அம்புவிதனிற் புட்பங்க ளவளவுஞ் சிதறுமன் றே.

(சூர்ப்பனகை.) களிப்பனுராகத்துடன் தன்னுள்.

விருத்தம்.

என்னைச்சானகி யென்றெண்ணி இந்தவென் னாசைநாத ன்
தன்னமை யொடுநயந்து சதுரமாய்ச் சாற்றுகின்றா ன்
இன்னவன் றனை க்கொண்டேகி எனதிஷ்டப்படி யெவ்வா றோ
நன்னயக் கலவிசெய்து நான்சுகம் பெறுதல்மன் னே.

வெளிப்படை. இராகம் பியாகு. ரூபகதாளம்.

பல்லவி.

மலர்கள்கொய்து தாரும்ஸாமி மாமணாளரே.

அநுபல்லவி.

தலமகிழும் ரகுபதியென் றன்கணாளரே. (மலர்)

சரணங்கள்.

உயர்செண்பகத்தாருவிங்ஙனேங்குதல்லவோ
நயமிகுமோர்வசனமும்பால் நான்சொல்லவோ. (மலர்)
என்சுணவாநான்குனிவேன் யென்முதுகேறி
இந்தமரத்துயர்ந்தகொம்பின் இன்மலர்தாரீர். (மலர்)
எச்சமலர்கள் உகந்ததோவென் னிஷ்டம்போலவே
எந்தன்முதுகில்நின்று கொய்வீர்யிப்போசாலவே. (மலர்)

(இலக்குமன்.) நகைத்துக்கொண்டு ஓ, இவ்வரக்கி இவ்விராக்கதனை ஆரிய ஸ்ரீராகவனென்றெண்ணி அபகரிக்க இச்சிக்கின்றனன்,

(விராதன்) தன்னுள், இது எனதபிப்பிராயத்திற்கிடங்கொடுக்கின்றது.

இராகம் காதநாமக்கிரியை.

ஓரடிவைத்து மற்றோரடிவைக்குமுன் என்றமெட்டு.

ஜானகி இன்சொற்றேன் பானகி மதிமுகி தையலென்றுயகியே அடி
மானெனும்விழி மடமானே யெனக்குகந்த மாதுவைதேகியே
மாங்குயில்நீயெனைத் தாங்கவும் வசமோவஞ்சி நுண்ணிடையன்றோ நான்
தேன்குழலுனமேலப் பாங்குடனேறுதல் தேவீ இதுநன்றோ
நீகுனிந்து னை மேகமுடிக்கனம் நின்னைக் கீழிருத்தாதோ கீழே
வேகமோடுனைத்தன பாரமுமிழுத்துனை வீழ்த்தி வருத்தாதோ
நானேகுனிந்திடுவேனடி நீயென் றன்முதுகேறிநின்று இந்தக்
கூனிலாஉயர் கொம்பில்பூநிறைந் திருப்பதைக் கொள்வாய்மிக நன்று.

என, உடலை வணங்கிக் குனிந்துகொண்டனன்,

(இலக்குவன் வசனம்.) அகோவகோ இவளை சீதாப்பிராட்டியென்று தீர்மானமாய்நினைத்து இவளை அபகரித்துக்கொண்டுபோக இவனெத்தனிக்கின்றான்.

அகோவகோ இதுவென்ன புதுமையாயிருக்கின்றது.

நல்லதிருக்கட்டும், மேலும் கிட்டவணுகி நடக்கின்ற விர்தையைப்பார்க்கின்றேன் (என நடக்கின்றார்.

(சூர்ப்பனகை.) தன்னுள், (வசனம்) இருக்கட்டும் அதனாலென்னபாதகம், இவன்முதுகிலேறி நின்றுகொண்டு மலர்கொய்யும் பாசாங்குகாட்டி கால்களாலிவனுடலை வளைத்துகொண்டந்தரத்திற்கிளம்பி ஆகாயமார்க்கமாய்க்கொண்டுபோய்விடுகின்றேன் (என்று அவன் முதுகிலேறுகின்றனன்.

(சீதை.) ஆ, ஆ, பிராணேசா, இதோ இவர் யார் இருபக்கங்களிலும் விசாலமான மேகராசிகளுடன் அஞ்சனபருவதம்போல் ஆகாயத்திற்றென்படுகின்றார்

(இராமர்.) நோக்கி, அடி ஜானகி தனது முதல்வராகிய ஸம்பாதியை வந்தனஞ்செய்து நமதய்யா ஜடாயுவருகின்றார்.

(சீதை.) ஆசைநேசப்பிராணேசா இதோ இதோ பார்க்கவேண்டும், இவ்வரக்கி அவ்விராக்கதன்மேலேறி நிற்கின்றாள்.

(இராமர்.) ஆச்சரியத்துடன் இதுவென்கொல், அடி ஜானகி இந்த விந்தையைப்பார்.

விருத்தம்.

பைந்தொடியன்றொருவனந்தாடன்னையிந்தப்பயலென் வடிவம்படைத் தோன்றாசிகொண்டு, விந்தையதாய்மகவேகத்தொடுசெல்கின்றவிதந்த னையெங்கிருந்தோகண்டுற்றார்போலும், தந்திரமாயென்னுருவோடேவ ந்துஉன்னைத்தான்சதிசெய்தானெனவோர்ந்திட்டார்போலும், வந்திடுஜடாயு மன்னனென்றின்னோர்ந்துவழிதடுப்பதெனவவர்முன்வருகின்றாரே.

(சீதை.) நகைத்துக்கொண்டு, ஆச்சரியமாச்சரியம் இனிமேல் நடக்கப்போகின்றதின்னதென்றறிகிலேன்.

(இலக்குமன்.) ஹா ஹா, ஜானகிரூபராக்ஷஸியை இராமரூபராக்கதன் அபகரித்துக்கொண்டு அந்தரத்திற் கிளம்பிச்செல்கின்றான்கொல்.

என உயரநோக்கி, ஆ ஐயா ஜடாயுவருகின்றார்போலும், இவ ரது நேயர்தநோ யகல்கின்றார்போலும்.

விருத்தம்.

இராகவனுருவந்தாங்கியேந்திளைச் சனகிதன் னை
மோகமாய்த் தூக்கிக்கொண்டு முன்பின் கவனித்திடாம ற்
போகின்றாய் நில்லுநில்லு பொல்லாத பயல்நீயாவ ன்
சாகஉன்றனைக் இவ்வேளை நானிது சபதங்கண்டா ய்.

எனவே, எடுத்துரைக்கின்றனர்போலும்.

ஆகவே இவர் இவ்வரக்கியை வாஸ்தவசீதையென்று நினைக்கின்றனர்.

(சீதை.) இவர்கள் ஆரியஜடாயுவைக்கண்டதும் பயத்தினால் அவசரத் திற் கீழ்விழுந்தவர்கள்போலும்.

(இராமர்.) தம்பி இலக்குவனும் இவர்களெதிரில் கட்கபாணியாக கிட்டநெருங்குகின்றான்.

(சூர்ப்பனகை.) நகைக்கத்துடன் தன்னுள்,

விருத்தம்.

வல்லராகுராமனல்ல னிவன்வேறோ மாராமன்வடிவத்தால்மயக்குகின்றான், அல்லதிந்தமனிதனுக்குவான்கிளம்புமத்தனைக்கிய திவேகமதுவுமுண்டோ, மெல்லியலஞ்ஞானசௌந்தரியென்றன் மேல்மையல்மிக்கொண்டிவ்வுருவத்தோடொருவன்றூக்கிச், செல்லலெனத்தோற்றுகின்றதந்தோவென்னசெய்வதினிமோசமாமோசந்தானே.

(வெளிப்படை.) அடடா நீ யாவனடா, என்னையபகரித்துக்கொண்டு ஆகாயத்திற்கிளம்பினவன்.

(விராதன்.) தன்னுள்,

விருத்தம்.

இணை முலையாளிவளையபகரித்தலென்னுமென்சோலிக்கிடையூறிக் கழுகால்சேர்ந்த, தணை நீரைத்தடுத்தலெனவதுநிற்கட்டும்ஆயிழைச்சானகியல்ல இவடாளுறோ, குணபுருவத்தாளவடன்னுருவங்கொண்டான்கொண்டிவளோமெயர்கிளம்பிச்செல்லுமென்னை, துணைப்பதங்கொண்டிறுகப்பின்னித் தூக்கிக்கொண்டேதுரிதமாய்க்ககனமதிற்சென்றிட்டானே.

(விராதன் வெளிப்படை.)

விருத்தம்.

வேலெனும்விழியினாளே மேவியென்றனை நீயுன்றன்
காலினிலிடுக்கிக்கொண்டு கடிகவான் செல்வதென்னை
மேலவர்கன்னிதானோ வித்தியாதரர் தம்பெண்ணோ
நீவிராகஷவியோநீயும் ஆரடி நிகழ்த்துவாயே.

(இலக்குவன்.) கிட்டநெருங்கி நீங்களிருவரும் அரக்கனு மரக்கியுமேயாம். ஒருவருக்கொருவர் வஞ்சிக்கப்பட்டீர்கள்.

(சூர்ப்பனகை) ஞாபகம் ஓர்ந்து ஓ நீ விராதன்கொல்.

(விராதன்) சற்றுலோசித்து அடி நீ சூர்ப்பனகையா என்ன.

(இலக்குவன்) அடடா பாதகா சோரப் பாவிப்பயலே நீ இதோ மடிந்தாய் மடிந்தாய். (என விராதனைக்கரத்தாலெட்டிப் பிடித்தனன்.

(விராதன்) கோபத்துடன் விடுவிடென்று கையைத்திமிரிக்கொண்டு நிஜரூபத்துடன் சூலத்தைக்கொண்டு சுழற்றினான்.

(சூர்ப்பனகை.) நிஜரூபத்துடன் பிரவேசித்து வேகத்துடன்) அகோ பிரமாதம், பிரமாதம், கூ கூ இவ்விராதன் அகப்பட்டுக்கொண்டான், இலக்குமணாதகன், பக்ஷிராஜன், இவர்களிடத்திற் சிக்கிக்கொண்டான்.

(எனக்கூக்கரலிட்டழுகின்றாள்.)

ஜடாயு பிரவேசித்து (சனனுள்.) அடட இவள் சூர்ப்பனகையா.

ஹ ஹ ஜானகியினுருவத்தைத் தரித்துக்கொண்டிருந்தனள்.

[வெளிப்படை] வத்ஸ இலக்ஷுமண இவ்இராக்ஷசண்ட கவிராதனை விட்டு விடாதே.

[சீதை] ஒ இவ்வரக்கி தன்வடிவத்துடன் அகப்பட்டுக்கொண்டான். அவ்வரக்கனும் நிஜரூபத்துடன் கொழுந்தனாலும் ஜடாயுமாமனாலும் சகையப்பட்டான்.

[இராமர்] ஆவியன்னவென் றேவிஜானகி! தெய்வாதீனமாய் வர்த்திக்கின்றோம்.

(எங்ஙனமெனில்)

விருத்தம்.

இலக்குவனவ்வரக்கன் கைச்சூலந்தன்னை இரண்டு துண்டாய்ச் செய்தனனே ரேவுனலை, துலக்கமுள்ளகத்தியினாற் புயங்கடம்மை துணுக்கிட்டான் பின்னுமந்தத் துட்டன்றன்னை, பலக்கயத்தை வீழ்த்தலென அங்கே பா ய்ப் படுகுழியில் வீழ்த்திமிகப்படபடப்பாய், இலைக்கழிகள் குழைதழைகள் கற்கள் மண்களிவைகளினால் மூடிவிட்டானிளையான்றனே.

(சீதை) எனக்கு மிகத்திருப்தி நிரம்பஸந்தோஷம் நிரம்பஸந்தோஷம்.

(சூர்ப்பனகை) சோகவேகத்துடன். ஹ ஹ அந்தோ அந்தோ அனியாயம் அனியாயம்.

(சூர்ப்பனகை) விருத்தம்.

எஞ்சகோதரகரசிரேனகிதா எபலம்படைத்திட்ட விராத னே
வஞ்சராமவதஞ்செயவந்தநீ வல்லசியமொர் மானிற்பட்டாலெ னா
கொஞ்சலக்குமனால் மடிந்தாயடா கோதையைக்கொடுவாவென்றுகோவுனால்
நெஞ்சுவந்துவிடுத்திடவந்தனன் நிந்தனைக்கிடமாகி நொந்தேனடா.

அந்தோ அந்தோ அனியாயமே(வசனம்)இலங்கேசனுத்திரவுப்படி சீதையை அபகரிக்கவென்னால்முடியாமற்போனாலும் இராமன்மேல்மையல் கொண்டபடிஜானகியின் உருவத்தைப் புனைந்தேனே அப்படியாவது எதேச்சையாய் இராமனை அபகரித்தேமகூடஞ்சென்று கட்டிப்புணர்ந்துசுகமனுபவித்தேனே,

அதுவுமில்லை. பின்னையோ என்ன அனுபவித்தேனெனில், ஐயையோ விராதா நின் வதத்தைக் கண்டு சோகநீரிற்குளித்து துக்கமேகதியாய் நிற்கின்றேனே அநுதாள் (என்றழுதலறுகின்றாள்.

(ஜடாயு) அட குழந்தாய் இலக்ஷ்மணா இவ்வரக்கியின் வார்த்தைகளைக் கேட்டனையோ.

விருத்தம்.

இவள்மொழிசெவிபுக்கிற்றோ இராமனைக்கொல்லவென்றே
அவனிங்குவந்திட்டாளும் அவ்விராதனைமடித்தாய்.

(இலக்குவன்.)

கடலங்கேசனே வச்சனமியைக் கவருதற்கே
இவளிங்குவந்திட்டாளாம் இவளையும்விரூபஞ்செய்வேன்.

(எனக்கத்தியைப்பிடித்தனன்.

(இராமர்.) பார் மடந்தை நீ, பார் மடந்தையே.

விருத்தம்.

இரத்தவென்றம்பி இலக்குவன் சீறித்திசழ்கத்தியாலறுத்திடவும்
அரக்கிகள்மூக்குச்செவிமலைமுலை களறுப்புண்டிரத்தமோராறாய்ப்
பெருக்குவின்செவியளிடத்து இருதிரயிந்துக்களிந்திரகோபத
திரட்டைமேயும்விசுமெனவீழ்ந்து செவேலெனப்பூதலஞ்சிறக்கும்.

வசனம். ஸந்தோஷம் ஸந்தோஷம் அடி நங்கையரக்கசி இனி நாம் இந்தக்கிரி சிகரத்தினின்றும் கீழிறங்குவோம். ஐயா ஜடாயுவை வந்தனை செய்யவும்சத்துருசம்காரத்தம்பி இலக்குவனை வெகுமானிக்கவும் வேண்டும் சீக்கிறமிறங்குவோம்.

[சீதை] மாமன்னர் மதலைக்கி மனமுகந்தபடியே)
என்று இருவரும் இறங்குகின்றனர்.

[இலக்குவன்] ஆரிய ஜடாயு ராஜனே இதோ இந்தக்கிரிசிகரத்தினின்றும சீதாப்பிராட்டியுடன் என்றமயன் இராகவர் இறங்குகின்றனர். ஆகையால் நாமும் பன்னசாலை போய்ச்சேருவோம்.

(ஜடாயு.) நல்லதப்படியே செய்வோம் (என, இருவரும்நடக்கின்றனர்.

(இராமர்.) அடி, இன்பந்தருமேந்திளமுலையாய், ஜானகி,

விருத்தம்.

கனகாங்கிநின்காத்தாலென்கைப்பற்றிக்கடுகளவுஞ்சங்கைவிக்காதுவாராய், வனமார்க்கமிதுகொடிதுபள்ளமிங்கேவன்கற்களிவைகளிற்கால்வருடாதே தனகாடின்னியக்குமரிமெள்ளமெள்ளச்சலுக்குப்பிலுக்கினைவிட்டுத்தளுக்காய்வாராய், இனமானமுட்கடமைப்பார்த்துப்பார்த்துன்கழற்பதங்களெடுத்துவைப்பாயென்கண்ணாட்டி.

(சீதை.) பிராணேசா ஆர்யஜடாயு மாமனும் கொழுந்தனிலக்குவனும் அதோ பன்னசாலையின் வாயிலை அடைகின்றனர்.

(இராமர்.) நல்லதிருக்கட்டும், நீ அங்குமிங்கும் பாராதே, எங்ஙனம் பார்க்கின்றாய்.

விருத்தம்.

சேறுகொண்டதிவ் வழியினடக்கொணாது சிற்றடமவ்வழிகோணலெனினுஞ்செல்வோம், ஆறுகொண்டநீர்கடக்கின்றோங்காற்சேலையதுமுழங்கான்மீதுகொஞ்சமகற்றிக்கொள்வாய், மாறுகொண்டமரக்கொம்பில்வருடிடாமல்வாண்மதிநேர்முகம்வணங்கிவருவாய்மாதே, தூறுகொண்டமாதுளையில்மாட்டிக்கொண்டதுகின்முந்திவிடுவிப்பாய்தோகைநல்லாய்.

(சீதை.) அவ்வண்ணமே இராமனைத் தொடர்ந்துவருகின்றனள்.

(ஜடாயு.) இங்கிங்கே மெத்தசந்தோஷம்.

விருத்தம்.

சலசலோசனியாள்ஜானகிவளர்த்தசதிர்மயிலினங்கண்மானினங்க ள்
குலவிவாழ்ந்திடவும்மலர்களிப்போதுகொய்திடுபான்மையாய்க்குளிரா ய்
கலசமாங்குயத்தாள்கலசநீர்வார்த்துக்கமழ்தரவளர்த்ததாய்க்காணு ம்
பலதருவினம்சூழ்பர்ன்னவாச்சிரமம்பசர்மக்குக்களிப்பாகு ம்.

(இராமர்.) அடி மனோகரி.

விருத்தம்.

மலைமுடியினின்றென்னோடிறங்கிவந்தமாதேமிகச்சிரமம்வகிக்கின்றாய் நீ, சலசமுகம்வியாவைநீர்க்கணங்களோடுதழைத்திடுகபோலங்களுடையதாகி, கலவமுதபிந்துவினைத்தூற்றுனின்றநன்னிலவார்சசிமண்டலத்தேடொப்பாம், நிலையையடைகின்றதகோகுளிர்கந்தஞ்சேர்நிழற்சோலையிதிற்சற்று நின்றிடாயே.

அடி, தையலர்க்கரசே சிரமவிமோசன நிமித்தம், இதில் சற்றுத்தங்கி இருந்துபோதலாம்.

(சீதை.) பிராணகாந்தா மெள்ளமெள்ள ஆச்சிரமம்போய்ச்சேருவோம் இலக்குவனும், ஆரியஜடாயுவும் வரவை யெதிர்பார்த்திருப்பார்கள்.

இராமர்.) அப்படியானால் இவ்வழியாய்ச்செல்வோம் இங்கோ.

விருத்தம்.

நீர்த்துளிக் கணங்களோடு நிகழ்த்து கல்லாரவா — டை
சேர்த்து நற்கந்தமாகி சீதளமாகி நன்றாய் — ப்
பார்த்து காரண்டவங்கள் பரிந்தவ்வி யக்தமா — க
ஆர்த்திடும் படிபராவி அனில னுலாவுதிங் — கே.

(என்று, நடந்துகொண்டே பார்த்து, ஐயா ஜடாயுராஜனே.

விருத்தம்.

எந்தைநின் வரவுகண்டேன் யான்றசரத குமார — ன்
வந்தஜடாயு மன்னு மலர்ப்பதம் போற்றிபோற் — றி

(ஜடாயு.) வஸ்ஸ ராமபத்திரா சிரஞ்சீவியாக வாழக்கடவை.

சீதை ௸ விருத்தம்.

சந்ததம் புகழ்ச்சிமிக்கத் தங்கிடு மாமனு — ரோ
டைந்தொடி சீதைநானே பதமலர் பணிகின்றே — னே.

(ஜடாயு.) குழந்தாய், ஜானகி, வீரப்பிரஜாவையாக பவிக்கக்கடவாய்.

(இராமர்.) இலக்குவனை இருகத்தழுவிக்கொண்டு, தம்பி தெய்வாதீன மாய் ஜயம்பெற்றவனாய் நின்னைக்காண்கின்றேன்.

(இலக்குவன்.) எல்லாம் ஆரியஜடாயுவின் அனுக்கிரகத்தினாலேதான்

(ஜடாயு.) வஸ்ஸ ராமபத்திரா, இளையான் வெற்றியுணர்ந்தனைபோலும்.

(இராமர்.) சைலசிகரத்தினின்றும் எல்லாம் எங்களால் நன்கறியலாயிற்று.

(சீதை.) ஆனால், மற்றதெல்லாமறிவோம். அவ்வரக்கனரக்கியின் பேரும் ஊருமட்டுமறிகிலேம்.

(ஜடாயு.) அவன் ஜனஸ்தானத்தில் சஞ்சரிக்கின்ற விராதனென்னும் அரக்கன்.

விருத்தம்.

கனத்தசதைக் கொழுப்பினருன் மத்தர்தீயர்கண்டகர் பொல்லாமனத்தர் காலரான, சனத்தானத்தி ரேழாயிரமரக்கர் தமக்கதிபன்கொடியகரனென்

போனேர்பால், அனர்த்தவினைக்கா கரன்விராதனேர்பா லரியதவத்தினர்க் கல்லலதுவேசெய்வோர், தனத்தையிழந்தவளர்தக்கரன் றன்றங்கைசதியர க்கிசூர்ப்பனகி அவடன்பேரோ.

(இராமர்.) ஓ, அவ்விராதன்றானே இப்பொழுது தம்பி இலக்குவனுலி றந்தவன்,

என சினேக வெகுமானத்துட னிலக்குவனைநோக்கின்றனர்.

(இலக்குவன்.) வணங்கின மூகத்தினனாய் விளங்குகின்றான்.

(ஜடாயு.) ஆம் ஆம்.

(இராமர்.) மற்றெல்லார்களுடைய வதங்கள் என்னுடைய பாகங்கள் எனத் தீர்மானிக்கப்படுகின்றதுகளல்லவா.

(ஜடாயு வசனம்.) ஆம், விரூபையான தன் தங்கை சூர்ப்பனகையைப் பார்த்தக்ஷணமே ஒருமுகூர்த்தப்பொழுதில் உக்கிரகோபாக்கிரசகாரனைவன் தனது சேனைசமூகத்தினங்களோடு யுத்தஸன்னத்தனாய் நின்னை வந்து வளை ந்துகொள்வான், இப்பொழுதே வலைச்சுதே.

(இராமர்.) உற்ஸாகத்துடன், நன்று நன்று வந்தாலென்ன, வரட்டும் வரட்டும்.

(ஜடாயு.) ஸரி, ஸரி சிரமபரிகாரநிமித்தம், குஞ்சரங்களடர்ந்த சிகரக்கு ன்றமடைய இச்சிக்கின்றேன்.

விருத்தம்.

பகலவன் குலத்தில்வந்த பாலக ராமசந்தி ரா
சுகஜனக மொழியாடன்னை சூக்ஷித்துக் காக்கத்தம் பி
அகல்யுத் திடமயற்பாரா யரக்கரை மடிப்பாய்பா னேன்
சிகரவான் குன்றஞ்செல்வேன் செல்லயுதந் தருப்பும்பிள்ளா ய்.

(இராமர்.) அங்ஙனமாகட்டும், அப்படியே செய்கின்றது.

(ஜடாயு.) குழந்தாய் முனிவேமல் ஸாவதானமாயிருத்தல்வேண்டும். என்று சென்றனர்.

(——) கினா.

விருத்தம்.

துட்டநிசாசரகரன்றனடியில்வீழ்ந்து சூர்ப்பனகையுக்குமுலையிழந்தே னென்று, முட்டிவிழுந்தலறினாளவளைத் தேற்றிமுனிர்கோபத்துடனரக்க னுனையிக்கோலம், இட்டதுயாருரையெனத்தாசரதியென்னயிசைந்தவனே யுத்தமகுதியற்றசேனைக், கட்டுகளோடெழுந்தன னிவ்வியுத்தம்பார்க்கக் கருத்துளரேலென்போற்கேசரரோவாரீர்.

(இலக்குவன்.) ஹா அண்ணா, வீணாவிநோதராய் பிரமபுத்திரராய் கலப்பிரியராயிருக்கின்ற நாரதமுனியின் சப்தம்போலும் கேட்கின்றது.

ஆகையால் நாம் ஸன்னத்தமாயிருத்தல்வேண்டியது.

(இராமர்.) யான் தயாராய்த்தானிருக்கின்றேன். தந்தை ஜடாயுவின் ஸன்னிதானத்தில் இனிவருகின்ற தளங்களோடுகூட அக்கரனை ஸம்ஹரிக்கவேண்டிய தென்னுடைய பாகங்களென்று தீர்மானிக்கப்பட்டபடி ஜாகரூகனாகவேயிருக்கின்றேன்.

தம்பி இலக்ஷ்மணா ஆகையால்,

கலிவிருத்தம்.

சாவதானமதாய்ப்பன்னசாலையில்
தேவிஜானகி தன்னுடன்சென்று நீ
காவலாயிரு தம்பிகராதியை
மேவியான்கொன்று மீண்டிடுவேனரே.

(சீதை.) பிராணகாந்தா, அஜாக்கிறதையாயிருந்துவிடக்கூடாது ஸாவதானமாயிருத்தல்வேண்டும்.

(இராமர்.) என்ன சந்தேகம்.

(இலக்குவன்.) அப்படியே செய்கின்றது, என, சீதாப்பிராட்டியுடன் சென்றனர்.

(——) திரை.

வசனம். ஹே ஹே, கூரம்புகள் கைக்கொண்டாரவாரஞ்செய்கின்ற கோரசொரூபங்களான என் வீரப்படைகாள், இங்ஙனம் தாரத்தொடு தம்பியொடு தாபஸவேடங்கொண்டு வெம்பீரத்துடன் வசிக்கின்ற இக்ஷ்வாகுகுல இராஜகுமாரனைவந்து வளைந்துகொள்ளுங்கள், வளைந்துகொள்ளுங்கள்.

(இராமர்.) ஆனந்தச்சிரிப்புடன், ஓ கரன்தான் வந்திப்படி கோஷிக்கின்றான்கொல்.

விருத்தம்.

அடடா துன்மார்க்கா மூர்க்கா அக்ரமஞ் செல்லாதிங்கே
படபடப்பா யென்னென்ன பரிவுடனார்க்கு கின்றாய்
வடிகணையொன்றாற்சேனை வகையுடனுனையுமின்று
இடம்பெரு மேமனுக்கு விருந்துசெய்கின்றேனின்னம்.

என்று கவசமணிந்து சாசாபஹஸ்தனாய் அம்பறாத்தூணியொடு குபீரெனவெழுந்து நடந்துகொண்டு,

விருத்தம்.

தவளமாயருந்த கரநின்றலிறந்தார் யாவரோஅவர் கடத்தெலும் பு
தவளமாய் விளங்குகின்றதோ யாவர்தங்கடந் தவத்தினைக்காப் ப
அவர்களாற் பொருக்கப்பெற்றனை கொல்லோஆமுனைப் படையுடனறுத் து
நவவிருந்தளித்துப் பறவைகட்கவர்க்கு நல்குவன் களிப்பினைநா னே.

ஐந்தாவதங்கம் முற்றிற்று.

ஆறுவதங்கம்

ஆரம்பம்.

(அப்பால்) அனலே பிரவேசிக்கின்றனள்.

(அனலே.) எதிர்நோக்கி, ஓ நம் தந்தை விபீஷருடைய அமாத்தியரான ஸம்பாதியோ, இங்கேயே வருகின்றார்போலும்.

(அப்பால்) ஸம்பாதி பிரவேசிக்கின்றார்.

ஓ, இவள் நமது விபீஷண இராஜகுமாரி அனலேயோ, ஆம், கிட்டவணுகி, அடி குழந்தாய் அனலாய் எவணிருந்து வருகின்றாய்.

[அனலே.] வித்திச்சிருவன்றன் வீட்டிவிருந்து,

[சம்பாதி] அங்குனக்கு யாது காரியம்.

(அனலே.) அமாத்தியவரரோ கேட்கக்கடவீர், இருக்கின்றாளன்றோ, மஹாராஜலங்கேசுவரறின்றங்கை சூர்ப்பனகையென்பவள்.

(சம்பாதி கலகலென நகைத்துக்கொண்டு, வசனம்.) அத்தையென்றழைக்கத்தக்கது யாதாமொருத்தி, இராமனையிச்சித்து, இலக்குமணனால், விரூபத்தையடைந்தனளோ, யாதாமொருத்தியினிரக்கமான சொற்களினால் தனது அனுசரரோடு கராதியர் இராமபுஜப்பிரதாபப் பெருந்தணலிற்வீழ் யீசர்க்கணமாகப்பவித்தார்களோ, அப்பேர்க்கொத்தவளை அத்தையெனச் செப்பிடலாகாதோ.

(அனலே.) அவள் வித்திச்சிருவன்றன், மனைவி மாயாவதியிடம்.

விருத்தம்.

வினயமாயா வதிப்பெண் மேவுமென் னெதிரன்றோ ளை
உனதுமூக்க ருந்ததால காரணமுறைத் தியென் ன

வினவிட விளம்பாநின்ற விக்தையக் கதையினா   டே
நனியவள் ராமரூபமிது வதுவென நவின்று   ள்.

(சம்பாதி.) மேல், மேல்.

ஷ (அனலை) விருத்தம்.

ரகுராமனுருவெழுதியிலங்காநின்ற யிசைந்திடுமோவியப்படமுன்வித்திச்சிருவன், வெருகாவலாய்க்கொணர்ந்தானது விம்மட்டும்மேவியென்கணமர்ந்திருந்ததனைவிரும்பிப், புகழ்மாயாவதிராமனெழிற்றன்காணப்பொருந்திடுமெப்படந்திரும்பவீயென்றாளால்,

(சம்பாதி.) மேல் மேல்.

(அனலை) ஷ

திகழ்தருமப்படந்தனையன்னாள்கைக்கீய்ந்து திரும்பவருகின்றேனென் செய்திடீதே.

(சம்பாதி.) அந்தச்சித்திரப்படம் உன்னிடமிருக்கவேண்டியதென்னையோ.

(அனலை) விருத்தம்.

சேர்க்குமாமணத்தின்முன்னஞ்சீதையால்மையல்கொண்   டு
எர்க்கவேவனர்ந்ததானயெழிற்பெருபடமீதிங்   கே
தீர்க்கமாம்பிரிவாற்றமைஅவடனைச்சேர்ந்ததா   லே
பார்க்கவப்படத்தைக்காட்டிப்பரிதாபந்தீர்த்துவைப்பே   ன்.

(சம்பாதி.) சற்றுலோசித்து, ஆச்சரியமாச்சரியம்.

விருத்தம்.

சீதையை அபகரித்திடுவதி லரசனுற்சென் றிறந்தனன்மாரீச   ப்
பாதகன்பொன்மயமானெனமாயையாற்பரிவொடுலாவியேநின்றும்
கோதிலக்கலுழன் றமையனுர்புதல்வன்குறித்திடுகழுகரசானே   ன்
வேதையைவதித்துமடிந்தனனுரும்வீரஜடாயுவென்போ   னே.

வசனம். நல்லதிருக்கட்டும், அப்பால் அடி பெண்ணே அனலாய் இனிமேல் அந்த ஜானகியின் ஸந்தாபம் எவ்வாறு தணிவிப்பாய், யாதாமொருத்தி மிகப்பழக்கத்திலுலே உன்னிடத்திலேயே ஆப்தசகிஸ்னேகானுபந்தத்தை வைத்துக்கொண்டிருக்கின்றாள்கொல், அத்தகைய அவமேயாம் எப்படிமாற்றுவைக்கப்போகின்றாய்.

(அனலை.) இனி, என்செய்வது.

இராகம் பியாகு. ரூபகதாளம்.

பல்லவி.

அவள்விரகமெப்படியாகுமோ அறியேனே.

அனுபல்லவி.

தவமிகுசுக், தரத்தனியா, டயங்கின்று, டனியாய் இந்தத்
தாலமகிழ், கோலநயனத், தையற் சனகியா ம். (அவள்)

சரணங்கள்.

பர்த்தாவைப்பிறிந், தேழுமாதம், பரந்துபோச்சுதே இதுவோர்
பாக்காமினித், தோப்பாந்துயர், படுவதாச்சு தே. (அவள்)

காவல்மட, லோவியமுங், கைகடர்ந்து தே எனைக்
காட்டித்துய, ரோட்டிவைப்பேன், கவலைபடர்ந்து தே. (அவள்)

சிறையகப்பட், டுருகுவதென், செப்புவேனய்யா அவள்
தேகமுய்யு, மோவதுஞ்சந், தேகந்தானய் யா. (அவள்)

விருத்தம்.

தந்தருந் துதிர்ந்திடு மூத்தங்கனொத்த கண்ணினீ ர்
தனைவடித்தச் சனகியா டனங்களை நனைக்கிறா ள்
சிந்தைநொந்து சுவாஸம்விட்டு சீர்மையி லழுக்கட ர்
சேலைமுந் தியாலேகண் கடிகழுறத் துடைக்கிறா ள்
சந்தமாப டத்திலங்கும் தன்பிராண நேய னை
தாமரைக்கணால் விரும்பிச் சந்ததமும் நோக்குறா ள்
இந்தவாறுசிம் சிபாதருத் தலத்திருந்து கொ ண்
டேங்குறாள் கண்டேங்கிலா ளொரேழு மாதமாச்சு தே.

(சம்பாதி) விருத்தம்.

வாலியின் வதத்திற்கிப்பால் வள்ளல் விபீடணர்க்கு ம்
மாலியவான் முதலாம் மந்திரிமார்கட் கெல்லா ம்
மேலினி ஜனகிதன்னை வீரகோத ண்டராம ன்
பாலினி லொப்புவிக்கும் படிமனோ பீஷ்டமம் மா.

அவ்விதம் ஒப்புவித்தால்த்தான் நமக்கு நன்மையுண்டென்று அபிப்பிராயம்.

(அனலே.) ஆ, மகராஜலங்கேசுவரனைச்செயித்த அந்த வீரவாலியும் இராமனால் மடிந்தான்கொல்,

(சம்பாதி.) ஆம், ஆம்.

(அனலை.) ஆனால் மகாராஜலங்கேசுவரன் என்னென்றுநினைக்கின்றார்.

(சம்பாதி.) அடி பெண்ணே அனலாய், இந்தச்செய்தியை மஹாராஜனுக்குத் தெரிவிக்க மந்திரியர்கட்குள் வல்லவர் யாவர்.

இப்போது விருத்தம்.

குளிர்நிலன்கொணர்ந்திடுநந்தனவனப் பூவமளிதனைக்கொண்டோனாகி
நளினநயனாளமணிவருணனல்கத்தரித்தவனாய்நாளும்நீங் கா
தளிவருநற்குழற்சனகியவள்பாலற்பிதமனனாயவ்வுள்விட் டு
வெளிவருதலறிந்திலமால்யிப்படியாய்க்கழிக்கின்றானரக்கர்வேந்த ன்.

வசனம். ஆகையால் அனலாய், தனக்கு நாசத்தைக்கொடுக்கக்கூடிய தான பராக்கிரமப் பிரபலசத்துருவின் பகை கிட்டியதை அறியாதவனாயும், மந்திராலோசனை செய்யாதவனாயும், முக்கியமாய்ச் செய்யவேண்டியவைக ளைச் செய்யாதவனாயுமிருக்கிற, இராவணனுக்கு, வாகுபனியாஸத்தால் வாலி வதத்தைத்தெரிவிக்கிறதற்கு அசக்தர்களான மந்திரிகளால் ஒருவித யேற் பாடுசெய்யப்பட்டிருக்கிறது. என்னெனில், சுக்கிராசாரியரால் இராமகதை யைக் கவியாய்ச்சேர்க்கச்செய்து இராவணனுக்கு நாடகரூபமாய்க் காண்பிக் கவேண்டுமென்றே.

(அனலை.) ஓ, அது எதிலிருந்தாரம்பம் எதில் முடிவு, எவ்விதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

(சம்பாதி.) இராமன் சீதையைத்தேட வாரம்பித்தது முதல், வாலி வதைபரியந்தம்,

(அனலை.) மேல், மேல்.

(சம்பாதி வசனம்.) அதையும், அவசியம் பார்க்கவேண்டியதென்று அந்தப்புர பரிஜனங்களால் அரசனுக்கு அறிவித்திருக்கின்றது. அப்ஸரஸ்க ளால் நடத்தப்பட்டதென்று ஆவலுடன் பார்க்க விரும்பி மஹாபார்சனென் னும் விநோதமந்திரியுடன் மஹாராஜன் தெய்வவசத்தால் ஸங்கீதசாலையில் விஜயமாயிருக்கின்றார்.

(அனலை.) அது சரியே, நீர் எதை உத்தேசித்துப் புறப்பட்டீர்.

(சம்பாதி) விருத்தம்.

மந்திரிவ ர்க்கத்தோடு மன்னன் விபீடணன்று ன்
சந்தத மனமேனாய்கொண்ட தசானன் சதசிலன்பா ய்
கந்தர்வ நாட்டியக்காரர் தம்மையங் கழைத்துவாரீ ர்
இந்தநேரத்தி லென்று னென்வறலா றீதமா ல்

(அனலை வசனம்.) அப்படியானால், ஒரு காரியமனுகூலமாச்சுது, என்னெனில், இதுபரியந்தம் தனது நாயகனுருவத்தை எழுதியிருந்த சித்திரப் படத்தைப்பார்த்து துக்கநிவிர்த்தி செய்துகொண்டிருந்த என்சகி ஜானகியும் இனி இந்த நாடகத்தில் பிரத்தியக்ஷத்தில் இராமவேடத்தையும், கதையையும் பார்க்கின்றதனால் சந்தோஷத்தை அடைவளன்றோ.

(சம்பாதி.) அதுசரியே, திரஸ்கரிணீ மகத்துவத்தினால் மறைந்திருந்துகொண்டு பார்த்தல்வேண்டும். அதற்கு யாதுபாயமோ.

(அனலை.) அதற்கு உபாயமிருக்கின்றது.

(சம்பாதி.) அஃதெப்படி.

(அனலை) விருத்தம்.

காரிகைமாயாவதி இராக்ஷஸாந்தங்கரணமணிக்கங்கணங்களிரண்டீந்தாண்முன், சீரியவவ்விரண்டிலொன்றையென்கைக்கிட்டுசீதையின்கைக்கொன்றிட்டுச்சிறப்பதாக, நேரிலன்னாடகச்சாலைக்கெய்தியோர்பானின்றுகொண்டவ்வேடமுதலெல்லாங்காண்போம், ஆரியசம்பாதியையாயீதுபாயமன்றிவேறென்றுளதோஅதுநன்றாமால்.

(சம்பாதி வசனம்.) ஓ, ஸரி ஸரி முன்னமே இது கேட்கப்பட்டிருக்கின்றது. எப்படியெனில், பூர்வத்தில் கௌசிகரால் ஜானகிக்குக்கொடுத்து அப்பால் அவளிடத்தில் சாரணன் வெகுமதியாகப்பெற்று இலங்கேசனிடங் கொடுக்க அவனால் வித்திச்சிகுவனிடம் வைக்கப்பட்டிருக்கின்றதென்றே.

(அனலை.) ஆம் ஆம், நன்று நன்று, அமாத்தியவரரோ இராஜாக்ஞையை ஜல்தியாய் பூர்த்திசெய்வீராக, யானோ தபித்துக்கொண்டிருக்கிற ஜானகியை மனோவிநோதன நிமித்தம் சங்கீதசாலைக் கழைத்துக்கொண்டுவருகின்றேன்.

(நல்லதென்றிருவருஞ்சென்றனர்.)

(அப்பால் மஹாபார்சனுடன் இராவணன் சங்கீத சாலாமத்தியில், பிரவேசிக்கின்றனன்.

இராவணன் கொலு.

இராகம் கமாஸ். ஆதிதாளம்.

பல்லவி.

கொலுவீற்றிருந்தானே இராவணன் கொலுவீற்றிருந்தானே.

அநுபல்லவி.

பலவகைரத்ந சிங்காசனமேலே பலாழளமைநாக மலைதனைப்போலே.

சாங்கணகள்.

கங்குலகற்றும் பத்துக்கதிர்களென் ன
கனகமகுடம்பத்துத் தலைகளிலும்பிரசன் ன
சங்குபுயங்களில் வீரலக்ஷ்மிதுலங்கின் ன
தடக்கைகணாலைந்திலும் வீரவாளொளிமின் ன. [கொ]
மருத்துகந்தமிகு மலர்ப்பா ட
வருணன்பனிநீர் தெளித்தோ ட
இருதுவியவாரங்கள் மார்பா ட
சிறைமையபெண்ணிடையம்பிசவா ட. [கொ]
தேவர்கள்வந்தனு தினம்பணிசெட் க
சேடனெறிமனோகள் செவ்வடிகளிற்விசர்ந் க
காவலர்கள்வந்து முடிதாழ்க் க
கட்டியஞ்சொல்லோசை திசையெட்டிலும்போயார்க் க. [கொ]

(கட்டியப) விருத்தம்.

பைன்றைக மென்னைப் படையோடு சிற ம்
ஒன்றோக டம்மை யுடைவாட் கைகொண் டு
சின்றுட னானஞ்செய் தேவா பராக் ரு
மைன்றுகத தோளாய் மன்ன பராக் கு.

பராக்கு பராக்கு பராக்கு.

எச்சரிகைப்பெண்கள் கன்னிகள்.

ஞானமகாராஜனை பிரகாசனை எச்சரிக் கை
செந்தைகலைதனை வீரியெதிர்த்திடு லங்கேசனை எச்சரிகை
வீரோதாரணசூரனை ஐயாரனை எச்சரிகை
மேருவாமேகர் கெம்பீரபுய விஸ்தாரனை எச்சரிகை
புவனி வையெல்லாபவகிலப்ரதாபனை எச்சரிகை
தாபதர் சுரர்யாவரும் நடுங்குங்கோபனை எச்சரிகை
அட்டதிக்குஞ் செயித்திட்ட வீரப்ராக்கியாதனே எச்சரிகை
அஷ்டைசுவரியம் நிறைந்திட்ட இலங்கைக்கரசே எச்சரிகை

மஹா பார்சவன் விருத்தம்.

தனபதிதனைச் செயித்துப் புட்பகந்த னைப்பறித் து
கனப்பெருதிக் கயங்கள் கொம்பையும் மார்பிற்காட் டி
மனங்கொண்ட தலங்களெல்லாங் கைக்கொண்டு புவனமூன்றும்
தனியரயோர் குடையிலாளுந் தசானனை போற்றிபோற் றி.

[இராவணன்.] மஹாபார்சா நாடகதரிசனத்தின்பொருட்டு மந்திரிஜனங்களால் கட்டாயஞ்செய்யப்பெற்றோம் ஆகிலேன்னே.

[மகாபார்சன்.] ஆம், மகாராஜா காலநிமித்தம் அனங்கதாபத்தாலே வருந்துகின்ற இருதயத்துடன் வருத்தமடைகின்ற மகாராஜாவின் மனோற்சாகநிமித்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

[இராவணன்.] ஆ ஆ, அப்படியா அங்ஙனமாயின் அன்றுடைக்காரர்களால் ஆரம்பஞ்செய்யப்படட்டும்.

[அப்பால்.] அந்நாடகமடி ஆரம்பம்.

[அப்பால்.] நாடகக்காரரிலொருவன் பிரவேசிக்கின்றனன்.

விருத்தம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[இராவணன்.] [illegible] தொர்ந்தும் தொர்ந்தும்.
([illegible])

[illegible]

[illegible]

[இராவணன்.] [illegible]
[illegible]

(மகாபார்சன்.) [illegible]
அப்பால் [illegible] ன்க.

இராகம் முகாரி, ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிமுகுந்தா அபயம் [illegible]

அநுபல்லவி.

வேதவேதாந்த விமலசச்சிதானந்த [illegible]
பாற்கடலோவிந்த மணக்கும்பாதா [illegible] (ஆதி)

சரணங்கள்.

எங்கும்நிறைந்த நிதியே — எங்குலதெய்வ
வெங்கடாசல பதியே — ஐயாவென்
சங்கட அவ்தி — யே
சாற்றார்க்கனவதி — யே
இங்கெனக்கார்சதி — யே
எனை ரக்ஷிப்பாய் சுதி — யே. (ஆதி)

முலையைச்குடையாய்ப் பிடித்தாய் — கோவலர்க்காக
மனையிற்றிரௌபதைக் குகித்தாய — பாஞ்சாலிக்கன்று
[illegible] — க்
[illegible] — ய்
[illegible] — ய்
[illegible] — ய். [ஆதி]

[illegible] — [illegible]ப்பன்னன்
[illegible] — [illegible]ரம்டிநிறம்
[illegible] — னே
[illegible] — னே
[illegible] — னே
[illegible] — னே. [ஆதி]

(——) [illegible].

[illegible] பன்னாசாலை [illegible].

[illegible] நாடகாரம்பஞ் [illegible] வேண்டுகின்றேன்.

[illegible] திருக்கின்ற கிரு [illegible] தருவான்றி, பிர [illegible].

எனச்சென்றனன்.

ப்ரஸ்தாவனை.

(இராவணன்.) ஹா ஹா நன்று நன்று, இன்றுடகாரம்பம் நன்று நன்று, இதில் [illegible] சீதையைக்காணாமல் இராமனென்னசெய்கின்றா னென்பதை அறிய விருப்புகின்றேனே, அதனைற்றான்.

அப்பால், ஒருகைக்கங்கணம்பூண்ட சீதை பிரவேசிக்கின்றனள்.

(சீதை.) சகி அனலாய.

இராகம் பியாகு. ரூபகதாளம்.

பல்லவி.

அவள்விரகமெப்படியாகுமோ அறியேனே.

அனுபல்லவி.

தவமிகுசுக், தரத்தனியா, டயங்கின்றூ, டனியாய் இந்தத்
தாலமகிழ், கோலநயனத், தையற் சனகியா ம். (அவள்)

சரணங்கள்.

பர்த்தாவைப்பிறிந், தேழுமாதம், பறந்துபோச்சுதே இதுவோர்
பாக்காமினித், தோப்பாந்துயர், படுவதாச்சு தே. (அவள்)

காவல்மட, லோவியமுங், கைகடர்ந்து தே எனைக்
காட்டித்துய, ரோட்டிவைப்பேன், கவலைபடர்ந்து தே. (அவள்)

சிறையகப்பட், டுருகுவதென், செப்புவேனய்யா அவள்
தேகமுய்யு, மோவதுஞ்சந், தேகந்தானய் யா. (அவள்)

விருத்தம்.

தந்தருந் துதிர்ந்திடு மூத்தங்களொத்த கண்ணினீ ர்
தனைவடித்தச் சனகியா டனங்களை நனைக்கிறா ள்
சிந்தைநொந்து சுவாஸம்விட்டு சீர்மையி லழுக்கட ர்
· சேலைமுந் தியாலேகண் கடிகழுறத் துடைக்கிறா ள்
சந்தமாப டத்திலங்கும் தன்பிராண நேய னை
தாமரைக்கணால் விரும்பிச் சந்ததமும் நோக்குறா ள்
இந்தவாறுசிம் சிபாதருத் தலத்திருந்து கொ ண்
டேங்குறாள் கண்டேங்கிலா ளொரேழு மாதமாச்சு தே.

(சம்பாதி) விருத்தம்.

வாலியின் வதத்திற்கிப்பால் வள்ளல் விபீடணர்க்கு ம்
மாலியவான் முதலாம் மந்திரிமார்கட் கெல்லா ம்
மேலினி ஜனகிதன்னை வீரகோத ண்டராம ன்
பாலினி லொப்புவிக்கும் படிமனோ பீஷ்டமம் மா.

அவ்விதம் ஒப்புவித்தால்த்தான் நமக்கு நன்மையுண்டென்று அபிப்பிராயம்.

(அனலை.) ஆ, மகராஜலங்கேசுவரனைச்செயித்த அந்த வீரவாலியும் இராமனால் மடிந்தான்கொல்,

[சீதை.] அது நிற்க, அடி அனலாய், அரக்கர்களுக்குத்தான் காணொண்ணாதவர்களாயினோம், இந்நாடக வேடதாரியர்களான அப்ஸரஸ்திரிகட்கெப்படியாகின்றோம்.

[அனலை.] இவர்கள் பார்ப்பதனாலென்னகுற்றம்.

அப்பால், இலக்குவனுடன் இராமன் பிரவேசிக்கின்றனன்.

[இராமர்.] பரபரப்புடன்.

விருத்தம்.

இல்லாதயிலைக்குடிசிற்றனைக்கணூற்றென்னிதயமதைத்துக்கவனலெறிக்குதந்தோ.

[இராவணன்.] ஸந்தோஷத்துடன், எறிக்கட்டுமெறிக்கட்டும்.

[சீதை.] கண்ணீர் பெருக்குடன்.

கொச்சகம்.

என்வலவ னென்மீ திருத்திடுஞ் சினேகமி தோ
தன்மனங் கொதிக்கின்றான் சாமி அவன்கண்ணா லே
நன்மைபெறக் காணுதற்கு நானின்றி சூனியமா ம்
இன்மையி லிலைக்குடிசி லேர்க்குநல்ல பாத்திர மோ.

[இலக்குவன்.] ஆயாஸப்படவேண்டாமண்ணா.

முன்விருத்தத்தொடர்ச்சி.

நல்லோரயிம்மலைக்கருகில் மயினின்றாடும்நற்றலமா நிகுஞ்சமதில்காடலாகும்

[இராவணன்.] கலீரென நகைத்து, இவன் என்னாற் சீதை அபகரிக்கப்பட்டாளென்பதை யுணர்ந்திலன்.

[சீதை.] என் கொழுந்தன் நட்பில்லா அபிப்பிராயம் நவில்கின்றான், ஆனால் நாயகர்க்கு சோகமாற்றுமுபாயமாகும்.

இராமர், முன்விருத்தத்தொடர்ச்சி.

எல்லாரும்போ லிவ்வுமின்றியெங்கு மேகமாய்ப்போக வடியெடுத்திடானே

[இராவணன்.] ஆம், ஏற்பட்ட கோழைத்தனத்தாலன்றி இவன்மீதுள்ள ஆசைநேச விசுவாசத்தால்மட்டுமென்று.

[சீதை.] இது வாஸ்த்தவம், என்னெனில் எனது மாமனார் திருமகன் வளர்ஸன்னிதானமன்றி மற்றெவ்விடத்திலும் எனக்குப்பிரியம் வருகின்றதில்லை,

அந்தரநாடிகை.

இலக்குவன் முன்விருத்தத்தொடர்ச்சி. ☞

வல்லோய்தெய்வார்ச்சனைக்குமலர்கள்கொய்யமனங்கொண்டு புன்னாகவாடிக் கேகும்

[இராமர்.] அங்ஙனமாயின், அடா லக்ஷ்மணா அவளைத் தேடிப்பார்க்க வேண்டும்.

[இலக்குவன்.] அங்ஙனமாகட்டும்.

என நடக்கின்றனன்.

[இராவணன்.] அடட, அவள் புன்னாக வாடிகையிலன்று, பின்னையோ அவள் அசோகவனத்தை அலங்காரஞ்செய்கின்றனள்.

[சீதை.] அந்தோ அந்தோ, அந்தத்தினத்திலிது முந்தியே ஆச்சரு சகி அனலாய் அவ்வவஸ்தையை நினைத்து சோகத்தினாற் பரவசத்தை யடைகின்றேனடி.

விருத்தம்.

அன்னமே யனலாயந்த அவஸ்த்தையை யெண்ணியெண் ணி
என்னுரு சோகத்தாலே யான்பர வசமானே னே
மன்னவன் றனைக்காணாது வல்லரக்கனைக் கண்ணுற் று
சன்னமில் வளிக்குட்பட்ட கதலியாய்ச் சலித்தேன்மன் னே.

இராகம் நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

பல்லவி.

அன்னாளிலென் அவஸ்தைசொல்ல அடங்காதடி அனலாய்.

அனுபல்லவி

மன்னவனுஞ்சின்னவனும் மானின்பின்னே போனபோதினில். [அன்]

சரணங்கள்

நட்டநடுக்காட்டில் தானாய் நானிருந்தவிட்டி ல்
மொட்டைத்தலைச்சன்யாசிபோல் முன்வந்தரக்கனின்றிடும். [அன்]

வாய்புழுக்கயிவ்வரக்கன் வம்பாய்ச்சிலதியம்ப தியில்
காயவைத்தயீயம்போல்நான் கரைந்தேனங்கம்பரந்தே ன். [அன்]

சிரமீரைந்துங்கரம்நாலைந்தும் திக்கண்களானுங்கும் உடைய
கருமலைபோலுருவத்தோடிக் கண்டகனென்னண்டைவந் த. [அன்]

கம்பத்தினைக்கண்டேனுடற் றம்பித்துநான்நின்றேன் மிக்க
வெம்புமனத்துன்பங்கொண்டு வீழ்ந்தேன்மண்ணிற்சாய்ந்தேன். [அன்]

பாரோடெனைத்தேரில்வைத்து பத்துத்தலைப்பாவி வெகு
தீரத்துடன்சோரத்தனஞ் செய்துவரும்போதி ல். [அன்]

[அனலே.] ஸகி ஜானகி, ஆனாலும் நீ நல்ல க்ஷத்திரியகுலப்பெண்ணாகையால் அத்தருணம் மனத்தைரியசாலியாகத்தானிருந்தாய்.

[சீதை.] அன்றன்று, அத்திரிமுனிவரின் பத்தினி அனசூயையால் கொடுக்கப்பெற்ற திவ்யாங்கராகமென்ன வெண்பட்டென்ன இதுகளின் மகத்துவத்தினாலென்றறிந்துகொள்.

[அனலே.] ஸரி ஸரி.

[இராமர்.] ஹா, பிராணகாந்தே, ஜானகி, எங்ஙனமகன்றாய்கொலோ.

[சீதை.] வேகத்துடன் ஹா, அந்தோ அந்தோ அச்சமயத்தில் எனது பிராணேசன் இவ்விதமாய்த்தான் அங்கலாய்த்தலறியிருத்தல்வேண்டும், ஹா ஹா கஷ்டங்கஷ்டம்.

[இராமர்.] அந்தோ அந்தோ.

இராகம் சங்கராபரணம். ரூபகதாளம்.

பல்லவி.

எங்கேதான் சென்றிட்டாளோ, என்றன்ஜனகி.

அநுபல்லவி.

பங்கயவிலோசனத்தாள் பண்ணொழில்யாழ்வசனத்தாள்
தங்கவுமையாசனத்தாள் ஜானகிநாயமனத்தா ள். (எங்)

சரணங்கள்.

எந்தனைவிட்டொருபோதும் பேகிடாளெங்குமீதே து
பைந்தொடியவளோசாது பாரவனத்தின்மீ து. (எங்)

போதுகொய்யச்சென்றிட்டாளோ பூவையெங்கேநின்றிட்டாளோ
எதெதுபுகன்றிட்டாளோ யிதைவிட்டேனகன்றிட்டா ளோ. (எங்)

ஹா ஹா கஷ்டங்கஷ்டம்.

கொச்சகம்.

காதலியென் றேவிதனைக் காணாமற் சோகமிகு ந்
தாதரமொன் றில்லா தறற்றி விளையாடுசுக ம்
கோதிலினிய குறற்கொண்டு பஞ்சரத் துழ ல்
மாதவள் வனத்திருவோ டெங்கு மறைந்தன ளோ.

அந்தரநாடிகை.

(இராவணன்.) ஆம், இருக்கலாம்.

(சீதை.) கருணையுடன், கையொடு கைபிசைந்துகொண்டு, ஹா சகி, அனலாய் யான்வளர்த்த சுபுத்திரியென்ற பெயருடைய அச்சுகப்பேடானது என்னைக்காணாமல் சற்றுநேரங்கதறி அப்பொழுதே ஆவி சோர்ந்திருத்தல் வேண்டும், இனி இதற்கென்செய்வேனடி ஸகி.

(அனலை.) ஆ சகி, வேண்டாம் வேண்டாம் இத்தகைய தெய்வவிபரீதத்திற்கு யாம் செய்வதென்னை அழுதாலாவதுண்டோ.

(இராமர்.) ஹ ஹ, கஷ்டத்தின்மேற்கஷ்டம்.

விருத்தம்.

குகையெனவாய்திறக்கவைத்துக் குளிர்பலவநாளமனைக்கொடிச்சுகினின்ற, தகையுடைப்புன்னகையாளைத்தேடலெனவிலைக்குடிற்றலங்களெல்லாம், மிகவிழைவாயலைந்துதிக்கைச்சிருவேழுமுழல்கின்றவிதமென்சொல்வேன், சுகமொழியாண்மதிவதனசுந்தரியென்பைந்தொடியெங்குற்றாள்கொல்லோ.

(இராவணன்.) அடடா, இதனால் ஜானகிக்கென்ன குறைந்துவிட்டது, அவள் விரும்பினபடி ஆயிரம் விதங்களாய் நம்பாலிருக்கின்றன, இதுவென்ன ஆச்சரியம்.

(சீதை.) அனுகம்பத்துடன், ஹா என்னருமைச்சுதனே காமப்பகா; யானிங்ஙனமன்றோ, என்றனைவார்த்தையிலேயே.

அடி சகி, அனலாய் இது நாடகமன்றோ எதிப்படி வாய்விட்டுப் புலம்பினேனடி.

[அனலை.] ஸகி ஜானகி, நீ வைத்திருந்த ஆசையினால் அந்த யானைக்குட்டி உனக்குப் பிரத்தியக்ஷம்போலவே தோற்றுகின்றது.

இராமர் கொச்சகம்.

கோலவிளையாட்டுமயில்குறித் துடசத்துண்ணுழைந்து
சாலவிறைவாய்வெளியில்ச்சார்வதும்அடிக்கடியே
நாலுபுறம்நோக்குவதும்நாடிடிலென்னையகியாம்
சேலெனுங்கட்சானகியைத்தேடலெனக்காண்கின்றேன்.

[இராவணன்.] அடடா, இது மற்றென்செய்யும், என்னாலபகரிக்கப்பட்டிருக்கின்ற ஜானகியின் விஷயமாய் யென்செய்யக்கூடும்.

சீதை விருத்தம்.

நேசக்குடனேயெனைநினைத்துநினைத்துச்சோகமுற்றழுலும்
ஆசைக்கிளியேயான்வளர்த்தஅருமைக்கிளியேஐந்துவனத்
தேசக்கிளியேவிளையாடுஞ்சின்னக்கிளியேதித்திக்கப்
பேசுங்கிளியேசுபுத்திபெனப்பேர்வாய்ந்திட்டபெண்கிளியே.

ஹா ஹா, கஷ்டங்கஷ்டம், அன்றுனக்குணவருத்திச் சீருமுன், பாவி அரக்கனாலபகரிக்கப்பட்டேனே, ஹா சுடு சுடு அப்பால் அனேகநாள் என்னைத்தேடிக் காணாமல் திக்கியமாய் நீ வாயும்பிளந்து கா லும்பிளந்து மாய்ந்திருப்பாயென்பதிற் சந்தேகமில்லை, எனப்புலம்பி.

இராகம் முகாரி.   சாப்பு.

பல்லவி.

பாவிநானென் பிறந்தேன் பொல்லாப் பழிபடவோ கிளியே.

அநுபல்லவி.

பூவுலகிலுள்ள யாவருக்கும் ... ... என்னை
... பொன் புருடனைவிட்டுப் பிரியவோ ... [பாவி]

சரணங்கள்.

... புண்ய ...
... [பாவி]

... ...
... [பாவி]

அய்யோவிதியேயயினுங்கிளியுயென்னை ... சலவோ பாவி
தெய்வமேயெனைக்கைவிடலாகுமா ... சலமோ. [பாவி]

என்றழுது புலம்பி களைப்புற்றனள்.

(அனலை.) ஆ, சங்கையுடன் ... கொண்டு, தன்னுள், ஓ ஓ, இவள் மூர்ச்சை அடைந்தனள் போல்,

(வெளிப்படை.) அடி அடி சகி, ... ஆசுவாஸங்கொள்ளடி, ஆயாஸந்தீரடி, ஆரணங்கே.

(சீதை.) சற்று தெளிந்து, அடி அனலாய் இப்படிப்பட்ட மகத்தான துர்த்தெசைகளை அநுபவிக்கவென்றே பாவி தெய்வம் என்னைச்சிருஷ்டித் ததடி, இதற்கென் செய்வேனடி.

அந்தர நாடிகை.

இராமர். நினைத்து நினைத்து, அடி காரொத்தகருங்குழற் காதல் கண்ணாட்டி.

(வசனம்.) ஹா ஹா, கஷ்டங்கஷ்டம், எனது இளையான் எங்கெல்லாந் தேடி அலைந்திளைக்கின்றானோ, அங்ஙனம் அலைந்திட்டாலும், காட்டிற்பிரிந்தவளைக் கண்டேனென்றென்பார் கழறப்பெறுவேனோ, ஏதோ, எங்ஙனம் நின்று பரிதவிக்கின்றாளோ, இனிக்காண்பதேது, கஷ்டங்கஷ்டம்.

இராகம் நாதநாமக்கிரியை. திஸ்ர சாப்புத்தாளம்.

பல்லவி.

கண்[illegible] [illegible] (காண்)

அநுபல்லவி.

[illegible]
வஞ்சியை அபாஞ்சியை, [illegible]

சரணங்கள்.

என்னுயிர் [illegible]
மன்னன் [illegible] கண்டெண் [illegible]
கன்னியை யென்றன் பன்னி [illegible]
கால, கதி, யாலே, பிறிந்த, காரணத்தா [illegible] (காண்)

தனியாய்விட் டேனகன்றே ன்
அணியாயத் தவிக்கின்றே ன்
எனைநாடி யவள் சென்றே
எங்கா, கிலும், நின்றுகொண் டேங்கின்றாளோ அறியே ன். (காண்)

தேடிவரப்போன தம் பி
காடெலாமலைந்துவெம் பி
வாடுகின்றானோ காணும ல்
வந்தேன், கண்டேன், என்ற, பாலென், வயிற்றில் வார்ப்பனோ. (காண்)

விருத்தம்.

புனற்குளித்தயீரமதுபுலர்த்தவேண்டிபொற்கொடிமின்னின்கொங்கைப் பொருப்பின்மீதே, கனக்கருங்குழலைவிரித்துன்கரங்களாலேகமழ்தரவடிக்கடிக்கோதிடுங்காலத்தில், முனைக்கிரிகடமிலினத்தோடிறங்கிவந்தமுகிற்குலமென்றெண்ணியுனமுன்பிற்கேகா, கனிக்குறலின்விளையாட்டுமயினின்றடுமாற்றோகைவிரித்துமனங்களித்துநாளும்.

(இராவணன்.) இது வாஸ்தவம், எங்ஙனமெனில்,

விருத்தம்.

எந்திளமுலையாளான யிரதிநேர் சீதாதே வி
கூந்தலைக் காரென்றெண்ணி குதித்திடு கின்றதந் தோ
வாய்ந்த வெண்ணிறய மாமயூரம்போல் வாய்மையென்பா ற்
சார்ந்தவன் றனோதானே தழுவியே சுகிப்பதென் றே.

(சீதை.) அடி அனலாய், பான்மையாய்த் சித்திரிதெரிசனமென்ற பேருடைய அம்மயூரத்தின் சிறப்பான அவ்விளையாடலை என்றுபகரால் நன்குணர்த்தப்பெற்றேன்.

(என்று, சோகக்குறை சொல்லியாநின்றனள்.)

(அனலை.) ஆ சகி, இப்பொழுது அம்மயிலோ சாசேஷமாய் முடிந்திருக்கின்றது, அங்ஙனமிருக்க, அதன் விளையாடலை, நினைத்தாவதென்னை, அதனுலென்பயன்.

•(இராமர் அங்கிருக்கிறார்.) அட, புவிமன்ன, சீதாதேவி, பூவமர்ந்த, காவடாந்த, மாவனத்தினில், பெயிலெய்ய்யரக், தாவிச்சென்றாய் கொலோ, ஹா, பிராணகாந்த.

இராகம் ஸாநாட்டைகை, ரூபகதாளம்.

பல்லவி.

மாயமிலே யிவ்வனந்தனில் வனைப்பிரிந்த மாயமேதடி.

அநுபல்லவி.

கோமளவாணி, சாமளவே ணி
தாமரைப்பாணி, க்ஷேமகல்யா ணி. (மாயமி)

அந்தரநாடகை.

ராவணங்கள்.

அனமே, நீ, எங்கேசென்றாயடி, அனமே
ஆருமில்லாத, கான, காதனில், அனமே
தனியரசையும் விட்டு
அனைமுதலோரை விட்டு
வனமதில்வந்து புகுந்தேனே — துணையாய
உனையே நம்பியிருந்தேனே — அடியன்
மெய்மையதிறலோ — னை
தனுக்கருமுதலா — னை
கனகுயர்தருகா — னத்
தினிலென்னைவிட்டுப்போனாய் — (மாயவி)

கட்டழகு உனைப்பிரிந்து — நான்
கண்ணுயிர் தாப்பேனோ சகிப்பேனோ — பட்ட
இட்டபோடேகணையம் பொறுமோ
நட்டமாதிங்கண் வந்தே — ன்
கட்டழிந்து பெருத்தாரோ, வீட்டுவிளக் — கை
வெட்டவெளி கவிழ்ப்பேனோ, ஐயையோபாவ — ம்
இட்டனல் மெழுகானேன், பட்டதிர்சருகானே — ன்
நட்டகால் முடமானேன், கொட்டுக்கண் குருடானே — ன். (மாயவி)

(எனப்புலம்பி, மோகத்தை அடைந்தனர்.)

(இராவணன்.) ஸந்தோஷ உற்சாகத்துடன் ஆ, (வசனம்) இந்நேரக்கப்பொழுது நேர்ந்த சொக்குதலானே தனக்கிடமானது தெளிவுறாமலே பயிக்க வேண்டும். அங்ஙனமாயின், இந்தச்சானகி இவளிட ஆசையற்றதனுடனே இந்த என்னுடைய மனியில் உல்லாசமாய் வந்துசேர்வளன்றே.

சீதை சொப்பனகம்.

சகியனலா யெந்தன் சாமிரகு நாயகனு — ர்
மிகவுமயங் கிட்டனரால் வேதையடைந் தெல்பொருட் — டே
தகையிலனாய் வச்சிரயிதயத் தினளாய்க் கொடும்பா — வி
சகதலமெ லாமிகழத் தானிருக் கின்றேனடி — யோ.

(அனலே.) ஹா சகி ஜானகி, நீயுமிவனிமித்தத்தில், க்ஷணே க்ஷணே மோகப்பெருங்கடலில் மூழ்குகின்றாய், அதினின்றுமுன்னை உஜ்ஜீவிக்கும்படி கரையேற்றுதல் மிகப்பாடாய் முடிகின்றது. அங்ஙனமிருக்க வச்சிர யிதயத்தினளாய்ப் பலிக்கின்றதெங்ஙனம்.

(இலக்குவன்.) கிட்டவணுகி, ஆ, அண்ணா ஆயாஸந்தீர்ந்தாசுவாஸம் பெறவீராக.

(இராவணன்.) அடடா, கேடுகெட்ட இவ்விலக்குவன், இவனை ஜீவிக்கும்படி ஆசுவாஸஞ்செய்கின்றனன்.

(சீதை.) ஆ தெய்வாதீனமா யிலக்குவன் வந்தென்றாதனை உய்யுமாறு களைப்பாற்றிவைக்கின்ற விதமாய்க்காணப்படுகின்றது.

(ஸ்ரீராமர்.) தெளிவுற்று, அடா லக்ஷ்மணா,

(அக்கமொழி.) புன்னாகவாடியில், மின்னாளிருக்தனள்கொல், பொன்னார் சணங்குழலை, பெண்ணாருயிர்க்கணவி.

(இலக்குவன்) நன்றாவள், அங்க்குவசனம். தனிநின்றுழற்றி, மனமும் அறற்றி, முனவன்றாடிக்கது, வினவாநிதற்கிங், கனமயானெடுத்து, கனியாதுளாப்பன், கஷ்டங்கஷ்டம்.

(இருகட்டும்.)

(வெளிப்படை.) அண்ணா, அரையக்கேண்மோ.

ஸ்ராகம் முகாரி. ஆதிதாளம்.

பாவிம்பவைமா யென்றமெட்டு.

பல்லவி.

தேடினனெங்குஞ் சென்றங்குமிங்கும். (தேடி)

அநுபல்லவி.

பாகிமிசைப்பிரசம் ஆம்மலர்க்குழலாள்
பாவையைப மற்றிச்சோ மேவியவை மறுநீதா. (தேடி)

சரணங்கள்.

வளர்புன்னாக	வாடி	மீதோங்கும்
வனமெலாமிக	நாடி	அண்ணாநான்
குளிரும்பூஞ்சோலை	கூடி	
குயில்களுடன்	கொண்டாடி	
கோதையாள்	விளையாடிக்	
கொண்டிருப்பா	ளென்றேடித்	(தேடி)

அந்தரநாடிகை.

மதுகரமுரணி சை ரீங்கார
மாகந்தவன மிசை கிரிநதியின்
சதிர்மணற்குன்றத்தி சை
சக்கரவாகம்நடந்தி சை
சரணடையாளந சை
தானதினூறு விசை. (தேடி)

(இராமர்.) உத்வேகத்துடன், ஹா ஜானகி, காணப்படவில்லையா, (பெருமூச்செறிந்து.)

இராகம் கமாஸ். ரூபகதாளம்.

பல்லவி.

பைங்கிளியே, தங்கமேரீ, பாரவனத்தெங்கோ போய்பதுங்கினையடி.

அநுபல்லவி.

இங்கெனைத்தவிக்கவிட் டு
எங்கினையோ, பாகுமொழித், தோகையேவை தேகியேயென். (பைங்)

சரணங்கள்.

வெம்புமனத் துன்பமெல்லா ம்
மெல்லியலுன்னாலே நான்விலக்கினன டி
கொம்பிழந்த மந்தியைப்போ ல்
குலைகுலைந்து நிலைகலைந்து அலையுமன மலைவடைந்தேன். (பைங்

ஆசையைச் சோதிப்பதற் கே
அப்பாலேபோ யொளித்தாயோஅடியே ன்
யோசியாதெங் கோசென்றாய் நீ
ஓண்டியதாய்ச்சென்றிடலே திண்டபின் ஒண்டொடியென். (பைங்)

ஹா பிராணகாந்தே, இனியென்செய்வேனடி, என் ஆசை மனோகரி, நீ எங்ஙனஞ்சென்றாய் கொலோ.

கட்டளைக்கலித்துறை.

சோகானலம் வளர்ந்தென் மனத்தூடு சொலிக்குதந் தோ
வேகாமல் வேகுது சந்திபந்தங்களை வெட்டுதே ரே

தோகாயெங் கண்ணெதிர் தோற்றிடக்காண்கிலை சுந்தரியே
பாகார்மொழிச்சியென்செய்குவனென்னுயிர்ப்பைங்கிளியே.

(இராவணன்.) ஆம், உத்தமஸ்திரீ வியோகனுக்கும் இவ்விலங்கேச னுடைய மனோபீஷ்டத்திற்கும் யாதுசிதமோ, அதையேசெய்யத்தக்கது.

(சீதை.) அந்தோ அந்தோ, அடி அனலாய்.

இராகம் காம்போதி. சாப்புத்தாளம்.

பல்லவி.

செய்வதின்ன தென்றறியேன், ஐயய்யோ நான்
ஐயய்யோ, நானொரு, பெண், பிறந்தே ன். (செய்)

அநுபல்லவி

வையகம்புகழுமென் மணவாளனைவிட் டு
வன்சிறையாகப்பட்டு, வாடுகின்றே ன்
வாடுகின்றேன் சகியே அனலா ய். (செய்)

சரணங்கள்.

என்னைப் பிரிந்ததுயர், தன்னாலென்நாயக ர்
இன்னும்பொறுப்பாரோ, பொருத்திடா ரோ
பொருத்திடாரோ, எப்படியாகு மோ. (செய்)

செல்வத்திற்பிறந்துநான், சீராடியேவளர்ந் து
தீஞ்சிறைபுகுந்தேனடி, நான்பா வி
நான்பாவி, ஆயி, துடிக்கு தே. (செய்)

(சகி, அனலாய் இதற்கென்செய்வேனடி.

கட்டளைக்கலித்துறை.

எனைக்கண்ணுறாமலென்றோன்றனுமிக்கவிறங்கவவன்
றனைக்கண்ணுறாதுதமியாடயங்கச்சகியனலா ய்
வினைப்பயனோவிவ்விரண்டுமென்றுங்கொல்மென்மேலுமம்மா
மனக்கனல்மூளுதுசெய்வதென்றோவடிமாதர சே.

(என்று, சோகமுற்று மோகித்தனள்.)

அந்தரநாடிகை.

(அனலை.) வசனம். ஆ, ஸகி ஆயாசப்படவேண்டாம், ஆசுவாசம் பெருவாயாக, மிகச்சமீபகாலத்துள் திரிபுவனங்களிலும் நிகரற்றவீரனாகிய நின் மணவாளராமச்சந்திரன் வந்துசேர்ந்திடப் பெறுவாயம்மா ஜானகி இலேசம்வேண்டாம்.

(சீதை.) சற்றுதெளிந்து: ஆ ஆ அடி சகி அனலாய்.

விருத்தம்.

மாதெழில னலாயென்றன் மணவாள ராமச்சந்திர ன்
வேதனை கொண்டுகானில் அலைந்துமென் மேலும்வா டி
யேதிருவ னையுந்தானே இறந்தான் கொலிருக்கின்றான்கொ ல்
யீதுசந் தேகஞ்சேர்வா யென்றனை தந்தையென் னே.

(அனலை) ஆ அம்மா, அந்த சந்தேகமும் இந்த நாடகத்தில் அகற்றுவையம்மணி.

(இலக்குவன்.) அண்ணா தைரியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். குறைவனப் பிரதேசங்களெல்லாம் சென்றலைந்து பார்த்தல்வேண்டிய, அழுது கொண்டிருப்பதிற் காரியமாகுமா.

(இராமர்) இராகம் இந்துஸ்தான் காபி. ஆதிதாளம்.

பல்லவி.

ஐயோ இனியேன்நான் என்செய்வேன்.

அனுபல்லவி

மையவனத்திலென் றையலைக்கைவிட்டே னே ஐந்த
மா, பா, தகத்துட், பட்டே னே. (ஐயோ)

சரணங்கள்

எங்கென்று தேடுவேன், யெங்கவளைக்கூடுவேன் ஐவளை
எண்ணி, யெத்தனை, போதுவாடுவே ன். (ஐயோ)
காட்டானைவந்ததோ, கோட்டாற்புலிகொந்த தோ அவளைக்
கடித்துத், தின்று, கடந்த தோ. (ஐயோ)

(எனப்புலம்பி எதிர்நோக்கி)

விருத்தம்.

மந்தமாருத மூலவிடக்கந்த மலர்கண்மாமாரி போல்வழங்கு ம்
சந்ததங்கு ளிர்தங்கிடநிழலைத் தருகின்றவிளை யொடுதழைக்கு ம்
எந்தநேர் வளரினந்தருவ குளமீதுவைதேகிக்கு மெனக்கு ம்
அந்தரங்கமாம் சங்கதியெல்லா மறிந்ததோர் சாக்ஷியாமன் றே.

(இராவணன்.) அதனாலென்ன.

(சீதை.) ஓ இது எனது மர்மத்தைப் பேதிப்பிக்கின்ற பூர்வவிருத்தாந் தத்தை உணர்த்துகின்றது.

இராமர் விருத்தம்.

கிட்டியேவினை வல்செய்வேன் கிருபைசெய் வருளமேயெ ன்
இஷ்டநாய கியைநீயு மிவ்வழி யரக்கண்டா யோ
எட்டியெங்ஙன ஞ்சென்றாள்கொ லென்னென்ன புகன்றிட்டாள்கொ ல்
திட்டமாயுரை செய்யென்பால் செப்புவ துருகிட் டே.

(இராவணன்.) கோபத்துடன், அடா அடா குட்டிமரமே, மட்டித்த னமாயுளறுதே.

(இராவணன்) விருத்தம்.

ஆவலாய் மனிதன்கேட்க அகந்தையால் மரமேநீயு ந்
தேவனுரை மஙகேசன்றான் சீதையைக்கொ ணர்ந்தானென் று
நாவெடுத்து ரைத்தாலுன்னை நறுக்கிடிய இரண்டுமூன்றாய்ச் ச்
சீவிநானெரி மூவணிந்தச் சிற்சந்தர கர்சத்தா லே.

[மகாபார்சவன்.] தன்னுள், ஹ ஹ.

கலிவிருத்தம்.

தத்துமா மூலைக்கோ தைவைதேகி மேல்
வைத்த ஆசையில் ராமனு மாமுக ம்
பத்துளா னுமன்றோ தப்பாங் குண ல்
மத்தர் போல மயங்கி விட்டார ன்றே.

[வெளிப்படை.] இராஜாதிராஜ மஹாராஜலங்கேசுவரா இதேதிப்படி மயங்குவது, இத்தரு, அசேதனமன்றோ, தவிரவும் இது நாடகமன்றோ.

[இராவணன்.] ஓ ஓ, மந்தபுத்தியுடைய என்னால் யீசறியவசமில்லா மற்போயிற்று.

[சீதை.] ஹ ஹ, என்னகஷ்டம் என் மாமனார் தம் வரிசை மகனார்

அந்தப் நாடிகை.

கேவலம் உன்மத்தனைப்போல் அசேதனமாகிய மரத்தையுங்கேட்கலாயினர். ஆகவே, என்மீதுள்ள சிநேகானுபந்தமே அவர்க்கபரா தியாக ஆகின்றது.

[இராமர்.] அடடட, இது கொஞ்சங்கூடக் கணித்தெதிருரைக்காதிருக்கின்றதே, என்ன விபரீதம் இருக்கட்டும் இதனாலென்ன.

விருத்தம்.

பூதரவுரைத்தி சீதையெத்திசையிற் போயினட் புகன்றிடாதிருந்தால்
மேதகுபகழியாலுனையடித்துமிகமிகப்பொடிப்பொடி செய்வேன்
மோதிமுறப்பகையைச்சாதிக்கவிருக்கும்மூர்த்தநின்வைரியாஞ்சண்ட
வாதமப்பொழுதேமீதுனைக்கிளப்பிவாருதிகளிற்புகுத்திடுமால்.

(இராவணன்) கலிவிருத்தம்.

இத்தரா தரமேந் திழையின் செய்தி
சித்தமே ருணிந் தெப்படிச் செப்பிடும்
ஒத்ததாம் வச்சிரா யுதமென் னுமென்
கைத்த லத்தினடி கண்டிருந் துமே.

(சீதை) விருத்தம்.

மட்டையே மரமே வனத்துயர் வரையே
இட்ட நாயகியை இயம்புவீ ரென்றால்
சட்டை செய்திடுங் கொலசே தனமன்றே
கட்டமா மிதனைக் காணவும் விதியோ.

[இராமர்.] ஹ ஹ, இது கொஞ்சமும் சலிக்கிறதில்லையே.
[இருக்கட்டும், இந்த கிரிநதியைக் கேட்கின்றேன்.]

விருத்தம்.

மலைமடிவயிக்கும் நின்னைப்போலென்றன் மடிவிளையாடுமென்மனையாள், தொலையெங்குற்றாள் கொல்சொல்லுதி நினைப்போற்றூங்கிடாப் பங்கயக்கண்ணாள், நிலைசறுக்கவரு மதுகரநெறுக்க நீலமாங்குழலி னணின்போல், நலவெழிற்சோகத் தனத்தினுடனை நீநன்குகாண்டனை கொலோநதியே.

[இராவணன்.] ஆ இதுவுஞ் சொல்லப்போகின்றதா, என்னிடமிருக்கின்ற பயத்தினாலிப்பயம் உடலெல்லாம் நடுங்கிக்கொண்டே போகின்றதே இது எப்படிச்செப்பும் ஒருக்காலுமுரைக்காது.

[இராமர்.] ஓ இதுவும் சலரூபத்தால் நின்று நிலைத்துப்பேசுகின்றதா, யில்லையே, ஹ ஹ, கஷ்டங்கஷ்டம்.

இராகம் உசேனி. சாப்புதாளம்.

பல்லவி.

எளிமையடைந்தேனென் றிவ்வனமுமறிந்த தென்செய்வேனடா
லக்ஷ்மணா, அட லக்ஷ்மணா. [எளி]

அநுபல்லவி

களிகொண்டென் கையில்வந்த கனராச்சியமப்போதே
வெளியில்விட்டிங்குதவ வேடமாய்வந்தபோ தே. [எளி]

சரணங்கள்

அரசும்பவிசும்போ யருங்கானத்தினில்வந்தே ன்
அல்லாமலாவலைந் தங்கமெலாம்நொந்தே ன்
வரிசையென்காதலியால் மனமகிழ்ந்திருந்தே ன்
மனையாட்டியவளையும் மாயமதாய்ப்பிரிந்தே ன்
வனந்தானவளையும் மறைத்துக்கொண்டெ னை
மயங்கச்செய்வதோ அதற்கென்றண்ட னை. [எளி]

பெண்டைப்பறிகொடுத்துப் பேய்கொண்டழல்கின்றே னே
பேசவாயுண்டோவென் பெருமையிழந்தே னே
கண்டேனென்றொருவார்த்தை மரமும்மலையுந்தா னே
காணும்விளம்பிடா தேனோவினவினே னே
கர்மமோமிக வர்மஞ்செய்யு தே
காலமோவெனைக் கேலிசெய்யு தே. [எளி]

[சீதை.] ஒருவிதநினைப்புப் பெருமூச்சுடன்.

கொச்சகவிருத்தம்.

அடியனலா யென்கணவ ரசலந்தரு நீர்பற வை
செடிகளிடங் கேட்டலைந்து திரிகின்றாரென்செய் தி
அடிமுதலா யவர்க்குறைப் பாராரம்மா சோக க்
கடலைவிட்டுநீக்குவரார்கண்படைத்தோர்காண்பா ரோ.

[அனலை.] ஆஸகி, எல்லாங்கண்டறிவோமடி ஜானகீ துக்கப்படவே ண்டாம்.

[இலக்குவன்.] தனதுள், ஆ ஆ, எனதுமுன்னவன் அதிசோகத்தி

அந்தர நாடிகை.

ளூல் மோகத்தை அடைந்தனன், என்செய்வது இனியென்ளூரியனுக்கு யா நுசதிசம்பவிக்குமோவே.

[வெளிப்படை.] அண்ணு, இதுவென்கொல், குடிகெடுக்கின்ற துய ரத்தை அடிக்கடிவகிக்கலாகுமோ, தேவரீர், ஸஹஜதைரியத்துடன், ஆத்மா வை ஸ்தம்பனஞ்செய்யவேண்டும்.

இன்னமும், இதோ இப்படி தென்மார்க்கத்துடன் சென்று பார்த்தல் வேண்டும். இதோ,

விருத்தம்.

சந்தரமிளம் புல்லோடுந் தண்ணீருங்கொடுத்தபான் மை
சிந்தையிலெண் ணிக்கண்ணீர் சிந்திடத் தெற்கேநோக் கி
இந்தமானி னம்நிற்கின்ற திவ்வழிசெ ன்றுளென் றே
அந்தரங் கத்திஞேடு மறையுமா றறையுதண் ணு.

[இராவணன் கோபத்துடன், அடுக்குவசனம்.] இந்தக், குட்டிமான்க ளை, வெட்டிடவேண்டுமால், என, கத்திகைக்கொண்டனன்.

[மஹாபார்சவன்.] ஓ இராஜாதிராஜ மஹாராஜலங்கேசுவரா.

[அடுக்குமொழி.] கேடுபுரிந்திடேல், நாடகம்நாடகம், வேடமான்கு ட்டிவி, சேடங்களல்லவோ.

ஆகையால் படபடப்புக்கூடாது.

[சீதை] கண்ணீர்ப் பிரவாகத்துடன், சினேகவாற் சல்லியத்துடன், ஹ ஹ, என்மக்களான இந்தமான்குட்டிகள் தாம், எனது நாயகருக்கு என் செய்திபை முதன்முதல் லுணர்த்தியதோ!

[இராமர்.] அங்ஙனமாயின், தம்பி தென்மார்க்கத்தே தேடிச்செல் வோம்,

என்று நடந்துகொண்டே.

இராகம் எதுகுலகாம்போதி. ரூபகதாளம்.

கண்ணிகள்.

மானினங்கா ளிவ்வழியே வந்ததுண்டோ என்மடமா ன்
தேனெனுஞ்சொல் சீதைபுற்கள் தேடிப்போட்டு நாடிவளர்த் த (மா)
மயிலினங்காள் காணீரோ மாதரசி சென்றவ ழி
குயிலினங்காள் கூறிரோ கோபமெனமே லேதுமுண் டோ (மயி)
அஞ்சுகங்காள் அறியீரோ அறைந்திட்டா லாகா தோ
பஞ்சரங்காள் நீவிரேனும் பகர்ந்திடில்மா பாவமுண் டோ (அஞ்)

[எனப்புலம்பி நடந்துகொண்டே, அடடா, தம்பி லக்ஷ்மணா, இதோ இங்ஙனம்பார்க்கக்கடவாய்.]

விருத்தம்.

ஜானகிகூந்த றன்னிற்றம்பி நான் சூட்டிவைத் த
தேனுகரளி கண்மொய்க்குந் திவ்விய சுகந்தமா ன
பூனிறை யெழிலாரங்கள் பொருந்தி இப்போதுதா னே
கானில்வீழ்ந் திருத்தலந்தோ காண்டியால் கண்முன்னு லே.

[இலக்குவன் வசனம்.] ஆம் ஆம், அண்ணா, இதையோசிக்கின்ற பொழுதுயாரோ ஒருவன் ஜானகிப்பிராட்டியை வஞ்சித்தபகரித்துக் கொண்டுபோயிருக்கின்றானென்பதிற் சந்தேகமில்லை, அப்போதவள் கூந்தலினின்றும் நழுவியிருத்தல்வேண்டு மிப்பூங்கொத்து.

[இராவணன் வசனம்.] ஆ அந்தோ, அந்தோ, யானவளை அபகரித்துவரும்பொழுது பரபரப்பன்னியில் சாவதானமாய்வந்தேனல்லேன் அதுதானிதில் அஜாக்கிறதை எற்பட்டது.

(சீதை வசனம்) சற்று தெளிந்தாசுவாஸமுற்று, ஆம் ஆம், பாவியரக்கன் என்னையபகரித்துத் தாவிவருகின்ற வழியில் எனது கூந்தலினின்றும் கீழ்நழுவினதன்றோ?

ஓ, இது அரக்கன் அபகரித்துக்கொண்டு சென்றமார்க்கத்தைக் காண்பிக்கின்ற முக்கிய அடையாளமன்றோ?

[இராமர்.] கொஞ்சம் பத்தடிதூரம் நடந்து,
தம்பி லக்ஷ்மணா இதுவென்கொல்?

ஆசிரியவிருத்தம்.

தலைசாய்ந்து மூபிர்வீய்ந்து தாரணிகிடக்கின் ற
சாரதி யிதார்கொலடா
சதிர்கொண்ட தேர்பூண்டகவின முறுவாயொடு பி
சாசவதனங்களோடு ம்
வலிகொண்ட குந்தத்தினடிகொண்ட புண்கவொ டு
மாண்டெதிர் கிடக்கின்றயி வ்
வன்கரவினத் தொடுநொறுங்கிக் கிடக்கின் ற
மாவிரத மெவருடைய தோ
விலையொண்டுதுண் டாயொடித்தெறிந் திட்டதா ர்
மேவுமீது டையரார்கொ ல்
மேலானமகுட மணிசிதறிக் கிடக்கின் ற
விந்தையீது டையரார்கொ ல்

அந்தரநாடிகை.

'மலைபோன்ற வன்புயங்களில் வசிக்கின்றதோ ள்
வளைகளீரைந்து சொன் ன
மயமாய் விளங்கின்றநிலை யிங்ஙனுற்றதோ
வகையென் கொலுடையரா ரோ.

[இலக்குவன்.] வசனம். ஆ, அண்ணா ஆச்சரியம் ஆச்சரியம், யானி வ்விதம் தீர்மானிக்கின்றேன்.

எங்ஙனமெனின், ஜானகிநிமித்தத்தில் இரண்டுவீரர்கள் உயுத்தஞ்செய் திருக்கின்ற கோலங்களென்றே.

(இராவணன்.) கோபத்துடன்.

விருத்தம்.

சீதையை யபகரித்துத் திரும்பியேவரும் போதெற்கு த்
தீதுசெய்த திவிகாதஞ் செய்தவன் யாவனந்த ப்
பாதகச் சடாயுதன்னைப் பலிகொடலா மிகக்கெடுத் து
மேதகு சிகைகூயன்றே விளைவித்தேம் நன்றான் றே.

[சீதை.] ஹா தாத பக்ஷிராஜா இவ்வற்பபாக்கியவதியை இப்படிப்பிர யாசப்பட்டிரக்ஷிக்கமுயன்றும் அந்தத் தர்மபலத்தை யடையாமற்போயினீரே கஷ்டங்கஷ்டம்.

[அனலை.] ஆ ஜானகி, துந்தத்தசகண்டன் மகாபலசாலியென்று முப் புவனங்களும் முறை இடுக்கின்றதல்லவோ ஆகையாலென்செய்யலாமம்மா.

[இராமர்.] தம்பி லக்ஷ்மணா வில் வில்,

என்றே விரைந்துநடக்கின்றனர்.

[இலக்குவன்.] இதுவென்கொல், அகாரணமாயிப்படிக் கேட்கின்ற னரென்னை,

எனப் பின்தொடர்ந்தனன்.

மஹா பார்சவன் விருத்தம்.

இவனைச்சிறுவ னென்றிருந்தேம் யிருகணுந்தீப் பொறியெழும் ப
அவனித்தலத்தை விழுங்குகின்ற அன்னோக்குகளு மானனமு ம்
நுவலுங்கா ரகந்தரமு நுதலுமுதமெம் பார்க்கத்தி ரி
புவனங்களையுஞ் சுட்டெரித்துப் பொடியாக்கிடுவான் போன்றனனால்.

[இராவணன்.] பரபரப்புடன்.

கட்டளைக்கலிப்பா.

இன்ன வன்முன் னிருக்கவி சைந்தி டா
தேருவோ மடாமற் ருேரிடத் தினி ல்
சின்னவன் றனைப்போ ரிற்செயி ப்பதி ற்
சேருமன்ருேயெ னக்கபகீ ர்த்தி யே.

(என்றெழுந்தனன்.

(மகாபார்சவன்) ஆ மகராஜ், அடுக்குவசனம். ஆடுகின்ற, வேடஜால, நாடகமிது, நாடகம், ஆகையால் உட்கார்ந்து பார்த்தல்வேண்டும்.

[சீதை.] எதைக்கண்டென் கணவர்க்கிப்படிப் பரபரப்பெழுந்ததோ.

(இராமர்) விருத்தம்.

கோத்திரம்நிகர்த்த காத்திரமுடையான் கோரரத்தங்களாற் சிவப்ப ன்
நேத்திரத்திமைகள் சாத்தியுச்சுவாச நிச்சுவாசமிக மிகநீட் டி
காத்திரமதனிற் சனகியைச்சுமைவைத்து நாளத்தைச்க ரியெனவருந் தி
ஆத்திரமடங்கிக் கிடக்கின்ருன் வழியிலக்கழுகுருவ மாமரக்க ன்.

ஆகையாலிங்ஙனமிவனை யதஞ்செய்யப்போகின்றேன்.

[இராவணன்.] சின மிகப்பொங்கி,

விருத்தம்.

என்மனைப் பிரியாளான சீதையையெவன் கொன்ருன்கொ ல்
வன்மைமாயெவன் தின்ருன்கொல் வலுத்தவவ் வரக்கனுர்கொ ல்
கன்மனத்தவனை யிங்கென்கதிர் கொண்டகற வாளத்தா ற்
புன்மைசெய் கழுத்தைவெட்டிச் சீக்கிரமரு நீதுவே னே.

[மகாபார்சன்.] ஆ ஆ, மகராஜ், மறதிவந்ததென்கொல், அவளை அ சோகவனத்தில் காவலில் வைத்திருக்கிறதன்ருே.

(சீதை) கொச்சகம்.

ஐய்யய்யோ யென்னையுமோர் அரக்கனுமற் ருருங்கொன் று
மெய்யை அருந்திடவில்லை வேதைகொண்டென் வியோகத்தால்
நைய்யகொடுஞ் சோகமுற்று நாயகர்வருந்தயின்ன ம்
உய்யுகின்றே னென்றனைப் போலுண்டோ ஒருநீ லி.

[இலக்குவன்.] எதிர்நோக்கி, பரபரப்புடன், ஆ அண்ணு, (அடுக்கு மொழி) தடாபுடாவென் றுசினம், எடாதருள்வீர்சரம், விடாதிருப்பீரிவர், சடாயுசடாயுவே,

அந்தரநாடிகை.

(——) திரை.

குழந்தாய் இராமபத்திர, இராமபத்ரா.

வெண்பா.

சீதைதனை வவ்வித்திரு ட்டரக்கன் சென்றிடுங்கா ல்
மாதைவிடு வித்திட நான்வந்தெய்தி—பாதகனு ல்
வெட்டுண்டேன்நீயுமினிமேலும்வதைபுரியே ல்
ஓட்டுயிர் ச்சடாயு வென் றனை ர்.

[இராவணன்.] கேட்டு ஓ, (வசனம்.) இக்கிழட்டுக்கழுகு இவ்விரண்டு இராஜகுமாரர்வருமளவும் உயிர்கொண்டிருந்தனவா, என்னாலிழந்த ஜீவனையுடையஇக்கழுகு இவர்கட்கென்செய்தியை இயம்பமாட்டாதென்று நம்பிக்கையுடன் விட்டுவிட்டு வந்தேனே.

[சீதை.] ஸந்தோஷத்துடன் சிங்காரக்கவி.

ஈவிறக்கமுமிலாதபஞ்சமா, பாவிராக்கதன் பண்ணியதீமையை
ஆவிவைத்திருந்தன்பனுக்குறைத்தார், தேவதேவனென் சடாயுமாமனே.
[அங்ஙனமாயின்இவ்வளவுகாலபரியந்தம் என்னைமீட்காது தாமதம் யாதோ!

(அனலை.) எல்லாம் இன்றுடகமூலமாய் அறியலாமம்மா.

(இலக்குவன்.) அவசரத்திற் கிட்டவணுகி, ஹா தாத சகுந்தராசனே உமக்குமிவ்வவஸ்தைநேரிட்டதா.

சீதை விருத்தம்.

ஆரியவிஹங்க மன்னு உமக்குமிவ் வவஸ்தையா மோ
வீரனுமுமக் கிப்போது விளம்பவுஞ் சக்தியுண் டோ
காரிருட் குழலிதன்னைக் கவர்ந்தார் பலமென்யே னோ
ஊரென்ன பெயர்தானென்ன யார்மகனு னைசெய்வீ ரே.

(இராவணன்.) தைரியத்துடன், (வசனம்) ஓ இக்கெட்டகழுகு இவர்களுக்கு சர்வவிர்த்தாந்தத்தையுந்தெரிவித்தாலுந்தெரிவிக்கட்டும், அதனாலிவ்விலங்கேசனுக்கென்னபாதகம், அதிலிவ்விலங்கேசுவரன்பயப்படுவான்கொல்.

(சீதை.) ஆசையுடன், பாவிதசகண்டனது பாணங்களால் புளக்கப்பட்டிருக்கின்ற காயத்தையுடைய இச்சடாயுமாமன் என்னென்றுரைப்பனோ என்று மனங்கலங்குகின்றேனடி அனலாய்.

(திரை) ——

ஆ, குழந்தாய் ராமபத்திரா.

விருத்தம்.

மனமயங்குது கண்கள் சுழலுது வார்த்தை தள்ளாடுதடா.

(இராவணன்.) எனக்கு மிகச்சந்தோஷம் மிகச்சந்தோஷம்.

(சீதை.) கருணையுடன், ஆரிய சகுந்த ராஜாவே என்னிமித்தம் இப்படிப்பட்ட மகத்தான துர்த்தெசையை அனுபவிக்கின்றீர்கொல், கஷ்டம் கஷ்டம்.

(இராமன்) ஐயா, ஐயா, கொஞ்சம் தைரியத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு பார்சொல்லவேண்டும்.

இராகம். சங்கராபரணம், ரூபகதாளம்.

பல்லவி.

சொல்லுவீர் அய்யனே, சொல்லுவீர்.

அனுபல்லவி

சொல்லுமெல்லாம்புகழ் வல்லவரே நல்லமொழி (சொ)

சரணங்கள்.

தைரியத்தைக் கைப்பிடித்து சாங்கோபாங்கமாய்த் தொடுத்து
வைரியை இனம்பிடித்து (சொ)

நாடிநாயல்லாமே கோயிலிலே நாய்போனுழைந்தான் சாலையிலே
பேடிப்பயலையிக் காலையிலே (சொ)

குலமென்னபலமென்ன குறித்திடும்பேர் கலமென்ன
நிலையமாமவன் றலமென்ன (சொ)

நாமில்லாநெஞ்சகத்தான் இக்குலையுமையுஞ் செய்தான்
சோரனைஇன்னுனென்று தான் (சொ)

(திரை) ——

என்னசொல்லப்போகின்றேன்.

[முன் விருத்தத்தொடர்ச்சி.]

ஜனகியைக் கனமாயை களியற்றித் தானபகரித்தானுல்.

(இராவணன் கருவத்துடன்) ஞானிவதகோபியாகிய இவ்விலங்கேசுவரன் எளிதில் விட்டு விடுவான் கொல்.?

சு-வது அங்கம்.

அந்தரநாடிகை.

(சீதை.) ஆ, பிராணேசா! அடா என்வள்ளற் கிளையாய் இன்னம் எனது செய்தி அறிந்திலரா, நிற்கதியாளான இந்தச்சானகியை பாவி இரா க்கதன் (என்றைச்சொல்லிலேயே.

அடி சகி அனலாய் இதுவென்னடி வைத்தியம், இன்னுடகத்தைப்பார்த்துக்கொண்டிருக்கின்ற என்னால் பயாடக்கங்கொண்டு முன்சொல்லிய சமாசாரத்தை எடுத்துப்புலம்பலாயிற்று, என்செய்வனடி.

[அனலை] ஆம், ஆம், வாஸ்தவம் போற்றோற்றலால் அப்படி உண்டாகின்றது.

[இராமர்.] அடடா, அந்தப்பதித இராக்கதப்பயல் இவ்விராமசமுகத்தில் வந்தபகரித்தானில்லை என்செய்வது.

[இலக்குவன்] கோபசிலனாய்.

கட்டளைக்கலித்துறை.

காரிகைசிதையைக் கைக்கொண்டரக்கன் கடாந்தனனெ ன்
ருரியர்மெய்யறுபட்ட ஜடாயு வறைந்தனரா ல்
சோரனைப்போல்வந்து தூக்காவிடிலவன் றண்டுதுண்டா ய்
வீரவென்வாட்கொ டறுத்திடமாண்டு விழுவனன் றே.

[இராவணன்.] புன்னகையுடன்.

வெண்பா.

மன்மமறுக்கின்ற மரவிதனமொன்றுக்காம்
தன்மனதிர்க்கிஷ்டத்தின் சாதகமாம்———கன்மத்தில்
எச்சதுராராயினு மற்றென்செய்வரீதறியா
மற்சினப்பயர்க் கென்னவாய்.

[இராமர்.] ஐயா மேற்சொல்லவேண்டும்.

(——) திரை.

☞ [முன்விருத்தத்தொடர்ச்சி.]

வினயமைந்தனேவிந்துவேளையில் வீய்ந்திடுபொருண்மீளும்.

[இராவணன்.] பரபரப்புடன் (வசனம்) அடடா எல்லாங்கற்றறிந்த என்று லேயும் அந்த விந்து முகூர்த்தமகத்துவம் யெண்ணி யோசிக்கப்படாமற்போ விற்று, நல்லதிருக்கட்டும் தெய்வபலம், யெனக்கில்லாமற்போனாலும் புருடப் பிரயத்தினத்தால் ஆனமட்டிலும் நன்றாய்ச்சரிப்படுத்திக் கொள்கின்றனன்.

சீதை அடுக்குமொழி.

கட்டெபாமோமன், செப்பிடுவிதமில்
வற்பபாக்கியவதிக், கெப்படிக்கிடைக்கும்
வசனம். இப்பாவியின் கொடுமைமையை நினைக்க நினைக்க
நெஞ்சில் சோகவன்னி பற்றியெறிக்கின்றதடி.
இந்தசோகத்திற்கவஸானமுமுண்டோ.

இராகம் கேதாரம் ரூபகதாளம்.

பல்லவி.

எனதுசோகவனுபோகம் யெப்போபோகுமோ,

அனுபல்லவி.

வினையின்கெடுதி தனையென்சொல்வேன்
சனகிநான் இனியென்செய்வேன் [எனது]

சரணங்கள்.

பூமியிற்செனிப்பதுவே பொல்லாததோஷம்
பொருந்தவே அதிலும் பெண்ணாய்ப்பிறந்ததேமோசம் [அதிலும்]
மாமனைப் பிரியவும்விதி
வசமாநான்செய் பூசாவிசேஷம் [எனது]

என்கைத்தொட்டகாலமுதலாய் யென்கணவர்க்கும்.
எடுத்ததெல்லாம்துயராய் விளைந்ததென்செய்வேனிதற்கு (பிரிந்து)
இங்கரக்கன் எதிர்ப்பிலிருந்து
இறந்திடாமல் கறைந்துதவிக்கும் [எனது]

என்னைத்தேடி உருகுமிவர்க்கு இலங்கைச்சிறையிலே
இருக்கின்றேனென்றெடுத்துச் சொல்வார்யாருமங்கில்லை [ஜடாயு]
மன்னனுஞ்சொல்லாமுனெங்கே
வானூர் விட்டிடுவானோ அறிகிலேன் [எனது]

[இலக்குவன்.] அவ்வரக்கனின்னானென்றே தெரியவில்லையே, அங்ஙனமிருக்க நஷ்டமானபொருள் திரும்பக்கிடைப்பதெங்ஙனம்.

[சீதை] ஹா கஷ்டம் கஷ்டம். இன்னமும் இவர் சமாசாரக்குறையை முடித்தாரில்லையே,

அந்தரநாடகை.

ஆ, தெய்வமே.

விருத்தம்.

ஐயய்யோ அதிர்ஷ்டமில்லா அனுதையாயானேன் பாவி
தெய்வமே இனியென்செய்வேன் திக்குவேறில்லைக்கண்டாய்
பையவாஞலுமாமன் பார்த்திபன் றனக்கெனெல்லாச்
செய்தியுஞ்சொல்லுமட்டுஞ் சீவனேடிருக்கச்செய்வாய்.

[இராமர்] ஐயா என் வினவிலுக்குத்திரம் விளம்பல் வேண்டும்.

(———) திரை.

குழந்தாய் யாவையு முரைக்கின்றேன் கேட்கக்கடவை.

[illegible] (முன்விருத்தத்தொடர்ச்சி)

முனிவிச்சிரவசுன் மகனிராவணன் மூவுலகினிலு மழுக்கன்.

[இராவணனென்று இந்த கெட்ட கிழட்டுக்கழுகு, க்ஷத்திரியகுலப்பதித் ஞன இவனுக்கென்ன [illegible] பட்டதுகொல்?

[வெறுத்தொக்கு]

விருத்தம்.

மட்டிலாவனப்பிலங்கை கவர்ந்துநான் வரும்போதங்கே
கிட்டினுன் தடுத்தான் [illegible] கிழக்கழுகி தனைவாளால்
சுட்டிஅச்சிறைகள் [illegible] துணித்திட்டே னெனினுமாள
வெட்டினேனல்லேன் [illegible] ஞன்விளம்பு மக்கழுத்தைத்தானே.

[சீதை] உள்ளங்கொதிக்க சுவாஸத்துடன்) இப்படிப் பேரைமட்டுங் குறித்துச்சொன்ன இந்தச்சமாசாரத்திஞல் தீபாந்தரத்தில் இவ்விலங்கைத் தீவிலிருக்கிற என்னை எவ்வாறறியப்போகின்றனர் என்னுயகர்.

[இராமர்] ஐயா குறையுஞ் சொல்லிமுடிக்கவேண்டும்.

[இலக்குவன்] சோகசீரால் தொண்டை தத்தலிட்டு.

அந்தோ அந்தோ.

விருத்தம்.

ஐயய்யோ அங்கமெல்லாமயர்ந்து மூக்காற்றுலாவி
வையவே கண்சுழன்று பஞ்சடைந்திமையாடாது
வையமீதடித்து வீழ்ந்தார் மாண்டனர்போலுமந்தோ
செய்யவாய்பிளந்தார் நாவுந்தள்ளினுர் சிறைக்காலற்றூர்.

[இராமர்] ஆதங்கத்துடன்] ஹா தம்பி குறைச்சமாசாமுங் கூறுமு ன்னர் நம் தாதா ஜடாயு உயிர் ஒழிந்தனர்கொல், ஹ ஹ கஷ்டங் கஷ்டம்.

(கிட்டவணுகி தலையில் முகத்திலடித்துக்கொண்டு.

விருத்தம்

தசரதர்க்கன் புள்ளவரே தாதாவே மாண்டீ ரோ
இசைகருடர்க் கண்ணுவே இங்ஙனமிறந்தீ ரோ
திசைபுகழும் பஞ்சவடி தீர்த்தமர்ந்தோர்க் கு
நசையொடு சகாயகரே நல்லுயிரொழிந்தீ ரோ.

இராகம் சங்கராபரணம் சாப்புதாளம்.

பல்லவி.

மையவனத்தில்நீர் மாளநான் சகிப்பேனே.

அநுபல்லவி.

மெய்யாயிந்திரர்க்குதவி செய்யுந்தசரதர்க்கு
ஐயாப்பக்கண்ணனவரே ஐயோஜடாயு நீரே [மைய]

சரணங்கள்.

தந்தைஇறந்ததுயர் தமிலுமீததிகமாய்
செந்தணலாய்வயிற்றைத் தெகிக்குதென்செய்வேன் [மைய]

துறந்தயோத்தியைவனத்தில் பாந்தலைந்தும்பாரியை
பிறிந்துமுனையிழந்தும் பேருயிர்தரிப்பேனே [மைய]

எங்குநானிருக்கினும் இவ்வனத்திற்றுணையாய்
அங்கங்குதிப்பீரே ஆருண்டினிமேலைய்யா. [மைய]

விருத்தம்.

ஓங்கரசைவிட்டதிலும் ஓர்தந்தைமாண்டதிலு ம்
தீங்கானத்தினிநடந்து திரிவதிலும்வருதுயர ம்
பாங்காமுமதுநட்பால்ப் பரிந்தொழிக்கயிருந்தே ன
யீங்காருயிரிழந்தீர் யீததினும்பெரிதாமா ல்.

[மஹாபார்சன்.] மஹாராஜ் இவனது வன்றுயர் அனைத்திற்கும் நா ங்களே காரணமன்றோ?.

அந்தரநாடிகை.

[இராவணன்.] அடடா, அமார்த்தியவரனே அறியாய்போலும்.
[மஹாபார்சன்.] அஃதெப்படி? அருளல்வேண்டும் மஹாராஜனே.

(இராவணன்) விருத்தம்.

கோவமுச்சிரன்கரன் கராவன்சுபா குவொமொரீசனுங் குலேகடா
ஏவிலங்குரை ராமனுற்பட்டனர் இன்னம்நம் மவர்களென்றாலும்
பாவிலக்குவனென் னுடைத்தங்கை சூர்ப்பனகையை மூளியாய்ச்செய்தான்
ஆவிவைத்தினி திருக்கவோஇத்துயர் அதனினுமதிகமா மன்றே.

[பரபரப்புடன்.] ஆகையாலிப்பொழுது.

விருத்தம்.

இனத்தைவீண் போக்கடித்தே னிருந்தென்ன லாபமிந்தச்
சினத்தையாரிடத்தில் வைப்பேன்திகழ்கத்தியா லென்றங்கை
தனத்தைச்சேதித்தோன் கண்டந்தனையிப்போ துண்டுசெய்தித்
தினத்திற்சூர்ப்பனகையாலு திரத்தைமண்டிடச் செய்வேனல்.

(எனக்கட்கப்பாணியாய் குபீரென எழுந்தனன்.

மாகாபார்சன் அடுக்குமொழி.

கோடிமாமன்னர்கள், தேடிவந்தேத்திடும்,
மோடிலங்கேசுவரா, நாடகம்நாடகம்.

எனத்தகைந்தனன்.

[சீதை சோகத்துடன்.]

இராகம் முகாரி, சாப்புதாளம்.

பல்லவி.

என்னுளொழிப்பேனிந்தத்தோஷம் ' அய்யோ
என்னிமித்தஞ்சடாயு மன்னனிறந்தகிலேசம் [என்னு.]

அனுபல்லவி.

முன்னூள்ச்செய்திட்டபாவமோ அல்லால்
அன்யரயமாரிட்டசாபமோ [என்னு]

சரணங்கள்.

அழுதாலிப்பழியென்னபோமோ தெய்வத்தை
தொழுதாலுமனுபவித்தாலன்றி ஆமோ [என்றான்]

நானேஇதற்கெல்லாம் பாத்ரம் அய்யோ நான்
யேனேபிறந்தேன்வீண் யீசனுடையசூத்ரம் [என்றான்]
ஹா ஹா கஷ்டங் கஷ்டம்.

விருத்தம்.

என்பொருட்டினில் வந்துயிரிறந்த இவரேனையபகரித்தோன்
வன்புயத்தவன் ராவணனெனப்பேர்மட்டிலு முறைத்துவிட்டதலால்
இன்பமுற்றவன்வாழிட மிலங்கையெனஉறைத்தாரில்லை இறைவன்
துன்பமுற்றுழலெனைத் தெரிவார்கொலோ சொற்பபாக்கியவதிமாதோ

அந்தோ அந்தோ இனி யென்செய்வது ஆ தெய்வமே நிற்கதியாளான யென்னை நீயும் முட்டச்சோதிக்கலாகுமா தெய்வமே.

இராகம் நாராயணி (கரமே கஜிமேரோ) என்றமெட்டு. சாப்புதாளம்.

பல்லவி

விதியே இக்கடுந்துயர் விளைவிக்கலாமா
விபரீதமாமிக மிகமனம்நோமா (விதி)

அனுபல்லவி.

மிதிலேசன்றவ மதில்வந்துபிறந்தேனே
மிகமிகச்சீராடி மேவிவளர்ந்தேனே
அதிமோகனேமணந் தடவியில்வந்தேனே. (விதி)

சரணங்கள்.

காட்டில்வந்திருந்தாலும் கணவன்சன்னிதானத்தால்
கவலையற்றிருந்தேனே கன்மவசத்தால்
தாட்டீகராக்கதன் சதிசெய்விதத்தால் (விதி)

அரசும்பவிசும்போ யங்கம்நொந்திடத்தீதாய்
அருங்கானத்தினிலலை வதுவும்போதாதா
புருடனைப்பிறிவது போலுண்டோகேதம் (விதி)

அந்தர நாடிகை.

பறையனூரினிற் சிறைப்பட்டிருப்பே   னோ
பாருள்ளவும்வசை யாம்சகிப்பே   னோ
துறையையெப்போகாண்பேனோ துக்கந்தவிர்ப்பேனோ   (விதி)

நாதனெனைநினைந்து நலிந்துமெலிந்துதே   ட
நானோவன்சிறைப்பட்டு நலங்குன்றிவா   ட
பேதப்படுத்திவைத்தாய் பிறந்ததேமிகப்பாடா   ம்   (விதி)

(இலக்குவன் வசனம்.) ஆ ஆ, அண்ணா இதுவென்சொல், தைரியங்கொள்ள வேண்டும், சும்மாவிதனத்தையடைய இதுசமையமன்று அதிசீக்கிறத்தில் சத்துருவின்வாஸ ஸ்தலத்தை விசாரித்தரியவேண்டும். சும்மா துன்பப்படுவதிலாவதென்னை.

இராகம். தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

ராமவிபுவேமிக நீமயங்கிவருந்தலாமா
இதுதருணமா, வீரகோதண்ட   (ராம)

அநுபல்லவி.

பூமா இரவிகுல சோமா பலவீமா
புலம்பிப்புலம்பிக்கண்ணீ ரலம்பிப்பொழுதுபோமா   (ராம)

சரணங்கள்

எதனைபோதுதானழுதாலும், இனிச்
செத்தார்வருவாரோ ஒருக்காலும், இன்னம்
யெத்தவும்அவஸ்த்தைகள் வந்தாலும், தைரி
யத்தைவிட்டுவிடலாமோ மேலும், நம்மள்
உத்தமிதனைக்கவர்ந்த இத்தனைதுன்பமுந்தந்த
சத்துருவைக்கொன்றுந்தன் சித்தமகிழாமலெந்தன்   (ராம)

அன்னவன்வயிப்பதெந்தத் தலமோ,   புயம்
மன்னிய்மவனுடைய பலமோ,   மற்றும்
பன்னுமவனுடைய உட்ப்புலமோ,   எல்லாம்
இன்னமறியா திருத்தல் நலமோ,   இதுகளை
முன்னர்விசாரித்தரிந்து துன்னுமரியைப்பரிந்து
சின்னபின்னமாயறிந்து இன்னலொழிக்காமல்சொந்து   (ராம)

எங்குகொண்டொளித்தானோ பாவி அவனையென்ன
சங்கடஞ்செய்கின்றானோ மேவி அவனுக்கவள்
[illegible] பரிச்சுக்கும்ப[illegible] நாவி என்றாலுமெங்கே
அங்கலாய்க்கின்றாளோ தேவி அதையெண்ணாமல்
இங்[illegible] துயர்கொண்டால் சங்கதியென்னமோகண்டாய்
[illegible]விறுபோர்புண்ட சிங்கனேவீரகோதண் (ராம)

(இராமர்) கோபத்துடன்.

இராகம் பியாகு ஆதிதாளம்.

பல்லவி,

[illegible] அடா என்பலமறியாயோ.

அநுபல்லவி,

[illegible] முன்னைமடிந்தஇவர்
[illegible]ஜன்னிக்கொண்டிருக்கையில் (என்)

சரணங்கள்.

ப[illegible]விச்சென்றாலுமென்ன
[illegible]றிலதியமதோ (என்)

[illegible]யினு அயனால
[illegible]விடுவோமோ. (என்)

[illegible]டவிலே[illegible]யிருந்தாலும்
[illegible]கைகட்டுச்செய்யேனோ (என்)

[illegible]ம்பதுங்கினாலும்[illegible]டுவதுண்டோ
சரியொன்றவ்வரக்கன்றன்[illegible]ங்கொன்றிடாதோகண்டாய் (என்)

[இராவணன்] அழுக்காறுகொண்டு) அடே அடே க்ஷத்திரியப்பயலே

விருத்தம்.

சேட்டையடாயீ நுனக்குத் தகுதியன்றுசிறுவிரலத்தனைகாணு நீயிதென்ன, மேட்டிமையோ குலக்கொழுப்போ விருதாச்சொற்கள் விளம்புகின்றாயுனை யொளிதில் விடுவதில்லை, மூட்டையெனசசக்கிடுவேன்பதனமிந்த மூவுலகும் ஜெயித்தயென்றன் றுணிவும்வீர, தாஷ்டிகப்ரதாபமும் நீயறியாய்நன்று கூடிமையந்தநிலைரிச்சொல்லிற் சரியாகாதே,

அந்தரநாடிகை.

[சீதை] சந்தோஷத்துடன்) வசனம், என்னுயகர்ச்கிவ்வளவு கால பரியந்தம்தாமதம் யாதோ.

(சோகத்துடன்) அடிஸகி அனலே இது நாடகமன்றோ, ஆகையால் யா ன் நினைக்கின்றேன். நிஷ்கபடரான அம்மஹா புருடனிடத்தில் மஹாமா யாவியான அரக்கனால் ஏதேனும் வஞ்சகமாய் பயங்கரமான மாயை களிய ற்றப்பட்டிருக்குமென்றே.

(அனலை) ஸகி, ஜானகி, கொஞ்சம் சகித்துக்கொள், எல்லாமின்னுட கமூலமாய் வெளியாகும்.

(இலக்குவன்) ஆ அண்ணு தயவுசெய்யவேண்டும் தயவுசெய்யவேண் டும்.

கட்டளைக்கலித்துறை.

இங்கிருந்தேசரம் விட்டிடில்ராவண னென்பவ னை
எங்கிருந்தாலுந்தொடர்ந்துயிர் மாய்க்குமிதிலென்ன கா ண்
தங்குடியோடவன் றனையுஞ்சென்று தகர்த்திடல ர
தங்கம்அகற்றுமிது வைரசாந்தியதாய் விடு மே.

இன்னமும் கட்டளைக்கலித்துறை

உலகிலராக்கத மென்றொருபாணம் உகுப்பையென் று ல
கலகவிழிச்சியர் கன்னியர்பாலர் களங்கமற்ற ர
இலகும்விருத்தரு முண்டலவோமாய்த் திடுதனன் றே
உலைமனத்தின சரணியயீதுனக் கொத்ததன் றே.

(இராவணன்.) ஆ அடா அமைச்சர் நாயகமே இம்மூடவசனம் நின் செவிபுக்கிற்றோ.

(மஹாபார்சன்.) அடட இவனிவ்வண்ணம் நினைக்கின்றான் அதனு லென்னகெடுதல்.

(இராவணன்). இவன் நமது பலந்தெரியாமல் இலேசாய் நினைத்து வாயில்வந்தபடி உளறுகின்றனன். கொள்ளிகொண்டு யானையைச்சுடுவது போல் சராக்கினியாலிவன்களைப் பொசுக்குகின்றேன்.

(சீதை.) ஓ, என் வள்ளார்க்கிளையாய், என்பிள்ளை இலட்சுமணு, நன்றுயுரைத்தனை, மகா அபராதியான இக்கொடிய இராக்கதனுக்குச் சரியா னதண்டனைமுறை சாற்றினை, நன்று நன்று.

(இராமர்.) அங்ஙனமாயின் அதற்கென்னதான் செய்யவேண்டுமெ
ன்றாய்.

(இலக்குவன்) விருத்தம்

ஏதுக்கண்ணா தெரியாதவர்போலென்ன செய்வமென்றீ ர்
காதுக்குங்கண்ணுக்குங் காதமுண்டோ நங்கருதலன்ற ன்
தீதுக்குடன்பட்ட தென்றிசைசென்று செறுக்கறிவோ ம்
போதுக்குப்போது புலம்பிடலாவதென் பூவல னே.

(இராமர்) விருத்தம்

நல்லதப்படியேசெல்வோம் நந்தந்தை ஜடாயுவுக் கு
மெல்லஇம்மலைகீழ்கொண்டு மேவியேவளர்ந்த தெர்ப்பை ப்
புல்லொடேதிலவத்தாகப் பொருந்தவக் கடன்முடித் தே.
நல்லையல்வருவாயென்முன் ஓங்குநற்குண ஒப்பில்லா ய்.

(இலக்குவன்.) தேவரீர் கட்டளையிட்டருளிய வண்ணம் சீக்கிரம் மு
டித்துவருகின்றேன்.

என்றுசென்றனன்.

(இராமர்.) நினைத்து நினைத்து.

இராகம் பியாகு சாப்புதாளம், கின்னடபாசி என்றமெட்டு.

பல்லவி

என்னசெய்வேனோ ஏதுசெய்வேனோ என்
றன்னைமறந்தேன் மிகத்தாழ்ந்தேனடோ (என்ன)

அநுபல்லவி.

அன்னியாயமோஇது யார்செய்தசூதோ
அரிவையைப்பிரியென்றே அயன்வகுத்ததுவோ
ஆனாலும்பாவி, நானேஇப்பூவில், என்னைத்
தாவெண்ணியுருகுவ னென்றேவி (என்ன)

சரணங்கள்.

அரசிழந்தேனருமைத் தந்தையைத்துறந்தே ன்
ஆரணியத்தினில்வந்தேன் அரிவையைப்பிரிந்தே ன்
அதுவும்போதாதோ, உதவிசெய்பற வை
அதுக்குமபழிகாரனாய் ஆனேனய்யோ [என்ன]

அந்தாநாடிகை.

கோலிழந்தகுருடனேனே நா [illegible]
கொல்லையில்வைத்திடும் புல்லானேனே [illegible]
காலெல்லாமசந்தேன், சாலமெலிந்தேன் [illegible]
காலத்திற், காண்பேனே, காதலி [illegible] (என்ன)

ஆசைகட்போடவன் பேசியாஸங்க [illegible]
அடவியிலெனையணைந்திட்ட சாமாக [illegible]
அதைநினைத்தாலே, அக்கினிபோலே. என்
அந்தரங், கந்தனை, த்தீய்க்குத [illegible] [என்ன]

தந்தைதசரதரும் ஜடாயுவுமறித்தது [illegible]
ஜானகியைகடுக் கானத்திற்பிறித்த [illegible]
இந்தசோகாக்கினி, என்றன்னி [illegible]
எறிகிது, கருகின்ற, தென்னசெய்வே [illegible] (என்ன)

இவ்விதம் இடைவிடாது புலம்பிக்கொண் [illegible] றுகின்றனர்

(திரை) ———

விருத்தம்.

தந்தைஜடாயுவுக்குச் சைலநீர் தருப்பைபிகொண [illegible]
மந்திரக்கடன்முடித்து வருகின்ற [illegible]
விந்தைஇவ்விபரீதத்தை யென்னென [illegible] செய்வே [illegible]
இந்தமாவனத்தலத்தோ டீர்க்கின்ற [illegible]

(இராமர்.) ஆ, என்ன, தம்பி லட்சுமண [illegible] ? வியப்புடன.

அடடா தம்பி லட்சுமணா? உன்னையுமிழுக்கின்றதாரடா.

(மஹாபார்சன்.) மஹாராஜ், அடுக்குமொழி, தென்னிலங்கேசரீ, முன்னமனுப்பிய, துன்னுங்கபந்தனென், றென்னிணைப்பையனே.

(இராவணன்.) ஆம் ஆம் இருக்கலாம் (களிப்புடன்) யீர்க்கட்டும் யீர்க்கட்டும், பிச்சுப்பிடுங்கித்தின்று களிக்கட்டும் களிக்கட்டும்.

(சீதை) உத்வேகத்துடன்] ஆ என்னிளையகோவை இழுக்கின்றது யாவன்.

(——) திரை.

விருத்தம்.

கடல்கடைந்தமந்தரம்போல் மிகப்பருத்துக்காதமட்டும் நீண்டிலகுகைக ளோடும், புடையெனத்துவாரங்களோடு வளர்ந்ததானபுத்தென ஓங்கிமேனிபொருந்தும்வட்ட, மடுவெனவாய் கண்கள்பயம்வருவிக்கின்ற மாதிரியாய்விளங்குகின்றமாமுகத்தை, வயிற்றிலுளதாகிக் கோரமாகிநின்ற தோர் கபந்தவடிவமீதே.

(இராமர்.) அகோ பிரமாதமே ஆகையால் யான்விரைவிற் செல்கின் றேன்.

(——) திரை.

[வசனம்.] ஆ ஆ அடா நீயாவனடா இராஜகுமாரன்போல் காண்கின்றும், நின்னது விதியின் முடிவினால் என்னதாகாரத்திற்கு பலியாய்வந்து வாய்த்தாய், தெய்வாதீனமே, என்பாக்கியமே பாக்கியம்.

(இராமர்.) கேட்டு அதிவிரைவில் நடந்து, நோக்கி] ஆ நந்தம்பி இலக்குவனால் அவ்வரக்கன் நமனுலகுற்றனன்கொல்? என்னென்றுசொல்ல.

இதோ விருத்தம்

வந்ததோர்கவந்தவடிவ னுமரக்கன்வாளினால் யோசனையளவாய்
விந்தையாய்வளர்ந்தவன் கரத்துணையும்வெட்டுண்டு வீழ்ந்துயிரிறந்தான்
முந்தவந்தணைந்தவிஜயசுந்தரியின் மூலக்குங்குமங்களோவென்ன
சிந்தியஉதிரக்குறியுளனாகி த்திகழிலக்குவன் வருகின்றான்.

(இராவணன்.) சோகாச்சரியத்துடன்.

விருத்தம்.

யீதென்னபுதுமையைய்யோ இவர்களைஅதனுசெய்தற்கு
தீதுசெய்கபந்தன்றன்னைச் செப்பியங்கிருத்திவைத்தேம்
காதகச்சிறுவன்வாளால்க் கணத்தினிற் கரங்கடம்மைச்
சேதித்தான்றனுபந்தன் செத்தானிதென்கொடுமீதே.

(சீதை) சந்தோஷத்துடன்.

அட அப்பா, யென்பிள்ளை இலட்சுமணா? கூற்றுவனது வாயினின்றும் உயிருடன்மீண்டனை கொல், தெய்வாதீனயப்பா.

(இலக்குவன்.) பிரவேசித்து விண்ணிலக்குவைத்து.

கலிவிருத்தம்.

ஆரியரைக்குறித் தந்தரவாணி
சீரியநன்மொழி செப்பல்போலுமே

ஆந்தர நாடிசை.

ஒருரைகிளம்பின தொழுங்கதாக வே
சேரிலென்னென்று நின்றுகேள்ப்பனு ல்.

(அசரீரி) அடுக்குமொழி.

ஜயஜயபூமா, நயகுணஸ்ரீ மா
புயபலவீமா, இயல்புகேள்ராமா.

ஓ ராமச்சந்திரா, யான் புகல்கின்றேன் ஜானகி லாபசத்துரு விஜயோபாயம், ஓ ரகுகுலதிலகா, கேட்கக்கடவாய் எனவே.

(இராமர்.) ஆதரத்துடன்) காதுகொடுக்கின்றனர்.

(இலக்குவன்.) திரும்பவும் இயம்புகின்றதென்கொல்.

(அசரீரி) விருத்தம்.

இரவிகுலமாமணியேஜனகிதன்னை இனியடைவாயரிகடமை எளிதில்மாய்ப்பாய், ஒருமொழிகேள்கவிவரன் சுக்கிரீவனென்போன் ஒருநான்கமைச்சர்களோடுகேந்திருப்பான், கிரிரிசியமூகமதில்விரைவாய்ச்சென்று கிட்டியவனோடுநட்பாய்க் கிட்கிந்தைக்கி, திரமுடையவாலியைக் கொன்றிவனேஆளச்செய்துவைத்தால் நின்காரியம்ஜயம்சொன்னேனே.

(இன்னமும்) விருத்தம்.

சாமிராகவனே தீனதயாளனே கமலக்கண்ணா
வீமனும்வாலிதன்னை விஜயமேசெய்து நீயும்
கோமகன்சுக்கிரீவர்க்குக் குறித்தகிஷ்கிந்தை தன்னை
மாமுடிசூட்டிவைத்தால் மங்களமுனக்குண்டாமே.

(இன்னமும்) விருத்தம்.

தூலசிரமாமுனிவரளித்த சாபந்துலைந்ததுன்னுற்றனுகபந்த வடிவந்தானே, மேலவனுமென்வடிவந்தனை யடைந்தேன்மெய்யேயும் புகழுடனே வாழிவாழி, சாலஉன்றனுதவிக்கோரு தவிகாணேன்சாற்றிடும் இவ்வாக்குதவிதந்தேன்சாமி, சீலகுணபூடணனேயானிப்போது செப்பியமுறைப்படிசெய் செயமுண்டாமே.

(இலக்குவன்.) ஆ இங்ஙனமிறந்த கபந்தனுன் திவ்வியதேகத்தைப் பெற்றிவ்வண்ணம் சாற்றுகின்றனன் கொல்.

(இராவணன்.) அழுக்காறுடன்) ஓஹ ஓஹ தனுகபந்தனுங்கூட.

சிங்காரக்கவி.

சிலைகுடொ[illegible]யெதிரி, கஷியிற்சேர்ந்தனன்
இ[illegible]ரது. பக்ஷர்துறந்தன ன்.

(மஹாபார்சன்.) ஆ மகராஜ் எடுத்ததேகம் விற்றவிழுமட்டும் சமது பக்ஷம் மறந்தவனல்லன்.

(சீதை) சிங்காரக்கவி.

காயந்துறந்தா, காயமடைந்தா
ஞாயஞ்சொலிச்ச காயங்கள்செய்தார்.

(இராவணன்.) அடடா, மஹாபார்சவா, இதுநடக்கத்தக்கதன்று, வனெனின் வாலிவீரனது இராச்சியத்தில் சுக்கிரீவனை நாட்டலென்பதேயாம்.

அடா என்னென்று நினைக்கின்றாய்.

விருத்தம்.

யாதிரிபெரும்பக்காசேன் மாபலசாலி வாலி
வந்தயானிடஞற் சென்மவைரிசுக்கிரீவன்றனை
அந்தராச்சியத்தில் காட்டலாகுமா இதையோறிக்க
வின்மைதயாம்வரைக்கொல்ல வினயமேசெய்திட்டானல்.

விருத்தம்.

திரிசிரன்றன்னைகொன்றான் செய்யபார்க்கவனை வென்றான்
கரனையுங்கொன்றான் ராமனென்னினுங் கவிக்குலத்து
நிருபனைஅதிமகாவீரன் நீள்பயோனிதியை தோம்பிற்
வாலிகுவாலதன்னை மாய்த்திடவலியனல்லன்

(ஆகையால்த்தான்) இந்தகோக்குலக்குமாரர்களை வதஞ்செய்யும்பொருட்டு மஹாபலவாலி வீரனை அனுப்பிவைக்கவேண்டுமென்று அமைச்சர்களால் சித்தாந்தஞ்செய்யலாயிற்று.

பார் பார். விருத்தம்.

திரிகாலம்வாலிவீரன செய்யனுட்டானத் திர்க்கும்
ஒருகாலைக்கடன்கழிப்ப தொருநொடிக்குண் மூன்றர்க்கியம்
திருகாதுசிந்துமூன்றிற் றிணகரப்பிரீதிசெய்வோன்
கிரிபோற்றுந்துபியைக்கொன்று கிடத்தினேன் மிகக்கெம்பீரன்.

(அத்தகைய வாலிவீரனுக்கு நிகர் அகிலஉலகிலுங்கிடையாது.

அந்தர்நாடிகை.

(மஹாபார்சன்.) தன்னுள்.

விருத்தம்.

மூடனிவ்விலங்கை வேந்தன்முற்றிலும் வாலியைக்கொ ண்
டாடுகின்றான்பிரதாபம் அடிக்கடியுரைக் கின்றானு ல்
கேடடைந்திறந்தான்வாலி யென்றினிக்கேட்ட தர்ப்பி ன்
நாடிஇன்னவனென்செய்வான் நானென்றுமறிகிலே னே.

(வெளிப்படை.) ஆம், ஆம், அப்படியே மகராஜனே.

[இராமர்.] வான்முகத்துடன். (வசனம்) தேவரீரால் நன்றாயனுக்கிர கிக்கப்பட்டோம்.

தேவரீர் கட்டளையிட்டருளியபடியே நடக்கின்றோம்.

தேவரீர், யதேச்சையாய் திவ்வியபதத்தை அடைவீராக.

(தேவரீர் மருபடி அருள்வதென்கொல்.?

இந்தபம்பாநதிக்கரை மார்க்கமாக ரிசியமூககிரிக்குச்செல்லவேண்டு மென்றே. அங்ஙனமாகட்டும் அதுவேஸரி.

என்றிருவரும் நடக்கின்றனர்.

இராவணன். ஆசங்கையுடன், இந்தக்கபட தாபதனுக்கு அந்தச்சுக்ரீ னது சிநேகம் எங்ஙனம் கிட்டும்,

(மஹாபார்சன்.) மகராஜ் இதுநடக்கக்கூடியதன்று.

இராவணன். ஹட வீரத்துடன்.

விருத்தம்.

திகழுமாயிரம்சுக்கிரீவர் ராகவர்சேர்ந் திட்டாலு ம்
மகபலச்சலதியான வாலிமுனெதிர்க்கப் போ மோ
பகரசமார்ச்சாலங்கள் பதினையாயிர மானாலு ம்
புகல்மதக்கரிமுன்னின்ற பொருந்துமோ புதுமைமாதோ

[மஹாபார்சன் தன்னுள்.] உட்பலனறியாதிப்படி, மன்னர் மன்னவ ன் உளறுவானாகில் உபஜீவனஞ் செய்கின்ற மந்திரியரென்செய்வார்.

[வெளிப்படை.] எல்லாம் இன்னுடகமூலமாய் வெளியாகும்.

[சீதை.] நினைத்து நினைத்து.

(வசனம்) ஆ, என்னைப் பாவியரக்கனபகரித்துக் கொண்டர்தாததற்கிளம்பி அதிவேகமாய் வருங்காலத்தில் அங்கொரு மலைச்சிகரத்தில் ஐந்துசாகாமிருகங்கள் இருக்கக்கண்டேனன், அவைகளில் ஒன்றுதான் சுக்கிரீவனென்னும் பெயர்கொண்ட குரங்காயிருத்தல்வேண்டும்.

(அனலை) ஆ. அப்படியா, அவரிலொருவரேனும் உன்னுடைய ரகுநாயகனைப் பெருட்டு ... றல் பிரார்த்திக்கப் பெற்றாரில்லைகொல்.

(சீதை) அம்மா அதெங்ஙனம் நடக்கும், பாவி அரக்கனென்னை அபகரித்துக்கொண்டு வாயுவைப்பழிக்கும் வேகத்தோடு தாவிவருகின்றதில் எங்ஙனம் கூடும்.

(இலக்குவன்) எதிர்ப்பில் நின்றுகொண்டு, அண்ணா இதுதானன்றோ பம்பாநதி.

கலிவிருத்தம்.

> கொங்குதாமலர்ச் சோலையும் சாலவும்
> பங்கய..சம் மகிழ்ந்தெதிர் வீசலும்
> ...த்த தருக்களு மேவிய
> ...நதி யின்கரை யென்சொல்வேன்.

இன்னமும் கலிவிருத்தம்.

> குட்டிமான்கள் குதித்துத் தடம்பதிந்
> ...டபள்ளம் நிறம்பிமந் தானையின்
> மட்டிலாது மலர்மதுத் தங்கிடும்
> சட்டமா யின்னதித் தடம்சாமியே.

ஆகையாலிம்மார்க்கத்தோடு செல்வோம்.

(இராவணன்.) ஆம், அந்தப்பம்பாநதிக்கரை வனப்பிரதேசங்கள் அதிரமணீயமாகத்தானிருக்கும்.

(சீதை) உத்வேகத்துடன்) அடி ஸகி அனலாய் அந்தரமணீயமான பம்பாநதிக்கரை வளத்தைக்கண்ணுற்று என்னுசை நேசப்பிராணேசர் என்னினைப்பரோ, யாது புகல்வரோ ஒன்றுமறிகிலனடி.

(அனலை) எல்லா மின்னுடைகமூலமாயறியலாமம்மா.

(இராமர்.) ஹா ஹா இந்தப்பம்பாநதியில்,

அந்தரநாடிகை.

☞ விருத்தம்.

குஞ்சரங்களிகொண்டு கன்றுளங்குலவுதன் பிடிதனக்கூட் டி
நெஞ்சுவந்ததுநின்ற பின்வாயில்நீரினை யருள்கின்றதந் தோ

(எண்ணி, எண்ணி, ஆ கஷ்டங் கஷ்டம், என் கருத்திற்குகந்த காதல் கண்ணாட்டி, அந்தச்சானகி என்னைவிட்டெங்ஙனம் எப்படியிருக்கின்றாளோ (என்று கண்ணீரைப்பெருக்குகின்றனர்.

(இராவணன்.) அடடா இவ்விலங்கேசுவரன்றன் தயை உள்ளமட்டும் அந்தச்சானகி அரக்கியரால் நன்றாய் இரக்ஷிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன ள்.

[சீதை] கண்ணீர்ப்பெருக்குடன்.

கலிவிருத்தம்.

ஆவியன்னவென் அன்பனைவிட்டு மே
பாவியேனிப் பறையறிஞாரி லே
காவலோடுங் கடுஞ்சிறைப்பட்டு மே
ஜீவனோடு மிருப்பது நித லோ

[இராமர்.] கண்ணீரைத்துடைத்துக்கொண்டு,

☞ விருத்தம்.

அஞ்சம்பெடியினைத்தழுவிட ஆலவாயஞ்சிறை யடிப்ப வண்டினங்கள்
மிஞ்சுசத்தமிட்டெழுந்திட நளினமிகவலைந்திடக் களிமேவு ம்.

(ஹா பிராணகாந்தே அடிஜானகி (என்றுதங்கத்துடன்றுக்கத்திற் சொக்கிகளைப்புற்றனர்.

(இராவணன்) ஐயமூற்று, இவன் மூர்ச்சைகெட்டு விழுந்திட்டானே யினும், திரும்பத் தெளிந்தெழுந்திடுவன்கொல், அல்லது தீர்க்கநித்திரை யெய்துவன் கொல்.

(சீதை) வசனம். ஹா, சுடு, சுடு இனியென்ன யிருப்பு, எனது நேசப்பிராணேசனுடைய இம்மஹா விரக அவஸ்தாந்தரத்தில் என்னை ப தெய்வம் அகற்றி வைத்ததே இதற்கென் செய்வது, அந்தோவந்தோ.

இராகம் காபி ஆதிதாளம் மாயாகாளி மோசமியுடு என்றமெட்டு

பல்லவி.

அய்யோபாவம், அய்யோபாவம், அய்யோ தெய்வமே.

அனுபல்லவி.

ஐயோமென்றே நானிருந்தேனே
கடைச்சட்டி இரக்கினாய் நீதானே. அய்)

சரணங்கள்.

நன்மணத்தினில்முன் னெத்தனைவிவாத ம்
இஷ்டப்படிமுடித்ததேப் பிரமாத ம்
கன்மனக்கைகேசி விளைவித்தபேத ம்
கறையிலாக்கடலாச்சே கேத ம் (அய்)

நாட்டிலிருக்கொணாமல் காட்டிலடித்தா ய்
நாதனைப்பிரிந்திட நீமருட்கொடுத்தா ய்
தாஷ்டிகவரக்கர் வன்சிறையிலெனைமடுத்தா ய்
சற்பனைதொடுத்தாய் கெடுத்தா ய். (அய்)

அடிக்கடியெனைநினைத் தாவிசொக்கிட வே
அவஸ்தைப்படுமென் கணவர்க்குத்தென்பட வே
முடிபாமலெனைமறைத் தொளித்தியொர்கட வே
மோசந்தவிர்த்திடாய் கும்பிடுவே ன். (அய்)

அதிவிரகத்திற் களைப்பானவென்னேசர் க்
கண்டையில்நானிருக்கலாகாதோ மோச ம்
இதுவுங்கெடுதலல்லாற் பிறிதில்லைலவலேச ம்
இனிநான்சகிப்பனோ பிரயாச ம். (அய்)

(என்றுதங்கத்துடன் புலம்பிக்கொண் டிருக்கின்றனள்.)

(இலக்குவன்) ஆ, அண்ணா ஆயாசந்தெளிவீராக' ஆசுவாஸங்கொள் வீராக.

விருத்தம்.

நிந்தைப்பாதக வரக்கன்றன் பேரையும் நோரா ய்
அந்தச்சோரனைச் சயிக்கு முபாயமு மறிந்தோ ம்
சொந்தச்சோலியை முடிப்பது மிகமிகச் சுலப ம்
இந்தச்சோகமுற் றிறங்கிட லெனினி யண் ணா.

(இராமர்) களைப்பகன்று, அடா லக்ஷ்மணா அந்த ரிசியமூககிரி [illegible] ம் எவ்வளவு தூரமிருக்கின்றதோ.

(இலக்குவன்) அண்ணா இதோ, (அடுக்குமொழி) தெக்ஷிணத்தெதிர்ப்பினில், பிக்ஷபோற்காண்குறார், இக்ஷணைகளிடம், பக்ஷமாய்க்கேட்கிறேன்.

அந்தரநாடிகை.

(அப்பால்) யதீசுவரர் பிரவேசிக்கின்றனர்.

(யதி) யானோ இந்த யதி வேடத்துடன் இவ்விராஜகுமாரனை வந்தடைந்தனன்.

(இராவணன்) ஆ,

கலிவிருத்தம்.

எஞ்சொற்கொண்டங் கெழுந்திடுவாலிதான்
விஞ்சைசுற்றசன் யாசியின்வேடமாய்
செஞ்சிலைக்கைச் சிறுவனைச்சேற்றிட
வஞ்சமுற்றெதிர் வந்தவனுகுமால்.

மெத்த சந்தோஷம், மெத்த சந்தோஷம்.

(சீதை) அடி அனலே, ஆ குடிகெட்டது குடிகெட்டது.

(அனலை) அதென்னடி சகி அகாரணமாய் இதிப்படி நடுங்குகின்றாய்.

(சீதை) கலிவிருத்தம்.

என்னைவஞ்ச மியற்றிய பான்மைபோல்
பின்னும்ராமனைப் பேதமை செய்திட
அன்னராக்கதனே வந்திட்டான் கொலோ
சன்னியாசியென்றுலே தவிக்கின்றேன்

(வசனம்) (எதடிசகி) என்னமோசம் சம்பவிக்கப்போகின்றதோவே, இந்த சன்னியாசிவேடத்தால் யென்னைமோசஞ்செய்ததுபோல் என்னாயகனேயும் மோசஞ்செய்ய அவ்வரக்கனே இவ்வடிவத்துடன் வந்தனனென்று நினைக்கின்றேனடி.

(அனலை) அடி சகி எதடி இது நாடகமன்றோ, ஆகையால் எல்லாங் கண்டறிவோம் அதற்குளேன் பதறுகின்றாய், பயப்படவேணடாம்.

(இலக்குவன்) ஓ, பகவன் யதீசுவரரே தெரிவீர்கொலோ. யீரிரண்டமைச்சரோடு சுகண்டன் வயிக்கின்றதான கிரிரிசியமூகம் எங்ஙனந்திகழ்கின்றதோ, எங்கட்கியம்புமின்.

(யதி தன்னுள்) வசனம். ஓ ஓ தன்னால் யேறத்தகாத இந்தரிசியமூககிரியில் சுக்கிரீவனை வதைசெய்யும்பொருட்டு அவ்வாலிவீரனாலேவப்பட்டு இவர்கள் வந்தவர்கள்போலும் (ஆகையால்) இந்த ஐய்யங்கொண்ட உளத்தனான அந்தச்சுக்கிரீவனால் தெளிந்துவரும்படியே விடப்பெற்றேனல்லவோ, ஆனாலிவர்களவ்விதந்தோற்றப்படவில்லை,

எனெனில் அந்தராத்மாவானது நிரம்பதயவோடு கூடுகின்றது.

(ஆகையால்த்தான்.)

வெளிப்படை விருத்தம்.

இசழ்காதம்பினியருமால்சிகையிற் பூட்டிச்செடிகள் கொடிகள்படர்ந்து செழிசதுக்காணும், மகவாரணியத்தலமாம் அங்கிதன்னைவரிசையொடு தன தங்கமனைத்துமாட்டி, புசழ்மேவும்பொன்னருவி யுடைவாடன்னைப் பொருந்தவே பளபளெனப் பிடித்துக்கொண்டு, மிகவீரத்தன்மையுடனெதிரில் சோரய்விளங்குகின்றான் சிசியமூகவெற்புவேந்தன்.

([illegible]னைச்கேட்டறிந்துகொண்டது சரியே.

நீவி[illegible] யாரோகொலோ, அதனைத்தெரிய விரும்புகின்றேன்.

(இராவணன் தன்றுள்) ஓ, ஓ, இவன் வாலியன்று.

(வெளிப்படை.) அடா மஹாபார்சா நீ அறியவில்லையா இவ்விருவரி[illegible] காவதுக்கொடியன் மற்றவனே சூர்ப்பனகையை முகபங்கஞ்செ[illegible] என்றறியாய்கொல்.

(இராவணன் தன்றுள்) இந்தச்சன்னியாசி அரக்கனாகத்தோன்றவில்லை.

(வெளிப்படை.) அடியனலே யீதிவராறிகின்றாறில்லை இவ்வற்பபாக்[illegible]ன் அப்பனது திருவேடத்தைப்புனைந்த ஒரு அப்ஸரமடந்தையும் [illegible] வடிவந்தரித்த மற்றொரு கந்தருவப் பெண்ணுமென்ப[illegible]கிடே.

(இலக்குவன்)

கலிவிருத்தம்.

ஆரெனவினவும் ஆரியஇவ ரே.
பேரிராமனென் றுரைக்கப்பெற்றவர்
கூரும்யானிவர்க்கனுசன் லக்குவ ன்
பாரியாளிவர்க்கென்ன பகர்வனு ல்.

(யதீசுவரர்) போதும் போதும் மேலறிவேம் கேள்வியுற்றனம். இராவணனுலபகரிக்கப்பட்டாள் சீதையென்றே.

(இலக்குவன்) பகவன் யதீசுவரரே, இங்ஙனமெங்கட்குக்கதி சுக்கிரீவனைத்தவிற மற்றுண்டோ.

(யதீசுவரர்) ஸரி, ஸரி, ரகுவீரர்காள் யானேஅனுமான் யென்னும் நாமத்தைப்பெற்றவன் அந்தச் சுக்கிரீவனுக்கு நானே முக்கிய மந்திரி ஆகையாலிப்போது கேட்கக்கடவீர்.

அந்தர நாடிகை.

விருத்தம்.

தினகரகுல தீபசுக்கிரீவன் றேவியை வாலிகைக்கொண்டா   ன்
முனமவன்றன்னை வதைத்தவன்மனையை முத்திடவளிப்பையே யேலிவனு   ம்
இனமுடன்பாவி ராவணன்றன்னை இடித்தடித்தெம புரத்தேற்   றி
சனகியாங்கனியை நினக்குகந்தளித் தருகுவனுடன் கையிற்றா   னே

(எனெனில்) வசனம் தன்றமையனாகிய யாதொரு வாலிராஜனிடத்தில் அனேககோடி ஆயிரக்கணக்கான சேனைத்திரள்கட்கும் இனைதிபதியாகப் பேசுகின்றானே அதனால்தான் முதன்முதலில் அன்யாய சரணான அவ்வாலியைக் கொன்றுவிடவேண்டுமென் றறிவித்துக்கொண்டேன்.

(இராவணன்) கோபத்துடன், என்னென்ன பிதற்றுகின்றானிச் சனனியாசிப்பயல் எடடா என் சந்திரகாசத்தை.

விருத்தம்.

முன்னமிச்சன்னியாசி தன்னுயிர் முடித்துவிட்   டு
உன்னதகிரியிலோங்கும் உற்றவவ் வமைச்சரோடு   ம்
பன்னும்சுக்கிரீவனென்ற பயலையுமொருகணத்தி   ல்
இன்னல்வன் குலையியற்றி யெமபுரிக்கேகுவேனு   ல்.

(சற்றாலோசித்து) யெனக்கித்தனை படபடப்பேன் அந்த க்ஷத்திரியபாலனை வதைசெய்யும்படி யென்னாலேவப்பெற்ற அவ்வாலிவீரனே இவரை மடியாமல் விடுவன்கொல், அவ்வாலி மாய்ப்பது அருதியே.

[மஹாபார்சன்] நன்குரைத்தருளினீர் இராஜாதிராஜனே.

[சீதை] சந்தோஷத்துடன், நல்லமாதிரிதான் இவர் ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் ஒப்பந்தம்.

[இராமர்] ஆ அங்ஙனமாகட்டும் ரிசியமூகத்தை அடைவோம் (என்றெல்லவரும் நடக்கின்றனர்.

[இராமர்] இதுவென்கொல்.

☛ விருத்தம்.

யீதென்கொல் என்புக்கும் பலிமையமா மலைபோலிங்   கே
பாதையை அடைத்துக்கொண்டு பாதையாய்க் கிடப்பதே   னோ.

☛ அநுமார் விருத்தம்.

தீதுசெய்வாலியாலே சிவனொற்றர் மிறந்துவீழ்ந்   த
தோதக அனுமானை துந்துபி டமதென்பர்   ம்தே.

[இராமர்] ஆ. அங்ஙனமாயின் போக்குவரவுக் கிடைஞ்சலன்னியிலிஃதை அப்பா லெற்றிவிடுகின்றேன். (என காலிட்டெற்றுகின்றனர்.

[இலக்குவன்] வியப்புடன்.

☞ கொச்சகம்.

என்றமையன் கால்விரலா லெற்றிட மகாகிரிபோல்
நின்றவத்தி யின்கணமே நீள் யோசனைத்தசமே.

சென்றுவிழுந்திட்டதகோ.

[அனுமார் தன்னுள்] ☞ திறனிவன் மா வீரன்.

[வெளிப்படை] தேவ அன்று யுத்தசமையத்தில்,

☞ அன்றதைத் தோர்யோசனைக்கு ளகற்றினன் போர்வாலி.

[இராமர்] எதிரே நோக்கி.

சிங்காரக்கவி.

தாலகுழாமுளைத்தசத்த, சாலங்கள் சரங்களெய்து
வாலங்கள் வடுக்களான, கோலங்களிதுவென் கொல்லோ.

[அனுமார்.] இவை மராமரங்கள் வாலியாலெய்தெய்து புண்படுத்தப் பட்டிருக்கின்றதுகள்.

[இலக்குவன்] அகோவகோ.

விருத்தம்.

புரவலனெனது முன்னோன்புங்கவ ராமசந்திரன்
பரிவிலூன்றிப்பூரி பாகத்தைநேர் நிமிர்த்தி
திரமிகுவாலியனுஞ் சிதைக்க ஒண்ணுந்தான
தருவொருமூன்றும் நான்கும் சரமொன்றில் விழவெய்தானால்.

[அனுமார்.] களிப்புடன் ஓ தேவ தேவ ரகுகுலோத்தமா இங்ஙனம் நோக்குக நோக்குக.

அவ்வாலியின்றம்பியாகிய எமது சுக்கிரீவராஜன் இதோ கிரிசிகரத்தினின்றும் மந்திரவரருடன் இறங்குகின்றனன்.

அதனை இவ்வண்ணம் நினைக்கின்றேன் ஓ புவனநாயகா.

ஆசிரியவிருத்தம்.

மகமேருவென்னக் கிடந்ததுந்துபியென் பைவன்மையில் மணற்கட்டி போல், வானிலோர்யோசனை கிளம்பியோசனைபத்துமட்டும் விழவெற்றி விட்டாய், மிகவல்லசத்ததரு வீழ்த்திட்டநின்சரம் வெற்படிதுளைத்திட்ட தால், வீராதிவீரனும்மேவுகுணசாலியாய் விளங்குகின்றாயாதலால்.

அந்தா நாடிகை.

சகமி சில்க்தினஜனபந்துவாம் நின்னேயேசரணு கதம் அடைந்
தன்னை மெயாகெம்பிறுல் நின்னுதவியால்சென்ம . . . எச்செயிக்
தருமென்றும்வானராதிபஞெகவுங்கருதி சாமிசுக்கி
தைகெகொண்டுவருகின்ற விதமாய்த்துலங்குரூன் சந்ததங்காத்தருள்ளை

[இராவணன்] மிஞ்சுவியப்புடன் ஓ ஓ இதுவென்கொல்.

விருத்தம்.

துந்துபிஎலும்பைப் பத்துயோசனேதூரம் வீ ழ
உந்திஞன்மரங்களேழும் ஓர்சரத்தாலறுத்தா ன்
சிந்தையுற்றிரவிச்செல்வன் ஆசைநட்பதனிற் சேர்ந்தா ன்
அந்தவாலியையுமங்கோ அவன்மடித்திடுவன் மா தோ

[சற்றுலோசித்து] அதேது ஒருக்காலும் நடக்காது சத்துருவுக்குச்
சத்துரு எமனுக்கெமன் அவ்வாலிவீரன் இரணக்களத்தில் சிலாவருஷ்டியன்
றோ அவனைச்ஜெயிக்க யாவரால்முடியும். ஒருவராலும் ஆகாதகாரியம்.

(சீதை) நன்று நன்று இக்காடாந்திரத்திலும்.

அடுக்குமொழி.

கர்த்தனுரிய புத்திரர்க்குயர்
மித்திரலாபம்வந் துற்றதுண்மையே.

[இராமர்] ஆம் அவன் அவ்வண்ணமே இங்ஙனம் வருகின்றனன்.

[அப்பால்] அனுசருடன் சுக்கிரீவன் பிரவேசிக்கின்றனன்.

[சுக்கிரீவன்] வியப்புடன்.

விருத்தம்.

எவர்களைக்கண்டுவாலி யேவலால் வந்தாரென்றுட் க்
கவலையும்பயமுங்கொண்டேன் கருதியே அனுமனு ல்
அவர்களைநண்பராக்க அழைத்துவந்திடப் பெற்றனு ல்
குவலயத்திவரைச்சேர்ந்தால் குற்றமொன்றில்லைமா தோ

[அனுமார்] ஓ பானுகுல மானுபாவ தீனபந்துவே, தேவ தேவ ஸ்ரீரா
மச்சந்திரனே, மிக்கவுன்னுவல், உட்கொண்டுவந்த சுக்கிரீவராஜன் நமக்கறி
க்கின்றனன்.

இராமர் அடுக்குமொழி.

[illegible]ட்டாமலென்றுமே கட்டங்கள்வாராமல்
கட்டங்களுறுகாமல் இட்டசீவாழியால்
[illegible] நன்மையுண்டாகுக.

[illegible]கொண்டனர்.

([illegible]) தேவ தேவ ஸ்ரீ ராமச்சந்திரா, தேவரீர் திருவாக்கினால் [illegible] நவின்றபோமுத எல்லாக் [illegible] கஷ்டங்களும் யென்னை விட்[illegible] [illegible]சுகமல்லாத சுகம[illegible]யது.

இ[illegible] [illegible]நன்மையெப்படியென்ன யிருக்கின்றது.

([illegible]) [illegible] உத்தம [illegible]த்திர [illegible] சுக்கிரீவா நன்கறிவாய்சொல். [illegible] ஆராவ[illegible]ளென்பதே, வின்றைவை அவனூர் உள்ளசங் [illegible]

[illegible] [illegible]கண்டன் [illegible] துத்ரமோதுவான். ([illegible] [illegible])

[illegible] [illegible]யென்[illegible].

[illegible] [illegible]ல, [illegible] [illegible]லங்கேசுவரன் [illegible].

[illegible]; [illegible]வத்திர [illegible]டவாய்.

விருத்தம்.

[illegible] [illegible]யத்தூக்[illegible]கொண்டிருந்து [illegible] [illegible], [illegible]டவனைக்குறித்து [illegible] [illegible]றும், அடக்கமு[illegible] [illegible] [illegible] அதிலத்தனையாகவ்; கட[illegible]விட்டான் [illegible]னனிலும் [illegible] [illegible] சுக்[illegible] [illegible]டம்.

(சிதை) ஆ ஆ அடி அலைய இனியென்செய்வதடி.

விருத்தம்.

அவ்வாரக்கிறையும் ராவணன்செய்தி அறிகிலனென்பதறே. மே
ருவ்விலங்கையினிற் கொடுஞ்சிறைஇடத்தி லிகலரக்கியர்சூழாகவில்
வெவ்வாவின்பல் வாய்த்தேரைபோல மேனமெலிந்துயர்செய் தி
செய்வையயெப்டின்றன் நாயகர்க்கிறங்கிச் செப்புவர்யாார்கொலோதெரி

என்றழுதுசோரநின்றனள். (யேன்

அந்தரநாடிகை.

அனலை.

இராகம், கமாஸ், ஆதிதாளம்.

பல்லவி.

சோகமேனம்மா இந்தத்துன்பமொழிந்துனக்
கின்பம்பொருந்துமடி, பெண்ணே கண்ணே (சோக)

அனுபல்லவி.

பாகுமொழியினளே, அடி, பாணவிழியினளே
வாகுசேரும், மாஜனக, மகளுனக்குச், சுகம்வந்தெய்துமடி
பெண்ணே கண்ணே (சோக)

சரணங்கள்.

இத்தனைதூரம்வந்தும்உன் னிருப்பறியாமநொந்து
இத்தகையசிறைமீட்காமல், யேகுவரோவென்று, சோகமுற்று
யடியோ பெண்ணே கண்ணே. (சோக

சுக்கிரீவன்சேவகரில் அடி தாரையெருத்தன்வந்து
பக்கல்வந்துனிருப்பைத்தெரிந்து, பத்தியாய்ராமர்க்குரைத்தறி
விப்பானடி, பெண்ணே கண்ணே. (சோக)

(சுக்கிரீவன்) ஆனல் ஓ ரகுகுலோத்தம ராமச்சந்திரா.

கட்டளைக்கலித்துறை.

தீயரக்கன்முனஞ் செந்திருப்போலொரு செல்வியொ டு
போயினன்வான்வழி அப்போதுமிக்கப் புலம்பினளா ய்
தாயவளிங்ஙனணிமுடிப் பொன்றினைத் தள்ளினளா ல்
நீயிதைநோக்குதி இந்தாதந்தேனிந்த நேரத்தி லே.

என்று கொடுத்தனன்.

(இராமர்) நோக்கி ஓ யீதவளுடைய மேல்முந்தியிற் கிழிபட்ட உத்த ரியந்தான்

எனக்கரத்தில் வாங்கினர்.

(இராவணன்) ஆவேகத்துடன்) ஆ இதுவென்கொல் யானறியேனே ஆகாயமார்க்கமாய் வாயுவேகத்தைதிக்காரஞ்செய்து யான்வருகையில் தனே க்திரியத்திலணிகளை முடிந்து அந்தச்சானகி பலனறியாது கீழேவிட்டனள் கொல், இதுவுமொரு புதுமைதான்.

(சீதை) தெய்வாதீனந்தான்.

கட்டளைக்கலிப்பா.

நல்லவேளையென்னுயகர்கையிலே நான்விடுத்தநகைமுடிப்பீய்ந்தனன்
வல்லராமர்க்குமாவனந்தன்னிலே வானராதிபன்சினேகதினத்திலே
(இராமர்) சந்தோடசோகத்துடன் (தன்னுள்) யீதவளாதுதான்.

விருத்தம்.

கனதனக்கஸத்தூரிமணங் கமழானின் றகட்டழகி மேற்றுகிலாமிதைக்க ழற்றி, கனிபெருமத்யுன்னத காடின்னியமானநங்கைய வடங்கமலேக்கொங் கையின்மேல், கனிவொடியான்லீலை செய்யக்கருதிக்கையாற் காம்பினைத் தோட்டிசர்க்கவவள்கண்ணுறவெலற்றி, சினமோடெனைநோக்கிடுவ ளுடனேயிந் தச்சீர் துகிலால் விசறிமிகச்சிறப்புச்செய்வாள்.

(இராவணன்) ஓ இவ்விராஜகுமாரனுக்கு ஆசையோ கணக்கில்லாமல் பெருகின்றது.

(வியப்புடன்) ஆனால் பிராணஹானி உண்டாகவுமில்லை.

(சீதை) உத்வேகத்துடன் ஆ என்பிராணேசர் யென்னையன்னியில் எனது த்தரீயத்தைமட்டுங்கண்டு அவஸ்தாந்தரத்தை எப்படிச்சகிப்பர்கொ லோ, ஆ, கஷ்டங்கஷ்டம்.

(இராமர்) வெளிப்படை.) நல்லதிருக்கட்டும் இந்தமுடிப்பை அவிழ்த்து என்னுயகியின் ஆபரணங்களைப்பார்க்கின்றேன் (என்றவிழ்த்து) கண்ணீர்ப் பெருக்குடன் நோக்கி,

(தன்னுள்)

இராகம் நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி.

ஆபரணங்கள்கண்டேன் அணிபவளைக்காணேனே (ஆபர)

அநுபல்லவி.

சேவைமிகத்துலங்கும் சொன்னமயமாயிலங்கும் (ஆபர)

சரணங்கள்.

செண்பகநாசியிற்	திகழ்கின்றநத்தி	தே	
ஒண்பெருநவரத்ந	உயர்ந்தபுல்லாக்கி	தே	(ஆபர)

௬-வது அங்கம்.

அந்தராநாடிகை.

குலுங்குமவடன்முலை க்குடங்களிற்புரண்ட [illegible]
இலங்கங்கராகத்தாலே யிதவள்முத்துமா [illegible] [illegible])

சா[illegible]நடையொய்யாரந் தன்னையன்றோ [illegible]
உரைசெய்அன்றுபுரம் ஒங்குசேதிஇன்னோ [illegible] ([illegible])

 கட்டளைக்கலித்துறை.

தங்கக்கொடியிடை யாளைநீ மேகலை [illegible]

([illegible]) [illegible] இவ் வீரமெ[illegible] [illegible]யிர் திறப்பாகொண்டது திண்ணம்.

([illegible]தை) விருத்தம்.

[illegible]

([illegible]வன் [illegible]) [illegible] [illegible]கிறதென்பது திண்ணம்

(அசுரேல்த்தான்)

விருத்தம்.

கதிர்த்துளிபா [illegible] [illegible]
அதிசோகத்தோட [illegible] [illegible]
டிதுபோர்த்தென்னையர் [illegible] [illegible]
மதிநேர்முகத்தாளம் [illegible] [illegible]

(வெளிப்படை) [illegible] [illegible]ல் சோகமுற்றிரங்கிடிற் [illegible]கொல்,

(இராமர்) நினைத்து நினைத்து தன்னுள்.

 முந்தியகட்டளைக்கலித்துறைத்தொடர்.

நங்கைக்கரசியை ஆலிங்கனந்தி நடத்திடுங்கா ல்
அங்கைத்துணை கொடரைத்துகிறன்னேயவிழ்த்திழுக்கும்
எங்கைத்துணையொடு போர்செய்திடுப்பி லிறக்குவனே

(வெளிப்படை) ஆ லெட்சுமணா தாங்கடா வெனைத்தாங்கடா [எனத்த ளர்ந்து சொக்கிச் சாய்ந்தனர்.

(இராவணன்) ஸரி ஸரி இவனுக்கிதுதான் முடிவு. இதற்குமேலினி இவனுய்யும்வகை இல்லை (என) அத்தியானந்த பரிதனுயெழுந்தனன்.

(மஹாபார்சன்) இராஜாதி ராஜமஹா ராஜலங்கேசுவர இது நாடகம் நாடகம் (எனத்தலைசைத்தனன்

(சீதை) ஆ அந்தோ அந்தோ எனது கைசேசப்பிராணேசருடைய இந் தமயிறைவியாபார உணர்ச்சியினால் அந்தந்த அவஸ்தைகளை நினைத்து நினைத் து யென்சித்தத்தில் முநிவித விகாரம பற்றியது இனியென் செய்யப்போகின்றேன்.

இராகம் [illegible] ஆதிதாளம்.
[அரிபாகச [illegible] நினைத்து [illegible] யென்றமெட்டு]

பல்லவி.

[illegible] பூமியில் (இனி)

அநுபல்லவி.

[illegible] கொள்ளவும்
[illegible] ள்ளவும் (இனி)

சரணங்கள்.

பாவியெனை [illegible] த்துயிர் வல்லோ ன்
ஆவிசொக்கிவிழுந் தாயல் லோ (இனி)

குலமங்கையாய்ப்பிறந்து கொழுநன் றனைப்பிறிந் து
கலங்கெட்டிருத்தல் நன்றோநவின் று (இனி)

கர்த்தன் றனைப்பிறிந்து கடுஞ்சிறையில்விழுந் து
ரத்தினநா யிருப்பே பணிவசந் து (இனி)

எனச்சோகமுற்றிரங்கிச் சொக்கிவிழுந்தனள்.

(அனலை) ஆ ஆ ஜனகி ஜானகி ஆசுவாசங்கொள்வாயாக.

(இலக்குவன்) ஆ அண்ணா அண்ணா இதுவென்கொல். அடிக்கடி மூர்ச்சைகெட்டு அலங்கோலப்படுகின்றீர், ஆயாசந்தெளிந்தா சுவாஸம் பெ றுவீராக.

ஆந்தர நாடிகை.

[இராமர்] களைப்புவிட்டெழுந்து.

அடுக்குமொழி.

எப்பவுமென்றன் நட்பைவிடாதி
ருப்பையேற்கை யடிப்பாய் சுக்கிரீவா

(சுக்கிரீவன் களிப்புடன்) வலக்கைதொட்டடித்தனன்.

(——) திரை.

கெடிபெருமென் கண்பனிலங்கேசுவரன்றன் கிட்டியதாயாதியரைச் சமரிற்கீறி, அடமொடெவன்மாய்த்தனன்கொலெவனென சென்மஅரியெனுஞ் சுக்கிரீவனுக்கன்பானன் கொல்லோ, கெடவவனையுயிர் பறிகசப்பருத்ததானை கிரியிதனைவேர்கிளப்பி எடுத்திட்டேனல், திடமுடையபார்க்கவனைச் செயித்தான்றன்னைச் செய்யிலக்கென் புகழறக்குஞ்செய்கையாகா.

[சுக்கிரீவன்] ஓ ஓ தானாகவே வாலிவந்திவ்விதம் வழுத்துகின்றான் கொல்.

[அனுமான் தன்னுள் வசனம்.] ஆ ஆ பிரமாதமே சுக்கிரீவன் மறதி துன்பத்திற்கிடமே, யாதொருகாரணத்தால் வாலிபாலேறத்தகாத மலையினின்றும் கீழிறங்கி வனாந்தரத்திற்கு வந்தனனோ. அதனால் யாதுசங்கடஞ் சம்பவிக்குமோவே. [நல்லதிருக்கட்டும்] இராமசன்னிதானம் இவனைப்பாது காக்கும் ஆகையால்ப்பயமில்லை.

[இராமர்.] இதுவெங்கொல் சிங்ககர்ச்சனையா.

[இலக்குவன் கோபத்துடன்] அடே அடே கெட்டபயலே குரங்குடன் செய்யிலக்குத்தான் எங்கள் புகழ்க்குன்றத்தை அறுக்கின்றதடா.

விருத்தம்.

தடிக்குரங்கேயென் புகன்றாய்நின்னொடு செய்யிலக்கெம்மைத் தகர்க்குதப்பா
படிக்கரசாய்த்தன் அனுசன்பரதனைவைத் தண்ணன்வந்த பரிசுகேளா ய்
நடக்குமெக்கானத்திலும் பொல்லாருளரேற் கடிந்தறங்காட்டற் கன்றோ
துடுக்குளநீருமை யெனும்நின்சோதரபாரியை மருவுந்துஷ்டாவா டா

விருத்தம்.

மாவலவ ராகவரால் வானரமே நீபடுவா ய்
கேவலம்நீ யோர்திரணங் கெப்பீரமாய்ப் புகன்றா ய்

மூவுலகமுந் திரண்டுமொய்த் துணைவந்தாண்டாலும்
சாவலதுனக் கேதுதப்பிப் பிழைத்தல போ
[இராவணன்.] ஆ

கலிவிருத்தம்.

அந்தராமகனை முடிவாக வே
வந்தனன்கொல் மகபலவாலி யே
சந்தரகுடனைத் தியாணித்தயென் றவம்
இந்தவேளை சபலமிதாகுமே

ஆனால் அவ்வாலியின் வீரமறியாமல் அவனையுந்தண்டிக்கத் தருமென்று மூடத்தனத்தினாலிவ்விலக்குவன் நினைக்கின்றான்.

[சீதை] ஓ ஓ எனது பிராணேசரிடத்தில் மிகுந்தவழுக்காருடன் பில வங்கராஜன் வந்தெய்தினன்கொல் அவனை எவ்வள்ளர்க்கினிய இலக்குவனால் தனது இயல்பானகெம்பீரதீர மதுரவாக்கியங்களாக பகரப்படுகின்றதுகள்.

(——) அம்பித்ததிரை.

அந்தோ வந்தோ.

கலிவிருத்தம்.

என்னையென்ன மதங்கொண்டியம்புறான்
கன்னிசூர்ப்பனகை முகபங்கமாம்
முன்னலென்றங் கியற்றிய மட்டிலும்
துன்னும்வீரன் சுமித்திரைபாலகன்

[தவிரவும்]

விருத்தம்.

நன்றிவன்பின்னுமந்த கவில்விராதனையும் போரில்
கொன்றனனானாலிது குணக்கூரானாயமாகும்
வென்றிசேர்பலமிருந்தால் மேவியென்றன்பாற் சற்றே
நின்றெதிர்காண்பிக்கட்டும் நிமிடத்திற் வெளிச்சமாமே

நல்லதிருககட்டும் சிறுபயல் இவனேனடென்ன.
அடே அடே இராகுகுமாரா.

விருத்தம்.

கார்க்குரல்த்தாடகையை சுவாகுவையுமந்தக் கரானனையுமாரீசன் றனை
[illegible] தோர்க்கவைத்தோம் பின்னுமிக்கப்பலத்தரா

அந்தரநாடிகை.

தியவை உயிர்பறித்தோமென்றே, மூர்க்கமுள்ளயெக்களிப்பேன் வேண்டாங் கண்டாய் மோசமடாநீயெனக்கோர் முருங்கைப்பிஞ்சாம், எர்க்குநல்லசகுனம் வாய்த்தாலுஞ்சோரம் இருளகன்றபருதிவந்த பினுமோரதே.

விருத்தம்.

கண்கெட்டபூனையொன்று விட்டம்பாய்ந்தகதைபோலாம் நீசெயிக்கரணங்கள், வெண்பட்டணிந்த வெழிர்சனகிதன்னை விட்டகன்றவிாசதர் மென்மேலோங்கப், புண்பட்டவோடி மனயமொசுங்குகின்றாய் யோர்க்களத்தில் அசனிநுமிப்போதுநானே, விண்தொட்டகிரி இணைவிட்டெறிந்துன் மெய்யழித்துமிகச்சேடு விளைவிப்பேனால்.

[இராவணன்] பேஷ் பேஷ் ஓ அயமோசபுதல்வன் நன்குரைத்தனன்; ஸபாஷ் மெத்தசந்தோஷம்.

[சீதை ஆதங்கத்துடன்.] ஆ சகி அடி அனலை யிதற்குமேல் மேம்படிஆருமோவென்றென் மனந்தவிக்கின்றது.

[அனலை] ஆ ஆ சகி இராமச் சந்திரமூர்த்தி யாகுவீரரோ ஜயம்பெறுவ அதைப்பற்றி கொஞ்சமும் நெஞ்சிற்சஞ்சலம் வேண்டாமடி ஜானகி.

[இராமர்.] ஆஹா இங்கனம்பெருதிடவுகைந்தான், வருக வருக எனச்சென்றனர்.

(———) திரை.

ஆ ஆ கெட்டேனே கெட்டேனே, அற்பபாக்கியவதியாயினேன் அந்தோ அந்தோ.

கொச்சகம்.

தடஞ்சகொன்றைத் தான்விரிக்கு முன்னமே
விடஞ்சகமபோன்ற வெஞ்சமரிராமன் விட்ட
உடஞ்சத்துடைத் தூக்குவிச் சென்றிட்டவன்
னுடைநாதன் பட்டானென்றுறைகாதிலுற்றதோ.

இராகம், குல்ரேஜ் அரவாபரணனே அபிராமிநேசனே என்றமெட்டு.

இதுவோயென்புண்ணியம் யென்பிராணநேசனே யெப்படிநான்சகிப்பேன்
கதையோநாங்கூடிக் காலங்கழித்ததெல்லாம் கனவோநினைவோதான்
பொன்பூடணமற்றேன் புதுமஞ்சட்பூச்சற்றேன் புட்பங்கள்சூட்லற்றேன்

என்பெருந்தாலியை இரும்பென்றிருந்தேனே இன்றதைத்தானுமற்றே ன்
கடல்மூன்றினுந்தாவி கணத்திற்றிரும்புவீரே கனத்தஉம்பலம்போச் சே
திடமானிடர்பால் போரிடலாகாதென்றசொல் சிறிதும்யோராமற்போச்சே
சாவாமருந்துமத்தேவர்க்குங் கொடுப்பாயுன்றனக்கில்லா வகையேனோ
மூவர்களாலும்நீ சாகாயென்றிருந்தேனேமுந்தும் வைவ்வினைதானோ

(சுக்கிரீவன்) ஆ, வாலிமடிந்தனன்கொல், அதனாற்றான் அதனைக் கேள்வியுற்று அவனமனைவிதாரை குகைநின்றும் வெளிவந்தவளாய் அடங்காத்துயரங்கொண்டு அங்கலாய்த்துக்கண்மாரி பொழிகின்றனள்.

விருத்தம்.

ரகுவீரனம்பால் வாலிஇறந்தன னதலாலே
குகைநின்றுவெளியேவந்து கொதிக்கின்றாள் தாரைதானும
சுகபாசுமிகச்சந்தோடம் சத்துரு துலைந்தானப்பா
புகழிலக்குவகான் ராமன்பொற்பதம் வணங்குவேனால்.

எனதுபரிவாரசகிதம் இராமபாத வந்தனநிமித்தம் செல்கின்றேன் எனச்சென்றனன்.

(இராவணன்) வீரவாலி இராமனால்மடிந்தனன்கொல், யிதென்ன கொல், இதையெப்படி நம்பலாகும் ஒருக்காலுமில்லை, பலத்தவட்டப்பாறை தண்ணீரில்மிதக்குமா.

விருத்தம்.

யீதெல்லாம் விறுதாப்பொய்யே இந்தமானிடனால் வாலி
காதகனிறந்தானென்றால்க் கதையேது கார்யமேது
வதடாவுலகில்விந்தை எரும்பூறக் கற்குழிந்து
சேதமாமெனுஞ்சொற் போலாம்சிறிதும் வாஸ்தவமிதாமோ.

(——) கிரை.

ஆசிறியவிருத்தம்.

ஆரவாரஞ்செய்துந்துபியை யோரடியினிலடித்துடனெறுக்கிமலைபோல்
அத்திகளையெல்லாங்கிடத்தியதும் வலிமைசேரக் ரமவரக்கர்பதியை
வீரவால்கொடுபிணைத் தொருகக்கமதில்வைத்து விழிபிதுங்கிடநெறுக்கி
வெற்புநேர்தலைகளொடு மண்ணிற்றிடரென்று வீழ்த்தியதுமிகமணக்கும்
தாரைமார்பார்ந்த குசபாரத்தின்குங்குமச் சந்தம்பொருந்திதேலும்
தங்கஙளினத்தார் துலங்குவதுமான இச்சதிர்பெற்ற பலவாலியின்
பாரபாகுக்களினூடுற விமருபுறம்பாய்ந் துடல்வகிர்ந்தராம
பாணமிதிவ்வடியேர்க்கு செயமங்களந்தந்து பாலிக்குமிதுசாதமே.

ஆந்தர நாடிகை.

விருத்தம்.

ஆரணனேசரணஞ்சரணம் ஔதாரியனே சரணஞ்சரண ம்
பூரணனேசரணஞ்சரணம் நற்புண்ணியனே சரணஞ்சரண ம்
காரணனேசரணஞ்சரணம் அக்கராவணனே சரணஞ்சரண ம்
நாரணனேசரணஞ்சரணம் ரகுநாயகனே சரணஞ்சரண ம்;

சிங்காரக்கவி.

சத்துருவாலியைத்தான் வதைத்தென்னை, கஸ்திகணீக்கிக்காத்தனைசாமி
முற்றிலுமெனையாள் முதல்வனேசரணம், உத்தமராமபத்ரனேசரணம்.

(மஹாபார்சன்) மஹாராஜ் வாலியின் வதஜனித ஸந்தோஷபர உசத்த ஞன சுக்கிரீவனது சுபசூசகமங்கள வாக்கியமிது.

(இராவணன்) கோபாவேசத்துடன் குபீரெனவெழுந்து.

விருத்தம்.

அட்டதிக்கதிபர்தம்மை அலறிடவாகவத்தி ற்
கட்டமேபுரிந்துவென்ற கனத்தராவணனுமென்மு ன்
நட்டணையாகமெய்போல் நடித்தகந்தருவரா ன
துட்டநாரியர்தங்கேசந் துலைத்திடச்செய்கின்றேனு ல்.

(மஹாபார்சன்) அஞ்சலிசெய்துசெண்டு, ஓ இராஜாதிராஜ மஹாராஜ லங்கேசுவரா கிருபைசெய்யவேண்டும் கிருபைசெய்யவேண்டும்.

விருத்தம்.

பெண்குலைபுரிந்திடாதீர் பெருமையீதுண்மை யய் யா
நண்பொடுசுக்கிராசாரி நவின்றநிலைனிசமா மோ
பண்புடன்படித்ததல்லாற் பாவைகல்லமென் செய்வா ர்
திண்புயவிலங்கைவேந்தே சினமமர்ந்திருத்தனன் றே

(இராவணன் தன்னுள்) அங்ஙனமாயின் யீதுண்மையாய்த் தானிருத்தல்வேண்டும்.

(வெளிப்படை கருணையுடன்) ஆ யென்னருமை நண்பே, ஆ கவிக்குல சக்கிரவர்த்தி ஆ.

விருத்தம்.

முடிவிழிக்குமு ஞேடியருக்கிய மூன்றுசமுத்திர முந்தா வி
ராணமல்தகர்த்தெழு தினகரவர்ப்பண மூறையினடத்திடு முதல்வீ ரா

சாடிமதித்தெதிர் நாடிதொர்துபி தானவனுக்கெம னானே
தனிநிசாற்றவ சிவபணிமிக்கவ சகவாமுக்கிய சதிர்வாலி
னாடணவக்கா னேடுறுமுச்சிர சூரவரக்கர்கள் சுவிராதன்
சொலுமிவரிற்றதில் அதனினுமிககொடுதுயரிதிலுற்றது சொலவாமோ
கேடுபெருத்தடி யோடிலங்கைப்பதி கேவலமுற்றது கெடலாச்சே
கிலிபுலியைக்கொலும் ஒருகதையொத்தது கெலுதெனுளத்துறுகிறதன் [றே.

இதவுரைது (விருத்தம்.)

விராதனிறந்தான் கரனிறந்தானெனினு மிக்கப்பலம்படைத்த
இராமன்பகையைத் திடவாலி நின்றாற் செயிக்கயிருந்தேனே
பிராணனிழந்தாய்நீயுமெனிற் பின்னிலங்கையாக்குருடன்
இராவணன்யானுய்வதெங் ஙனிராமசரத்திற்கிறைதானே

(இலக்குவன் அடுத்துமொழி) அந்தவாலியைச், சிந்தவதைத்து, வந்தனன் ராமச், சந்திரன்றானே.

(அப்பால்) இராமர் பிரவேசிக்கின்றனர்,

(இராமர்) விருத்தம்.

தம்பிகிஷ்க்கிந்தைதன்னைச் சாற்றிளையராசாயந்த
வம்புசேர் துஷ்டவாலி மகனங்கதனையோநாட்டி
நம்புசுக்கிரீவனுக்கு நன்மணிமகுடஞ்சூட்டி
அம்பரிசனசல்லாப னாக்கிடவேண்டுங்கண்டாய்.

(இலக்குவன்) ஆ, எனதாரியர் நின்ஜன பாரவாகியன்றே.

(சீதை) கலிவிருத்தம்.

சின்னவனிவன் செப்பியதுண்மையே
யென்னில்யானென்ன தினையல்லவோ
என்னிமித்தமிறங் காததென்னவோ
அன்னமேஅடி அனலாங்கையே.

(அனலை) ஆ, ஸாமி ஜானகி,

விருத்தம்.

அரிவையர்க்கரசேயென்ற னாருயிர்ச்சனகமாதே
திரமுனகரனைக்கொன்றும் திரிசிரன்றனையுங்கொன்றும்
உரமுளகோரவீரவுக்கிர வாலியையுங்கொன்றும்
வருவதார்நிமித்தமம்மா வரிசையாய்வழுத்துவாயே.

அந்தரநாடிகை.

(——) திரை.

விருத்தம்.

மடிந்திமெகவான் மகனுடையரசை வல்லராமன் ளிடத்திருந்தும்
அடைந்தசுக்ரீவன் சிதையைத்தேட அரியினத்தை யனுப்பினனுல்.

(இராமர்) நிரம்ப ஸந்தோஷம், நிரம்ப ஸந்தோஷம். தம்பி லக்ஷ்மணு பதில் சமாசாரந் தெரிகிறமட்டிலும் இந்த பிரசிரவண கிரியில் தங்கியிருப்போம் (என்றிருவரும் யெழுந்துசென்றனர்.

(இராவணன் சற்றுலோசித்து) இனி நம்மாலென் செய்யத்தக்கது.

(சிதை களிப்புடன்) அடி ஆப்த்த ஸகி அனலாய் நீயே ஸத்திய பாஷிணீ,

(——) அடுத்ததிரை.

ஆ, சுகனே அதோ பார்க்கவில்லையா.

முன்விருத்தத் தொடர்ச்சி

தொடர்ந்தவானரங்கள் சடாயுவின் றமையன் சொற்படி சானகியிருக்கும்
இடந்தெரிந்தனுமானென்பவனிலங்கைக் கெய்திடக் கடல்கடக்கின்றுன்

(——) திரை. (வசனம்.)

அடடா சார்த்தூல இதுவெல்லாம் நாங்கண்டறிந்து கொண்டபடி மஹாராஜ இலங்கேச்சுவரனிடம் அறிவிக்கச் செல்வோம்.

(இராவணன்) ஓ, நம்மாலனுப்பப்பட் டிருக்கின்ற சுகசார்த்தூலர்களின் சல்லாபமோ,

அகோவகோ நாம் இராமனைக்குறித்தவர்களை அனுப்பி யிருக்கிறதுகூட மறந்துவிட்டேன்.

(சற்று திகைத்து) ஆ, ஜானகி விஷயகாமக் கலக்கத்தையுடைய யென்மனம் காரியவர்த்தமானந் தெரிந்து தெளியும்படி அமைச்சர்களால்க் கட்டிவிட்ட தந்திரோபாயமோ.

[மஹாபார்சன் புன்னகையுடன்] ஓ, இராஜாதிராஜ, மஹாராஜா இன்னுடகம் வேறெதற்காகக் காண்பிக்கலாயிற்று.

[சிதை ஸந்தோஷ அதிசயத்துடன்] அடி ஸகி அனலாய் நாமும் இனி அசோகவனத்தை அடைவோமடி எனெனில்,

என்னைக்குறித் திலங்கைக்கிவர அனுமானென்பவனுல் பேராழி கடக்கப்படுகின்றதென்று கேட்கப்படுகின்ற தன்றே, ஆகையால்ச் சேல்வோம் (என்று சென்றனர்.

[இராவணன்] அங்ஙனமாயின் நமது பரிஜனங்கட்கிவ்விதம் ஆக்ஞாபனம் செய்கின்றேன். ஓ, ஓ பரிஜனங்காள் இவ்விதம் இலங்காதேவிக்கு எடுத்துரைக்க வேண்டும்.

விருத்தம்.

எம்பரிசனங்காள் இலங்கணிக்குரைமின் னேரிகள் மடுக்களிலெங்கு ம்
அம்பினையொழித்து வற்றவைத்திடுமின் அருங்கனி காய்களோடடர்ந் த
கொம்புடைத்தருக் கடமையொடித்திடுமின் கொண்டலின் மண்டலம்வரு [டும்
நம்புரியரண்மேல் முட்களைப்பரப்பி நாட்டுமின்குரங்கு நாடாம ல்.

யானோ மேலும் அவ்வனுமான் பிரவேசித்துவிட்டாலும் அதற்கிடங் கொடாமலும் நமக்கு இதமானது எதேதோ அதுகளை மந்திரிகளிடம் ஆலோசிக்கப் போகின்றேன.

என்று மஹாபார்சனுடன் யெழுந்து சென்றனன்.

ஆறாவதங்கம் முற்றிற்று.

ஏழாவது அங்கம் ஆரம்பம்.

(அப்பால்) சூர்ப்பனகி பிரவேசிக்கின்றனள்.

விருத்தம்

வீரனிராமச்சந்திரன் வெற்றியேகொண்டானென்று ம்
போரினிலரக்கர்மாண்டு போயினரொன்றுங்கண் டு
தேருதலற்றுக்கண்ணீர் சிதறிடத்தொண்டைதுத் து
மாரினிலடித்துக்கொண்டு மங்கைசூர்ப்பனகிவந்தா ள்

(சூர்ப்பனகி)

இராகம் ஆனந்தபைரவி, ஆதிதாளம்.

பல்லவி.

என்செய்வேன் யென்செய்வேன் என்செய்வேனென்செய்வேன்
என்செய்வேனென்செய்வேன் இராவணேசுவரனேநான் (என்

சரணங்கள்.

என்பிறப்பேயென்னண்ணா இராவணேசுவரனே நீ
தன்புயவலிகெட்டுத் தவபலமெல்லாம்விட் டு
கும்பல்தளங்களோடுங் குட்டிநான்விடுத் த
அம்புபட்டிழிந்தாயே அய்யோதெய்வங்கெடுத் த (தேன

துணைகும்பகர்ணனீ தூக்கம்விட்டெழுந்தது ம்
அணைவிடைபெற்றுட னமர்க்களநடந்தது ம்
துணிவாய்மனிதன்கணை தொடுத்திடச்சடைந்தா யே
கணமதிலுயிர்விட்டுக் களத்திலேகிடந்தா யே (என்)

வாருபலத்துடுக்கும் வஞ்சரங்கள்தொடுக்கு ம்
வேகமும்மாயாஜால விளைவுமுடையபா லா
மேகநாதனேநாங்கள் விம்மியழுதுரு க
சாகடனக்கும் லபித்ததுவோடாமரு கா (என்)

கும்பநிகும்பர்கான் குமறிவிழுந்திட் டோ
தெம்பாய்நமனுலகைச் சிதைக்கப்புறப்பட்ட ரோ
வம்பாய்நராந்தகதே வாந்தகரேடும் மை
சம்பாக்கதிர்போலடித்தானோ வெகுசெம் மை (என்)

விருத்தம்

எந்தனுருயிர்ப்பிறப்பே இலங்கேச கும்பகர் ணா
இந்திரஜித்தோடெல்லா இராக்கதவீரரோடு ம்
சொந்தமாம்பலங்கள் யாவுந்தோற்றுவம் மனிதனம்பால்
பந்திபந்தியதாய் மாண்டுபடுகளம் விழுந்திட்டரா ல்

ஆ ஆ இனியென்செய்வேன்.

விருத்தம்

இலங்கையிலனுமானன்று விட்டதீயன்ன யிந்த ப்
பலங்கொளும்சோகவன்னி பற்றியேயெறிக்குதெந்த ன்
கலங்குறுநெஞ்சிலந்தோ கன்னிநானென்ன செய்வே ன்
நலங்கெடச்செய்தராம நரனுகேகோர் தீங்குகாணே ன்

வசனம். ஆ அதிகாயதிரிசிரனே அக்ஷகுமாரனுடன் நீங்களும் சுதாசேஷர்களாக முடிந்தீர்களே என்செய்வேன் இந்தநிர்ப்பாக்கியவதிநல்லதிருக்கட்டும் யதனிப்போது அபலையாயிருந்தாலும் இராக்கத குலக்காளராத்தியராயிருக்கி

ன்ற இவ்விராஜபுத்திரர்க் கென்றூற்கூடமானவரை முயர்ச்சித்துப் பதிற்செ
டுதல் விளைவிக்கின்றேன்.

(எதிர்நோக்கி வசனம்) ஓ வீடணனமைச்சன்சம்பாதிகொல், புட்பக
விமானத்துடன் சுக்கிரீவனதுகூட்டத்தைச் சார்ந்திருக்கின்றனன். இவ
ஞே, தம்பி வீடணர்க்கு பரபக்ஷத்தைச்சாரும்படி துர்ப்போதனைசெய்து இல
ங்கையை நாசஞ்செய்வனன்றோ அவ்வீடணர்க்கிவ்விராஜ்யங் கிடைத்த
தில் எனக்குக்கொஞ்சமேனும் சந்தோடமென்பதேகிடையாது.

(ஏனெனில்) இராக்கத குலவிருத்தமே செய்துவந்ததனால்.

(அப்பால்) சம்பாதி பிரவேசிக்கின்றனன்.

(சம்பாதி) ஆச்சரியத்துடன்.

விருத்தம்

என்சொலராமன் புயபலவீரமெழுதிரைக் கடலின்மேற்சே து
நன்கமைத்ததன் மேனடந்துவந்திலங்கை நகரடைந்திராவணேச்சுரனை
வன்படையோடு வதைபுரிந்தானென் வழுத்துவதவன் பெருங்கருணை
நம்பும்வீடணாக் கிவ்விலங்கைராச்சியத்தை நாடெல்லாம்புகழ நல்கின னே

(பகதத்திலெட்டிநோக்கி) ஓ இவள் சூர்ப்பனகியோ, வியாகுலங்கொ
ண்டவள்போற் காண்கின்றனள்.

விருத்தம்

புண்ணியவிபீடணர்க்குப் பொன்முடிபுனைந்ததில்த ன்
நுண்ணமதழுக்காதுள்ளாரிவள் பொல்லாஙைதை நினைத் தே
கண்ணீர்சொரிய உள்ளங்கலங்கியே கவலைகொண் டு
உண்ணமுபிளைத்தாளிங்கே வருகின்றாள் கேட்கின்றேனு ல்

அடசூர்ப்பனகாய் (விருத்தம்)

தோகைசூர்ப்பனகாய் கண்ணீர்சொர நின்றழுதலே னோ
மேகமேவெற்பீர வெலனவிளங்கிய உந்தன்மே னி
வாசெலாமிகக்குறைந்தாய் மனத்தினிற் கவலைகொண்டா ய்
ஆகஇவ்விதம்நீ நொந்தவாறென்ன அறைகுவா யே

(சூர்ப்பனகி தன்னுள்) விருத்தம்.

என்கிளைமடிந்ததானும் இன்னம்நீ இருந்தலாது ம்
வன்கணுஞ்வீடணன்றான் மாமுடிபுனைந்ததாலு ம்

சங்கடவேதனைத்தி தகதகென்றெறியு தக் தோ
என்கருமேனிவாடி யிளைத்ததிவ் விதமற்றென் னே.

(சூர்ப்பனகி) வெளிப்படை விருத்தம்.

வல்லரக்கர்பலருடன் மன்னனையுங்கொன்ற மணவாளராகவர்பால் வருகத்தூதர், சொல்லவுளமகிழ்ந்துடலம் புளகித்தங்கச் சூடாரிச்சுந்தரியாஞ் சனகிமின்னாள், புல்லமனப்பிரியமுடன் திருச்சேவைக்கிப் போகையில்யானெதிர்ப்படலு மங்குள்ளோர்வந், தொல்லையிலென் றனையருத்தமூக்கிவென்றே உதைத்தோட்டிவிட்டனரா லுருகின்றேனே.

[சம்பாதி] ஆம் நீ மூக்கறுபட்டவளன்றோ ஆகையாற்றான் மூடிக்கப் பட்டாய். ஏன், அங்ஙனமன்றோ சகுன நூல் வல்லோரால்ச் சாற்றப்படுகிறது. எங்ஙனமெனின்.

விருத்தம்.

மூக்குறைச்சிவிதவை யொற்றைப்பாப்பான் செக்கான்மூட்டிவிழுந்தழுமோசைதும்மல்வேம்போர், தாக்குவண்மண்வெட்டி மூசலாதியோடு சப்பாணிகூன்குருடு வேடக்காரன், தீக்குறிசேர்தூமம் கவபாண்டமின்னஞ் சிற்சிலதுமுன்காண்டல் திசைகடற்சூழ், பார்க்குளெந்தக் காரியவாரம்பத் திர்க்கும் பழுதுவரும்பெருந்துயரக் குறியாமென்றே.

ஆகையால் ஞாயமாயுன்னை விலக்கிய விஷயத்தில் உனக்கேன் விதனம் ஆனால் அனுபவமும் சறியாகத்தானே யிருக்கின்றது. என்னெனில்.

விருத்தம்.

உன்னையெதிர்கண்டது மட்டிலும்மின்னாள் ஒருமதியைச்சகோரமென ஆவலோடும், மன்னவராமனைநாடி வரவுமன்னான்வன் சொற்களியம்பிடவும் வளர்த்தசெந்தீ, தன்னிலவள்மூழ்கினள் நீயெதிரேசேர்ந்தாற் சகுனமென்னுமோவறியேன் தணலோன்றாங்கா, தன்னையிவள்மகத்துவம் நீ அறியாய்கொல்லோ அதிதூயானெனராமர்க் கவனீந்தானே.

[சூர்ப்பனகி தன்னுள்] அடடா, சகுன சாஸ்திரமிப்படியென்று முன்னமே தெரிந்திருந்தால் எவ்வளவு அடிமிதி அடைந்தாலும் அவன் யெதிர்ப்பிலேயே செல்வேனே.

[வெளிப்படை] நல்லதிருக்கட்டும் அவ்விராமபிரான் இனிமேல் யென்னயென்னகாரியத்தை இச்சிக்கின்றனர்.

(சம்பாதி) மற்றென்கொல்.

விருத்தம்.

, புலத்தியவங்கிஷத்த னிலங்கேசன்றன்னைப் போரினிற்சிங்கங் கரி ையப்போற்பினந்து. துலைத்துபுகழ்ஜயத்தொடு சீதையைத்தினின்றுஞ் சொ லித்துகொஞ்சன மென்னத்தூக்கிக்கொண்டு,

(சூர்பனகை தனனுள்) ஆம் அவனுக்கனுகூலகாலம் இலங்கேசனுக் கோ பிரதிகூல காலம் என்செய்வது.

(வெளிப்படை) மேற்சொல்லும், மேற்சொல்லும்.

சம்பாதி முன்விருத்தத் தொடர்ச்சி.

மலைத்தலிலாமனத்தனுமான் றனைத்தன்செய்தி வளர்த்தனலிற்குதித்தி டுமுன் பரதன்முன்போய், [illegible]மென் றனுப்புகின்றான் அ[illegible]த்தி க்கேகத்தூயவியானத்தேறத் துறை[illegible]கின்றான்.

(எனஉறைத்தேகினன்)

(சூர்ப்பனகி வசனம்) ஆலோசித்து] நன்று நன்று இப்போது ஓர் யோ சனை வந்தது என்னெனில், இவ்வனுமான் இராமன[illegible]த்தை பரதன் முன்போய்ப் பகருவதற்கு முன்னுடியே யான் தாபத[illegible]டத்துடன் சென்று ஏதேதோ சில அப்பிரியத்தைச்செப்பி அவை[illegible]டனேயே அந்தப்பரத சத்துருக்கனர் இருவரும் மாளும்படி செய்ய[illegible]கின்றேன். அ ங்ஙனமாயின் இராமனாற் கொல்லப்பட்ட என் இரண்டு சகோதரர்களுடைய வதத்திற்கும்பதிலாய் முடியும் நன்று, நன்று அவ்வண்ணமே செய்கின்றேன (என்று சென்றனள்.

(அப்பால்) சத்துருக்கனுடன் பரதன் பிரவேசிக்கின்றனன்.

(பரதன்) தம்பி சத்துருத்து வம்ஸனே,

விருத்தம்.

கானகத்திலாரியர்தங் களத்திரத்தைக் கவர்ந்திட்டகண்டகனைத் துண் டுசெய்ய, யானுரைத்தபடி மகதர்முதல்வரான இராஜாலாங்கட்டிரண்டு வந்தாலென்ன, சேனைகளோடின்னகர் வந்துற்றார்கண்டாய் சீக்கிரத்தில வரவர்க்குச் சிறப்பதாகத், தானமுதலானஉப சாரமெல்லாந்தக்க தக்கபடி செய்வாய் சரியாய்த்தானே.

யானும், அவ்வரசர்களாற் கொண்டு வரப்பட்டிருக்கின்ற காணிக்கைப் பொருள்களை ஆரிய ஸ்ரீராமபாதுகைகளுக்குத் தெரிவித்து பொக்கிஷத்திற் சேர்க்கின்றேன்.

[சத்துருக்கனன்] வசனம். ஆ, அண்ணா, இதுவென்சொல்தங்களுத்திரவுப்படி மன்னர் மன்னர்கட்கு முன்னமே உபசரித்தாய்விட்டதே தாங்களும் அவர்கள்கொண்டுவந்தகாணிக்கைப்பொருள்களை ஆரிய ஸ்ரீ பாதுகைகளுக்கறிவித்து முன்னமே பொக்கிஷத்திற்ச் சேர்த்து மாய்விட்டதே, அங்ஙனமிருக்க மருபடியும் அதனையே எடுத்துரைத்த வகையென்சொல்.

[பரதன்] ஆ, ஞாபகம் வந்தது அடா,

விருத்தம்.

தந்தைதாட்பணிதலை மறவாததனயனை நந்தமையன் றன்னை
எந்தவேளையிற் காண்பனோவென வேங்குறுசிந்தையேன் சித்தம்
நைய்ந்துமுன்பின் செய்கன்மம்யாவையும் ஙனிமறக்கின்றதே யந்தோ
சந்ததமினிமேலுள காரியந்தனைவிடா தியற்றுவாய் தம்பி.

[சத்துருக்னன்] நன்று, நன்று அவ்வண்ணம் நடந்துவருகின்றனன்.
[பரதன்] நினைத்து நினைத்து தினத்துடன், தம்பி சத்துருக்னா.

விருத்தம்.

சிரத்தில்நீலச்சடையு மனையினிற்சீர்பெறும் வெண்மையாம் புதுச்சிறையும், கரத்திலக்கமணியுந் தவத்தினல்கார்நிறத் திருமேனியோர் சோபையும், தரித்துமாவனந் தன்னிலுடசத்தில் சாமிவியாக்கிர சருமத்தலனில்முன், இருத்தல்கண்டதோர் பான்மையென்கண்ணை திர் இன்னமும் விட்டகன்றிடவில்லையே.

[சத்துருக்னன்] வசனம். சோகநீரால் தொண்டை தத்தலிட்டு ஆ, அண்ணா என்செய்யலாம் ஸார்வ பௌமராயிருக்கின்ற நந் தந்தைக்கு முதல்ப்புதல்வராய் மஹானுபாவரா யிருக்கின்ற அவ்விராகவருக்கு தெய்வத்தாலியற்றப்பட்ட அத்தகைய தசையை யார்தான் மறப்பார்கள்.

[பரதன்] சோகவேகத்துடன்.

இராகம் உசேனி (துராகவே திவ்யபாதா தயாநிதே ராமா) என்றமெட்டு.

ரூபகதாளம்.

பல்லவி.

எப்போதுநா னுன்னைக்காண்பேன் யென்னசெய்வேன்ராமா (ஓ, எப்போ)

அனுபல்லவி

ஒப்பில்லாத உத்தமனே உயர்குலசோமா
வெப்புறுகா னத்தில்நீபோய் மெய்வருந்திடலோ ராமா. [எப்]

சரணங்கள்.

கருணைக்கண்ணும் கமலமுகமுங் கண்முன்னேனிற்கிற தே
குருநகையும் பவளவாயும் குறித்தெனையுறுக்கிற தே. [எப்]

பானகமும் போனகமும் பாலுந்துறந்துநீ யோ
கானகத்திற் காய்கிழங்கே கதியாய்த்தின்றலைவா யோ. [எப்]

ஸார்வபௌம சக்ரவர்த்தி ஸாமிநீதனியா யே
வேர்வைபெருக வெயிலிலலைந்தால் மெத்தவருந்துவா யே. [எப்]

வருவேனென்று சொன்னவார்த்தை வந்ததின்றுதா னே
திருமுகத்தை தெரிசிக்கவந் திசைபார்த்திருக்கின்றே னே. [எப்]

விருத்தம்.

சீர்மிகுக்கும்போதனைய வடிகளேனைச் செடிகள்படர் கொடிகள்கெடு பள்ளம்மேடு, கூர்மைமுட்கனிறை கானிலிமங்கடுங்கால் குளிரிரவில் வெயிற்பகலிற்சஞ்சரிப்பு, கார்புளிப்புக்கைப்பு துவர்ப்புக்கடுப்பாம் நற்கனிகாய்பசிக்குணவு சருகுவீழ்ந்து, சேரமுகல்வீசுமடுச் சலமேபானம்திரட் பரல்மேற்படுக்கை ஸர்வஜெகதீசர்க்கே.

ஆ, கஷ்டம், கஷ்டம் (என, சோகத்திற்சொக்கி களைப்புற்றனர்.

[சத்துருக்னன்] ஆ, ஆ அண்ணா ஆ, சுவாஸங் கொள்வீராக இப்படி மயங்கல் ஆதுமா நமதாரிய ஸ்ரீ ராகவருடைய அத்தகைய தெசரபரிணமத்தை மறக்கல் வேண்டுமண்ணா.

[பரதன்] களைப்புவிடுத்து, ஆடா அதை எங்ஙன மறக்கக்கூடும்.

விருத்தம்.

கதிர்மணிமகுடம் அணிகின்றசிரத்திற் களத்தசடாமுடி வகித்தா ன்
சதிர்வெண்பட்டாடைக் கருகமாமிடையிற் றங்கிடவற்கலை தரித்தா ன்
விதுசனல்முகமாய் மேனிமெயுயர்வான் மேடையிலிருக்கின்ற ராம ன்
மதினிஜானகியோடு டசமத்தியில் வனுந்தரத்திருக கின்றான்மன் னோ.

ஆ, கஷ்டங்கஷ்டம் அந்தோவந்தோ இன்னமும் வச்சிரமயமான வென்னிதயம் சுக்கல் சுக்கலாக வெடிக்கப்பட வில்லையே.

சோகசேல் தொண்டை தத்தலிட்டு அந்தோ, அந்தோ.

எ-வது அங்கம்.

கட்டளைக்கலித்துறை.

சொல்லுங்கபட இராக்கதன் வவ்விடச் சுந்தரியாள்
வல்லங்கமாய்த் தன்னுயி ரிறப்பாளன்றி வாழ்ந்திடிலோ
புல்லுந்தமர்களைக் காணாது சீதையம் பொற்கொடியாள்
அல்லும்பகலுங் கண்மூடாது சோகத் தழுந்துவளே,
[சத்துருக்னன்] ஆ, அண்ணா அதற்கென் செய்வது.
தெய்வத்தால் விளைந்ததிருக் கூத்திற்கென்செய்யலாம்
அழுதாலாவதென்னை வேண்டாம் வேண்டாமண்ணா
(பரதன்) ஹா ஹா கஷ்டங் கஷ்டம்.

விருத்தம்.

அரக்கனாலபகறிக்க லாயினள் சீதாதேவி
இருக்கட்டுங் குணவிசேட மெழிலவள் நற்சுபாவப்
பெருக்கத்தை நினைத்திராம பிரான்றீமனனிலு மந்தோ
உருக்கிடு சோகத்தாலே உயிருய்வதைய யந்தானே
(ஆகையால்) யானென்செய்வேன் நிர்ப்பாக்கியனானேனே.
இராகம் ஆனந்தபைரவி, ஆதிதாளம் மாதே சந்திரமதியே என்றமெட்டு.

பல்லவி.

ஐயோ இனியென்செய்குவேன் அற்பபாக்கிய
னானே னெப்படி உய்குவேன்.

அனுபல்லவி

கையையோர்பக்கம்விட்டு மெய்யுணர்வுங்கெட்டு
எய்யாத்துயர்க்கடல்வீழ்ந் துய்யாதுய்கின்றேன்கை
கேசி, கெடுத்தாள்மகனேச், சிறுவனானப்பியாசி, அய்யனேபர
தேசியாவான் (ஐய்யோ)

சரணங்கள்.

நான்குபுதல்வர் பிறந்தோம் வாஞ்சையிருந்து
நாடுகளிக்கச் சிறந்தோம்
ஒன்குமூத்தோனும்புகழ் தாங்குந்தம்பியுங்கர்
நீங்கிவனம்புகவும் பாங்காய்நானிருப்பதும்
நேரோ, வனத்திலலைவாரோ, அவரென்னி னைப்பாரோ, யார்தான்
சகிப்பாரோ, இத்தத்துயரம் (ஐய்)

காணிலலைவதேதிந்து அதிலும்பெண்டைக்
கைகழுவவிட்டதேது.
சானகியையரக்கன் றனென்னஇம்சைசெய்கின்
றனோஇனம்பிறிந்த மானனையாளென்செய்
வாளோ, கண்ணைநனைப்பாளோ, புலம்பித்தவிப்பாளோ, உயிர்
தானிறப்பாளோ, தெரிகிலேனே (ஐப்)

அண்ணா அவளைநினைத்து நினைத்துருகி
அங்கமிகவுமிளைத்து.
கண்ணாலேநீருதிர்த்து புண்ணாய்நெஞ்சப்பதைத்து
உண்ணாடிகாய்கிழங்கும் உண்ணாதுயிருயிர்த்
தோடி, எங்கெலாஞ்சென்றுதேடி, காணமல்மிகவாடி, குப்புறம
ண்மேற் சாடிவிழுவாரன்றோ [ஐய]

[சத்துருக்கனன்] அண்ணா அண்ணா இதுவென்கொல் இதுவென்
கொல்.

(சத்துருக்கனன்) கலிவிருத்தம்.

இந்தமாதுயரேனிதிலென் பயன்
வந்தராஜாக்கு வரிசை செய்தனம்
தந்தம் தேயததிர்க்கவர்கள் சார்ந்திட
சிந்தைதேர்ந்து செலவுகொடுத்திடர்.

(பரதன் சற்றுலோசித்து) இதுவென்கொல் இவனதுபிரவிர்த்தி வேறுயிருக்கின்றது.

ஞ்...யாவிட்பொழுது சத்துருசங்கார நிமித்தம் இவ்வரசர்களோடு ஆரியஸ்ரீராகவஸன்னிதானம் போகப்போகின்றேன்.

(சத்துருக்கனன்) ஓ ஆரியஸ்ரீராமபிரானுடைய சமாசாரம் கேட்கப்படவில்லையோ.

(பரதன்) அஃதென்னை,

(சத்துருக்கனன்) அண்ணா வேடராஜனுகிய குகனால் கடிதம் ஒன்றனுப்பப்பட்டிருக்கின்றது.

(பரதன்) ஓ ஆம் குகராஜனிடம் முன்னமே யான்மொழிந்திருக்கின்றேனல்லவோ அவனதுவனசஞ்சாரகிங்கரரால் தண்டகாரணயத்தில் இராமனது பிரவிர்த்தியை அடிக்கடிதெரிந்து வந்தறிவிக்குப்படி உரைத்திருக்கின்றேன்.

(அவ்வண்ணமே)

விருத்தம்.

வன்னமானென்று மாயமாய் ரூபவசனத்தால் ராமனேமயக் [illegible] இ
சின்னவன் றனையும் மருண்டிடச்செய்து செலுத்திடத் தூரத்திற்சீதை
தன்னையோரரக்கன் சந்நியாசிபோல்ச் சார்ந்தபகரித்தனனென் [illegible]று
முன்னமேகுகன்தெரிந்து வந்தெனக்கு [illegible] மொழிக்[illegible]

நன்று நன்று இப்பொழுது வந்திருக்கிற நிருபத்தில் [illegible]
னென்ன வரையப்பட்டிருக்கின்றன அடா [illegible]
ற்கு சலங்காட்டி யிருக்கின்றதா.

(சத்துருக்கனன்.) ஆம் ஆம் அண்ணா [illegible] யிருக்கிறது.

(பரதர்) ஆ, தம்பி, அங்ஙனமாயின மேல்விலாசத்தை யெடுத்த முறை யே படிப்பாயாக.

(சத்துருக்கனன்) நன்று நன்று அங்ஙனமே ஆகட்டும்.

[மேல்விலாசம் வருமாறு]

வெண்பா.

க்ஷேமமிவை ஸ்ரீராமன்செ[illegible] [illegible]
பூமியிலயோத்தியெனு [illegible] ம
மிகவரசுகாக்கின்ற மெய்ப்பரதர்க்கன் [illegible] க்
குகன்வர விடுத்ததாகும்.

[பரதன்] நிரம்ப ஸந்தோஷம், நிரம்ப ஸந்தோஷம். தம்பி சத்துருக் னுவம்ஸனு பத்திரிகையை விரித்துப் படிப்பாயாக.

[சத்துருக்னன்] உத்தரவுப்படி படிக்கின்றேனண்ணா.

கடித ஸமாசாரம் வருமாறு.

கட்டளைக்கலித்துறை.

ஒருதம்பிமட்டிற் சகாயக ராமர்க் குதவியதாய்
நிருபர்கள்யாரும் வரத்தேவை யில்லைஇன் னோரத்திலே
க்ருதலர்தம் மையதஞ்செய்து தேவியைக் கைக்கொளவே
பரவைபோற்றுனையன்சுக்கிரீவ னீட்டப்புப் பலித்ததுவே.

ஆகையால் அரசர்களை யதாஸ்த் தானத்தை அடையச் செய்வீர்கள் என்றே.

[பரதன்] ஆ, சுக்கிரீவனென்பவன் யாவன் அவனது சகாயம் எவ்வாறு கிடைத்ததோ.

[சத்துருக்னன் வசனம்.] அண்ணா, சுக்கிரீவனென்பவன் கிட்கிந்தைக்கதிபதியாயும் கவிக்குல சக்கிரவர்த்தியாயு மிருக்கின்றான் வாலியென்பவனது

கனிஷ்டன், நமதாரிய ஸ்ரீராகவரால் அவ்வாலியைக்கொன்று அவ்விராஜ்யத்தில் சுக்கிரீவனை நாட்டிவைத்த விதத்தினுற் கிடைத்ததாம். அவனது ஸஹாயம், அண்ணு கேட்கவேண்டும் அடியில் வரையப்பட்டிருக்கின்ற கடித ஸமாசாரச் சுருக்கம்.

[பாதன்] அஃதெப்படி.

சத்துருக்னன் விருத்தம்.

கொடியவாலியைச் சமரினிற்கடிந்து கோதண்டராமனவ்வரசை
அடிமைபூண்ட சுக்ரீவனுக்களித்து மவனுடைக்குரக்கு நற்படையால்
படியிற்றேவியி னிருப்பிடந்தெரிந்து படையொடும் வான்றிரைபரவும்
கடலிலோரணை இட்டதன்வழியாய் கருதலனுரை விடங்கண்டான்
என்றே.

[பாதன்] சற்றுலோசித்து ஆ, தம்பி சத்துருக்னு இது இப்படி சம்பவிக்ககூடுமே, ஏனெனில்.

யான்முன் ஒருகால் ஒருவர்க்கொருவர் அதிவியப்புடன் நெருங்கி உறைபாடிக்கொண்ட கேசரர்களின் வார்த்தை செவியரர்ந்தனன்.

(சத்துருக்னன்) அஃதென்ன சமாசாரம் அணாயின்.

பாதன் விருத்தம்

ஆபத்திலுங் காரியந்தனிற் கண்ணுமென வரைகுவாதுபோல்
காரியந்தனிலகத்தனி லிகையாளன் கைப்பன் காவலன் சதமகபதியே
சருடையிராஜ குமாரனெல்லையிலி செவனற்றிறந்ததிற் சிறிதும்
வீரிவபாதுதன் செல்வமென மருகான் விதனத்தைமுழுவதும் விட்டான்,
[என்றே.

(சத்துருக்னன் வசனம்.) ஆ, அண்ணு அங்ஙனமாயின் இருக்கலாம். ஏனெனில், அவ்விந்திர குமாரனல்லவோ வாலி அதனுலிருக்கக்கூடும் ஆனுல் அந்தச் சுக்ரீவன் யாதுகாரியத்தை அபேக்ஷித்துக்கொண்டிருக்கின்றுனே அதை அறிந்திலம்.

(பாதன்.) தம்பி சத்துருக்னு அவர்களிடத்தில் இரும்பவும் ஓர் சமாசாரங் கேட்கலாயிற்று.

(சத்துருக்னன்) அதுவென்கொல் அதையும் அருளல்வேண்டு மண்ணு

பாதன் விருத்தம்.

காதினுற்கேட்டதில்லை கண்ணினுற்கண்டதில்லை
மோதலையெழும்பிவிண்ணில் முட்டிவீழ்ந்திரைச்சல்செய் ப

காதசாகரத்திநூரு யோசனைதூரங்காட்டு ம்
சேதுபந்தனமாமென்ன செப்புவேம்விந்தைவிந் தை

என்றே.

(சத்துருக்னன்.) ஆ அண்ணா அங்ஙனமாயின் அப்பால் கவிக்குலங்கட்கும், இராக்கதர்கட்கும் கலகப்பிரவிர்த்தியும்நடக்குமென்று நினைக்கிறேன். ஏனெனில்.

விருத்தம்.

சண்டாணிலமன்றோர்தினக் தன்னிற்கிளம்பிட வே
கண்டேன்கெடுகுறியோவெனக் கனசாந்தியைக்கரு தி
தண்டாமரைதாரான்ராம சகபங்களன்றன் னை
விண்டாரியகுருவின்முனர் விளத்தேனவருரைத்தா ர்.

(பரதர்) அவருரைத்த தெவ்விதம் அதை யெடுத்துரைப்பாய்.

சத்துருக்னன் விருத்தம்.

கடிமானகரிலங்கைதனிற் கவிராக்கதர்கலக ம்
இடலாலதுகாண்பாண்மிக இச்சைகொடுசெல்வா ன்
திடவேகவினைதைசேயிரு சிறைக்காலெழூசிறப்பா ம்
கெடுவாதமிதன்றூமுறைக் கின்றூர்முனியென்று ன்.

ஆகையால் உத்பாதக சாந்திசெய்ய வேண்டுமென்ற பயத்தை ஒழித்துவிடச்சொல் என்றே.

(———) திரை.

கொச்சகம்.

நன்மனத்தார்பொன்றிடவும் நன்மைகெடுமிலா த்
துன்மனத்தார்வென்றிடவுஞ் சோகஞ்சகிப்பே னோ
என்மனத்தாதங்கம்விட இறவான்கிரியடைந் து
தன்மநற்றவம்புரிந்து தனிநாட்கழிப்பேனு ல்.

[பரதன்] கேட்டு ஆ உயித்தஞ்செய்பவருடைய செயாபஜயத்தைப்பற்றிச்சொல்லிக்கொண்டு இவனாரொருத்திவிருத்தாபசிபோற் காணப்படுகின்றனள்.

[அப்பால்] விருத்ததாபசி வேடத்துடன் சூர்ப்பனகி பிரவேசிக்கின்றனள்.

[சூர்ப்பனகி] நன்மனத்தார் பொன்றிடவும்) என்ற கொச்சகம் திரும்பப்படிக்கின்றனள்.

[பரதர்] வசனம். தம்பி சத்துருக்னா இவன் யார், எங்கிருந்து வருகின்றனன், எனவினவுக. ஒருக்கால் இவன்மூலமாவழியாய் நம் ஆரிய ஸ்ரீராகவருடைய உயுத்தப்பிரவிர்த்தியைத் தெரிந்துகொள்ளவுங்கூடுமே.

[சத்துருக்கனன்] ஆம் ஆம் அண்ணா அவ்விதமே வினவுகின்றேன். சூர்ப்பனகியைக்குறித்து.

அடுக்குமொழி.

ஓ தவமுடையாளே நவனுதிநீயார்
எவணிருந்திப்போ திவண்வருகின்றாய்.
[சூர்ப்பனகி] சத்துருக்கனனை நோக்கி பீதியுடன்

(தன்னுள்) வஞ்சி விருத்தம்.

இன்னமும் நடுங்கின்ற தென்றனத்தை க்
கன்னநாசியைக் கண்டித்த காதக ன்
முன்னமென் வரவோர்ந்து முற்று மோ
மன்னமோசம திங்கும்வந் துற்றனன்.

நன்றாய்க்கவனித்துப்பார்த்து. வசனம்.

ஓ இவனிவர்குவனன்று, பின்னையோவெனில் சரிசமான ரூபசம்பன்னனான அவனது தம்பி சத்துருக்னனாகயிருத்தல் வேண்டும் [காதநால் நாசியைபத் தடவிக்கொண்டு] யான் புனைந்துகொண்டிருக்கின்ற இந்த தாபசிவேடத்திற்குறிய மாசி திரமாயிருக்கின்றது.

விருத்தம்.

... குமிககுமானுக்குக் கிளர்த்துமென் சொல்விலெலந் த
வாக்கியங்களிலுஞ் சோர்வுவந்திடா துறைப்பேனா ல்
மூக்கிலாவிகாரமந்த மொழிகளில் வருமோ வா ரா
யோக்கியமாகும் வண்ணம்உசிதமா யுறைப்பேன்மன் னே

வெளிப்படை.

அப்பா நின்றால் யாதுங்கழ்த்தலாயிற்று.

[சத்துருக்கனன்] நீ யார் எங்கிருந்துவருகின்றாயெனக்கேட்கின்றேன் (ஏது காதானமுண்டோ.

[சூர்ப்பனகி தன்னுள்] காதையுந் தடவிக்கொண்டு) இது வேடத்தாலேற்பட்ட காதெனத்தெரிந்து கொள்வானோ ஏதேது அது ஒருக்காலும் இல்லை (யானோ இராவணனுக்குத்தங்கை இலங்கைத்தீவிலிருந்து வருகின்றேன்.

(சூர்ப்பனகை வெளிப்படை.) பெருமூச்செறிந்து சோகபாசாங்குடன்)

யான், யாரோ ஒருத்தி எங்கிருந்தோ வருகின்றேனென்றறிந்துகொள்.

(பரதர்) சொன்னான்.

விருத்தம்.

நிச்சியந்தவ மடந்தைஇவளேயாம் நிசாசரர்த ம்
பக்ஷபாதினி யன்றன்றபடுதுயர் மிகப்படர்ந் தே
இக்ஷணமலிளங்குகின்றாள் இதனுலென் றமயனுக் கோ
லச்சுமணனுக்கோ நன்மையினை மென்றெண்ணுகின்றே ன்.

[இதுவன்றி, வேறுகாரணத்தால்த்தான் இவள்வருத்தமடைகின்றனளோ

(அடி தாபசி நின்னது திருநாமமென்னே.

(சூர்ப்பனகி) சொன்னாள்.

கலிவிருத்தம்.

காதுமூக்குங் கணத்தினிற் கத்தியா ற்
சேதமானதர்க் கெழிற்சிறந் தெவ ன்
எதுவானவனோ அவன் போலிவ ன்
ஓதுமல்ல உருவந் தழைக்கிற ன்

ஆகையினாலிவன் பரதனாயிருத்தல் வேண்டும், இவனை சத்துருக்கனனும் அடுத்துக்கொண்டிருப்பதால்.

(வெளிப்படை) ஓ மன்னர்பிரானே என்னுடை ..

சத்துருக்கனன் அறிக்குமொழி.

உன்னது நாமம், என்னென்று சாவும், இன்னவென்றனுக்கு, முன்னவன்றானே.

(சூர்ப்பனகி) சொன்னாள்.

விருத்தம்.

ஜென்மத்தால் வந்தபேரோ திகழ்சூர்ப்பனகி யென்பாரென்
கன்மத்தால்வந்தபேரோ கவின்முகவிரூபி யென்பா ர்
தன்மநற்றவத்தோர் ரிசியமூகமாஞ் சைலவாச ர்
நன்மைப்பர்ன்னுதினி யென்றெனையவர் நவில்வர்மா தோ

எப்படி, புலத்தியமுனியின் குலத்தில்வந்தவளென் றென்னிடத்தில் மிகத்தயையொடு யென்னையவர் மானிக்கின்றார்களோ அம்முனிவரால் பர்ன்னுதியென அழைக்கப்படுவேன்.

(பரதர்) அங்கனமாயின் நின்வாய்மொழிப்படி, புலஸ்திய குலத்திற்பிறந்தவளென்றாலும் நின்னால் ரிசியமூகஇரியினின்று மின்னம் அடையலாச்சுடகொல்.

(சூர்ப்பணகி) ஆம், ஆம்,

(சத்துருக்கனன்.) அல்லது நீ அரக்கிகொல்.

(சூர்ப்பணகி தன்னுள்.) அடட, இதைப்பற்றி ஒருவரிடங்கேட்கவேண்டுமோ.

(வெளிப்படை) கோபத்துடன் புலத்தியகுலத்திலுதித்தால் அரக்கியாகத் தானிருத்தல் வேண்டுமோ.

(பரதன்) தம்பி சத்துருக்கனு இத்தாபசி கோபிக்கப்பட வேண்டியவளன்று,ஏனெனில்,விச்சிரவணன் முதலானவர் அரக்கர்களாக இல்லையல்லவா.

ஆகையால்த்தான்,

[சூர்ப்பணகிதன்னுள் தொடர்மொழி.]

வீடணனென்ற விருதாப்பயலும் கூடமெரக்கர் குலத்தனன்று.

வெளிப்படை தொடர்மொழி.

வேந்தாபிரானால் விளக்கிவார்த்தை பாந்தமதாகும் பழுதொன்றின்றே.

பரதன் தொடர்மொழி.

மிக்காகுலத்தில் வெதும்பினன்போலும்
துக்காக்லார்த்தையாய்த் துலங்குவதென்னே.

[சூர்ப்பணகி.] அங்கனமாயின் அறையக்கேண்மோ, சற்றே செவிசாற்றுக.

(நன்மனத்தார்பொன்றிடவும்) மென்றகொச்சகம் திரும்பவுறைத்தனள்.

(சத்துருக்கனன் வாக்கியம்) மீருனக்கு நன்மனத்தர் யாருனக்குத்துன்மனத்தர்.

சூர்ப்பணகி தன்னுள் வாக்கியம்.

மாவரக்கர் நன்மனத்தார் வானரர்தாம் துன்மனத்தார்

வெளிப்படை வாக்கியம்.

வானரர்கணன்மனத்தார் வல்லரக்கர் துன்மனத்தர்.

(பரதர் தன்னுள் சந்தேகத்துடன்) நமது ஆரிய ஸ்ரீராமன் பக்கத்தைச்சார்ந்தவானரர்பொன்றினரென்று வருத்தப்படுகின்றவன்போற் காணப்படுகின்றனள்.

(வெளிப்படை) அடி பர்ணுதினீ ரிசியமூகிகிரியில் வசிக்கின்றோ னென்று வழுத்தினையல்லவோ, அங்ஙனமாயின் அவர்களின் சலசப்பிறவிர்த்தியும் அவ்விடத்திற்றானே.

(சூர்ப்பனகி.) அன்றன்று அது இலங்கைத்தீவிலேயே.

(பரதர்) சறி சறி இருக்கலாம்.

(சத்துருக்கனன்) அம்மணி அதனை எவ்வாறறிந்தனை.

(சூர்ப்பனகி.) அப்பா கிட்கிந்தையென்ற குகைபொன்று சேன்வியுண்டுகொலோ.

(சத்துருக்கனன்.) ஆம், வாலியென்பவனுடைய ஆள்கைக்குட்பட்டிருக்கின்றது.

(சூர்ப்பனகி.) இப்போது வாலியென்பவனே இல்லையே.

விருத்தம்.

ரகுகுலராமனாலே எமபுரத்தேவப் பட்டான்
பிருபலவாலியென்போன் மேவியவ்விராச்சியத்தில்.
புகழுடன்சுக்கிரீவன்றான் பொன்முடி சூடப்பெற்றான்
சுகமதாயவனே அத்தைத்துரைத்தனஞ் செய்கின்றனால்.

(சத்துருக்கனன்) ஆ இதுவும் அறிந்தவிஷயந்தான்.

(சூர்ப்பனகி) விருத்தம்.

அக்குகையில் ருமையென்பாள் சக்களத்தியுடனைறியழுதுவிம்மி
அங்கினியில்விழுந்திறந்த விதந்தனைக்கண்ணுற்று துயரானாளாகி
துக்கமிகுவாநரி யென்சகிசங்கு கன்னியெனச் சொல்லுபபோதன்
மிக்கவிதனந்தொடென்பாற் கிரிரிசியமூகமதின் மேவினாளால்

(அவளேயென்க் கரிவித்தனள்.

[பரதன்] வேகத்துடன். ருமையென்பவள் யார்.

(சூர்ப்பனகி) பிலவங்கராஜனான சுக்கிரீவனது பட்ட மகிஷி.

(சத்துருக்னன்) பரபரப்புடன். ஆனல், சுக்கிரீவன்றான் அரக்கர்களால் அடிபடப்பட்டானன்கொல்.

(சூர்ப்பனகி) சோகநீரால் தொண்டை தத்தலிட்டு. ஐயா, அவன்மட்டிலுமன்று.

விருத்தம்.

அவனுடையமைச்சன் அனுமனென்பவன்
கவனவாலியின் காள்முளையங்க த

யுலமன்னவனும் உற்றதனங்களு ம்
சலமதாகித் தரணிவீழ்ந்தன ர்.

சத்துருக்கனன் கலிவிருத்தம்.

மாதவத்தொளிர் மாயணிமங்கையர் ன்
ஞதினீ அவண் நாடிடுத்தம ர்
கோதிலாரகு குலக்குமாரர்த ஞ்
சேதியென்ன தெரிந்ததுசெப்புவா ய்.

[சூர்ப்பனகி] அடட எவருடைய செய்தியும் மற்றெவ்விதமாய் மூடியும் மகாமாயாவிகளான கொடிய இராக்கதர்களின் கொடுமையால் எவராலும் ஜீவிப்பார்கள்.

(சத்துருக்னன்) கண்ணீருப்பெருக்குடன் ஆனல், அவ்வாசகர் மேவந்தரால் அவர்களிடத்தும் அவ்விதமாய் வியஞ்செய்யார் பட்டதுசொல்.

(சூர்ப்பனகி) ஆனல் கேட்கக்கடவீர்.

சூர்ப்பனகி விருத்த .

மாவிலங்கையினிற் போனெதெரிந்த மகிபராகனல் நாங்கள்
வலிடப்பெற் றயோத்தியினின்று மிங்குனக் கூவிய பொழுது
மேவினமென்ன வஞ்சராக்கதர் நரவேடத்தார் விழிதுகிலவளை
தாவிராமனை இளவலையப் படித்தான் செய்தார

(பரத சத்துருக்னன்) பரபரப்புடன். எப்படிச்செய்தார்கள், எப்படிச் செய்தார்கள்.

சூர்ப்பனகி தன்னுள் விருத்தம்.

என்னுடைத்தமையனுன இராவணேச்சுவரனைக்கும் ப
கர்னனேயெவன் கொன்ருன்கொல் அவனுடைக்கனிஷ்டரா ன
பன்னுமிப்பாலரான பரதசத்துருக்னர்தம் மை
துன்னுமென்வாசகத்தாலுயிரினைத் துலைக்கின்றேன ல்.

(வெளிப்படை.) முன்விருத்தத்தொடர். காமபிச்சமதாய்.

(பரதர்) ஆ, ஆ ராமச்சந்திரா, ஆ தம்பி லக்ஷ்மணு.

இராகம் நாதநாமக்கிரியை ஏகதாளம்.

பல்லவி.

இதுவென்னமாபாதகம் அய்யோ எவ்வாறெழியுந்தேசதகம்.

அனுபல்லவி.

சதிர்பெரும்ராகவரோ, அடா, தம்பிலக்ஷ்மணநீ ரோ
மதிமோசம்போயினீரோ, உமையும், வன்குலைசெய்தனரோ. (இது)

சரணங்கள்.

புலிகள்பசுத்தோல்போர்த்தி, வந்தாற், போலரக்கரோமாத்தி, உம்மை
குலைசெய்தாரெனச்சாற்றில், என்ன, கூறுவேன்சேத்திரேத்தி. (இது)

வீராதிவீரர்களே, உம்மை, வெல்வாருண்டோபாருளே, போரிலெவரும்
நேரினில்நில்லார்களே, அந்த, நீசரால்மாண்டீர்களே (இது)

தமர்போலுமையடுத்தார், ஆங்குஞ், சமயத்துயிர்குடித்தார் அல்லால்
சமர்தொடுத்தாரெதிர்த்தார், உமையுஞ், சதிசெய்தவர்கெடுத்தார் (இது)

(என்றலறி துக்கக்கடலாழ்ந்து சொக்கி மயங்கினன்.

(சத்துருக்னன்) ஆ, ஆ தமயன்மீர் இராக்கதரின் வஞ்சனையால் இருவர்களும் மாண்டீர்கொல். அந்தோ, அந்தோ (என வெட்டிச்சாய்த்த மரம் போல் அலறிவிழுந்து அதிகளைப்புற்றனன்.

(சூர்ப்பனகி) ஆ, ஆ கஷ்டங்கஷ்டம் நீவிர் யாவர்கொலோ நுங்கட்கப் பிரியசொற்களோ இப்படிச் செப்பினேன் சற்று தெளியக்கடவீர், சற்று தெளியக்கடவீர்.

(பாதசத்துருக்னர்) களைப்புவிடுத்து ஆ, அவ்விருவர்க்கும் நேர் யெழுத்தா யிசைந்ததுகொல்.

(சூர்ப்பனகி) ஆம், ஆம், அன்றியும் பந்தி பந்தி யடுக்கடுக்காய்த்தானே என் சகிர்த்துக்களான சுக்கிரீவாதிகளும் சரபாணிகளான இராக்கதவீரரால் (என்ற சொன்னபடியே) சொல்லுகிறேன். நீவிர்யாவர்கொலோ அதை நிகழ்த்துமின்.

(பரதர்) மேலுள்ளது விளம்பல்வேண்டுமோ, யாருமறியத்தக்கதுதானே அவர்களும் அதற்குசெய்யப்பட்டார்கள் என்றே.

(சத்துருக்கனன்) அடி பர்ணுநினீ,

இங்காரக்கவி.

மன்னியவெனக்குமுன், வந்துதித்திட்டவர்
புன்னுமபிதானமும், பரதனென்பா ல்

யாநேனு, இவர்க்கனுசன் சத்துருக்கனனென்பவன்.

(சூர்ப்பனகி) கைம்புமனக்கேதத்தை நடிப்பித்துக்கொண்டு.

ஆ, ஆ, அப்படியா அவ்விராமலக்ஷ்மணர்க்கு சோதரர்களா, அந்தோ அந்தோ ஆ கெட்டேனே கெட்டேனே.

கொச்சகம்.

உள்ளதேயானாலும் மொருவருக்குச்சோகமொழி
விள்ளுவதனர்கமென்றே மேலோர்மொழி யறிந்தும்
துள்ளித்துடிக்கவைக்குஞ் சொல்லைநம்பாற் சொல்லிமிக
நன்னுதைக்குழிக்கி நாற்றங்கலா வேனோ.

(எனக்கண்மாரி பொழிகின்றனள்.

(பரதர்) அடி உனக்கென்னடி பாதகம், நீ புகலாவிடினும் மற்றுயாவரேனும் எங்கட்கியம் புவரன்றோ. இதற்கேன்றுக்கிக்கின்றாய்.

(சூர்ப்பனகி) கஷ்டங் கஷ்டம் சங்குகர்ணி சாற்றியமொழியை உங்கள் சம்பந்தம் உணராதுரைத்தேன்.

[சத்துருக்கனன்] அது கிரக்க.

வாக்கியம்.

சீதாதேவி செய்தியெவ்வாறோ
ஓதாய்தகத்தி னுண்டொடியாளே.

(சூர்ப்பனகி) அன்னசெய்தியை என்னென்றுரைப்பேன்.

விருத்தம்.

பொல்லாதகிசாசு லபகரித்துப்புன்சிறையிட்டென் புணர்மாதாவ பென்று, சொல்லாதவார்த்தை பலசொல்லப்பட்டாள் துயரத்தி னைதை யுணர்த்தப்பட்டாள், நல்லாளச்சானகியாள் துடிதுடித்து நாதாவென் றலறினளாய் நான்றுகொண்டாள், கொல்லாதின்றிக்குயரோடு பிழைவிட்டாள் கொடும்பாவமிதுவும் நம்பாற்கூறினேனே.

(சத்துருக்னன்) சோகத்துடன். ஆ இதுவும் இப்படி முடிந்ததுகொல்.

இராகம் கமாஸ் ரூபகதாளம் (எந்துகுவாடலகோடோ) என்ற மெட்டு.

பல்லவி

இப்படியோ முடிவுகாலம் யீதென்னகோலம் [இப்]

அநுபல்லவி

ஒப்பில்லாத கதிர்க்குலத்திக் கேரய்விதெனுலம் [இப்]

சரணங்கள்

செகவீரர்கானகத்திற் சென்றுநடக்கவும் — அந்த
மகன்பிரிந்ததுயரானினைந்து மன்னனிறக்கவும் — [இப்]
வனம்புகுந்தும்மனையைப்பிரிந்தும் வாடித்தவிக்கவும் — இங்கே
இனமும்நீங்காப்பெருந்துயரம் எம்மையலிக்கவும் — [இப்]
பெண்டைச்சதித்தகண்டகன்றன் பெருங்கபடத்தி — பற்றி
மண்டியெறிக்கராமலக்ஷ்மணர் மாளவுஞ்சகத்தில் — [இப்]

அந்தோ, அந்தோ என்னன்னை ஜானகி நீயும் இறந்தனையா.
கஷ்டம், கஷ்டம்.

விருத்தம்.

கானேநடப்பதர்க் கண்ணெளிலாரியர் காண்பித்தபடி வற்க — லை
கானேவகித்து மூன்றுலகவேயுளம் னைந்திட்ட மாமிமுதலோ — ர்
தீனேரவதனைகெடறிந்தாற்சகிப்பரோ தோரொனக் கருதி — நீ
தானேவிடுத்தனை கொல்வாளுனை வன்மையிற்றுயே இதென்னகஷ்ட — ம்.

(பரதன்) ஆ, ஜானகிப்பிராட்டி, நீ மா பாக்கியவதியாகின்றாய் யா தொரு குலோசிதமான காரியத்தை அனுசரித்தனை ஆகலால் பாக்கியவதியெ ன்பதற்குச் சந்தேகம் யாது. யானோ இப்பொழு தின்னபடி செய்யவேணு மென்பதரியாது மயங்குகின்றேன்.

(சத்துருக்னன, வசனம். அண்ணா யீதறியாததா, கடும்போரினிற்கருதலனைக் கனைத்தினிற் கண்டகண்ட துண்டதுண்டஞ் செய்து காலனூர்க்கனுப் பைத்து வைரசாந்தி செய்துகொள்ள வேண்டுவது தான் செய்யவேண்டிய காரியம்.

(சூர்ப்பனகி) தன்னுள்.' இது முன்னமே முடிந்தாய்விட்டது.

(வெளிப்படை) விருத்தம.

உதவிசளியில்லாதாலே உமக்கிதுமார்க்கமின — றே
விதனமேகொண்டாரின்ன விதமுயல்வதுவேயுக்த — ம்
இதுவனறியமற்றதொவ்வா தென்றுகாண்பித்தல்போ — லே
மதுமுகச்சனகிகொண்ட வழியனுசரித்தல்நன — றே.

(பரதன்) ஹா, ஹா கஷ்டத்தின்மேற் கஷ்டம்.

விருத்தம்.

வருடமொருபதினான்கும் நிறைவதாசக வழிபார்த்துநின்றனன் அன் னோர்களெல்லாம், ஒருகண்மோருகமதுவாய்க் கழித்தேனந்த உத்தமராகவ ன்வரவுக் கவதியின்றே, புரவலராகவன்வருவா னவன்றன்றிவ்விய பொ ற்பதாம்புயத்தரிசிப் போமென்றெண்ணுட், டிராமுடனேனகிமொசைத் தரு வேறிற்றுத்திகனெ வீழ்ந்திட்டதிப்போ தென்செய்வேனே.

(எனச் சோகமுற்றுச் சொக்கிவிழுந்தனர்.

(சூர்ப்பனகி தன்னுள்.) அடடா பரதா அது உனக்கு மட்டுமன்று. எனக்குமப்படியே மனதிற்குகந்த வனப்பினனென்றவன் மீதுள்ள எனதாசைத்தரு, அடியோடே வேறற்று வீழ்ந்தது அன்றியும் எனது மூக்கு முலைகளை வழித்துக்கொண்டு விழுந்தது.

(வெளிப்படை) ஆ பரதா வேண்டாம், வேண்டாம் ஆயாசமொழித்தாசுவாசங் கொள்ளக்கடவாய், இங்ஙன மயங்கிடுவதில் இராமனைக் காணவுமுண்டோ.

(சத்துருக்னன்) ஆசா சோகத்துடன்.

விருத்தம்.

சரதருதுவிந்துவென அந்தமுகமுந்தண்ணளினமென்னவன் னயநங்களுங்
கருடமணிபாலொளிரு தம்பமங்கிராய்க்காணும் ரமணீயமுளபுய மலைகளுங்
திருவினதுக்ரபந்தும மோங்குகமலச்சி றெழிலிலங்குமச் செவடிகளும்
பரிவொடுமெதுபடிரகு பதியைக்காணப் பாவியேர்க்கினியேத பாவமன் றோ.

இராகம் உசேனி ஆதிதாளம்.

பல்லவி

இனியெப்படிக்காண்பேன் ரகுபதியை
இனியெப்படிக்காண்பேன்.

அநுபல்லவி

வனம்போய்வருவேனென்று வாக்களித்தேகினான்
வாராமற்றிப்போகிறானென்பதால் [இனி]

சரணங்கள்

வருவான்வருவானென்று வழிபார்த்திருந்தேனே
வருடமோர்பதினான்கு மலைபோற்கடந்தேனே
திருமுகம்வனுக்குத் தெரிசிக்கப்பாக்கியம்
சிறிதுமில்லாமற்போச்சுதே யோக்கியம் [இனி]

கண்ணும்முகமுமவன் கனிவாயும்புன்னகையும்
கமலேயவாரதையும் மார்புமிருகையும்
எண்ணியெண்ணியுருகி யேங்கித்தவிக்கின்றேனே
எங்குபோய்ப்பார்ப்பேனே அவனைநானே. [இனி]

மடமடென்றடவியில் வழிக்கொண்டோர்ப்பே ரே
வருடம்பலசென்றாலும் வருவானென்றிருப்பே ரே
உடல்விட்டுயிர்பறந் தொழிக்தாற்புவிமீ து
உண்டோஒருபோதுங் காண்பதே து (இனி)

(எனச்சோகத்திற்றுடித்து மோகத்தையடைந்தனன்.

[சூர்ப்பனகை தன்னுள்] அடட, யானவனது சர்வாங்கமுங் கண்டிருந்தும், என்மனோரதம் நிறைவேறிற்றில்லையே.

(வெளிப்படை) அடடா குழந்தாய் சத்துருக்ந எதிப்படி மயங்குகின்றாய், சற்றுசுவாஸம் பெற்றிவனையுந் தெளியச்செய்வாய், பின்னர் இந்தப் பெருஞ்சோகத்திற்கு பரிகாரவிஷயம் சிந்திக்கலாகும்.

(பரதர்) மூர்ச்சைதெளிந்து.

விருத்தம்.

பாதுகையளித்தே னிதனைமுன்வைத்துப் பாரினையாளுதி பர தா
தாதைசொற்படிக்கிக் கானகத்திருப்பேன் சம்வச்சரம் பதினான்கு ம்
மீதுனக்காக மேதினிபுரப்பேன் விதனையே ...ான் றுலாளனைக ள்
போதனைசொலிக்கான் புகுந்திரோமன் போந்திலனெனிலார் பொருப்பா ர்

(வசனம்.) ஹா ஹா இந்தப்பெருந்துயரம் எவ்வாறு சகிக்கலாம் மற்றெதினாற்றணிது தணியப்போகின்றது, இனிபொருத்தல்முடியாது. ஆகையால் யானிப்போதக்கினியிற் பிரவேசிக்கப்போகின்றேன்.

(சத்துருக்கன் மூர்ச்சைதெளிந்து) இந்தச்சோகத்தி மாற்றப்பாவகமே வேண்டும்.

பரதனைக்குறித்தஞ்சலிசெய்துகொண்டு.

வெண்பா.

எவ்விதமிலக்குவனார் ராமபிரானைத் தொடர்ந்தார்
அவ்விதம்யானும் மையனுசரித்து—————செவ்வை
அனற்குளித் துமைத்தொடர்வேன் அண்ணாவிதனம்
இனிப்பொருக்க வொண்ணாதிசைந்து.

(சூர்ப்பனகை.) களிப்புடன் (தன்னுள்) மற்று யாது நிமித்தம் இத்தனை எனது பிரயிர்த்திகளும்.

(வெளிப்படை) பரதா, நன்குறைத்தனை, நின்னால்நன்றாகநிர்த்தாரணை செய்யலாயிற்று.

(சூர்ப்பனகை.) குழந்தாய் சத்துருக்ந நின்னது துக்கபரிகாரசிந்தனையிக்கவும் நன்று நன்று.

யானுமே, இனி தவத்தை உத்தேசித்துச் செல்கின்றவனாயில்லை, பின்னையோவெனில்.

கலிவிருத்தம்.

சுக்கிரீவன் முதலினோர் கூட்டரா ல்
ஒக்கமாண்டன ரென்பதி லுற்றிடு ந்
துக்கசாந்திக் குமைப்பின் ளெடர்ந்துயா ன்
அக்கினிக்குளழுந்தி யிறப்பனு ல்.

(பரதர்) ஆ ஆ அடா தம்பி லட்க்ஷமணு.

விருத்தம்.

மன்னவராகவரிதய மனுசரித்துவன் கண்ணைத்தந்தையின்சொல் மனஞ்சகித்தும், என்னனையின்வாயடக்கிடாமலுந் தீங்கியற்றிமென் தனையை முடிக்காமலுந்தான், கன்னகர்விட்டரணியத்தில் ராமன்செல்ல நாடியவன் பின்றொடர்ந்தாயது போற்போரில், இன்னுயிர்போய்ச்சுவர்க்கமவனுடனே சென்றுயிப்படியார் பக்திசெய்வாரெங்குமுண்டோ.

(ஆகையால் தம்பிலெட்சுமணு நீ தன்னியனுனாய்.
யானோ அப்படிக்கில்லாமற் போகினேன்.

இராகம் காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி

தன்னியனுனாய், தம்பிலெக்ஷ்மணுநீ தன்னியனுனாய்.

அநுபல்லவி

முன்னவனுக்கன்பாய் முக்கியபக்தனுன ய் (தன்)

சரணங்கள்

பிறந்தாலாரியர்தம் பின்றொடர்வ தே
சிறந்ததாமென்றே தெரிந்தாய்செகமீ தே (தன்)

சிறுவனுயிருந்துந் தீங்கானஞ்சென்று ய்
பரமன்ராகவர்க்குப் பணிவிடையில் நின்று ய் (தன்)

எந்தக்காலத்தும் ராமானுசப்த ம்
சொந்தமாயடைந்தாய் துகள்தவிர்ந்தாய்நித ம் (தன்)

(ஆ அந்தோ, அந்தோ அடா தம்பிசத்துருக்ன.

ஸ்ரீ விருத்தம்.

தனயரிலாக்குறைதவிர்த்துத் தழைக்கவைத்தார் சாந்தேசர் அசகுலத்தைத்தயவினலே, விணையினதுகெடுதியினற் புதல்வறற்றகொறங் குலமாயாசாது மேலென்செய்வேன்,

(ஆ ஆ கஷ்டங் கஷ்டம் நிர்ப்பாக்கியனேனே.)

ஸ்ரீ மனமுறகிராமன்முதல் மூன்றுமைந்தர்வைவிதியாற் பொன்றினரால் தூரியனை, நனிமகனீயாவதுயிரோடிருந்து நம்பிதுர்க்குத்திருப்திசெய்தர்ப்பணநன்னீரால்.

இராகம் சாவேரி ஆதிதாளம்.

பல்லவி

நீயாகிலுமிங்கே சிவனேடிருந்து நீர்க்கடன்தீர்ப்பாய்.

அநுபல்லவி.

தாயார்கள்வருந் தாமலேமிகத்தேற்றி
தளர்ச்சியுறுமவி ராச்சியத்தையுங்காப்பாற்றி
தைரியம்விடாமல் சமர்முதுகிடாமல்
சத்துருத்துவம்சனு நங்குலத்திற்கு வசைகொடாமல் (நீயாகி)

சரணங்கள்

மாசுமருவிலாத சூரியகுலமி து
வரிசைமிகுத்துவளர்ந் தேமிவருகின்ற து
ராசன்தயரதர்க்கு நான்காமைந்தொன்ப து
நான்காமைந்தனென்றசொல் நவில்மட்டுமோவ து
நாட்டினில்விளங்க நனியிசையிலங் க
நன்றுபாலோகமதிற் சென்றதந்தைபேர்துலங் க (நீயாகி)

மூத்ததமயனேடுன் வாய்த்ததமயன்மாண் டு
மொய்குழற்சீதையும் முடிந்தாளென்றுளேயீண்டு
ஏற்றதமையனானே இறக்கின்றேன்துயர்பூண்டு
இப்படிநீயும்நொந்தால் யெமக்குக்கதியெங்குண்டு
கண்ணிலெண்ணியழாமல் யென்சொலும்வழாம ல்
இங்கனமிறந்தவர்கள் பொங்குசூகில்விழாம ல் (நீயாகி)

(சூர்ப்பனகை தன்னுள்) ஓ ஓ சத்துருக்கனன் சாகானோ இதுவென் சொல், என்மனோரதம் இவ்வளவில்த்தான் பலிக்குமோ.

[வெளிப்படை.] ஆ கண்மணி பரதா, நின்னிலும் இவனுக்குச் சோக பாரம் அதிகமாயிருக்கின்றது, ஆகையால் இந்த நின்னதுவார்த்தை வீணாய் பலிக்குமென்றே நினைக்கின்றேன்.

[சத்துருக்கனன் கண்ணீர்ப்பெருக்குடன்.] ஆ அந்தோ அந்தோ கஷ்டங் கஷ்டம் அண்ணா.

சத்துருக்கனன் விருத்தம்.

உகந்திடுமைந்தர்நீவிர் உயிரிறந்தொழிந்த பின்ன ர்
சகந்தனில்வல்லுயிராய்த் தழைப்பதும் யானோபால ன்
தருந்ததர்ப்பணந்தான் செய்யச்சக்தனோ மாண்டவர்க்கு ம்
மிருந்தாற்றிருப்தியாங் கொலிம்மொழி விளம்பலா மோ

(ஹா ஹா கஷ்டங்கஷ்டம் பாவியேன் விதியையன்றி மற்றியாரைநோவது.

இராகம் சகனா ஆதிதாளம்.

பல்லவி.

இந்தப்பாதகத்திற்காளாவேனோ இதுவும்விதியோ யீஸ்வரா

அநுபல்லவி.

இந்திரனைக்காத்த வெந்தையிறக்கப்பின்ன ர்
இருவரிறக்கமுன்னர் ஒருவர்இறக்கவரு ம் (இந்த)

சரணங்கள்.

மலையைமலையல்லாமல் மண்ணாங்கட்டிசுமக் க
மாட்டுமோகேட்டவர்க்கு வருமேமிகநகைக் க
சிலைமேவுராமன்முதல் மூவருமேயிறக் க
சிறியனோஅரசாய் வீற்றிருப்பதய்யோமிக் க (இந்த)

அருந்ததிபுகழ்கின்ற கற்பலங்காரியா ன
அன்னைஜானகியோடி ராமலக்குவன்போ ன
திருந்துகதியைநானுஞ் சென்றடையாமலி ன
தீயனைப்போலுயிர் கொண்டிருக்கின்றபெரிகா ன (இந்த)

எழிலார்க்கதிர்க்குலத்தில் யான்பிறக்காம லே
இருந்தாலெந்தழுலை பாழாகும்புவிமே லே
பழியாமபகீர்த்திக் காளானனயெனைப்போ லே
பாவிகளாருமில்லை அய்யய்யோஆசையா லே (இந்த)

(வசனம்.) இனியென்னயிருப்பு யானிப்பொழுதே என்றமயனுருக்கு முன்னுலேயே அனற்பிரவேசஞ்செய்யப் போகின்றேன்.

[சூர்ப்பணகை] அங்ஙனமாயின் குழந்தாய் சத்துருக்னு காய்ந்த இந்த னங்களுடன் அக்கினிகுண்டந் தயார்செய்வாயாக, சீக்கிறம் சீக்கிறம்.

[பரதர்] ஹா ஹா கஷ்டத்தின்மேற் கஷ்டம்.

விருத்தம்.

கோசலைத்தாயே கொதித்திடும்பெருஞ்சோ கோததிசிரந்தநங் குளித்தா ய
ஆசந்திரார்க்கமவயசப் பங்கத்தழுந்தினை க் கைகைமாபா வி
மாசிலிரண்டுமைந்தரைப்பெற்றும் நீமனத்துயர் சுமித்திரைவகித்தா ய்
நாசகாரணிநீ மந்தராயுனக்கு நரகமேநிலையமாம் காரு ம்

அந்தோ அந்தோ ஆ ஆ ஐயா தசரதரே, சுரேசனுக்காப்த்த சிநேகிதரே வெகுகாலமாய் மெய்வருந்தித்தொடுத்த தபோவர்த்தனங்களால்.

கொச்சகம்.

குலத்தைவிருத்திசெய்திர் குமாரர்களைப்பெற்றெடுத் து
நிலத்திற்புகழடைந்தீர் நிர்னிமித்தமாய்க்கானி ல்
பலத்தஒருராமனைநீர் பார்த்தனுப்பிவிட்டதனா ல்
துலைத்துவிட்டீரப்போதே தோதகத்திற்குன்னானி த்.

[சத்துருக்னன்] ஆ அண்ணு அழுதுபுலம்பினுலாவதென்கொல்.

விருத்தம்.

துக்கமேனினியென்னண்ணு இந்தனச்சுமைகளோடு ம்
அக்கினிதயார்செய்திட்டேன் ஆசாரவாயிறன்னி ல்.

(எனச்சென்று மருபடியும் பிரவேசித்து.)

உக்கிரசடாசடாத்காரத்தொடும் ஓங்கிமிக்க ச்
சுகசௌவுலர்ந்த காஷ்டத்தோடனற் சொலிக்குதந் தோ.

(பரதர்) நிரம்பசந்தோஷம் நிரம்பசந்தோஷம்.

[சூர்ப்பணகி தன்னுள்] இன்னிலும் எனக்கதிகசந்தோஷம்.

[வெளிப்படை] அங்ஙனமாயின், கண்மணி பரதா, எழுந்திடலாம், கொழுந்தணற் குழிக்குள் விழுந்திடலாம்.

[பரதர்.] அடி தாபஸி.

விருத்தம்.

தாபசிகளினகண்பன் சதிர்குலகுரு நீங்கின்றி க்
காவலாய்த்தொன்றுதொட்டுக் காத்தவன்காலமூன்று ம்
மேவிநன்குணர்வோன் மேலோன்மெய்யருந்ததி சல்லாபன்
பாவனவசிஷ்டட்டர்பாலிப் பரதவாக்கியம் பகர்வா ய்

[சூர்ப்பனகி தன்னுள்.] ஆனந்தத்துடன் ஸரி ஸரி இந்தக்காரணத்தால் எனக்கு தீய்க்குழிப்பாய்தலினின்றும் தப்பித்துக்கொள்ள வழியுண்டாச்சுது.

[வெளிப்படை] என்ன என்ன எப்படி அய்யா.

[பரதர்] அடி தாபசி இதோ அடியில்வருமாறு யெடுத்துரைத்தல்வேண்டும்.

விருத்தம்.

இன்றுமுதல்மனுவெனத்தாய் முனியேநீவிர் எங்களிராச்சியத்தை இனிதாளவேண்டும், கன்றிழந்தபசுக்களெனக் கதறிடாமற்கண்பார்த் தெந்தாயர்களைக்காத்தல்வேண்டும், நன்றுபெருஞ் செந்தணலிற் மூழ்குவேற்கு நற்கதியுந்திருவாக்கால் நவிலல்வேண்டும, பின்றொடர்வேன்ராமனைச் சத்துருக்னனேடு பெருந்துயருக்காற்ரு பெற்றியாலே. [என் றே]

[சூர்ப்பனகி தன்னுள்] என்மனோரதம் பலித்ததுப்போலாம்.

[வெளிப்படை] இதனை அறிவிக்கவேண்டிய தென்னயிருக்கின்றது எல்லாம் அவரே அறிந்துகொள்ளத் தகாததா.

(என நிவலஞ் சுற்றுகின்றனள்.

[சத்துருக்கனன்.] ஆ பர்ணதினி ஆரியஸ்ரீ பரதாக்ஞையை குருவிடம் அதிசீக்கிரம் போயறிவிக்கவேண்டும்.

[சூர்ப்பனகி தன்னுள்] இதில் இவர்களது விவசாயம் பெலப்படுத்திவிடப்பட்டது. இனி இதில் நின்றும்விலகார்கள், ஆகையால் யானிங்கிருந்து இது விஷயமாய் செய்யவேண்டுங்காரியம் யாதொன்றுமில்லை.

[வெளிப்படை] உங்களுத்திரவைக் கடக்கல்முடியுமா அதினுமிப்பேர்க்கொத்த துர்த்தெசையில் உல்லிங்கனஞ் செய்தலுசிதமா.

நன்று நன்று அங்ஙனமே ஆகட்டும், (என்று சென்றனள்.

இருவரும் தீவலஞ் சுற்றுகின்றனர்.

திரை (——) விருத்தம்.

தாதைசொற்படியே திவனத்தினிலே தாள்வலித்திட நடந்தேகு ம்
காதலனைத்தொடர்ந்த சீதையென்குமரி கனிதுயரெப்படிச் சகிப்பா ள்
வேதையுற்றிடுவ ளெனத்தவிக்கின்றேன் வெவ்விடிவீழ்ந்திட்டவிதமா ய்
பேதையையரக்கன் கவர்ந்தனனெனவோர் பேச்சுமுண்டாகுது பெரிதாய்.

அடுத்ததிரை (——)

அடே அடே சிவபூசாதுரந்தர சிநேகிதசிகாமணே இலங்கேசுவரா.

விருத்தம்.

யீசபூசைவிலாசமிக்கவ ராவணேசுவரயாதுகொல் நிர்ச்சங்கையா ய்
நேசனென்மகளான சீதையைநீயும் வவ்வினையென் சொல்வே ன்
ஹா ஹா கஷ்டங் கஷ்டம ஆ என்னருமைக்கண்மணியே,
ஆசையென் மகளாருமாற்றிடு மவ்வனத்திற் றசமு க
ஈசன்வவ்விட நீபுலப்புவைநீடு மென்மனம் நீறு தே.

சத்துருக்கனன் அகவல்.

மான்றிகழ்கண்ணெழில் வாய்ந்தஜான கி
கான்றுகொண்டா ருயிர்நசித்த செய்தி யை
ஆன்றவரிவர்கேட் டறிந்திலர்கொல் லோ.

[பரதர்] இங்ஙனம் வந்த இந்தப்பெரியவரிடத்தில் சங்கதியொன்று ஞ் சொல்லாமல் அக்கினியில்ப் பிரவேசித்தலுசிதமன்று.

(என்று வரவையெதிர் பார்த்திருக்கின்றனர்.)

(பிரவேசித்த ஜனகர்.) அகோ அகோ இதுவென்கொல்.

விருத்தம்.

பம்பியபொறிச்சிகை படர்ந்ததீயி தே
தெம்பியினுடன்வல மெழுந்துசுற்றி யே
வெம்பியயனத்தனாய் வீழ்பவன்போன்றன ன்
நம்பியாம்பரதனும் நாட்டமெதென்னை யே.

[என விரைந்து வந்தனர்]

இருவரும் ஆரிய ஜனகமாமனே வந்தனந்தந்தனம்.

வெண்பா.

வந்தனமீதை வருஞ்சரமத்திலிடும்
வந்தினமாய்க் கைக்கொள்க மாமனே—செந்தமிழில்
யாமிறக்க வெண்ணமுற்றோம் இராக்கதர்வெம்மாயையினுல்
ராமலக்ருவர் மூடிந்தாராம்.

(ஜனகர்) ஆ, கெட்டேன் கெட்டேன் குடிமோசம் போச்சுது அந்தோ அந்தோ நிர்பாக்கியனுனேனே, (என மயங்கி களைப்புற்றனர்)

(இருவரும்) ஆ ஆ, ஆசுவாஸம்பெருவீராக ஆரியரோ ஆசுவாசம் பெருவீராக.

(ஜனகராஜன்) ஆயாசந்தெளிந்து, ஹா ஹா கஷ்டங்கஷ்டம்,

இராகம் ஆனந்தபைரவி தாளம் திரிசிறசாப்பு
அப்பா-நீ-சேரநம்மி தினி ஜனனீ கம்புகளனே துபதாம்புஜவுலன்
என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கால விபரீத மிதோ கன்ம கதியோ
கட்டமிதெலாங் காண்காணவிதியோ

அநுபல்லவி.

ஞாலமதிற் சாலவுமென் தன்மங்கள் தவமெலாம்
வேலையிற் காயங்கரைத்தாற்போலாச்சுதேபொல்லாக் (கால)

சரணங்கள்.

என்னருமைப்பெண்மணிகள் கண்ணான கண்மணிகள்
கன்னியர் சிதையூர் மிளாக ள்
பன்னுமவர் மங்கிலியப் பாக்கிய சிலாக்கிய ர்
என்னப் பெரியோர் வாக்கியம் யெல்லாம் பொய்யாச்சே யோக்கியம் (கால)

திரஜய சூரர்களை தீர்க்காயுள் வீரர்க ளை
மாரனைநேர் குமாரர்க ளை
சிருடனிக்கன்னியர்கள் சேரப்பெருவதொன் றே
ஆரியருரைத்ததும் அவத்தமாச்சுதே இன்றே (கால)

அந்தோ அந்தோ

விருத்தம்.

முனிவரர்யாக்ஞவல்க்கர் மொழிந்தருளுபதேசத்தா ல்
மனவுபாதிகளடங்கி மாதிரத்துவம்பெற்றேன்யா ன்
எனினுமோர் பக்கலென்னை இத்துயர்வதைக்குதந் தோ
இனியென்ன அழுகையந்தோ எழுதிடாபொறிக்கென்செய்வே ன்.

(சத்துருக்கன்) என்தாய் சீதாப்பிராட்டியும் (என்ற சொன்னவே, சோக நீரால் தொண்டை தத்தவிட்டு நின்றனன்).

(ஜனகர்) எப்படி அவளும், போய்விட்டனள் கொல், அங்ஙனமாயின் எனக்குச்சந்தோடந்தான், அங்ஙனமாயினும் என்னிதயம் தவிக்கின்றது,

(சத்துருக்கனன்) ஐயா,, அதிலும் அவள் நான்றுகொண்டுயிர் நசித்தனளாம்,

(ஜனகர்) ஆ, அடட. (கண்ணீர்ப்பெருக்குடன்) என்மகட்கோ இப்படிச்சம்பவித்தது ஆ, கஷ்டங்கஷ்டம்,

விருத்தம்.

செல்வியென்கண்ணே திகழ்தளவத்தின் சீரரும்பினைநிகர்செவ்வாய்ப்
பல்வரியொழுங்கும் குருநகையொளியும் பகர்மணிச்சுட்டியும் நுதலு ம்
அல்லெனுங்கூந்தலசைவதும் நின்வதனும்புயம் நினைத்திடில்மனதை க்
கொல்லுகின்றது சோகசந்தாபங்கூறுவதென்னினிக்கோதா ய்

ஆ ஆ கண்மணி என்னருமைப்பெண்மணி ஆ ஜானகி யிதென் கொல் இவ்விதம் கோர்ந்தது

இன்னமும்,

விருத்தம்,

பணிமேலெடுத்த புவிராசருக்கொர் பதியாமெனக்குமிருக ண்
மணிபோலுதித்த மயிலேவனத்து மணவாளனொப்ப கடைகொ ண்
டணிமேவுபத்ம பதம்நோவமெத்த வனியாயகிருத்திய நிருத ர்
தணியாதிழைத்த துயரால்விளைத்து தனிநீயிறக்க விதி யோ

சாலேபிறந்தென் மார்பேவளர்ந்து தாழாதிருந்து நிதமு ம்
பாலேஅருந்து வாயாய்வளர்ந்த பாரோகடர்க்கு வனமே ற்
காலேவருந்த நீயோநடந்து கனிகாயருந்தி யமனை ப்
போலேவிளைத்து தியார்நெருங்கு போதாவிநீத்தல் விதி யே

மலர்மேனடக்க நனிஞேபதத்தின் வனமேனடக்க வமுத ம்
பலகால்சவைத்த பண்வாயிலைத்த பலமேசுவைக்க வமை யா
விலைமேவுபட்டின் அணிகூர்நுசிப்பின் விரிசிறைசுற்ற வம ளி
நிலமேலுறக்க மிதுகூர்நினக்கு நிலமேகிடக்க விதி யோ.

நம்பிக்கையுடன் ஷை.

விருத்தம்.

சனியாமரக்கர் சிறைமேலிருக்குந் தனியாளறிந்து பரத ன
பனியாழியொத்த படையோடெதிர்த்து பகையோனைவென்று வர வே
முனிவோர்செல்ல முயல்வானறிந்து மூவாதுமேவுகளியா ய்
மனமேகுளிர்ந்த தருவீண்முடிந்த வாறோ நதெய்வ கதி யே.

ஆகையாலிப்போது கலிவிருத்தம்.

தக்கவென்மகடானிறந்திட்டதில்
மிக்கவென்மனம் வேகுதென்செய்குவேன்
துக்கவெந்தழற் சூட்டினுமூட்டுவிய்
வக்கினிக்கிடங் கார்ந்திடவேண்டுமால்

(பரதர் வசனம்) நான்தான் முதன் முதலிற்றீப்பாயவேண்டியவன் வனெ னில் ஜடாவறக்கலைதாரியாய் ஆரியஸ்ரீ ராகவருடைய ஆகமனத்தை யெதிர் பார்த்திருந்து மனோரதம் பலியாமல் வீணாய்முடிந்தவன் ஆகையால்தான்,

(ஜனகசத்துருக்கனர்) கண்ணீர்ப்பெருக்குடன் ஆ ஆ இவருடைய இம்மொழி அதிகருணமாய்க் கேட்கப்படுகின்றது.

(திரை)

இராகம் பியாகு சோட்டு ஏகதாளம்.

பல்லவி

நில்லு நில்லு பரதா நீள் சத்திய விரத

அனுபல்லவி.

கொல்லுஞ் செந்தணலினி ற்
குதிக்க முயன்றிடாதே (நில்லு)

சரணங்கள்

கொடியதசமுகனை உயிர்படக்கடைந் து
கோதைவைதேகியைத் தானடைந்து ராமன்

பாடிவர்கள் முனிவர்கள் புகழ்ந்திட ஒருக்காலே
பைம்பொன்விமானத்தேறி வந்தனனுகையாலே (நில்லு)

தசமுகன் மகனுடல் மலையெனவீ ழ
செருச்செய்த இளவலுஞ் சேனையுஞ்சூழ ராமன்
வையயறு தேவர்கள் மலர்நிறைகொட் டு
மழையுடனுடுதோவந்தான் பராபரப்பினைவிட்டு (நில்லு)

கருணையில்முழுகிய ஒளிர்முகசோம ன்
கதிர்மறையவன்புகழ் ஆயிராமன் மிக
வரிசையாயெவர்களுந் துதிமொழியின் ள
வந்தான்வந்தானிதோ ஆனந்தமேகொள்ள (நில்லு)

(சத்ருக்கனன்) நோக்கி ஓ இவனோர் கொல் ஓர் வன்னியன்பால் மூத்தவேர்க்கு ஓர் வன்னியன்பால் மொழிகின்றனன்,

(ஜனகர்) களிப்புடன் அடா அடா குழந்தாய் பரதா அவசரப்படாதே அவசரப்படாதே மங்களவார்த்தை கேட்கப்படுகின்றதன்றோ,

(பரதர்) நோக்கி ஆ ஆ இது நம்பத்தக்கதன்று,

விருத்தம்.

விசனவார்த்தைமுன் புலனறியாது விளக்கினேனெனப்பரதவித்தா ன்
அதனைமாற்றிட வேண்டுமென்றிவ்விதம் அத்தவமடந்தையே நம்பா ல்
சகிர்கொள்வன்னியினுருவமே புனைந்து சார்ந்தனள்சாற்றுவதனிச ய்
இதனையான்நம்பியிருக்கொளுதைய எனக்குமப்பாக்கியமே தே.

ஆசையது நம்பத்தக்கதன்று என விறைவாய் அக்கினிகலஞ்சுற்று கின்றனன்

(வெடுக்கென்று திரையினை ஒதுக்கிக்கொண்டு) அவசரமாய் வன்னியுருவத்தனை அனுமார் பிரவேசித்து [ஆ ஆ பரதா பரதா வேண்டாம் வேண்டாம் இதுவென்கொல் குடிகேட்டினைப் புரிகின்றாய் நில்லு நில்லென [ப ணைந்தோடிவந்திருகரங்களைப் பிடித்துத் தடுத்து நிறுத்திக்கொண்டு] பரத கேட்கக்கடவாய்,

விருத்தம்.

மாவலவரக்கர்படைத்தலைப்பிரகஸ்தன் மருவுயிர்நீலனேவதைத்தா ன்
தாவருமிந்த்ரசித்தனுருடலைத் தரணியிலிலக்குவன்சதைத்தா ன்
ராவணதும்பகர்ன்னனைவதைத்த ராகவன்செயத்திருதன் ...
மேவியதென்னச்சனகிபை அடைந்து விணிவுட்ன்வந்தனன்மெய் ...

[வசனம்] ஆகையால் பரதா சீதாலக்ஷ்மணஸமேதரான இராமபிரானுடைய நல்வரவில் நின்றுண்டாகின்ற திவ்வியானந்தப்பெருக்கை அனுபவிக்கப்போகின்றாய் பரதா அவசரப்படாதே

(பரதர் வசனம்) ஆஆ அந்தோ அந்தோ இதுவென்கொல் அசம்பாவிதம் மகா மாயாரணையுக்கப் பிரசித்தர்களான இராக்கதக்கடலை வற்றடித்து இராமர் திரும்பவும் வருதலென்றால் எங்ஙனங்கூடும் ஏதேது

(அநுமார்) ஆ பரதா தெய்வபலங்கொண்ட இராமபிரானிடத்தில் அரக்கரின் மாயாபலமென்செய்யும் [யெப்படியெனிற் செப்புகின்றேன் கேள்

கட்டளைக்கலிப்பா.

ஈடவஞ்சனையேயுருவானவன் கண்டம்பத்துளகண்டகன் றன்மகன்
தவதனர்க்குச்சுரர்க்கினற்செய்பவன் சதிதருமிந்த்ரஜித்தெனும்ராக்கதன்
பவனவீரசம்புங்கவர்தங்கள்பால் போரில்மிக்கமெலிந்துழுதற்சமர்
வல்புஜங்கமபாசமேவிட கொடியிற்பொன்றினர்போலுமயங்கினர்.

(சத்துருக்கனன்) ஆ ஸரி ஸரி இதனால்தான் பிறரார்க்கேள்விகொண்ட அந்ததாபசீ அடிமூலந்தெரியாமல் நம்பால்வந்தவிதம்உரைத்தனனென்றே நினைக்கின்றேன்

(பரதர்) அப்பால்மேற்சொல்லுங்காணும்

விருத்தம்.

அதன்பிறகுயுத்தந்தன்னி லவ்விருத்திரனைக்கொன்ற
சதமகனேவலாலேதார்ங்கன் சடுதிசார்ந்தான்

(பரதர்) தம்பி சத்துருக்கனு குலகுருவசிஷ்டரால் கூறப்பட்டதென்றுரைத்தனையன்றே அதற்கு ஒத்திருக்கின்றது

(அநுமார்) மேலே விருத்தத்துடன்

ஈதியுடன்வரவில்பாம்பின் கட்டொழிந்திடத்தெளிந்து
நதிகொண்டுசமரிலவென்றி கொண்டனர்ரகுகுலத்தார்

(சத்துருக்கனன்) ஸரி ஸரி பின்னே எப்படியாகும் ஸாக்ஷாத்கருடபகவானேவந்துவிட்டாரென்றால் ஸர்ப்பமயங்களானசரங்களுஜ்ஜீவிக்குமா,

(பரதர்) ஸந்தோஷத்துடன் அடே தம்பி சத்துருக்கனு

கொச்சகம்.

இந்திரனேர்காரியத்தை யெண்ணியிருக்கின்றானென்
தாசொற்கேட்ட தென்றேன் அக்காரியமறிந்தேன்

சந்ததமுந்தொந்தனைசெய் தசகண்டன்றன்னுயிரை
சுந்தரவிராகவரீற் குறைகொள்ளவேண்டுமென் றே.

(தம்பி சத்துருக்கனு அதனுல்தான் ஆரியஸ்ரீ ராகவருடையரக்ஷணையின் பொருட்டு இந்திரனுல் பக்ஷிராஜனை அதிவிரைவில் அனுப்பிவைக்கலாச்சுது

(ஜனகர்) அத்தியானந்தபரிதனாய்

விருத்தம்.

எமதுசோகம்மாற்றிவைத்தீர் இறந்தவெங்கட்குயிரளித்தீர்
உமதுதிருப்பேரொடுத்துரைப்பீர் ஒளியாதோங்கும்வன்னியரோ

(அனுமார்)

சுமதிசுக்ரீவர்க்கமைச்சன் தூயவளியின்சுதனனுமான்
அமர்செய்ராவணாந்தகன்றன் ஆக்ஞைப்படியிங்குற்றனன்யான்

(ஜனகர்) சந்தோஷத்துடன்.

அகவல்.

எற்குக்குருவரர் யாக்ஞியவல்க்கர்தாம்
நற்குருஅவற்கோர் ஞாயிருஅவனுழி
கற்றனையாகுமால் சருதுசற்குருவாய்
நற்றவநீயுமால் கான்றொழும்நண்பனே.

(சத்துருக்கனன்) வியப்புடன் [வசனம்] இலங்கைச்சண்டையில் சேனைப்பெருக்குடன்எல்லாமந்திரிகளுடனும் சுக்ரீவன் அரக்கராலதருசெய்யப்பெற்றனென்று பர்ணுதினியென்னுந்தாபசி பகர்ந்தனளன்றே அங்ஙனமிருக்க அனுமாரென்பவர் உயிரோடிருப்பதெங்ஙனம்.

(அனுமார்) அதனார்கொல்பர்ணுதினியென்னுந்தாபசி, அவள் ஆர்கொல்

(சத்துருக்கனன்) யாதாமொருத்தி சுக்ரீவாதிகளுக்குச் சுகிர்த்தாய் ரிசியமூககிரியில் வசிக்கின்றவளோ, அவளேயாம்

(அனுமார்). தன்னுள்

அகவல்.

இப்படிபொருத்தியு மில்லையங்ஙனமே
அப்படியிருக்கத் தப்புரைத்தவரார். (சற்றுலோசித்து)
பாதகிஅரக்கிநூர்ப் பனகையாமிவளே
நீதிசம்பாதியும் நிகழ்த்தினரன்றே

கொடியராவணனும் கும்பகர்னனுமே
மடிந்ததிலிலங்கை மாராச்சியத்தை
வன்மைவிபீஷணன் வகித்திருந்தான்
துள்ளித்துடிக்கின்ற சோகமனத்தினன்
சகிக்கமாட்டாமற் றளம்புருனென்றார்
ஆதலாலவனே அழுக்காறுகொண்டு
சாதுவரந்தவசி போலெதிர்சார்ந்து
பரதசத்துருக்னனைப் பரிந்துயிர்மாய்க்க
கருதினனென்றே கருத்தோர்கின்றேன்.

(வெளிப்படை) விருத்தம்.

அவடசக்கிரீவன் றங்கை அரக்கிசூர்ப்பனகையாகும்
குவிபுயவரக்கர்வேந்தைக் கொன்றிட்டரகுவீரர்மேல்
தவிமனப்பொருண்மையோடும் தவமடால்லான்போலும்
கவடமாயுமைச்சதிக்கக் கருதிவந்தனளாங்கண்டீர்.

(பரதர்) ஆம் ஆம் அப்படியிருக்கலாம். அவளே தான் புலத்திய குலத்திற்சனித்தவளென்று புகன்றனளன்றோ ஆகையால் இவ்வுரை பொருத்தமாகத்தானிருக்கின்றது

(அனுமார்) தென்றிசையைநோக்கி [வசனம்] ஓ பரதா சத்துருக்கனா இங்ஙனம் நோக்குக, நோக்குக, கொடுங்கோலரக்கர் குலசக்ரவர்த்தியாம் இலங்கேசுரனைக் கூற்றுலகேற்றிவைத்த ஜயதுங்க சிங்க ஸ்ரீ ராமச்சந்திரன் சீதாலக்ஷ்மணசமேதராய் பரிஜனங்களுடன் புட்பகாரூடராய் மேகமண்டலமீர்க்கமாய் இதோ சமீபத்திற்றென்படுகின்றனர்

ஓ பரதா இதோ திவ்வியதெரிசனம்காண்க்

இராகம் கல்யாணி ரூபகதாளம்.

பல்லவி

பாரும் பாரும் ராமதெரிசனம் ஸாமியிதோ (பாரும்)

அநுபல்லவி

சீருலாவுந் தெக்கணந்தனில்,
சீரமையுற்ற-பெருமைபெற்ற
விரதசத்திய பரதஉற்றுப் (பாரும்)

சரணங்கள்

வாரிதிரண்டொரு வானதுவோ வல்ல
மரகதமோருடல் வாய்த்ததுவோ நல்ல
காரிருள்மைகடங் காட்டியதோ மல்லல்
காயாவேகாயமெ டுத்ததுவோ சொல்லக்
கழியாவதி, அழகானது, விழைவாயெதிர், யெழல்கூரிவர் (பாரும்)

ஆடவருமிக வாசைகொள் தோள்வளை
அகலிகைசாபமகற்றிய தாண்மளை
பீடுறுமார்பகம் பேசிடுநீள்தளை
பிசகிவர்க்கோரிணை மதனென்றகோளுளை
பிடியாமெனும், நடையாளொடு, அடல்கூர்படை யுடையார்வரல் (பாரும்)

[எல்லவரும் வியப்புடன் நோக்குகின்றனர்]

(அனுமார்) நன்று நன்று பரதா இதோ நந்திக்கிராமத்தின் உபவன த்தை நோக்குக

சந்தவிருத்தம்

பரதபாருனதமையனோ டெழுபடைகளாகிய வானர ய
கரடிமேலுயர் தருவிலேறியொர் தருவிலேகுதிகாடடலா ல்
தளையினேடுயர் தொடுவதாகிய தளிர்கொள்கானின சாமியி ன்
வரவுகாணலும் மகிழ்வினோடவை நடனமாடுவ மாறு பே

(ஜனகர்) சந்தோடத்துடன் [வசனம்] ஆ நந்திக்கிராமத்தில்குழந்தை சீதாதேவியினால் அலங்கிருதஞ்செய்யப்பெற்ற வாமபாகத்துடன் இலக்குவ னுடன் பரிசனங்களுடன் கண்மணி இராமபத்திரன் விமானத்தினின்றும் இறங்குகின்றனே.

(பரதர்) நோக்கி அத்தியானந்த பரிதனாய்

சந்தவிருத்தம்

வடவரைவளைத்தபசு பதிவிழியெறிக்கறிய மதனனைநிகர்த்த மனைநே
தடமலியருட்கணனை கருமுகிலெனத்துதிகொ டனுவனைவிரித்ததளையோா
அடைவொடுமிகப்புகழும் அருமைகொளெனக்கணனை அளவிலமிகுத்த வெ
[குகான்
இடையிறிதலுற்றபினர் இதுதகினுற்றால இனியகளைதபுக்கினனரோ.

[சத்துருக்னன்] ஆனந்தத்துடன்.

வெண்பா.

முன்னதுறமென்றும் இன்னதுறுவென்றும்வினை
சன்மபலன்யாரெங்கன் காண்பவரே—வன்மைமிகு
கொல்லைலிற்சூழ்கக் குதிகொண்டெழுந்துநின்றோம்
நல்லமுதமூழ்கின மின்னான்.

[அப்பால் மேற்குறித்தபடி சீதா லக்ஷ்மண பரிசன சமேதரான இராமர் வெளிக்கின்றனர்.

[இராமர்] சகி பிராணகாந்தே அடி ஜானகி, நாறு யோஜனை சேது வைத தாண்டி மகேந்திரகிரி, பிரசிரவணகிரி இதுகளைத்தாண்டி, விஸ்தார விந்தியாடவியும் தாண்டி, அதியுன்னத சித்திரிகூடத்திற்கு மேல்வழியாய் அதிவேகமாய் இந்தப் புட்பகததால் நமது நந்திகிராமம் வந்து சேர்ந்தோம்.

இன்னமும்,

கொச்சகம்.

கோகிலமேகோமளமே கோதையேகொம்பரன்னாய்
சாகரத்தைப்போற்கவிரா கூதர்சண்டைதான்கடந்து
தாகமொடுஜானகியாய் தையலுனையடைந்து
வேகமொடுமொந்நகர் மேவிவந்தேன்மெல்லியலே.

(இலக்ஷ்மண்) அண்ணா, எதிர்நோக்குக நோக்குக ஆரியரான ஜனக ராஜனென்ன தம்பி சத்துருக்கனென்ன இவர்களுடன் என் அண்ணா பரதர் இதோ எதிர்கொண்டு வருகின்றனர் இந்தப்பரதர்

விருத்தம்.

சிரத்தினிற்சடைவளர்த்து சிறப்பிலாச்சிரந்தனிலே
அரைத்தலந்தனில்வசித்தும் அருந்தவத்தாலினைத்தும்
பருத்ததோளும்மைக்காணுப் பாரசோகஞ்சரீரந்
தரித்தெதிர்நாரர்ந்தாலென்னத் தழைக்கின்றார்பரதர்சாமி.

(இராமர்) ஆம் ஆம் அப்படியே, ஆயினும்

விருத்தம்.

கொண்டாள்மொழிகண்டாடலைக் கொடியோனைமுன்னம்
உண்டானவென்துயர்தீர்ந்தன உசிதப்பலவினையால்

எ-வது அங்கம்.

நன்பரதன்செம்மை நிகழ்த்தென்னிமித்தத்தில்
மன்கொளஅத்தருக்கயிப் பொழுதேகழித்தவே.

வாரி கிட்டவணுகி

சந்தவிருத்தம்.

அனகசத்தியதசரதப்ரிய அதுலமுக்கிய ஜானகீ
மனவஅர்ப்புத விசயபத்தர்கள் வரதநிட்கள ராமனே
நினமளப்பறு வருடமெத்தனை தெரிசனத்தினி லாவலாய்
கனிகொளத்திசை அநில்விழிப்பனுன் கரமலர்க்கு நமோநம:

(என ஆனந்தப்பெருக்குடன்) வணங்கினர்

(இராமர்) சினேகவானந்தத்துடன் கைகளினால் இருகத்தழுவிக்கொண்டார்

(இராமர் பரதர் இருவரும் தன்னுள்)

வெண்பா.

கர்ப்பூரவாவி கலந்துகுளித்தாற்போல்
இப்போதுடற்குளிர்ச்சி யெய்தியதே—செப்பியகை
யாலிங்கனங்கட்டி யாசையுடன்றழுவி
யாலிங்கனஞ்செய்ததால்.

(இராமர் வெளிப்படை) ஆ, ஆ என்னருமைப்பிறப்பே அடா கண்மணி பரதா தெய்வாதீனமாய்க் காணக்கிடைத்தனை.

(பரதர் வெளிப்படை) வசனம்.

அண்ணா இரகுகுலோத்துங்கராமவிபோ, அந்த தெய்வாதீனத்தாலே தான் பாதவித்துக்கொண்டிருந்த தமியேனைக் கிருதார்த்தனுய்ச்செய்யும்பொருட்டு இன்னும் ஜீவனை கூர்ந்து தேவரீர் பிராப்தமானதுவுமே.

இராமருக்கும் பரதருக்கும் இலக்குவனும் சத்துருக்கனனும் வந்தனம் சமர்ப்பித்து ஆசிர்வாதத்தைப்பெற்றிருந்தனர்.

(இராமர் ஜனகராஜனிடம் கிட்டவணுகி,

வெண்பா.

மதிகுலத்துமன்னவனே மாமனேவாரு
நிதியிருத்தாசமுகத் தயோய்—சதிர்படைத்த
செக்தேன்பெருகுமலர்ச் சேடிக்கிளைஞ்சிவேன்
வந்தேன் தயாநிதியனே,

இலக்குவன் வெண்பா.

ஞானிகளுமன்பாக நாளும்புகழ்ந்திடவே
தானுநிறுணர்ந்த ஜனகேந்த்ரா—பாநு
குலக்குரிசில்பின்சென்ற கூடத்திரும்பி
இலக்குவன்வந்தேன் பணிகின்றேன்.

(ஜானகி) தாதா உமதுதாட்டாமரைகளிற்ஜானகி நமஸ்கரிக்கின்றேன்

(ஜனகர்) உசிதப்படி ஆசிகளுரைத்து (பின்னர் இராமனைநோக்கி) அத்தியானந்தபரிதனாய் சந்தோஷப்பிரவாகத்திற் றொண்டை தத்தலிட்டு) அடகண்மணி இராமபத்திரா, திரிபுவன கண்டகனை இலங்கேசுவரனைச் செயித்த வீரசூரப்பிரதாப இரகுகுலோத்துங்கஜயசிங்கஸ்ரீராமச்சந்திரா,

விருத்தம்.

கங்கேசவரக்கர்ச்செற்றோய் சாருத்தராமாவீர ப்
பூந்தயப்பொருளாய்நின்ற பாவையெக்காரணத்தி ற்
சந்தமாய்மணம்புரிந்தாய் சதிர்பெருமனுப்பின்வந் த
சந்ததியானாய்அஃதிற் றக்கதாய்நடந்துகொள் ளே.

(இராமர்) வினயத்தொடு, அஞ்சலிசெய்துகொண்டு.

இராகம் தருவார். சாப்புதாளம்.

பல்லவி.

உமதுகிருபையுந் தேவ ருதவியுமல்லாமல் ஒன்றுமென்னாலில்லையே.

அநுபல்லவி.

மமதையகந்தைமுதல் மனமாயையையொழித்த
மானுபாவஜனக மாமனேபிரமவித்தாம் [உமது]

சரணங்கள்.

வரமோ உரமோஅந்த வல்லரக்கன்திற மோ
வரிசையாய்த்திரள் படைசமுத்திர மோ
வருதல்போதல்தெரியா தென்னைற்றசர மோ
மாயாஜாலப்பிரதாபம் வழுத்தவுந்தர மோ
வானரதிபன் சிநேகங்கிடைத்தது ம்
வரனைக்கொன்று தான்முடித்தது ம். [உமது]

புக்கம்

டைவிஷ்டனுலு ம்
ஞ்செய்ததாலு ம்
ரிவராமென்மேலு ம்
ிலு ம்
றைவிடுத்தது ம்
ராடுர்த்து ம். [உமது]

ின்றனர்.

ாலாக்ளுை செய்யப்பெற்ற காரியம்
கொடிய ராக்கதன் இராவ
துறநதுதகக்கலச ன்பதுவே.
க்தபுட்பக டாம் றல் கன்கறியலாயிற்ற.]
டங்கயமிலங்குது கொடுத்திருக்கின்றனர்.

டபகவானது வா

கேசித்து இராமனைக்குறித்து வே
ிட்டார்கள், பபடிப் பொருதலி லே
பிரவேசிக்கின்ற ாதுங்கொல் ராமனுக் கே
தனங்காதனத்தில் ய்யெனவன் ரே.
ற்றமு
ஞ்செ

வோம் வாருங்கள் வருங்கள்
மபட்டாபிஷேகமகோற்சபம் காண

விருத்தம்.

ராமணிகுலாகுராமனே
டேககபம்பூர்ணமாகி
ட்டிதுள்ள
ந்துமகிழ்ந்து நாஞ்செக்கின்றார்

அ அனையக்கினின்றா் கோவிப்பட

ஜானகிபரிணயநா

வெண்பா.

உன்னைப்போலுத்தமனுருண்டே
என்னைப்போல்மற்று மிருடியுண்
விதிமுதல்வனைப்புரந்தாய் மேல்
சதியரக்கனைக் கடிந்ததால்.

[இராமர்] பகவன்,

வெண்பா.

பந்தயங்கெலி,
சந்ததஞ்சுகரீ
பொல்லாஙிசை
எல்லாருமதரு

[பரதர்] பக
லே, இவ்விடத்தி
வைத்து அயோத்
விரும்புகின்றனன்.

[ஜனகர்] அகோவகோ,
கண்மணி பரதனுக்கு சற்றேற

(அனுமார்) ஓ, பூ
கன் நமது ஆரிய ஸ்ரீ
நன்

[illegible] அங்கம்.

[illegible]வெடன்வஷமைழுத் திடவவதரித்தந்த
கருவிகட் கெட்டாத்தனிச்
[illegible]யாம்ஸ்ரீராம பக்திமறவாதமெய்த்
தொண்டருட் சிரேஷ்டராக
[illegible]முதச்ச[illegible]சம்பன்னராயினூல்
இயற்றியருள் முத்துசுப்ப
இன்னமுதகவிவலோ னின்பமொடுகேட்பவர்க
ளெல்லாரும் வாழ்கவாழ்க.

ஏழாவதங்கம் முற்றிற்று.

ஜானகிபரிணய நாடகம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ ராமஜெயம்.